இலங்கை
மனித உரிமைகள் நிலை
1994

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்

இலங்கை

மனித உரிமைகள் நிலை 1994

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்
3, ஹின்சி ரெறஸ்
கொழும்பு 8
இலங்கை

© சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்
31 வைகாசி 1995

ISBN 955 - 9062 - 24 - 7

விடயங்கள் சமர்ப்பித்தோர்

சுருக்க நோக்கு
எலிஸபெத் நிசான், தெஜ் தாப்பா

இலங்கையில் அரசியல் உரிமைகளுக்கான கௌரவம்
தீபிகா உடகம

அவசரகால விதி
சூரியா விக்கிரம சிங்க

நபரின் நன்மதிப்பு
எலிஸபெத் நிசான்

மனித உரிமைகளின் நீதிமுறைப் பாதுகாப்பு
தேஜ் யாப்பா

கடந்த கால மீறல்களின் புலனாய்வு
எலிஸபெத் நிசான்

தண்டனையிலிருந்து தப்பித்தல்
எலிஸபெத் நிசான்

தொடர்புசாதன மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்
அர்ஜுனா பராக்கிரம, எலிஸபெத் நிசான்

கலைத்துவ வெளிப்பாட்டுக்கான சுதந்திரம்
றெஜி சிறிவர்த்தன

தொழிலாளர் உரிமைகள்
அயன்சிலி சமரஜீவா

சமூக பொருளாதார உரிமைகள்
நந்தினி குணவர்த்தன

சிறுபான்மையினர் உரிமைகள்
கன்யா சாம்பியன்

இடம் பெயர்ந்த நபர்கள்
மாரியோ கோமஸ்

அகதிகளும் திருப்பியனுப்புதலும்
மாரியோ கோமஸ்

சிறுவர்
சார்யா டி சொய்சா

பெண்கள்
ராதிகா குமாரசாமி,
மாலா தர்மானந்தா,
நட்டஸா பாலேந்திரா

விடயதானங்களைத் திறனாய்வு செய்து கருத்துரை வழங்கியவர்கள் :

கன்னியா சாம்பியன், சுனிலா அபயசேகரா, நிமல்கா பெர்னாண்டோ, செல்வி திருச்சந்திரன், எலிஸபெத் நிசான், ஜோ வில்லியம், ஜோண் பிளாஸ்ரோ

பதிப்பாசிரியர்
எலிஸபெத் நிசான்

ஒருங்கிணைப்பாளர்
கன்னியா சாம்பியன்

நிர்வாகம்
டமறிஸ் விக்கிரமசேகர

ஒப்பு நோக்குனர்
தர்ஷினி மகாதேவா

மூலாதார உதவி

யு.ரி.எச்.ஆர்.: சூர்யா விக்கிரமசிங்க (சி.ஆர்.எம்) : நடேசன் நிலையம் : பி. தம்பிராஜா (ஐ.சி.ஈ.எஸ்.) : திலக பெர்னாண்டோ, சார்யா பசநாயக்கா, சொனாலி டி சில்வா, சுமுது அத்துபத்து, சுரம்யா பாலச்சந்திரன், தர்ஷினி மகாதேவா, ரஜிதா இப்ராகிம் (எல்.எஸ்.ரி) : என். கந்தசாமி (மோர்ஜ்) : சமந்தி குணசேகர : மனித உரிமைகள் நிறுவனம் : மனித உரிமைகளுக்கான இல்லம் : மனித உரிமைகள் மற்றும் சனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் : மனித உரிமைகள் செயலணிப் பிரிவு : கிழக்கு மனித மற்றும் பொருளாதார அபிவிருத்தி (திருகோணமலை) : மோகன் பீரிஸ்

கணணி அச்சமைப்பு
யுனிக் கிராபிக்ஸ்

அகதிச் சிறுவரின் அட்டைப் படம்
© டெக்ஸ்ரர் குரூஸ்

அச்சுப்பதிவு
யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட்

பொருளடக்கம்

சுருக்கக் குறிப்புகள் x

முன்னுரை xii

1. சுருக்க நோக்கு 1

1. அறிமுகம் 1
2. சீர்திருத்தத்திற்கான உறுதிமொழி 3
3. இத் தொகுதியில் அறிமுகம் செய்யப்படும் வேறுசில மனித உரிமை விடயங்கள் 11

2. இலங்கையில் அரசியல் உரிமைகளுக்கான கௌரவம் 13

1. ஆட்சியியல் உரிமை: பாராளுமன்ற சனநாயகத்தில் இருந்து நிறைவேற்று சனாதிபதி வரை 13
2. சட்ட ரீதியான வடிவமைப்பு 17
3. தேர்தல் தொகுதி முறை 19
4. 1994 பாராளுமன்றத் தேர்தல் 23
5. எல்.ரி.ரி.ஈ.யின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் தேர்தல் 33
6. தேர்தலும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரும் 36
7. மக்கள் தீர்ப்பு 37
8. 1994 சனாதிபதித் தேர்தல் 38
9. மாற்றத்துக்கான பொதுசன ஐக்கிய முன்னணியின் வேலைத் திட்டம் 41
10. முடிவுரை 43

3. அவசரகால ஆட்சி 45

பின்னிணைப்பு I 55
பின்னிணைப்பு II 57

4. ஒரு நபரின் நன் மதிப்பைக் கௌரவித்தல் 58

1. அறிமுகம் 58
2. வாழும் உரிமை 59
3. சித்திரவதை 62
4. காணாமல் போதல் 66
5. கட்டுப்பாடற்ற கைதுகளும் தடுத்து வைத்தலும் 73
6. நீதியான விசாரணை 79
7. முடிவுரை 83

5. மனித உரிமைகளுக்கான நீதிமுறைப் பாதுகாப்பு 84

1. அடிப்படை உரிமைகள், ஆட்கொணர்வு வழக்குகள் பற்றிய நீதிமுறைத் தீர்ப்புகள் 84

6. கடந்த கால மீறல்கள் பற்றிய புலன் விசாரணை 89

1. அறிமுகம் 89
2. சூரியகந்தை மற்றும் பிற இடங்களில் தோண்டப்பட்ட புதை குழிகள் 92
3. காணாமல் போனவர்களை விசாரிப்பதற்கான மூன்று ஆணைக் குழுக்கள் 96

7. தண்டனையிலிருந்து தப்பித்தல் 101

1. அறிமுகம் 101
2. தண்டனையிலிருந்து தப்பித்தலுக்கான மூலகங்கள் 105
3. தண்டனையிலிருந்து தப்பித்தலுக்கு உதாரணமாகும் வழக்குகள் 107
4. தண்டனையிலிருந்து தப்பித்தலைத் தடுத்தல் 111

8. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் தொடர்பு சாதனங்களும் 113

1. அறிமுகம் 113
2. சர்வதேச நியமங்கள் 114
3. அரசியலமைப்பு உத்தரவாதங்கள் 115
4. அவசரகால அதிகாரங்கள் 115
5. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பாதிக்கும் ஏனைய சட்டங்கள் 116
6. பத்திரிகைகள் 117
7. 'எலக்ரோனிக்' தொடர்பு சாதனங்கள் 117
8. 1994 இல் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தொடர்பு சாதனக் கொள்கையும் தணிக்கை பற்றிய அறிக்கைகளும் 118
9. முடிவுரைகளும் விதந்துரைகளும் 122

9. கலாசார உரிமைகள் : கலைத்துவ கருத்து வெளிப்பாட்டுக்கான உரிமை 124

1. அறிமுகம் 124
2. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கலாசாரக் கொள்கை 126

3. தணிக்கை 127
4. முடிவுரை 133

10. தொழிலாளரின் உரிமைகள் 135
1. அறிமுகம் 135
2. தொழிற் சங்கங்கள் 136
3. அவசரகால ஒழுங்கு விதிகள் 138
4. அரசாங்க மாற்றமும் தொழிலாளர் உரிமைகளும் 138
5. தற்போதைய தொழிற் சட்டம் 141
6. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன மகாநாட்டுடன் படிக்கைகள் 145
7. 1994 இல் தொழிலாளரின் உரிமையைப் பாதித்த நீதிமுறைத் தீர்மானங்கள் 146
8. பொதுத் துறைத் தொழிலாளர் 147

11. சமூக பொருளாதார உரிமைகள் 150
1. அறிமுகம் 150
2. பொருளாதாரப் பின்னணி 153
3. சுகாதார நலன் : மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் 154
4. கல்வி 166
5. தொழில் 182
6. முடிவுரை 198

12. சிறுபான்மையினர் உரிமைகளும் இனத்துவ முரண்பாடும் 199
1. அறிமுகம் 199
2. பொதுவாகவும், தனியாகவும் சொந்த மொழியைப் பயன்படுத்தும் உரிமை 203
3. கல்விக்கான உரிமை 206
4. உடல்நலம் 210
5. வேலைவாய்ப்பு 213
6. அரசாங்கத்துக்கும் எல்.ரி.ரி.ஈ.க்கும் இடையிலான பேச்சுவார்த்தை 215
7. முடிவுரை 216

13. உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் 219
1. அறிமுகம் 219
2. இடம் பெயர்தல் கொள்கை 220
3. உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் 226
4. சர்வதேச நியமங்கள் 228
5. இலங்கையின் உள்நாட்டுப் பிரமாணங்களும் இடம் பெயர்ந்தோரின் உரிமைகளும் 233
6. முடிவுரை 246
7. பரிந்துரைகள் 248

14. அகதிகளும் திருப்பியனுப்புதலும் 249
1. அறிமுகம் 249
2. 1994 இல் திருப்பியனுப்புதல் 251
3. தன் விருப்புத் தன்மை 252
4. யு.என்.எச்.சி.ஆரின் பங்கு 254
5. ஐரோப்பாவிலிருந்தும் மேற்கிலிருந்தும் வரும் அகதிகள் 255
6. சர்வதேச நியமங்களும் முடிவுரையும் 257

15. சிறுவர்களின் உரிமைகள் 260
1. விசேட நிலைமைகளில் சிறுவர் - அவர்களின் உரிமைகள் பற்றிய ஒரு மதிப்பீடு 260
2. குற்றவியல் சட்டத்தை மீறும் சிறுவர்கள் 261
3. தவறான மற்றும் பாலியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட சிறுவர்கள் 271
4. தொழில் புரியும் சிறுவர் 278
5. முடிவுரை 282

16. இலங்கையில் பெண்களின் நிலை 284
1. அறிமுகம் 284
2. அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள் 286
3. பொருளாதார சமூக உரிமைகள் 290
4. பெண்களுக்கெதிரான வன்முறை 305
5. முடிவுரை 307

Bibliography 310
Schedule I
Schedule II

சுருக்கக் குறியீடுகள்

A/L	–	உயர் நிலை
ADB	–	ஆசிய அபிவிருத்தி வங்கி
AG	–	சட்டமா அதிபர்
AI	-	சர்வதேச மன்னிப்புச் சபை
AIDS	–	தேவையான நோயெதிர்ப்புத் தன்மை இன்மை
BBC	–	பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
Beijing Rules	–	பால்ய நீதி நிர்வாகத்துக்கான ஐக்கிய நாடுகளின் அதி குறைந்த விதிகள்
CEDAW	–	பெண்களுக்கெதிரான சகல விதமான பாரபட்சங்களையும் அகற்றுதல் மீதான மகாநாட்டுடன்படிக்கைகள்
CERD	–	எல்லா வகையான இனரீதியான பாரபட்சங்களையும் அகற்றுதல் மீதான சர்வதேச மகாநாட்டுடன்படிக்கை
CFS	–	நுகர்வோர் நிதி அளவீடுகள்
CID	–	குற்றப் புலனாய்வுத் திணைக்களம்
Commission on Discrimination	–	பாரபட்சங்களை அகற்றல் மற்றும் அடிப்படை உரிமைகளைக் கண்காணித்தல் பற்றிய ஆணைக் குழு
CRC	–	சிறுவர் உரிமைகள் பற்றிய மகாநாட்டுடன்படிக்கை
CRM	-	சிறுவர் உரிமை இயக்கம்
CYPO	–	சிறுவர், இளையோர் பற்றிய சட்டம்
EHED	–	கிழக்கு மனித, பொருளாதார அபிவிருத்தி
EPZ	–	ஏற்றுமதிச் செய்முறை வலயம்
FTZ	–	சுதந்திர வர்த்தக வலயம்
GCE	–	பொதுத் தராதரப் பரீட்சை
GCEC	–	பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக் குழு
GDP	–	மொத்த உள்நாட்டு உற்பத்தி
GNP	–	மொத்த தேசிய உற்பத்தி
HIV	-	மனித நோயெதிர்ப்புத் தன்மை இன்மை வைரசு
HRTF	-	மனித உரிமைகள் செயலணிப் பிரிவு
ICCPR	–	குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேசக் கட்டுறுத்து
ICESCR	–	பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்து
ICRC	–	சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்
IDA	–	சர்வதேச அபிவிருத்தி முகவரகம்

ILO	-	சர்வதேச தொழிலாளர் நிறுவனம்
ITN	-	சுயாதீன தொலைக்காட்சி அமைப்பு
JVP	-	ஜனதா விமுக்திப் பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி)
LFSES	-	தொழிலாளர் படை மற்றும் சமூக - பொருளாதார மதிப்பீடு
LMIS	-	தொழிலாளர் சந்தை தகவல் சேவை
LTTE	-	தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்
MOH	-	சுகாதார அமைச்சு
MSF	-	வரையறைக்குட்படாத மருத்துவர்கள்
NGO	-	அரசு சார்பற்ற நிறுவனம்
NHDA	-	தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை
O/L	-	சாதாரண தரம்
ORC	-	திறந்த நிவாரண நிலையம்
PA	-	பொதுசன ஐக்கிய முன்னணி
PEG	-	உற்பத்தி முயற்சிக்கான உதவி
PTA	-	பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்
QUIPS	-	துரிதமாக தாக்கத்தை ஏற்படுத்தும் செயற்றிட்டங்கள்
SIA	-	சலுகையுடன் தீர்த்தல்
SLAS	-	இலங்கை நிர்வாக சேவை
SLBC	-	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
SLFP	-	சிறிலங்கா சுதந்திரக் கட்சி
SLRC	-	இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
TEWA	-	ஊழியர்களை வேலையிலிருந்து நிறுத்தும் சட்டம்
Torture Convention	-	சித்திரவதை மற்றும் ஏனைய கொடூர மனிதத் தன்மையற்ற அல்லது தரக் குறைவான நடத்தை அல்லது தண்டனை என்பவற்றுக்கு எதிரான மகா நாட்டுடன்படிக்கை
TULF	-	தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி
UNESCO	-	ஐக்கிய நாடுகள் கல்வி, சமூக, கலாசார ஸ்தாபனம்
UDHR	-	மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகடனம்
UNGA	-	ஐக்கிய நாடுகள் பொதுச் சபை
UNHCR	-	அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர்
UNHRC	-	ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு
UNICEF	-	ஐக்கிய நாடுகள் சர்வதேசச் சிறுவர்கள் கல்வி நிதி
UNP	-	ஐக்கிய தேசியக் கட்சி
USCR	-	ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான குழு
WHO	-	உலக சுகாதார ஸ்தாபனம்

முன்னுரை

இவ் அறிக்கை இலங்கையில் மனித உரிமைகளின் நடைமுறை நிலையை விளக்குவதாக இருப்பதுடன் இலங்கை தனது பிரசைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கடமையினை நிறைவு செய்வதில் சர்வதேசக் கடப்பாடுகளுடன் எந்தளவுக்கு இணங்கிச் சென்றுள்ளது என்பதையும் மதிப்பிடுகின்றது. எனவே இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாகச் சில முக்கிய அம்சங்களை இவ் அறிக்கை வெளிப் படுத்துகின்றது. அரசியலமைப்பு உத்தரவாதங்கள், சட்ட ஆக்கங்கள், அடிப்படை உரிமைகளின் செயற்பாடும் நடைமுறையில் அவற்றின் அமுலாக்கம் பற்றியும் பரிசீலிக்கப்படுவதுடன் அவைகள் கொண்டுள்ள வரையறைகளின் தாக்கங்களும் ஆராயப்படுகின்றன. இவ் அறிக்கை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைக் கவனத்திற் கொண்டு நபரின் நன்மதிப்பு, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், மனித உரிமைகளின் நீதிமுறைப் பாதுகாப்பு மற்றும் அரசியல் உரிமைகளின் செயற்பாடுகள் பற்றியவற்றை முதன்மைப் படுத்துகின்றது. சுகாதாரம், கல்வி, வேலை வாய்ப்பு உரிமை பற்றிய பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளையும் முதன்மைப் படுத்துகின்றது. மேலும், பெண்களின் அந்தஸ்து, சிறுவர்களின் உரிமைகள், குழுவினரின் உரிமைகள், இடம் பெயர்ந்த நபர்களின் நிலைமை மற்றும் உள்நாட்டு யுத்தத்தின் விளைவான மனிதாபிமான சட்டத்தின் வெளிப்பாடுகள் பற்றிய விடயங்கள் தனித்தனி அத்தியாயங்களில் ஆராயப்படுகின்றன.

இவ் அறிக்கையின் ஒருங்கிணைப்பு சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அற நிலையத்தினால் பூர்த்தி செய்யப்பட்டது. பொருத்தமான விடயங்களில் விசேட தகைமையைக் கொண்ட தனி நபர்களுக்குத் தனித் தனி அத்தியாயங்கள் ஒதுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அவற்றின் செம்மை, நோக்கு, விடயத் தெளிவு என்பவற்றைப் பரிசீலிப்பதற்காக மீள் பார்வை செய்யப்பட்டது. அதன் பின்னர் நடைமுறைச் சாத்தியமான அளவிற்கு அணுகு முறையிலும், நடையிலும் ஒரே சீரான போக்கு அமைய வேண்டுமென்பதைக் கருத்திற் கொண்டு வரைவுகள் ஒன்று சேர்க்கப்பட்டு விரிவாகச் சரி பிழை பார்க்கப்பட்டன. எவ்வாறாயினும் அத்தியாயங்களுக்கு இடையில் கூறியது கூறலும், சில தலைப்புக்கள் ஏனைய தலைப்புக்களை விட மிக விரிவாக ஆராயப்பட்டுமிருப்பது தவிர்க்க முடியாதது. மேலும் முக்கியமான வெளியீடுகளின் நூற்பட்டியலையும், மனித உரிமைகள் சம்பந்தமான அறிக்கைகளையும்

இலங்கை ஏற்றுக் கையொப்பமிட்டுள்ள சர்வதேச ஒப்பந்தங்களின் பட்டியலையும் இணைத்துள்ளோம். மேலாக, இலங்கையினால் பின்னுறுதிப் படுத்தப்படாத மனித உரிமைகள் சாதனங்களின் பட்டியலையும் இவ் அறிக்கை கொண்டுள்ளது. இலங்கை : மனித உரிமைகள் நிலை 1993 வெளியிடப்பட்டதன் பின் சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதத் தன்மையற்ற அல்லது தரக் குறைவான நடத்துகை அல்லது தண்டனைக்கு எதிரான மகா நாட்டுடன்படிக்கையை இலங்கை அரசாங்கம் பின்னுறுதிப் படுத்தியது மிக முன்னேற்றகரமான விடயமே.

இலங்கையில் மனித உரிமைகளைப் பயனுறுதி வாய்ந்த முறையில் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் உறுதி செய்வதற்கு இவ்வறிக்கை சமூக நிறுவனங்களுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு முக்கிய தளமாக விளங்குமென்பதை எதிர் பார்க்கலாம்.

"அரசாங்கத்தின் எல்லா அமைப்புக்களும் அரசியலமைப்பில் பிரகடனம் செய்யப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டுமுள்ள அடிப்படை உரிமைகளை மதித்துப் பாதுகாத்தும் முன்னெடுக்குமென" இலங்கை அரசியலமைப்பு ஆணையிடுகின்றது. இலங்கை பல சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகளின் ஒப்பந்ததாரியாக இருப்பதுடன் அதனது உள்நாட்டுச் சட்டங்களும், கொள்கைகளும், செயற்பாடுகளும் அதனது சர்வதேசக் கடப்பாடுகளை உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும். இவ்வறிக்கை (இவ்வறிக்கையில் உண்மையான பரிசீலனைக்குட்பட்டுள்ள அரசுசார்பற்ற பங்காளிகளும்) மனித உரிமைகளை மதித்தும், பாதுகாத்தும் நடப்பதற்கான தமது சர்வதேச மற்றும் அரசியலமைப்பின் கடப்பாடுகளை உயர்வாகப் பேணி நடப்பதை அரசு உறுதி செய்யும் தொடர்ச்சியான போராட்டத்தின் ஒரு பணிவுடமையான நடவடிக்கையே.

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அற நிலையம்
31 வைகாசி 1995

1

சுருக்க நோக்கு

1. அறிமுகம்

இலங்கையில் 1994 ஆம் ஆண்டில் தேர்தல்களும் பல அரசியல் மாற்றங்களும் நிகழ்ந்தன. 17 வருடங்களுக்குப் பின் முதன்முதலாக அரசாங்க மாற்றம் ஏற்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் வழிநடத்தப்பட்டு அதிகாரத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியை அகற்றியது. தேர்தல் பிரசாரங்களின் [1] போது இடம் பெற்ற அரசியல் நிகழ்ச்சிகளில் மனித உரிமைகளானது முதலிடம் பெற்றது. 1994 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் பொதுசன ஐக்கிய முன்னணி மயிரிழையில் வெற்றியீட்டியது. 1994 கார்த்திகை மாதம் நடந்த சனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் அமோக வெற்றியைத் தொடர்ந்து, மேற் கொள்ளப்படக் கூடிய சட்டரீதியான, நிறுவன ரீதியான மாற்றங்களுக்கான நம்பிக்கைகள் தெரிவிக்கப்பட்டன.

---

[1] மாறாக, இலங்கையின் குடியுரிமை இயக்கமானது (சி.ஆர்.எம்) 12 விசேட மனித உரிமைகள் வினா தொடர்பாகத் தேர்தலில் பங்குபற்றும் எல்லாக் கட்சிகளையும் தங்கள் நிலைப்பாடுகளைத் தெரிவிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தது. இரு பிரதான கட்சிகளாகிய ஐக்கிய தேசியக் கட்சியோ, பொதுசன ஐக்கிய முன்னணியோ இதற்குப் பதிலிறுக்கவில்லை. நவ சமாசமாஜக் கட்சி, லிபரல் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றிடமிருந்து மாத்திரமே பதில் கிடைத்தது. பார்க்க *சி.ஆர்.எம். குடியியல் கட்சிகளின் பதிலிறுப்பு*. இல. 3, E 2/8/94 (8 ஆவணி 1994).

இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமை பெரும்பாலும் முன்னைய வருடங்களைப் போலவே காணப்பட்டன. அரசியல் மாற்றங்களினால் சில விடயங்கள் புதிதாக முக்கியம் பெற்றதுடன் 1994 காலத்தில் அவை அடிக்கடி விவாதிக்கப்படும் அம்சமாகவும் மாறின. கடந்த காலத்தில் மனித உரிமை மீறல்களுக்கான குற்றங்களிலிருந்து தப்பித்தல், அவற்றுக்கான நீதி வழங்கல், மனித உரிமை மீறல்கள் பற்றிய முழுமையான, சுதந்திரமான விசாரணை, இலங்கையில் அடையப்பட்டுள்ள கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான உரிமை என்பவற்றையும் இவ்விடயங்கள் உள்ளடக்கியிருந்தன. அரசியலில் பங்கு பற்றுவதற்கான உரிமை தொடர்பான பல முக்கிய பிரச்சினைகள் தேர்தல்களின் காரணமாக எழுந்தன. தேர்தலுடன் தொடர்புபட்ட வன்முறை, அரசாங்க வளங்கள் துஷ்பிரேயாகம் செய்யப்பட்டமை, அரசியல் நோக்கங்களுக்காக அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பொதுசனத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தல் போன்றன அவையாகும். மேலும் குடியியல் தகராறுகளினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களின் வாக்களிக்கும் உரிமை, தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதிகளில் தேர்தல்களை நடத்துவது தொடர்பான பிரச்சினைகளும் இவற்றில் அடங்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் காமினி திசநாயக்கா, ஏனைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் ஒரு தற்கொலையாளியின் குண்டு வெடிப்பினால் படுகொலை செய்யப்பட்டனர். இது சனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு கிழமைகளுக்கு முன்பு இடம்பெற்றது. அரசு சார்பற்ற சக்திகளினால் அரசியல் சுதந்திரம் எவ்வளவு தூரம் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்பதை ஞாபகப்படுத்தும் ஒரு முக்கிய சம்பவம் இதுவாகும். இத்தாக்குதலுக்கான பிரதான சந்தேகம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மீது திரும்பியது. 1994 ஆம் ஆண்டு பூராகவும் வடக்கு, கிழக்குப் பகுதிகளின் கட்டுப்பாட்டினை இவர்கள் கொண்டிருந்ததுடன் தமது கட்டுப்பாட்டினுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு அடிப்படைச் சுதந்திரங்களையும் தொடர்ந்து மறுத்து வந்தனர்.

1993,[2] 1994 ஆம் ஆண்டுகளில் மனித உரிமைகள் நிலைமையானது சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அற நிலையத்தின் பரிசீலனையின்படி,

---

2 *இலங்கை: மனித உரிமைகள் நிலை 1993* (சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அற நிலையம், கொழும்பு, 1994.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. நடைமுறையிலும், சட்டரீதியாகவும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் போதுமான அளவு பாதுகாக்கப்படவில்லை. அத்துடன் வறுமை, போஷாக்கு நிலை, சுகாதாரம், கல்வி, பால் மற்றும் வயது என்பவை தொடர்பாகப் பாதிப்புக்குள்ளாகக் கூடிய மக்கட் பிரிவினரை இலக்காகக் கொண்ட கொள்கைகளை அரசாங்கம் உருவாக்க வேண்டிய தேவையுமுள்ளது. வடக்குக், கிழக்கில் ஒரு தசாப்தத்துக்கு மேலான ஆயுதப் போராட்டத்தின் விளைவுகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். பிரச்சினைக்குரிய பகுதிகளிலும், அவசர காலநிலைமையின் கீழ் ஆட்சி புரியும் பகுதிகளிலும் ஆகக் குறைந்தது சர்வதேச மனித உரிமைகள் நியமத்துடன் ஒப்பிடக் கூடியளவுக்குக் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் வலுவூட்டப்பட வேண்டும். இப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களினதும் உள்ளூரில் இடம் பெயர்ந்த லட்சக் கணக்கான அகதிகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து திரும்பும் அகதிகள் ஆகியோரின் சமூக, பொருளாதார உரிமைகள் அத்தியாயம் 11, 12, 13, 14 இல் ஆராயப்பட்டது போன்று முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

இலங்கையில் மனித உரிமைகளின் நிலையினை மேலும் சிறந்த முறையில் முன்னேற்றவும், எதிர்காலத்தில் அவை மீறப்படாதவாறு அதற்கான பாதுகாப்புக்களை ஏற்படுத்தவும் வேண்டிய நிலையில் புதிய அரசாங்கம் பல முக்கிய சவால்களை எதிர் நோக்குகின்றது. இவ் வகையில் 1994 ஆம் ஆண்டில் இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமைகள் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ள இவ்வறிக்கை இந்நோக்கினையடைய உதவும் என நம்புகின்றோம்.

2. சீர்திருத்தத்துக்கான உறுதிமொழி

1994 ஆம் ஆண்டு தை மாதம் சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான சோதனை அல்லது தண்டனை(சித்திரவதை தொடர்பான மகாநாட்டு உடன்படிக்கைகள்) என்பவற்றுக்கெதிரான ஐக்கிய நாடுகள் மகாநாட்டு உடன்படிக்கைகளைப் பின்னுறுதிப்படுத்தயதன் மூலம் 1994ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்தது. எவ்வாறாயினும் புதிய அரசாங்கம் 1994 கார்த்திகையில் பதவியேற்கும் வரைக்கும் இம்

மகாநாட்டு உடன்படிக்கை தொடர்பான அச்சட்டமானது நிறைவேற்றப்படவில்லை. அத்தியாயம் 4 இல் இதுபற்றி முழுதாக ஆராயப்படுகின்றது. நாடுகளுக்கிடையிலான சிறுவர் சுவீகாரம் தொடர்பான ஹேக் மகாநாட்டு உடன்படிக்கையையும் இலங்கை 1994 இல் பின்னுறுதிப்படுத்தியது. அரசாங்கம் மாற்றமடைந்த பின்பு வெளிநாட்டு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கொள்கையளவில் மனித உரிமைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. மனித உரிமைகள் மீதான ஆலோசனைச் சபையொன்று அமைச்சினால் நியமிக்கப்பட்டது. பல முன்னணியான, சுதந்திர சிந்தனையுள்ள, மனித உரிமைகளில் சிறந்த அனுபவமுடைய்வர்களை அச்சபை கொண்டிருந்தது. அத்துடன் நிரந்தரமான மனித உரிமைகள் ஆணைக்குழு மிக விரைவில் அமைக்கப்படுமெனவும் வெளிநாட்டு அமைச்சு அறிவித்தது. அடிப்படை உரிமைகளுக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரத்தை இக்குழு கொண்டிருக்கும். எவ்வாறிருப்பினும் இவ் ஆணைக் குழுவை அமைப்பது தொடர்பான நகல் சட்டமெதுவும் இவ்வருட இறுதிக்குள் வெளியிடப்படவில்லை. இப்பிரேரணையைப் பொறுத்தவரையில் சில மனித உரிமைவாதிகள் மனித உரிமைகளுடன் தொடர்பான நிறுவனங்களின் வளர்ச்சியிலும் அவற்றின் பரம்பலிலும் தமது அக்கறையை வெளிப்படுத்தியதுடன் மீறல்களுக்கெதிரான அடிப்படைப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

இரு முக்கியமான சர்வதேச செயற்கருவிகளைப் பின்னுறுதிப்படுத்துவது தொடர்பாக இவ்வருட முடிவிற்குள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மனித உரிமைகள் குழுவுக்குத் தனிப்பட்டவர்கள் விண்ணப்பிக்கும் உரிமையை அளிக்கின்ற ஐ.சி.சி.பி.ஆர். இன் விருப்பிற்குரிய உடன்படிக்கை செயலிழந்தது. இலங்கையினால் இது பின்னுறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. 1949 ஆவணி 12[3] இல் ஜெனீவா மகாநாட்டுடன்படிக்கைக்கான மேலதிக விருப்புரிமைப் பின்னோடு 11 ஆனது உள்நாட்டு ஆயுதப் பூசல்களினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான ஜெனீவா மகாநாட்டுடன்படிக்கைகளில் உறுப்புரை 3 இன் கீழ் அளிக்கப்பட்ட அடிப்படைச் சலுகைகளை விரிவுபடுத்துகின்றது.

---

3 முழுத்தலைப்பு : 1949 ஆவணி 12 இன் ஜெனீவா மகாநாட்டுடன்படிக்கைக்கான மேலதிக விருப்புரிமைப் பின்னேடு மற்றும் சர்வதேசரீதியற்ற ஆயுதப் பிணக்குகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்புத் தொடர்பானது.

பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான முக்கிய சலுகைகளை இது கொண்டிருந்தது.

1994 ஆவணியில் பதவிக்கு வந்த பின்பு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கமானது ஏற்கனவே வாக்குறுதியளித்த சீர்திருத்தங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை ஆரம்பித்தது. அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டதுடன் யாப்புக்கான பரிந்துரைகளைச் செய்தல் மற்றும் அது தொடர்பான பிரேரணைகளைப் பரிசீலனை செய்யும் பணியும் 1995 ஆடிக்குள் செய்து முடிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொதுசன ஐக்கிய முன்னணி வாக்குறுதியளித்ததன் படி அதிகாரம் மிக்க நிறைவேற்று சனாதிபதி முறையை அகற்றுதல், அடிப்படை உரிமைகளின் பாதுகாப்புக்கு வலுவூட்டுதல், தேர்தல் தொகுதிமுறை, நீதிமுறை மீளாய்வு நிறுவகம் ஆகிய முக்கிய விடங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

1994 கார்த்திகை மாதத்தில் அடிப்படை உரிமைகளின் சீர்திருத்தத்துக்கான பிரேரணைகள் நீதி அமைச்சர் ஜி.எல். பீரிஸினால் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, பகிரங்கப்படுத்தப்பட்டது.[4] இச் சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகள் மனித உரிமைகள் பாதுகாப்பையே பெரிதும் முனைப்பாகக் கொண்டிருந்தன. எவ்வாறு இருப்பினும், 1995 இன் ஆரம்பத்தில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட அரசியல் அமைப்பின் முதலாவது நகல் இவ்விடயத்தில் ஏமாற்றம் தருவதாக இருந்தது. முன்பு வழங்கப்பட்ட, முன்னேற்றகரமான ஆலோசனைகளிற் பெரும்பாலானவை இதில் உள்ளடக்கப்படவில்லை. ஆனால் அரசாங்கம் இந் நகலைச் செம்மைப்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கருத்திற் கொள்ள ஒப்புக் கொண்டது.

கணிசமான அதிகாரப் பகிர்வுத் திட்டத்தின் கீழ் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதென்ற தேர்தல் வாக்குறுதியின் ஒரு பகுதியாகப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. . இதற்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குக் குறிப்பிட்ட தொகையான கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். 42 பொருட்களின் பட்டியலில் 28 பொருட்களுக்கான

---

4 டெய்லி நியூஸ், 28 கார்த்திகை 1994

தடை நீக்கப்பட்டது. 1995 தை மாதத்தில் இரு பிரிவினரும் மோதல் தவிர்ப்புக்கு இணங்கிக் கொண்டனர். பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பது, அரசியல் சீர்திருத்தச் செய்முறை என்பன இலங்கையின் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பொறுத்தவரையில் முக்கிய விடயங்களாகக் கருதப்பட்டன. புதிய கொள்கை முயற்சி மற்றும் நிறுவன ரீதியான விருத்திகளையும் 1994 ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பாக ஏற்பட்ட முன்னேற்றங்களையும் இவ் அறிக்கை பரிசீலிக்கின்றது. இவ் அறிக்கையானது குறிப்பாகச் சிறுபான்மையினர் தமது மொழியைப் பயன்படுத்தும் போது கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு என்பவற்றில் பாரபட்சமின்றி அவற்றை அடைவதற்காகத் தமது திறமையைப் பயன்படுத்துவதற்குத் தமது உரிமையைப் பயன்படுத்தும் போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளையும் ஆராய்கின்றது. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் எடுத்துக் கூறப்பட்ட கொள்கைகள் சிறுபான்மையினர் உரிமைகளை அடைந்து கொள்வதற்குச் சாதமான அம்சங்களைக் கொண்டிருந்தது. அத்துடன் அரசாங்கமானது, சிறுபான்மையினர் இலங்கையில் சம உரிமையுடைய பிரசைகளாகக், கௌரவத்துடன் வாழ்வதற்கான பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்த விரும்புகின்றோம்.

அரசாங்க மாற்றத்துடன் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாகச் சில விடயங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளதுடன் பொது விவாதத்துக்கும் உட்படுத்தப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் போதிய கவனம் செலுத்தத் தவறிய கடந்த காலத் துஷ்பிரயோகங்கள் முழுவதையும் விசாரணை செய்வதற்கான தேவை மற்றும் தண்டனை நீக்கல் உரிமை போன்ற விடயங்கள் இவற்றில் சிலவாகும். தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியானது கடந்த காலத்தில் இடம் பெற்ற படுகொலைகள், காணாமற் போனவர்கள், அரசியல் பழிவாங்கல்கள், கண்டுபிடிக்கப்படாத குற்றங்கள் என்பன பற்றி விசாரணை நடத்துவதாக உறுதியளித்தது. அத்துடன் அதிகாரத்துக்கு வந்த மூன்று மாதங்களுக்கிடையில் காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களைக் குடும்பங்களுக்குத் தருவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுப்போம் எனவும் கூறியது. பல்வேறு தாமதங்களின் பின் காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணைக்கான மூன்று சனாதிபதி விசாரணை ஆணைக் குழுக்கள், 1994 கார்த்திகை மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் நாட்டின் குறிப்பிட்ட பகுதிக்கென நியமிக்கப்பட்டன. காணாமல் போவதற்குக் காரணமாக இருந்த பாதுகாப்பு அதிகாரிகள் மீது குற்ற வழக்குத் தொடுப்புக்களை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாக

இவ்விசாரணைகள் அமையுமா என்பதுபற்றி அரசாங்கத்தின் கொள்கை தெளிவாக இருக்கவில்லை.இது பற்றி விரிவாக அத்தியாயம் 6, 7 இல் ஆராயப்படுகின்றது. சில குறிப்பிட்ட முன்னணி அரசியற் தலைவர்கள் மற்றும் பலரின் படுகொலைகளை விசாரணை செய்தவற்குக் கார்த்திகை மாதத்தில் மற்றுமொரு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

சூரியகந்தைப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட பலருடைய உடலுறுப்புக்கள் 1988–1990க்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே.வி.பி) எதிராக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்க்கிளர்ச்சி நடவடிக்கைகளினால் காணாமல் போனவர்களுக்குரியவை என நம்பப்பட்டது. 1994 தை மாதத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பதவியில் இருக்கும் போதே எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல்வாதிகளினால் இவ் அகழ்வு ஒழுங்கற்ற முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அகழ்வு வேலைகள் பொதுமக்களுக்கு அறியப்படுத்தப்பட்டதுடன் அரசியல் தன்மை கொண்டனவாகவும் விளங்கின. புதைகுழிகளைத் தோண்டியமைக்குப் பொறுப்பானவர்கள் அச்சுறுத்தப்பட்டனர். புதைகுழிகள் பற்றி நீதிபதிக்கு அறிவித்த சட்டத்தரணி அவரது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது சுடப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் இவ்விசாரணையில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை. தேர்தல்களின் பின் அரசாங்கத்தின் பல்வேறு உறுப்பினர் இவ்வாறு பலர் காணாமல் போன நிலைமைக்குப் பொறுப்பானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டுமா என்பது பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்டனர்.[5] அத்தியாயம் 6 இல் இது விரிவாக ஆராயப்படுகின்றது.

1994 இல் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், குறிப்பாகப் பத்திரிகைச் சுதந்திரம் பிரதான மனித உரிமைகளுள் ஒன்றாகத் தோற்றம் பெற்றது. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியானது அதிகாரத்துக்கு வந்த பின்பு பத்திரிகைச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகளை அகற்றுவதாக வாக்குறுதி அளித்தது. பத்திரிகையாளர் புதிய சுதந்திர உணர்வைப் பெற்றனர். சனாதிபதித் தேர்தலுக்கு முன்பு காமினி திசநாயக்கா படுகொலை செய்யப்பட்டபின் பொதுசன ஐக்கிய

---

5 பல முக்கிய நபர்களின் படுகொலைகளை ஆராய்வதற்கு விசாரணை ஆணைக் குழுக்கள் மேலும் உருவாக்கப்பட்டன.

முன்னணி அரசாங்கமே பத்திரிகைகளைத் தணிக்கை செய்யத் தொடங்கியது. அத்துடன் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் பக்கச் சார்பாக நடக்கத் தொடங்கின. இத்துறையில் கணிசமான நிறுவனரீதியான மற்றும் சட்டச் சீர்திருத்தங்கள் தேவை என்பது தெளிவாயிற்று. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கலாசாரக் கொள்கை, தணிக்கை, சித்திரம், நாடகங்கள், சினிமா, வெளிநாட்டு வெளியீடுகள் போன்றவற்றை உள்ளடக்கிய கலைத்துவ வெளிப்பாட்டுச் சுதந்திரம் பற்றி அத்தியாயம் 9 இல் ஆராயப்படுகின்றது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்ட மேலே குறிப்பிட்ட சித்திரவதைக்கெதிரான சட்டத்துக்கு மேலதிகமாகப் பல சட்டங்கள் 1994 இல் அறிமுகப்படுத்தப்பட்டன. மார்கழி மாதத்தில் குறைகேள் அதிகாரியின் அலுவலகத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான வழிகளை இலகுவாக்கும் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டது. நீண்ட காலமாகக் குறைகேள் அதிகாரியின் அலுவலகம் பலரின் கண்டனத்துக்குள்ளாகியிருந்தது. முன்பு இச்சட்டமானது அரசினால் அல்லது பொதுத்துறையினால் மேற்கொள்ளப்படும் அடிப்படை உரிமை மீறல்களுக்கான குற்றச்சாட்டுக்களையும், ஏனைய அநீதிகளையும் பாராளுமன்றப் பொதுமுறையீட்டுக் குழுவுக்கு அனுப்பப்பட வேண்டுமெனக் கூறியது. இப்பொழுது முறைப்பாடுகள் நேரடியாகவே முழு பாராளுமன்றக் குழு நிலையையும் கடந்து குறைகேள் அதிகாரியிடம் கொடுக்கப்படலாம். விசாரணை தொடரப்பட முடியாது எனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டால் குறைகேள் அதிகாரி அதனைப் பொதுமுறையீட்டுக் குழுவிற்கு அறிவிப்பதற்குப் பதிலாக முறைப்பாடு செய்தவருக்கு அறிவிக்க வேண்டியது கடமை எனத் திருத்தம் வலியுறுத்தியது. தனது தீர்மானத்தை அவர் நிறுவனத்தின் தலைவருக்கும், திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கும் அறிவிக்க வேண்டும். குறைகேள் அதிகாரியின் நடைமுறைகளை இலகுவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட இத்தகைய முயற்சிகள் வரவேற்கப்படவேண்டிய முன்னேற்றமாகும்.[6]

1994 இல் வேறு இரு சட்டங்கள் மனித உரிமைகள் தொடர்பான முக்கிய பரிமாணங்களைக் கொண்டிருந்தன. முதலாவது இறப்புக்களைப்

---

6 நடைமுறையை இலகுவாக்குவதினால் மனித உரிமை மீறல்களுக்கான முறைப்பாடுகளில் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என்பது உறுதியானது. இவை போன்ற செயலகம் வரலாற்றுரீதியாக மிகச் சிலவே காணப்பட்டுள்ளது.

பதிவு செய்தல் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்), 1994 கார்த்திகை மாதம் 25 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. அத்துடன் ஒருவர் காணாமல் போயிருந்தால் அல்லது இறந்திருப்பார் எனக் கருதப்படுமிடத்து அந்நபரின் இறப்புப் பதிவினை ஆகக் குறைந்தது ஒரு வருடத்தின் பின் பதிவு செய்யலாம். இறப்புப் பதிவுகளை மேற்கொள்ளும் போது மாவட்டப் பதிவாளரினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தெளிவாக வகுக்கப்பட்டன. காணாமல் போன நபர்களின் பதிவுக்கான படிவம் சட்டத்தில் இணைக்கப்பட்டது. காணாமல் போன நபரின் குடும்ப அங்கத்தவர்களினால் அந் நபரின் இறப்பினைப் பதிவு செய்வதற்கான நடைமுறைச் சாத்தியமான ஒரு செயற்பாட்டை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை அதிகமாக வலியுறுத்திக் கூறமுடியாது.

இரண்டாவது லஞ்ச ஊழல் (திருத்தச்) சட்டம், புரட்டாதி மாதம் நிறைவேற்றப்பட்டது. இது லஞ்சம் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பாகப் பொதுஊழியர்களைப் பொறுப்புக் கூறவேண்டியவர்களாக ஆக்குவதற்கான சிறந்த, பயனுள்ள ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது. இத்திருத்தமானது "லஞ்சம்", "பொதுஊழியன்" என்பவற்றுக்கான வரைவிலக்கணத்தையும் விரிவுபடுத்தியது. இருந்தாலும் மனித உரிமை வாதிகள் இச்சட்டத்தின் சிலவிடயங்கள் பற்றிக் கவலை தெரிவித்தனர். இது பின்நோக்கிய பாதிப்பைக் கொண்டிருக்கின்றதெனவும் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் நடவடிக்கைகளின் மீதான நீதிமன்றத்தின் மேற்பார்வைக் கட்டுப்பாட்டினை அகற்றுகின்றதென்றும் குற்றம் சாட்டினர்.

அவசரகால விதிகள் ஆடி-ஆவணி மாதக் காலப்பகுதியைத் தவிர வருடம் முழுவதும் நடைமுறையில் இருந்தன. வெவ்வேறு காலங்களில் அவை நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசங்களைப் பொறுத்து மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்குடன் தொடர்பில்லாத சில சட்ட விதிகளை அகற்றுவதனையும் இம்மாற்றம் உள்ளடக்கியிருந்தது. உதாரணமாக, உணவுக்கான உப்பு அல்லது மாகாணப் பாடசாலைச் சபைகள் தொடர்பான விதிக்ள், நீண்டகாலப் போக்கில் சில முக்கியமான விடயங்களை அவை குறிப்பிடவில்லை. உதாரணமாகக் கட்டுப்பாடற்ற தடுத்து வைத்தல் மற்றும் சித்திரவதைக்கு எதிரான போதுமான பாதுகாப்பை அளிப்பதற்குத் தவறியமை மற்றும் காலவரையற்ற நிர்வாகரீதியாகத் தடுத்து வைத்தல் போன்றவை. அவசரகால விதிகள் மிக விரிவாக அத்தியாம் 3 இல் ஆராயப்படுகின்றது.

அவசரகால ஒழுங்கு விதிகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் ஒரு பிரதான அம்சமாக, மனித உரிமைகள் செயலணிப் பிரிவு

(எச்.ஆர்.ரி.எவ்)[7] தனது அதிகாரங்களை இழக்க நேர்ந்தமையைக் குறிப்பிடலாம். 1994 ஆடியிலிருந்து இதன் நிலைமை நிச்சயமற்றதாக இருந்தது. மனித உரிமைகள் செயலணிப் பிரிவு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் நலனைக் கண்காணித்தலும், பதிவு செய்தலுமாகிய முக்கிய பணிக்குப் பொறுப்பாக இருந்தது. அத்துடன் அவர்களின் உரிமைகளுக்கு எதிரான மீறல்களைப் பற்றி விசாரணை நடத்துவதற்கும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரிவுக்குப் பதிலாக வேறு எந்த நிறுவனமும் உருவாக்கப்படவில்லை. தடுப்புக் காவலில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான மனித உரிமைகளின் பலவீனமான தன்மையையே இது காட்டுகின்றது. அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் நடைமுறைகள் சிலவற்றுக்கு வலுவூட்டுதல் இந்த இழப்பிற்குப் பரிகாரமாக இராது. அத்துடன் நடைமுறையிலிருக்கும் பாதுகாப்பும் மிகவும் குறைவே.

அண்மைக் காலங்களில் காணாமல் போதல், சட்டரீதியற்ற கொலைகள் என்பன மிகப் பெருமளவு இடம் பெற்றிருந்தன. இவ்வாறான பெரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் பற்றிய அறிக்கைகள் 1994 இல் குறைவாகவே காணப்பட்டன. உண்மையில் இம் மீறல்களுக்கு எதிரான சரியான சட்டரீதியான மற்றும் நடைமுறைப் பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் கடந்த தசாப்தத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காணாமல் போயிருக்கிறார்கள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் இவ்விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தப்பட வேண்டும். இத்தகைய மீறல்களைத் தவிர்ப்பதைப் பொறுத்தவரையில் தண்டனையிலிருந்து தப்பித்தல் பற்றிய பிரச்சினையும் நீதி வழங்கப்பட வேண்டியதன் அவசியமும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு வருடமும் மனித உரிமைகளுக்கான அமைப்புகள், மிக முக்கியமான ஏனைய மனித உரிமைகள், அதாவது சித்திரவதை,

---

7 தடுத்து வைக்கப்பட்டோரின் மனித உரிமைகளைக் கவனிப்பதற்கு முன்னைய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஓர் அலகே மனித உரிமைகள் செயலணிப் பிரிவாகும். இது 1973 ஆம் ஆண்டு இலங்கை அடிப்படைச்சட்டம் இலக்கம் 31, பிரிவு 19 இன் முன்னேற்பாடுகளுக்கு அமைவாக அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது. இவ் ஒழுங்கு விதிகள் 1991 ஆடி 31 ஆம் திகதி 673/2 வர்த்தமானியிலும், 1991 ஆவணி 10 ஆம் திகதி இல. 674/17 வர்த்தமானியிலும் பிரகடனம் செய்யப்பட்டது. 1994 ஆடி மாதத்துடன் இவை காலாவதியாகியது.

கட்டுப்பாடற்ற கைதுகள், தடுத்து வைத்தல் மற்றும் நீதி விசாரணைக்கான உரிமை என்பவை தொடர்பான சான்றுகளைச் சேகரித்து வருகின்றன. இதுபற்றி அத்தியாயம் 4 இல் ஆராயப்படுகின்றது.

3. இத் தொகுதியில் அறிமுகம் செய்யப்படும் வேறு சில உரிமை விடயங்கள்

இத் தொகுதியின் அத்தியாயம் 11 இல், சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, வீடமைப்பு, நீர்வசதி மற்றும் உடல் நலன் ஆகியவற்றை முக்கியமாகக் கொண்ட இலங்கையின் சமூக, பொருளாதார உரிமைகள் பற்றி ஆராயப்படுகின்றன. இவ் அத்தியாயத்தில், பல்வேறு பிரிவு மக்களிடையே சமூக, பொருளாதார உரிமைகளை அடைந்து கொள்வதில் காணப்படும் வேறுபாடுகள் பற்றிய விபரங்களைத் தரும் அடிப்படையில் பிரதேச, துறைரீதியான, பால் விடயங்களில் தேசிய மட்டத்திலான தரவுகளைப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தொகுதியிலுள்ள பல அத்தியாயங்கள் கருப்பொருள் சார்ந்ததாக இருந்தாலும், விசேடமான சில பிரிவு மக்களின் உரிமைகள் சிலவற்றையும் கவனத்திற் கொள்கின்றது. தொழிலாளர்களின் உரிமைகள், சிறுபான்மையினர், இடம் பெயர்ந்தோர் மற்றும் நாடு திரும்பிய அகதிகள், குழந்தைகள், பெண்கள் பற்றிய பகுதிகள் குறிப்பிடத்தக்கன. தொழிலாளர் உரிமைகள் பற்றிய அத்தியாயம் 10 1994 இல் முக்கியத்துவம் பெற்ற விடயங்களில் கவனம் செலுத்துகின்றது. சிறுவரின் உரிமைகள் பற்றிய அத்தியாயம் 14 இல் குற்றவியற் சட்டத்தை மீறுவோர், துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோர், பால்ரீதியாகச் சுரண்டப்படுவோர், வேலைவாய்ப்புப் பெற்றோர் எனப் பல்வகைப்பட்டோர் பற்றிக் கவனம் செலுத்தப்படுகின்றது. சிறுவர் தொடர்பான இலங்கைச் சட்டமானது சர்வதேச மனித உரிமைகள் நியமத்தை உறுதி செய்கிறதா என்பதை மதிப்பீடு செய்கின்றதுடன் இச்சிறுவர் பிரிவுகளுடன் தொடர்பான வகையில் இலங்கைச் சட்டத்தின் குறைபாடுகளையும், சிறப்புக்களையும் இப்பகுதி எடுத்துக் காட்டுகின்றது. அத்தியாயம் 16 இல் பெண்களின் உரிமைகள் தொடர்பாகக் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்படுகின்றது. பெண்களுக்கெதிரான எல்லா வகையான பாரபட்சங்களையும் அகற்றுதல் மீதான (CEDAW) மகாநாட்டுடன்படிக்கை அம்சங்களை உள்ளடக்கி இலங்கையில் சட்டமியற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டமை பற்றியும்,

பொது வாழ்வில் பெண்களின் பங்கு, பெண்களின் சமூக, பொருளாதார உரிமைகள் பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்பவற்றையும் இப்பகுதி ஆராய்கின்றது.

குடியியல் மற்றும் அரசியல் உரிமை மீறல்களுக்கும், சமூக பொருளாதார உரிமைகளுக்குமிடையில் நெருங்கிய பிணைப்பு உள்ளது. சமூக, பொருளாதார அரசியல் ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் மிகக் கடுமையான முறையில் குடியியல் உரிமை மீறல்களுக்கு இலக்காகின்றனர். பிரதேச ரீதியான சமத்துவமின்மையின் இடைத் தொடர்புகளும், இனத்துவ அடிப்படையிலான பிரதிகூலமான தன்மையும், பால் வேறுபாடு, வயது என்பனவும் சமூக, பொருளாதார உரிமைகள் தொடர்பான அத்தியாயம் 11 இல் ஆராயப்படுவது போன்று மிகவும் சிக்கல் நிறைந்தவையே. எவ்வாறாயினும், இப்பிரச்சினைகள் பற்றிய கூடிய விழிப்புணர்வு முரண்பாடுகளையும், பிரதிகூலங்களையும் மேலும் ஊக்குவிக்காது ஒரு பரந்த கருத்தில் அபிவிருத்தி முயற்சிக்கு உதவியாக அமைவதுடன் சகல இலங்கையர்களும் விரிவான முறையில் மனித உரிமைகளை அதிகளவில் பெற்றுக் கொள்வதற்குச் சிறந்த முறையில் பங்களிப்பைச் செய்ய உதவும்.

2

இலங்கையில் அரசியல் உரிமைகளுக்கான கௌரவம்

இவ் அத்தியாயத்தில் ஆட்சியல் முறைமை, சட்ட வடிவமைப்பு, தேர்தல் தொகுதி முறைமை, 1994 இல் இடம் பெற்ற பாராளுமன்ற சனாதிபதித் தேர்தல்களின் உண்மையான நடைமுறைகள் பற்றிக் கூர்ந்து நோக்குவதன் மூலம் இலங்கையில் அரசியல் உரிமைகளுக்கான கௌரவம் பற்றி ஆராயப்படுகின்றது.

1. ஆட்சியியல் உரிமை: பாராளுமன்ற சனநாயகத்திலிருந்து நிறைவேற்று சனாதிபதி வரை

1948 இல் இலங்கை பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றிருந்தாலும் 1931 இல் வயது வந்தோருக்கான வாக்களிக்கும் உரிமையைக் குடியேற்ற நாட்டு அரசாங்கம் இத்தீவு மக்களுக்கு வழங்கியிருந்தது. 1948 இல் சுதந்திரத்துக்குப் பின் அப்போதைய இலங்கையின் அரசாங்க முறைமையானது 1946 ஆம் ஆண்டின் இலங்கை அரச கழகப் பணிப்பின்படி (அரசியல் யாப்பு) நிறுவப்பட்டது. அவ் அரசாங்க அமைப்பு பாராளுமன்ற சனநாயகத்தை ஏற்றுக் கொண்டது. இதன்படி புதிதாகப் பெறப்பட்ட சுய ஆட்சியுரிமையை வலுப்படுத்துவதில் காலத்துக்குக் காலம் நிகழும் தேர்தல்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. சுதந்திரமான தேர்தல்களினூடாக ஆட்சியியல் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கான உரிமை, அரசியல் ஒழுங்கில் உறுதியான, மாற்றப்படமுடியாத அம்சமாக இருந்தது. மக்கள் இவ் வம்சத்தை அவ்வாறே ஏற்றுக் கொண்டனர் என்பது மிகையாகாது.

1.1. அரசியல் குற்றச்சார்பின்மையின் இழப்பு

1970 களின் ஆரம்பத்தில் பிரச்சினைகளற்றுக் காணப்பட்ட தேர்தல் செயன் முறைகள் பொறுப்பிலுள்ள அரசாங்கங்களின் உத்தரவாதமற்ற நடவடிக்கைகளினால் மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளாகியது. தேர்தல்கள் பின் போடப்பட்டதுடன் ஒரு பொதுத் தேர்தல் சர்வசன வாக்குரிமையுடன் மாற்றீடு செய்யப்பட்டது. 1977 இன் பின் இச் சூழ்நிலையானது முன் என்றுமில்லாதவாறு தேர்தலின் முன்பும், பின்பும் வன்முறைகளைக் கையாண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இடம் பெற்ற பரந்தளவிலான தேர்தல் மோசடிகளினால் மென்மேலும் தூண்டி விடப்பட்டன. அக்காலத்தில் அரசுக்கும், சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் விரிவடைந்தமையும், அரச வன்முறைகள் நிறுவன மயப்படும் நிலையையும் காணக் கூடியதாக இருந்தது. இதனால் தேர்தல் செயற்பாடுகள் மிகக் கடுமையாகச் சீரழிந்தன.

1.2. சனநாயகத்தின் தரமிழப்பு – நிறைவேற்று சனாதிபதி முறை

இலங்கையில் 1978 அரசியல் திட்டத்தின் கீழ் நிறைவேற்று சனாதிபதி முறை உருவாக்கப்பட்டதுடன் நிறைவேற்று சனாதிபதிக்கு அதிகளவு அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருந்ததினால் நாட்டின் சனநாயக ரீதியான பங்களிப்பில் வீழ்ச்சி நிலை காணப்பட்டது. இந்த அரசியல் யாப்புத் திட்டத்தின் கீழ் அதிகளவு அதிகாரங்களைக் கொண்ட சனாதிபதிக்கு அவர் பதவியிலிருக்கும் போது உத்தியோக பூர்வமாகவோ அல்லது தனிப்பட்ட ஆற்றலினாலோ (உறுப்புரை 35 (1)) செய்யப்படும் குற்றங்களிலிருந்து விடுபாட்டுரிமை வழங்கப்பட்டது. பாராளுமன்றம் மதிப்பிழந்ததுடன் அப்போதைய சனாதிபதியும், நிறைவேற்று சனாதிபதி முறைக்குக் காரணமானவருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்களிடமிருந்து திகதியிடப்படாத பதவிதுறப்புக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டார்.

பொதுசனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அடிக்கடி மேற் கொள்ளப்பட்ட அரசின் அவசரகாலப் பிரகடனங்கள், ஏலவே காணப்பட்ட நிறைவேற்று சனாதிபதியின் ஏகபோக அதிகாரங்களைப் பெருமளவில் விரிவாக்கியது. படிப்படியாக அவசரகால அதிகாரங்களின் கீழ் நிறைவேற்று சனாதிபதியின் ஆட்சியானது கட்டளைச் சட்டமாகவே காணப்பட்டதுடன் சனாதிபதியின் சட்டமியற்றும் விடயங்கள் தேசியப்

பாதுகாப்பு தொடக்கம் உப்பின் தரக்கட்டுப்பாடு வரையான விடயங்களை உள்ளடக்கியிருந்தது.[1]

1.3 பொறுப்புக் கூறலும் வெளிப்படைத்தன்மையும் அற்றநிலை

இத்திட்டத்தின் ஆட்சியலானது ஏதேச்சாதிகாரத்துக்கு வழிவகுத்ததுடன் அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலுக்கும் வெளிப்படைத் தன்மையற்ற நிலைக்குமானு உத்தரவாதமானது அரசியல் யாப்பில் மிகக் குறைவாகவே காணப்பட்டது. மேலே குறிப்பிட்டதன்படி சனாதிபதி குற்றச் செயல்களுக்கான வழக்குத் தொடுப்புக்களிலிருந்து முற்றாகவே விடுபாட்டுரிமையைக் கொண்டிருந்தார். சட்டவாக்கம் பற்றிய நீதிமுறைப் பரிசீலனைக்கு அனுமதி ஏதும் இல்லை. ஒரு சட்டவாக்கம் அரசியல் யாப்புக்கு உட்பட்டதா என்பதை ஆராய ஒரு கிழமைக்குள் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திர நிகழ்ச்சி நிரல் உயர்நீதிமன்றத்தின் அரசியல் யாப்பு நீதி அதிகாரத்துக்குள் அதனைக் கொண்டு வரும் வகையில் குறிப்பிடல் வேண்டும், (உறுப்புரை 120,121). நீதித்துறை பற்றிக் கருத்துரை கூறுவதில் சுயமாகவே கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது. ஏனெனில் அவ்வாறான கருத்துரை நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கொள்ளப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. மேலும் இந்த அவமதிப்பு என்னும் கோட்பாட்டின் வரையறைகள் தெளிவாக இல்லை. அரசியல் யாப்பு உத்தரவாதமளித்துள்ள அடிப்படை உரிமைகள் நிர்வாக ரீதியாக அல்லது நிறைவேற்று அதிகார வழிமுறை மூலம் மீறப்படும் போது உயர் நீதிமன்றத்துக்கு மனுச் செய்ய உரிமை உண்டு. மக்களை அரசின் அடக்கு முறையிலிருந்து பாதுகாக்க வழங்கப்பட்டுள்ள அரசியல் யாப்பு ரீதியான முக்கிய நிவாரணம் இது மட்டுமேயாகும். (உறுப்புரை 126)

1.4 பயக் கலாசாரம்

அரசாங்கத்தினாலும் (பாரா இராணுவத்தினர், கொலைக் குழுக்கள் போன்ற அரச முகவர்களினால்) அரசுக்கு எதிரானவர்களினாலும் இழைக்கப்பட்ட வன்முறைச் செயல்களினால் உருவாக்கப்பட்ட பய உணர்வுகளினால், நாட்டின் சனநாயக அரசியல் கலாசாரத்தின் மிச்ச சொச்சங்களும் பாரிய பாதிப்புக்குட்பட்டன. தமிழ் ஈழ விடுதலைப்

---

1 பார்க்க. *Review of Emergency Regulations,* **The centre for the study of Human Rights, University of Colombo, Sri Lanka in association with the Nadesan Centre (1993)**

புலிகளும், அதி தீவிர சிங்கள தேசியப் பிரிவினரும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) யினரும் அரசுக்கு எதிரான பிரதான வன்முறைப் பிரிவினராகக் காணப்பட்டனர்.[2] அரசு சார்பற்ற இவ் ஆயுதமேந்திய குழுவினரின் மேலாதிக்கம் பெருமளவுக்கு அரசின் சனநாயக ரீதியற்ற அடக்கு முறைகளின் விளைவென்றே கருதப்படுகின்றது.

1993 வைகாசி மாதம் 1 ஆம் திகதி சனாதிபதி பிரேமதாசவின் படுகொலையைத் தொடர்ந்து பிரதம மந்திரியாக இருந்த டி.பி. விஜயதுங்கா சனாதிபதியாகப் பதவியேற்றதன் பின் சில காலத்துக்கு இப் பயச் சூழலானது மறைந்திருந்தது. இவ்வருட இறுதியில் மாகாண சபை அங்கத்தவர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியினால் கடத்திச் செல்லப்பட்ட போது முக்கியமான நிகழ்ச்சிகள் இடம் பெற்றதுடன் அரசியல் சுதந்திரம் மற்றும் நீதியான அரசாங்கத்துக்கான கோரிக்கைகள் வலுப்பெற்றன. இரு தசாப்தங்களாகப் பயம் நிறைந்த அமைதியில் மூழ்கியிருந்த சமூகத்தின் அமைதியான அரசியல் பலம் மீண்டும் எழுச்சி பெறுவதை இது உணர்த்துவதாகக் காணப்பட்டது.

எதிர் அரசியலைச் சேர்ந்தவர்கள் சந்திரிகா பண்டார நாயக்காவின் தலைமைத்துவத்தின் கீழ் பொதுசன ஐக்கிய முன்னணி என்னும் கூட்டணியின் கீழ் தம்மை மீள ஒழுங்குபடுத்தினர். இக் கூட்டு முன்னணியானது பயம், ஊழல் என்பவற்றிலிருந்து சமூகத்தை விடுவிக்கவும், ஆட்சியில் மறைப்பற்ற நிலையை ஏற்படுத்தவும் ஒரு பரந்த கோரிக்கையைத் தனது அரசியலின் பிரதான தொனிப் பொருளாக மாற்றியது. இச் சூழ்நிலையில் சனாதிபதி விஜயதுங்கா 1994 ஆனி 25 ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கலைத்ததுடன் பாராளுமன்றப் பொதுத் தேர்தலை நடைபெற வேண்டிய காலத்திலும் பார்க்க ஆறு மாதங்களுக்கு முன்னராக 1994 தை மாதம் 16 இல் நடத்துவதற்குத்

---

2 பார்க்க, சர்வதேச மன்னிப்புச் சபை, *Sri Lanka: Extrajudicial Executions, "Disappearances" and Torture, 1987 to 1990 and Sri Lanka: A Human Rights Crisis* (London, 1990)

திட்டமிட்டார். இத்தேர்தல் இலங்கையின் சனநாயகத்துக்கான மிக முக்கியமான சோதனையாக அமைந்தது.[3]

2. சட்ட ரீதியான வடிவமைப்பு

1978 அரசியல் யாப்பின் உறுப்புரை 1 இல் இலங்கையானது "................ **சார்பற்ற, தன்னாதிக்கமுடைய, சுதந்திரமான சனநாயக சோசலிசக் குடியரசு**.............." என விபரிக்கப்பட்டுள்ளது. அரச கொள்கையின் வழிகாட்டல் தத்துவங்கள் பற்றிய உறுப்புரை 27(4) பின்வருமாறு கூறுகின்றது.

> **"அரசாங்கத்தின் சனநாயக அமைப்பையும் மக்களின் சனநாயக உரிமைகளையும் அரசு வலுப்படுத்தி விரிவுபடுத்தும். இதற்கு அரசு நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவதுடன் அரசாங்கத்திலும் தேசிய வாழ்வின் சகல மட்டங்களிலும் மக்கள் பங்கு கொள்வதற்கான சாத்தியமான எல்லா வாய்ப்புக்களையும் அரசாங்கம் வழங்கும்."**

1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியல் யாப்பின்படி சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் அபிப்பிராய வாக்கெடுப்பு என்பனவற்றில் மக்கள் **"சுதந்திரமாகவும் சமத்துவமாகவும், இரகசியமாகவும் வாக்களிக்கும்"** உரிமை உடையவர்களாவர், (உறுப்புரை 93). 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பிரசையும் அரசியல் யாப்பின்படி (உறுப்புரை 89) ஏதேனும் குற்றச் செயல் புரிந்ததன்

---

[3] 1994 இல் உள்ளூர் மட்டத்தில் சில தேர்தல்கள் இடம் பெற்றன. பங்குனி 24 இல் இடம் பெற்ற தென் மாகாண சபைத் தேர்தல்களில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவினால் வழிநடத்தப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணிக்குக் குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்தது. பங்குனியில் கிழக்கிலும், வவுனியா மாவட்டத்திலும் இடம் பெற்ற உள்ளூர் தேர்தல்கள் குறிப்பிடத்தக்கதாக இருந்ததுடன் அவை 11 வருடங்களின் பின் அங்கு நடைபெற்ற தேர்தல்களாகவும் இருந்தன. இப்பகுதிகளின் வெற்றிக்கு ஐக்கிய தேசியக் கட்சி உரிமை கோரினாலும், வாக்குகளானது பெரும்பாலும் இனரீதியாகவே அளிக்கப்பட்டன. அநேக மாவட்டங்களில் பொலிசின் தவறான நடத்தைகள், வாக்களிப்பின் போது மோசடி, வாக்காளர் பயமுறுத்தப்பட்டமை ஆகிய கடுமையான முறைப்பாடுகள் காணப்பட்டன. (See INFORM, *Situation Report- March 1994,* Colombo)

காரணமாகவோ அல்லது உளநோயின் காரணமாகவோ தகுதியற்றவராகக் கருதப்படாத விடத்து வாக்களிக்க உரிமையுடையவர்.

1980 ஆம் ஆண்டு இலங்கை ஐ.சி.சி.பி.ஆர் என்பதைப் பின்னுறுதிப் படுத்தியதுடன் அதன் கீழ் பிரசைகள் நேரடியாகவோ அல்லது சுதந்திரமாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஊடாகவோ பொது விவகாரங்களில் பங்கு கொள்வதற்கான உரிமையை அரசாங்கம் உறுதிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளது. (உறுப்புரை 25 (ஆ)). அவ்வாறே ஐ.சி.சி.பி.ஆர் இன் உறுப்புரை 25 (ஆ) இன் கீழ் அரசாங்கம் பிரசைகளுடைய பின்வரும் உரிமைகளை உறுதி செய்தது.

> **"காலத்துக்காலம் நடக்கும் முறையான தேர்தல்களில் வாக்களிக்கவும் தெரிவு செய்யப்படவும் உரிமை உண்டு. அவ்வாறான வாக்குரிமை யாவருக்கும், சமத்துவ அடிப்படையில் இரகசியமாக வழங்கப்படவும் தேர்வாளர்கள் தமது விருப்பத்தைச் சுதந்திரமாக வெளியிடவும் உத்தரவாதம் உண்டு."**

மாகாணசபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் பற்றிய ஏற்பாடுகள் மற்றொரு சட்டத்தில் காணப்படுகின்றன.[4] அரசியல் யாப்பில் தேர்தல் ஆணையாளரின் நியமனம் பற்றிய ஏற்பாடுகளும் உள்ளது. அவர் நன்னடத்தைக் காலத்தில் தேர்தல்களை நடத்துவதற்கான அதிகாரங்களைக் கொண்டவர், (உறுப்புரை 103).

உறுப்புரை 14 (1) (அ),(ஆ),(இ) இன்படி கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடும் சுதந்திரம் போன்ற அரசியல் உரிமை தொடர்பான இன்றியமையாத உரிமைகள் நியாதிக்கத்துக்குட்பட்ட அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் உறுப்புரை 12 (2) அரசியல் கருத்து வெளிப்பாட்டின் காரணமாகப் பிரசைகள் பாரபட்சமாக நடத்தப்படுவதைத் தடை செய்கின்றது.

---

4 முறையே 1988 இன் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் மற்றும் 1946 இன் 53 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் கட்டளைச் சட்டம் (திருத்தப்பட்ட) என்பவற்றின் கீழ்.

3. தேர்தல் தொகுதி முறை

3.1 பாராளுமன்ற அங்கத்தவர்களின் தேர்தல்

பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் 6 வருடங்களாக இருப்பதுடன் உறுப்புரை 62 இன் படி அதற்கு முன்னதாகவே தேர்தல்களை நடத்த முடியும். 1981 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட 1 ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல் சட்டமானது பாராளுமன்றத் தேர்தல்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்பதை எடுத்துக் கூறுகின்றது.

1978 அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்றம் 225 அங்கத்தவர்களைக் கொண்டிருப்பதுடன் அவர்களில் 196 அங்கத்தவர்கள் நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து விகிதாசாராப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். வாக்களிப்போர் முதலில் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவுக்குத் தமது தெரிவினடிப்படையில் வாக்களிக்க வேண்டும். பின்னர் அத்தேர்தல் மாவட்டத்தில் (உறுப்புரை 99 (2)) உள்ள கட்சியினால் அல்லது குழுவினால் நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர் பட்டியலிலிருந்து 3 வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும். இதன்படி கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் அம்மாவட்டத்தில் தமக்குக் கிடைத்த வாக்கு எண்ணிக்கையின் படி விகிதாசரப் பிரதிநிதித்துவத்திற்கு உரித்துடையவர்கள். உறுப்புரை 99 (8) இன்படி ஆகக் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற கட்சியின் அல்லது குழுக்களின் வேட்பாளர்கள் ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுக்களுக்கும் உரித்துடைய பாராளுமன்ற ஆசனங்களுக்குப் பிரதிநிதிகளாக வரத் தகுதியுடையவர்கள். இத்திட்டத்தின் கீழ் ஒரு தேர்தல் மாவட்டத்தின் மொத்த வாக்குகளில் 5 சத வீதத்துக்குக் குறைவாக எடுக்கும் எந்தக் கட்சியாயினும் தமது சார்பில் அந்த மாவட்டத்தில் இருந்து வேட்பாளரைத் தெரிவதற்கான தகுதியை இழந்து விடும், (உறுப்புரை 99 (6) (ஆ). மிகுதி 29 அங்கத்தவர்கள் தீவு முழுவதிலுமிருந்து ஒவ்வொரு கட்சிகளும் பெறும் வாக்குகளின் சதவீதப்படி, போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் தேசியப் பட்டியலில் இருந்து பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்படுவர், (உறுப்புரை 99 (அ)).

1978 இன் முன்னரான தேர்தல் தொகுதி முறையின் கீழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் சாதாரண பெரும்பான்மை முறையின் கீழ் "முதல் கடப்பவர் வெற்றி பெறுவர்" என்னும் அடிப்படையில் தெரிவு

செய்யப்பட்டனர். ஒரு தேர்தல் தொகுதியில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டதாகப் பிரகடனப் படுத்தப்படுவார். இம்முறைமை சுதந்திர காலத்திலிருந்து இடம் பெற்று வந்துள்ளதுடன் மக்களின் நீதியான அரசியல் பிரதிநிதித்துவத்தில் பல சந்தேகங்களை ஏற்படுத்தியதுடன் ஒழுங்கின்மைகளையும் விளைவித்தது. உதாரணமாக 1970 இன் பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மொத்த வாக்குகளில் 36.9 வீதமான வாக்குகளைப் பெற்று 91 வேட்பாளர்களைத் (ஒரு வேட்பாளர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்) தெரிவு செய்தது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி 37.9 வீதத்துக்கு மேலான வாக்குகளைப் பெற்றும் 17 வேட்பாளர்களையே பெற்றது.[5]

1977 பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 29.7 சதவீத வாக்குகளுடன் 8 வேட்பாளர்களைப் பெற்றிருக்க ஐக்கிய தேசியக் கட்சி 50.9 சதவீத வாக்குகளுடன் 140 வேட்பாளர்களைப் பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி 6.4 சதவீத வாக்குகளைப் பெற்று 18 இடங்களைக் கைப்பற்றியதுடன் பாராளுமன்றத்தில் எதிர்கட்சியாகும் தகுதியையும் பெற்றுக் கொண்டது.[6] தற்போது நடைமுறையிலிருக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் இம் முடிவுகளைப் பொருத்திப் பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சி 84 இடங்களையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 51 இடங்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணி 14 இடங்களையும் பெற்றிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது.[7]

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது 1978 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முன் முயற்சியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஒழுங்கற்ற நிலமைகளை அகற்றுவதற்கான ஒரு தெரிவாகவும் இருந்தது. 1989 இன் பொதுத்தேர்தல் புதிய விகிதாசாரப் பிரதி நிதித்துவத்தின் கீழ் இடம் பெற்றதுடன் மொத்த வாக்குகளில் 50.71 வீதத்தைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி 125 வேட்பாளர்களையும் (மொத்த ஆசனங்களில் 55.5%), 31.9 வீதத்தினைப் பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி 67

---

5 Statistics provided in *The Parliament of Sri Lanka - Presidential Election 1982, Referendum 1982, General Election 1977, Elections 1977 to 1986* (The Associated Newspapers of Ceylon Ltd., Lake House, Colombo) P 354

6 *Ibid,* P 355

7 *Ninth Parliament of Sri Lanka : Presidential Election 1988, General Election 1989* (The Associated Newspapers of Ceylon Ltd., Lake House, Colombo) P 51

வேட்பாளர்களையும் (29.7% மான ஆசனங்கள்) பெற்றுக் கொண்டது. தேர்தல் தொகுதிகளின் அபிலாஷைகளுக்கு இசைவாக மிக ஒப்புரவான பிரதிநிதித்துவத்தை இம் முடிவுகள் பிரதிபலித்தன.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது இன்னுமொரு முக்கிய பயன்பாட்டைக் கொண்டிருந்தது. 1970 (மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்குக் கிட்டவாக), 1977 (ஆறில் ஐந்து பெரும்பான்மை) பொதுத் தேர்தல்களில் இடம் பெற்றது போல் உள்ளார்ந்த ரீதியில் கொடுங்கோன்மையான பெரும்பான்மையைப் பெறுதலில் இருந்து எந்தத் தனிக் கட்சியையும் இம் முறை தடுத்து விடுகின்றது. 1978 அரசியல் யாப்பினால் கவனத்திற் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கையானது (அதாவது 196 மொத்த ஆசனங்களுக்குள்) ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவாகிய வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாகவே தீர்மானிக்கப்பட்டது. (உறுப்புரை, 96,97 மற்றும் 98). முன்னைய முறையின் கீழ் முக்கிய விடயமாக இருந்த தொகுதி நிர்ணய ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளினால் பெரும்பான்மையைப் பெறுவதற்குச் செய்யப்படும் சூழ்ச்சிகளுக்கான சந்தர்ப்பங்களை இது குறைத்து விட்டது. விருத்தியடைந்த, அடர்த்தியான சனத் தொகையைக் கொண்ட நகரப் பகுதிகளைப் போலன்றி, செறிவற்ற சனத் தொகையைக் கொண்ட விருத்தி குன்றிய பகுதிகளில் 'இருந்து பாராளுமன்றத்துக்கு ஒரு வலுவான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கக் கூடியதாக ஆசனங்களை ஒதுக்க முடியாது. இத்தகைய பலவீனமான தன்மையை இம்முறை கொண்டிருப்பதினால் கிராமிய சனத் தொகையின் அரசியல் அதிகாரம் செயலிழந்து விடுகின்றது.

வாக்காளர் முக்கியமாகக் கட்சிக்கு வாக்களிப்பதினால், தங்களை எந்தத் தனிப்பட்ட அங்கத்தவர் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டுமென்று நேரடியாகக் கூறுவதில்லை என்ற ஒரு பிரதான கண்டனம் இவ் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராக முன் வைக்கப்படுகின்றது. இதனால் தமது தொகுதி மக்களுடன் பிரதிநிதிகளின் தொடர்பு குறைவாகவே காணப்படுகின்றது. ஆனால் முன்னைய முறையின் கீழ் வாக்காளர் எந்தத் தனிப்பட்ட அபேட்சகர் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்யவேண்டுமென்று நேரடியாகவே கூற முடியும். உறுப்புரை 96-(6) (அ) இன் கீழ் 5 சதவீத வெட்டுப் புள்ளி தொடர்பாக இன்னுமொரு கண்டனமும் உள்ளது. இது சிறிய கட்சிகளைத் தேர்தல் செயற்பாடுகளிலிருந்து அகற்றி விடுகின்றதுடன் தேசிய நீரோட்டத்தில்

சேராத தொகுதிகளுக்குப் பிரதிநிதித்துவத்தை மறுப்பதுடன் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தின் மீது கடுமையான பாதிப்பையும் கொண்டிருக்கக் கூடும்.

முன்னுரிமை வாக்கு முறைமையினால் ஏற்பட்ட மாற்றத்தினை தேர்தல் பிரசாரங்களில் ஏற்பட்ட உத்வேகங்களிலிருந்து அறிய முடிந்தது. அரசியல் விடயங்களில் வழக்கமாகக் காணப்படும் போட்டிகளுக்குப் பதிலாக ஒரு கட்சி அல்லது குழுக்களைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கிடையில் விகிதாசார வாக்குகளைப் பெறுவதற்கான சண்டைகள் உச்சநிலையை அடைந்துள்ளன. வாக்களிப்பில் காணப்படும் சிக்கலான முறைகளினால் செல்லாத வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதுடன் இறுதி முடிவுகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. 1989 இல் நடந்த பொதுத்தேர்தலில் மொத்த வாக்குகளில் 6.1 வீதம் ஏற்கப்படவில்லை.[8] 1994 பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் முறைமை பற்றிய தெளிவு காணப்பட்டிருந்தாலும் மொத்த வாக்குளில் 4.8 வீதம் செல்லாதவையாக ஏற்கப்படவில்லை.[9]

3.2 நிறைவேற்று சனாதிபதியின் தேர்தல்

1978 அரசியல் யாப்பின் படி சனாதிபதி 6 வருடங்களுக்கு மக்களினால் தெரிவு செய்யப்படுவார். (உறுப்புரை 30 (2)). ஏற்கக் கூடிய வாக்குகளில் அரைவாசிக்கு மேல் பெறும் வேட்பாளர் சனாதிபதியாகப் பிரகடனப்படுத்தப்படுவார். (உறுப்புரை 94 (2)). 1981, இல. 15 சனாதிபதி முறைத் தேர்தல் சட்டம் சனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அதிகாரமளிக்கின்றது.

3.3 அரசியல் பன்மைத்துவம்

1970 களில் இருந்து அடக்கு முறையான அரசியற் சூழ்நிலைகள் நாட்டில் நிலவிய போதும் இலங்கையானது பல்வேறு அரசியல் தோற்றக் காட்சிகளைக் கொண்ட பல கட்சிகளைக் கொண்டிருந்தமைக்காகப்

---

8 *Ibid,* P 131

9 Movement for Free and Fair Elections, *Interim Report on the Sri Lanka Parliamentary Elections of 16 August 1994* (hereinafter MFFE Report) Annex 1

பெருமையடைக் கூடும்.[10] வலது சாரி ஐக்கிய தேசியக் கட்சியும், இடது சாரி சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அதிகாரத்துக்கான பிரதான போட்டியாளர்களாக இருந்ததுடன் வரலாற்றிலிருந்து அரசாங்கங்கள் இவ்விரு கட்சிகளுக்கிடையிலேயே மாற்றப்பட்டு வந்துள்ளன. கொம்யூனிஸ்ட் கட்சி (சி.பி), லங்கா சம சமாஜக் கட்சி (எல்.எஸ்.எஸ்.பி) சிறிய இடதுசாரி அரசியற் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதித்துவம் சிறியதாக இருந்தாலும் சுயேட்சையாகவும், அதே வேளை சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டு அரசாங்கத்தின் மூலம் பிரதான அரசியற் பங்கினை இக்கட்சிகள் கொண்டிருந்தன.

இனத்துவ அடிப்படையிலான சில கட்சிகளும் சுதந்திர காலத்திலிருந்து இலங்கையின் அரசியலில் பிரதான பங்கினைக் கொண்டிருந்தன. தமிழர்களின் நலனைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும் முஸ்லிம்களுக்கு சிறி லங்கா முஸ்லிம் காங்கிரசும் இருந்தன. பெருந்தோட்டத்துறையின் ஒரு பிரிவினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியற் கட்சியாகச் செயற்படும் வர்த்தக சங்கமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விளங்கியது. சில ஆயுதம் தரித்த தமிழ் போராளிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக இன்று சனநாயக அரசியல் வழிமுறைக்குத் திரும்பியுள்ளனர். அதுபோல் 1994 பாராளுமன்றத் தேர்தலில் சிறி லங்கா முற்போக்கு முன்னணியின் (எஸ்.எல்.பி.எவ்) கீழ் போட்டியிட்ட சிங்களவர்களைக் கொண்ட போராட்டக் குழுவான ஜே.வி.பி யும் சனநாயக வழிக்குத் திரும்பியுள்ளது.

4. 1994 பாராளுமன்றத் தேர்தல்

1994 ஆவணி மாதம் 16 ஆம் திகதி இடம் பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 13 அரசியற் கட்சிகளும் 26 சுயேட்சைக் குழுக்களும் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தன.[11] இலங்கையில் காணப்பட்ட 17.5 மில்லியன் மக்கள் தொகையில் 22 தேர்தல் மாவட்டங்களில் 10,945,065 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் காணப்பட்டனர். தேர்தலின் போது இவர்களில் 76.24,சத வீதமானவர்கள் வாக்களித்தனர்.

---

10 தேர்தல் ஆணையாளரின் அலுவலகத்தின் படி 1994 ஆடி 3 இல் 31 பதிவு செய்யப்பட்ட அரசியற் கட்சிகள் காணப்பட்டன.

11 இத்தேர்தலில் போட்டியிடுவதற்கான பின்னணியை பிரிவு 1 இல் பார்க்கவும்.

பொதுசன ஐக்கிய முன்னணி 105 தொகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி 94 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. பொதுசன ஐக்கிய முன்னணி இலங்கை முஸ்லிம் காங்கிரசுடனும் (7ஆசனங்கள்), பெருந்தோட்டத் தமிழர்களின் பிரதிநிதியான ஒரு சுயேட்சை வேட்பாளரையும் சேர்த்துக் கொண்டு அரசாங்கத்தை அமைத்தது. பொதுசன ஐக்கிய முன்னணியின் வெற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் 17 ஆண்டு கால ஆட்சியின் முடிவைக் குறித்தது. பொதுசன ஐக்கிய முன்னணி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். வெற்றி பெற்ற பிற கட்சிகளாவன, தமிழர் விடுதலைக் கூட்டணி (5 ஆசனங்கள்), ஐக்கிய தேசியக் கட்சி சார்பான தமிழ் குழுக்களான ஈழமக்கள் சனநாயகக் கட்சி (9 ஆசனங்கள்), மூன்று தமிழ் குழுக்களைக் கொண்ட சனநாயக மக்கள் விடுதலை முன்னணி (3 ஆசனங்கள்), ஜே.வி.பி.எவ் சார்பான எஸ்.எல்.பி. கட்சி (1 ஆசனம்).[12]

எல்.ரி.ரி.ஈ. இனரின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாண மாவட்டம், வன்னி மாவட்டம் ஆகியவற்றில் நிகழ்ந்த தேர்தலின் காரணமாக ஓர் ஒழுங்கற்ற நிலை தோன்றியது. ஏறத்தாள 6 இலட்சம் இடம் பெயர்ந்தோரில் பெரும்பாலானோர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியவில்லை. இதனால் பல தேர்தல் மாவட்டங்களில் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரையில் பல பிரச்சினைகள் எழுந்தன.[13]

4.1 தேர்தல் கண்காணிப்பு

இலங்கையில் சனநாயகச் செயற்பாட்டை மீளவும் உறுதி செய்வதைப் பொறுத்தவரையில் 1994 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல் அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. அதற்கு முன்னைய இரு தசாப்த காலத்தில் பொதுமக்கள் தொடர்ச்சியாக அரசியல் ரீதியான வன்செயல்களுக்கு உள்ளாக நேரிட்டது. அத்துடன் அவர்கள் சனநாயக செயற்பாடும் மரபுகளும் தொடர்ச்சியாக மழுங்கடிக்கப்படுவதை உணர்ந்து தேர்தல் மோசடிகளைத் தவிர்க்க உறுதி பூண்டனர். தேர்தலைக் கண்காணிப்பதற்கு என்றுமில்லாதவாறு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. தேர்தல் வன்முறையினால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளைப்

---

12 Statistics provided by Commissioner of Elections in *Parliamentary General Election of Sri Lanka 16th August 1994 - Report of the International Observer Group* (hereinafter International Observer Report) Annex V, pp 52-53

13 கீழே பிரிவுகள் 5 மற்றும் 6 ஆகியவற்றைப் பார்க்கவும்.

பற்றி மக்களுக்கு உணர்த்தும் நோக்குடன் பிரசாரங்கள் செய்யப்பட்டன. இதில் அரசுசாரா நிறுவனங்கள் முக்கிய பங்கு கொண்டன. சமயங்களுக்கிடையிலான இணைப்புக்குழு மும்மொழிகளிலும் விளம்பரங்களைப் பரந்தளவில் வெளியிட்டு தேர்தல் வன்முறைக்கு எதிராகப் பிரசாரம் செய்தது. இப்பிரசாரம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பெருவெற்றி பெற்றது.

சுதந்திரமான நியாயமான தேர்தல்களுக்கான இயக்கம் (MFFE), சுதந்திரமான நியாயமான தேர்தலுக்கான மக்கள் முன்னணி (PAFFREL), என்னும் அமைப்புகள் அரசாங்கம் சாரா அமைப்புகளைக் கொண்டவையாகும். இவை தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் எழக்கூடிய வன்செயலைக் கண்காணிக்க ஒன்றிணைந்தன. அத்துடன் இவ்வமைப்புக்கள் ஒரு சர்வதேச அரசுசார்பற்ற தேர்தல் அவதானிப்புக் குழுவையும் வரவழைத்தன. இக் குழுவின் பணிகள் சர்வதேச மனித உரிமைச் சட்டக் குழுவினரால் ஒன்றிணைக்கப்பட்டன. இந்த அவதானிப்புக் குழுவில் 13 நாடுகளைச் சேர்ந்த 35 உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணிகளானது, இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்கள், நியமங்களுக்கு ஏற்பத் தேர்தல் எந்தளவுக்கு சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடந்தது என்பதைத் தீர்மானிப்பதற்கு உள்ளூர் அரசாங்க சார்பற்ற அமைப்புகளின் அவதானிகளுக்கு உதவுவதாகும்.[14]

பல்வேறு உயர் தொழில் வல்லுனர்களின் சங்கங்களின் தலைமைச் சங்கமான உயர் தொழில் வல்லுனர்களின் சங்கங்களின் அமைப்பானது (OPA) தேர்தலை அவதானிக்க முற்பட்டதுடன் பி.ஏ.எவ்.எவ்.ஆர்.ஈ.எல் அமைப்புடன் இணைந்து செயற்பட்டது. ஒ.பி.ஏ தேர்தல் சட்ட மீறல்களைக் கண்காணித்ததுடன் **"சனநாயகத்தைப் பேணுவதைப் பொறுத்தவரையில் சுதந்திரமான, நியாயமான தேர்தல் ஒரு உடனடியான தேவை என்பதை மக்களுக்கு உணர்த்தும்** பணியிலும் ஈடுபட்டது.[15]

தேர்தல் ஆணையாளர் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் ஒப்புதலுடன் ஒரு சர்வதேச அவதானிகள் குழுவினை வரவழைத்தார். அதில் 12

---

14 International Human Rights Law Group, *Report of the International NGO Observer Mission to the Sri Lanka Parliamentary Elections* (September, 1994) (hereinafter International NGO Report) Appendix B

15 Organisation of Professional Associations, *OPA Elections Watch Report, General Elections August 1994* (15 September 1994)

நாடுகளைச் சேர்ந்த 44 அவதானிகள் இருந்தனர். இரு அவதானிகள் சர்வதேச யூரிகளின் ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்கள். இவர்களது பணி இலங்கையின் சட்ட ஏற்பாடுகளின்படி தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெற்றதா என்பது பற்றி ஒரு விரிவான மதிப்பீட்டைச் செய்வதாகும்.[16]

சர்வதேச அரசாங்கச் சார்பற்ற அமைப்புக்களின் அவதானிகள் 15 மாவட்டங்களையும், "அதிகாரபூர்வ" சர்வதேச அவதானிகள் 22 மாவட்டங்களையும் அவதானித்தனர். இந்த அதிகாரபூர்வ அவதானிகள் குழுமட்டுமே பிரச்சினைக்குரிய யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல்களை அவதானித்தது.

4.2 தேர்தல் தொடர்பான வன்முறை

4.2.1 தேர்தலுக்கு முன்னைய வன்முறை

தேர்தல் தொடங்குகின்ற நிலைமையிலேயே வன்முறையும் தொடங்கியது. தேர்தலுடன் தொடர்புடைய முறையில் 20 பேர் கொலை செய்யப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களாவர். இந்த வன்முறைச் சம்பவங்களில் உள்ளூர் அதிகார சபையினர் தலையிட்டார்களெனத் தேர்தல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். இவ் அவதானிகளின் அறிக்கைகளின் படி ஆடி 11 ஆம் திகதி நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நாள் அன்றும், அதன் பின்னரும் வன்செயல்கள் உச்சக் கட்டத்தை அடைந்தன.[17] ஆவணி 16 ஆம் திகதி தேர்தல் நிகழ்ந்த போது தேர்தல் தொடர்பான 3000 வன்செயல்கள் பற்றிப் பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டன. அவதானிகள் பொலிசாரின் தகவல்களைக் கொண்டு தெரிவித்த புள்ளி விபரங்களின்படி 2092 பயமுறுத்தல் சம்பவங்களும், 725 சிறிய வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றன. அத்துடன் 39 பெரிய குற்றச் சம்பவங்களும், 1003 சாதாரண சம்பவங்களும், 47 பாரதூரமான வன்முறைச் சம்பவங்களும், 12 கொலை முறைப்பாடுகளும் தேர்தல் செயலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டன. கொழும்பு, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, களுத்துறை, திகாமடுல்ல, அநுராதபுரம் ஆகிய

---

16 International Observer Report, p 9

17 International NGO Report, pp 13-28; MFFE Report, p 4

மாவட்டங்களில் அதிக வன்முறைச் சம்பவங்களும் நடைபெற்றதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டன.[18]

வன்முறைச் சம்பவங்கள் பல்வேறு முறைகளில் இடம் பெற்றன. முக்கியமாகப் பயமுறுத்தல், ஆட்களை அடித்தல், சொத்துக்களை அழித்தல் என்பன இடம்பெற்றன.[19] அவதானிகளின் கூற்றுப்படி 12–20 வரையிலான இறப்புகள் நிகழ்ந்துள்ளன. இறந்தவர்களில் பெரும்பாலானோர் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களே. ஒரு முக்கிய சம்பவத்தில் குருநாகலையைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி மாகாண உறுப்பினர் ஆர்.எம்.ரி.பி.இரத்நாயக்கா தனது வீட்டருகே இருந்த பொதுசன ஐக்கிய முன்னணியின் சுவரொட்டியை அகற்ற மறுத்த ஒரு கிராமவாசியைச் சுட்டுக் கொன்றதாக முறைப்பாடு செய்யப்பட்டது. ஆவணி மாதம் 4 ஆம் திகதி நிக்கவரெட்டியாவுக்கு அருகிலுள்ள மீஹாலாவாவில் இச்சம்பவம் நிகழ்ந்ததுடன் அடுத்த நாள் அவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். பொதுசன ஐக்கிய முன்னணி அரசியல்வாதி சம்பந்தப்பட்ட ஒரேயொரு தேர்தல் தொடர்பான கொலைச் சம்பவம் பொலநறுவை மாவட்டப் பொதுசன முன்னணி வேட்பாளர் ரி.பி.மகாலேக்கம் சம்பந்தப்பட்டதாகும். இவர் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களை ஏற்றிச் சென்ற பேரூந்துக்கு கல்லெறிந்தமைக்காகக் கைது செய்யப்பட்டார். இவ் விபத்தில் இரு பிரயாணிகள் இறந்தனர்.[20]

இவ்வாறான பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் வேட்பாளர்கள் சம்பந்தப்பட்டது பற்றிக் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. தேர்தலுக்கு முன்னர் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களைப் பொறுத்தவரையில் பொலிசார் பக்கச்சார்பாக நடந்தது பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டது.

---

18 Police Election Secretariat Statistics up to 16 August 6 a.m. reproduced in Annex III of MFFE Report

19 International NGO Report, pp 22-28

20 *Ibid*, pp 17-22; MFFE Report, pp 4-12. பிரதான அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட சர்வதேச அவதானிகள் குழுவின் சிறுபான்மையினர் அறிக்கையைப் பார்க்க. கலவரங்களையும் தேர்தல் தொடர்பான ஏனைய பிரச்சினைகளின் தாக்கத்தையும் குறைத்து மதிப்பிட்டமைக்காக முன்னையதைக் குறை கூறுகின்றது.

இதுபோன்ற பல சம்பவங்கள் மாத்தளை மாவட்டத்திலிருந்து முறைப்பாடு செய்யப்பட்டன. ஆடி மாதம் 12 ஆம் திகதி, ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான அலிக் அலுவிகார என்பவர் தம்புள்ளவிலுள்ள பொதுசன ஐக்கிய முன்னணி காரியாலத்துக்கு இரு பொலிஸ் கார்களில் வந்து அங்குள்ள அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் அச்சுறுத்தினார். பொலிஸ் வாகனங்கள் காலிவெல பொலிஸ் நிலையத்திலிருந்து வந்ததுடன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சீருடையில் காணப்பட்டிருந்தனர். 1994 ஆவணி 5 ஆம் திகதி காலிவெலயைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபை உறுப்பினர் விக்கிரம சிங்க என்பவரும், வகாகொட்ட பொலிஸ் உயர் அதிகாரியும் பொதுசன ஐக்கிய முன்னணியின் கென் தன்கூமுவ காரியாலத்துக்குச் சென்று அங்குள்ள பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களை அங்கிருந்து செல்லுமாறு கேட்டனர். விக்கிரம சிங்காவும், அலிக் அலுவிகார என்பவரின் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் கட்சி அலுவலகத்துக்கு நெருப்பு வைத்தனர்.

காலிவெல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் புலன் விசாரணை செய்யப்படும் என்று பொலிசாரால் கூறப்பட்டது. ஆவணி 14 இல் மாத்தளையிலுள்ள காத்தமுனகலவில் உள்ளூர் பொதுசன ஐக்கிய முன்னணித் தலைவரான நிமால் ஜெயவர்த்தனா மற்றும் பொதுசன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் காமினி எக்க நாயக்காவையும் ஏனைய பல பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களையும் ஏற்றிச் சென்ற வான் ஒரு சிலரைக் கொண்ட குழுவினால் தாக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரின் மகனும் அவரது ஆதரவாளர்களுமே இக்குழுவைச் சேர்ந்தவர்கள் எனப் பின்னர் தெரிய வந்தது. கத்திகளும், இரும்புக் கம்பிகளும் இத்தாக்குதலில் பயன்படுத்தப்பட்டது. எக்கநாயக்க என்பவர் தலையிற் பலத்த காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஜெயவர்தனாவுக்கு இரு தொடைகளிலும் கத்திக் குத்துக் காயங்கள் ஏற்பட்டன. வாகனத்தின் ஆறு கண்ணாடிகளும் உடைக்கப்பட்டு ரயர்கள் சேதமாக்கப்பட்டன.[21]

இதேபோன்ற பிறிதொரு சம்பவம் ஆவணி 7 இல் நிகழ்ந்தது. ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் லலித் சில்வாவும் அவரது ஆதரவாளர்களும் காலியில் உள்ள கரவல்லபெட்ட என்னுமிடத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியின் கூட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த வீட்டிற்கு வெளியே கூடி நின்று கூட்டத்துக்கு அச்சுறுத்தல் விடுத்தனர். சூட்டுச் சத்தங்கள்

---

21 International NGO Report, pp 23-28

வெளியிலிருந்து கேட்டதுடன் ரவையின் ஒரு பகுதி வீட்டுக்குள் கண்டெடுக்கப்பட்டது. பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் பின்பு பதிலடி கொடுத்தனர்.

முறைப்பாடு செய்யப்பட்ட பல்வேறு சம்பவங்களில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களும் ஆதரவாளர்களுமே தொடர்பு பட்டிருந்தனர்.[22] ஏனைய அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டப்படவில்லை. எடுத்துக் காட்டாக ஆவணி 11 இல் மாத்தளையிலுள்ள முகுலுகஸ்கமுவ என்னுமிடத்தில் ஐக்கிய தேசியக் கட்சிப் பேரணியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த வாகனத்தைப் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் தாக்கினர். வாகனம் சேதப்படுத்தப்பட்டதுடன் ஒரு நபர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர் ஒருவரைப் பிடித்து காலிவெல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். நீதவான் முன்பு அவர் பாரப்படுத்தப்பட்டு பிணையில் விடப்பட்டார்.

மட்டக்களப்பில் ஆவணி 13 இல் ஏறாவூரில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டத்துக்கு ஆதரவளித்த மக்கள் கொல்லப்படுவார்கள், தலைமயிர் மழிக்கப்படும், சயனைட் ஏற்றப்படும் எனச், சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் பசீர் சேகு தாவூத் பகிரங்கமாக அச்சுறுத்தினார். அவதானிகளின் விளக்கத்தின் படி பலர் இவ் அச்சுறுத்தலை உண்மையென எடுத்துக் கொண்டதுடன் சில தேர்தல் அதிகாரிகள் தமது பதவிகளை ஏற்கவும் மறுத்துவிட்டனர்.[23]

4.2.2 தேர்தல் நாள்

ஆவணி 16 தேர்தல் நாள் அன்று அமைதியாக இருந்தாலும் பரந்தளவிலான வன்முறைகள் நிகழ்ந்தன. மாத்தளை, புத்தளம் மாவட்டங்களில் தேர்தல் நாளன்று ஒரு இறப்பும் அநேக வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றதுடன் ஏனைய பகுதிகளில் பரந்தளவிலான சம்பவங்கள் இடம்பெற்றன. பொதுவான கருத்தின்படி தேர்தல் நாளன்று பொலிசார் எவருக்கும் சாதகமில்லாமல் நடந்து கொண்டனர்.[24]

---

22 *Ibid*, p 28

23 International NGO Report, pp 23-24; MFFE Report, p 11

24 International NGO Report, pp 38-44; MFFE Report, pp 20-23

தேர்தல் நாளன்று வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்வது தொடர்பாகப் பலத்த கண்டனத்துக்கு உள்ளான ஒரு அத்துமீறல் சம்பவத்தைக் குறிப்பிட முடியும். ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஜோசப் மைக்கல் பெரேராவின் (கம்பகா மாவட்டம்) பாதுகாப்பு உத்தியோகத்தரான றெஜி என்பவர் தேர்தல் நாளன்று பின்னேரம் பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர் பீலிக்ஸ் பெரேராவின் மோட்டார் வாகனத்தின் மீது அசிட் வீசினார் என முறைப்பாடு செய்யப்பட்டது. வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்லப் பயன்படும் பஸ்சினுள் வெறுமையான வாக்குப் பெட்டியைத் தான் கண்டதாக ஜோசப் பெரேரா பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளரைக் குற்றம் சாட்டினார். மேலதிக வாக்குப் பெட்டிகள் உண்மையில் தேர்தல் அதிகாரிகளினால் தேர்தல் நாளன்று அலுவலகப் பொருட்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டது. பீலிக்ஸ் பெரேராவின் சகோதரர் கோன்ராட், அருகில் நின்றிருந்த நான்கு பொலிசார் முகத்தில் அசிட் எரிகாயத்துக்கு உள்ளாகினர்.[25]

தேர்தல் நாளன்று வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்களினால் வாக்காளர்கள் தடுக்கப்பட்டதாக அவதானிகள் சில சம்பவங்களை முறையிட்டிருந்தனர். இவற்றில் சில பொலிசாரினாலும் மேற் கொள்ளப்பட்டன. சில இடங்களில் தேர்தல் அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. வாக்காளர்களிடமிருந்து அவற்றைப் பறித்துத் தனிப்பட்ட நபர்கள் அவற்றை விநியோகித்தமை பதிவு செய்யப்பட்டுள்ளது. அநேக வாக்காளர் தமது தேர்தல் அட்டைகளைப் பெற்றிருக்காததினால் வாக்களிப்பிலிருந்து விலகிக் கொண்டனர்.[26]

தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகளைத் தடுக்கும் நோக்குடன் சனாதிபதி விஜயதுங்க வாக்களிப்பு முடிந்ததும் தீவடங்கிலும் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தார். பொதுசன ஐக்கிய முன்னணி தலைமைத்துவத்தைக் கொண்டிருந்த சந்திரிகா குமாரதுங்க தனது தேர்தல் பிரசாரத்தின் போது தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும் வன்முறைகளிலிருந்து விலகியிருக்குமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

---

25 International NGO Report, p 37
26 MFFE Report, p 19; International NGO Report, pp 34-35

4.3 அரசியல் நோக்கங்களுக்கான அரச வளங்களின் தவறான பிரயோகம்

4.3.1 ஆளணியினரும் ஏனைய வளங்களும்

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினால் தேர்தல் காலத்தில் அரச சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை பற்றி எல்லா அவதானிகள் குழுக்களும் ஒன்றிணைந்து தமது கண்டனங்களைத் தெரிவித்திருந்தன. சர்வதேச மனித உரிமைகள் சட்டக் குழு குறிப்பிட்டது போன்று, ஐக்கிய தேசியக் கட்சியினால் நிறுத்தப்பட்டிருந்த வேட்பாளர்களில் 91 பேருக்கு மேற்பட்டவர்கள் ஒருவகையான அமைச்சுப் பதவிகளைக் கொண்டிருந்ததுடன் தேர்தல் பிரசாரத்தின் போது அரச சலுகையைத் தொடர்ந்து அனுபவிப்போராகவும் இருந்தனர். தேர்தல் நோக்கங்களுக்காக, குறிப்பாக அரச ஆளணியினரும் வாகனங்களும் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை பற்றி அவதானிகள் விரிவான அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்தனர்.[27] எம்.எவ்.எவ்.ஈ. அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது. அரச வங்கிப் பணியாளர்களில் இருந்து பொலிஸ் வரை, மகாவலி அதிகாரசபை வாகனங்களிலிருந்து அரசாங்க பால் லொறிகள் வரை தேர்தல் ஈடுபாடானது அரச தொழிற்பாட்டுடன் நோக்கங் கருதி இணைந்திருந்தது.[28]

4.3.2 அரச கட்டுப்பாட்டுத் தொடர்பு சாதனம்

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பு சாதனங்கள், விசேடமாக மின்னியல் தொடர்புசாதனங்கள் தேர்தல் பிரசார நோக்கங்களுக்காகத் தவறாகப் பிரயோகிக்கப்பட்டமை வாக்காளர்களினாலும், அவதானிகளினாலும் பலத்த கண்டனத்துக்குள்ளாகியது.[29] தேர்தலில் போட்டியிடும் யாவருக்கும் தமது நிகழ்சி நிரலை மக்களுக்கு அளிப்பதற்கு சமமான நேரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகக் குறிப்பிடத்தக்க சார்புத் தன்மை காணப்பட்டது. அரசினால் நடத்தப்படும் மின்னியல் தொடர்புசாதனங்களின் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களில் இது தெளிவாகத் தெரிந்தது. புதிய நிகழ்ச்சித் திட்டங்களிலும், பொது நிகழ்ச்சித் திட்டங்களிலும் அரசாங்கத்தின் அபிவிருத்திக்

---

27 International NGO Report, pp 10-12; MFFE Report, pp 13-17; International Observer Report, p 34

28 MFFE Report, p 13

29 பார்க்க அத்தியாயம் 8, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் தொடர்பு சாதனமும்

கொள்கைகள் மற்றும் முன்னேற்றங்கள் பற்றி அளவுக்கு மீறிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. 1993 இல் இருந்து அனுமதிக்கப் பெற்ற தனியார் தொலைக் காட்சியும், வானொலியும் செய்திகளையோ அல்லது நடைமுறை நிகழ்ச்சித் திட்ட விவகாரங்களையோ குறிப்பிடவில்லையென்பதினால் அவை பிரசாரத்தைப் பாதிப்பதாக இருக்கவில்லை.[30]

ஒவ்வொரு அரசாங்கத்தின் கீழும் ஆட்சியிலுள்ள கட்சியின் ஊடகமாக அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தல் நடைமுறையில் காணப்பட்டிருந்தாலும் சனாதிபதி பிரேமதாசவின் கீழேயே அது ஒரு நுண்கலையாக விருத்தி செய்யப்பட்டது. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களை உறுதிப்படுத்துவதற்கு எல்லாப் போட்டியிடும் கட்சிகளுக்கும் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதில் சமமான அடைகை காணப்படுவதை உறுதி செய்வதற்கு கடுமையான சட்டப் பாதுகாப்பின் தேவையை இது சுட்டிக் காட்டியது.

4.4 தேர்தல் செயற்பாட்டில் தலையீடு

பரந்தளவிலான ஆள் மாறாட்டங்கள் இடம் பெற்றதாக முறையிடப்படவில்லை. இலங்கையின் தேர்தல் நடைமுறைகளின் கீழ் வாக்களிப்பதற்கு உத்தியோக பூர்வ வடிவிலான அடையாளம் காட்டப்படவேண்டும் என்பது கோரப்படவில்லை. இவ்விடயமானது முன்னைய சந்தர்ப்பங்களில் தேர்தல் முடிவுகளைக் குறிப்பிடத்தக்களவில் பாதித்தது. பெரும்பாலும் எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல் சாவடிகளில் அடையாளத்தை நிரூபிக்கும் சான்றுகளைக் காட்டுவதன் தேவையை அறிமுகம் செய்வதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தன. வாக்களிப்பு முறையைப் பொறுத்தவரையில் தேசிய அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்தவேண்டியதன் அவசியத்தை முன்னை நாள் தேர்தல் ஆணையாளரான சந்திரானந்த டி சில்வா திட்ட வட்டமாக வலியுறுத்திக் கூறியுள்ளார்.[31]

தேர்தலை அவதானிக்கச் சென்றவர்கள் ஆள் மாறாட்டம் பற்றிய பல சம்பவங்களைப் பற்றி முறைப்பாடு செய்தனர். நீண்ட காலமாகக்

---

30 MFFE Report, pp 17-18

31 *Report of the Commissioner of Elections on the Second Presidential Election of Sri Lanka held on 19.12.1988* (1992) pp 260-261

குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்திருந்த போதும் பல வாக்காளரின் பெயர்கள் பதிவேட்டில் இருக்கவில்லை என்பதுபற்றியும் அவர்கள் எடுத்துக் கூறினர். அவர்களுடைய கருத்தின் படி இவ்வாறான சம்பவங்கள் தேர்தல் முடிவினைப் பாதிக்கும் அளவுக்கு அதிகளவில் இடம் பெறவில்லை.[32] இதற்கு முன்னர் நிகழ்ந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது வாக்குச் சீட்டுகள், வாக்குகளை எண்ணுதல் என்பவற்றைப் பொறுத்தவரையில் அதிகளவிலான ஒழுங்கீனங்கள் இடம் பெறவில்லை.

5. எல்.ரி.ரி.ஈ. இன் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் தேர்தல்

சனாதிபதி விஜயதுங்கா அரசாங்கத்தினால், யாழ்ப்பாணத்திலும், வன்னி தேர்தல் மாவட்டங்களிலும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடாத்தப்படும் என வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒரு முரண்படு நிலையைக் கொண்டிருந்தது. இப்பிரதேசங்களில் எல்.ரி.ரி.ஈ முறையே 80 வீதம் மற்றும் 50 வீதமான பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டிருந்தது.

தேர்தலுக்கு எல்.ரி.ரி.ஈ. எதிர்ப்புத் தெரிவித்ததினால் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள "விடுவிக்கப்பட்ட" பகுதிகளில் உண்மையில் தேர்தலை நடத்த முடியுமாக இருந்தது. எல்.ரி.ரி.ஈ. தனது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அரசியல் கட்சிகளை இயங்க அனுமதிக்கவில்லை. பொதுசன ஐக்கிய முன்னணி உட்பட, பெரும்பாலான அரசியல் கட்சிகள் யாழ்ப்பாண மாவட்டத்தின் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்ல முடியாதிருந்ததுடன் அங்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பான ஆயுதக் குழுவும், ஈ.பி.டி.பி. இனரும் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தனர். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பிரசாரம் செய்வதிலிருந்து அம்மாவட்டத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. தவிர்ந்த ஏனைய எல்லாக் கட்சிகளும் இதனாலேயே விலகியிருந்தனர். பொதுசன ஐக்கிய முன்னணி இம்மாவட்டத்தில் போட்டியிடவில்லை. எனினும் அதன் நலன்களைக் கவனிப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடப்பட்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்களை ஈ.பி.டி.பி கவனித்தது.

1986 இல் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்தின் தேர்தல் இடாப்புக்கள் புதுப்பிக்கப்படவில்லை. தொடர்ந்து இடம் பெற்றுவரும் உள்நாட்டு

---

32 International NGO Report, pp 34-35

யுத்தத்தினால் அம்மாவட்டத்தின் குறிப்பிடத்தக்களவு குடியிருப்பாளர்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்து தீவின் பல்வேறு இடங்களிலும் வசித்து வருகின்றனர்.[33] இவ்வாறான சாதகமற்ற நிலைமைகள் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தலை நடத்தக் கூடாது என்று தேர்தல் ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. குடியியல் உரிமைகள் இயக்கம் இவ்விடயம் பற்றி உயர் நீதிமன்றத்துக்கு அரசாங்கம்[34] கொண்டு செல்ல வேண்டுமென்று கோரியது. இதற்கு அரசியல் யாப்பின் படி[35] அரசாங்கத்துக்கு இருக்கின்ற நியாயாதிக்கத்தைப் பயன் படுத்துமாறு இவ்வியக்கம் கோரியதை அரசாங்கம் கருத்திற் கொள்ளவில்லை.

இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி இவ்விடயத்தை நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றது. ஆயினும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இத்தகைய முறைப்பாட்டு விண்ணப்பம் காலத்தால் முந்தியது என்பதால் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல்களை நடாத்துவதைத் தடை செய்யும் முறையில் ஆணையிட முடியாது எனத் தீர்ப்புக் கூறியது. உயர் நீதிமன்றமும் இவ்விடயம் தொடர்பான அடிப்படை உரிமைகள் பற்றிய மனுவை கருத்திற் கொள்ள மறுத்தது. 'இவ் அடிப்படை உரிமைகள் தொடர்பான மனு சமத்துவ உரிமையை மீறுவதாக முறைப்பாடு செய்தது ஆயினும் உயர்நீதிமன்றம் இம்மனுவை ஏற்றுக் கொள்ளவில்லை. தேர்தல் ஆணையாளரின் தீர்மானம் அரசியல் யாப்பின் 126 ஆவது உறுப்புரையில் கூறப்பட்டுள்ளவாறு நிறைவேற்று செயற்பாட்டையோ அல்லது நிர்வாக நடவடிக்கையையோ உள்ளடக்கி இருக்கவில்லை என்பதன் அடிப்படையில் உயர்நீதிமன்றம் இவ்வாறான தீர்ப்பை வழங்கியது. இந்த உறுப்புரை உயர் நீதிமன்றத்துக்கு அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்க உரிமையை வழங்கியுள்ளதைக் குறிப்பிட்டுக் கூறவேண்டும். அத்துடன் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கு நியமனப் பத்திரங்களைச்

---

33 Gomez , M., "The Northern Polls" in *Law & Society Trust Fortnightly Review,* Volume V, Issue 28 (September, 1994) p 69; MFFE Report, pp 24-26; International Observer Report, pp 27-28; International NGO Report, p 44; Jaffna Not Ready for the Polls - GA ' in The Sunday Times, 24 July 1994

34 Civil Rights Movement, Document E 01/7/94

35 பொதுநலன் கருதிய சட்டம் அல்லது நிகழ்வு பற்றிய பிரச்சினையொன்றில் உயர்நீதி மன்றத்தின் கருத்தைக் கேட்கும் அவசியமொன்று எழுமிடத்து உயர்நீதிமன்றத்தின் ஆலோசனை வழங்கும் நியாயாதிக்கத்தை உதவிக்கழைக்கும் அதிகாரத்தை உறுப்புரை 129 சனாதிபதிக்கு வழங்குகின்றது.

சமர்ப்பித்த அரசியல் கட்சிகளுடன் இணைந்த முறையில் மனுதாரர் இல்லாமை ஒரு பிரதான குறைபாடாக எடுத்துக் கூறப்பட்டது.[36]

இதன் விளைவாக, பதிவு செய்யப்பட்ட 6 இலட்சம் யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர்களில் 13,000 பேரே (2.32 வீதமானவர்களே) தேர்தலில் வாக்களித்தனர். அரசாங்கத்தின் சார்பில் ஈ.பி.டி.பி கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த தீவுப்பகுதிகளில் மட்டுமே பெருமளவுக்கு வாக்களிப்பு இடம் பெற்றது. யாழ்ப்பாண மாவட்டத் தேர்தலை அவதானித்த சர்வதேசப் பார்வையாளர்கள் பல ஒழுங்கீனங்களைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளனர். அவர்கள் இருக்கும் போதே பல வாக்காளர்கள் பல முறைகள் வாக்களித்தது பற்றி அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். ஈ.பி.டி.பி இனர் மக்களைப் பயமுறுத்தும் வகையில் செயற்பட்டது பற்றியும் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளனர். ஒரு குறிப்பிட்ட சம்பவத்தில் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்ற ஒரு அவதானி விரலில் மைபூசப்பட்ட ஒருவர் (அதாவது அவர் ஏற்கனவே வாக்களித்தவர்) மீண்டும் வாக்களிக்க வந்ததைச் சுட்டிக் காட்டியவிடத்து அங்கு பணிபுரிந்த தலைமை அலுவலர் "இவர் இதற்கு முன்னர் வாக்களிக்கவில்லை" என பதிலளித்தார்.[37]

அன்று காணப்பட்ட நிலைமையின் காரணமாக வன்னி மாவட்டத்தில் 42 வீதமான வாக்களிப்பு நிலையங்கள் மட்டுமே செயற்பட முடிந்தது. பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் ஏறத்தாழ 25 வீதமானவர்களே வாக்களித்தனர். எம்.எவ்.எவ்.ஈ.குழுவினர் கருத்தின்படி வன்னி மாவட்டத்தில் இடம் பெற்ற தேர்தல் சுதந்திரமாகவும் திறமையாகவும் நடாத்தப்பட்டாலும் "நியாயமானதென்று கூறுவதற்கில்லை"[38]

இலங்கையின் தேர்தல் முறைமையின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 2.32 வீதமான வாக்காளர்கள் பாராளுமன்றத்தின் 10 அங்கத்தவர்களைப் பெற்றனர். பாராளுமன்றத்தில் மொத்த ஆசனங்களின் எண்ணிக்கையில் அது ஏறக்குறைய 5 வீதமாகும். (ஈ.பி.டி.பி. 9, எஸ்.எல்.எம்.சி. 1) வன்னி மாவட்டத்தில் 25 வீதமான வாக்காளர்கள் 6 அங்கத்தவர்களைப்

---

36 Suprem Court Application No. 201/94. Order delivered on 25 July 1994

37 International Observer Report, p 28

38 MFFE Report, p 26

பெற்றனர்.[39] திருகோணமலை, திகாமடுல்ல, மட்டக்களப்பு ஆகிய பிரச்சினைக்குரிய மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்குகளில் முறையே 68.78%, 81.25%, 72.40% அளிக்கப்பட்டிருந்தது. இப்பகுதிகளில் தேர்தலைக் கண்காணித்த சர்வதேச அவதானிப்புக் குழுவினர் இப்பகுதியில் நடத்தப்பட்ட தேர்தல் பற்றி திருப்தி தெரிவித்தனர்.[40]

தேர்தலுக்கு அடுத்த நாள் யாழ்ப்பாண, வன்னி மாவட்டங்களின் வாக்களிப்புப் பற்றிய அபிப்பிராயங்களை அறிவதற்கு எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையாளரின் அழைப்பின் பேரில் இடம் பெற்ற கூட்டத்தின் பின் இரு மாவட்டங்களின் முடிவுகள் வெளிவிடப்பட்டன. அவ்வாறு செய்யாது விட்டால் இலங்கையின் தேர்தல் சட்டத்தின் கீழ் தேர்தல் பூர்த்தியானதாகப் பிரகடனப் படுத்த முடியாது. ஒவ்வொரு கட்சியும் பெற்றுக் கொண்ட, முழுத்தீவையும் உள்ளடக்கிய வாக்குகளின் சத வீதத்தைக் கணிப்பிடாது 29 தேசிய ஆசனங்கள் நிரப்பப்பட முடியாது. உண்மையில் பொதுசன ஐக்கிய முன்னணி ஒரு அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லையாதலால் கூட்டரசாங்கத்துக்கு வழிவகுத்தது. யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களின் முடிவுகள் தேர்தலில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்டிருந்தன.

6. தேர்தலும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரும்

உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட 600,000 இடம் பெயர்ந்தோரில் 19,000 பேர் மட்டுமே தேர்தல் ஆணையாளரினால் பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டனர். சட்டத்தின்படி இடம் பெயர்ந்தோர் தமது உண்மையான வதிவிடத்தைக் கொண்ட மாவட்டத்தில் நிற்கும் அபேட்சகருக்கு வாக்களிக்க உரிமையுடையவர். அகதியாக இருக்கும் தமது இடங்களில் இருந்து அவர்கள் வாக்களிக்க முடியும். இடம் பெயர்ந்தோரினைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக, பல தகவல்களைக் கோருகின்ற ஒரு விசேட படிவம் விநியோகிக்கப்பட்டதுடன் ஆணையாளரினால் விடுவிக்கப்பட்ட இறுதித் திகதிக்கு முன் அவை அனுப்பப்பட வேண்டும். படிவங்களைப்

---

39 தரவுகள் எம்.எவ்.எவ்.ஈ.அறிக்கையில் தரப்பட்டுள்ளது. இணைப்பு 1. இத்தரவுகளை இரத்தினபுரி மாவட்டத்துடன் ஒப்பிடுக. அங்கு 483,896 வாக்காளர்கள் (பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 87.25%) 10 பிரதிநிதிகளைப் பெற்றனர். களுத்துறை மாவட்டத்தில் 530,757 வாக்காளர்கள் (82.14%) 10 அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

40 International Observer Report, pp 29-30

பெற்ற காலத்துக்கும், முடிவுத் திகதிக்குமிடையில் சொற்ப காலமே காணப்பட்டதுடன் பாரிய தடைகளையும் ஏற்படுத்தியது. பெரும்பாலான படிவங்கள் சிங்களத்தில் இருந்தன. ஆனால் பெரும்பாலான இடம் பெயர்ந்தோர் முஸ்லிம்கள் உட்பட பெரும்பாலும் தமிழ் பேசினர். இடம் பெயர்ந்த 25,000 பேரில் 19,000 பேர் மட்டுமே வாக்களிக்கப் பதிவு செய்யப்பட்டனர். ஏனைய விண்ணப்பதாரிகளைப் பதிவு செய்ய மறுத்தமை பற்றியதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

சர்வதேச என்.ஜி.ஓ அறிக்கையின் படி வன்னி மாவட்டத்தில் வவுனியா ஆசிக்குளம் முகாமில் இருந்து விண்ணப்பித்த 2500 பேரில் ஆணையாளரினால் 75 பேர் மட்டுமே பதிவுக்குத் தகுதியுடையவராயினர். இவர்களில் சிலர் வாக்களிக்கச் சென்ற போது அவர்களது பெயர்கள் ஆணையாளரினால் அனுப்பப்பட்ட தேர்தல் பட்டியலில் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டது.[41]

உதாரணமாக, கொழும்பிலுள்ள ஆணயாளர் அலுவலகத்திலிருந்து எஸ்.எல்.எம்.சி. 6100 நபர்களின் பெயர்களைப் பெற்றுக் கொண்டது. புத்தளத்திலுள்ள முகாம்களிலுள்ள இவர்கள் தமது சொந்த இடமான யாழ்ப்பாணத்தின் அபேட்சகர்களுக்கு வாக்களிக்க உத்தரவாதமளிக்கும் கடிதங்களைப் பெற்றிருந்தனர். ஆனால் உள்ளூர் தேர்தல் அதிகாரிகள் பெற்றுக் கொண்ட, இடம் பெயர்ந்த நபர்களில் வாக்களிக்கத் தகுதியுடையவர் பட்டியலில் 3000 பெயர்கள் மட்டுமே காணப்பட்டது.[42]

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2.3 வீதமான வாக்காளர்களும் வன்னி மாவட்டத்தில் 25 வீதமான வாக்காளர்களும் வாக்களித்தமையை அவதானிக்கும் போது அம் மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்தோர் பாரிய அளவில் வாக்களித்திருந்தால் அதிகமான பிரதிநிதிகளைப் பெற்றிருப்பர்.

7. மக்கள் தீர்ப்பு

யாழ்ப்பாண, வன்னி மாவட்டங்களில் காணப்பட்ட முரண்பாடான நிலைமையைப்பற்றி அவதானிகளும், பொது மக்களும் கூடிய கவலை

---

41 International NGO Report, pp 30-31

42 *Ibid*, p 45

தெரிவித்தவிடத்து தற்போதைய பாராளுமன்றத்தில் உள்ள பிரதிநிதித்துவம் பெருமளவுக்குத் தேர்தல் தொகுதிகளினுடைய சுதந்திரமான வாக்களிப்பை அடிப்படையாகக் கொண்டது என்ற பொதுக் கருத்தும் நிலவியது. தேர்தல் ஆணையாளரினால் அழைக்கப்பட்ட சர்வதேச அவதானிகள் குழுவின் 8 உறுப்பினர்கள் வெளியிட்ட சிறுபான்மை அறிக்கையில் பிரதான வன்முறை, தேர்தல் குறைபாடுகள் பற்றிப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று அவ் எட்டு உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்தனர். எவ்வாறாயினும் அவ் 8 உறுப்பினர்களின் கருத்து பின்வரும் வகையில் அமைந்தது: **"இவ்வாறான கருத்துக்களை நாம் கூறியுள்ள போதிலும் தேர்தலின் காரணமாகப் பெரும்பான்மையான வாக்காளர்களின் விருப்பத்தின்படி அதிகார மாற்றம் அமைதியான முறையில் இடம் பெற்றது."** அதிகாரமாற்றம் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அமைதியான முறையில் நிகழ்ந்தமை எதிர்காலத்தில் இலங்கையின் சனநாயகத்துக்கு ஒரு முக்கிய இடம் உள்ளது என்பதைத் தெரிவித்துள்ளது.

8. 1994 சனாதிபதித் தேர்தல்

அரசியல் சட்டத்தின் படி 1994 கார்த்திகை மாதத்தில் சனாதிபதித் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. கார்த்திகை மாதம் 9 ஆம் திகதி தேர்தலின் போது பிரதம மந்திரியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க 2 மில்லியன் பெரும்பான்மை வாக்குகளினால் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார். அவரின் தேர்தல் மேடைப் பேச்சுக்களில் வன்முறையையும் ஊழலையும் அடியோடு ஒழித்தல், இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வைக் காண்பதற்கு எல்.ரி.ரி.ஈ. உடன் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தல் போன்ற வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

ஐப்பசி 24 இல் ஐக்கிய தேசியக் கட்சி சனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்காவும் அவருடன் சேர்ந்து யு.என்.பி பொதுச் செயலாளர்களும் பல மந்திரிகளும் உட்பட 50 பேருக்கு மேற்பட்டவர்கள் கொழும்பில் நடந்த யு.என்.பி கூட்டத்தில் தற்கொலைப் படையாளியின் குண்டுத் தாக்குதலினால் கொல்லப்பட்டனர். எல்.ரி.ரி.ஈ. யினர் தான் இதற்குக் காரணமெனப் பரந்தளவில் நம்பப்பட்டது. பொதுசன ஐக்கிய முன்னணியின் சமாதான முயற்சியிலும் வன்முறைக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நோக்கிலும் இப் படுகொலை ஒரு பின்னடைவை ஏற்படுத்தியது. அதன்பின் பிரசாரம் அதிக முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை.

உள்ளூர் அவதானிகளைக் கொண்ட தேர்தல் கண்காணிப்பு PAFFREL மற்றும் MFFE இனால் நடாத்தப்பட்டதுடன் சர்வதேச சமாதானப் படை போன்ற வெளிநாட்டு மனித உரிமைகள் குழுவினரின் உதவியும் பெறப்பட்டது. மீண்டும் தேர்தல் ஆணையாளர் சர்வதேச அவதானிகள் குழுவொன்றுக்கு அழைப்பு விடுத்தார். அக்குழுவின் 20 அவதானிகளில் 18 பேர் தென் ஆசிய நாடுகளைச் சேர்ந்தோர். 2 பேர் சர்வதேச யூரர்கள் ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்கள்.

தேர்தலுக்கு முன்னும், பின்னும் பல வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன என முறையிடப்பட்டது. ஆனால் எதிர்பார்த்திராத பெரும்பான்மையைக் கொண்ட வெற்றியினைப் பாதிக்கும் எனக் கருதப்படவில்லை. எடுத்துக் காட்டாக, கண்டி மாவட்டத்தில் பாததும்பற பிரிவில் 7 வாக்குப் பெட்டிகள் ஆயுதக் குழுவினால் பலவந்தமாகக் கைப்பற்றப்பட்டதுடன் சீட்டுக்களையும் கைப்பற்றி அவற்றைப் புள்ளடியிட்டு பெட்டியினுள் போட்டார்கள் என சர்வதேச அவதானிகள் குழு முறையிட்டது. தேர்தல் தொடர்பான வன்முறைகள் பற்றிய பல சம்பவங்கள் மாத்தளை மாவட்டத்தில் இடம் பெற்றிருந்தன. லினாடொர பிரிவில் இரு நபர்கள் கத்தி வெட்டுக்களினால் கடுமையான காயத்துக்குட்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். காவத்தயமுன தேர்தல் பிரிவில் மாத்தளை மேயருக்குச் சொந்தமான ஜீப் வண்டி அதிலுள்ளவர்களுடன் கடத்தப்பட்டது.[43]

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலைமைகள் மீது அவதானிகள் தமது (மிகக் குறைந்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் (2.97%) தமது வாக்குகளைச் செலுத்தும் நிலைமையில் இருந்தமை பற்றிய) அவதானிப்பை வெளியிட்டனர். வடக்கில் இராணுவத்தினருடன் ஒத்துழைக்கும் ஈ.பி.டி.பி. யினருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான சாதக நிலைமைகள் என்பன இவ் அவதானிகள் குழுவின் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தது.[44]

ஆயிரக்கணக்கான இடம் பெயர்ந்தவர்களின் வாக்குரிமை பறிப்பு தொடர்ந்து ஒரு பிரச்சினையாக இருந்தது.[45] தேர்தல் இடாப்பில்

---

43 *சனாதிபதித் தேர்தல் இலங்கை - 1994: சர்வதேச தேர்தல் அவதானிகளின் அறிக்கை (கார்த்திகை* 1994) (hereinafter International Observers Report-2) p 9-10

44 *Ibid*, p 11

45 *Ibid*, p 10

இடம்பெயர்ந்தவர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கும்படியும் அது தொடர்பான செய்முறைகளில் உள்ள நடைமுறைகளைத் தளர்த்தும்படியும் பாராளுமன்ற தேர்தல் அவதானிகள் குழு மிகக் கடுமையான பரிந்துரைகளை அரசாங்கத்துக்கு முன் வைத்தது. அவ்வாறு செய்யின் அவர்கள் நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முடியும். எனவும் வலியுறுத்தியது.

சனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது பொதுசன ஐக்கிய முன்னணிக்குச் சார்பாக எல்லா அரச கட்டுப்பாட்டிலுள்ள பொதுசன ஊடகங்களும் தவறாகப் பிரயோகிக்கப்பட்டமை பற்றிய குற்றச்சாட்டுக்களும் இருந்தன.[46]

முன்னைய தேர்தல் காலங்களில் பாதிக்கப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களும், அரசியல் வாதிகளுமே தேர்தல் வன்முறைகளின் பெரும்பாலான சம்பவங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர்.[47] ஊரடங்கு பிரகடனம் செய்யப்பட்டிருந்தாலும் தேர்தலுக்குப் பிந்திய வன்முறைச் சம்பவங்கள் சில இடம் பெற்றதாக முறையிடப்பட்டது. யு.என்.பி ஆதரவாளர்களின் 12 கடைகள் கண்டி மாவட்டத்தின் பன்வில்ல என்னுமிடத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களினால் அழிக்கப்பட்டன.[48] பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முகப்புரையில் திட்டவட்டமாகப் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு சற்று மனத்திருப்தியை வழங்குவதாக இருந்தது.

---

[46] See Article 19, *Words into Action: Censorship and media Reform in Sri Lanka*, Censorship News Issue 39, (London, *March* 1995) p 7; see also chapter VIII, Freedom of Expression and the Media.

[47] PAFFREL, MFFE ஆகிய அமைப்புக்கள் சனாதிபதி தேர்தல் பற்றி வெளியிட்ட பூர்வாங்க அறிக்கையில் கூறப்பட்டதாவது: "பொதுசன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும் ஆவணி மாதத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினரின் வன்முறையையிட்டு சரியான முறையில் கண்டனங்களை விடுத்திருந்தனர். ஆனால் இப்போது அவர்களே பயமுறுத்தல் செயல்களில் ஈடுபட்டிருந்தனர். இரு சந்தர்ப்பங்களில் வாக்குப் பெட்டிகளில் வாக்குச் சீட்டுகளால் நிரப்பும் தவறான நடத்தையிலும், பொலிசார் தமது நடவடிக்கை முறைகளையும் அரசியல் எசமானர்களையும் மாற்றிக் கொண்டனர்" (As quoted in *INFORM Situation Report - November 1994, p 6*)

[48] INFORM *Situation Report - November 1994, p 6*

"அன்புள்ள வாக்காளர்களே, பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றி பெறுமிடத்து எமது நாட்டின் எப்பிரசையின் உயிரும் சொத்தும் எந்தப் பாதிப்புக்கும் உட்படமாட்டாது என்பதைமிட்டு உறுதி கூறுகின்றோம். எமது நோக்கில் இந்த உரிமைகள் யாவும் புனிதமானவை. எச் சூழ்நிலையிலும் மீறப்பட முடியாதவை. இவற்றைப் பாதுகாப்பது அரசின் தலையாய கடமையாகும். ஒவ்வொரு பிரசையின் உயிரையும் சொத்தையும் பாதுகாப்பதும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவது எமது பொறுப்பாகும்"

பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவர்கள், குறிப்பாக சனாதிபதி குமாரதுங்க தேர்தல் பிரசாரத்தின் போது வன்முறையைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று தமது ஆதரவாளர்களுக்குத் தீவிரமான வேண்டுகோளை விடுத்ததையும் இவ்விடத்துச் சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமானதாகும்.

9. மாற்றத்துக்கான பொதுசன முன்னணியின் வேலைத்திட்டம்

பொதுசன முன்னணி பதவி ஏற்கும் போது சிறந்த ஆட்சியைத் தருவதாக வாக்குறுதியளித்தது. சனநாயகத்துக்கு எதிரான செயல் முறைகளை ஒழித்துக் கட்டுவதாகவும் சனநாயகத்தைச் செழுமைப்படுத்தும் சீர்திருத்த வேலைத் திட்டமொன்றைத் தொடங்கவிருப்பதாகவும் உறுதியளித்தது. மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கும் நோக்குடனேயே பொதுசன முன்னணிக்கு ஆதரவளித்தோர் உட்படப் பலரும் பொதுசன முன்னணியின் கொள்கைகளையும் செயற்பாடுகளையும், எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு பரிசீலிக்கப்படல் வேண்டும் எனக் கருதுகின்றனர்.

பொதுசன முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நிறைவேற்று சனாதிபதி முறையை அகற்றி, அதற்குப் பதிலாக வெஸ்மினிஸ்டர் முறையிலான பாராளுமன்ற சனநாயக அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டியதன் தேவையை வலியுறுத்தியிருந்தது. அத்துடன் சனநாயக பிரதிநிதித்துவ செயற்பாட்டின் உயிர்நாடியாகக் காலத்துக்குக் காலம் இடம் பெற வேண்டிய தேர்தல்களை நடத்தவும், பாராளுமன்றத்தின் காலத்தை நீடிக்கப் பொதுசன வாக்கெடுப்பினை நடத்தும்

விரும்பத்தகாத செயலை இல்லாதொழிப்பதாகவும் விஞ்ஞாபனம் உறுதி கூறியிருந்தது. அதில் மேலும் கூறப்பட்டதாவது:

> **பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பிரகடனம் செய்யப்படும் அவசரகால விதிகளைப் பயன்படுத்தித் தேர்தல்களை நடாத்துவது பற்றிய சட்டங்களை மாற்ற அரசாங்கம் அதிகாரம் பெறும் முறை அகற்றப்படும். தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை ஆக்குவது, மாற்றுவது என்பன பாராளுமன்றத்திடம் மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களாகும். தேர்தல்களைச் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடாத்த தேர்தல் ஆணையாளர்களுக்குள்ள அதிகாரம், குறிப்பாக பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை விடுக்க அவருக்குள்ள அதிகாரங்கள் என்பன வலுப்படுத்தப்படல் வேண்டும்.**[49]

உள்ளூர் பகுதிகளில் உள்ளோரின் அரசியல் பங்கெடுப்பை அதிகரிக்கும் நோக்குடன் அதிகாரப் பகிர்வு அதிகளவில் இருக்க வேண்டிய தேவையை பொதுசன முன்னணி அரசாங்கம் எடுத்துக் கூறியுள்ள அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் வலியுறுத்தியுள்ளன. வட கிழக்கில் வாழும் தமிழர்களின் அதிக அளவிலான அரசியல் சுயாட்சிக் கோரிக்கைக்கு அமையவே இவ்வாலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. நீதி, அரசியல் விவகார, வெளிநாட்டு வர்த்தக அமைச்சரின் கருத்தின்படி அதிகாரப் பரவலுக்கான ஏற்பாட்டுடன் இணைந்த முறையில் உத்தேச அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் பல்வேறு அம்சங்களையும் கொண்ட அடிப்படை உரிமைகள் பற்றிய ஒரு வலுவான அத்தியாயத்தையும் கொண்டிருக்கும்.[50] பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே இலங்கையின் இனப்பிரச்சினைக்குச் சமாதானமான அரசியல் தீர்வைக் காணும் வகையில் எல்.ரி.ரி.ஈ இனருடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவோம் என்று வாக்குறுதியளித்திருந்தது. சனாதிபதி குமாரதுங்க பெற்ற மிகக் கூடிய பெரும்பான்மை வாக்குகள் இவ்வாறான ஓர் அரசியல் தீர்வை சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதற்கு வாக்காளர்கள் வழங்கிய ஒரு

---

49 பொதுசன முன்னணி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் (அரசாங்கத் தகவல் திணைக்களம், 1994) p 11 ("அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின்" கீழ் விடயம் 6)

50 சண்டே ரைம்ஸ், 12 மாசி 1995, இல் வெளியிடப்பட்ட நீதி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் என்வருடனான நேர்காணல், p 10

முக்கியமான அதிகாரம் என்று கருதப்பட்டது. இனப்பிரச்சினை மக்களின் அரசியல் உரிமைகளைப் பாரதூரமாகப் பாதித்த ஒரு நீண்டகாலப் பிரச்சினை என்ற முறையில் மக்கள் வழங்கிய இவ்வதிகாரம் அமைந்தது.

அரசாங்கம் நேரடித் தெரிவு முறையையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தையும் இணைப்பதன் மூலம் ஜேர்மன் நாட்டு தேர்தல் முறையினைப் போன்று வாக்காளர்களுக்கும் அவர்களுடைய உள்ளூர் பிரதிநிதிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் முறையைச் சீர்திருத்தலாம் எனக் கூறியது. தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை முழுத் தேர்தல் தொகுதியின் விருப்பத்தை தெரிவிப்பது உண்மையே. ஆயினும் வாக்காளர்கள் தமது சொந்த தொகுதியிலிருந்து நேரடியாக ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்கும் உரிமையை மறுக்கின்றது என விடுக்கப்பட்ட கண்டனத்தைக் கருத்திற் கொண்டதாக அரசாங்கத்தின் இவ் உத்தேச ஆலோசனை அமைந்தது.

10. முடிவுரை

சனநாயகத்தை நிலைநாட்ட தேர்தல் முறைச் சீர்திருத்தம் முக்கியமானது என்பது உண்மையே. ஆயினும் இது ஒரு முதலாவது நடவடிக்கையே என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள் மட்டும் அரசாங்கத்தின் சனநாயகத் தன்மையை வரையறை செய்யமுடியாது. தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலத்தில் தீர்மானம் மேற் கொள்ளும் செயற்பாட்டில் மக்கள் சனநாயக முறையில் பங்கு கொள்வதை உறுதி செய்ய இதனோடு இணைந்த உத்தர வாதங்களும் தேவை. எடுத்துக் காட்டாக சனநாயக ரீதியான தொடர்பு சாதனக் கொள்கை, ஒன்றுகூடும் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், என்பவற்றைக் கௌரவித்தல், பாரபட்சமற்ற நிலைமையை உறுதி செய்தல், வரையறைகளுக்கு உட்பட்ட முறையில் அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தல், சட்டத்தினின்றும் தப்பித்துக் கொள்ளும் நிலைமையை அகற்றுதல் என்பன யாவும் சமமான முறையில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

அவ்வாறே சட்டங்களை உருவாக்குவது மட்டுமன்றி ஆட்சிமுறையைப் பொறுத்தவரையில் சனநாயக மரபுகளையும் அல்லது நடைமுறைகளையும் உருவாக்குவதும் முக்கியமானது. கடந்த காலங்களில் மோசமான சட்டமீறல்கள் இடம் பெற்ற போது எழுத்து மூலமான நியாயமான

உத்தரவாதங்கள் காணப்பட்டதைக் குறிப்பிடவேண்டும். இன்று பொதுசன ஐக்கிய முன்னணியை எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினை அவர்கள் கூறியவற்றை நடைமுறைப்படுத்துவதாகும். இலங்கை மக்களைப் பொறுத்த வரையிலான சவால் அவர்கள் தாம் கடும் முயற்சியால் வென்றெடுத்த அரசியல் உரிமையை விழிப்புடன் பாதுகாப்பதும் உண்மையான சனநாயக, அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவதுமாகும்.

3

அவசரகால ஆட்சி

1994 ஆம் ஆண்டில் பெருமளவுக்கு அவசரகால ஆட்சி நிலவியதுடன், பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்குச் சற்றுமுன்பு சிறிது இடைவெளியும் நிலவியது. பல்வேறு காலப்பகுதிகளில், அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த புவியியற் பிரதேசத்திலும், அதற்குரிய ஒழுங்கு விதிகளின் உள்ளடக்கத்திலும் முக்கியமான மாற்றங்கள் காணப்பட்டன. இந்த ஆண்டிலே நிலவிய அவசரகால ஆட்சி சிக்கல் வாய்ந்ததாக இருந்ததுடன், அங்கு சட்டத்தரணிகளும் சாதாரண மனிதர்களும் முக்கியத்துவத்தை இழந்தனர். இந்த அத்தியாயத்தின் பின்னிணைப்பு *1* இலுள்ள அடிப்படை ஒழுங்கு இத்தகைய தலைவிதியைத் தவிர்த்துக் கொள்ள வாசகருக்கு உதவும் எனலாம்.

இலங்கையில் அவசரகால ஆட்சியானது பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இடம்பெறுகின்றதுடன் இச்சட்டம் நடைமுறையில் எவ்வாறு செயற்படுகின்றது என்பது பற்றி **இலங்கை: மனித உரிமைகள் நிலை *1993*[1]** என்பதில் அவசரகால ஒழுங்குவிதிகள் என்னும் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

1994 தையில் தூண்டிவிடுதல் துண்டுப் பிரசுர விநியோகம் தொடர்பான புதிய ஒழுங்கு விதிகள் ஏனைய விடயங்களுக்கு மத்தியில், அதற்கு முன்னைய மாதத்திலேயே அறிமுகம் செய்யப்பட்ட போது அவை கடுங் கண்டனத்துக்கு உட்பட்டமையால் மாற்றியமைக்கப்பட்டன. தூண்டி விடுதலுக்கான ஒழுங்கு விதிகள்[2] மீண்டும் திருத்தி எழுதப்பட்டதுடன்

---

1 (Law & Society Trust, Colombo, 1994)

2 Reg. 25A of the Emergency (Miscellaneous Provisions and Powers) Regulations No. 1 of 1993

சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகளும் முழுமையாகக் கைவிடப்பட்டன.[3] இவற்றுக்குப் புறம்பாக அவசரகால ஆட்சி ஆடி மாதம் 15 ஆம் திகதி வரை தொடர்ந்து நிலவியபோதும் ஆனி மாதம் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கலைத்த பின் ஒழிக்கப்பட்டது. அவசரகால நிலைமைகளைச் சட்டரீதியாகப் புதுப்பிப்பது தொடர்பாகச் சனாதிபதி மீண்டும் பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டியதாயிற்று. ஆயினும் அவர் அவ்வாறு செய்யவில்லை. ஆகவே 5 ஆண்டுகளின் பின்னர் முதன்முதலாக இலங்கை முழுவதும் அவசரகால ஆட்சியிலிருந்து விடுபட்டுக் காணப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நிறைவெய்திய பின்னர், சனாதிபதி விஜேதுங்க ஆவணி மாதம் 16 ஆம் திகதி மாலை ஆறுமணி தொடக்கம் அவசரகால ஆட்சியை மீண்டும் அறிமுகப்படுத்தினார். பிரகடனம் செய்யப்பட்ட இவ் அவசரகால ஒழுங்கு விதிகள் (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) இம்முறை சில மாற்றங்களைப் பெற்றிருந்தது. இலங்கையிலும் வெளிநாட்டிலும் மனித உரிமைகளைப் பற்றிப் பேசுவோரினால் முன்வைக்கப்பட்ட தொடர்ச்சியான விமர்சனங்களை இவை எதிர்நோக்கின. பாதுகாப்புச் செயலாளரின் பணிப்பின் பேரில் ஒருவரைத் தடுப்புக் காவலில் வைக்கும் காலம் ஆகக் கூடியது ஒரு வருடமாக மட்டுப்படுத்தப்பட்டது. கால வரையறையற்ற நீடிப்பு நீதிபதியின் கட்டளையின் மூலமே சாத்தியமானதாக இருந்தது. கைது செய்யும் அலுவலர் கைது செய்யப்பட்டவரின் உறவினருக்கு ரசீது வழங்க முடியாத நிலை தொடர்பாகவும் இன்னொரு மாற்றம் ஏற்பட்டது. இச்சூழ்நிலையில் பொலிஸ் நிலையத் தகவல் புத்தகத்தில் இவ்வாறான பதிவினை அதற்கான காரணங்கள் எவை என்பதை விளக்கியும் அதனை ஒரு குற்றமாக ஏன் கொள்ளக்கூடாது எனவும் குறிப்பிட வேண்டும்.

அதே வேளையில் சனாதிபதி விஜேதுங்க ஆவணி மாதம் 16 ஆம் திகதி பல்வேறு விடயங்கள் தொடர்பான 24 அவசரகால ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்தியதுடன் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக அவை கொண்டிருக்கும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டினார். அவற்றுள் பல ஆடி மாதத்தில் அவசரகால ஆட்சி காலாவதியாவதற்கு முன்னர் இருந்த ஏற்பாடுகளை மீண்டும் அறிமுகம் செய்வதாக இருந்தன. இவை நிதிக் கம்பனிகள், வங்கியியல், அரசசாரா

---

[3] Reg. 25B

நிறுவனங்களைக் கண்காணிப்பனவாகவும் பல்கலைக்கழகச் சட்டங்களுக்கான பின்னிணைப்பாகவும் இருந்தன. அவசரகால ஒழுங்கு விதிகள் இதில் இடம்பெறாமை சிறப்பம்சமாக இருந்தது. வடக்குக், கிழக்கு மாகாணங்களில் நியமனப்பத்திரத்தாக்கல் அழைப்புக்கான அறிவித்தலை வலுவிழக்கச் செய்தல், களனி இணைந்த பல்கலைக்கழகம், ஆவணி மாதம் 16, 17 ஆம் திகதிகளைத் தனியார் துறைப் பணியாளர்களுக்கான விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தல் போன்ற பல விடயங்கள் தொடர்பாகப் புதிய விதிகள் பிரகடனஞ் செய்யப்பட்டன. பொதுத் தேர்தல் முடிவுகளின்படி எதிர்க்கட்சியாக விளங்கிய பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியமையால், ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சி முடிவுக்கு வந்தது. பதவியிலிருந்த சனாதிபதி அரசியல் யாப்பின்படி, பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்ததினால் ஓர் இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியதுடன், பல்வேறு முரண்பாடுகள் தோன்றவும் வழிவகுத்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒன்றாக, பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின்படி, அவசரகால ஆட்சியைத் தொடரமுடியாமல் போனமையைக் குறிப்பிடலாம். அவசரகால நிலைமையை அறிவித்தல் மற்றும் அவசரகால விதிகளை உருவாக்குதல் என்பன சனாதிபதியின் செயலாகும். இத்தகைய அறிவித்தல் ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில், இவற்றின் மீதும் உறுதியுரைகள் எவையும் இடம்பெறவில்லை. அத்துடன் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக இடம்பெறுவதுபோலத் தெரிந்தன. புதிய பாராளுமன்றம் கூடியபோது, முன்னைய அறிவித்தல்கள் காலாவதியாயின. புதிய சனாதிபதியால் புரட்டாதி மாதம் 4ஆம் திகதி நடைமுறைக்கு வருமெனப் புரட்டாதி மாதம் 1 ஆம் திகதி விடுக்கப்பட்ட அறிவித்தல் அங்கீகரிக்கப்பட்டது. இம் மட்டுப்படுத்தப்பட்ட அவசரகால ஆட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அதன் எல்லைப் பிரதேசங்களிலுமே இருந்தன. அவசரகால ஒழுங்கு விதிகளுக்கான (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) புதிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இவ்விடயத்தில் அத்தியாவசிய சேவைகள் தொடர்பான குற்றங்கள், வீட்டுரிமையாளரால் பொலிசாருக்கு வழங்கப்படும் தகவல்கள் பற்றிய ஏற்பாடுகள் கைவிடப்பட்டன. ஆகவே, எதிர்பாராத விதமாக, கைதுகள் பற்றி மனித உரிமைகள் செயலணிப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டன. ஏனைய ஒழுங்குவிதிகள், தடைசெய்யப்பட்ட வலயங்களுக்குப் பொருட்களை ஏற்றிச்செல்லல் சம்பந்தமாக உருவாக்கப்பட்டன. ஏனைய நானாவித விடயங்களுக்கான பல ஒழுங்கு விதிகள் மீண்டும் அறிமுகம் செய்யப்படவில்லை.

சனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது, ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் காமினி திசாநாயக்காவும் ஏனைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களும் கொலை செய்யப்பட்டதால் புதிய நிலைமை உருவாகியது. ஐப்பசி மாதம் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்திலே தற்கொலைக் குண்டுவீச்சாளரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 55 பேர் கொல்லப்பட்டனர். சனாதிபதி விஜேதுங்க உடனடியாக நாடு முழுவதிலும் அவசரகால ஆட்சியைப் பிரகடனஞ் செய்ததுடன் இன்னொரு தொகுதி அவசரகால ஒழுங்கு விதிகளை (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) கொண்டு வந்தார். இவை ஆவணி மாதம் 16 ஆம் திகதியில் அமுலில் இருந்த விதிகளோடு ஓரளவுக்கு ஒத்துச் சென்றன.

அரசியல் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட வேளையில், பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தைப் புதுப்பிக்க வேண்டிய நிலை உருவானதுடன் அதனைப் பற்றியதான புதிய முடிவொன்றும் எடுக்கப்பட்டது. ஐப்பசி மாதம் 24 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் சனாதிபதி விஜேதுங்காவினால் இரத்துச் செய்யப்பட்டதுடன் மீண்டும் 1994 கார்த்திகை மாதம் 4 ஆம் திகதி அமுலுக்கு வரக்கூடியதாக அவசரகால ஆட்சி பற்றிய புதிய அறிவித்தல் ஆணையையும் மேற்கொண்டார். இவ்வாட்சி, வடக்குக், கிழக்கு மாகாணங்களிலும் அதன் எல்லைப் பிரதேசங்களிலும், கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் அமுலுக்கு வந்தன.[4] இன்னுமொரு அவசரகால ஒழுங்கு விதிகள் ஏற்படுத்தப்பட்டன. இது உள்ளடக்கத்தில் 1994 கார்த்திகை மாதம் கொடுக்கப்பட்ட விளக்கத்துடன் ஒத்துச் செல்வதாகக் காணப்பட்டது. தடை விதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குப் பொருட்களை எடுத்துச் செல்லல், தடைசெய்யப்பட்ட பிரதேசங்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல் பற்றிய இரண்டு மேலதிக ஒழுங்கு விதிகளும் உருவாக்கப்பட்டன.

1994 கார்த்திகை 9 ஆம் திகதி சனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. கார்த்திகை 7 ஆம் திகதி ஒழுங்கு விதிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின்படி, கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் கார்த்திகை மாதம் 7 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் கார்த்திகை மாதம் 9 ஆம் திகதி நள்ளிரவு வரை அவசரகால ஒழுங்கு விதிகள்

---

4 புவியியல் ரீதியான விபரங்களுக்குப் பின்னிணைப்பு 11 ஐப் பார்க்கவும்.

செல்லுபடியாகாது எனக் கூறப்பட்டது. தேர்தலின் காரணமாக நாடுமுழுவதிலும் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக நாட்டுமக்கள் எல்லோரும் தவறாக எண்ணினர். அவசரகாலச் சட்டம் உண்மையிலேயே வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் அதன் எல்லைப் பிரதேசங்களிலும் அமுலில் இருந்தது. பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சந்திரிகா குமாரதுங்க சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் மார்கழி மாதம் 4 ஆம் திகதி அவசரகாலச் சட்டத்தைப் புதுப்பித்தல் தொடர்பாக மேற்கொண்ட புதிய அறிவித்தலின்படி புவியியல் பிரதேசரீதியாக எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை. சட்டங்களை அமுல்படுத்தல் என்னும் நோக்கில் அதே விதிகளே இடம்பெற்றிருந்தன.

அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கின்றதா என்பது பற்றி வருட இறுதியில் ஒருசிலரே அறிந்திருந்தனர். அவசரகாலச் சட்டம் வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரமே அமுலில் இருக்கின்றது என்ற அபிப்பிராயத்தைச் சட்டங்களை அமுல்படுத்துவோர், ஏனைய அரச அலுவலர் பலர் கொண்டிருந்தனர். இந்த ஆண்டு ஐந்து குறிப்பிடத்தக்க அவசரகால ஆட்சிப் பருவங்களையும் அவசரகால ஆட்சியற்ற ஒரு பருவத்தையும் கொண்டிருந்தது. அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்த காலப்பகுதியில் நான்கு பருவங்கள் எவ்வித இடையூறுமின்றியிருந்தன. எனினும் அவை சட்டத்துக்கு மாறானவை என்பதை நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும். ஆகவே இவ் ஒவ்வொரு பருவத்திலும் அதற்கு முன்னைய பருவத்திலிருந்த விதிகள் காலாவதியாயின. அத்துடன் பிரச்சினைக்குரிய கால கட்டத்தில் புதிதாக இயற்றப்பட்ட சட்ட ஒழுங்கு விதிகளே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. அரசு சார்பற்ற நிறுவனங்கள் குறிப்பாக நடேசன் நிலையமானது வழக்கறிஞர்களுக்கும் ஏனையவர்களுக்கும் இதுபற்றிய மாற்றங்கள் பற்றி **"டொக்இன்போம்" (Docinform)** நூலகச் சுற்றறிக்கைகள் மூலமாக அறிவிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. நீதித்துறை அலுவலகர்கள் கூட இதில் பெருமளவு தங்கியிருந்தனர். அமுலிலிருந்த அவசரகால ஒழுங்கு விதிகளின் உள்ளடக்கம் சம்பந்தமாக வருட இறுதியில் பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு வகையான ஒழுங்கு விதிகளின் நீக்கம்

பல்வேறுபட்ட விடயங்கள் பற்றிய அதிகளவான அவசரகால ஒழுங்கு விதிகளை நீக்குதல் வரவேற்கக் கூடியது. தற்பொழுது அவசரகால ஒழுங்கு விதிகளும் ஏனைய சிலவும் மட்டுமே (நானாவித ஏற்பாடுகளும்

அதிகாரங்களும்) காணப்படுவதுடன் அவற்றைக் கண்காணித்தலும் ஒப்பீட்டளவில் இலகுவாக இருந்தது.

அத்தியாவசிய சேவைகள் : வீட்டு உரிமையாளர் மற்றும் விடுதிச் சொந்தக்காரர்கள்

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான குற்றங்களை நீக்குதல், வீட்டு உரிமையாளர்களும் விடுதிச் சொந்தக்காரர்களும் பொலிசாருக்குத் தகவல் கொடுக்க வேண்டும் எனக் கோரும் ஏற்பாடுகளும் வரவேற்கக் கூடியவை.

தடுப்புக் காவல்

17 ஆவது ஒழுங்கு விதியின் கீழ்வரும் தடுப்புக் காவல் சட்டத்தைத் திருத்தியமைத்தல் இன்னும் பரிசீலனையில் உள்ளது. முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் காலவரையறையின்றித் தடுத்து வைத்தலை நீடிக்கலாமெனக் கூறப்பட்டிருந்தாலும் தற்பொழுது தடுத்து வைக்கும் காலம் ஒரு வருடத்துக்கு மேல் நீடிப்பதாக இருப்பின் அதனை நீதிபதி மட்டுமே செய்ய முடியும். செயலாளரிடமிருந்து நீதிபதிக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அவ்வறிக்கையில், "கூறப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் ஒருவர் தடுப்புக் காவலில் உள்ளார். அவசியமேற்படின் தடுப்புக்காவலில் வைத்திருக்கும் காலத்தை நீடிக்கலாம்." காரணங்கள் நியாயமானவையாக இருப்பதையிட்டு நீதிவான் திருப்தி கொண்டால், அவர் தடுப்புக்காவல் நீடிப்பைச் செய்யலாம். தடுத்து வைக்கப்பட்ட ஆள் எவரும் அவ்வறிக்கையைப் பார்வையிடும் ஏற்பாடுகள் எவையும் இல்லை. ஆகவே அவன் அல்லது அவள் அதன் உள்ளடக்கம்பற்றி எதிர்ப்புத் தெரிவிக்க முடியும்.

ஒருவர் தடுத்து வைக்கப்படுதலை நீடிக்கலாமா அல்லது இல்லையா எனத் தீர்மானிக்கும் அதிகாரம் நீதிமுறை உத்தியோகத்தர் ஒருவருக்கு மாற்றப்படுவது வரவேற்கத்தக்கதெனினும் இந்த ஏற்பாடு நீதிபதியின் கடமைகளைக் கட்டுப்படுத்துகிறது எனப் பொருள் தருகிறது. மற்றும் தடுத்து வைத்தலுக்கான ஆகக் கூடியகாலமும் இதுவரையில் எடுத்துக் காட்டப்படவில்லை. இது குறித்து ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் வாய்ந்தனவாக இல்லை எனலாம். மேலும், தடுப்புக் காவலில் உள்ளவர் எத்தகைய நிலைமைகளின் கீழ்

வைக்கப்பட்டுள்ளார் என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு நீதிபதிக்கு இல்லை என்பதும், இவை பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பு செயலாளருக்கே உரியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

18 ஆவது ஒழுங்கு விதிகளின்படி கைது செய்தலும் மனித உரிமைகள் செயலணிப் பிரிவினர்க்கு அறிவித்தலும்

ஆவணி மாதம் பல முன்னேற்றகரமான அம்சங்கள் அமுல்படுத்தப்பட்டன. கைது செய்யும்போது குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளைப் பின்பற்றத் தவறியமை, அதிகாரமளிக்கப்படாத இடங்களில் ஆட்களைத் தடுப்புக் காவலில் வைத்தல் போன்றவற்றுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும், ஆவணி மாத ஒழுங்கு விதிகளின் படி சகல கைதுகளும் மனித உரிமைச் செயலணிப் பிரிவினர்க்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பின்னர் வந்த விதிகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது.

இவ்விடயமும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். இக் கோரிக்கை கைவிடப்பட வேண்டும் என்பதற்கான காரணமாக, மனித உரிமைகள் செயலணிப் பிரிவினரின் உருவாக்கத்தையும் தொழிற்பாடுகளையும் தீர்மானிக்கும் அவசரகால ஒழுங்கு விதிகள் புரட்டாதி மாதத்தில் காலாவதியான பின்னர் மீண்டும் பிரகடனப்படுத்தப்படவில்லை. ஆனால் இதில் நியாயம் காணப்படவில்லை. இத்தகைய ஒழுங்கு விதிகள் முன்பிருந்த பல ஒழுங்கு விதிகளுடன் ஒத்துச்செல்லவில்லையாதலால் தேசிய பாதுகாப்புடனும் தொடர்பற்றிருந்தது. ஆகவே மனித உரிமைகள் செயலணியினரின் நிலை பற்றிய தெளிவின்மையும், அதிருப்தியையே தந்தது. மனித உரிமைகள் செயலணிப் பிரிவு பல குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் பல விடயங்களில் திறம்படச் செயலாற்றியது. நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அவசரகால ஒழுங்கு விதிகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியன அமுலிலிருக்கும் போது மனித உரிமைகள் செயலணிப்பிரிவு போன்ற நிறுவனங்கள் பயனுறுதி வாய்ந்த அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் நாடு பூராகவும் பரவலான முறையில் தமது அலுவலகங்களைக் கொண்டு செயற்பட வேண்டும் என்பதும் இன்றியமையாதது.

தடுப்புக் காவலுக்கான நிபந்தனைகள்

இந்த விவகாரம் எமது சமுதாயத்தில் பெருங்குறைபாடாக விளங்குகிறது. சிறைச்சாலை தவிர்ந்த ஏனைய இடங்களில் அவசரகால அதிகாரங்களின் கீழ் தடுப்புக் காவலில் உள்ள ஒருவர் பற்றிய விதிமுறைகள் எவையும் காணப்படவில்லை. (இவை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ள ஒருவருக்கும் பொருந்தும்) அத்தகைய ஒருவர் சிறைச்சாலையில் வைத்திருக்கப்படும் பொழுது பாதுகாப்புச் செயலாளர் சிறைச்சாலைக் கட்டளைச் சட்டம் அல்லது சிறைச்சாலை விதிகள் பற்றிய ஏற்பாடுகளை இடைநிறுத்தி வைக்கலாம். இந்த அதிகாரம் பற்றி எவ்வித தெளிவும் இல்லை. "ஒருவர் எப்பொழுது என்ன உண்கிறார் அல்லது குடிக்கிறார், எப்போது, எங்கே உறங்குகிறார், அவர் குளிக்கிறாரா இல்லையா, மலசலகூடத்தைப் பயன்படுத்துகிறாரா, மருத்துவக் கவனிப்புக்கு உட்படுகிறாரா, வாசிக்கின்றாரா, குடும்பத்தினரைப் பார்க்கின்றாரா அல்லது கடிதம் எழுதுகின்றாரா, கடிதம் பெறுகின்றாரா என்பவை யாவும் பூரணமாக அரசாங்க உத்தியோகத்தரின் தீர்மானத்திலேயே தங்கியிருக்கும்.[5]

பொலிஸ் பாதுகாப்பு

பொலிசாரின் அல்லது இராணுவத்தினரின் பாதுகாப்பில் தடுப்புக்காவலில் வைக்கும் ஏற்பாடுகளில் மாற்றமில்லை. ஒருவர் குற்றம் விளைவித்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்படுதல் தொடர்பாக (18 ஆவது ஒழுங்கு விதி) 1993 ஆனி மாதத்தில் சில கட்டுப்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டன. அவை தொடர்ந்தும் உள்ளன. (சில விடயங்களைப் பொறுத்து ஆகக் கூடிய காலம் 48 மணித்தியாலமும் 7 நாட்களும், ஏனைய விடயங்களைப் பொறுத்து 7 நாட்களும் 60 நாட்களும் என இவை புவியியற் காரணிகளைப் பொறுத்து அமையும்). 17 ஆவது ஒழுங்கு விதிப்படி தடுப்புக்காவலிலுள்ள ஒருவர் தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் அல்லது இராணுவப் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்படுவதற்கான காலம் எல்லையற்றதாகும்.

---

5 சி.ஆர்.எம்.- மாசி 1993, 1971 இல் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து திரும்பத் திரும்ப வேண்டுகோள்கள் விடுக்கப்படுகின்றன.

மரண விசாரணை

பிரேத பரிசோதனை ஏற்பாடுகள் முன்னருள்ளவை போலவே இருக்கின்றதாயினும் அவை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. பாதுகாப்பிலுள்ள ஒருவர் இறந்தால், பிரேத பரிசோதனை கட்டாயமாகச் செய்யப்பட வேண்டுமென வழமையான சட்டம் குறிப்பிடுகிறது. அவசரகால விதிகளின் கீழ் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது ஆயுதப்படை அங்கத்தினரொருவர் இம்மரணமானது ஆயுதந் தாங்கிய, நேருக்கு நேரான மோதலினால் நிகழ்ந்திருக்கலாம் எனக் கூறித் தப்பிக்க முயற்சிக்கலாம். சாதாரண நிலைமைகளிலிருந்தும் வேறுபட்ட முறையில், இத்தகையதொரு பிரேத பரிசோதனையானது பொலிஸ் மாஅதிபர் தீர்மானித்தால் மட்டுமே நடத்த முடியும். பொலிஸ் மாஅதிபரினால் முன்வைக்கப்படும் சான்றுகளைக் கவனத்திற் கொண்டு மட்டுமே கொழும்பு உயர்நீதிமன்றத்தினால் நடாத்தப்படும் மரணம் தொடர்பான சூழ்நிலையுடன் தொடர்புடையவராக ஒருவர் இருக்குமிடத்து அவரின் சான்றுகளைக் கவனத்தில் எடுக்கும் ஏற்பாடுகள் 1989 இல் நீக்கப்பட்டதுடன் அது மீண்டும் கொண்டுவரப்படவில்லை.

தெளிவின்மை

கைது செய்தல் மற்றும் தடுப்புக்காவலில் வைத்தல் தொடர்பான ஏற்பாடுகள் பற்றிய சொல்லாட்சி சிக்கலாக உள்ளதுடன் அதன் பொருளை ஒருவர் சரியாக அறிந்து கொள்வதும் மிகக் கடினமானது. நாட்டின் பல பகுதிகளுக்கும் பொருந்தக் கூடிய குறிப்பாக வேறுபட்ட ஏற்பாடுகள் பற்றியனவாக இவை உள்ளன. சட்டத்தை நடைமுறைப் படுத்தும் அலுவலர், பொதுமக்கள் ஆகியோரைப் பொறுத்து இலகுவான வடிவத்தில் மீளவும் வரைபு செய்யப்படுதல் அவசியமானது

தவறுகளும் ஒழுங்கின்மைகளும்

அவசரகால ஒழுங்கு விதிகள் (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) தவறுகள் மற்றும் ஒழுங்கின்மைகளுடன் திணிக்கப்பட்டுள்ளதுடன் தமது கருத்தாழத்திலும் வேறுபடுகின்றன. ஆனால் கௌரவத்தை நிலைநாட்ட வேண்டுமெனின் சட்டமானது தர்க்கரீதியாகவும், நியாயமானதாகவும்

இருத்தல் வேண்டும். இவற்றுக்கு முழுமையான நுண்ணாய்வும் மீள்பரிசீலனையும் அவசியமாகும்.[6]

தடுப்புக் காவலில் வைப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட இடங்களை வெளியிடாதிருத்தல்

1994 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் இடம்பெற்ற இன்னொரு விஷேட அம்சமாக இலக்கம் 806/6, 15 மாசி 1994 எனத் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியின் வெளியீட்டைக் குறிப்பிடலாம். தடுப்புக் காவலில் வைப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட மேலும் இரு இடங்கள் இவ் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது. பனாகொட தடுப்பு முகாம், கொழும்பு 7 கிரகறி வீதியிலுள்ள குற்றத் தடுப்பு பணியகத் தலைமைக் காரியாலயம் என்பன அவையிரண்டுமாகும். தடுப்புக் காவல் இடம் பற்றிய பட்டியலில் மேற்கொள்ளப்பட்ட சேர்க்கைகள் 1993 ஆனி 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் இடம் பெற்றிருந்தன. இச்செய்தி பற்றிக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், 1993 ஐப்பசி 1 ஆம் திகதி என வர்த்தமானி வெளியிடப்பட்ட திகதியிலும் பார்க்க நாலரை மாதங்கள் முன்னராக குறிப்பிடப்பட்டிருந்தமையே.

நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் இந்த வர்த்தமானி சந்தா செலுத்துவோருக்கு, இரண்டரை மாதங்களின் பின்னர் 1994 வைகாசி மாதத்திலேயே தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டதுடன் திகதியும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாகக் கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு அம்சமாக 1994 மாசி மாதம் சர்வதேச மன்னிப்புச் சபை தடுப்புக் காவலில் வைத்திருந்த ஒருவரைத் தவறான முறையில் நடத்தியமை பற்றிய பிரச்சினை எழுப்பியமையைக் குறிப்பிடலாம். அத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட தடுப்புக் காவலுக்கான இடங்களுள் ஒன்றாகப் பனாகொட இராணுவமுகாம் குறிப்பிடப்படவில்லை. அவசரகால விதிகளின்படி, பாதுகாப்பு அமைச்சரால் அதிகார மளிக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஒருவரைத் தடுப்புக் காவலில் வைக்க முடியாதெனச் சுட்டிக்காட்டப்பட்டது. இது மீறப்பட்டமையால், அதிகாரமளிக்கப்பட்ட தடுப்புக் காவலில் வைக்கும்

---

6 1994 கார்த்திகை 29 (CRM ref.02/11/94) "நடைமுறை அவசரகால ஒழுங்கு விதிகள்" என்னும் சி.ஆர்.எம். செய்தியிலிருந்து மேலே உள்ள அவதானிப்புக்கள் பெறப்பட்டன.

இடங்களை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டிய நிலை செயலாளருக்கு ஏற்பட்டது.

முன்னர் பிரசுரிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட தடுப்புக் காவல் நிலையங்கள் 1994 ஆடி மாதம் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் சட்டப்படி செயலிழந்தன. 1994 ஆவணி மாதம் அவசரகால ஆட்சி மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டபோதும் அவ்வருட இறுதிவரையில் மட்டுமே நடைமுறையிலிருந்தது. 1994 மார்கழி மாதம் 15 ஆம் திகதிவரை புதிய தடுப்புக்காவல் நிலையங்களுக்கான பட்டியல் வெளியிடப்படவில்லை. (1994 மார்கழி மாதம் பிரசுரமானது) அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ்வரும் சகல தடுப்புக்காவல் நிலையங்களும் ஆவணி மாதம் 16 ஆம் திகதிக்கிடையில் இடம்பெற்றிருந்ததுடன் இத் திகதி சட்டரீதியாகவும் இருந்தது. பட்டியலில் குறிப்பிட்டிருந்த 81 தடுப்புக்காவல் நிலையங்களில் 68 பொலிஸ் நிலையங்கள் அல்லது ஏனைய பொலிஸ் காரியாலயங்களும் அடங்கும்.

அறியும் வாய்ப்பின்மை

அவசரகால ஒழுங்கு விதிகளின் இலகுவான அடைவு இன்மையும் அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகள், அறிவித்தல்களை எளிதில் அறியும் வாய்ப்பின்மையும் ஒரு முக்கிய பிரச்சினையாகக் காணப்பட்டது.

இவை எந்தளவுக்குப் பாரதூரமானவை என்பதை மேற் கூறப்பட்ட தடுத்து வைத்தலுக்கான அதிகாரபூர்வமான இடம் பனாகொட இராணுவ முகாமே என்ற முறையில் சற்று மர்மமான சூழ்நிலையில் வெளியிடப்பட்ட அறிவித்தல் எடுத்துக் காட்டுகின்றது. அவ்வாண்டின் இறுதியில் குடியியல் உரிமைகள் இயக்கம் அத்தகைய விதிமுறைகள் அறிவித்தல்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் உடனடியாக வெளியிடப்பட வேண்டும் என மீண்டும் கோரிக்கை விடுத்தது.

பின்னிணைப்பு 1

அவசரகால ஆட்சி 1994 – கால ஒழுங்குமுறை / 1994 தை 1 தொடக்கம் 1994 ஆடி 15/ 16 நள்ளிரவு வரை.

முன்னைய அவசரகால ஆட்சி தொடருகின்றது. 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால ஒழுங்கு விதிகள் (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) ஏனைய ஒழுங்கு விதிகளுடன் இணைந்து தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

1994 ஆடி 16 தொடக்கம் ஆவணி 16 வரை

இலங்கையின் எப்பாகத்திலும் அவசரகால ஆட்சி இல்லை.

1994 ஆவணி 16 (மாலை 6 மணி) தொடக்கம் புரட்டாதி 4 வரை

அவசரகால நிலை இலங்கை முழுவதிலும் நடைமுறையிலிருந்தது. அவசரகால ஒழுங்கு விதிகள் (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) இலக்கம் 1, 1994 2 ஆம், ஏனைய 24 ஒழுங்கு விதிகளும் அமுலில் இருந்தன. தடுப்புக்காவல் ஏற்பாடுகளில் மாற்றம். கைதுகள் பற்றி மனித உரிமைகள் செயலணிப் பிரிவுக்கு அறிவிக்க வேண்டும் என்ற கடப்பாடும் இருந்தது.

1994 புரட்டாதி 4 தொடக்கம் ஐப்பசி 24 வரை

அவசரகால நிலை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அதன் எல்லைப் பிரதேசங்களிலும் உதாரணமாக, புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் அமுலில் இருந்தது.தேசிய பாதுகாப்புடன் தொடர்பற்ற ஒழுங்கு விதிகள் மீண்டும் அறிமுகம் செய்யப்படவில்லை. 1992 ஆம் ஆண்டில் 2 ஆம் இலக்க அவசரகால ஒழுங்கு விதிகள் அமுலில் இருந்தன. குற்றங்கள், கட்டாய சேவைகள், வீட்டுரிமையாளர் பொலிசாருக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோள் கைவிடப்பட்டன. கைதுகள் பற்றி மனித உரிமைகள் செயலணிப் பிரிவுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதும் நீக்கப்பட்டது.

1994 ஐப்பசி 24 தொடக்கம் கார்த்திகை 4 வரை

அவசரகால ஆட்சி இலங்கை முழுவதிலும் இருந்தது. 1994 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அவசரகால ஒழுங்கு விதிகள் (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) நடைமுறையிலிருந்தன. 1994 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்கச் சட்டத்தினை ஒத்ததான விதிகள் ஆவணி/ புரட்டாதி மாதங்களில் நடைமுறையிலிருந்தன. கைதுகள் பற்றி மனித

உரிமைகள் செயலணிப் பிரிவுக்கு அறிவிக்கப்படும் கடப்பாடும் உள்ளடக்கப்படவில்லை.

1994 கார்த்திகை 4 தொடக்கம் மார்கழி 31 வரை

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் எல்லைப் பிரதேசங்கள் மற்றும் கொழும்பும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் அவசரகால ஒழுங்கு விதிகள் அமுலில் இருந்தன. (விபரங்களுக்கு பின்னிணைப்பு 11 இனைப் பார்க்க). 1994 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால ஒழுங்கு விதிகள் அமுலில் இருந்தன. 1994 ஆம் ஆண்டின் இலக்கம் 2 இல் உள்ளது போன்ற அதே அம்சம் புரட்டாதி, ஐப்பசி மாதங்களிலும் அமுலிலிருந்தன. (மேலே குறிப்பிட்டவற்றைப் பார்க்க).

பின்னிணைப்பு 11

சனாதிபதி டி.பி. விஜேதுங்காவினால் 1994 மார்கழி 4 ஆம் திகதியிட்ட 843/ 11 இலக்கத்தையுடைய பிரத்தியேக வர்த்தமானியின் பொது அறிவித்தலில் உள்ளதுபோல் பொதுசனப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் பகுதி 11 இல் உள்ள பிரதேசங்களில் அவ்வருட இறுதி வரையும் அமுலில் இருந்தது. சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவினால் 1994 மார்கழி மாதம் 4 ஆம் திகதி 848/ 1 ஆம் இலக்க பிரத்தியேக வர்த்தமானியின் பொது அறிவிப்பில் இது மீண்டும் அறிவிக்கப்பட்டது.

கொழும்பு, தெகிவளை-கல்கிசை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்கள்: கொழும்பு மாவட்டத்திலுள்ள நுகேகொட, கொலன்னாவை பிரதேசச் செயலாளர் பிரிவுகள்; கம்பஹா மாவட்டத்தின் வத்தளை, யா-எல மற்றும் நீர்கொழும்புப் பிரதேச செயலாளர் பிரிவுகள்; வடமாகாணம், கிழக்கு மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி, வனாத்தவில்லு, கறுவலகஸ்வெவ பிரதேசச் செயலாளர் பிரிவுகள்; அனுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம, நுவரகம்பலாத்த (மத்தி), மதவாச்சி, கெப்பிற்றிக்கொல்லாவ, பதவியா மற்றும் ஹொரவப் பொத்தான பிரதேச செயலாளர் பிரிவுகள்; பொலன்னறுவை மாவட்டத்தில் டிம்புலாகலை மற்றும் லங்காபுர பிரதேசச் செயலாளர் பிரிவுகள்.

4

ஒரு நபரின் நன்மதிப்பைக் கௌரவித்தல்

1. அறிமுகம்

இவ் அத்தியாயம் வாழும் உரிமை, சித்திரவதையிலிருந்து விடுதலை, காணாமல் போதல், சுதந்திரம் மற்றும் நீதியான விசாரணை என்பன பற்றிய கலந்துரையாடலைக் கொண்டிருக்கின்றது. இத்தகைய உரிமைகள் தொடர்பாக பல சர்வதேச மனித உரிமை நியமங்கள் பேணப்படுகின்றதுடன் அவற்றுள் ஐ.சி.சி.பி.ஆர். இன் சித்திரவதை மகாநாட்டுடன்படிக்கைகள் மிக முக்கியமானவை. இலங்கை 1980 இல் ஐ.சி.சி.பி.ஆர். இலும், 1994 தை மாதத்தில் சித்திரவதை மகாநாட்டுடன்படிக்கையிலும் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டது.[1]

இவற்றின் ஒவ்வொரு பிரிவும் சர்வதேச நியமங்களுக்கேற்ற பொருத்தமான விளக்கங்களை அளிக்கின்றதுடன் அந்தளவுக்கு உரிமைகள் இலங்கையின் சட்டங்களிலும் பாதுகாக்கப்படுகின்றன. அத்துடன் 1994 ஆம் ஆண்டிலே அவ்வுரிமை நடைமுறையில் எந்தளவுக்குப் பாதுகாக்கப்பட்டுள்ளது எனவும் மதிப்பீடு கூறுகிறது.

---

[1] Further international standards relevant to personal integrity rights are listed in *Sri Lanka: State of Human Rights 1993* (Law & society Trust, Colombo, 1994)

2. வாழும் உரிமை

ஐ.சி.சி.பி.ஆர் இன் உறுப்புரை 6 இன் கீழ் வாழும் உரிமை பேணப்படுகின்றதுடன் எச் சந்தர்ப்ப சூழ்நிலையிலும் இவ்வுரிமையைக் குறைத்து மதிப்பிட முடியாது என உறுப்புரை 4 தெரிவிக்கிறது. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு யாப்பின்படி வாழும் உரிமைக்கு (மனித உரிமைகளில் அடிப்படையானது) எவ்வித பாதுகாப்பும் இல்லை. வாழும் உரிமைக்கு யாப்பு வழங்கிய விளக்கம் தடையுத்தரவாகும். 13 (4) ஆம் உறுப்புரையின்படி, மரணதண்டனை அல்லது சிறைத்தண்டனை சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படியே விதிக்கப்படுகின்றது. இத்தகைய ஏற்பாடுகள் அவசரகால ஒழுங்கு விதிகளை உள்ளடக்குகின்றன.

1976ஆம் ஆண்டு தொடக்கம் இது பயன்படுத்தப்படவில்லையாயினும், இலங்கையில் சிலவகையான குற்றங்களுக்குத் தண்டனையாக மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. இவ்வாறான தீர்ப்புகளைச் சிலசமயங்களில் நீதிமன்றங்கள் வழங்குகின்றன. நடைமுறையில், மரண தண்டனை வழக்கமாக சனாதிபதியால் குறைக்கப்படுகின்றது. யாப்பினைத் திருத்தியமைக்கும் செயல்முறை 1994இல் ஆரம்பமானதுடன் 1995 இல் அது பூர்த்தி செய்யப்பட வேண்டும். யாப்பிலிருந்து முறைப்படி மரணதண்டனையை இல்லாமற் செய்வதற்கு இது நல்லதொரு சந்தர்ப்பமாகும். இதனை நீக்க வேண்டும் என்னும் கருத்து ஏறக்குறைய 20 வருடங்களாக இருந்து வருகிறது.

இலங்கையில் வாழும் உரிமையை மீறுதல் பிரதானமாக அண்மைக் காலங்களிலேயே நிகழ்ந்துள்ளன. குறிப்பாக 1988 தொடக்கம் 1990 வரை தென்பகுதிகளில் நடந்த கிளர்ச்சிகளினாலும் வடக்கு, கிழக்கு பிரச்சினைகளினாலும் இவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை பக்கச்சார்பான மற்றும் சட்டத்துக்கு முரணான கொலைகள், பாதுகாவலில் உள்ளோரைச் சித்திரவதை செய்வதால் விளையும் மரணங்கள் அல்லது விசாரணையற்ற தீர்ப்புகள் எனப் பல்வேறு வடிவங்களில் நிகழ்கின்றன. 1984 ஆம் ஆண்டு தொடக்கம் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கானோரில் பெரும்பாலானோர் காணாமற் போயுள்ளனர். இவர்களுள் பலர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

அநேகமான திட்டமிட்ட மற்றும் வாழும் உரிமை மீறல்கள் அரசுடன் ஆயுதப் போராட்டங்கள் நிகழ்ந்த சந்தர்ப்பங்களிலேயே ஏற்பட்டதால்,

அச்சந்தர்ப்பங்களில் மட்டுந்தான் பாதுகாப்பு அவசியம் தேவை என்பது பொருளல்ல. தனிநபர் ஒருவர் அதிகாரமிழந்த நிலையிலும் அதனைத் தடுக்க முடியாத நிலையிலும் இருக்கும் பொழுதே சித்திரவதைக்கு உள்ளாகின்றார். சித்திரவதை அளவு கடந்து செல்லும்போது மரணங்களும் நிகழ்கின்றன. 1994 இல் வடக்குக், கிழக்குப் பிரச்சினை தொடர்பாக சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டோர் பலர் இவற்றைத் தொடர்ந்தும் அனுபவித்தனர். பிரேத பரிசோதனை பற்றிய அவசரகால ஒழுங்கு விதிகள் இத்தகைய கொலைகளுக்கும் கட்டாய விசாரணை வேண்டுமெனக் கூறவில்லை: அவை கொலைகளை மூடி மறைக்கவே உதவின.[2] மேலும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் படைகளைப் பயன்படுத்தும் போது அதற்கு மேற்பார்வை அவசியமாகும். சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் படைகளைப் பயன்படுத்தத் தேவையான தெளிவான கோட்பாடுகளையும் வழிகாட்டல்களையும் சர்வதேச நியமங்கள் வழங்குகின்றன. உதாரணமாகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அலுவலர் ஒழுக்காற்று விதியின் 3 ஆவது உறுப்புரை "படையினர் சேவை மிக அவசியம்" என்ற வேளையிலேயே அவர்களின் உதவியை நாட இடமளிக்கிறது. மற்றும் ஆயுதந்தாங்கிய எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்களில் மட்டும் சுடுபடைக்கலங்களைப் பயன்படுத்தலாம் என்றும் கூறியுள்ளது.

2.1 சட்டத்துக்கு முரணான கொலைகள் பற்றி அறிவிக்கப்பட்ட வழக்குகள்

வடக்குக், கிழக்கில் ஆயுதந்தரியாத பொதுமக்கள் சட்டத்துக்கு முரணாகக் கொலை செய்யப்படுதல் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக 1994 இல் அறிவிக்கப்பட்டுள்ளன. கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்பொழுது இவை எண்ணிக்கையில் குறைவாயிருந்தன. அவ்வாறானவற்றுள் சில பின்வருமாறு:

- 1994 ஆடி மாதம் திருக்கோவிலுக்குத் தெற்கே பால்குடா என்ற இடத்தில் நான்கு பொதுமக்கள் விஷேட அதிரடிப் படைப் பிரிவினரால் (எஸ்.ரி.எவ்) கொலை செய்யப்பட்டனர்.விடுதலைப் புலிகளுடன் நடந்த ஆயுதப் போராட்டத்தில் நான்கு எஸ்.ரி.எவ் கொலை செய்யப்பட்டமைக்குப் பழிவாங்கலாகவே இந் நடவடிக்கை அமைந்தது என்பது வெளிப்படை.

---

2 Chapter III on Emergency Rule discusses the substance of these regulations

- 1994 ஐப்பசி மாதப் பிற்பகுதியில் ஏறாவூர் பற்றில் இரண்டு பேர் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டு அவர்களுடைய உடல்களும் மறைக்கப்பட்டுவிட்டன என அறிவிக்கப்பட்டமை.

- நவரத்தினம் என்னும் பெயருடைய ஒருவரை ஐப்பசி மாதக் கடைசியில் எஸ்.ரி.எவ். தாக்கியமை. இவர் விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர் எனத் தெரிவிக்கப்பட்டமையால் அவ்வாறு செய்தனர். அம்பாறை மாவட்டத்திலுள்ள சக்காமம் என்ற இடத்திலுள்ள வயலிலிருந்து வீடு வரை தொடர்ந்து சென்று இறக்கும்வரை தாக்கி, அவரது உடலைக் கிணற்றுக்குள் வீசினர்.

1994 புரட்டாதி மாத இறுதிவரையில் இராணுவத்தினரின் வான் தாக்குதல் மற்றும் எறிகணைத் தாக்குதல் காரணமாகவும் யாழ்ப்பாணக் கடனீரேரி தடைசெய்யப்பட்ட வலயத்தில் தோணிகள் மூலம் கடக்கும் போது விமானப்படைத் தாக்குதல் காரணமாகவும் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். பின்வரும் சம்பவங்கள் உட்பட ஏறக்குறைய 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நொச்சிக்குடாவில் நடைபெற்ற வான் தாக்குதலில் இரண்டு பெண்களும், இரண்டு ஆண்களும் இறந்தனர்.

- மாசி மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணக் கடனீரேரியை ஒரு தோணி கடக்கும் போது வான்படையினரின் தாக்குதலால் ஒன்று அல்லது இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

- பங்குனி மாதம் 15 இல் யாழ்ப்பாண நகருக்குள் 5 எறிகணைகள் ஏவப்பட்டன. இதனால் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் சிங்கள மீனவர் குழுவொன்றைக் கொலை செய்ததன் பின்னர் இது நிகழ்ந்தது.

- ஆனி மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதிவரை ரோமன் கத்தோலிக்கர் வாழும் பிரதேசங்களில் திருவிழாக் கொண்டாட்டங்களின் போது நிகழ்ந்த எறிகணைத் தாக்குதலால் 6 பேர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

1994 பங்குனி மாத இறுதியில் 11 தமிழ் மீனவர்கள் (வடக்கில் மீன்பிடித்தல் தடையை மீறியமையால்) கடற்படையினரின் தாக்குதலால்

கொல்லப்பட்டனர். இந்த வருடத்தின் ஆரம்பத்தில், பாதுகாப்புப்படைகள் இருக்கும் இடங்களுக்கு அண்மையில் பணியில் ஈடுபடும் ஆயுதமேந்திய தமிழ்க் குழுக்கள் சட்டத்துக்கு முரணாகப் பல கொலைகளைச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக மாசி மாதத்தில் அத்தகைய குழுவொன்றின் தலைவரால் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்த நபர் ஒருவர் சட்டத்துக்கு முரணாகக் கொலை செய்யப்பட்டார். அவர் இந்த நபரைக் கடனீரேரியில் இருந்த தோணியிலிருந்து கரைக்கு வருமாறு பணித்து அவருடைய தொடையில் சுட்டார். உயிருக்குப் போராடிய வேளையில் தலையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.[3] இத்தகைய கொலைகள் பல 1994 ஆம் ஆண்டின் முதல் மாதத்தில் நிகழ்ந்தன. விடுதலைப் புலிகள், சிங்கள மீனவர்கள் உட்படப் பல பொதுமக்களை எழுந்தமானமாகக் கொலை செய்தனர்.

3. சித்திரவதை

ஐ.சி.சி.பி.ஆர். இன் 7 ஆம் உறுப்புரையின்படி சித்திரவதையிலிருந்து விடுதலை பெறும் உரிமைக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளதுடன், 4 ஆம் உறுப்புரையிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 11 இன் கீழ், பாதுகாப்புப் பெறும் உரிமை கட்டுப்படுத்தப்படவில்லை. ஆயினும் யாப்பு ரீதியான பாதுகாப்பு, சித்திரவதைக்கு எதிரான பாதுகாப்பை வழங்கப் போதியதன்று. எனவே இராணுவமும் பொலிசாரும் அவற்றைப் பரவலாகக் கடைப்பிடித்தனர். சித்திரவதையை இல்லாதொழிக்கச் சட்ட, நிருவாக, மற்றும் அரசியல் ரீதியான நடவடிக்கைகள் பரவலாக எடுக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. இதனுள் பொலிஸ் படையை மீள ஒழுங்கமைத்தல், பாதுகாப்பு மற்றும் விசாரணை நடைமுறைகளில் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் பொலிசுக்கு எதிரான முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்யும் சுதந்திர அமைப்பு ஒன்றை உருவாக்குதல் என்பனவும் அடங்கும்.[4]

1994 இல், சித்திரவதைத் தடுப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளில் முதலாவது, சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மகாநாட்டுடன்படிக்கைக்கு 1994 தை மாதத்தில் ஐக்கிய தேசியக்

---

[3] University Teachers for Human Rights (Jaffna) Report No. 3

[4] See CRM, *The Anti-Torture Bill*, E 03A/11/94, 30 November 1994

கட்சி அரசாங்கம் இணக்கம் தெரிவித்தமை. இரண்டாவது, 1994 கார்த்திகையில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சித்திரவதை மகாநாட்டுடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சட்டங்களை அறிமுகம் செய்தமையாகும்.

சித்திரவதை மகாநாட்டுடன்படிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கும் வகையில் இலங்கை பயன்தரத்தக்க சட்ட, நிருவாக, நீதி மற்றும் ஏனைய வகையிலான சித்திரவதைத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. சித்திரவதை செய்தல் ஒரு தண்டனைக்குரிய குற்றமாக ஆக்கப்பட வேண்டும் எனவும், சித்திரவதை செய்தல் தொடர்பாக உள்ள முறைப்பாடுகளைச் சரியாகவும், பக்கச்சார்பின்றியும் அதிகாரிகள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது. பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த இழப்பீடும் மறுசீரமைப்பும் அளிக்கப்படல் வேண்டும். சித்திரவதையின்போது பெறப்பட்ட சாட்சியங்கள் நீதிமன்றத்தில் சாட்சியமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. சாட்டியுரைக்கப்பட்ட சித்திரவதையின் போது பெறப்பட்ட வாக்கு மூலங்கள் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இலங்கைச் சித்திரவதைப் பிரகடனம் உறுப்புரை 22 இல் மேலதிகமான பிரகடனங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வுறுப்புரையின்படி நிறுவப்பட்ட குழுவினர் தனிப்பட்டோரிடமிருந்து வரும் முறைப்பாடுகளைக் கவனித்தனர். அத்தகைய முறைப்பாடுகளும் உயர்மட்ட பரிகாரங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் வலுவிழந்தன.1994 கார்த்திகை 25 ஆம் திகதி, சித்திரவதைக்கு எதிரான மசோதாவொன்று[5] பாராளுமன்றத்தில் எவ்வித விவாதங்களுமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஓர் உள்ளூர் மனித உரிமைகள் நிறுவனம் இம் மசோதா அடுத்த மாதத்திலேயே பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுமென நம்பியிருந்தது. அதனால் மசோதாவில் இடம்பெற்றிருக்கும் குறைபாடுகளை நீக்க உரியமுறையில் செயலாற்ற முடியவில்லை.[6]

சித்திரவதைக்கு எதிரான சட்டம் பல்வேறு அம்சங்களில் குறைபாடுடையதாகக் காணப்பட்டமையால் அதனை முழுமையாக

---

5 சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதத்தன்மையற்ற அல்லது தரக்குறைவான நடத்துகை அல்லது தண்டனைக்கு எதிரான மகாநாட்டுடன்படிக்கைக்கு வலுவூட்டும் மனு மற்றும் அதனுடன் தொடர்புபடுத்தப்பட்ட விடயங்கள் அல்லது அதற்கானவையும்.

6 CRM, *The Anti-Torture Bill*

அமுல்படுத்த முடியவில்லை. முதலாவதாக, சித்திரவதைக்கு சட்டத்தில் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணம் மகாநாட்டுடன்படிக்கையில் வழங்கப்பட்ட வரைவிலக்கணத்திலும் பார்க்கக் குறுகியதாக இருந்தது. மகாநாட்டுடன்படிக்கையில் சித்திரவதை "கடும் வருத்தம் அல்லது துன்புறுத்தல்" என விபரிக்கப்பட்டுள்ளது. எனினும் சட்டத்தில் துன்புறுத்தல் என்பதற்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை. இரண்டாவதாக, ஒப்பந்தத்தில் சித்திரவதை செய்யப்படும் நோக்கங்களுக்குப் பல உதாரணங்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் இப்பட்டியலில் யாவும் அடக்கப்பட்டுள்ளன எனக் கூறமுடியாது. மறுபுறத்தில், இச்சட்டம், ஒரே உதாரணங்களைக் கொடுத்த முறையில் அதே நோக்கங்களுக்காகச் சித்திரவதை செய்யலாம் எனவும் கருதச் செய்கிறது. சட்டமானது வரைவிலக்கணம் சம்பந்தமான ஒரு முக்கிய தகைமையைக் கைவிட்டுள்ளது.

3.1 சித்திரவதை பற்றிய அறிக்கை

சித்திரவதைக்கு எதிரான அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகள் இலங்கையில் பரவலாக உள்ளன. எச்.ஆர்.ரி.எவ். அதனுடைய வருடாந்த அறிக்கையில்[7] இதனை உதாரணமாக எடுத்துக் காட்டியுள்ளது. சிறைக்காவலில் உள்ளவர்கள் சித்திரவதைக்குள்ளாகும் போது இறந்துள்ளனர் அல்லது காணாமற் போயுள்ளனர். இவ்விவகாரம் முக்கியமானதாயினும், இவை பற்றிய பூரண விளக்கம் கொண்ட வழக்குகள் சிறிதளவே உள்ளன. இலங்கையில் அரசாங்கம் சகிப்புத் தன்மை காட்டும் சித்திரவதை உள்ளதாக எச்.ஆர்.ரி.எவ். தெரிவிக்கின்றது. சித்திரவதை சம்பந்தமான வழக்குகளில் அரசாங்கம் அக்கறை காட்டுவது குறைவு. பாதிக்கப்பட்டவர் உயர்நீதிமன்றத்துக்கு முறையீடு செய்யலாமாயினும் சித்திரவதைக்கு ஆளானோரில் ஒரு சிலரே நீதிமன்ற நடவடிக்கைகளுக்கேற்ற ஆதாரங்களைக் கொண்டுள்ளனர்.[8]

சித்திரவதை பற்றிய அறிவிப்புகள் வடக்கு, கிழக்கில் இருந்து தொடர்ந்து வருகின்றன. அவசரகால ஒழுங்கு விதிகளின்படி, கைதுகள் மீதான பற்றுச்சீட்டுப் பற்றிய விவகாரம் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான பாதுகாப்பை வழங்கும் எனக் கூறப்பட்டுள்ளது. அவசரகால ஒழுங்கு விதிகளின்படி மட்டக்களப்பில் பற்றுச்சீட்டு வழங்கப்படாமை தொடர்பாகச்

---

[7] HRTF, *Annual Report: 10 August 1993 to 10 August 1994; and Annual Report: 10 August 1992 to 10 August 1993*

[8] HRTF, *Annual Report: 10 August 1993 to 10 August 1994*, P 31

சுதந்திர மக்கள் அமைப்பு மேற்கொண்ட நடவடிக்கை சித்திரவதைத் தடுப்புச் சம்பந்தமாகச் சில விளைவுகளை ஏற்படுத்தியது. ஆயினும் வேறு இடங்களில் மிக மோசமான துஷ்பிரயோகங்கள் நிகழ்ந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1994 ஆடி மாதம் உன்னிச்சை என்னுமிடத்தில் 10 விவசாயிகள் கைது செய்யப்பட்டனர் என்ற விடயம் அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்களுள் இருவர் கடுங்காயங்களுக்கு உள்ளானார்கள். ஒருவருக்குக் கையிலும் மற்றவருக்குப் பெருவிரலிலும் காயங்கள் இருந்தன. முதுகில் சேர்த்துக் கட்டப்பட்ட விரல்களில் அவர்கள் தொங்க விடப்பட்டனர். அவர்கள் விடுதலை செய்யப்பட்டு இரண்டு நாட்களின் பின்னரே பற்றுச்சீட்டு வழங்கப்பட்டது.

விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் மாத்திரம் சித்திரவதைக்குள்ளாகின்றனர் எனக் கூறமுடியாது என கொகறெல்ல பொலிசாருக்கு எதிராக 1994 இல் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய வழக்கின் போது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.[9] 1994 வைகாசி மாதம் 13 ஆம் திகதி கொகறெல்ல பொலிசார் ஒரு களவு பற்றிய வாக்கு மூலத்தைப் பெறும் நோக்குடன் தன்னைக் காது செய்தனர் என டபிள்யூ.ஏ. ரஞ்சன் வீர சூரியா தெரிவித்தார். 1994 வைகாசி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் ஆனி 22 ஆம் திகதி வரை காவலில் வைக்கப்பட்ட பின்பு பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் கூறினார். அவருடைய கூற்றின்படி, தான் குண்டாந்தடியால் தாக்கப்பட்டதாகவும், கைவிலங்கு பூட்டப்பட்டு தூணில் கட்டி, உணர்வு இழக்கும்வரை அடித்தனர் எனவும், பின்னர் கைகள் இரண்டையும் முதுகிலே சேர்த்துக் கட்டி, அந்தரத்தில் தொங்கவிட்ட பின்னர், நெஞ்சிலும், தோள்களிலும் அடித்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. எரிந்துகொண்டிருக்கும் கரியையும், மிளகாய்த் தூளையும் முகத்தில் பிடித்த போது அவர் மீண்டும் உணர்வுகளை இழந்தார். மேலும் தனது அண்டவிதைகளில் அடிபட்டதாகவும் மலவாயிலூடாக ஏதோ ஒரு பொருள் செலுத்தப்பட்டது என்றும் கூறினார். அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட பின்னர் தனிப்பட்ட முறையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் தான் வேலையை இழந்து விட்டமையையும் அறிந்தார்.அவர் வழக்குத் தொடர்வதற்காக எச்.ஆர்.ரி.எவ். இன் உதவியைப் பெற்றார். இதன் விளைவு என்னவெனத் தெரியாது.

---

9 *Daily News*, 1 September 1994

1994 ஆம் ஆண்டு எச்.ஆர்.ரி.எவ். தனது அறிக்கையில், மேலே விபரிக்கப்பட்டது போன்ற தனிப்பட்ட சித்திரவதை பற்றிய விடயங்களைப் பதிந்து வைக்கவில்லை. ஆயினும், உடல் மற்றும் உளரீதியாக மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை முறைகள் பற்றிய பட்டியலை பின்னிணைப்பு 14 இல் வழங்கியுள்ளது. இப் பட்டியல் உடல்ரீதியான சித்திரவதை பற்றிய 12 முறைகளைக் கூறுகிறது. அவையாவன: பாதங்களின் உட்புறம் முழுவதிலும் அடித்தல், கைகளில் கட்டித் தொங்கவிடல்; பாதங்களையும், முழங்கைகளையும் திருகிய நிலையில் வைத்துக்கொண்டு அடித்தல்; சுடுதல்; ஓரளவு மூச்சுத் திணறும்வரை தலையை நீரினுள் அமிழ்த்துதல்; பெற்றோல் நனைக்கப்பட்ட பிளாஸ்ரிக் பைகளால் தலையை மூடுதல்; கட்டாயப்படுத்தி நீண்டநேரம் நிற்க விடுதல்; மின்சார மற்றும் பிற பொருட்களால் தாக்குதல்; கற்பழிப்பு, பெண்ணுறுப்பினுள் போத்தலின் மேற் பகுதியைச் செலுத்துதல்; பற்களில் சித்திரவதை செய்தல்; இரண்டு காதுகளையும் ஒரேநேரத்தில் தாக்குதல்; ஆணுறுப்பில் அடித்தல் முதலியன. உளரீதியான சித்திரவதையில் 7 முறைகள் பிரயோகிக்கப்படுகின்றன. தொடர்ந்து கேள்விகளைக் கேட்டல், ஏனையோர் சித்திரவதை செய்யப்படுவதைப் பார்த்தல், சிறிய இருட்டறையில் தனிமையாக இருக்க விடுதல், பயமுறுத்தல், தூங்கவிடாமல் தடுத்தல் போன்றன அவற்றுட் சிலவாகும்.

1994 ஆம் ஆண்டு மாதாந்த அறிக்கையில், இவ்வாண்டில் இருபதுக்கு மேற்பட்ட அடிப்படையுரிமை பற்றிய மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அம் மனுக்களைச் செய்தோர் தாம் தாக்குதலுக்கு ஆளானமை, கொடூரங்களுக்கு உட்பட்டமை, கௌரவத்தை இழக்கும் வகையில் நடத்தப்பட்டமை, அன்றேல் சித்திரவதைக்கு ஆளானமை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய முறைப்பாடுகள் யாவும் தென்பகுதிப் பொலிசாருக்கு எதிரானவையாகும். இவற்றுள் ஒன்று, பூசா இராணுவத்தடுப்பு முகாமில் நிகழ்ந்தது. இவை பற்றிய வழக்குகள் பல இவ்வருட இறுதியிலேயே முடிவு செய்யப்படவுள்ளன.

4. காணாமற் போதல்

காணாமற் போனவர் யார் என்பது வரைவிலக்கணரீதியாகத் தெரியாது. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களே காணாமற் போனவர்கள் என நம்பப்படுகிறது. ஆயினும் அவர்களைக் காவலில் வைத்துள்ளமை பற்றி

அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இறுதியில் அவர்கள் எங்கேயுள்ளனர் எனத் தெரியாது. காணாமற் போதல் மனித உரிமை மீறலுடன் தொடர்புடையது. சட்டத்தின் முன் மனிதனாக அங்கீகரிக்கப்படும் உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு, சித்திரவதையிலிருந்து விடுபடும் உரிமை மற்றும் வாழும் உரிமை எனபவற்றை இது உள்ளடக்கும்.[10] வலியுறுத்தலின் பேரில் சகலரும் காணாமற் போதலைத் தடுக்கும் ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் 7 ஆவது உறுப்புரை, காணாமல் போதலுக்கு எச்சூழ்நிலையிலும் போதிய காரணங்கள் காட்ட முடியாது எனத் தெரிவிக்கிறது. சித்திரவதை, கொடுமையாகக் கைது செய்தல், தடுத்து வைத்தல், நீதியான விசாரணை ஏற்பாடுகள், சிறைக் கைதிகளைப் பாதுகாத்தல் பற்றிய ஏற்பாடுகள், சிறைக் கூடங்களை நிருவகித்தல் என்பன யாவும் இலங்கைச் சட்டத்தில் காணாமல் போதலைத் தடுத்தல் தொடர்பானவை.

இலங்கையிலே காணாமல் போதல் பெருமளவில் இடம்பெற்றுள்ளன. இது பற்றிய சரியான தொகையைக் கூறுதல் கடினமானது. இத்தொகை பத்தாயிரமளவில் இருக்கலாம் எனப் பரவலாக நம்பப்படுகிறது. 1984 இல் வடக்கு, கிழக்கில் ஆரம்பித்த இவ்விடயம், தெற்கில் 1988, 1989 இல் கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகளால் பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் போயினர். மீண்டும் 1990 ஆனி மாதத்தில் வடக்கு, கிழக்கில் ஆரம்பித்த போரினால், முதல் மாதத்தில் மேலும் ஆயிரக்கணக்கில் காணாமல் போயினர்.

நீண்ட காலமாகக் காணாமல் போவோர் தொகை கணிசமான அளவில் குறைந்த போதிலும், காணாமல் போதலுக்கு வழிகோலும் சந்தர்ப்பங்கள் அகற்றப்படவில்லை. பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலொழிய காணாமற் போகும் செயல் தொடர்ந்து நிகழவே செய்யும். அறிவிப்பில்லாமல் தடுத்து வைத்தல் (காணாமற் போதலின் தற்காலிக வடிவம்) கிழக்கில் நிகழ்வதாகத் தொடர்ந்தும் அறிவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிச் சில நேரங்களில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னரே தெரிய வருகின்றது. மேலே குறிப்பிட்டது போல, அறிவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்படும் காலம்

[10] See Article 1(2) of the UN Declaration on the protection of all persons from Enforced Disappearances (adopted by the UN General Assembly in December 1992)

தடுத்து வைக்கப்படுபவருக்கு அச்சம் தருவதாக இருக்கும். சித்திரவதையும், காணாமற் போதலும் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமானால், அதன் ஆரம்பக் கட்டத்தில் தடுப்புக் காவலில் உள்ளோரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது இன்றியமையாதது. இது தொடர்பாக கைது செய்தல், தடுத்து வைத்தல், மற்றும் பி.ரி.ஏ. பற்றிய அவசரகால ஒழுங்கு விதிகள் காணாமற் போதல் மற்றும் சித்திரவதை என்பவற்றுக்கு எதிராகச் சரியான பாதுகாப்பை வழங்கும் விதத்தில் திருத்தியமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.[11] அத்தகைய பாதுகாப்புகள், அவசரகால ஒழுங்கு விதிகள், மற்றும் பி.ரி.ஏ யின் கீழ் ஒருவரைத் தடுத்து வைப்பதற்கான மிகக் குறைந்த நிபந்தனைகள் பற்றிய ஏற்பாடுகள் எவையெனத் தற்பொழுது கூறப்படவில்லை. அவசரகால ஒழுங்கு விதிகள் மற்றும் பி.ரி.ஏ. யின் படி கைது அல்லது தடுத்து வைத்தலைத் தொடர்ந்து, அவற்றைப் பற்றி அறிவித்தலுக்கான தேவைகளைப் பலப்படுத்துதல், தடுத்து வைக்கப்பட்டோரின் நலன்களைப் பேணும் பொறுப்பு சுதந்திர அமைப்பொன்றுக்கு ஒப்படைக்கப்படல், இவற்றைப் புலனாய்வு செய்வதற்கு முழுமையான அதிகாரமளிக்கப்படல் என்பவற்றை உள்ளடக்க வேண்டும். அறிவித்தலின்றித் தடுத்து வைத்தல் பற்றிப் புலனாய்வு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். ஒழுங்கு விதிகளை மீறியமை காணாமல் போதலுக்கு வழிகோலுமாயின் அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்கப்படல் வேண்டும்.

எதிர்காலத்தில் காணாமற் போதலைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுக்க முனைந்தால் காணாமல் போனோரின் பல்லாயிரக் கணக்கான உறவினர்க்கும் அத்தகைய திருத்தங்கள் பற்றி அறிவிக்க வேண்டும். ஆயினும், தடுத்தல் மற்றும் திருத்தம் செய்தல் ஆகிய இரண்டும் ஒன்றுடனொன்று தொடர்பானவை. காணாமற் போதல், மனக்கசப்பை உண்டு பண்ணக்கூடிய மனித உரிமை மீறலாகும். ஏனெனில் அவற்றின் வஞ்சகத்தனமும் மற்றும் வரைவிலக்கண ரீதியாக அவர்கள் இழைக்கும் குற்றங்களும், உத்தியோகபூர்வமாக மறுக்கப்பட்டுள்ளது. இவை யாவும் முழுமையாகப் புலனாய்வு செய்யப்பட்டபின் அவற்றின் முடிவுகளைப் பகிரங்கப்படுத்தி உத்தியோகபூர்வமாக அறிவிக்கவேண்டும். அத்தகைய செயல்கள் மீண்டும் சகிக்க முடியாதவை என்பதுடன், சர்வதேச மனித

---

11 கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் என்பவற்றுக்கான அவசரகால ஏற்பாடுகள், அவசரகால விதிகள் பற்றிய அத்தியாயம் 3 இல் மிக விரிவாக விவரிக்கப்படுகின்றது

உரிமைகளின் படி, அதற்குப் பொறுப்பானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். இவ்விவகாரங்கள் பற்றி மேலும் 6 ஆம், 7 ஆம் அத்தியாயங்களில் கடந்த கால மீறல்கள் மற்றும் தண்டனை யிலிருந்து விலக்களித்தல் என்னும் விடயத்தில் கலந்துரையாடப்படுகிறது.

கடந்த காலங்களில் காணாமற் போனமை பற்றிய சில திருத்தங்களை வழங்க 1994 இல் இரண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முதலாவதாக, கார்த்திகை மாதம் 25 இல் இறப்புகளைப் பதிவுசெய்தல் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (தற்காலிக ஏற்பாடாக) இதன்படி, ஒருவர் காணாமல் போனால், இறந்துவிட்டால் அல்லது ஒரு வருடத்துக்கு மேலாக அவரைப்பற்றிய தகவல்கள் எவையும் இல்லை என அறிந்தால் அவருடைய நெருங்கிய உறவினர், அத்தகைய நபரின் இறப்பைப் பதிவு செய்யுமாறு மாவட்ட இறப்புப் பதிவாளருக்கு விண்ணப்பிப்பதுடன், இறப்பு அத்தாட்சிப் பத்திரம் வாங்குமாறும் கோரலாம். இவ்வாறான ஒரு விண்ணப்பப் பத்திரத்தைப் பெறும்போது, மாவட்டப் பதிவாளர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவையெனச் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. காணாமற் போனவரின் இறப்பினைப் பதிவு செய்யும் விண்ணப்படிவம் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இது எளிமையானதும் எவ்வித சிக்கலும் அற்றது. அதில் கூறப்பட்ட அமைப்புகளின்படி, காணாமற் போன நபரொருவரின் குடும்ப உறுப்பினர் இறப்பினைப் பதிவுசெய்ய முடியும். அத்துடன் நிவாரணம் மற்றும் ஒய்வூதியக் கொடுப்பனவுகள் பெறவும் தகுதியுடையவர் என்பதும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இதன் விளைவாக 1994 கார்த்திகை மாதத்தில் ஆட்கள் காணாமற் போதல் மற்றும் தன் விருப்பற்ற முறையில் அகற்றப்படுதல் பற்றிய புலன்விசாரணையை மேற்கொள்ள 1988 தை மாதம் 1 தொடக்கம் மூன்று சனாதிபதி ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவர்களுடைய பணிகள் 1995 தை மாதத்தில் நடைபெற்றன. ஒவ்வொரு ஆணைக்குழுவுக்கும் குறிப்பிட்ட புவியியற் பிரதேசங்கள் ஒதுக்கப்பட்டன. ஓர் ஆணைக்குழு மேல்மாகாணம் தென்மாகாணம் சப்பிரகமுவ மாகாணம் ஆகியவற்றையும் இன்னொன்று மத்திய, வடமேற்கு வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களையும், மூன்றாவது குழு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களையும் பொறுப்பேற்றன. இந்த ஆணைக்குழுக்கள் யாவும் தமது ஆய்வுகள் பற்றிய அறிக்கையை நான்கு மாதங்களுக்குள் சனாதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டன. அவர்களுடைய ஆணையில் இருந்த ஒரு குறைபாடு என்னவெனில்,

1988க்கு முன்னர் இடம்பெற்ற காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை செய்ய முடியவில்லை. எதிர்க்கிளர்ச்சி நடவடிக்கையினால் 1984 இல் காணாமற் போதல் குற்றங்கள் ஆரம்பித்தன. எனினும் இந்தத் திகதிக்கு முன்னரும் சில விடயங்கள் நிகழ்ந்துள்ளன.[12] ஆணைக்குழுக்களின் பணிபற்றி ஆறாம் அத்தியாயத்தில் இன்னும் விபரமாகக் கலந்துரையாடப்படும்.

காணாமற் போதல் பற்றிய இன்னொரு விசாரணைக் குழுவின் பணி 1994 ஆம் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து இடம்பெற்றது. விருப்பத்திற்கு மாறாக ஆட்களைக் கொண்டு செல்லல் பற்றி விசாரணை செய்ய 1991 தை மாதத்தில் சனாதிபதி பிரேமதாச ஒரு சனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தார். இக்குழுவுக்குக் காணாமல் போனோர் பற்றிப் புலன்விசாரணை செய்யும் அதிகாரம் 1991 தை மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டது. ஆணைக்குழு நியமிக்கப்பட முன்பே பெருந்தொகையான காணாமல்போதல்கள் நிகழ்ந்துள்ளன. இவை கவனத்திற் கொள்ளப்பட்வில்லை.[13] இவ் ஆணைக்குழுவின் சட்டவுரிமைகள் காலாகாலம் நீடிக்கப்பட்டன. இதன் காலம் 1995 ஆவணி 22 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதினால் தனது ஆய்வு பற்றிய இறுதி அறிக்கையை இது விரைவில் சமர்ப்பிக்கவுள்ளது. காணாமல் போதல் பற்றிய புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று விசாரணை ஆணைக் குழுக்களுக்கும் பி.சி.ஐ.ஐ.ஆர்.பி க்கும் இடையேயுள்ள தொடர்புகள் அரசாங்கத்தினால் இனங்காணப்படவில்லை. ஆயினும், அவர்களுடைய சட்டவுரிமைகளில் ஒத்ததன்மைகளும் காணப்பட்டன. கீழேயுள்ள தகவல்கள் சுட்டிக் காட்டுவது போல, பி.சி.ஐ.ஐ.ஆர்.பி ஆனது ஏற்கனவே முன்நூறுக்கு மேற்பட்ட காணாமல் போதல் பற்றிப் புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் 142 தனிப்பட்ட விடயங்கள் பற்றிய அறிக்கைகளை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கைகள் வெளியிடப்படவில்லை. எனினும் அவை புதிதாக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது திரும்பவும் ஒரே பணியைச் செய்தலைத் தவிர்க்க உதவும் எனலாம். பி.சி.ஐ.ஐ.ஆர்.பி. இனால் ஏற்கனவே புலன்விசாரணை செய்யப்பட்ட

---

12 See CRM, *Commissions to Investigate "Disappearances"* E 01/11/94, 28 November 1994

13 See AI, *Sri Lanka: Time for truth and Justice* - Observations and recommendations regarding the commissions investigating post human rights violations (AI Index: ASA 37/04/95, London, April 1995). The figures on the PCIIRP's work are drawn from this document.

ஏனைய விடயங்கள் பற்றிய விபரங்களும் புதிய ஆணைக்குழுவுக்கு இதே நோக்கத்திற்காக வழங்கப்படவுள்ளன.

பி.சி.ஐ.ஐ.ஆர்.பி. 1995 மாசி மாதத்தில் சர்வதேச மன்னிப்புச் சபைக்குச் சமர்ப்பித்த தகவலின்படி, ஆணைக்குழுவானது தனது நான்கு வருட காலப்பகுதியில் 316 பொது விசாரணைகளைப் பூர்த்தி செய்ததுடன், மேலும் காணாமல் போதல் பற்றிய 341 விசாரணைகளை மேற்கொண்டும் வருகின்றது. ஆணைக்குழு, காணாமற் போனவர் என அறிவிக்கப்பட்டுள்ள 175 ஆட்கள் பற்றிய தடயங்களையும் கண்டுபிடித்துள்ளது. இவை பூர்த்தி செய்யப்பட்ட 316 விடயங்களுக்கு மேலதிகமானவை. இந்த 316 விடயங்களில் ஏறக்குறைய 100 தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆயினும் அவை கைவிடப்படவில்லை. சாட்சியமளிப்பதற்குச் சாட்சிகள் வரவில்லை. வடக்குக் கிழக்கிலுள்ள பாதுகாப்பு நிலைமை காரணமாக அவர்களால் அடிக்கடி கொழும்புக்கு வரமுடியவிலை. 1993 ஆவணியில் ஆணைக்குழுவின் நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் அண்மைக்காலத்தில் பாதுகாப்பு படையினரிடமிருந்து கிடைத்த அதிகரித்த ஒத்துழைப்பு என்பன குறிப்பிடத்தக்களவில் புலன் விசாரணைகளைத் துரிதப்படுத்த வழிகோலின. அதனுடைய முதலாவது வருடத்தில் உதாரணமாக 11 வழக்குகளை மட்டுமே விசாரணை செய்து முடித்தது.

காணாமற் போனோர் பற்றிய தனிப்பட்ட வழக்குகளில் ஆகக் குறைந்தது 142 வழக்குகள் பற்றிய முடிவுகளை அடுத்தடுத்து வந்த சனாதிபதிகளுக்கு ஆணைக்குழு சமர்ப்பித்தது. ஆனால் இவற்றுள் எவையும் வெளியிடப்படவில்லை. பதிலாக பிரேமதாச அரசாங்கம் முதல்தொகுதி அறிக்கைகளை வெளியிடும் என்ற கூற்று பாராளுமன்றக் கூட்டத்தொடர் பருவப் பத்திரமாக பெறப்பட்டுள்ளது.

4.1 காணாமற் போனோர் பற்றிய அறிக்கைகள்

கடந்த ஒரு சில வருடங்களாகக் காணாமற் போதல் வெகுவாகக் குறைந்துள்ளது. 1994 இல் ஒப்பீட்டளவில் ஒரு சிலவே கிழக்கிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக 1994 மாசியில் மட்டக்களப்புக்கு அருகேயுள்ள தாளங்குடாவில் எஸ்.ரி.எவ் இனால் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மட்டக்களப்புச் சமாதானக் குழு முயற்சி செய்தாலும் அவர்கள் இருவரும் முக மூடியணிந்த ஆட்களால் கூட்டிச் செல்லப்பட்டனர் எனக் கைது செய்யப்பட்ட நான்கு மாதங்களின் பின்னரே அதிகாரிகளிடமிருந்து

பதில் கிடைத்தது. அவர்கள் யாரென இனங்காணப்படவில்லை. ஆயினும், அவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு எஸ்.ரி.எவ் உறுப்பினர்களின் சாட்சியங்கள் உள்ளது.

1993 ஆம் ஆண்டின் இறுதியில் ஐந்து பேர் அடங்கிய ஒரு குழுவினர் (13 வயதுப் பிள்ளையுட்பட) முள்ளிவெட்டுவான் இராணுவ முகாமிலிருந்து வந்த படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போயினர்.[14] அவர்கள் கைதுசெய்யப்பட்டமைக்கான ரசீது எதுவும் வழங்கப்படவில்லை. அவர்கள் கைது செய்யப்பட்டபோது குடாவடக்காடு என்ற இடத்திலுள்ள வயலில் வேலை செய்து கொண்டிருந்தனர். முள்ளிவெட்டுவான் இராணுவ முகாம்களைச் சேர்ந்த கமாண்டோக்கள் கைது செய்தமையை மறுத்தனர். எனினும் 1994 மார்கழி 29 இல் கைதுசெய்யப்பட்ட இன்னொரு குழுவினரைக் குறிப்பிட்டு, அதற்கான ரசீது வழங்கப்பட்டதாக எச்.ஆர்.ரி.எவ். கூறியது. எச்.ஆர்.ரி.எவ் இன் படி, 24.12.1993 இல் முள்ளிவெட்டுவான் இராணுவ முகாமிலுள்ள படையினரின் பாதுகாப்பில் கூட்டிச் செல்லப்பட்ட ஐந்துபேர் இன்றுவரை காணாமற் போயுள்ளனர். இவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இது பற்றிய முறையான புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் வெளிக்கொணரப்பட வேண்டும்.

எல்.ரி.ரி.ஈ. இனரால் தடுத்து வைக்கப்படும் கைதிகளும் காணாமற் போகின்றனரெனினும் அவர்கள் பற்றிய தகவல்களை அரசியல் நோக்கங்களுக்காகத் தரமறுக்கின்றனர். 1991 ஆவணியில் எல்.ரி.ரி.ஈ.இனரால் தடுத்து வைக்கப்பட்ட செல்வி மற்றும் மனோகரன் ஆகியோரின் விடயம் குறிப்பிடத்தக்கது. சில சமயங்களில் இவை பற்றிய முரண்பட்ட தகவல்களும் பரப்பப்படுகின்றன. 1993 மார்கழியில் "கவுண்டபொயின்ட" சஞ்சிகையில் அவர்கள் இருவரும் பாதுகாப்பாக உள்ளனர் என அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தாலும் ஏனைய தகவல்களின்படி அவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது. அதே போல் இறந்துவிட்டதாகக் கூறப்படும் சிறைக் கைதிகளும் உயிரோடு இருக்கலாம்.

1994 ஆம் ஆண்டில் எல்.ரி.ரி.ஈ. யினர் பெருந்தொகையானோரைத் தடுத்து வைக்கவில்லை எனத் தெரியவந்தாலும் இவ்வருட இறுதிப்பகுதியில் கட்டாயத்தின் பேரில் பலரைக் கடத்திச் சென்றதாக அறிக்கைகள் கூறுகின்றன.

---

[14] HRTF, *Annual Report: 10 August 1993 - 10 August 1994*, P 22

5. கட்டுப்பாடற்ற கைதுகளும் தடுத்து வைத்தலும்

கட்டுப்பாடற்ற முறையில் கைது செய்யப்படுதல் மற்றும் தடுத்து வைத்தல் என்பவற்றை ஐ.சி.சி.பி.ஆர் இன் உறுப்புரை 9 தடைசெய்கின்றது. இவ்வுரிமையில் இருந்து விலகி நிற்றல் பொதுவாக விதிக்கப்படும் அவசரகால நிலைமைகளின் போது ஏற்படலாம் என உறுப்புரை 4 தெரிவிக்கிறது. இக்காலத்தில் மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தல்கள் இருந்தன. இத்தகைய நெருக்கடி நிலைமையில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட வேண்டிய தேவையுண்டு. இலங்கை அரசியலமைப்பின் படி 13 (1) உறுப்புரையின் கீழ் கட்டுபாடற்ற முறையில் கைது செய்தலிலிருந்து விடுபடுதலுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. சட்டத்தில் கொடுக்கப்பட்ட ஒழுங்கு முறைகளுக்கு அமையவே ஒருவருடைய சுதந்திரத்துக்குப் பங்கம் ஏற்படலாம் என அது குறிப்பிடுகிறது. மற்றும் ஒவ்வொரு கைதுக்குமான காரணம் கைது செய்யப்பட்டவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற உரிமையுமுண்டு. ஆயினும் அரசியலமைப்பின் 15 (7) ஆம் உறுப்புரை, ஐ.சி.சி.பி.ஆர் இல் குறிப்பிடப்பட்டவற்றிலும் பார்க்க பரந்த கட்டுப்பாடுகளை இவ்வுரிமை பற்றி விதித்துள்ளது. தேசிய பாதுகாப்பு நலன், பொதுவொழுங்கு, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் ஆகியன கருதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். 13 (5) ஆம் உறுப்புரையின் படி கூறப்படும் குற்றமின்மை எனும் உத்தேசம் 13 (6) ஆம் உறுப்புரையில் கூறப்பட்ட கடந்தகால தண்டனைச் சட்டங்களைத் தடைசெய்தல் ஆகிய இரண்டினையும் 15 (1) ஆம் உறுப்புரையின் படி தேசியப் பாதுகாப்புக் கருதிக் கட்டுப்படுத்தலாம்.

கட்டுப்பாட்டற்ற முறையில் கைது செய்யப்படுதல் மற்றும் தடுத்து வைக்கப்படுதல் என்பவற்றிலிருந்து விடுபடும் உரிமை பி.ரி.ஏ. இலும் அவசரகால ஒழுங்கு விதிகளிலும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல் பற்றிய பி.ரி.ஏ. இன் ஏற்பாடுகள் **இலங்கை: மனித உரிமைகள் பற்றிய நிலை 1993** இல் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவை மீண்டும் இங்கே கூறப்படவில்லை. பி.ரி.ஏ. இல் உள்ளடக்கப்பட்டுள்ள பல ஏற்பாடுகள் ஐ.சி.சி.பி.ஆர் மற்றும் ஐ.நா. அமைப்புக் கோட்பாடுகளுடன் முரண்பட்டுள்ளன. ஐ.நா. கோட்பாடுகள் எவ்வகையிலும் இடம் பெறக் கூடிய தடுத்துவைத்தல் மற்றும் சிறையில் வைத்தல் ஆகியவற்றிலிருந்து சகல ஆட்களுக்கும் பாதுகாப்பு வழங்குகிறது. அவை கடந்த கால நிகழ்ச்சிகளின் விளைவு களையும் தடுத்து வைக்கப்படும் காலம், அதற்கான நிபந்தனைகள்

பற்றிய ஏற்பாடுகள், தடுத்து வைத்தற்கான சட்டரீதியான பாதுகாப்புகள் இன்மை, பொலிஸ் அதிகாரிகளுக்குச் செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றிய வழமையான சட்டங்களில் மாற்றம், வற்புறுத்தலின் கீழ் பெறப்பட்ட வாக்கு மூலங்களை நிரூபித்தல் பற்றிய சுமை ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றன.

அவசரகால ஒழுங்கு விதிகளுக்கு அமையக் கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தலுக்கான நடைமுறைகள் 1994 இல் மாற்றங்களுக்குள்ளாயின. இம் மாற்றங்கள் பற்றி அவசரகால ஆட்சி என்ற மூன்றாம் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ளன. காலவரையறையின்றித் தடுத்துவைத்தல் 17 ஆம் ஒழுங்கு விதியின்படி சாத்தியமானதாயினும், புதிய விதிகளும், தடுத்து வைத்தல் பற்றிய தகுந்த கண்ணோட்டங்களை வழங்கவில்லை. உண்மையிலே, தடுப்புக்காவலில் உள்ளவர்கள், தடுத்துவைக்கப்பட்ட காலத்தின் முதலாவது வருடத்தில் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற தேவை ஒன்றும் இல்லை.[15] அவ்வருட முடிவில் நீதிபதியின் முன்னர் கொண்டுவரப்படும் வேளையிலும் நீதிபதியின் கடமைகள் சில வரம்புகளுக்குட்பட்டதாகவேயுள்ளன.

18 ஆவது ஒழுங்கு விதியின்படி, குற்றமிழைத்தார் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்கள், வெவ்வேறு ஏற்பாடுகளுக்கு உட்பட வேண்டியவர்களாகின்றனர். இவை அவசரகால நிலைமை நடைமுறையிலுள்ள வெவ்வேறு பிரதேசங்களுக்கு ஏற்பப் பிரயோகிக்கப்படும். 18 ஆவது ஒழுங்கு விதியின்படி ஒருவர் கைது செய்யப்படும் போது அதற்குப் பற்றுச்சீட்டு வழங்கப்படவேண்டும். (17ஆவது உறுப்புரையின்படி தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு அது அவசியமில்லை) இது பயன்தரக்கூடிய பாதுகாப்பாக இருந்தாலும் கைதுகள் எச்.ஆர்.ரி.எவ் க்கு அறிவிக்கப்படவேண்டும் என்ற வேண்டுகோள் 1994 புரட்டாதி மாதம் கைவிடப்பட்டமை ஒரு முக்கியமான விடயமாகும். இன்னொரு முக்கிய அம்சமாக, புலனாய்வுகளுக்கு நீண்டகாலமாகத் தடுத்து வைத்தல் வடக்குக், கிழக்கில் இன்னமும் இடம் பெறுகின்றது. (60 நாட்கள் வரையாகக் காணப்படுவதுடன், தென்பகுதியில் அவசரகால

---

15 See Nadesan Centre Legal Briefing, Arrest and Detention under the Current Emergency Regulations: a descriptive account of the provisions relating to arrest and detention under the Emergency (Miscellaneous Provisions and Powers) Regulations No. 4 of 1994 published in Gazette Extraordinary No. 843/12 of 4 November 1994 (Colombo, April 1995)

நிலைமை அமுலிலிருக்கும் பிரதேசங்களில் இது ஏழு நாட்களாகவே உள்ளது) அவ்வாறான தடுத்து வைத்தல், பொலிசில் அல்லது இராணுவத்தினரின் பாதுகாப்பில் இருக்கலாம். அப்பொழுது சிறையில் வைக்கப்பட்டவர் பெருமளவு துஷ்பிரயோகத்துக்கு உட்படக்கூடிய ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இக்காலகட்டத்தின் இறுதியில், தடுத்து வைக்கப்படும் முன்பு, 17 ஆம் ஒழுங்கு விதியின் படி, தடுப்புக்காவல் என்ற வகையில் மாற்றப்படலாம். அல்லாவிடில், சிறையில் வைக்கப்பட்டவரை விடுதலை செய்ய வேண்டும் அல்லது நீதிமன்றத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஆயினும் நீதிமன்றத்தின் அதிகாரங்களும் வரையறைக்கு உட்பட்டவை. அது சிறைக்காவல் பாதுகாப்பில் வைக்கும்படி உத்தரவிடலாம். அங்கே அவன் அல்லது அவள் மூன்று மாதங்களுக்கு இருக்க வேண்டும். சட்டதரணி ஒருவரின் எழுத்துமூல முன்னனுமதியின்றி அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்கலாம். அதன்பின்னர் குறிப்பிட்ட பிணையில் விடும் நடைமுறைகள் பின்பற்றப்படும்.

பொதுசனஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தபோது, சட்டத்துக்கு முரணாக மற்றும் கட்டுப்பாடற்ற கைதுகள், தடுத்து வைத்தல் போன்ற பிரச்சினைகளை இனங்கண்டுள்ளது. புரட்டாதி மாதத்தில் இது விசாரணைக் குழுவொன்றை நீதிபதி சூஸாவின் தலைமையில் நியமித்தது. இது தடுத்து வைக்கப்பட்டோரின் வழக்குகளை மீளாய்வு செய்யவென நியமிக்கப்பட்டது. சிறிய குற்றங்களுக்கான தகவல்களைப் பெறும் பொருட்டு விசாரணை செய்யப்படாமல் இருப்போருக்கு எதிரான தண்டனைகள் நீக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. நீதியமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அவர்களும் அவசரகால ஒழுங்கு விதிகளின்படி, பொலிசாருக்கு ஒப்புதல் செய்தி அடிப்படையில் அவர்களை விடுதலை செய்தல் கவனத்திற்கு எடுக்கப்படும் என்றார். ஆயினும் அத்தகைய ஒப்புதல்கள், சாதாரண சட்டத்தில் இடம்பெறக் கூடியவையன்று. அக்காலத்தில் ஏறக்குறைய 800 பேர் தடுப்புக் காவலில் இருந்ததாகக் கூறப்படுகிறது.[16]

ஐப்பசி மாதத்தில் வெளிவந்த ஆணைக்குழுவின் இடைக்கால ஒழுங்கு விதிகளுக்கமைய சிறு குற்றங்களைப் புரிந்தோர் எனக் கருதப்படும் 275 பேர் விடுதலை செய்யப்பட்டனர். தடுத்து வைக்கப்பட்ட 75 பேருக்கு எதிரான உயர்நீதிமன்றத்தின் குற்றச்சாட்டுக்களும் மீளப்பெறப்பட்டன.[17]

---

16 *The Island*, 2 September 1994 and 17 September 1994
17 INFORM, *Situation Report* - October 1994

1995 இல் தனது பணியை நிறைவு செய்த போது, தடுப்புக்காவலில் இருந்த மேலும் 181 பேரை விடுதலை செய்யவேண்டும் என குழு சிபார்சு செய்தது.

5.1 கட்டுப்பாடற்ற கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் பற்றிய அறிக்கைகள்

ஒரு காலப்பகுதியில் தடுத்து வைக்கப்படும் ஆட்களின் தொகை கணிசமான அளவில் வேறுபடும். மற்றும் இதுபற்றிய சரியான தொகையைக் குறித்த திகதியில் தீர்மானித்தல் கடினமானது. 1993 புரட்டாதி தொடக்கம் 1994 ஆடி மாதம் வரையுள்ள காலப் பகுதியில் எச்.ஆர்.ரி.எவ். பல தடவை தடுப்பு முகாம்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும், எஸ்.ரி.எவ். முகாம்களுக்கும் மற்றும் இராணுவ முகாம்களுக்கும் சென்றது.[18] மொத்தமாக 3,980 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்றும், அவர்களுள் 646 பேர் முகாம்களிலும் 2,291 பேர் பொலிஸ் மற்றும் எஸ்.ரி.எவ். இன் பாதுகாப்பிலும் 1,043 பேர் இராணுவத்தினரின் பாதுகாப்பிலும் இருந்தனர் எனக் கூறியது.[19] ஆயினும் இத்தகைய புள்ளிவிபரங்கள் அக் காலப்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோர் பற்றிய உண்மையான தொகையைக் குறிப்பிடவில்லை. 1994 மார்கழியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரின் எண்ணிக்கை 500 என எச்.ஆர்.ரி.எவ். கணக்கிட்டது. 1993 இன் இறுதியில் ஏறக்குறை 2,000 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என எண்ணத் தோன்றுகிறது.

கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் பற்றிய நடைமுறைகளில் எண்ணற்ற மீறல்கள் இருந்துள்ளதாக சட்டவறிஞர்கள் தெரிவித்துள்ளனர். உதாரணமாக, கைது செய்யப்பட்டோர் பலர் என்ன காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டனர் எனக் கூறப்படவில்லை. முறைப்படி கைது செய்யப்படாமலே பாதுகாவலில் வைக்கப்படலாம். அதேவேளையில் அவர்களுடைய கைதுகளை நியாயப்படுத்தப் போதிய சான்றுகளைப் பொலிசார் தேடலாம். பின்னர் பிந்திய ஒரு திகதியில் கைது நிகழ்ந்ததாக அவர்கள் பதிவுகளை மேற்கொள்வர்.

---

[18] Interview with the HRTF Director, claude Alvis

[19] HRTF, *Annual Report: 10 August 1993 to 10 August 1994*, Annex 9

மனித உரிமைகளுக்கான நடேசன் நிலையம் 1994 ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழான தடுத்து வைத்தல்கள் சட்டத்துக்கு முரணானவை எனச் சுட்டிக்காட்டியது.[20]

அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் 17 (4) ஆம் விதியின் படி தடுத்து வைக்கப்பட்டோர், பாதுகாப்புச் செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட இடங்களிலேயே வைக்கப்பட வேண்டும். அதுபற்றிய பட்டியல் வெளியிடப்பட வேண்டும். அவ்வாறான பட்டியல் அதிகாரமளிக்கப்பட்ட 81 இடங்களைக் கொண்டுள்ளது. (பொலிஸ் நிலையங்கள் அல்லது இராணுவக் காரியாலயங்கள்) அப்பட்டியல் 1994 மார்கழி 26 ஆம் திகதி 851/ 7 இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. ஆவணி மாதத்திலிருந்து வழங்கப்பட்ட அறிவித்தல் எவற்றையும் நடேசன் நிலையத்தினரால் அறியமுடியாத நிலையில், அவசரகால நிலைமை மார்கழி 15 இல் மீண்டும் அறிமுகமாயிற்று. ஆகவே இக்காலத்தில், சட்டரீதியாகத் தடுத்து வைக்கப்படும் இடங்கள் எவையென எவரும் குறிப்பிடவில்லை.

அறிவிக்கப்படாத தடுத்துவைப்புகள் 1994 இல் தொடர்ந்தும் நிகழ்ந்தன. 1994 ஆம் ஆண்டின் ஆவணி மாதமளவில் காணாமல் போனோர் என அறிவிக்கப்பட்ட 71 நபர்கள் பற்றி எச்.ஆர்.ரி.எவ் இனங்கண்டது. அவர்களுள் 41 பேர் 1994 இல் கைது செய்யப்பட்டனர். அவர்கள் எல்லோரும் பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. சில விடயங்களைக் கண்டறியச் சிலநாட்களே எடுத்தாலும் சில வாரக்கணக்கிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. பெரும்பாலானவர்கள் கிழக்கிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இருவர் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்திலும், இன்னொருவர் கொழும்பு சி.டி.பி. இலும் காணப்பட்டனர்.

1993 ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியிலும், 1994 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டனர்.[21] இவ்விதமான நடவடிக்கைகள் 1994 இல்

---

[20] Nadesan Centre, *Arrest and Detention under the current Emergency Regulations*, P 4

[21] See *Sri Lanka: State of Human Rights 1993*, P 40

குறைவடைந்தன. ஆனால் தெற்கிலே இடம் பெற்ற இத்தகைய கைதுகள் பற்றிய சரியான விபரங்கள் கிடைக்கவில்லை.

கொடூரமான முறையில் தடுத்து வைத்தல் பற்றிய ஒரு வழக்கில், அடிப்படை மனித உரிமை மனுதாக்கல் செய்யப்பட்டது.[22] இதில் ஐந்து தமிழர்கள் கொண்ட குழு சம்பந்தப்பட்டது. தனது குழந்தையைத் தாங்கிய 22 வயதுத் தாய் அவளுடைய தாயாருடன் - இவர்கள் 1994 மார்கழி மாதம் 29 ஆம் திகதி காலையில் தமது வழக்கறிஞரைப் பார்க்கச் சென்றபோது - கிருலச் சந்தியில் சாதாரண உடையிலிருந்த பொலிசார் ஒருவரால் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டனர். பின்னர் நாரஹேன்பிட்டியிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். வழக்கறிஞர் அவர்களை விடுவிக்க முயற்சித்த போதும் அடுத்த நாள் அவர்கள் பம்பலப்பிட்டிப் பொலிஸ் நிலையத்துக்குப் புலன் விசாரணைக்காக மாற்றப்பட்டனர். பின்னர் அவர்கள் நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் ஹல்வ்ஸ்ரோப்பிலுள்ள நீதவான் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நாரஹேன்பிட்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளின் பேரில் 1995 தை மாதம் 4ஆம் திகதிவரை காவலில் வைக்கப்பட்டனர். நீதிபதி அவர்களை தை மாதத்தில் பிணையில் செல்ல அனுமதித்தார். இளம் பெண்ணைக் கைது செய்தமைக்கான காரணம் கொடுக்கப்படவில்லை. அவரது சார்பிலேயே அடிப்படை மனித உரிமைகள் மனுதாக்கல் செய்யப்பட்டது.

கொடூரமான முறையிலான கைதுகள் குறைந்து சென்றனவாயினும் சட்டத்துக்கு முரணான அத்தகைய நடைமுறைகள் "பணயக்" கைதுகளாகப் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டன என்ற விடயத்தை எடுத்துக்காட்டும் ஒரு வழக்கு எச்.ஆர்.ரி.எவ் இன் 1994 ஆம் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 1994 வைகாசி மாதம் 26 ஆம் திகதி சொர்ணலிங்கம் என்னும் ஒருவரைத் தேடிப் பேலியகொடப் பொலிசார் இரத்மலானையிலுள்ள ஒரு வீட்டுக்குச் சென்றனர். அவர் வீட்டில் இல்லாதபடியால், அவருடைய சகோதரன் பரமேஸ்வரனை சகோதரனுக்குப் பணயமாக விசாரணைக்காகக் கூட்டிச் சென்றனர். எச்.ஆர்.ரி.எவ் இன் உதவியுடன் பரமேஸ்வரன் விடுதலை செய்யப்பட்டார். சொர்ணலிங்கமும் இன்னொருவரும் பொலிசில் சரணடைந்தனர். அவர்களை விசாரணை செய்தபின் அவர்களுக்கு எதிரான மனுவில்

[22] Supreme Court Application No. 11/95

உண்மையில்லையென்ற முடிவுக்கு வந்த பொலிசார் அவர்களை விடுதலை செய்தனர். எச்.ஆர்.ரி.எவ் கூறியதுபோல "பணயமாகக் கொண்டு செல்லல் பெருங்கேடுவிளைவிக்கும் ஒரு செயல்; அது கண்டிக்கப்படவேண்டும். அது பொலீசாரின் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்வதாகும்."

வடக்கிலே எல்.ரி.ரி.ஈ. இனர் கைதிகளைத் தொடர்ந்து வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களைப் பற்றிய குறிப்பான தகவல்கள் இல்லை. எல்.ரி.ரி.ஈ. இனர் தமது தமிழ்க் கைதிகளை ஐ.சி.ஆர்.சி. பார்வையிட அனுமதிப்பதில்லை. எனினும் அவர்கள் வசம் இருக்கும் பொலிஸ் அலுவலர்களையும், இராணுவ வீரர்களையும் பார்வையிடலாம். 1994 புரட்டாதி மாதத்தில் புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், எல்.ரி.ரி.ஈ. 10 பொலிசாரை விடுதலை செய்தது. 19 பொலிசாரும் 21 இராணுவ வீரரும் எல்.ரி.ரி.ஈ. இனரின் கவனிப்பில் இருந்தனர். அவர்களுள் ஒருவர் தன்னைக் காற்றோட்டமில்லாத இருட்டறையில் வைத்திருந்தமையால் தனது கண்பார்வை பாதிப்படைந்தது எனக் கூறியுள்ளார்.[23]

6. நீதியான விசாரணை

ஐ.சி.சி.பி.ஆர் இன் 14 ஆவது உறுப்புரை "சட்டப்படி நீதியான விசாரணை செய்யக்கூடிய தகுதிவாய்ந்த சுதந்திரமான மற்றும் பக்கச்சார்பற்ற நீதிமன்றம் சட்டத்தினால் உருவாக்கப்படவும் குற்றமற்றவர் என்ற உத்தேசம் அளிக்கப்படவுமான உரிமையை வழங்குகின்றது" 14 (3) உறுப்புரையின் படி தடுத்து வைக்கப்பட்ட ஒருவர், அவ்வாறு செய்யப்பட்டமைக்கான காரணம் என்னவென, அவர் விளங்கக் கூடிய மொழியில் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும். மற்றும் எவ்வித தாமதமுமின்றி அவர்கள் கவனிக்கப்பட வேண்டும்.

வழக்கறிஞரின் உதவியை நாடல், அவர்களுடன் தொடர்பு கொள்ளல், பாதுகாப்பை ஏற்பாடு செய்தல், சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தல் போன்றவற்றை 14 (3)ஆம் உறுப்புரை எடுத்துக் காட்டுகிறது. 4 ஆம் உறுப்புரையின்படி, நீதியான விசாரணைக்கான உரிமை தேசியமட்டத்தில் அவசரகால நிலைமை உள்ளபோது கடைப்பிடிக்கப்

---

23 *The Island*, 4 September 1994

படுதல் குறைவு. ஆயினும் அதனை வலியுறுத்தும் தன்மை நிலைமையைப் பொறுத்து அமையும். ஐ.சி.சி.பி.ஆர் இன் 15 ஆம் உறுப்புரை, குற்றவியல் சட்டத்தின் மறுதலையான பிரயோகத்தைத் தடுக்கிறது. இத்தகைய ஏற்பாடுகளில் இருந்து விலக்குப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இலங்கை அரசியலமைப்பின் 106 ஆம் உறுப்புரை சகல நீதிமன்ற அமர்வுகளிலும் பொதுமக்களும் பங்குகொள்ள இடமளிக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது. இதற்குச் சில விதிவிலக்குகளும் உண்டு. வழக்கு விசாரணைகளில் நேரடியாகத் தொடர்பு கொள்ளாத ஆட்களை நீதிபதி விலக்கி விடுதலும் உண்டு. 13 (3) ஆவது உறுப்புரையின் படி, குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர், தாமாக அல்லது ஒரு வழக்கறிஞர் மூலம் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தில் நீதியான விசாரணையைத் தொடரலாம். 13 (5) உறுப்புரை குற்றமற்றவர் என்ற உத்தேசத்தை உள்ளடக்குகிறது. எனினும் சில உண்மைகளை நிரூபிக்க வேண்டும் என்பதை எதிரணியினர்க்குச் சுமத்துகிறது. சான்றுக் கட்டளைச்சட்டப்படி,[24] பொலிஸ் காவலில் இருக்கும்போது நீதிபதியின் முன்னிலையில் அல்லாது வழங்கப்பட்ட சாட்சியங்களை ஒப்புக்கொள்ள இடமளிக்கவில்லை.

அவசரகால ஒழுங்கு விதிகள் பற்றிய ஏற்பாடுகள் மற்றும் பி.ரி.ஏ. என்பன அரசியலமைப்பு மற்றும் பொதுக் குற்றவியல் சட்டத்தினால் வழங்கப்பட்ட பாதுகாப்பைச் சற்றுக் குறைத்துள்ளன. உதாரணமாக, தடுத்து வைக்கப்பட்டவர் பொலிஸ் காவலில் இருக்கும் போது, நீதிபதி இல்லாதவிடத்தும் பொலிஸ் அதிகாரிக்கு முறைப்பாடு செய்யப்பட்ட குற்றத்தை ஒப்புக்கொள்ள இடமளிக்கின்றன.[25] இத்தகைய குற்றங்கள் வலுக்கட்டாயத்தின் மூலம் பெறப்பட்டவை என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு தடுப்புக் காவலில் உள்ளவரைச் சார்ந்துள்ளது. நீதி, அரசியலமைப்பு விவகார மற்றும் வெளிநாட்டு வியாபார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இத்தகைய ஏற்பாடுகள் உண்மையான செயல்முறைகளை மீறுகின்றன என்றும் அவை நீக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

குற்றவியல் நீதிமுறையில் நீண்டகாலத் தாமதம் இருத்தல், பலர் விசாரணைக்கு உட்பட முன்னர் கணிசமான காலப்பகுதியைத் தடுப்புக்

---

[24] No. 14 of 1895, as amended

[25] Greater detail on the shortcomings of the emergency regulations and the PTA are given in *Sri Lanka: State of Human Rights 1993* (Law & Society Trust, Colombo, 1994)

காவலில் செலவு செய்கின்றனர் என்ற கருத்தைத் தருகின்றது. உரிமை மீறல் பற்றியவை "காலதாமதமின்றி" விசாரணை செய்யப்பட வேண்டும். அட்டவணை 1 இல் எடுத்துக் காட்டப்பட்ட சிறைச்சாலை திணைக்களப் புள்ளிவிபரங்களின்படி குற்றம் செய்தோரிலும் பார்க்க காவலில் வைக்கப்பட்டவர்களின் தொகையே அதிகமாக இருந்தமை தெரிய வருகிறது. 1993 இல் குற்றம் செய்த மற்றும் குற்றம் புரியாத சிறைக் கைதிகளின் நாளாந்தச் சராசரித் தொகையான 9872 பேரில் 5,732 பேர் (58%) காவலில் வைக்கப்பட்டோராயும், 4,140 பேர் குற்றவாளிகளாகவும் இருந்தனர். கடந்த நான்கு ஆண்டுகளில் காவலில் வைக்கப்பட்டோர் தொகை இன்னும் கூடுதலாக இருந்தது., 1989 இல் 65% ; 1990 இல் 61.6%; 1991 இல் 60.5%; 1992 இல் 61.2% ஆகக் காணப்பட்டது. மேலும் குற்றவாளிகளல்லாத கைதிகளால் சிறைக்கூடம் நிறைந்திருந்தது. அட்டவணை 2 இல் இவை எடுத்துக் காட்டப்படுகின்றன. 1991 ஆம் ஆண்டு தொடக்கம் காவலில் வைக்கவென அதிகாரமளிக்கப்பட்ட இடங்களில் இருந்தோர் தொகையிலும் பார்க்க சிறைக் கூடங்களில் காவலில் வைக்கப்பட்டோர் தொகை நான்கு மடங்காக இருந்தது.

இத்தகைய புள்ளிவிபரங்கள், அவசரகால ஒழுங்குவிதி மற்றும் பி.ரி.ஏ யின் கீழ் பொலிஸ் நிலையங்களில் அல்லது இராணுவ முகாம்களில் உள்ள குற்றஞ்சாட்டப்படாதோர் தொகையை உள்ளடக்கவில்லை. இத்தகைய கைதிகளில் சிலர் தடுப்புக் காவலில் பல வருடங்களைக் கழித்தனர்.

தடுப்புக் காவலில் உள்ளவர்கள் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் தெரிவிக்கப்படாவிட்டால் அரசியலமைப்பின் 13 (3) ஆவது உறுப்புரையை அது மீறுவதாக அமையும். மேலும் சிறைக் கூடங்களில் உள்ளவர்கள் வழக்கறிஞரின் உதவியை நாடும் உரிமையை இலங்கைச் சட்டம் வழங்கவில்லை. பிரதிவாதிகள் எப்பொழுதும் பாதுகாப்பை முழுமையாக ஆயத்தம் செய்ய வேண்டியது அவசியமில்லையென்பதை வழக்கறிஞர் கவனத்திற்கொள்ள வேண்டும். ஏனெனில் வழக்குத் தொடர்வோரால் முன்வைக்கப்படும் சகல தகவல்களையும் அவர்கள் அறிய வேண்டும் என்பதும் அவசியமில்லை.

அட்டவணை 1 : குற்றத் தீர்ப்புப் பெற்றோர் மற்றும் காவலில் இருக்கும் சிறைக் கைதிகளின் நாளாந்தச் சராசரி 1984–1993

வருடம்	குற்றத்தீர்ப்புப் பெற்றோரின் சராசரி	காவலில் இருப்பேரின் சராசரி	மொத்தம்	காவலில் இருப்போரின் சதவீதம்
1984	4,252	7,441	11,693	64.0
1985	4,690	6,472	11,162	58.0
1986	5,274	6,177	11,451	54.0
1987	5,346	6,834	12,180	56.0
1988	4,415	6,175	10,590	58.0
1989	2,798	5,079	7,877	65.0
1990	3,871	6,222	10,039	61.6
1991	3,558	5,443	9,001	60.5
1992	3,558	5,604	9,162	61.2
1993	4,140	5,732	9,872	58.0

Source: Department of Prisons

அட்டவணை 2 : இடவசதியும் கட்டிடங்களும் 1989 – 1993

	அதிகாரமளிக்கப்பட்ட இடவசதி			நாளாந்தச் சராசரி			சதவீத நெரிசல்		
	குற்ற தீர்ப்பு பெற்றோர்	காவலில் இருப்போர்	மொத்தம்	குற்றத் தீர்ப்புப் பெற்றோர்	காவலில் இருப்போர்	மொத்தம்	குற்றத் தீர்ப்புப் பெற்றோர்	காவலில் இருப்போா	மொத்தம்
1984	5298	1009	6307	4252	7441	11693	-	637.5	85.4
1985	5298	1009	6307	4690	6472	11162	-	541.4	77.0
1986	5298	1009	6307	5274	6177	11451	-	512.2	81.6
1987	5298	1009	6307	5346	6834	12180	0.91	577.3	93.1
1988	5298	1009	6307	4415	6175	10590	-	512.0	67.9
1989	5298	1009	6307	2798	5079	7877	-	403.4	24.9
1990	5298	1009	6307	3871	6222	10093	-	616.7	60.0
1991	5298	1009	6307	3558	5443	9001	-	439.4	42.7
1992	5298	1009	6307	3358	5604	9162	-	455.4	45.3
1993	5298	1009	6307	4140	5832	9872	-	468.1	56.5

Source: Department of Prisons

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும் பகுதி எல்.ரி.ரி.ஈ. இனரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இலங்கையின் சட்டம் மற்றும் நீதிமுறைகள் அங்கு நடைமுறையில் இல்லை. வடக்கில் புதிய சட்டமுறைமை உருவாக்கப்பட்டுள்ளது.[26] புதிய தண்டனைச் சட்டத்தொகுதி தமிழில் எழுதப்பட்டுள்ளது. ஒருவரைத் தாக்குதல் மற்றும் கற்பழித்தல் போன்ற குற்றங்களுக்குக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. புதிய சட்டக்கல்லூரி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. எல்.ரி.ரி.ஈ. இனரின் முன்னாள் படைப்பிரிவினர் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய தீர்ப்பை மதிப்பிடப்பயன்படும் நடைமுறைகள் பற்றிப் போதிய தகவல்கள் கிடைக்கவில்லை.

7. முடிவுரை

வாழும் உரிமை மீறல், சுதந்திரம், நீதியான விசாரணை சித்திரவதையிலிருந்து விடுதலை, கைதுசெய்தல், காணாமற் போதல் என்பனவற்றிற்கு எதிரான பாதுகாப்பை வழங்கும் சட்டரீதியான, நிறுவனரீதியான மற்றும் நடைமுறை சார்ந்த சீர்திருத்தங்கள் அவசியமானவை. சட்டமும் நடைமுறையும் (அவசரகால ஏற்பாடுகள் மற்றும் பி.ரி.ஏ) உட்பட சர்வதேச மனித உரிமைகளின் நியமங்களுக்கு இணையாகக் கொண்டுவரப்பட வேண்டும். மனித உரிமை மீறல்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்ற உறுதிப்பாட்டினை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

---

26 *The Sunday Times*, 19 June 1994

5

மனித உரிமைகளுக்கான நீதிமுறைப் பாதுகாப்பு

1. அடிப்படை உரிமைகள், ஆட்கொணர்வு வழக்குகள் பற்றிய நீதி முறைத் தீர்ப்புகள்

இலங்கை அரசியல் யாப்பு, கொழும்பிலிருக்கும் உயர் நீதிமன்றத்துக்கு அரசியல் யாப்பு உத்தரவாதம் தரும் அடிப்படை உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாட்டு வழக்குகளை விசாரிப்பதற்கு விசேடமான அதிகாரத்தை வழங்கியுள்ளது. இந் நீதிமன்றம் கொழும்பில் தனது விசாரணைகளை நடாத்துகின்றது. இவ் உயர் நீதிமன்றம் நஷ்ட ஈடு வழங்கும் அதிகாரம் கொண்டது. ஒரு கைதியைத் தடுத்து வைத்திருப்பது எந்தளவுக்குச் சட்ட ரீதியானது என்பதை விசாரிக்கும் வகையில் ஆட் கொணர்வு மனுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. உயர்நீதிமன்றம் அக் கைதியை நீதிமன்றத்துக்குக் கொண்டு வருமாறு ஆட்கொணர்வு உத்தரவை இடுவதுடன் அவ்வாறான கைது பற்றி விசாரிக்குமாறு உத்தரவிடப் படலாம். அண்மைக் காலங்களில் இலங்கையில் காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டு பிடிக்க இவ்வாறான ஆட்கொணர்வு நடைமுறை விரிவாகப் பயன்படுத்தப்பட்டது. ஆயினும் பெரும்பாலும் இதில் தோல்வியே ஏற்பட்டது. 1994 ஆம் ஆண்டு வரை, அதிகாரிகள் இவ்வாறான கைதுபற்றி மறுப்புத் தெரிவித்த போது உயர்நீதிமன்றம் வேறொன்றும் செய்யமுடியவில்லை. எனினும் 1994 ஆம் ஆண்டு மேன் முறையீட்டு நீதிமன்றம் காணாமல் போன 3 கைதிகளைப் பொறுத்தவரையிலான ஆட்கொணர்வு வழக்கொன்றில் ஒரு முக்கிய தீர்ப்பினை வழங்கியது. இது பற்றிப் பின்னர் ஆராயப்படும்.

1994 ஆம் ஆண்டில் அடிப்படை உரிமைகள் பற்றி வழங்கப்பட்ட பெரும்பாலான தீர்ப்புக்கள் நடைமுறையிலிருந்த நீதித்துறைத் தீர்ப்புக்களில்

அடிப்படையிலேயே அமைந்தன. அவை கடந்த காலங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புக்களிலிருந்து பெரிதும் வேறுபடவில்லை. ஆயினும் பொலிசாரின் தவறான நடத்தை, சட்டவிரோதமாகத் தடுத்து வைத்தல், தடுத்து வைக்கப்பட்டோரை மோசமான முறையில் நடத்துதல் போன்ற அடிப்படை உரிமைகள் தொடர்பாகப் பல முக்கிய வழக்குகள் நடாத்தப்பட்டன.

உயர் நீதிமன்றப் பதிவாளரின் அறிக்கையின் படி 1989-1993 க்கு இடையில் 1818 அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் விசாரிக்கப்பட்டன. இவற்றில் அரைவாசிக்கு மேல் ஏறக்குறைய 898 வழக்குகள் அரச அதிகாரிகள் அடிப்படை உரிமைகளை மீறியமை பற்றியதாகும். கடந்த சில ஆண்டுகளாகத் தனியாட்கள், மனுதாரர்களுக்கான நஷ்ட ஈட்டின் ஒரு பகுதியைச் செலுத்த வேண்டுமென்ற முறையில் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. இவ்வாறான போக்கு தற்போது சற்று நிரந்தரமாகிவிட்டது போல் தோன்றுகின்றது. எடுத்துக் காட்டாக எம்.எல்.டி.டபிள்யூ. சுதத் பீரிஸ் என்பவர் பொலிசாரால் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டமைக்காகவும், மோசமாக நடத்தப்பட்டமைக்காகவும் அவருக்கு 50,000 ரூபா நஷ்ட ஈடு வழங்கப்பட்டது. பொறுப்பதிகாரி உட்பட நான்கு பொலிசாரும் இந் நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. எம்.பி.சாந்தா விஜயரெட்ன என்ற தொழிற்சங்கவாதி சட்ட விரோதமாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டமைக்காகவும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும், அமைதியாக ஒன்று கூடும் உரிமையும் மறுக்கப்பட்டமைக்காகவும் அவருக்கு 70,000 ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டது. இவ்வழக்கில் அரசாங்கம் மனுதாரருக்கு 50,000 ரூபாவும், இரு பொலிசாரும் சேர்ந்து 20,000 ரூபாவும் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டது. அவ்வாறே செல்வகுமார் எதிர் தேவானந்தாவும் மற்றவர்களும் எனும் வழக்கில் அரசாங்கம் 20,000 ரூபாவும், இரு அதிகாரிகள் சேர்ந்து 30,000 ரூபாவும் மனுதாரர்களுக்குச் செலுத்த வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டது. இவ்வாறு தனியாட்கள் செலுத்த வேண்டிய நஷ்டஈடு படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டில் விசாரித்துத் தீர்ப்பு வழங்கப்பட்ட பல வழக்குகளில் தனித்துவம் வாய்ந்ததாக விளங்குவது "வாதுவ" வழக்கமாகும். இவ்வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பும் அத்தீர்ப்பில் நீதிபதி அமரசிங்க மேற்கொண்ட விரிவான சட்டவியல் மற்றும் வரலாற்று ரீதியான பகுப்பாய்வும் தனித்துவம் மிகுந்தது.[1] 1992 மாசி மாதத்தில் 16 பேர்

[1] உயர் நீதிமன்ற விண்ணப்பம் இல. 146/92-155/92

அடங்கிய குழு ஒன்று தங்களுக்குள் ஓர் அரசியல் கலந்துரையாடலை நடத்திய போது பொலிசாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர். ஜே.வி.பி. இனரின் கூட்டமொன்று இடம் பெறுவதாகத் தமக்கு யாரோ ஒருவர் தகவல் தந்ததாகப் பொலிசார் கூறினர். அவர்கள் கூட்டம் நடந்த இடத்துக்குச் சென்று யன்னல் வழியாகக் கவனித்த போது அக் கூட்டத்தில் இருந்தவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகச் சதி செய்வதாக அவர்கள் முடிவு செய்து அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் அவர்களைக் கைது செய்ததாகக் கூறினர். நடந்த சம்பவம் பற்றிப் பொலிசார் கூறியவற்றினை நீதிமன்றம் நம்ப மறுத்ததுடன் சட்டரீதியாக நோக்குமிடத்து பொலிசார் கூறியது தவறானது என்றும், உண்மையில் அவ்வாறு நிகழ்வது சாத்தியமற்றது என்றும் நீதிமன்றம் பிரகடனம் செய்தது. நீதிமன்றம் உறுப்புரை 13(1) (தன்னிச்சையான கைதுகளிலிருந்து சுதந்திரம்), உறுப்புரை 13 (2) (கைது செய்யப்பட்ட பின்னர் நீதிபதிமுன் நிறுத்தப்படும் உரிமை), உறுப்புரை 14 (1) (அ) (பேச்சுச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும்), உறுப்புரை 14 (1) (இ) (ஒன்று சேரும் சுதந்திரம்) ஆகிய உரிமைகள் மனுதாரர்களைப் பொறுத்தவரையில் மீறப்பட்டுள்ளதாகக் கண்டறிந்தது. நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் குறிப்பாகப் பொலிஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அறியாமையையும், அவர்களுடைய கற்பனையையும், எவ்விதத்திலும் கருத்திற் கொள்வதற்கில்லை எனத் தெளிவாக அத்தீர்ப்பில் கூறப்பட்டது. பொலிசார் மேற் கொண்ட நடைமுறைகளையிட்டு நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்தது. ஜே.வி.பி. ஒரு தடை செய்யப்பட்ட ஒரு குழு அல்ல என்பதைப் பொலிசார் அறிந்திருக்கவில்லை. அத்துடன் மனுதாரர்களைக் கைது செய்து தடுத்து வைப்பதை நியாயப்படுத்தும் அவசரகால ஒழுங்கு விதி எதுவென்பதையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. நீதிமன்றத்தின் நோக்கில் இவ்வாறான தவறுகளைக் கொண்டு மட்டுமே உறுப்புரை 13 (1) இன் கீழ் வரும் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கொள்வதற்கில்லை. ஆயினும் பொலிசாரின் இத்தவறுகள் அவர்களுடைய தன்னிச்சையான போக்கினையும், விவேகமற்ற நடத்தையையுமே எடுத்துக் காட்டுகின்றன. இது பொலிசார் மீது இருக்க வேண்டிய நம்பகத்தன்மையைப் பெரிதும் பாதிக்கின்றது. அவசரகால ஒழுங்கு விதியொன்று முற்றிலும் தெளிவானதாக இருந்தாலன்றி, அடிப்படை உரிமைகளின் மீறுதல் ஒன்றை அத்தகைய அவசரகால ஒழுங்கு விதி உட்கிடையாகக் கருதியிருந்ததெனக் கொள்ள முடியாது என்று நீதிமன்றம் மேலும் குறிப்பிட்டது. சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்வுகளைக் கவனமாக ஆராய்ந்த பின்னர் உறுப்புரை 11 இன் மீறல்கள் என்ற சாட்டுதல்களின் தொடர்பில் (சித்திரவதையிலிருந்து

விடுபட்டிருக்கும் உரிமை) மனுதாரர்களுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியது.

பொலிசாரின் தவறான நடவடிக்கைகள், சட்ட முரணான தடுத்துவைப்பு, சுதந்திரமான பேச்சுரிமைகளை வேண்டுமென்றே மறுத்தல் என்பவற்றின் மீதான, பல வருடங்களாக வளர்ந்த சட்டவியலின் உறுதிப்பாடு "வாதுவ" வழக்கில் வெளிப்படுவதினாலும் அது முக்கியத்துவமுடையதாகின்றது. இந்தத் தீர்ப்பானது மீறப்பட்ட ஒவ்வொரு அடிப்படை உரிமைகளிலிருந்தும் பெறப்பட்டதான ஒரு தொடரான வழக்குகளிலிருந்து வரலாற்றை வடித்தெடுப்பதுடன் இந்த வரலாற்றிலிருந்து எதிர்கால வழக்குகளுக்கான தெளிவான முற்தீர்ப்பு உதாரணத்தையும் ஏற்படுத்துகின்றது. அறிக்கையிடப்படாத அநேக முன்னைய வழக்குகளை உள்ளடக்கியதான ஒரு தொகையான உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களை இது குறிப்பிடுகின்றது. குறிப்பிட்ட ஒரு விடயத்தில் உள்நாட்டு வரலாறானது போதாததாக உள்ள போது நீதியரசர் அமரசிங்க ஏனைய நாடுகளின் அறிக்கையிடப்பட்ட வழக்குகளிலும், வேறு மூலகங்களிலுமிருந்து, சிலவேளைகளில் அவற்றை மிக விரிவாக மேற்கோள் காட்டிப் பெருமளவில் ஆதாரங்களைத் தந்துள்ளார். பேச்சு, கருத்து வெளியிடுகை மற்றும் ஒன்று கூடல் சுதந்திரம் என்பவற்றின் மீதான கருத்துரையின் போது குறிப்பாக இங்ஙனம் செயற்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது. இங்கு ஆதாரங்காட்டப்பட்டவை "முதலாவது திருத்தத்தின்" மீதான அமெரிக்க வழக்குகளில் தொடங்கி ஜோண் ஸ்ருவட் மில் அவர்களின் "சுதந்திரம் பற்றியது" என்பதினூடாகச் சனநாயகம் என்ற எண்ணக் கருவின் கிரேக்க சொற்பிறப்பியல் ஈறாகப் பரந்திருப்பதைக் காணலாம். இலங்கையின் சட்டவியலில் ஏனைய பாரம்பரியங்களில் இருந்து ஆதாரங்களைக் காட்டுவது புதிய தோற்றப்பாடு அல்ல என்றாலும் குறிப்பிட்ட ஒரு நிலைப்பாட்டின் சார்பாகச் சர்வதேச, உள்நாட்டு முயற்சி காரணமாக "வாதுவ" வழக்கானது ஏனையவற்றிலிருந்து மேன்பட்டு நிற்கின்றது.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் உரிமைகளது நீதி முறைப் பாதுகாப்பானது, மெதுவாக, ஆனாலும் உறுதியாக வளர்ந்து வருவது திட்ட வட்டமாகத் தெரிகின்றதெனினும் தடுப்பு வழியில் அல்லாத ஆனால் பின்னோக்கிய செயற்பாட்டுப் பாதுகாப்பாக அமைகின்ற இந்த நீதி முறைப் பாதுகாப்பின் அதிகரிப்பொன்று உண்மையான பாதுகாப்பில் ஏற்படும் அதிகரிப்போடு தன்னளவிலேயே நேரடித் தொடர்புடையது என்று கருத முடியாது என்பதை நினைவிலிருத்தல் அவசியம்.

காவலில் உள்ளோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்திலுள்ள போக்கானது சட்டத்தை எழுத்துக்கெழுத்து பின்பற்றுவதாகத் தோன்றுகின்றது. ஆனாலும் "வாதுவ" வழக்கில் உள்ளதைப் போல சட்டம் எழுத்துக்கெழுத்து ஓரளவுக்குப் பரந்த கருத்தில் பொருள்கோடல் செய்யப்பட்டும் வருகின்றது. அவசரகால ஒழுங்கு விதிகள் தெளிவற்றவைகளாக உள்ளபோது அரசியல் அமைப்பானது இயன்றளவுக்குத் தங்கியிருக்கப்படுகின்றது.

1994 இல் சமத்துவத்துக்கான உரிமையும் ஓரளவுக்குக் கவனிக்கப்பட்டுள்ளது. சர்ச்சைக்குட்பட்ட ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு தொடர்பான ஒரே விதமான வழக்குகளின் தொடரில் உயர் நீதிமன்றமானது **"நிறைவேற்று அல்லது நிர்வாக"** என்ற வரைவிற்குள் வருகின்ற அரசுச் செயல்களில் நிறுவனங்கள் நடபடி முறையைப் பின்பற்றுதலில் மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்றும், நியாயமாக இருத்தல் மட்டுமன்றி **"நியாயமாக இருப்பதாகத் தெரிதலும்"** வேண்டும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளது.

காணாமல் போதல் தொடர்பான மூன்று சந்தர்ப்பங்கள் தொடர்பான ஆட்கொணர் ஆணை வழக்கில் 1994 மார்கழியில் முக்கியமான தீர்ப்பொன்று வழங்கப்பட்டது. முதன் முறையாக இந்த வழக்கில் தான் நீதிமன்றம், எதிர்வாதிகள் கட்டுக்காவலை மறுக்கின்ற போது என்ன செய்வது என்ற நீண்டகாலப் பிரச்சினையொன்றை எதிர் கொண்டது. இவ்வழக்கில்[2] நீதிமன்றம் மூன்று இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பதைப் பொலிஸ் அலுவலர் மறுத்த போது அதனை நம்ப மறுத்தது. முக்கியமான இந்திய முற்தீர்ப்பை ஆதாரம் காட்டிப் பாதிக்கப்பட்டோரின் தாய்மாரான மனுதாரருக்குத் திக்குவெலப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 100,000 ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டுமென நீதிமன்றம் கூடுதல் தொகையை விதித்தது.

இதில் பாதிக்கப்பட்டோரார் 1988 மார்கழியில் கைது செய்யப்பட்டிருந்தனர். முக்கியமாக, குறிப்பாக இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட சான்றினைப் **"பாரதூரமான குற்றங்கள் புரியப்பட்டமைக்கான தகவலாக"**க் கருத வேண்டுமென்றும், உரிய புலன் விசாரணைகளை நடத்திச் சட்டத்திற்கமைய நடவடிக்கைகளை எடுக்குமாறும் நீதிமன்றம் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டது.

---

2 K. Leea violet et al v. I.P. Vidanapathirana et al. CA 164/89, 171/89, 166/89, decided on 2 December 1994.

6

கடந்த கால மீறல்கள் பற்றிய புலன் விசாரணை

1. அறிமுகம்

பொதுசன ஐக்கிய முன்னணி தனது பாராளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அண்மைக் காலங்களில் நிகழ்ந்த கொலைகள், ஆட்கள் காணாமல் போனமை, கண்டுபிடிக்கப்படாத குற்றங்கள், அரசியல் ரீதியான பழிவாங்கல் என்பன பற்றி விசாரிப்பதாகவும் தாங்கள் பதவிக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கு அறிவிக்க உடனடி நடவடிக்கைகளை மேற் கொள்வதாகவும் எடுத்துக் கூறியது. ஆயினும் இவ்வாறு விசாரிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஏராளமாக இருந்தமையினால் இம் மூன்று மாத காலஅவகாசம் யதார்த்தமாக இருக்கவில்லை. எனினும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைகளில் காட்டப்பட்ட அக்கறை கொள்கை ரீதியாக ஏற்கப்பட்ட ஒரு முக்கிய மாற்றமாக அமைந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சர்வதேச சமுதாயத்திடமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடமும் சில வகையான மீறல்கள் பற்றி விசாரிப்பதற்காக பல முறை உறுதியளித்திருந்தது. ஆயினும் இவ்விசாரணைகள் சரியாக நடைபெறவில்லை. சில பிரச்சினைகளையிட்டு மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீதான தீர்மானங்கள், தண்டனையிலிருந்து தப்பித்தல் பற்றிய ஏழாம் அத்தியாயத்தில் ஆராய்ந்துள்ளபடி, திருப்திகரமாக அமையவில்லை. உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கடந்த கால சம்பவங்களில் அதிக

அக்கறை செலுத்தவில்லை. உதாரணமாக, 1991 தை மாதம் காணாமல் போனவர்கள் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக் குழு அதன் நியமனத் திகதியின் பின்னர் இடம் பெற்ற சம்பவங்களை விசாரிக்கவே அதிகாரம் வழங்கப்பட்டது.[1] இத்திகதிக்கு முன்னர் காணாமல் போனதாக நம்பப்பட்டவர்கள் பற்றி உத்தியோக பூர்வ விசாரணைக்கு இடமளிக்கப்படவில்லை.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், நடைமுறையில் தான் ஆரம்பத்தில் ஏற்றுக் கொண்ட பலவற்றிலிருந்து பின் வாங்கத் தொடங்கியதாகத் தெரிகின்றது. 1988 தை 1 ஆம் திகதிக்கு முன்னர் காணாமல் போனவர்கள் பற்றி விசாரிக்க அரசாங்கம் மூன்று ஆணைக் குழுக்களை நியமித்தமை ஒரு முக்கிய நடவடிக்கையாகும். இது பற்றிப் பின்னர் ஆராயப்படும். எனினும், இவ்விசாரணைகளைச் செய்வதற்குக் கிடைக்கக் கூடிய சகல நுட்பங்களையும் பயன்படுத்துவதை உறுதி செய்வதில் சற்றுத் தயக்கம் காட்டப்பட்டது. குறிப்பாக, இலங்கையில் இவ்விசாரணைகளை மேற்கொள்ள உதவக் கூடிய சர்வதேச சட்ட நிபுணர்களைப் பயன் படுத்துவதில் தயக்கம் காட்டப்பட்டது. அத்துடன் காணாமல் போனவர்களின் சடலங்கள் காணப்பட்டதாகக் கருதப்பட்ட பாரிய புதை குழிகளைத் தோண்டுவதில் ஆரம்பத்தில் காட்டப்பட்ட ஊக்கம் பின்னர் காட்டப்படவில்லை. சர்வதேச மனித உரிமைகள் சட்டப்படி காணாமல் போனவர்கள், சட்டவிரோதக் கொலைகள் என்பன பற்றி விசாரிக்க வேண்டும் என்ற கடப்பாடு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான விசாரணை பல்வேறு நோக்கங்களை நிறைவு செய்யும். பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கல், இவ்வாறான அனுபவங்களிலிருந்து பல பாடங்களைக் கற்றுக் கொள்ளல் என்பன இதில் முக்கியமானவையாகும். இதனால் கடந்த கால நிகழ்வுகளை மக்கள் அறிந்து கொள்ள முடியும். அத்துடன் நடந்தவை பற்றிய உத்தியோக பூர்வமாக ஏற்கப்பட்ட பதிவாகவும் இவ்விசாரணைகள் அமையும். அத்துடன் மனித உரிமைகள் பற்றிய கொள்கையும் செய்முறையும் மாற்றம் பெறவும் அரசியல் வடிவம் பெறவும் கடந்த கால மீறல்கள் எவ்வாறு நடந்தன என்பதைப் பகிரங்கப்படுத்தி, அவ்வாறான குற்றங்கள் மீண்டும் இடம் பெறாதவாறு தடுக்கும் முகமாக புதிய கொள்கைகளையும், செயற்பாடுகளையும் உருவாக்கவும், உறவினர்களுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்கவும் இவ்

---

1 பலாத்காரமான முறையில் கடத்திச் செல்லல் பற்றிய சனாதிபதி விசாரணைக் குழுவாக இது அமைந்திருப்பதுடன் அதன் பணிகள் அத்தியாயம் 7 இல் மேலும் ஆராயப்படுகின்றது.

விசாரணைகள் வழிவகுக்கும். தப்பிப்பிழைத்த பாதிப்புக்குள்ளானோர், காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய முழு விளக்கத்தையும் பெறுவர்.[2] அத்துடன் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களை நீதி விசாரணைக்கு உட்படுத்தவும், இவ்விசாரணைகள் முக்கியமானவை. இது பற்றி ஏழாம் அத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள், சட்ட விரோதக் கொலைகள் என்பன பற்றிய விசாரணையில் உதவக் கூடிய பல நியமமான சர்வதேச சாதனங்கள் உண்டு. இவற்றுள் சட்டவிரோத, தன்னிச்சையான மற்றும் உடனடிக் கொலைத் தண்டனைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் தத்துவங்களும், காணாமல் போகின்றவர்கள் பற்றிய பிரகடனம் என்பனவும் அடங்கும். ஐக்கிய நாடுகள் சபை பிரசுரித்துள்ள மற்றொரு பிரசுரம் சட்டவிரோத, தன்னிச்சையான உடனடிக் கொலைத் தண்டனைகளைப் பயனுள்ள முறையில் தவிர்த்தலும், விசாரித்தலும் பற்றிய கைநூலாகும்.

விசாரணை செய்யும் அமைப்புக்கள் சில முக்கிய தன்மைகளை உடையனவாக இருத்தல் வேண்டும். குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற முறைப்பாட்டுக்குரியவர்களிலிருந்து அவை சுதந்திரமாக இயங்குதல் வேண்டும். விசாரணைகளை முழுமையாக நடத்துவதற்குத் தேவையான அதிகாரங்களையும், வளங்களையும் அவை கொண்டிருத்தல் வேண்டும். அதன் உறுப்பினர்களும், அலுவலர்களும் தமது பணிகளை ஆற்றுவதற்குப் போதிய தொழிற்றகமையுடையோராய் இருத்தல் வேண்டும். சாட்சிகள் விசாரணைக்குள்ளாவதன் காரணமாக இவர்கள் பயமுறுத்தல்கள், பழிவாங்குதல் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படல் வேண்டும். விசாரணைகள் பக்கச் சார்பற்றனவாகவும் செயற்றிறனுடையதாகவும் அதேவேளை உடனடியாகவும் செய்யப்படல் வேண்டும். விசாரணையின் போது பயன்படுத்தப்படும் வழிமுறைகளைப் பொதுமக்கள் முன் கூட்டியே அறிந்திருக்க வேண்டும். புலன் விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன் அதனைப் பகிரங்கப்படுத்தல் வேண்டும். இவ்

---

2 See Hayner, P.B., "Fifteen Truth Commissions - 1974 to 1984: A Comparative Study in *Human Rights Quarterly,* 16 (1994) pp 597- 655 ; and Article 19, *An Agenda for Change : The Right to Freedom of Expression in Sri Lanka* (London, October 1994) pp 46-52

அறிக்கையைத் தொடர்ந்து அரசாங்கம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் தெரியப்படுத்தல் வேண்டும்.[3]

2. சூரியகந்தை மற்றும் பிற இடங்களில் தோண்டப்பட்ட புதைகுழிகள்

1994 ஆம் ஆண்டு தை மாதம் 3 ஆம் திகதி எம்பிலிப்பிட்டிய பகுதியிலுள்ள சூரியகந்தை என்னுமிடத்தில் பல பாரிய புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டன. 1989 தொடக்கம் 1990 வரை தடுப்புக் காவலில் இருந்து காணாமல் போன 300 பேர் வரை இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்பட்டது. அப்போது எதிர்க்கட்சியிலிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முயற்சியினால் இந்தப் புதைகுழிகள் தோண்டப்பட்டன. அப்பொழுது மேற்கு மாகாண சபையின் முதன் மந்திரியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இப்புதை குழிகள் தோண்டப்பட்ட போது அங்கு சமுகமளித்திருந்தார். சில எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதும் அதுபற்றி ஒரு சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும், இரு வழக்கறிஞர்களும் எம்பிலிப்பிட்டிய நீதவானுக்கு அறிவித்தனர். நீதவான் தொடர்ந்து தோண்டும் பணியை நடத்துமாறு உத்தரவிட்டார். ஆரம்பத்தில் இப்புதை குழிகளைத் தோண்டும் பணி பற்றிப் பத்திரிகைகள் விரிவாகச் செய்திகளை வெளியிட்டன. ஆயினும் இரு நாட்களுக்குள் முக்கிய தேசியப் பத்திரிகைகளின் நகரப்பதிப்புக்களில் இச் செய்திகள் வருவது நிறுத்தப்பட்டது. 1994 தை மாதம் 5 ஆம் திகதி சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் புதைகுழிகளைப் பற்றிப் புலன் விசாரணை செய்து கொலைக்குப் பொறுப்பானவர்களை நீதி விசாரணைக்குக் கொண்டு வரும் முகமாக அரசாங்கம் ஒரு சுதந்திரமான ஆணைக் குழுவை நியமிக்க வேண்டுமெனக் கோரப்பட்டது.[4] சூரியகந்தைப் புதை குழிகள் தோண்டப்பட்ட சம்பவம் மிகவும் அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு பிரச்சினையாயிற்று. அத்துடன் தோண்டும் பணியும் முறையாகச் செயற்படவில்லை. இப்புதை குழிகளைப் பகிரங்கப்படுத்துவதில் ஈடுபட்ட சிலருக்கு தொலை பேசி மூலம் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

---

[3] See AI, *"Disappearances" and Political Killings - Human Rights Crisis of the 1990s: A manual for action* (Amsterdam, 1994) pp 142 - 146, for more on these points.

[4] The SLFP statement is published in INFORM, *Special Dossier on Mass Graves at suriyakanda*.

இப்புதைகுழிகள் பற்றி நீதவானுக்கு அறிவித்த வழக்கறிஞர் தை மாதம் 10 ஆம் திகதியன்று இவ்வழக்கு விசாரணை முடிந்து வீடு திரும்பும் போது சுடப்பட்டார்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் கருத்தின் படி இத் தோண்டுதல் பணியில் சரியான "தடய நுட்பங்கள்" கையாளப்படாவிடில் முக்கிய சாட்சியங்கள் இல்லாது போய் விடும். இவ் அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் சிதைவுற்ற உடல் பற்றிய பகுப்பாய்வுக்கான வழிகாட்டல்களின் அடிப்படையில் இப்புதை குழிகள் தோண்டப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டது. இவ்வழிகாட்டல்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்குறித்த கைநூலில் காணப்படுகின்றது. புதைகுழிகளைத் தோண்டும் பணியில் ஈடுபட்டோருக்கு சில அமைப்புக்கள் இவ்வாறான விபரங்களை வழங்கின. அரசாங்கத்தரப்பினரும் எதிர்க் கட்சியினரும் கூட இவ்விபரங்களைப் பெற்றனர். இவ் அமைப்புக்கள், அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற புதை குழிகளைத் தோண்டும் பணியில் அனுபவமுள்ள தடய நிபுணர்களின் உதவியைக் கோரலாம் என ஆலோசனை தெரிவித்தன. பலாத்காரமான முறையில், சுய விருப்பின்றி, காணாமல் போனவர்கள் பற்றி ஆராயும் ஐக்கிய நாடுகள் சபையின் பணிக் குழு இவ்வாறான ஒரு விதந்துரையை 1992 ஆம் ஆண்டில் விடுத்த போது அரசாங்கம் அதனை ஏற்றுக் கொண்டது. ஆனால் இவ்விதந்துரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசாங்கம் அத்தகைய உதவி எதனையும் கோரவில்லை அத்துடன் சூரியகந்தையில் புதைகுழி தோண்டும் பணியும் நிறுத்தப்பட்டது. இப்புதை குழிகளில் கண்டெடுக்கப்பட்ட உடற்பாகங்கள் பரிசீலனைக்காகக் கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆயினும் தடயப் பரிசோதனையில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத் தேர்தலில் வென்று பதவி ஏற்றபின் சூரியகந்தைப் புதைகுழிகளின் அகழ்வு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. 1994 புரட்டாதி மாதத்தில் சட்ட மா அதிபர் நீதவானிடம் தொடர்ந்து புலன் விசாரணைகளை நடத்துவதற்கான மனுவைச் சமர்ப்பித்தார். அதன் பின்னர் சூரிய கந்தையில் நான்கு இடங்களில் புலன் விசாரணைகள் நடாத்தப்பட்டன. ஆயினும் ஒரு சில உடற்பாகங்களே கண்டுபிடிக்கப்பட்டன.[5] உள்ளூர்

---

[5] INFORM, *Situation Report - September 1994*

மற்றும் சர்வதேச மனித உரிமைகள் குழுக்கள் இவ்விடயத்தில் பிற நாடுகளில் அனுபவம் பெற்ற தடய வல்லுனர்களின் சேவைகளைப் பெறுமாறு மீண்டும் அரசாங்கத்தைக் கோரின. இதனால் குறிப்பிட்ட இடங்களில் இருந்து கூடியளவுக்கு ஆதாரங்களைப் பெற முடியும் என அவ்வமைப்புக்கள் கருதின. ஆயினும் அரசாங்கம் இதற்குச் செவிசாய்க்கவில்லை. அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் மீண்டும் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டாலும் கூட அரசாங்கத்தின் சில பிரிவினர் இதிலிருந்து விலகியிருக்க முற்பட்டனர்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த சில மாதங்களில், இவ்வாறான புலன் விசாரணைக்கு உத்தியோக பூர்வ அனுமதி கிடைத்தமையால் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பல பாரிய புதை குழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1989-90 காலத்தில் காணாமல் போனவர்களின் உடற்பாகங்கள் அங்கு காணப்பட்டன. வாரியப்பொல, சித்துள்கொல்ல, ஹெகந்தர, வியாங்கொட, றக்குவான, அக்மீமன ஆகிய இடங்கள் உட்பட 20 புதைகுழிகள் தோண்டப்பட்டன. இவற்றை விட வேறுபல புதைகுழிகள் வட, கிழக்கு உட்பட நாடெங்கும் காணப்படுவதாக நம்பப்பட்டது. தனிப்பட்ட நபர்களும் காணாமல் போனவர்கள் பற்றி விடுத்த வேண்டுகோளின் பேரில் புதைகுழிகள் தோண்டப்பட்டன. அவர்கள் புதைகுழிகள் காணப்படுவது பற்றியும் அங்கு தமது குடும்ப உறுப்பினர்களின் உடற்சிதைவுகள் காணப்படலாம் என்றும் உள்ளூர் நீதவானிடம் முறையிட்டனர். அவர்கள் நீண்ட காலமாகவே இப்புதைகுழிகள் பற்றித் தெரிந்து வைத்திருந்தார்கள். ஆயினும் அச்சம் காரணமாக அவர்கள் தகவல் தெரிவிக்க முன் வரவில்லை. இப்புதை குழி விடயங்கள் தொடர்ந்து விசாரிக்கப்பட்ட முறைமை ஒழுங்கற்றிருந்தது. இதனால் உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும், தடயவியல் நிபுணர்களும் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தினர். அவர்கள் ஐ.நா.புலன் விசாரணை நியமங்களுக்கேற்ப அரசாங்கம் விசாரணைகளை நடாத்த வேண்டும் எனக் கோரினர். புதைகுழி தோண்டப்பட்ட இடங்களில் ஆதாரங்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்ட அரசாங்க மருத்துவ அதிகாரிகள் தடய மானிடவியல் நிபுணர்களாக விளங்கவில்லை. பொலிஸாரின் உதவியுடனேயே அவர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.[6]

---

6 AI, Sri Lanka : Time for Truth and Justice - Observations and recommendations regarding the commissions investigating past human rights violations, (AI Index : ASA 37/04/95, London, April 1995)

1994 புரட்டாதி மாதத்தில் தோண்டும் பணி அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் ஒரு மாதத்தின் பின்னர் நிதி, அரசியலமைப்பு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் விடுத்த அறிக்கைகள் நாட்டில் இடம்பெற்ற தோண்டும் பணிகளுடன் அரசாங்கம் சம்பந்தப்படவில்லை என்பதை வலியுறுத்தும் வகையில் அமைந்தது. 1994 ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி அவர் பின்வருமாறு கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. **"கொல்லப்பட்ட ஒருவரின் சடலமோ, எலும்புகளோ ஓர் இடத்தில் புதைக்கப்பட்டிருப்பதை அறிந்த ஒருவர் அதுபற்றி நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்றம் இதனையிட்டுத் திருப்தியடையும் போது விசாரணைகளைத் தொடங்கலாம். அரசாங்கமோ, நீதி அமைச்சோ இப்பணியைச் செய்வதற்கில்லை. அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கில்லை."** மனித உரிமைகள் குழுக்கள் இவ்வாறான அறிக்கைகளையிட்டுக் கவலை தெரிவித்தன. கடந்த கால மீறல்களை முழுமையாக விசாரிப்பதில் அரசாங்கம் காட்டிய அக்கறையும் ஈடுபாடும் மங்கி வருவதை அவை அவதானித்தன.

இவ்வாறு ஒருங்கிணைப்பும், தொடர்ச்சியுமற்று ஒழுங்கற்ற முறையில் புதைகுழிகளைத் தோண்டி, விசாரணை செய்வதை விட இப்பணிகளைப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏற்படுத்திய காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணைக்கான ஆணைக் குழுவின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வருதல் நன்று. இதனால் காணாமல் போனவர்கள் தொடர்பான சகல ஆதாரங்களையும் ஆணைக் குழு திரட்டக் கூடியதாக இருக்கும். அத்துடன் தோண்டும் பணியும், உடற் சிதைவுகளைப் பகுப்பாய்வு செய்தலும் ஐ.நா.வழிகாட்டல்களுக்கு ஏற்ப அமையும். ஆணையாளர்கள் இவ்விசாரணைகளை நடத்துவதற்குத் தாமே தேவையான நிபுணர்களை வரவழைக்க முடியும். தேவையானவிடத்து சர்வதேச சமுதாயத்திலிருந்தும் அவர்களை வரவழைக்கலாம். கீழே விளக்கியுள்ளவாறு "மனித உரிமைகளுக்கான மருத்துவர்கள்" இவ்வாறான தடயவியல் விசாரணைகளுக்கு உதவி செய்யத் தமது சேவைகளை வழங்க ஆயத்தமாக இருப்பதாக அரசாங்கத்துக்கு அறிவித்தனர். சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட **"இலங்கை: உண்மைக்கும், நீதிக்குமான நேரம்"** என்ற அறிக்கையில் காணாமல் போனவர்களின் உடற்சிதைவுகளின் பகுப்பாய்வை ஆணைக்குழுக்கள் மேற்பார்வை செய்ய அனுமதிக்கும் நடைமுறை ஏற்பாடொன்றை உருவாக்குவதனைக் கருத்திற் கொள்ளுமாறு அரசாங்கத்தை வேண்டியது.

1994 ஐப்பசி மாதத்தில் அப்போதைய பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் அழைப்பின் பேரில் "கலாநிதி கிளைட் கொல்லின்ஸ் ஸ்னோ" இலங்கைக்கு முதன் முதலாக விஜயம் செய்தார். அவர் சர்வதேசப் புகழ்பெற்ற சட்ட மருத்துவ நிபுணர். பல நாடுகளில் பாரிய புதைகுழிகளைத் தோண்டும் பணியில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர். தமது விஜயத்தின் பின்னர் அவர் இலங்கை அரசாங்கத்துக்குச் செய்த விதந்துரையில் நாட்டின் சட்ட மருத்துவ அமைப்புக்குப் பயனுள்ள முறையில் உதவும் வகையில் சுதந்திரமான சட்ட மருத்துவ நிபுணர் குழுவொன்று இலங்கைக்குத் தேவை. அவர்களே நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் வகையில் தனியாட்களிடமிருந்தும், புதைகுழிகளிலிருந்தும் சாட்சியங்களைத் திரட்ட முடியும் எனக் கூறப்பட்டது. உள்ளூர் நீதவான், சட்ட மருத்துவ அதிகாரிகளினூடாக இக்குழுவின் உதவியை நாடமுடியும். குவாட்டமாலா, ஆஜென்ரீனா, சில்லி போன்ற நாடுகளில் இவ்வாறான குழுக்கள் உருவாக்கப்பட்டன. அதில் இடம் பெற்ற உறுப்பினர்கள் சட்ட மானிடவியல் நிபுணர்களாகவும், பெரிய புதைகுழிகளைத் தோண்டுவதில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும், எலும்புக் கூடுகளைப் பரிசோதித்துப் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதை நிர்ணயிக்கும் வல்லமை படைத்தவர்களாகவும் விளங்கினர். இலங்கைக்கான அத்தகைய சட்ட மானிடவியல் நிபுணர்குழுவைத் தெரிவுசெய்து பயிற்சி அளிப்பதற்கு உதவ முடியுமென்று மனித உரிமைகளுக்கான மருத்துவர் சங்கம் கூறியது. இலங்கைக்குழு திருப்திகரமாக விருத்தியடையும் வரை இடைக்காலத்தில் இலங்கையருடன் பணிபுரியத் தனது நிபுணர்களைத் தந்துதவ முடியுமென்றும், விசாரிக்கப்படும் தனிப்பட்ட வழக்குகளுக்கும் உதவ முடியுமென்றும் அச் சங்கம் கூறியது. இவ்விடயங்களில் இலங்கையர் குழு பயிற்சி பெறவும், சிறந்த முறையில் செயற்படவும் இவ்வாலோசனைகளை இலங்கை அரசாங்கம் சாதகமாகக் கருத்திற் கொள்ளும் என நம்புகின்றோம்.

3. காணாமல் போனவர்களை விசாரிப்பதற்கான மூன்று ஆணைக் குழுக்கள்

1994 ஆவணி மாதம் பதவி ஏற்ற பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1988 தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை செய்ய மூன்று ஆணைக்குழுக்களை நியமிக்கப் போவதாகக் கூறியது. இவ்வாணைக் குழுக்களை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டது. ஏனெனில் அப்போதைய சனாதிபதி டிங்கிரி

பண்டா விஜயதுங்க இவ் ஆணைக்குழுக்களின் நியமனங்களுக்குக் கையெழுத்திட மறுத்தார். 1994 கார்த்திகை மாதத்தின் இறுதியில் பொதுசன ஐக்கிய முன்னணி சனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றி அடைந்த பின்னர் இவ் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. 1995 தை மாதத்தில் இக் குழுக்கள் தமது பணிகளை ஆரம்பித்தன.

இம்மூன்று ஆணைக்குழுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புவியியல் பிரதேசத்துக்கென நியமிக்கப்பட்டன. மேல், தென், சப்பிரகமுவ மாகாணங்களில் காணாமல் போனவர்களைப் பற்றி ஒரு குழு விசாரித்தது. மற்றொரு குழு மத்திய, வட மேற்கு, வட மத்திய, ஊவா மாகாணங்களில் விசாரணை செய்தது. மூன்றாவது குழு வட,கிழக்கு மாகாணங்களில் விசாரணைகளை நடாத்தியது. இவ்வாணைக்குழுக்கள் பின்வரும் விடயங்களைப் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க அதிகாரம் வழங்கப்பட்டது.

- 1988 தை மாதம் 1 ஆம் திகதியின் பின்னர் (ஒவ்வொரு ஆணைக்குழுவுக்குக் கீழ் வரும் மாகாணங்களில்) எவரேனும் தமது இருப்பிடங்களில் இருந்து தமது விருப்பத்துக்கு மாறாகக் கொண்டு செல்லப்பட்டனரா அல்லது காணாமல் போனார்களா?

- அவ்வாறு கொண்டு செல்லப்பட்டமை, காணாமல் போனமைக்குச் சாட்சியங்கள் உண்டா?

- அவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர், காணாமல் போனவர் தற்போது எங்கு இருக்கிறார்?

- கொண்டு செல்லப்பட்டமை அல்லது காணாமல் போனமை என்ற முறைப்பாட்டுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதைச் சுட்டிக் காட்டக் கூடிய நம்பத் தகுந்த ஆதாரங்கள் உண்டா?

  இவற்றுக்குப் பொறுப்பானவர்கள் மீது எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கைகள்.

- எதிர்காலத்தில் இவை மீண்டும் நிகழ்வதைத் தவிர்க்கத் தேவையான நடவடிக்கைகள்.

- கொண்டு செல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் ஆகியோரின் பெற்றோர்கள், வாழ்க்கைத்துணை, அவர்களில்

தங்கி வாழ்ந்தோர் என்பவர்களுக்கு வழங்கப்படக் கூடிய நிவாரண உதவி.[7]

ஆணைக்குழுக்கள் தமது முடிவுகளையும், விதந்துரைகளையும் சனாதிபதியிடம் சமர்ப்பிக்க நான்கு மாதகால அவகாசம் வழங்கப்பட்டது. 1995 பங்குனி மாதமளவில் காணாமல் போன 10,000 பேர்கள் பற்றிய முறைப்பாடுகளை ஆணைக்குழுக்கள் பெற்றதாகக் கூறப்பட்டது. இந்நிலையில் ஆணைக் குழுக்கள் நான்கு மாதங்களுக்குள் தமது பணிகளை முடித்துக் கொள்ள முடியாது. ஆயினும் காலத்தை நீடிப்பதில் எதுவித பிரச்சினையும் எதிர்பார்க்கப்படவில்லை.

1995 தை மாதமளவிலேயே ஆணைக்குழுக்கள் தமது பணிகளை ஆரம்பித்தமையினால் அவை பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்ள முடியவில்லை. ஆயினும் ஆணைக்குழுக்கள் சட்ட, மானிடவியல், வழிமுறைகளைக் கொண்டு புதை குழிகளைத் தோண்டி, எலும்புக் கூடுகளைப் பகுப்பாய்வு செய்யும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறான வழிமுறைகளே காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கிருக்கிறார்கள்? என்பது பற்றித் தெளிவான விபரங்களைத் தருவனவாக இருக்கும்.

ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி மனித உரிமைத் தாபனங்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தன. முதலில் 1988 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணைகள் தவிர்க்கப்பட்டமைக்கு அரசாங்கம் எதுவித காரணங்களையும் கூறவில்லை. 1988–90 காலப் பகுதியில் காணாமல் போனவர்களின் தொகை சந்தேகத்துக்கிடமின்றி அதிகரித்தது என்பது உண்மையே. ஆயினும் 1984 ஆம் ஆண்டளவில் அரசாங்கம் படைகளுக்கும், தமிழ் பிரிவினைவாதக் குழுக்களுக்குமிடையே வடக்கு, கிழக்கில் ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த போது பலர் காணாமல் போயினர். இச் சம்பவங்களின் நிகழ்வில் ஓர் ஒழுங்கு முறை காணப்பட்டது. அவ்வாண்டில் சர்வதேச மன்னிப்புச் சபை 1984–1987 நடுப்பகுதி வரை வடக்கு, கிழக்கில் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்ட 680 பேர் காணாமல் போன சம்பவத்தையிட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. 1987

---

7 Quoted from the notices published by the commissions in the national newspapers on 15 January 1995, and reproduced in AI, *Sri Lanka : Time for Truth and Justice.*

இல் இவ்வாறான 134 சம்பவங்கள் நடைபெற்றதாகவும் அவற்றில் 12 சம்பவங்கள் தென் இலங்கையில் நிகழ்ந்ததாகவும் இச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.[8] 1988 தை மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னர் இடம் பெற்ற இவ்வாறான சம்பவங்களும் முழுமையாக பக்கச் சார்பற்ற முறையில் விசாரிக்கப்படல் வேண்டும்.

ஆணைக்குழுக்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட இரண்டாவது கருத்து இம்மூன்று குழுக்களிடையே நாடு பிரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டமை பற்றியமையாகும். அரசாங்கம் ஏன் இவ்வாறு மூன்று வெவ்வேறு ஆணைக்குழுக்களை நியமிக்க முற்பட்டது என்பதைப் பற்றி விளக்கிக் கூறவில்லை. ஏதேனும் காரணத்துக்காக இப்பிரச்சினை பற்றிப் புவியியல் ரீதியாக விசாரிக்க வேண்டுமாயின் ஒரே ஆணைக்குழுவின் கீழ் பிராந்திய ரீதியான பல துணை ஆணைக்குழுக்களை ஓர் அதிகார பீடத்தின் கீழ் அமைத்திருக்கலாம். இவ்வாறு செய்யப்பட்டிருந்தால் விசாரணைக்கு ஒரே வகையான வழிமுறை கையாளப்பட்டிருக்கும். அத்துடன் சகல துணைக் குழுக்களினுடைய முடிவுகளும் முழுமையான முறையில் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கலாம். இவ்வாறான நாடளாவிய ஒரு பொது நோக்கு கடந்த காலப்பகுதியில் நிலவிய துஷ்பிரயோகத்தின் பொதுவான இயல்புகளைப் பற்றி அதிக அளவான விளக்கத்தைத் தந்திருக்கும். அத்துடன் இத்தகைய வழிமுறை இப்பிரச்சினைக்கு அடிப்படையான அரசியல், நிறுவன மற்றும் அமைப்பு ரீதியான அல்லது கொள்கை ரீதியான காரணிகளைக் கண்டறியவும் உதவியிருக்கும். இவை ஒரு தனிப் பிரதேசத்தைப் பற்றி மட்டும் விசாரணை செய்யும் போது கண்டறியப்பட முடியாதவை. மேலும் இவ்வாறான வழிமுறை பல்வேறு பிராந்தியங்களில் நடாத்தப்பட்ட விசாரணை முடிவுகளை ஒன்றிணைத்து அவற்றினடிப்படையில் ஒருமைப்பாடான பல விதந்துரைகளை வழங்கவும் உதவி புரிந்திருக்கும்.

இவ் ஆணைக் குழுக்கள் தமது பணியைத் திறம்படச் செய்வதற்குத் தேவையான வசதிகளையும் வளங்களையும் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. சர்வதேச மன்னிப்புச் சபையின் கருத்தின் படி[9] இவ் ஆணைக்குழுக்கள் தமது வரவு செலவுத்திட்டம் மீது எதுவித கட்டுப்பாட்டினையும் கொண்டிருக்கவில்லை. தமது நாளாந்தப் பணிகளுக்குத் தேவையான நிதியைச் சனாதிபதி

---

[8] AI, *Sri Lanka : Time for Truth and Justice*, p 9

[9] *Sri Lanka : Time for Truth and Justice*

செயலகத்திலிருந்தே பெறவேண்டியிருந்தது. இவ் ஆணைக் குழுக்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருந்தது. அத்துடன் இவ்விசாரணைகளை மேற் கொள்வதில் பல நடைமுறைச் சிக்கல்களும் அரசியல் பிரச்சினைகளும் இருந்தன. இந்நிலையில் இவ் ஆணைக் குழுக்கள் திறம்படப் பணியாற்ற அதிகளவிலான வசதிகளும், வளங்களும் தேவைப்பட்டன. அவர்களுக்குப் போதிய சாதனங்களும் மனித வளமும் தேவைப்பட்டது.

மற்றொரு விடயம் 1991 தை மாதம்[10] ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை செய்ய நிறுவப்பட்ட ஆணைக்குழுவிற்கும் இப்புதிய ஆணைக்குழுக்களுக்கும் வழங்கப்பட்ட அதிகாரங்கள் ஒரே வகைப்பட்டனவாக இருந்தமையாகும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட ஆணைக்குழு 1991 தை மாதத்துக்குப் பின்னர் காணாமல் போன நூற்றுக் கணக்கானவர்கள் பற்றிய விசாரணைகளை ஏற்கனவே செய்து முடித்திருந்தது. இவ்விடயங்கள் யாவும் புதிதாக நிறுவப்பட்ட ஆணைக்குழுக்களின் விசாரணையின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கலாம். இந்நிலையில் இவ்வமைப்புகளுக்கிடையே ஒருங்கிணைப்பு அவசியமானது. ஏனெனில் தேவையற்ற முறையில் ஒரே பணி திரும்பத் திரும்ப ஆற்றப்படுவதை இதனால் தவிர்த்துக் கொள்ள முடியும்.

10 இவ் ஆணைக்குழுவின் பணி பற்றி அத்தியாயம் 7 இல் விரிவாக ஆராயப்படுகின்றது.

7

தண்டனையிலிருந்து தப்பித்தல்

1. அறிமுகம்

இலங்கையில் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் சூழ்நிலை நீண்ட காலமாகவே நிலவி வந்திருப்பதை முன்னைய அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.[1] இவ்விடயத்தைக் கவனித்து குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரப் போவதாக அரசாங்கம் மீண்டும் மீண்டும் உறுதியளித்த போதிலும் அத்துமீறல்கள் தொடர்பாக மிக அரிதாகவே விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டதுடன் ஒரு சில வழக்குகளே விசாரணைக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டன. நீதிமன்றங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு சில வழக்குகளிலும் கூடத் திருப்தியான முடிவுகள் அடையப்படவில்லை. தான் பதவியிலிருந்த போது நடைபெற்ற பெருமளவிலான மனித உரிமை மீறல் சம்பவங்களைச் சரியான முறையில் விசாரிக்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வந்தது. இதுவே ஒரு பாரதூரமான மனித உரிமை மீறலாகும். காணாமல் போதல், விசாரணையற்ற மரண தண்டனைகள் மற்றும் சித்திரவதைகள் ஆகியவற்றை விசாரித்து இக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன்னால் கொண்டு வர ஓர் அரசாங்கம் தவறுவதானது சர்வதேச மனித உரிமை நியமங்களை மீறுவதாகும். பலாத்காரமான காணாமல் போதலிலிருந்து சகல நபர்களையும்

---

[1] உதாரணமாக ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் தொடர்ச்சியான வருடாந்தக் கூட்டங்கள். 1994 பங்குனி மாதத்தில் ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையில் அரசாங்கம் பின்வருமாறு கூறியது. "சட்ட ஏற்பாடுகள் மூலம் பொறுப்புக் கூறலை விருத்தி செய்யும் நோக்குடன் மனித உரிமைகளை மீறுவோருக்கு எதிரான தீவிர விசாரணைகள் மேற்கொண்டு நீதியின் முன் நிறுத்துவதற்குக் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்."

பாதுகாக்கும் ஐ.நா.பிரகடனம், சட்ட விரோத, முறையற்ற மற்றும் விசாரணையற்ற மரண தண்டனைகளை உறுதியாகத் தடுப்பதற்கும், விசாரணை செய்வதற்குமான ஐ.நா.கோட்பாடுகள், ஐ.நா.சித்திரவதை மகாநாட்டு உடன்படிக்கை ஆகியவை இத்தகைய சர்வதேச மனித உரிமைகள் பற்றிய நியமங்களாகும்.

மனித உரிமை மீறல்களை விசாரணை செய்து குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்தும் கடப்பாடு பழிவாங்கல் என்னும் அடிப்படையைக் கொண்டதல்ல. உண்மையில் நடந்தவற்றுக்குப் பரிகாரம் செய்யும் ஒரு வழியாக இருப்பதுடன், நடந்தவற்றின் பாரதூரத் தன்மையை உத்தியோக ரீதியாக ஏற்றுக் கொண்டதை அறிவிக்கும் செயலும், தண்டனையிலிருந்து தப்பிப்பதை அனுமதிக்க முடியாதென்பதை உறுதிப்படுத்துவதுமாகும். அத்துடன் இத்தகைய செயல்கள் திரும்பவும் நடைபெற மாட்டாதென்பதையும் உறுதிப்படுத்துவதாகும். பலாத்காரமான அல்லது தன்னிச்சையற்ற காணாமல் போதல் தொடர்பான ஐ.நா.செயற்பாட்டுக் குழு பின்வருமாறு கூறுகின்றது. **"மனித உரிமைகளை மீறுவோர் ஒரு நீதிமன்றத்தின் முன்னால் கொண்டுவரப்பட மாட்டார்கள் எனின் அவர்கள் மேலும் மேலும் பொறுப்பற்றவர்களாகி விடுவார்கள்."**[2] இவ்வாறான வழக்குகளில் சட்ட நடவடிக்கையானது ஏனைய வழக்குகளைப் போலவே ஒரு நியாயமான வழக்காகச் சர்வதேச நியமங்களுக்கு முழுக்க முழுக்க ஏற்புடையதாக நடத்தப்படவேண்டும். அதே நேரத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமைகளும் பாதிக்கப்படக் கூடாது.

சர்வதேச மன்னிப்புச் சபை **"தண்டனையிலிருந்து தப்பித்தல்"** (Impunity) என்னும் சொற்றொடரின் பொருளைப் பின்வருமாறு சுருக்கமாக விளக்குகின்றது. .

> **"இத்தொடரானது தவறு செய்வோர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதை அல்லது தமது செயல்களுக்குப் பொறுப்புக் கூறாமல் விலகி விடுவதை உணர்த்துகின்றது. தண்டனையிலிருந்து தப்பித்தல் நீதிச் செயன் முறையின் எக்கட்டத்திலும் அதாவது ஆரம்பத்திலோ, இடையிலோ, பின்னரோ ஏற்படக் கூடும். குற்றங்கள் விசாரிக்கப்படாமை,**

---

2 ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 47 ஆவது தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை. E/CN.4/1991/20, பக். 85.

சந்தேக நபர்களை நீதியின் முன் பாரப்படுத்தாமை, அவர்களது குற்றத்தை எதுவித சந்தேகங்களுமில்லாமல் உறுதிப்படுத்தக் கூடிய போதுமான சான்றாதாரங்கள் இருக்கத்தக்கதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தாதிருத்தல் அல்லது ஒரு தீர்ப்புக்கு வராதிருத்தல், குற்றவாளிகள் மீது தண்டனை விதிக்காதிருத்தல், அவர்களது குற்றத்தின் தன்மைக்குக் கொஞ்சமேனும் பொருந்தாத விதத்தில் கேலிக்கிடமான தண்டனை விதித்தில் மற்றும் தண்டனைகளை அமுல்படுத்தாதிருத்தல் போன்ற யாவும் தண்டனையிலிருந்து தப்பிக்கச் செய்யும் வாய்ப்புக்களேயாகும்".[3]

அண்மைக் காலத்தில் இலங்கையில் இழைக்கப்பட்ட திட்டமிட்ட பாரிய மனித உரிமை மீறல்கள் பயங்கரமானவைகளாகும். இவ்வாறான குற்றங்கள் இழைக்கப்பட்ட அந்நேரத்தில் குற்றவாளிகள் தாம் எப்போதும் பிடிபட மாட்டோம் என நம்பியிருக்கக் கூடும். தமது நடவடிக்கைகள் பொறுத்துக் கொள்ளப்படும் எனவும் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை எனில் அங்கவீனப்படுத்தல், கற்பழிப்பு, சித்திரவதை மற்றும் பாதுகாப்பற்ற கைதிகளைக் கொல்லுதல் போன்ற பாரதூரமான குற்றங்கள் நடைபெற்றிருந்திருக்கும் என எண்ணுவது கடினமாகும். இதன் காரணமாகவே இன்று தண்டனையிலிருந்து தப்பித்தல் எல்லாக் காலமும் தொடர முடியாது என்பதைக் காட்டவேண்டியுள்ளது. திரும்பவும் இத்தகைய சூழ்நிலை அதாவது பாதுகாப்புப் படையினரோ அல்லது அதிகாரத்திலிருப்போருக்கு ஆதரவான வேறு குழுவினரோ இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் போது தாம் தண்டனையிலிருந்து தப்பித்து விட முடியாது என அறிந்திருப்பர். தமது நடவடிக்கைகள் குறித்து எப்போதாவது ஒருநாள் விசாரணைகள் மேற் கொள்ளப்படுமென்றும் தாம் தமது செயல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டியிருக்கும் எனவும் அவர்கள் அறிந்திருப்பர்.

1988 முதல் காணாமற் போனோர் பற்றிய மூன்று ஆணைக்குழுக்களை நியமித்ததன் மூலம் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அண்மைக் காலத்தில் இழைக்கப்பட்ட ஒரு சில அத்து மீறல்களையேனும்

---

3 சர்வதேச மன்னிப்புச் சபை, "காணாமற் போதலும் அரசியல் கொலைகளும் – 1990களில் மனித உரிமை நெருக்கடி: நடவடிக்கைக் கையேடு (அம்ஸ்டர்டாம், 1994), பக். 158

விசாரிக்க முன்வந்துள்ளது. இது ஒரு முக்கிய நடவடிக்கையாகும். இவ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் பற்றி 6 ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. எனினும் இத்தகைய குற்றங்களை இழைத்தோர் மீது வழக்குத் தொடரப்படுமா என்பதில் அரசாங்கம் முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. உதாரணமாக நீதி, அரசியலமைப்பு மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சரான ஜீ.எல்.பீரிஸ் பின்வருமாறு கூறியுள்ளார் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

> **"பெற்றாருக்கும், உறவினர்க்கும் அவர்களது அன்புக்குரியவர்களுக்கும் நேர்ந்த கதியைத் தெரிந்து கொள்வதற்கு உதவவும் அவர்களது துன்பத்தைக் குறைப்பதற்குக் கொஞ்சமேனும் நட்ட ஈடு வழங்கவும் அரசாங்கத்துக்கு ஒரு கடமையுண்டு. ஆனால் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தும் பயனற்ற, இயலாத பணிகளில் ஈடுபடுவதற்கு எம்மால் முடியாது."[4]**

எனினும் இரண்டு நாட்களின் பின்னர் பி.பி.சி.க்கு அளித்த ஒரு நேர்காணலில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பின் வருமாறு ஓர் எதிர்க்கருத்தை வெளியிட்டார்.

கேள்வி: கடந்த சில வாரங்களாக 5 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட ஜே.வி.பி. எழுச்சிக் காலத்திலிருந்து பாரிய புதை குழிகள் தொடர்ச்சியாகத் தோண்டப்படுகின்றன. கடந்த காலத்தை இவ்வாறு தோண்டுவது நல்லது என நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: நிச்சயமாக ஆம் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் சகல நாகரீகமுள்ள சமூகங்களும் தண்டனையைக் குற்றத்தடுப்புக்கான ஒரு பிரதான முறையாகப் பயன்படுத்துகின்றன. புதைகுழிகளைத் தோண்ட நேர்ந்தாலும் இத்தகைய பயங்கர நிகழ்வுகள் வெளிப்படுத்தப்படவேண்டும். ஒவ்வொரு நிகழ்வும் விசாரணை செய்யப்படல் வேண்டும்.

---

[4] டெய்லி நியூஸ், 15 ஐப்பசி 1994 – சர்வதேச மன்னிப்புச் சபையில் மேற்கோள் காட்டப்பட்டது, இலங்கை: உண்மைக்கும் நீதிக்குமான நேரம் : கடந்தகால மனித உரிமை மீறல்கள் பற்றிய ஆணைக் குழுக்கள் தொடர்பாக அவதானிப்புக்களும், விதந்துரைகளும் (AI Index : ASA 37/04/95, சித்திரை 1995).

முடிந்தால் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படல் வேண்டும்.

தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச்சிகள் மற்றும் வடக்கு-கிழக்குப் பிரச்சினைகள் ஆகியவற்றுக்கெதிரான நடவடிக்கைகளின் போது பல்வேறு அத்துமீறல்கள் இழைக்கப்பட்டன. அத்தகைய அத்துமீறல்களுக்கான தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் சூழ்நிலைகளும் இருந்தன. அந்நிலைமையை மாற்றியமைக்கும் போது நடைமுறைச் சிரமங்களும், தடைகளும் ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தேசிய பத்திரிகைகளில் கடந்த காலக் குற்றங்கள் தொடர்பாகப் புலனாய்வு செய்தல், வழக்குத் தொடுத்தல் பற்றிய விடயங்கள் வெளியிடப்பட்ட போது இருபக்க நியாயங்களும் உணர்வுபூர்வமாக வெளிவந்தன. எனினும் போதுமான தடயங்கள் இருக்கும் போது புலனாய்வு செய்து வழக்குத் தொடுத்தலுக்கான கடப்பாடு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வாறு செய்யாவிட்டால் எதிர்காலத்தில் இலங்கையில் மனித உரிமைகளுக்கான அச்சுறுத்தல் ஏற்படுவதும் தெளிவானதாகும்.

2. தண்டனையிலிருந்து தப்பித்தலுக்கான மூலகங்கள்

தண்டனையிலிருந்து விலக்கீடு பெறல் பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்படுகின்றதுடன் அவற்றுட் சில சட்டரீதியானவை. வேறு சில நடை முறை ரீதியானவை. ஆனால் இந்நிலைமையை உடைத்தெறிய வேண்டுமெனில் சகல மூலகங்களும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். இலங்கையில் 1983 முதல் நீண்டகாலம் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்ததன் காரணமாகக் காணாமற் போதல், சித்திரவதை, சட்டவிரோத மரண தண்டனை முதலியவற்றுக்கு எதிரான பாதுகாப்புக்கள் நலிவடைந்தன. அத்துடன் அவசரகால விதிகள் இத்தகைய அத்துமீறல்களுக்கு வசதியளித்தன. பயங்கரவாதத் தடைச்சட்டம் (PTA) இதற்கு நல்ல உதாரணமாகும். சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு எதிரான இத்தகைய சட்டங்கள் திரும்பவும் கொண்டு வரப்படாமல் இருப்பதற்கான அரசியல் அமைப்புப் பாதுகாப்புகள் அவசியமானவை. பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற, தண்டனையிலிருந்து தப்பிக் கொள்வதற்கு வசதியளிக்கும் சட்டங்களும் விதிகளும் ஒன்றில் முற்றாக நீக்கப்படவேண்டும். அல்லது திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

தண்டனையிலிருந்து தப்பிக் கொள்வதற்கு வசதியளிக்கும் அவசரகால ஒழுங்கு விதிகளுக்கு 55 FF என்னும் மோசமான ஒழுங்கு விதிகளை

உதாரணமாகக் கூறலாம். இவ் ஒழுங்கு விதிகளானது பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு இலக்கங்களின் கீழ் அமுலில் இருந்தது. இவ் ஒழுங்கு விதிகள் பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்களுக்கு எவ்வித மரண விசாரணைகளும், பரிசோதனைகளுமின்றி உடல்களை அழிப்பதற்கு அனுமதி அளித்தது. இத்தகைய ஒழுங்கு விதிகள் அமுலில் இருந்தபோது வழங்கப்பட்ட தண்டனையிலிருந்து விலக்கீட்டினை இலகுவில் மாற்றி விட முடியாது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சட்டத்தின்படி கொலைகளுக்கான பௌதீகத் தடயங்கள் அழிக்கப்பட்டன. அத்துடன் இச்சட்டவிதி கொண்டுவரப்பட்டமையானது தமது நடவடிக்கைகளை அரசியல் அதிகாரம் கொண்டவர்கள் பொறுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையையும் பாதுகாப்புப் படையினருக்கு ஊட்டுகின்றது. இன்றும் கூட அவசரகால ஒழுங்கு விதிகள் கொண்டுள்ள மரணவிசாரணை மற்றும் பரிசோதனை பற்றிய ஏற்பாடுகள் சட்ட விரோதக் கொலைகளை மூடி மறைத்து விட உதவுகின்றன. அவசரகால ஆட்சி பற்றிய 3 ஆம் அத்தியாயத்தில் இது பற்றி விளக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவு தண்டனையிலிருந்து விலக்கீட்டைப் பெறச் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இச்சட்டத்தின்படி வழங்கப்படும் ஆணைகளை அல்லது அறிவுறுத்தல்களை விசுவாசத்துடன் மேற் கொள்ளும் எந்தவொரு நபருக்கும் அல்லது அதிகாரிக்கும் எதிராக எவ்விதமான குடிசார் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படக் கூடாது என இப்பிரிவு விதிக்கின்றது.

சட்டவிலக்குரிமைச் (திருத்தம்) சட்டமும் கூட வழக்குத் தொடுத்தலில் இருந்து தப்பிக்கும் வாய்ப்பை வழங்குகின்றது. இச்சட்டத்தின் படி சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கச் சட்டரீதியாகவோ அல்லது வேறுவிதமாகவோ "உண்மையான விசுவாசத்துடன்" நடவடிக்கை எடுக்கும் ஓர் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் அல்லது அரசாங்க ஊழியருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது. இது 1987 ஆவணி 1 ஆம் திகதியிலிருந்து 1988 மார்கழி 16 ஆம் திகதி வரை அமுலில் இருந்தது. எனவே யாராவது ஒரு நபர் மீது இக்கால கட்டத்தில் நடைபெற்ற காணாமற் போதல் அல்லது சட்டவிரோதக் கொலை காரணமாக வழக்குத் தொடரப்பட்டால் அவர் தான் அச்செயலை இச்சட்டத்தின் படி உண்மையான விசுவாத்துடன் செய்ததாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்ள முடியும்.

3. தண்டனையிலிருந்து தப்பித்தலுக்கு உதாரணமாகும் வழக்குகள்

1994 ஆடி மாதத்தில் சர்வதேச மன்னிப்புச் சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில்[5] இலங்கையில் மனித உரிமை அத்துமீறல்களிலிருந்து விலக்கீடு பெற்றுக் கொள்வதற்கான சூழ்நிலை பல வருடங்களாக நிலவி வருவதாகவும் இச் சூழ்நிலைகள் பல்வேறு வழிகளில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இவ் அறிக்கையில் 18 தெரிவு செய்யப்பட்ட வழக்குகள்[6] உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன. இவ்வழக்குகள் 1983 முதல் வடக்கு கிழக்கிலும்,

---

[5] சர்வதேச மன்னிப்புச் சபை, இலங்கை : எப்போது நீதி கிடைக்கும்? (AI Index: ASA 37/15/94, ஆடி 1994). பார்க்கவும் ***இலங்கை: உண்மைக்கும் நீதிக்குமான நேரம்,*** Supra n 4

[6] கொழும்பு வெலிக்கடைச் சிறையில் 1983 ஆடி மாதத்தில் 53 தமிழ் அரசியற் கைதிகள் கொல்லப்பட்டனர். 1985 வைகாசி மாதத்தில் [illegible] நாய்ப்பட்டி முனையிலிருந்து 23 இளைஞர்கள் காணாமற் போனார்கள். 1988 புரட்டாதி மாதத்தில் வழக்கறிஞர் விஜேதாஸ லியனாராச்சி பொலிஸ் பாதுகாப்பிலிருக்கும் போது மரணமடைந்தார். 1988 ஐப்பசியில் இரத்தினபுரி நகரில் வைத்து 3 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். 1989 பங்குனி மாதத்தில் அனுராதபுரம், எப்பாவலையில் "கரும்பூனை" களின் கொலைகள். 1989 புரட்டாதி கண்டியில் மெனிக்ஹின்ன, குண்டசாலை, அறங்கல, மகாவத்தையில் பழிவாங்கும் கொலைகள். 1989 ஐப்பசியில் கண்டி தெல்தெனியாவில் வழக்கறிஞர் சனத் கரலியத்தவின் கொலை. 1989 ஆடியில் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஜயந்த பண்டாரவின் கொலை விசாரணையில் ஈடுபட்டிருந்தவர்கள் கொல்லப்பட்டமை. 1989-90 இடையில் எம்பிலிப்பிட்டிய செவன இராணுவ முகாமிலிருந்து 32 பாடசாலை மாணவர்கள் காணாமற் போனமை. 1990 மாசியில் பத்திரிகையாளர் ரிச்சட் டி சொய்சாவின் ஆட்கடத்தலும் கொலையும். 1990 மாசியில் கம்பகா, வவுல்கலையில் 12 கிராமவாசிகள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை. 1990 புரட்டாதி அனுராதபுரம் எப்பாவலையில் சந்திராவதியின் கற்பழிப்பும் கொலையும். 1994 தையில் இரத்தினபுரி சூரியகந்தையில் பொதுப் புதைகுழி கண்டுபிடிப்பு. 1990 புரட்டாதியில் கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமிலிருந்து 159 அகதிகள் காணாமற் போனமை. 1990 புரட்டாதியில் மட்டக்களப்பு சத்துருக் கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில் ஆகிய இடங்களிலிருந்து 160க்கு மேற்பட்ட கிராம வாசிகள் காணாமற் போனமை. 1991 ஆனியில் கொக்கட்டிச் சோலை பழிவாங்கற் கொலைகள். 1992 சித்திரையில் பொலநறுவையில் தமிழ், முஸ்லிம் கிராம வாசிகள் வேண்டுமென்றே கொல்லப்பட்டமை. 1992 ஆவணியில் மட்டக்களப்பு மயிலந்தனையில் 39 கிராம வாசிகள் கொல்லப்பட்டமை. 1993 மாசியில் 16 கிராமவாசிகள் மட்டக்களப்பு வண்ணாத்தி ஆற்றில் காணாமற் போனமை.

தெற்கிலும் நடைபெற்ற சட்டரீதியற்ற மரண தண்டனை மற்றும் காணாமல் போதல் தொடர்பானவை. இவ் வழக்குகள் ஒவ்வொன்றும் சரியான புலனாய்வு மற்றும் வழக்குத் தொடரும் நடைமுறைகள் பற்றிய முறையின்மை பற்றி விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான காணாமற் போதல் மற்றும் கொலைகள் தொடர்பாக எவ்வித புலனாய்வும் மேற் கொள்ளப்படவில்லை. எனினும் மேற்கூறிய வழக்குகள் பெரும்பாலானவற்றில் ஒருவகையான புலனாய்வுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றுட் சில, நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப் பட்டனவெனினும் நீதி வழங்கப்படவில்லை. தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பான பல நடைமுறை மூலங்கள் இனங்காணப்பட்டன. சில புலனாய்வுகள் பொது மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க ஏற்பாடு செய்யப்பட்டனவாகத் தோன்றினவே தவிர எவ்வித உண்மையான புலனாய்வு நோக்கமும் இருக்கவில்லை. இப்புலனாய்வுகளின் முடிவுகளும் வெளியிடப்படவில்லை. சில வழக்குகளில் சாட்சிகளிடமிருந்து வாக்கு மூலம் பதியப்பட்ட போதிலும் குற்றமிழைத்தோருக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. சில வழக்குகள் நீதிமன்றத்துக்கு வந்த போதிலும் சாட்சிகளும், வழக்கறிஞர்களும் கொலை செய்யப்பட்டார்கள் அல்லது பயமுறுத்தப்பட்டார்கள், அல்லது சந்தேக நபர்களை ஆஜர்படுத்துவதில் நீண்டகாலத் தாமதம் காட்டப்பட்டது.

கொக்கட்டிச்சோலை படுகொலையின் போது நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு 'விசாரணை போன்ற சுதந்திரமான விசாரணைகளின் போது விசாரணையின் எல்லை மட்டுப்படுத்தப்பட்டது. அதனால் ஆணைக்குழுவினர் தமது அதிகாரம் முழுவதையும் பயன்படுத்த முடியவில்லை. இதனால் தேவையான சகல தகவல்களையும் பெறமுடியவில்லை. 20 சந்தேக நபர்கள் ஒரு இராணுவ நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு 19 நபர்கள் விடுதலை செய்யப்பட்டனர். பொறுப்பதிகாரி மீது தனது படையினரைக் கட்டுப்படுத்தத் தவறியமை, உடல்களைச் சட்டவிரோதமாக அழித்தமை முதலிய சிறு குற்றங்கள் மட்டுமே சுமத்தப்பட்டன. இவ் வழக்கில் பூரணமான விசாரணை நடத்தப்படவில்லை.

மைலந்தனைப் படுகொலை போன்ற ஒரு சில வழக்குகளில் சாதாரண குற்றவியல் நடைமுறைகள் மேற் கொள்ளப்பட்டன. இவ்வழக்கில் இக்கொலைகளோடு சம்பந்தப்பட்ட 24 இராணுவ வீரர்களுக்கு எதிராக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் 1993 சித்திரை மாதத்தில் விசாரணை ஆரம்பமாகியது. இரண்டு நாள் விசாரணைகளின் பின்னர்

எவ்வித காரணமும் காட்டப்படாது சட்ட மா அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கப் பொலநறுவை நீதவான் நீதிமன்றத்துக்கு இவ்விசாரணை பாரப்படுத்தப்பட்டது. இதில் சாட்சியமளித்தவர்கள் வாழைச்சேனை அகதி முகாமில் வசித்த அகதிகளாவர். இவர்கள் பொலநறுவைக்குச் சாட்சியமளிக்கச் செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டனர். விசாரணையைத் திரும்பவும் மட்டக்களப்புக்கு மாற்றுவதற்காக 1993 ஐப்பசி மாதத்தில் மேன்முறையீட்டு மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் சட்டரீதியற்றது எனக் காரணங்காட்டித் தள்ளுபடி செய்யப்பட்டது. 1994 பங்குனி மாதம் 8 ஆம் திகதி இறுதியாக விசாரணை முடிவடைந்தது. 24 நபர்களில் 3 பேர் விடுதலை செய்யப்பட்டு ஏனைய 21 பேர் மீது 35 பேரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டி மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் 1994 ஆம் ஆண்டு இறுதிப்பகுதி வரை வழக்கு நடைபெறவில்லை.

காணாமல் போதல் மற்றும் கொலைகள் தொடர்பான விசாரணைகளின் முடிவில் குற்றவாளிகளின் பெயர் குறிப்பிடப்பட்ட பல அறிக்கைகள் அண்மைக் காலத்தில் அதிகாரம் கொண்டவர்களினால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனினும் இக் குற்றவாளிகளுக்கெதிரான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. 1991 ஆம் ஆண்டு தை மாதத்துக்கும் 1994 ஆம் ஆண்டு இறுதிக்குமிடையில் நபர்களின் சுயவிருப்பற்ற அகற்றல் தொடர்பான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் (PCIIRP)[7] ஆகக் குறைந்தது 142 பேர் காணாமற் போனமை பற்றிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. காணாமற் போனமைக்குக் காரணமாகவிருந்த தனிப்பட்ட அதிகாரிகளுக்கு எதிரான சாட்சியங்கள் இவ்வறிக்கைகள் சிலவற்றில் உள்ளன எனக் கூறப்படுகின்றது. ஆனால் இந்தக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் எந்தவொரு வழக்கும் தொடரப்படவில்லை. மனித உரிமைச் செயலணிக் குழுவினர் (Human Rights Task Force) தமது வருடாந்த அறிக்கையில் பெருந்தொகையானோர் காணாமற் போன சம்பவங்களை வெளிப்படுத்தியதோடு இதற்குக் காரணமானவர்களையும் பெயர் குறிப்பிட்டனர். அத்தகைய சம்பவங்கள் – எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பெருந்தொகையானோர் காணாமற் போனமை – தொடர்பாக இவ்வறிக்கை எழுதப்படும் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கிழக்குப் பல்கலைக் கழகத்தில் காணாமற் போனமை தொடர்பாக மனித உரிமைகள்

---

7 4 ஆம் அத்தியாயத்தில் காணாமற் போதல் பற்றிய பகுதியைப் பார்க்கவும்.

செயலணித் தலைவர் பின்வருமாறு கூறுகின்றார். "எனது முந்திய அறிக்கைகளில் இக்கொடுமையான குற்றத்துக்குப் பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட்டு பெயர் குறிக்கப்பட்டிருந்தனர். 158 நபர்கள் கைது செய்யப்பட்டுக் காணாமற் போய், சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டிருப்பார்கள் எனக் கருதப்படும் இச்சம்பவத்தில் நம்பத்தகுந்த சாட்சியங்கள் இருந்த போதிலும் எவ்வித விசாரணையும் இதுவரை மேற் கொள்ளப்படவில்லை."[8]

எம்பிலிப்பிட்டி விவகாரம் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் சூடுபிடிக்கத் தொடங்கியது. மனித உரிமைகள் செயலணித் தலைவர் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில் அநாவசியமான தாமதங்களும், ஏற்க முடியாத காரணங்களும் சட்டமா அதிபரினால் முன்வைக்கப்படுவதாகத் தொடர்ச்சியாகக் கோரி வந்தார். எனினும் அரசாங்க மாற்றத்துக்குப் பின்னர் 9 நபர்கள் மீது (8 இராணுவ வீரர்களும் 1 பாடசாலை அதிபரும்) இக் காணாமற் போனமைக்குக் காரணமானவர்களெனக் குற்றம் சுமத்தப்பட்டனர். விசாரணைகள் 1995 ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் ஆரம்பமாக உள்ளன. இதிலும் தாமதம் பிரதி வாதிகளின் விண்ணப்பத்தினால் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வருடக் கணக்காக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலிருந்த இன்னுமொரு சம்பவம் 1988 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இரத்தினபுரியில் 3 பல்கலைக் கழக மாணவர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பானது. ஆட்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட இவ்விடயம் தொடர்பாகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான சுசாந்த புஞ்சி நிலமைக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் 1994 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ஆம் திகதி அழைப்பாணை விடுக்கப்பட்டது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த வேறு 10 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.[9]

1983 முதல் தீர்க்கப்படாதிருந்த இன்னுமொரு வழக்கு 1994 ஆம் ஆண்டு நீதிமன்றத்துக்கு வெளியே தீர்க்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு ஆடிக் கலவரத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொல்லப்பட்டவர்களின்

---

[8] மனித உரிமைச் செயலணி : வருடாந்த அறிக்கை, 10 ஆவணி 1993 – 10 ஆவணி 1994, பக். 14-15.

[9] INFORM, *Situation Report - September 1994*, Colombo

உறவினரால் கொண்டு வரப்பட்ட நஷ்டஈட்டு வழக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் தீர்க்கப்பட்டது.

4. தண்டனையிலிருந்து தப்பித்தலைத் தடுத்தல்

தண்டனையிலிருந்து விலக்குப் பெறுதலின் பல்வேறு மூலங்கள் இனங்காணப்பட்ட பின்னர் அவைகள் மிகவும் காத்திரமாகக் கையாளப்படுதல் வேண்டும். விலக்குரிமையை வழங்கும் சட்ட ஏற்பாடுகள் நீக்கப்படுவதோடு எதிர்காலத்தில் இத்தகைய ஏற்பாடுகள் கொண்டு வரப்படுமாயின் அவை எதிர்க்கப்படவும் வேண்டும். வழக்கு நடைமுறைகள் முழுமையாகவும், வெளிப்படையாகவும் நிறைவேற்றப்பட்டுக் குற்றப் பொறுப்புக்கள் ஸ்தாபிக்கப்படும் வரை மன்னிப்பு வழங்கப்படக் கூடாது. நடைமுறை ரீதியாகத் தண்டனையிலிருந்து விலக்குப் பெற உதவும் செயற்பாடுகளும் நடைமுறைகளும் தவிர்க்கப்பட வேண்டும். குற்றவாளிகள் நியாயமான முறையில் நீதிக்கு முன் கொண்டுவரப்பட வேண்டுமாயின் நீதிச் செயற்பாடுகள் விரைவாகவும், நடு நிலைமையானதாகவும் காத்திரமாகவும், வெளிப்படையாகவும் அமைந்திருப்பதோடு, குற்றம் சுமத்தப்பட்டோருக்கு நியாயமாகவும் இருக்கவேண்டும். காணாமற் போதல் அல்லது சட்ட விரோதமான கொலைகள் ஆகியவை பற்றிய வழக்குத் தொடர்தலுக்குச் சட்டவரையறைகள் இருக்கக் கூடாது. உயர் மட்டப் பாதுகாப்புக்களும் இருக்கக் கூடாது. அத்துடன் இக் குற்றங்களின் பின்னால் உள்ள உயர்மட்ட அதிகாரிகளும் அதாவது இக் குற்றங்களைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி, ஆணையிட்டவர்களுமான அதிகாரிகளும் பொறுப்பாளிகளாக்கப்பட வேண்டும்.[10] குற்றங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் வழங்கப்படும் தண்டனைகள் குற்றங்களின் பாரதூரத்தன்மைக்குப் பொருத்தமாக இல்லாதுவிடின் அங்கு நடைமுறைரீதியாக, தண்டனையிலிருந்து விலக்குப் பெறுதல் உருவாக்கப்படுகின்றது.

காணாமற் போதல் மற்றும் சட்டவிரோதக் கொலைகள் ஆகியவற்றுக்கான பொறுப்புடைமை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் பாதிக்கப்பட்டவருக்கு அவர் இல்லாது விட்டால் அவரது உறவினர்களுக்கு நிவாரணம்

---

10 பார்க்கவும், சர்வதேச மன்னிப்புச் சபை, "காணாமற் போதலும்" அரசியற் கொலைகளும், அத்தியாயம் 11, இதில் சர்வதேச மனித உரிமை நியமங்களிலிருந்து எடுக்கப்பட்ட அம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன.

வழங்கப்படவேண்டும். இது நஷ்டஈடாகவோ அல்லது புனர் வாழ்வாகவோ அல்லது மீட்டளிப்பதாகவோ இருக்கலாம். கடந்தகால நிகழ்வுகளை வெளிக்கொணர்தலும் பொறுப்பினை உத்தியோக ரீதியாக ஏற்றுக் கொள்ளலும் கூட நிவாரணம் வழங்குவதின் இன்னொரு வடிவமாகும்.

8

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் தொடர்பு சாதனங்களும்

1. அறிமுகம்

1994 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னரான தேர்தல் பிரசாரத்திலும், பின்னர் பகிரங்க அறிக்கைகளிலும் இலங்கையின் தொடர்புசாதனத் துறையை நீண்ட காலமாகப் பரவலாகப் பீடித்திருந்த தணிக்கையை முடிவுக்குக் கொண்டு வருவதுடன் தொடர்பு சாதனங்களின் சுதந்திரத்தை நிலை நிறுத்தப் போவதாகவும் பொதுசன ஐக்கிய முன்னணி கூறி வந்தது. புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின் சில மாதங்கள் தொடர்புசாதனத் துறையில் பெருமளவு சுதந்திரம் உணரப்பட்டதுடன் பல்வேறு பிரச்சினைகளும் நோக்குகளும் வெளிக் கொணரப்பட்டன. தொடர்ந்து "சுயதணிக்கைக்" கலாசாரம்– தொடர்புசாதனத் துறையினர் கடந்த காலங்களில் அனுபவித்த தொந்தரவுகள், அச்சுறுத்தல்கள் காரணமாக விருத்தியடைந்த சுயகட்டுப்பாடு – வீழ்ச்சியடையத் தொடங்கியது எனக் கூறலாம். ஐப்பசி மாதத்தில் ஒரு புதிய தொடர்புசாதனக் கொள்கை மந்திரி சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் சட்ட ரீதியானதும், நிறுவன ரீதியானதுமான பல்வேறு சீர்திருத்தங்களை அது முன் வைத்தது. இக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டன. எனினும் சனாதிபதித் தேர்தல் நெருங்க நெருங்க அரசாங்கம் தனது கட்டுப்பாட்டிலிருந்த தொடர்புசாதனங்களில் அதிக கட்டுப்பாட்டை மேற் கொள்ளத் தொடங்கியது. ஐக்கிய தேசியக் கட்சி சனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா உட்பட 55 பேர் தேர்தலுக்கு இரு வாரங்கள் இருக்கும் போது கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தொடர்புசாதனங்களில் அரசாங்கத் தலையீடு பற்றிப் பல்வேறு தகவல்கள் வெளிவரத் தொடங்கின.

1994 ஆவணி மாதம் பாராளுமன்றத் தேர்தற் பிரசாரங்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழும், 1994 கார்த்திகை மாதம் சனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழும் நடைபெற்றன. ஆனால் இவையிரண்டுமே அரசாங்கத் தொடர்பு சாதனங்களின் பக்கச் சார்பு காரணமாகவும் தொடர்புத் துறையில் அரசாங்கத் தலையீடு பற்றிய முறைப்பாடுகள் காரணமாகவும் களங்கமடைந்தன. செய்தித் தணிக்கை பற்றிய முறைப்பாடுகள் தேர்தலுக்குப் பின்னரும் நிறுத்தப்படாது 1995 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தன.

2. சர்வதேச நியமங்கள்

ஐ.சி.சி.பி.ஆர். இன் உறுப்புரை 19 ஆனது அபிப்பிராயம், வெளிப்படுத்தல் மற்றும் தகவல் சுதந்திரத்திற்கான உரிமையை உத்தரவாதம் செய்கின்றது. உறுப்புரை 19 இன் 2 வது பந்தி **"சகல விதமான தகவல்கள் மற்றும் கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, அச்சுப்பதிப்பு மூலமாகவோ அல்லது கலை வடிவமாகவோ அல்லது எத்தகைய ஊடகத்தின் மூலமாகவோ தேடவும் பெறவும், பகிர்ந்து கொள்ளவுமான சுதந்திரத்திற்குப்"** பாதுகாப்பு அளிக்கின்றது.

இவ் உரிமைகள் உறுப்புரை 19, 3 ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விசேடமான சூழ்நிலைகளில் மேற்படி உரிமைகள் சில கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகலாம். மற்றவர்களின் உரிமைகளையும், கௌரவத்தையும் காத்தல், தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கு, பொதுச் சுதந்திரம், ஒழுக்கங்கள் முதலியவற்றைப் பாதுகாக்க **"அத்தியாவசியமாக"** இருக்கும் போது சட்டத்தினால் இத்தகைய கட்டுப்பாடுகள் வழங்கப்பட வேண்டும்.

ஐ.சி.சி.பி.ஆர். இன் உறுப்புரை 4 இன் கீழ் மேற்படி உரிமைகளிலிருந்து தடையும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் **"நாட்டின் வாழ்வுக்கு அச்சுறுத்தல்"** ஏற்பட்டிருக்கும் விசேடமான சந்தர்ப்பங்களில் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும். அத்தகைய தடைகள் எதுவும் சூழ்நிலையின் அவசரத்தன்மையைப் பொறுத்தே அமைதல் வேண்டும். அத்துடன் அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் சர்வதேசச் சட்டங்களின் கீழ் அவற்றிற்குள்ள கடப்பாடுகளுக்கு எதிராக இருக்கவும் கூடாது.

3. அரசியலமைப்பு உத்தரவாதங்கள்

இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 14 ஆனது இலங்கைப் பிரசைகளின் பேச்சுரிமை, கருத்து வெளிப்பாட்டுரிமை ஆகியவற்றைப் பாதுகாக்கின்றது. ஆனால் அவ்வுரிமைகள் ஐ.சி.சி.பி.ஆர். இன் கீழ் அனுமதிக்கப்படும் அளவை விட மேலதிகமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றது. அவ் உரிமைகள் தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கத்தினைப் பாதுகாத்தல், பாராளுமன்ற விசேட உரிமைகள், நீதிமன்ற அவமதிப்பு மற்றும் அவதூறு முதலிய பல காரணங்களுக்காகக் கட்டுப்படுத்தப்படலாம். அத்துடன் கருத்துச் சுதந்திரம் பற்றிய பாதுகாப்பு "பிரசை"களுக்கு மாத்திரமே அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது. இது ஐ.சி.சி.பி.ஆர். இன் உறுப்புரை 2 (1) க்கு எதிரானதாகும். ஐ.சி.சி.பி.ஆர். இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் ஓர் அரசாங்கத்தின் பரிபாலனத்திலுள்ள சகல மக்களுக்கும் **"எவ்வித வேறுபாடுகளுமின்றி"** உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பானது தகவல் சுதந்திரத்திற்கான உத்தரவாதத்தை வழங்கவில்லை எனினும் உயர்நீதிமன்றமானது தகவலைப் பெறுவதற்கான உரிமைகளை உள்ளடக்கியுள்ள வெளியீட்டுச் சுதந்திரத்திற்கான உரிமையைப் பொருள் கோடல் செய்கின்றது.[1] எனினும் இலங்கையின் நடைமுறைச் சட்டங்களில் வெளிப்படையாக இவ்வுரிமை அங்கீகரிக்கப்படவில்லை.

4. அவசரகால அதிகாரங்கள்

ஒரு அவசரகால நிலைமையின் போது சனாதிபதிக்குள்ள தணிக்கை அதிகாரங்கள் ஐ.சி.சி.பி.ஆர். இல் கூறப்பட்டுள்ளனவற்றை விட மிக அதிகமானவை. இவ் அதிகாரங்கள் கடந்த காலங்களில் தொடர்பு சாதனங்களின் மீது பெருமளவு கட்டுப்பாடுகளை விதிக்க வழிவகுத்தது. கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கும் சில அவசரகால விதிகள் 1993 இல் மாசி, ஆனி மாதங்களில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் நீக்கப்பட்டவை. எனினும் 1993 மார்கழியில் தூண்டி விடுதல் பற்றிய ஒழுங்கு விதி மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பின்னர் 1994

---

1 விஸ்வலிங்கம் எதிர் லியனகே (1984) 2 Sri L R 132

தை மாதத்தில் திருத்தம் செய்யப்பட்டது. இவ் ஒழுங்கு விதியானது 1994 ஆடி மாதத்தில் அவசரகால நிலைமை தளர்த்தப்படும் வரை நடைமுறையிலிருந்தது.[2]

ஐ.சி.சி.பி.ஆருக்கு ஏற்ப கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் எல்லைகள் திட்டவட்டமாக அரசியல் அமைப்பில் திருத்தப்படாத வரையில் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் திரும்பவும் இக் கட்டுப்பாடுகள் பரவலாகக் கொண்டு வரப்படுவதைத் தடுத்து விட முடியாது.

5. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பாதிக்கும் ஏனைய சட்டங்கள்

1994 இல் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடிய பல சட்டங்கள் அமுலில் இருந்ததுடன் அவைகள் கொண்டிருந்த கட்டுப்பாடுகள் ஐ.சி.சி.பி.ஆர். இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை விட அதிகமானவை. அவையாவன:

- உத்தியோக இரகசியங்கள் சட்டம்.
- மந்திரி சபைத் தீர்மானங்கள், செயற்பாடுகள் மற்றும் ஆவணங்கள் பற்றிய பத்திரிகைக் கவுன்சில் சட்டத்தின் 16 ஆம். பிரிவு
- இராணி / சனாதிபதியை அவமதிப்பது பற்றிய குற்றவியல் கோவையின் 118 ஆம் பிரிவு.
- "தூண்டுதல்" பற்றி ஒரு பரந்த வரைவிலக்கணத்தை வழங்கும் குற்றவியல் கோவையின் 120 ஆம் பிரிவு.
- குற்றவியல் அவதூறு பற்றிய குற்றவியல் கோவையின் 479 ஆம் பிரிவு.
- பாராளுமன்றத்தை அல்லது உறுப்பினரின் நடத்தை பற்றிய அவதூறு கூறும் கூற்றுக்கள் பற்றிய 1953 ஆம் ஆண்டு பாராளுமன்ற (அதிகாரங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்துக்கான நான்கு திருத்தங்கள்.

---

2 அவசரகால ஆட்சி பற்றிய 3 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

அத்துடன் பயங்கரவாதத் தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமும் (பி.ரி.ஏ) அமுலில் உள்ளது. இச்சட்டத்தில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உட்படப் பல அடிப்படை மனித உரிமைகளை மீறும் முன்னேற்பாடுகள் காணப்படுகின்றன.[3] வருட முடிவிற்குள் இச்சட்டங்களில் எதுவும் திருத்தப்படவில்லை.

6. பத்திரிகைகள்

1994 இல் அச்சிடப்பட்ட பத்திரிகைகளின் தொகை 24, அவற்றில் 14 சிங்களத்திலும், 7 தமிழிலும், 7 ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டன. 4 ஆங்கில வாரப் பத்திரிகைகளும், 3 ஆங்கிலச் செய்திச் சஞ்சிகைகளும் இருந்தன. சிங்கள மாற்றுக் கருத்துப் பத்திரிகைகள் உயிர்த்துடிப்புடன் விளங்கின. 9 தேசியப் பத்திரிகைகளில் 5 சிற்றேடுகளாகவும், பல வாரப் பத்திரிகைகளாகவும் இருந்தன. தமிழில் இரண்டு தினசரிகளும், இரண்டு வாராந்தப் பத்திரிகைகளும் தென்னிலங்கையில் வெளியிடப்பட்டன. பிரதேச ரீதியான பத்திரிகைகள் மிகவும் அரிது. வடக்கில் 3 தமிழ் தினசரிகளும் ஓர் ஆங்கில வாராந்தச் செய்திச் சுருக்கமும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினால் வெளியிடப்படுகின்றன.

சிங்கள சஞ்சிகைத் துறையானது பன்முகப்பட்ட பொழுது போக்கு அம்சங்களைச் சார்ந்துள்ளது. இதில் சமகால சமூகப் பிரச்சினைகளுக்கு முதன்மைதரும் சஞ்சிகைகள் முக்கியத்துவம் பெறவில்லை. நகரங்களில் சிற்றேடுகள் அல்லது மாற்றுக் கருத்துப் பத்திரிகைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

7. "எலக்ரோனிக்" தொடர்பு சாதனங்கள்

நாட்டிலுள்ள 6 தொலைக் காட்சிச் சேவைகளில் 4 தனியார் துறையினால் நடத்தப்படுகின்றன. அவற்றில் ரூபவாஹினி, ஐ.ரி.என் என்பவை மிகவும் பெரிய தொலைக்காட்சி வலைப்பின்னல் அமைப்பாக விளங்குவதுடன் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் செயற்படுகின்றன. ரெல்ஷான், ஈ.ரி.வி. ஆகிய இரண்டும் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு

---

[3] பார்க்க உறுப்புரை 19, *An Agenda for change : The Right to Freedom of Expression in Sri Lanka* (London, October 1994).

வந்த பின்னர் தமது சுதந்திரமான நிகழ்ச்சிகளை அதிகரித்துள்ளன. ஆனால் அவை இன்னும் வெளிநாட்டு நிகழ்ச்சிகளிலேயே தங்கியுள்ளன. எம்.ரி.வி. முழுமையான அரசியற் சார்பற்றது. அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள தொலைக்காட்சிச் சேவைகளே ஏனைய சேவைகளை விட வலிமை மிகுந்திருப்பதோடு பரந்த பார்வையாளர்களையும் சென்றடைகின்றன.

1994 வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வானொலி ஒலிபரப்புக்களில் தனியுரிமையைக் கொண்டிருந்தது. அதன் பின்னர் ஒரு சிங்கள தனியார் ஒலிபரப்புச் சேவையும், ஓர் ஆங்கில ஒலிபரப்புச் சேவையும் தொடங்கப்பட்டன. இவை இரண்டும் பெருமளவுக்குப் பொழுது போக்கு அம்சங்களையே தமது ஒலிபரப்பில் கொண்டுள்ளன.

8. 1994 இல் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தொடர்பு சாதனக் கொள்கையும் தணிக்கை பற்றிய அறிக்கைகளும்

1994 ஆவணி மாதம் வரை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவி வகித்த காலம் முழுவதும், குறிப்பாக பாராளுமன்றத் தேர்தலுக்கு முந்திய காலத்தில் தொடர்பு சாதனங்களில் அரசாங்கம் முழுக் கட்டுப்பாட்டையும் கொண்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரச கட்டுப்பாட்டிலிருந்த தேசியப் பத்திரிகைகளையும் ரூபவாஹினியையும் தமது தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டது. எதிர்க்கட்சிகளுக்குச் சட்ட ரீதியாக வழங்கப்பட்ட தொலைக்காட்சி நேரம் கட்டுப்படுத்தப்பட்ட அதே வேளை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமானது தேசிய தொலைக்காட்சிச் சேவையைத் தனது பிரசாரக் கருவியாக வெளிப்படையாகவே பயன்படுத்திக் கொண்டது. சுதந்திரமான பத்திரிகைகள் தொல்லைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டன. ஒரு பொதுக் கூட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவான பத்திரிகையாளர் குழுவினர் விசேட அதிரடிப்படை உறுப்பினர் ஒருவரால் பயமுறுத்தப்பட்டனர்.

புதிய அரசாங்கம் ஆட்சி அமைத்த பின்னர் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பெருமளவுக்கு அனுபவிக்கக் கூடியதாக இருந்தது. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொடர்பு சாதனச் சுதந்திரத்தை மீண்டும் வழங்குவதாகப் பகிரங்கமாக உறுதியளித்தது. அத்துடன் தன்னுடைய

தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தனது தொடர்புசாதனக் கொள்கையை வெளிப்படுத்தியிருந்தது. கார்த்திகை மாதத்தில் புதிய தொடர்பு சாதனக் கொள்கையை மந்திரி சபை அங்கீகரித்ததுடன் இக் கொள்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் அல்லது அரசியல் கட்டுப்பாட்டிலிருந்து தொடர்பு சாதனங்கள் விடுவிக்கப்படுமெனவும், தொடர்பு சாதனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்குப் புதிய நிறுவனங்கள் உருவாக்கப்படுமெனவும் பத்திரிகை மற்றும் 'எலக்ரோனிக்' தொடர்பு சாதனங்களின் தரமும் பண்பும் உயர்த்தப்படுமெனவும் உறுதியளிக்கப்பட்டது' **"ஒரு புதிய சனநாயகத் தொடர்புச் சாதனக் கலாசாரம் முன்வைக்கப்படுமெனவும்" தமது தொழில்சார் கடமைகளைச் செய்யும் பத்திரிகையாளர்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரச முகவர்கள் அல்லது வேறெவரும் அச்சுறுத்தவும், தாக்குதல் மேற் கொள்ளவுமான வெறுக்கத்தக்க நடைமுறைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படுமெனவும்"** உறுதி கூறப்பட்டது. தொடர்பு சாதனச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் பல விசேட நடவடிக்கைகள் இக் கொள்கைப் பிரகடனத்தில் பட்டியல் படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அவற்றில் "எலக்ரோனிக்" தொடர்பு சாதனங்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே தொடர்பு சாதனங்கள் எப்படி அரசாங்கக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படும் என்பது பற்றி எவ்வித விளக்கமும் இல்லை. அரசாங்க உடமையான "லேக் ஹவுஸ்" நிறுவனத்தின் பங்குடமையைப் பரவலாக்குதல், பத்திரிகைகளின் தொழில் சார் தேவைகளுக்கான ஒரு தேசியத் தொடர்பு சாதன நிறுவனத்தை அமைத்தல் மற்றும் சட்டச் சீர்திருத்தம் ஆகியவை இந்த ஏற்பாடுகளில் அடங்கும்.

1994 கார்த்திகை, மார்கழி மாதங்களில் தொடர்பு சாதன அமைச்சர் பின்வரும் 4 விடயங்களில் தொடர்பு சாதனக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான விதந்துரைகளைச் செய்யுமாறு நான்கு குழுக்களை அமைத்தார்.

(1) சட்டச் சீர்திருத்தம் (2) தொடர்பு சாதன நிறுவனத்தை நிறுவுதல் (3) தொடர்பு சாதன ஊழியர்களின் சம்பளங்கள், ஓய்வூதியங்கள், தொழில்சார் நன்மைகள் மற்றும் சேவை நிலைமைகளை முன்னேற்றுதல். (4) 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் உடமையைப் பரவலாக்குதல். தமது அறிக்கைகளைத் தொடர்பு சாதன அமைச்சுக்குச் சமர்ப்பிப்பதற்கு இக் குழுக்களுக்கு மூன்று மாதகால அவகாசம் வழங்கப்பட்டது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆரம்ப நாட்களில் அவர்களது தொடர்பு சாதனக் கொள்கை பாரிய சோதனைக்கு ஆளாகியது. திருப்தியின்மையை வெளிப்படுத்துவதற்கும், அரசியல் மாற்றீடுகளை முன் வைத்தல் போன்றவற்றிற்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்ட போதும் சனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது இந்த அரசாங்கமும் முன்னைய அரசாங்கத்தைப் போலவே அரசு கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பு சாதனங்களைத் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. சனாதிபதி வேட்பாளரான காமினி திசாநாயக்கா ஒரு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையாளியினால் கொலை செய்யப்பட்ட பின்னர் அரசாங்கத்தின் நேரடியான தலையீடு தொடர்புசாதனங்களில் ஆரம்பமானது.

புதிய அரசாங்கம் உடனடியாகவே எல்.ரி.ரி.ஈ. யுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கிய அதே நேரத்தில் இப் படுகொலைக்கு யார் பொறுப்பு என்பது மிகவும் சிக்கல் வாய்ந்த பிரச்சினையாக மாறியிருந்தது. அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பு சாதனங்களின் செய்தியாளர்கள் எல்.ரி.ரி.ஈ. தான் இப்படுகொலைக்குக் காரணம் எனச் செய்தி வெளியிடாதிருக்குமாறு பணிக்கப்பட்டனர். அரசியல் அழுத்தத்தின் காரணமாக எல்.ரி.ரி.ஈ. யைச் சம்பந்தப்படுத்தும் அறிக்கைகள் வாபஸ் பெறப்பட்டன. இவ்விடயம் தொடர்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தியறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்கள் சில கற்பனையானவை எனக் கூறப்பட்டன.[4] 1994 ஐப்பசி மாதம் 28 ஆம் திகதி "டெய்லி நியூஸ்", "தினமின" ஆகிய பத்திரிகைகளின் முதற் பக்கங்கள் பிரதம மந்திரியின் காரியாலயத்தில் வைத்துத் திருத்தம் செய்யப்பட்டன. சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கத்தின் கூற்றின்படி டெய்லி நியூஸ் பத்திரிகையின் 17,000 பிரதிகளும், தினமின பத்திரிகையின் 25,000 பிரதிகளும் வாபஸ் பெறப்பட்டு புதிய பிரதிகள் முன் பக்கத் திருத்தங்களுடன் திரும்பவும் அச்சிடப்பட்டன. தலைப்புச் செய்தி "நான் **பாதுகாப்புப் படைகளில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன்" - பிரதமர்** என மாற்றப்பட்டது. அடுத்து வந்த பல நாட்களில் இப் பத்திரிகைகளின் முதற் பக்கம் அச்சிடப்படுவதற்கு முன்னர் அலரி மாளிகைக்கு அனுப்பப்பட வேண்டியிருந்தது. ஆனால் வேறுமாற்றங்கள் செய்யப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. பொதுவாக அரச

---

4 சுதந்திர பத்திரிகையாளர் இயக்கம் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கை: *Misuse of state media organs and interfering with private - owned media* **by the PA Government for the election compaign** (3 கார்த்திகை 1994)

கட்டுப்பாட்டின் கீழிருந்து தொடர்பு சாதனங்களின் செய்தியாளர் அறிக்கைகள் பல்வேறு வழிகளில் கட்டுப்படுத்தப்பட்டன. இதைப் பற்றித் தொடர்பு சாதன அமைச்சரிடம் கேள்விகள் கேட்கப்பட்ட போது நேரடித் தலையீட்டினை அவர் ஒத்துக் கொண்டதுடன் சில தனிநபர்கள் "அளவுக்கதிகமான ஆர்வத்துடன்" சனாதிபதிக்குத் தெரியாதவாறு செயற்படுகிறார்கள் எனவும் பதிலுக்கு குற்றம் சாட்டினார். ஆனால் இவ்வாறு பகிரங்கமாக ஏற்றுக் கொண்டமை தேர்தலுக்கு பின்னராக அமைந்தமையினால் சமநிலையற்ற தேர்தல் பிரசாரத்தை மாற்றியமைப்பதற்குக் காலம் கடந்துவிட்டது.[5]

சிங்களப் பத்திரிகையான "திரிசூல்" இன் ஆசிரியர் மக்களை வன்முறைக்குத் தூண்டி விட்டார் எனப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். 1994 கார்த்திகை 7 ஆம் திகதி தனது பத்திரிகையில் வெளியிட்ட ஒரு கட்டுரையில் எல்.ரி.ரி.ஈ. – அரசாங்கப் பேச்சுவார்த்தை காரணமாகச் சிங்கள மக்களின் உரிமைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் எனவே அவர்கள் "கிளர்ந்தெழ" வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவரைக் கைது செய்தது சட்ட விரோதமெனக் கூறப்பட்டு அவருக்கெதிரான குற்றச் சாட்டுக்கள் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டன.[6]

அரச பத்திரிகைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று விளம்பரங்களைத் தணிக்கை செய்ததாக அக்கட்சி முறைப்பாடு செய்தது. தேர்தல் பிரசாரத்தின் போது ரூபவாஹினியின் ஒளிபரப்புப் பற்றிப் பல்வேறு முறைப்பாடுகள் எழுப்பப்பட்டன.அத்துடன் 'டெய்லி நியூஸ்' பத்திரிகையின் நடுப்பக்கக் கட்டுரைகள் பொதுசன ஐக்கிய முன்னணியின் விளம்பரங்களுக்கான விளக்கவுரை எனவும் கூறப்பட்டது.

சனாதிபதித் தேர்தலின் போது தணிக்கையைப் பற்றிய கலந்துரையாடலும் தணிக்கைக்கு உள்ளானது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கல்விச் சேவையின் தணிக்கை தொடர்பான ஒரு நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட அனுமதிக்கப்படவில்லை.[7] தேர்தல் முடிந்த பின்னரும் வானொலியில் தணிக்கை தொடர்ந்தது. உதாரணமாக 1994 மார்கழியில் பௌத்த

---

5 பார்க்கவும், INFORM *Situation Report* - கார்த்திகை 1994: மற்றும் உறுப்புரை 19. *Words into Action: Censorship and Media Reform in Sri Lanka*, Censorship News Issue 39 (பங்குனி 1995)

6 INFORM, *Situation Report* - கார்த்திகை 1994

7 பார்க்க, உறுப்புரை 19, *Words in to Action*, supra n 5

சமயத்துக்கும் மதச் சார்பற்ற இலங்கைக்கும் உள்ள தொடர்பு என்னும் நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவது தடை செய்யப்பட்டது.

தேர்தல் அல்லது கட்சி அரசியல் சாராத வேறு விடயங்களிலும் அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகைகளில் தணிக்கை அமுல்படுத்தப்பட்டது. உதாரணமாக இலங்கையின் "முஸ்லிம் இளைஞர் சங்கத்தின் சர்வதேச சபை" (IAYMMA) ஒரு புதிய தொழுகை அட்டவணை தொடர்பாக நேரம் சரியாகக் கணிக்கப்படவில்லை எனக் கூறியதுடன், அவ் விடயம் தொடர்பாகத் தன்னுடைய கருத்துக்களை வெளியிட அரச பத்திரிகையான "தினகரன்" இடம் தரவில்லை என இச்சங்கம் முறைப்பாடு செய்தது. இப்பத்திரிகைக்கு அவ்வாறு செயற்படுவதற்கு ஒரு பிரதி அமைச்சரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது என இச் சங்கம் கூறியது. 1994 மார்கழி மாதத்தில் தனது கருத்துக்களைக் கொண்ட ஒரு விளம்பரத்தைப் பணம் செலுத்திப் பிரசுரிக்க "ஒப்சேவர்" பத்திரிகை மறுத்து விட்டதுடன் அதனைப் பிரசுரிக்க முஸ்லிம் கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுமதியை முன் கூட்டியே பெற வேண்டுமெனவும் இச் சங்கத்துக்குக் கூறப்பட்டது.[8]

1995 ஆம் ஆண்டு வரை தொடர்பு சாதனங்களில் அரச தலையீடும் தணிக்கையும் தொடர்ந்திருந்ததாகக் கூறப்பட்டது.[9] தொடர்பு சாதன அமைச்சர் இத்தகைய சம்பவங்கள் சிலவற்றுக்காகக் கவலை தெரிவித்து அவை தொடர்பாக விசாரணை செய்யப்படுமெனக் கூறினாலும் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை.

9. முடிவுரைகளும் விதந்துரைகளும்

தொடர்பு சாதனச் சுதந்திரம் உறுதிப் படுத்தப்பட வேண்டுமாயின் சட்டரீதியானதும் நிறுவன ரீதியானதுமான சீர்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்பது தெளிவானதாகும். இவ்வாறான ஏற்பாடுகள் இல்லாத நிலையில் அரசாங்கமோ அல்லது அதன் பகுதிகளில் சிலவோ "தேவையான" சந்தர்ப்பங்களில் தொடர்பு சாதனங்களில் அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும். அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட

---

8 *Ibid*

9 INFORM, *Situation Reports*: உறுப்புரை 19. *Words into Action*, supra n 5

நான்கு குழுக்களும் உரிய நேரத்தில் மட்டுமில்லாது 1995 வரை தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை. இவ்வறிக்கைகள் வெளியிடப்பட்டு நல்ல முறையில் ஆய்வு செய்யப்பட்ட பின்னர் அரசாங்கம் தமது கொள்கையை அமுல் படுத்த உடனடியாக இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் அரச கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் மட்டுமல்லாது அரசாங்க ஒளி/ஒலி பரப்புச் சாதனங்களும் எவ்வாறு பூரண செய்திச் சுதந்திரத்தைக் கொண்டிருக்க முடியும் என்பது பற்றியும் பூரணமாகக் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.[10]

தொடர்பு சாதனங்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கச் சட்டரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் வடிவமைக்கப்பட்ட சீர்திருத்தங்களானது, பத்திரிகையாளர்கள் தமது தொழில் சார் திறன்களை வளர்த்துக் கொள்ளும் சூழலை உருவாக்க மிகவும் அவசியமானவை. அத்துடன் ஒரு சுதந்திரப் பத்திரிகைத் துறைக் கலாசாரத்தை அமைப்பதில் பத்திரிகையாளரும் தொடர்புத் துறை நிறுவனங்களும் அரசியல் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும் வரை மேற்கூறிய பல பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகளைக் காணமுடியாது.

---

[10] பார்க்க, உறுப்புரை 19, supra n 5

9

கலாசார உரிமைகள் : கலைத்துவ கருத்து வெளிப்பாட்டுக்கான உரிமை

1 அறிமுகம்

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் உறுப்புரை 27 (2) (எ) "மக்களின் ஒழுக்கம் மற்றும் கலாசார நியமங்களை உயர்த்துதல், மனித ஆளுமையின் முழு வளர்ச்சியை உறுதிப்படுத்தல் ஆகியன அரச கொள்கையை வழிநடத்தும் கோட்பாடுகளாக இருக்கும் எனக் கூறுகின்றது. அரசியல் யாப்பின் மூன்றாம் அதிகாரத்தில் உறுப்புரை 14 (1) (அ) இல் வெளியீட்டுரிமை உட்பட பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் ஒவ்வொரு பிரசையினதும் உரிமை என ஏற்கப்பட்டுள்ளது) எனினும் உறுப்புரை 15 (2) இன் மூலம் இவ்வுரிமையைப் பிரயோகித்தல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவின் படி கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமானது **"இன, மத ஒற்றுமை அல்லது பாராளுமன்றத்தின் சிறப்புரிமை, நீதிமன்றத்தை அவமதித்தல், அவதூறு, குற்றம் புரியத் தூண்டுதல்"** ஆகியன தொடர்பாக சட்டத்தின் கட்டுப்படுத்தலுக்கு உட்பட்டது. எனவே இலங்கையின் அரசியல் யாப்பின் படி அரசானது கலாசாரத்தின் பாதுகாவலனாகவும், கலாசார வெளிப்பாட்டை ஊக்குவிக்கும் கருவியுமாக விளங்குகின்றது. ஆனால் பாதுகாவலுக்குரிய தவிர்க்க முடியாத கட்டுப்பாட்டையும் அது கொண்டுள்ளது.

இலங்கையின் அரசியல் யாப்பின்படி கருத்துச் சுதந்திரத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் ஐ.சி.சி.பி.ஆர் (ICCPR) இல் அனுமதிக்கப்பட்டதை விட அதிகமானது. உறுப்புரை 19 (3) ஆனது மற்றவர்களின் உரிமைகள் அல்லது கௌரவத்தைப் பாதுகாப்பதற்கும்,

தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கு அல்லது பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும் "அவசியம்" என்று சட்டத்தால் விதிக்கப்பட்டால் மாத்திரமே கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது.

1956 க்கு முன்னர் வரலாற்று ரீதியாக இலங்கை அரசு கலாசாரம் மற்றும் கலைகளைப் பொறுத்தவரையில் ஒரு தலையிடாக் கொள்கைப் போக்கையே கொண்டிருந்தது. இலங்கைக் கலைக்கழகம் (Art Council) பொது அவைக்காற்றுச் சட்டத்தினடிப்படையில் அமைக்கப்பட்ட தணிக்கைச் சபை ஆகியவை இருந்த போதிலும் கூட இத் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. அந்நேரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கலாசாரம் கற்றோர்களினுடையதாகவே இருந்ததுடன் முக்கிய நிறுவனமும் உதவி செய்தது. பிரச்சினைக்குரிய சமூக, அரசியல் நிகழ்வுகளைப் பற்றிய நாடகங்களும், சினிமாக்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே தணிக்கைச் சபைகளின் பணி மிகவும் எளிதாகவே இருந்தது. ஆனால் 1956 இன் பின்னர் கலைகள் மற்றும் அவைக்காற்றுதல் கலாசாரத்தில் தலையிடத் தொடங்கின. கலாசார விவகார அமைச்சும் ஏனைய உத்தியோக ரீதியான அமைப்புக்களும் அமைக்கப்பட்டமை இதனைக் காட்டி நிற்கின்றது. எனினும் இதே காலத்தில் கலைப்படைப்புக்களில் ஒருவித உத்வேகம் ஏற்பட்டது. எழுத்தறிவு, கல்வியறிவு முதலியவை இக்காலத்தில் வளர்ச்சியடைந்தமையினால் நாடகம், சினிமா, இலக்கியம் ஆகியவற்றை இரசிக்கும் கூட்டத்தினர் பெருகினர். இவ்வகையான சமூக வளர்ச்சியின் பின்னணியில் தான் அரசானது இவ்விடயத்தில் இரட்டைத் தன்மை (வளர்த்தலும் கட்டுப்படுத்தலும்) கொள்ள வேண்டியிருந்தது. இதனால் அரசின் பங்கு பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் எழுந்தன. அத்துடன் அரசின் கலாசார ஈடுபாடானது இதே காலத்தில் வளர்ச்சியடைந்த சிங்களத் தேசிய வாதத்தின் அரசியல் தலைமையுடன் இணைந்தது. எனவே கடந்த நான்கு தசாப்தங்களாக அரசாங்கத்தின் கலை, இலக்கிய உதவிகளானது சிங்கள கலாசாரக் குழுக்கள், சிங்களப் படைப்பாளிகள் ஆகியோரையே கூடியளவு சென்றடைந்தது. சிறுபான்மையினரின் கலாசார நடவடிக்கைகளுக்குக் குறிப்பிடத்தக்க உதவிகள் கிடைக்கவில்லை.

2. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கலாசாரக் கொள்கை

1994 பொதுத் தேர்தலில் வெற்றியடைந்த பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மிகப் பிரதான பகுதியாகக் காணப்பட்ட கலாசாரக் கொள்கை பற்றிய அதிகார பூர்வமான அறிவித்தலில் பின்வரும் உறுதி மொழிகள் காணப்பட்டன:

> *முழுமையான அபிவிருத்திக்குத் தேவையான பரிமாணமாகவும், திட்டமிடலில் ஒரு முக்கிய கூறாகவும், தேசிய ஒன்றிணைப்பின் ஊடகமாகவும் கலாசாரம் விளங்குகின்றது என்பதைப் பொதுசன ஐக்கிய முன்னணி ஏற்றுக் கொள்கின்றது.*
>
> *இதனை நடைமுறைப் படுத்துவதற்காகக் கலாசாரக் கொள்கை மற்றும் திட்டமிடலுக்கான ஒரு தேசிய சபை அமைக்கப்படும். சமூகத்தின் தேவைகளையும், அது விரும்பும் மாற்றங்களையும் கவனத்தில் கொள்ளும் விதத்தில் இச் சபையானது நெகிழ்வான திட்டங்களைக் கொண்டிருக்கும். இச் சபையில் சகல இனக் குழுக்களும் சமயங்களும், பிரதேசங்களும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் அதேவேளை அது நேரடியாகப் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டியுமிருக்கும்.*
>
> *கலைகளினதும் இலக்கியத்தினதும் தனித்துவம் பேணப்படும் அதேவேளையில் தேசிய கலைக்கழகம் மற்றும் சாகித்திய மண்டலம் ஆகியவற்றின் தனித்துவமும் பேணப்பட்டு, அரச உதவி அதிகரிக்கப்படுவதுடன் அவற்றில் அரசின் தலையீடும் மிகவும் குறைந்த மட்டத்தில் கட்டுப்படுத்தப்படும்.*

அரசின் கலாசார நிறுவனங்களின் தனித்துவத்தைப் பேணும் இவ்வுறுதி மொழிகள் பாராட்டுதற்குரியது. கடந்த நான்கு தசாப்தங்களாகக் கலாசாரத்தின் மீது திணிக்கப்பட்டிருந்த அதிகாரத்துவக் கட்டுப்பாடுகள் இவற்றின் மூலம் அகற்றப்படும் வாய்ப்பு உள்ளதெனினும் 1994 ஆம் ஆண்டின் இறுதிவரை கலாசாரக் கொள்கைக்கான இத் தேசியக் கழகம் நிறுவப்படவில்லை. கடந்த கால நடைமுறைகளின்றும் ஒரு போற்றுதற்குரிய மாற்றம் என்னவெனில் தேசிய இலக்கிய விழாவில் (1994 மார்கழியில் நடை பெறவேண்டிய இவ்விழா 1995 தை மாதத்திலேயே நடந்தேறியது) தமிழ், சிங்கள, ஆங்கில இலக்கியங்களுக்கு இடம் கொடுக்கப்பட்டதோடு

அவ்வவ் மொழிகளில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டமையாகும். இது நாட்டின் கலாசாரம் பன்முகத்தன்மையை ஏற்றுக் கொண்ட செயற்பாட்டில் முதலாவது நடவடிக்கையாகும் என்பதால் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும். இது நாட்டின் கலாசார அமைச்சின் ஏனைய நடவடிக்கைகள் கலாசாரத்தின் தனித்துவத்தைப் பேணுவதாக வழங்கப்பட்ட உறுதி மொழிகளுக்கு இசைவானதாக இருக்கவில்லை. கலைக்கழகமும் அதனுடைய குழுக்களும் (பல்வேறு கலாசார நடவடிக்கைக் குழுக்கள்) மீளமைக்கப்பட்டன. கலைக்கழகச்சட்டத்தின் படி அதன் உறுப்பினர்களே இக் குழுக்களின் உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும். ஆனால் இவர்கள் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டனர். கலைக்கழகத் தலைவர் வெறுமனே நியமனக் கடிதங்களில் கையெழுத்திட்டார். கலைக்கழகத்தின் தலைவரான பேராசிரியர் எம்.பி. ஆரியபால இவ்வுண்மையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய ஒரு நேர் முகத்தில் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆங்கில இலக்கியக் குழுவின் தலைவரான பேராசிரியர் டி.சி.ஆர்.ஏ.குணதிலக்க "த ஐலண்ட்"[1] பத்திரிகைக்கு எழுதிய அவரது கடிதத்தில் இவ்வுண்மையை மேலும் வலியுறுத்தியுள்ளார். குழுவின் தலைவரும், உறுப்பினர்களும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்படுகின்றார்கள்.

3. தணிக்கை

3.1 தணிக்கையும் இலக்கியம், ஓவியம், நாடகங்கள் மற்றும் திரைப்படங்களும்

கலாசாரம் தொடர்பான அரச கொள்கைகளில் ஓர் இருமைத் தன்மை காணப்படுகின்றது. இது கோட்பாடு தொடர்பான பல கேள்விகளை எழுப்புகின்றது. இலக்கியம், ஓவியம் முதலிய மரபு ரீதியான கலைகள் சாதாரண காலத்தில் தணிக்கைகளுக்கு உட்படாவிட்டாலும் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் தணிக்கைக்கு இவையும் உட்படுகின்றன. எனினும் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் அல்லது தூண்டுதல், ஆபாசம், அவதூறு, வன்முறையைத் தூண்டுதல் முதலியன தொடர்பான சட்டத்தின் கீழ் ஒரு நாவலாசிரியரையோ அல்லது ஓர் ஓவியனையோ நீதிமன்றத்தில் நிறுத்த முடியும். ஆனால் அத்தகைய நடவடிக்கை

---

[1] 13 மார்ச் 1995

பிரச்சினைக்குரிய படைப்பின் பிரசுரத்திற்குப் பின்னராக அமைதல் வேண்டும். குற்றச்சாட்டுக்கள் ஒரு நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இதனை வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இலக்கியமும் ஓவியமும் வெளியிடப்படும் முன்னர் அல்லது காட்சிக்கு வைக்கப்படுவதற்கு முன்னர் தணிக்கை செய்யப்பட முடியாது. அவ்வாறான தணிக்கையை மேற்கொள்ளச் சட்டரீதியான அதிகாரம் எவருக்கும் வழங்கப்படவில்லை.

நாடகங்களும், திரைப்படங்களும் பொது அவைக்காற்றுச் சபையினால் தணிக்கைக்கு உட்படுகின்றன. சட்டத்தின் படி சங்கீத, நடன நிகழ்ச்சிகளும் கூடத் தணிக்கைக்கு உட்படுத்தப்படலாமெனினும் நடைமுறையில் இக்கலைகள் தணிக்கைக்கு உட்படுத்தப்படுவதில்லை. இலக்கியம், ஓவியம் ஆகியவற்றை விட நாடகமும், சினிமாவும் "ஆபத்தானவை" யாகக் கருதப்படுவதினால் வெளியீட்டுக்கு முன்னர் அவை தணிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றன. ஏனெனில் இவ்வாறு செய்யாது விட்டால் அவற்றின் தாக்கம் அரசியல் ஒழுக்க நியமங்களை ஆபத்துக்குள்ளாக்கி விடும் என்று அரசு கொண்டிருக்கும் அர்த்தமற்ற பயமே இதற்குக் காரணமாகும். ஆனால் சங்கீதம், நடனம், இலக்கியம், ஓவியம் அல்லது சிற்பம் ஆகியவைகள் வெளியீட்டுக்கு முன்னரே தணிக்கைக்கு உட்படுவதில்லை என்பதால் ஆபாசத்துக்கோ அல்லது சீரழிவு நடவடிக்கைகளுக்கோ காரணமாவதில்லை. ஏனெனில் கவிஞர்கள் பொதுசன அபிப்பிராயமும், சட்டமும் இவ்விடயங்களில் ஏற்படுத்தியிருக்கும் தடைகளை அறிவார்கள். எனவே நாடகமும் திரைப்படங்களும் வெளியீட்டுக்கு முன்னரான தணிக்கைக்கு உட்படுத்தப்படாவிட்டால் சீரழிவான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் என நம்புவதற்குத் தகுந்த காரணங்களில்லை.

ஒரு நாவலாசிரியரோ அல்லது வெளியீட்டாளரோ ஆபாசம் அல்லது அவதூறு தொடர்பான குற்றத்துக்காக ஒரு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டால் தம்மைச் சட்டரீதியாகப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு. அத்துடன் அவர்கள் மீதான குற்றங்கள் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்படவும் வேண்டும். ஆனால் தணிக்கைச் சபை இத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்படுவதில்லை. சட்டத்தின்படி, தாம் தடை செய்தமைக்கான காரணங்களைக் கூட கூறவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. இதனால் ஒரு தலைப்பட்சமான, அகவயமான முடிவுகளை அவர்களால் எடுக்க வாய்ப்புள்ளது. தணிக்கைச் சபையின் முடிவுக்கு எதிராக, அவ்விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு மேன் முறையீடு செய்ய முடியும். ஆனால் அமைச்சரின்

முடிவே "இறுதியானதும் முடிவானதுமாகும்." ஒரு திரைப்படம் அல்லது நாடகம் தடை செய்யப்பட்டால் நடை முறையில் நடப்பதென்னவெனில் நாடக எழுத்தாளருக்கும் அல்லது தயாரிப்பாளருக்கும் தணிக்கைச் சபையினருக்குமிடையில் பேச்சுவார்த்தை இடம் பெறும். முடிவில் சில வேளைகளில் சில நீக்கங்களுடன் நாடகம் அல்லது படம் மேடையேறும் அல்லது திரையிடப்படும். 1993 இல் தடைசெய்யப்பட்ட பல திரைப்படங்கள் இச் செயன் முறையின் மூலம் 1994 இல் திரையிடப்பட்டன. எனினும் "ஒழுக்கம்" தொடர்பாகத் தடுத்து வைக்கப்பட்ட திரைப்படமான "சுரங்கன யகன" அவ்வருடத்தின் முடிவிலும் வெளியிடப்படவில்லை.

நாடகம் மற்றும் திரைப்படங்களில் செய்யப்படும் தணிக்கைகளின் அளவை அளவிடும் போது தணிக்கைச் சபையினால் நேரடியாகச் செய்யப்படும் தணிக்கைகளை மட்டும் கவனத்தில் கொள்வது போதுமானதல்ல. தணிக்கைச் சபையினால் செய்யப்படும் தடைகளும், வெட்டுக்களும் மட்டுமே வெளிப்படையாகத் தெரிகின்றன. இவற்றைத் தயாரிப்போர் உத்தியோக பூர்வமான தணிக்கைகளுக்குப் பயந்து மேற் கொள்ளும் சுயதணிக்கைகள் வெளியில் தெரிவதில்லை. திரைப்படங்களைப் பொறுத்தவரையில் இது மிகவும் முக்கியமான ஊக்கமிழக்கச் செய்யும் காரணியாகும். ஏனெனில் தயாரிப்பாளர்கள் தணிக்கைச் சபையின் தடை மூலம் தமது முதலீட்டுக்கு ஆபத்து ஏற்படுவதை விரும்புவதில்லை.

தணிக்கைச் சபை வெளிநாட்டு, உள்நாட்டுத் திரைப்படங்களைப் (சிங்கள மொழிப் படங்கள்) பொறுத்தவரையில் இரட்டைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக அதன்மீது அடிக்கடி முறைப்பாடுகள் எழுகின்றன. தேசிய திரைப்படங்களை விட வெளிநாட்டுத் திரைப்படங்களில் இடம் பெறும் பாலுறவு மற்றும் வன்முறைக் காட்சிகளில் தணிக்கைச் சபை ஓரளவு தாராள மனப்பான்மையைக் கடைப்பிடிக்கின்றது.

3.2 அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புச் சாதனங்களில் தணிக்கை

தொலைக்காட்சியும், வானொலியும் தணிக்கைச் சபையின் கட்டுப்பாட்டில் இல்லையெனினும் தொலைக்காட்சியை இதன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் ஆலோசனை பற்றி இவ்வத்தியாயத்தில் பின்னர் கூறப்படும். எனினும் தேசிய தொலைக்காட்சி மற்றும் வானொலிச் சேவைகள் தமது நாளாந்த நிகழ்ச்சிகளில் கலை சார்ந்த நிகழ்ச்சிகளையும் கொண்டுள்ளன. அவைகள் தமது சொந்தத் தணிக்கை முறைகளையும்

அதிகார சபைகளையும் கொண்டுள்ளன. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தயாரிக்கும் நிகழ்ச்சிகள் உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. இந் நிறுவனங்கள் மூலம் ஒலி/ஒளிபரப்புச் செய்வதற்காக வெளியார் தயாரித்து வழங்கும் நிகழ்ச்சிகள் தணிக்கைக்கு உட்படுகின்றன. தொலைக்காட்சி நாடகங்களும், பாட்டுக்களும் இவ்வாறு தணிக்கைக்கு உட்படுத்தப்படும் விடயங்களாகும். ரூபவாஹினி தனது தணிக்கைச் சபை மூலம் இந்நாடகங்களை முதலில் நாடக எழுத்தின் பிரதி மட்டத்திலும், பின்னர் நிகழ்ச்சி தயாரிக்கப்பட்ட பின்னரும் மீளாய்வு செய்யப்பட்டு அரசியல் மற்றும் ஒழுக்கவியல் அம்சங்கள் தணிக்கைக்கு உட்படுகின்றன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மிகவும் அமைதியான முறையில், மறைமுகமான தணிக்கை முறை பாட்டுக்களைப் பொறுத்தவரையில் கையாளப்படுகின்றது. ஒரு புதிய "ஒலிநாடா" வெளியிடப்படும் போது வானொலி மூலமாகவே புதிய பாட்டுக்கள் பிரபல்யம் அடைகின்றன. எனினும் ஒருபாட்டு ஏற்கப்பட்டது அல்லது நிராகரிக்கப்பட்டது பற்றி அறிவிக்க வேண்டிய கடப்பாடு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு இருக்கவில்லை. ஆனால் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு இத்தகைய கடமை உண்டு. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தணிக்கை மிகவும் எளிதானது.

ஒரு பாட்டை ஒலி பரப்ப முடியாது எனச் சாதாரணமாகக் கூறிவிட முடியும். அவ்வாறான முடிவெடுப்பவர்கள் யாவர் என்பது வெளிவராது. ஒரு பாட்டின் உள்ளடக்கம் அரசியல் ரீதியாக ஆபத்தானது என்ற காரணத்தாலோ அல்லது அதன் பாடகர் அல்லது இசையமைப்பாளர் அரசியல் எதிரி என்ற காரணத்தினாலோ (புகழ் பெற்ற பிரேமசிறி கேமதாச, நந்தா மாலினி போன்றவர்கள் பல வருடங்களாக இத்தடைக்கு உள்ளாகியிருந்தனர்.) அல்லது எதிர்பாராத சூழ்நிலை காரணமாகவோ அப்பாட்டுக்கு அரசியல் அர்த்தம் கற்பிக்கப்படும் என்ற காரணத்தினாலோ அப்பாட்டினைத் தடை செய்ய முடியும். இந்த வகையில் ஒரு பழைய திரைப்படப் பாடல் "ரஜினி மமய் அபே ராஜ்ய"(எமது இராச்சியத்தில் நானே ராணி) என்னும் பாடல் நீண்டகாலமாக ஒலிபரப்பப்படவில்லை. 1994 இல் இத்தடை நீக்கப்பட்டது. உண்மையில் திரைப்படத்தில் இப்பாடல் காட்டில் வாழும் கதாநாயகியால் பாடப்படுவதுபோல இருந்தாலும் முக்கிய எதிர்க்கட்சியை இரு பெண்கள் தலைமை தாங்கி நடத்தி வந்தமையால் அரசியல் ரீதியில் இப்பாடல் விரும்பப்படவில்லை.

எனினும் புதிய அரசாங்கம் வந்ததன் பின்னர் அதே அரசியல் அடையாளம் காரணமாக அப்பாட்டுப் புதிய சனாதிபதி பதவியேற்றவுடன் உடனடியாக ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

3.3 தணிக்கையை விரிவுபடுத்தல்

பொதுசன ஐக்கிய முன்னணியின், தேர்தலுக்கு முன்னரான விஞ்ஞாபனத்தில் பின்வரும் ஆலோசனை அடங்கியுள்ளது.

> *"தணிக்கைச் சபைச் சட்டமானது புதிய கட்புலச் சாதனமான தொலைக்காட்சி மற்றும் வீடியோக்களை உட்படுத்தும் முகமாகத் திருத்தப்படும்"*

இவ் ஆலோசனை பற்றி எவ்வித விளக்கமும் கொடுக்கப்படாமையினால் தணிக்கைச்சபையின் பரப்பினை விரிவுபடுத்துவதன் நோக்கம் பற்றி எதிர்வு கூறுவது முக்கியமானது. ஏற்கனவே இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் ஐ.ரி.என் என்பதும் (அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது) தமது சொந்தத் தணிக்கை முறைகளைக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த ஆலோசனையின் நோக்கம் அரசாங்கத்தினால் அனுமதியளிக்கப்பட்ட தனியார் தொலைக்காட்சிச் சேவைகளையும் தணிக்கைக்கு உட்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக இருக்கலாம். விஞ்ஞாபனத்தில் கருத்துச் சுதந்திரம் தொடர்பாகக் கொடுக்கப்பட்ட உறுதி மொழிகளுக்கும் அது தொடர்பாக இடம்பெற்று வரும் அரசாங்கப் பேச்சாளர்களின் பேச்சுக்களும் முற்றிலும் முரண்பாட்டையே கொண்டிருக்கின்றன.

வீடியோவைத் தணிக்கைச் சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது மேலும் பாரதூரமானது. வீடியோ ஊடகத்தின் ஒரு முக்கிய நன்மையானது அது தொடர்பாடலில் சனநாயகத் தன்மையை ஊக்குவிக்கின்றது என்பதாகும். அத்துடன் தனிநபர்களையும் சிறு குழுக்களையும் இது இலகுவில் சென்றடைகின்றது. அரசாங்கம் தனது சகல தொடர்பாடல் சாதனங்களிலும் கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்த காலகட்டத்தில் வீடியோ மூலமாகவே மாற்றுக் கருத்துக்களும் தகவல்களும் சிறு சிறு குழுக்களுக்குப் பரப்பப்பட்டன. இவற்றைத் தணிக்கை செய்வது இலகுவானதன்று. எனவே தடைசெய்வது மக்களின் சுதந்திரத் தொடர்பாடல் உரிமையைப் பாதிப்பதாகும். வீடியோ ஊடகத்தைப் பற்றி இவ்வாறான பயம் இருப்பதற்குக் காரணம் என்ன.

அரசாங்கப் பத்திரிகைகளும் பெரும் நிறுவனங்களின் பத்திரிகைகளும் இருக்கும் போது சிற்றேடுகள் இயங்க முடியுமாயின் அரசாங்க தொலைக்காட்சிச் சேவைகளுடன் ஏன் இந்த வீடியோ ஊடகமும் இயங்கக் கூடாது என்பது முக்கியமான கேள்வியாகும். வீடியோக்களை அனுமதித்தால் "நீலப்" படங்கள் தயாரிக்கப்படும் ஆபத்து உள்ளதெனில் அதனைத் தடுப்பது பொலிசாரின் பொறுப்பே தவிர தணிக்கைச் சபையின் பணியன்று. தணிக்கைச் சபையை விரிவுபடுத்துவதினால் இப்படங்கள் தணிக்கைக்குச் சமர்ப்பிக்கப்பட மாட்டாது. மாறாக எப்போதும் போல் இவைகள் இரகசியமாகத் தயாரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும். எனினும் 1994 ஆம் ஆண்டின் இறுதிவரை இவ்வுறுதி மொழி (அல்லது அச்சுறுத்தல்) நடைமுறைப்படுத்தப் படவில்லை.

3.4 வெளிநாட்டு வெளியீடுகளைத் தணிக்கை செய்தல்

வெளிநாட்டு வெளியீடுகள் (புத்தகங்களும் சஞ்சிகைகளும்) நாட்டுக்குள் நுழைவதைச் சில சமயங்களில் சுங்கப்பகுதி தனது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடை செய்கின்றது. இவ்வாறு பொதுவாகத் தடை செய்யப்படுவது பாலுறவு தொடர்பான வெளியீடுகளே. எனினும் பல சந்தர்ப்பங்களில் அரசியல் மற்றும் அரை–அரசியல் காரணங்களினாலும் வெளிநாட்டு வெளியீடுகள் தடை செய்யப்படுகின்றன. எனினும் தடை செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக சுங்கப் பகுதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், பிரசுரங்கள் தொடர்பான ஒரு தகுதியற்ற அதிகாரம் ஒருவகைத் தணிக்கையாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். சுங்கப்பகுதியினரால் தடுத்து வைக்கப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட பிரசுரங்களை இறக்குமதி செய்தோர் நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு செய்வதைத் தவிர வேறு தீர்வுகள் இல்லை.

இத்தகைய அரச தணிக்கை 1994 இல் பங்களாதேஷ் பெண் எழுத்தாளரான "தஸ்லிமா நஸ்ரீன்" எழுதிய 'லஜ்ஜா' என்னும் நூல் மீது விதிக்கப்பட்டது. இந்நூல் இஸ்லாமிய விரோதக் கருத்துக்களைக் கொண்டிருப்பதாகக் கூறிப் பங்களாதேஷ் அரசாங்கம் இதனைத் தடைசெய்தது. அத்துடன் இதன் ஆசிரியர் மீது கொலைப் பயமுறுத்தலும் விடுக்கப்பட்டது. அப்போதைய இலங்கை அரசாங்கத்தின் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் இராஜங்க அமைச்சரான ஏ.எச்.எம்.அஸ்வர் இந்நூலை அரசாங்கம் தடைசெய்ய வேண்டுமெனக் கோரினார். அரசாங்கம்

இந்நூலைத் தடை செய்வதாக அறிவித்ததைத் தொடர்ந்து சகல விற்பனை நிலையங்களிலுமிருந்தும் இந்நூல் அகற்றப்பட்டது. அவ்வேளை மந்திரி சபைக்கு இவ்வாறு பிரசுரங்களைத் தடைசெய்யும் சட்ட அதிகாரம் உள்ளதாவெனச் சட்ட நிபுணர்கள் கேள்வி எழுப்பினர். அமைச்சர் திரு. அஸ்வர் இந்நூலை வாசிக்கவேயில்லை என்னும் குற்றச்சாட்டுக்கு அவர் தான் "போதுமான கவனமெடுத்து" வாசித்துள்ளதாகக் கூறினார்.[2] ஆனால் மந்திரி சபை உறுப்பினர் அவ்வாறு வாசித்திருப்பார்கள் எனக் கூறுவதற்கில்லை. "லஜ்ஜா"மீது விதிக்கப்பட்ட "தடை" யானது கருத்து வெளிப்பாட்டின் மீதான தலையீடாகும் எனக் கூறிச் சுதந்திரப் பத்திரிகை இயக்கம் எதிர்ப்பினைத் தெரிவித்தது. இத்தடையானது பத்திரிகைகளில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. முஸ்லிம் வாசகர்கள் உட்படப் பலர் அரசாங்கத்தின் நடவடிக்கையை விமர்சித்தனர். "லஜ்ஜா"வைத் தடை செய்தமை ஆவணியில் பொதுத் தேர்தல் நெருங்கிய சமயத்தில் தான் நடைபெற்றதுடன் முஸ்லிம்களின் நலன்களில் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது என முஸ்லிம் வாக்காளர்களைத் திருப்திப் படுத்துவதற்காக இத்தகையதொரு தீர்மானத்தை அரசாங்கம் எடுத்திருக்கலாம். ஆனால் பெருந்தொகையான முஸ்லிம் சிறுபான்மையினரைக் கொண்டுள்ள இந்தியாவில் இந்நூல் தடைசெய்யப்படவில்லை.

ஒரு மந்திரி சபைத் தீர்மானத்தின் மூலம் ஒரு நூலைத் தடை செய்வது ஓர் அசாதாரணமான நடவடிக்கையாகும். இதற்கு இன்னொரு அண்மைக்கால உதாரணம் சல்மான் ரூஷ்டியின் "சாத்தானின் வசனங்கள்" என்னும் நூலாகும். இந்நூலின் இறக்குமதியும் விற்பனையும் இன்றுவரை தடையில் உள்ளன. இவ்விரண்டு விடயங்களிலும் ஒரு முக்கியமான இனக் குழுவின் பிரதிநிதிகளினது அழுத்தம் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றது.

4. முடிவுரை

கலாசாரம் என்பது சந்தைச் செயற்பாடுகளுக்கு விட்டு விட முடியாத ஒரு துறையாக இருப்பதினால் கலைகளுக்கு அரச உதவி மிகவும் அவசியமானது. ஆனால் அத்தகைய அரச உதவிகளுக்கான விலை அரச கட்டுப்பாடுகளும் தடைகளுமாக இருக்க முடியாது. கலைகளின்

---

2 சண்டே ரைம்ஸ், 31 ஆடி 1994

மீது ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள தணிக்கை முறைகள் நீக்கப்படவேண்டும். ஏனெனில் தனியார் துறைப் பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் நாடகத்துக்கு அல்லது திரைப்படத்துக்கு மறுக்கப்படுவது நியாமானதன்று. மேலும் கலாசார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் அரச நிறுவனங்களின் ஊழியர்கள் உண்மையான அறிவுக் கூர்மை கொண்ட சுதந்திரமான நபர்களாக இருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் அரசியல் மற்றும் அதிகாரத்துவத் தலையீடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருத்தலும் அவசியமானது.

10

தொழிலாளர் உரிமைகள்

1. அறிமுகம்

இலங்கை அரசியல் யாப்பின் 3 ஆம் அத்தியாயத்தின் உரிமைகள் பற்றிய மனுவிலும், தொழிலாளர் பற்றிய ஏனைய சட்டங்களிலும் தொழிலாளர் உரிமைகள் உறுதியாகக் கூறப்பட்டுள்ளன. அத்துடன் ஐ.சி.சி.பி.ஆர், ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர் ஆகியனவும் தொழிலாளர் உரிமைகள் பற்றி விசேடமாகக் குறிப்பிடுகின்றன. அத்துடன் இதன் கட்டுறுத்துக்கள் யாவும் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமையால் அவை இலங்கையில் பிரயோகிக்கப்படக் கூடிய சர்வதேச செயற்பாடுகளாகவும் உள்ளன.

கடந்த வருடத்துக்கான எமது அறிக்கையில் ஒன்று கூடும் சுதந்திரம் பற்றிய சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் மகாநாட்டுடன்படிக்கைகள் – குறிப்பாக 87 ஆம், 88 ஆம் இலக்க மகாநாட்டுடன்படிக்கைகள் – பற்றி விரிவாக ஆராயப்பட்டிருந்ததுடன் அவை எந்தளவுக்கு இலங்கையில் நடை முறைப்படுத்தப்பட்டன என்பது பற்றிய மதிப்பீட்டையும் செய்திருந்தோம். இந்நோக்குடன், ஒன்று கூடும் சுதந்திரம் பற்றிய அரசியல் யாப்பின் ஏற்பாடுகள், தொழிற்சங்கக் கட்டளைச் சட்டம், சட்டத்தின் முன்னேற்பாடுகள் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் தொடர்பான ஏனைய சட்டவாக்கங்களையும் நாம் பரிசீலனை செய்திருந்தோம்.[1] இவ்வாண்டு, 1994 ஆம் ஆண்டில் முக்கியத்துவம் பெற்றிருந்த தொழிலாளர் உரிமைகளின் குறிப்பிட்ட சில விடயங்களில் கவனம் செலுத்தியுள்ளோம். அதே வேளையில் கடந்த ஆண்டுகளிலிருந்து

---

1 *Sri Lanka : State of Human Rights 1993 (Law & Society* Trust, Colombo, 1994) Chapter 3.III

இன்றும் தொடர்ந்து வரும் பிரச்சினைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளோம். அத்துடன் 1994 ஆம் ஆண்டில் நடைமுறையில் இருந்த தொழிலாளர் சட்டங்களின் தொகுப்பையும் இங்கு தந்துள்ளோம்.

2. தொழிற் சங்கங்கள்

சட்டபூர்வமான தொழிற் சங்கங்கள் பற்றிய முக்கிய சட்டவாக்கம் 1935[2] இல் நிறைவேற்றப்பட்டது. இதனால் இத் தொழிற்சங்கங்கள் நீண்டகால வரலாற்றைக் கொண்டு விளங்குகின்றன. 1946, 1948, 1970 ஆகிய ஆண்டுகளில் இச் சட்டவாக்கத்துக்குப் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

1994 ஆம் ஆண்டு தொழிற் சங்கங்கள் தொடர்பான முக்கிய நீதிமன்றத் தீர்ப்புக்கள் எவையும் வழங்கப்படவில்லை. தொழிற் சங்கங்களின் பதிவாளர் என்ற முறையில் தொழில் ஆணையாளர் தொழிற் சங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்துறை, தனியார் துறை சார்ந்த தொழிற் சங்கங்கள் மீதான மேற்பார்வைக் கடமையைக் கொண்டிருந்தார். 1993 ஆம் ஆண்டின் முடிவில் முறையாகப் பதிவு செய்யப்பட்டு விதிமுறைகள் யாவற்றையும் நிறைவேற்றிப் பதிவேட்டில் இடம் பெற்றிருந்த தொழிற் சங்கங்களின் தொகை 1059 ஆகும்.

1980 ஆடி மாதத்தில் இடம் பெற்ற பொதுவேலை நிறுத்தத்தை முறியடிக்கும் வகையில் சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் மேற் கொண்ட கடுமையான நடவடிக்கைகள் தேசிய, சர்வதேசிய நியமங்கள் யாவற்றையும் மீறின. இவை மொத்தத்தில் தொழிலாள வகுப்பு இயக்கத்தின் மீது முக்கிய பாதிப்பினை ஏற்படுத்தியதுடன் அதன்பின் வந்த காலப்பகுதியில் பெரிய தொழிற்சங்கங்களையும் பாதித்தன. 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் படி சனாதிபதி சில அரசாங்கத் திணைக்களங்களும் பொதுக் கூட்டுத்தாபனங்களும் உள்ளூராட்சிச் சபைகளும் வழங்குகின்ற எவ்வகையான சேவைகளையும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனம் செய்தார். அவசரகால விதிகளின் படி பல்வேறு அரசாங்க தனியார் துறைகளை அத்தியாவசிய சேவைகள் என அவர் பிரகடனம் செய்தார். 1981 ஆம் ஆண்டு ஆடி 16 ஆம் திகதியன்று வேலை நிறுத்தம் தொடங்கியமையால் அத்திகதியிலிருந்து

---

2 1935 இன் 14 ஆம் இலக்க தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம்

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 40,000 ஊழியர்கள் தமது பதவியை இழந்ததாகக் கருதப்பட்டனர் என்று அரசாங்கம் தெரிவித்தது. தொழிற்சங்கங்களின்படி இத் தொகை 80,000 – 100,000 இடைப் பட்டதாகும்.

1989 ஆம் ஆண்டில் சனாதிபதி பிரேமதாசா பதவிக்கு வந்த பின்னர் அவர் வேலை நிறுத்தம் செய்தோருக்குச் சில நிவாரணங்களை வழங்கத் தீர்மானித்தார். இது தொடர்பான 1989 ஆம் ஆண்டின் வைகாசி 8 ஆம் திகதி மந்திரிசபைத் தீர்மானம் 32/89 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கையில் காணப்பட்டது. இதன்படி அரசாங்கத்துறைச் சேவைகளின் தலைவர் பெரும்பாலான அரசாங்கத்துறை ஊழியர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த முடிந்தது. மற்றவர்களுக்குத் தொடர்ச்சியாக சேவையில் இருந்ததாகக் கருதப்பட்டு அவர்களுக்கு இளைப்பாற்று நன்மைகள் வழங்கப்பட்டன. இப்பணிப்புரை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களேயே கருத்திற் கொண்டது. ஏறத்தாழ 13 தனியார் கம்பனிகளில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு இதனால் எதுவித நிவாரணம் கிடைக்கவில்லை.

1994 ஆம் ஆண்டளவில் அரசாங்கத்துறை சார்ந்த ஒருசில வேலை நிறுத்தம் செய்த ஊழியர்கள் தமது தொழிலைத் திரும்பப் பெறவில்லை. 1980 ஆடி மாத வேலை நிறுத்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளில் தீர்க்கப்படாத ஒன்று அவ்வாண்டில் வேலை நிறுத்தம் செய்த தனியார்துறை ஊழியர்களின் பிரச்சினையாகும். பதவி இழந்த இவ் ஊழியர்களின் பிரச்சினை 1994 ஆம் ஆண்டு தொழிலமைச்சரினால் கருத்திற் கொள்ளப்பட்டது. ஊழியர்களை வேலை நிறுத்தம் செய்யக் கோரிய தொழிற்சங்கங்கள் எவ்வித உதவியும் செய்யவில்லையெனினும் பல ஸ்தாபனங்கள் இவர்களுடைய பிரச்சினையை தொழிலமைச்சரிடம் சமர்ப்பித்திருந்தன. அவை இவ்வூதியர்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் புதிய அமைச்சரிடமும், தொழில் ஆணையாளரிடமும் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தன. 32/89 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை தனியார் துறைக்குச் செல்லுபடியாகாது. இந்நிலையில், வேலைநிறுத்தம் செய்த தனியார் ஊழியர்களின் முறையான கோரிக்கைகளை நிறைவேற்றத் தேவையான நிதியை அரசாங்கம் வழங்குவதற்குப் பாராளுமன்றத்தில் தனியுறுப்பினர் ஒருவரின் பிரேரணையின் அடிப்படையில் அதற்கான சட்டமொன்று அவசியமாகும்.

3. அவசரகால ஒழுங்கு விதிகள்

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சனாதிபதியின் ஆணையின்படி ஏற்படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகள் தொழிலாளர்கள் உட்பட பிரசைகளின் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமுடையன.[3] 1989 ஆம் ஆண்டின் அத்தியாவசிய சேவைகள் சட்டத்தின் படி அத்தியாவசிய விநியோகம், சேவைகள் என்பவற்றையும், ஏற்றுமதிகளைப் பராமரிக்கவும் எந்தவேலை நிறுத்தத்தையும் சட்ட விரோதமானது என சனாதிபதி பிரகடனம் செய்யலாம். வேலை நிறுத்த நடவடிக்கையைத் தவிர்ப்பதற்கு இச் சட்டத்துடன் அவசரகால ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்தலாம். அத்தியாவசிய சேவைகள் தொடர்பான இவ் ஒழுங்கு விதிகள், அவசரகாலச்சட்டம் ஒரு மாதத்துக்குள் அகற்றப்படவேண்டும் என 1994 ஆடி 16 ஆம் திகதியான தீர்மானிக்கப்பட்ட நாள் வரைக்கும் நடைமுறையில் இருந்தது. ஆவணி 16 ஆம் திகதியன்று ஒரு புதிய அவசரகால பிரகடனம் செய்யப்பட்டபோது அத்தியாவசிய சேவைகள் பற்றிய 32 ஆவது ஒழுங்கு விதி மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது. பின்னர் புரட்டாதி 4 ஆம் திகதி இவ்வொழுங்கு விதி நீக்கப்பட்டது. ஆயினும் பின்னர் 1994 ஐப்பசி 24 தொடக்கம் 1994 கார்த்திகை 4 ஆம் திகதி வரை அவசரகால நிலமை பிரகடனம் செய்யப்பட்ட போது இவ் ஒழுங்கு விதி மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீண்டும் நீக்கப்பட்டன.

4. அரசாங்க மாற்றமும் தொழிலாளர் உரிமைகளும்

1994 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலும், குறிப்பாக அவ்வாண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலும் இலங்கையின் தேசிய வாழ்வில் பல ஆண்டு காலமாக இருந்து வந்த பதட்டத்தையும் மக்களின் உரிமைகள் மீதான அடக்கு முறைகளையும் தணிப்பதற்குப் பெரிதும் உதவின. மூன்று ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களினால் பேணப்பட்டு வந்த தீவு முழுவதுமான அவசரகால நிலமை தற்காலிகமாக நீக்கப்பட்டது. 3 ஆம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டது போன்று நாட்டின் சில குறிப்பிட்ட பாகங்களில் அவசரகால நிலை மீண்டும் அறிமுகம் செய்யப்பட்ட பின்

---

3 அவசரகால ஆட்சி பற்றிய அத்தியாயம் 3 இனைப் பார்க்க

தொழிலாளர்களின் உரிமைகளுக்குப் பாதகமான அத்தியாவசிய சேவை ஒழுங்கு விதிகளும் நடைமுறைக்கு வந்தன.

பொதுசன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் அறிக்கையில் தொழிற்சங்க உரிமைகள், தொழிற் சங்கங்களைக் கட்டாயமாக அங்கீகரித்தல் தொடர்பான விரிவான ஒரு தொழிலாளர் பட்டயத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தவிருப்பதாக வாக்குறுதி அளித்திருந்தது. ஆயினும் 1994 ஆம் ஆண்டு முடியும் வரை இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அரசாங்க மாற்றம் ஏற்பட்ட பின்னர் உருவாகிய புதிய சூழலில் பயம், அடக்கு முறை பற்றிய உணர்வுகள் நீங்கவே, தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்று நீண்ட காலமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தவர்கள் தற்போது பல கண்டன நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் அவை பல இடங்களில் உக்கிரமாகவும் நடைபெற்றன. 1994 மார்கழி மாத நடுப்பகுதியில் நாட்டின் பல பாகங்களிலும் அரசாங்க, தனியார்துறை சார்ந்த 60க்கும் மேற்பட்ட வேலை நிறுத்தங்கள் இடம் பெற்றன.[4]

இதுவரை தொழிற்சங்கங்கள் அமைக்கப்படாத சுதந்திர வர்த்தக வலயங்களிலும் வேலை நிறுத்தங்கள் இடம் பெற்றன. சில வேலை நிறுத்தக்காரர்கள் சட்டத்தை மீறும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். நிர்வாக அதிகாரிகள் கட்டாயமாகத் தடுத்து வைக்கப்பட்டதுடன் பல பயமுறுத்தல் சம்பவங்களும் நடைபெற்றன. பல தொழிற்சாலைகள் மூடப்பட்டன. பல தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

பல்வேறு வகைப்பட்ட உயர் தொழில் ஊழியர் மத்தியிலும் பதட்ட நிலை தோன்றியதுடன் அதனாலும் வேலை நிறுத்தங்கள் ஆரம்பித்தன. மருத்துவர்களுக்கும் பதிவு செய்யப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கிடையிலும், தாதிமாருக்கும் மருத்துவர்களுக்கிடையிலும், பொறியியலாளர்களுக்கும் தேசியத் தொழில்நுட்ப டிப்ளோமாச் சான்றிதழ்கள் பெற்றிருந்தோருக்கிடையிலும் பல தகராறுகள் ஏற்பட்டன.[5] அரசாங்கத்தின் தனியார்மயத் திட்டங்கள் உலக வங்கி, சர்வதேச நாணயநிதி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றுக்கு அரசாங்கம்

---

4 INFORM, *An overview of the Human Rights Situation in Sri Lanka : 1994* (15 february 1995)

5 *Ibid*

அடிபணிந்து செல்லுகின்றது என்ற முறைப்பாடு காரணமாகக் கொழும்பில் பல ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும், மறியல் போராட்டங்களும் இடம் பெற்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தனியார் மயக் கொள்கைகளைப் பொதுசன ஐக்கிய முன்னணியும் பின்பற்றுவதாகக் கூறி அதனைப் பல அங்கீகரிக்கப்பட்ட கட்சி சாரா தொழிற் சங்கங்கள் கடுமையாகக் கண்டித்தன. இவற்றுள் இலங்கை வங்கி ஊழியர் சங்கமும் ஒன்றாகும். பொதுசன ஐக்கிய முன்னணி தமது தேர்தல் அறிக்கையில் நாளாந்த வாழ்வுக்கு அத்தியாவசியமான பொது வசதிகள் யாவும் திறமையான நிர்வாகத்துக்குத் தேவையான போதிய சுய அதிகாரத்துடன் அரசாங்கத் துறைகளாகவே இயங்கும் என வாக்குறுதி அளித்திருந்தது. பெருமளவுக்கு அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்த சுகாதாரத்துறை, கல்வித்துறை பற்றி விசேடமாகக் குறிப்பிடப்பட்டது. தேர்தலுக்கு முன் வந்த பிரசுரங்களில் நீர் விநியோகம், சக்தி உற்பத்தி, பெருந்தெருக்கள், புகையிரதம், நீர்ப்பாசனம், அரச வங்கிகள், அரசாங்கத்துறைக் காப்புறுதி, கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனம், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, விமானநிலையங்கள் என்பன குறிப்பிடப்பட்டிருந்தன. சாதாரண பிரசைகளின் தேவைகளை நிறைவேற்றுகின்ற எல்லா அரசாங்க நிறுவனங்களும் தொடர்ந்து அரசாங்கக் கட்டுப்பாட்டிலேயே இருத்தல் வேண்டும் என்பது பெரும்பாலான தொழிற்சங்கங்களின் நிலைப்பாடாக இருந்தது.

தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடாது பொறுமையாக இருத்தல் வேண்டும் எனக் கூறிய அரசாங்கம் தனது கொள்கைகளை நடைமுறைப்படுத்த அவகாசம் தேவை எனக்கோரியது[6] கைத்தொழிற்றுறையில் காணப்பட்ட அமைதியின்மையைக் கண்காணிக்க ஒரு விசேட பொலிஸ் பிரிவை நிறுவ அரசாங்கம் உத்தேசித்தது. ஆயினும் தொழிலாள வகுப்பினர் இதனைக் கடுமையாக எதிர்த்ததன் காரணமாக இவ்வாலோசனை கைவிடப்பட்டது. கைத் தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளரைக் கொண்டு இணக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டதைத் தவிர வேறு விசேட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

---

6 *Ibid*

5. தற்போதைய தொழிற் சட்டம்

தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாக்க 1994 ஆம் ஆண்டில் நடைமுறையில் இருந்த சட்ட ஏற்பாடுகளாவன:

(i) ***1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கக் கைத்தொழில் தகராறுகள் சட்டமும்*** அதன் திருத்தங்களும் தொழில் தகராறுகளில் தலையிட்டு இணக்கம் செய்து தீர்த்து வைக்கும் அதிகாரத்தைத் தொழில் அமைச்சருக்கும், தொழில் ஆணையாளருக்கும் வழங்கியுள்ளன. இவ்வகையில் தொழிற் சங்கங்களும், தொழில் உரிமையாளர்களும் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தங்கள் ஒரு நியாயமான வழிமுறையாகும். நியாயமற்ற முறையில் வேலை நீக்கம் செய்யப்பட்டமையால் பாதிக்கப்பட்ட ஊழியர்களும், தொழிற் சங்கங்களும் தொழில் மன்றங்களுக்குச் செல்ல முடியும். சட்டபூர்வமான கொடுப்பனவுகள் வழங்கப்படாமை பற்றிய முறைப்பாடுகளைக் கவனிக்க நாடெங்கும் தொழில் அதிகாரிகள் பணி புரிகின்றார்கள். தேவையானவிடத்து அவர்கள் தவறிழைத்த தொழில் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடர முடியும்.

(ii) ***1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஊழியர்களின் வேலை முடிவுறுத்தல் (விசேட முன்னேற்பாடுகள்) சட்டம்,*** கைத்தொழில் தகராறுகளைப் பொறுத்தவரையில் 1994 ஆம் ஆண்டிலும் நடைமுறையில் இருந்தது. இச் சந்தர்ப்பத்தில் முதலீட்டுச் சபை சார்ந்த நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் தமது தொழில் நிலையங்களை மூட முற்பட்ட போது அல்லது ஆட்குறைப்புச் செய்ய முற்பட்டபோது ஊழியர்களை வேலைநீக்கம் செய்ய முனைந்தனர். தொழில் உரிமையாளர்கள் தமது விருப்பம் போல் ஊழியர்களை வேலை நீக்கம் செய்வதற்கு எதிரான ஒரு சிறந்த "காப்புறுதியை" இச்சட்டம் வழங்கியது. சக்தி வாய்ந்த சில முதலீட்டாளர்கள் இச்சட்ட ஏற்பாட்டைப் பெரிதும் கண்டித்தனர்.

(iii) ***1941 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்***[7] குடியேற்ற ஆட்சிக் காலத்தில் கொண்டு

---

[7] Amended by Ordinance Nos. 40 of 1943, 19 of 1945, 22 of 1945, and Acts Nos. 5 of 1953, 27 of 1957, 27 of 1962, 17 of 1965, 23 of 1966, 24 of 1966, 29 of 1971, 10 of 1978, 10 of 1980 and 36 of 1982

வரப்பட்டது. இச்சட்டம் குறைந்த பட்ச சம்பளங்கள், சம்பளக் கொடுப்பனவுகள், வேலைநேரம் என்பன பற்றியதாகும். இச்சட்டமும் 1994 ஆம் ஆண்டில் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது. இவ்வாண்டில் மருத்துவ நிலையத் தொழில், வீட்டு வேலைத் தொழில் என்பன இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்டு இத்துறைகளுக்குக் குறைந்த பட்ச சம்பளங்களும் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகளும் வழங்கப்படல் வேண்டுமென விதிக்கப்பட்டன.

(iv) ***1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க ஊழியர் நஷ்ட ஈட்டுக் கட்டளைச் சட்டம்*** பிரித்தானியர் காலத்தில் கொண்டுவரப்பட்டது. இதன்படி ஊழியர்கள் தொழில் புரியும் இடத்தில் விபத்துக்குள்ளாகும் போது தொழில் உரிமையாளர்கள் அவர்களுக்கு நஷ்டஈட்டைக் கட்டாயமாக வழங்குதல் வேண்டும். இவ்விடயம் தொடர்பாக ஏற்படக் கூடிய பிணக்குகளைத் தீர்ப்பதற்கு தொழில் ஆணையாளர் ஓரளவுக்கு நீதித்துறை போன்று செயற்பட அதிகாரம் வழங்கப்பட்டது. 1993 மாசி மாதம் 15 ஆம் திகதியிட்ட 754/3 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் பற்றியும் அதற்கான கால அட்டவணை போன்ற வழிமுறைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. 1994 ஆம் ஆண்டிலேயே இதன் பாதிப்புக்களை உணர முடிந்தது.

(v) ***1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம்.*** இவ்வூழியர்களுக்கான வேலைநேரம், விடுமுறை, விடுப்பு, வேலைச்சூழல் என்பவற்றை ஒழுங்குபடுத்தும் விதிகளைக் கொண்டிருந்தது.

(vi) ***1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின்*** படி ஊழியர்கள் ஒரு திரட்டிய சேமிப்புக்கு உரித்தானவர்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட வயதில் இளைப்பாறும் போது ஒரு தொகைப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது பெண்களைப் பொறுத்தவரையில் திருமணத்தின் போதும், முன்னதாக இளைப்பாறும் போதும் இச்சேமிப்பை மொத்தமாகப் பெற இச் சட்டம் வழிவகை செய்தது. இச்சட்டத்துக்கான அண்மைக் காலத்திருத்தங்களின் படி சமயா சமய ஊழியர்கள், பயிலுனர்கள், இளைப்பாற்று வயதைக் கடந்தோர் உட்பட எல்லா வகைப்பட்ட ஊழியர்களும் இச்சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு

வரப்பட்டனர். வைப்பிலிருக்கும் நிலுவையை உத்தரவாதமாகப் பயன்படுத்தி வங்கிகளிலிருந்து கடன்களைப் பெறவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

(vii) ***1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டம்,*** ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கொண்டு வந்த மற்றொரு கவர்ச்சிகரமான திட்டமாகும். ஊழியரின் மொத்தச் சம்பளத்தில் மூன்று வீதத்தைத் தொழில் உரிமையாளர் இச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் சபைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். ஊழியர்கள் இளைப்பாறும் போது அல்லது பதவியை விட்டு விலகும் போது இப்பணத்தை வட்டியுடன் பெற முடியும். இதனைவிடக் காப்புறுதிக் கொடுப்பனவுகள் கண் மற்றும் இருதய அறுவைச் சிகிச்சை தொடர்பான மருத்துவ நன்மைகள் 5 ஆம் வகுப்புப் புலமைப்பரிசிலைப் பெறுவோருக்கான அடையாளக் கொடுப்பனவுகள் போன்ற பல நன்மைகளை ஊழியர்கள் பெற முடியும்.

(viii) ***1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, 1946 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்*** குடியேற்ற ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது. இச்சட்டமும் கைத்தொழில் நிலையத்தில் ஊழியர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்கான ஏற்பாடுகளை கொண்டிருந்தது. இதனால் அவர்கள் தொடர்ந்து நன்மை பெற முடிந்தது. ஊழியர்களுக்கு அத்தகைய பாதுகாப்பை வழங்குவதில் தொழிற்சாலைகளைப் பரிசீலனை செய்யும் பொறியியலாளர்கள் முக்கியமாக ஈடுபட்டிருந்தனர். அத்துடன் தொழில் திணைக்களத்தின் தொழில் நிலைய சுகாதாரவியல் பிரிவும் இப்பணியில் உதவிற்று.

(ix) ***1983 ஆம் ஆண்டில் 12 ஆம் இலக்க, 1990 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பணிக் கொடைக் கொடுப்பனவுச் சட்டம்.*** இச்சட்டம் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணிக்கொடையின் தொகையை சட்டபூர்வமாக நிர்ணயித்தது. இவ்விடயத்தில் ஏதேனும் தகராறு எழுமிடத்து தொழிற்றிணைக்களம் அதனைத் தீர்த்து வைக்கும் அதிகாரத்தைப் பெற்றது. இதற்கு முன்னர் இத்தொகை பற்றிய தீர்மானம் தொழில் மன்றத்தின் அனுசரணையுடனேயே செய்யப்பட்டது. புதிய ஏற்பாட்டின் படி சேவைக்காலம் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குக்

குறைவாக இருக்குமிடத்து அதனைப்பற்றி முடிவு செய்யவேண்டிய சந்தர்ப்பத்திலேயே தொழில் மன்றத்தின் உதவி கோரப்படும்.

(x) ***1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பிரசவ நன்மைகள் கட்டளைச் சட்டமும்***[8] குடியேற்ற ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்டதொன்றாகும். இச்சட்டம் 1985 ஆம் ஆண்டு திருத்தப்பட்டு மேலதிக நன்மைகளும் வழங்கப்பட்டன. பிரசவ விடுப்பு 84 நாட்களுக்கு வழங்கப்பட்டது.[9]

(xi) ***1956 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் பிள்ளைகளின் தொழில் கொள் சட்டம்***[10] பெண்களையும் இளைஞர்களையும், பிள்ளைகளையும் வேலைக்கு அமர்த்தும் போது பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகளை எடுத்துக் கூறுகின்றது. வேலைகளும், இரவுநேர வேலை பற்றிய நிபந்தனைகளும் அதில் உண்டு.[11]

(xii) ***1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகச் சட்டம்.***

1994 ஆம் ஆண்டில் இப்பணியகத்தின் நோக்கு மேலும் விரிவுபடுத்தப்பட்டு மேற்காசியாவிலும் பிற அயல் நாடுகளிலும் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு உதவி செய்யும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி நெறிகளும் அறிமுக நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன. குவைத் போன்ற நாடுகளில் பணிபுரிந்த இலங்கை ஊழியர்களுக்கு அங்கிருந்த இலங்கை இராஜதந்திரப் பணியகங்கள் உதவி செய்தன. இவ் ஊழியர்கள் சரியாக நடாத்தப்படாதவிடத்தும் அவர்கள் வேலை செய்யும் போது விபத்துக்கு உள்ளாகும் போதும் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க விசேட தொழில் தொடர்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். 1994 இல் ஒருமுறை

---

8 As Amended by Acts Nos. 35 of 1946, 26 of 1952, 6 of 1958, 24 of 1962, 1 of 1966, 13 of 1978, 52 of 1981 and 43 of 1985

9 பெண்களின் உரிமைகள் பற்றிய அத்தியாயம் 16 யும் பார்க்க

10 As Amended by Act Nos. 43 of 1964, 23 of 1973, 24 of 1973 and 32 of 1984

11 See also Chapters 15 and 16 on Children's and Women's rights respectively for more on this Act

சார்ஜாவில் நிகழ்ந்த விபத்தின் போது அதிக காயங்களுக்கு உள்ளான பெண் ஊழியர் ஒருவருக்குப் பணியகம் நஷ்ட ஈட்டை வழங்கியது.

6. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன மகாநாட்டுடன் படிக்கைகள்

சர்வதேச தொழில் ஸ்தாபத்தில் இலங்கை ஓர் உத்தியோக பூர்வமான உறுப்பு நாடு என்பதுடன் அதில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர். எனவே சர்வதேச தொழிலாளர் ஸ்தாபத்தின் மகாநாட்டுடன் படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச தொழில் நியமங்களைப் பின்பற்ற வேண்டிய கடப்பாடு உள்ளது. 87 ஆம் இலக்க, 98 ஆம் இலக்க சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன மகாநாட்டுடன்படிக்கைகள் இந்நியமங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றன. இவற்றை இலங்கை அரசாங்கம் பின்னுறுதிப்படுத்தியுள்ளது.[12] இலங்கையில் இச் சர்வதேச தொழில் நியமங்கள் மீறப்பட்டமை பற்றிப் பல சந்தர்ப்பங்களில் ஐ.எல்.ஓ கவலை தெரிவித்துள்ளது. எடுத்துக்காட்டாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் நெருங்கிய தொடர்புடைய தேசிய தொழிலாளர் சங்கத்துக்கு அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் விசேட சலுகைகளை வழங்கியமை 98 ஆம் இலக்க மகாநாட்டுடன் படிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணானது. இலங்கையில் பொதுச்சேவை சார்ந்த தொழிற் சங்கங்கள் கூட்டாக, ஒன்றாக ஒன்றிணைவதைத் தடைசெய்வதும் இந்த மகாநாட்டுடன் படிக்கைக்கு முரணானது. ஆயினும் நடைமுறையில் இலங்கையின் தொழில்துறை அதிகாரபீடம் இத்தடையை முற்றாகக் கருத்திற் கொள்ளவே இல்லை. எல்லாத் தேவைகளுக்கும் பொதுச்சேவை தொழிற்சங்க சம்மேளனமே அங்கீகரிக்கப்பட்டது. இராணுவப்படை ஆளணியினரும் பொலிஸ், சிறைச்சாலை அதிகாரிகள் போன்ற சட்ட நிறைவேற்று அதிகாரிகள் தொழிற் சங்கம் அமைப்பதைத் தடைசெய்வதும் 98 ஆம் இலக்க மகாநாட்டுடன்படிக்கைக்கு முரணானதாகும். முதலீட்டுச் சபை தொழில் நிலையங்களில் எழும் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கு பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களுக்குப் பதிலாக வேறொரு வழிமுறை ஏற்படுத்தப்பட்டிருப்பது ஐ.எல்.ஓ நியமங்களுக்கு

---

[12] இம் மகாநாட்டுடன்படிக்கை பற்றிய விரிவான கலந்துரையாடலுக்கு பார்க்க. *Sri Lanka : State of Human Rights 1993* (Law & Society Trust, Colombo, 1994) Chapter 3.III

ஏற்புடையதன்று. கூட்டு ஆலோசனைச் சபையில் கம்பனியின் பிரதம நிர்வாசி தலைவராக உள்ளார். இச்சபையில் ஊழியர்களின் பிரதிநிதிகளும் நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் சமதொகையினராக உள்ளனர். இச்சபை முறையான தொழிலாளரின் அமைப்பாக இயங்குவதாகக் கூறுவதற்கில்லை. தொழிற்றிணைக்களத்தின் வேலை முடிவுறுத்தல் பிரிவிடம் நீதித் தீர்வுக்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு வழக்கில் நிர்வாகத்தின் கருத்திற்கிணங்க சபையிலிருந்த தொழிலாளர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நடந்து கொள்ளாமையினால் நிர்வாகத்தினரால் பழிவாங்கப்பட்ட உண்மை தெரிய வந்தது.[13]

7. 1994 இல் தொழிலாளரின் உரிமையைப் பாதித்த நீதிமுறைத் தீர்மானங்கள்

சி.எ 682/89 ஆம் இலக்க நீதவான் நீதிமன்றத் தீர்ப்பு குறிப்பிடத்தக்கது. இவ்வழக்கில் ஒரு கம்பனியின் முன்னைநாள் ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படவேண்டிய ஊழியர் சேமலாப நிதியைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட கம்பனி மேலதிகக் கட்டணத்துடன் சேர்த்து ரூ. 36,307.15 செலுத்தப்படல் வேண்டும் எனத் தொழில் ஆணையாளர் கட்டளை பிறப்பித்திருந்தார். இதற்கெதிரான மேன்முறையீடு நீதவானை வழக்கைத் தொடர்ந்து கேட்பதிலிருந்து தடுத்து உறுதிகேள் எழுத்தாணை மற்றும் தடையாணை பெறுவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்டது. குறிப்பிட்ட தொகையை மனுதாரர்கள் செலுத்த வேண்டியதில்லை என விளம்புமாறும் மேன்முறையீட்டில் கூறப்பட்டது. நீதிமன்றம் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்து தொழில் ஆணையாளரின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. நீதியரசர் எச்.டபிள்யூ. சேனநாயக்காவின் இத்தீர்ப்பு நியதிச் சட்டத்தைப் பொருள் கோடல் செய்வதில் சாதனை படைக்கும் தீர்ப்பாக இல்லாவிடினும் தொழில் ஆணையாளரதும் அவரது உதவியாளரதும், சம்பந்தப்பட்ட நியதிச் சட்டத்தின் கீழான நிர்வாக நடவடிக்கையை ஏற்றுக் கொள்வதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததென்பதை மறுப்பதற்கில்லை.

---

[13] GCEC Labour Standards and Relations Termination Unit case : members of the Council were Singled out for termination

8. பொதுத்துறை வேலையாட்கள்

மேலே குறிப்பிட்ட தொழிற் சட்டவாக்கம் அமைச்சுக்களிலுள்ள அரசாங்க சேவையிலுள்ள ·வேலையாட்களுக்கு ஏற்புடையதாகாது. தனியார் மயப்படுத்தலை நோக்கிய தற்போதைய சார்புப் போக்கை வைத்துப் பார்க்கையில் இத்தகைய மேலும் பல வேலையாட்கள் தனியார் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருவார்கள் என்பதுடன் இதனால் தற்போதிருந்து வரும் தொழிற்சட்டத்தினால் ஆளவும் படுவார்கள். இருப்பினும் பொதுத்துறை ஊழியர்களுடைய நிலைமை யாதெனில், ஒருசில விதிவிலக்குகளுக்கு அமைவாக அவர்கள் அரசினுடைய விருப்புள்ள வரை பதவி வகிக்கிறார்கள் என்பதாகும். அரசு அதிகாரிகளின் கட்டளைகளினால் பாதிப்புறும் போது இந்த ஊழியர்களுக்குள்ள ஒரேயொரு நிவாரணம் பொதுச்சேவை ஆணைக்குழுவேயாகும். அவர்கள் அடிப்படை உரிமை வழக்குகள் மூலமாக உயர்நீதிமன்றத்தை அணுகுவது அதிகரித்து வருகின்றது. இருப்பினும் இதற்கு இவர்கள் குறிப்பிட்டதொரு அரசியல் அமைப்பு உரிமை மீறப்பட்டுள்ளதாகக் காட்டக் கூடியதாக இருக்கவேண்டும்.

அட்டவணை 1: இலங்கையில் கைத்தொழில் பிரிவு, வாழ்க்கை தொழில் பிரிவு ஆகிய பிரதான தொழிற் பிரிவுகளின்படி தற்போது வேலையில் இருக்கும் நபர்கள் (வடக்கு கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக) இருபாலாரும் (முதல் காலாண்டு 1994)

பிரதான கைத்தொழில் பிரிவு	மொத்தம்	பிரதான தொழில் பிரிவு									
		பிரதான அலுவலர்களும் முகாமையாளரும்	சிறப்புத் தேர்ச்சியுள்ளோர்	தொழில் நுட்பவியலாளரும் உபதேர்ச்சியுடையோரும்	எழுதுவினைஞர்	விற்பனை மற்றும் சேவைப் பணியாளர்	பயிற்சி பெற்ற விவசாய, மீன்பிடிப் பணியாளர்	கைவினை மற்றும் அது தொடர்பான வேலையாட்கள்	கைத்தொழில் நிலைய இயந்திர இயக்குனர் உதவியாளர்	ஆரம்ப நிலைத் தொழிலாளர்	அடையாளம் செய்ய முடியாதவை
மொத்தம்	5148,356	71,359	246,928	141,294	185,041	645,856	1,405,585	852,749	249,904	1,219,982	129,651
விவசாயம்	2191,587	1,548	1,413	12,372	14,995	21,504	1,388,654	11,245	8,045	658,490	73,320
சுரங்கமும் கல்அகழ்தலும்	30,746	-	-	-	-	-	-	18,016	3,250	9,479	-
தயாரிப்பு	782,179	2,330	10,439	28,337	19,293	24,842	-	567,749	63,024	64,061	2,104
மின்சார வாயு, நீர்	19,675	-	-	245	-	-	-	9,828	5,006	4,595	-
நிர்மாணிப்பு	171,554	5,517	5,339	2,624	244	-	-	112,999	4,236	40,594	-
வர்த்தகம் + ஹோட்டல்	666,275	20,970	21,951	4,497	21,066	491,629	283	5,420	1,935	97,560	964
போக்குவரத்து, சேமிப்பு, தொலைத் தொடர்பு	205,424	124	117	15,678	20,245	21,277	-	10,063	112,724	25,197	-
காப்புறுதி + பெருந்தோட்ட விற்பனை	97,552	12,893	5,014	7,204	44,838	7,696	-	6,667	3,234	9,016	988
தனியார் சேவை	825,391	27,977	202,656	70,336	52,809	78,463	121,832	110,152	45,208	175,619	49,319
வரையறுக்கப்படாதவை	157,966	-	-	-	11,531	444	3,817	609	3,241	135,369	2,956

அட்டவணை 2 : தொழிற் சங்கங்கள்

வகைகள்	1989	1990	1991	1992	1993
பதிவு செய்யப்பட்டவை (1)	82	83	86	150	154
இரத்துச் செய்யப்பட்டவை (1)	27	55	140	202	25
செயல்படுபவை (2)	1004	1032	1083	1039	1151
மொத்த அங்கத்துவம் (3)	1,496,001	904,582	1,136,440	884,226	-

குறிப்பு : (1) - வருடத்தின் பொழுது
(2) - வருட இறுதியில்
(3) - அறிவிக்கப்பட்ட சங்கங்கள் மாத்திரம்

மூலம் : தொழில் திணைக்களம்

அட்டவணை 3 : பிரதான தொழிலின் படி, பிரதான கைத் தொழில் பிரிவுகளில் தொழில் புரியும் சனத் தொகையின் பரம்பல் (சத வீதத்தில்)

பிரதான கைத்தொழில் பிரிவு	துறை		
	மொத்தம்	நகரம்	கிராமம்
விவசாயம், விலங்கு வளர்ப்பு, மீன்பிடி	42.6	13.5	49.3
சுரங்கமறுத்தலும் கல் அகழ்தலும்	0.6	0.5	0.6
தயாரிப்பு	15.2	17.8	14.6
மின்சாரம் மற்றும் வாயு	0.4	0.4	0.4
நிர்மாணம்	3.3	5.0	3.0
வர்த்தகம் மற்றும் ஹோட்டல்கள்	12.9	18.5	11.7
போக்குவரத்து, தொடர்பு	4.0	6.6	3.4
காப்புறுதி மற்றும் பெருந்தோட்ட விற்பனை	16.0	28.4	13.2
வரையறை செய்யப்படாதது	3.1	2.9	3.1
மொத்தம்	100.0	100.0	100.0

மூலம் : குடிசனக் கணிப்பு, மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்

11

சமூக பொருளாதார உரிமைகள்

1. அறிமுகம்

இலங்கை வெளிப்படையான முரண்பாடுகளைக் கொண்ட ஒரு நாடாகும். இதன் சிறந்த சமூகக் குறிகாட்டிகள் வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடக் கூடிய பல அம்சங்களைக் கொண்டுள்ளன. இந் நாட்டில் காணப்படுகின்ற சமூகம் பன்மத, பல்லின, பன்மொழித் தன்மை வாய்ந்தது. அத்துடன் அரசியலிலும் நீண்டகாலமாக ஒரு பன்மைத்தன்மை காணப்பட்டு வருகின்றது. ஆயினும் இவற்றுக்கு முரணான வகையில் நாட்டில் குடியியல் மற்றும் அரசியல், இனரீதியான வன்முறை காணப்படுவதுடன் அவை பரந்தளவில் இழப்புக்கள் ஏற்படவும் காரணமாயிற்று. நாட்டின் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அரசு வன்முறைகளைக் கையாண்டு வந்துள்ளது. பல அரசியல் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பொலிஸ் துறையினரும் பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளதுடன் அரசாங்கத்துக்கு அப்பாலுள்ள சக்திகளும் வன்முறையைக் கையாண்டுள்ளன. அரசாங்கத்துக்குச் சார்பானவர்கள் கூறிவந்ததிற்கு முரணான வகையில் இவையாவும் நடை பெற்றுள்ளன. புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அரச வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதாகவும், அரசு இனிமேல் வன்முறைக்கு ஆதரவு அளிக்காது என்றும் வாக்குறுதி அளித்திருந்தது. இது ஒரு நீண்ட கால எதிர்பார்ப்பாகும். நாட்டில் நீண்ட காலமாகக் காணப்பட்ட பல்வேறு சமத்துவமின்மை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இவ்வகையான வாக்குறுதி அத்தியாவசியமானது.

பெரும்பாலான சனநாயக சமுதாயங்கள் 1948 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. இப்பிரகடனத்தில்

காணப்படும் பல்வேறு குடியியல் உரிமைகள், மனித வாழ்வுக்கான உரிமையை மட்டுமன்றிக் குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்கவும் உறுதி செய்யவும் அத்தியாவசியமானவை. இக் குடியியல் உரிமைகளில் மேலும் பல அடங்குகின்றன. கொடூரமான மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமை, தன்னிச்சையாகத் தடுத்துவைத்தல், நீதி விசாரணை தொடர்பான உரிமைகள், அந்தரங்க வாழ்வு, சுதந்திரமான நடமாட்டம் தொடர்பான உரிமைகள், கருத்து வெளிப்பாட்டுரிமை, சுதந்திரத் தொடர்பு சாதனங்கள், இன, பால் ரீதியான பாரபட்சத்துக்கு எதிரான உரிமைகள், அடிமைத்துவம், விபசாரத்தில் பலாத்காரமாக ஈடுபடுத்தப்படல் என்பவற்றுக்கு எதிரான உரிமைகள், சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி என்பவற்றைப் போதியளவுக்குப் பெறுகின்ற உரிமைகள் என்பன இவற்றுள் சிலவாகும். அண்மைக் காலத்தில் இலங்கையைப் பொறுத்தவரையில் அரசு சட்டம், அதிகாரம் என்பவை தொடர்பான உரிமைகள் பொதுவாக மீறப்பட்டு வந்துள்ளன. ஆயினும் இந்நாடு நீண்டகாலமாகவே சமூக மேம்பாட்டுத் துறையில் சிறந்த பெறுபேறுகளை அடைந்து வந்துள்ளமையையிட்டு பாராட்டைப் பெற்றுள்ளதும் உண்மையே. சமூகக் குறிகாட்டிகளை வைத்து நோக்குமிடத்து இதனை மறுப்பதற்கில்லை.

குடியியல் உரிமைகள் வழமையாக ஒரு குறிப்பிட்ட வகையில் மீறப்படுகின்றன. இவ்வாறான அடிப்படை உரிமை மீறல்கள் ஆணுக்கும், பெண்ணுக்குமிடையிலும், இனப்பிரிவினர்களுக்குமிடையிலும், கிராம, நகர்ப்புறங்களுக்குமிடையிலும், (அல்லது பெரும்பாலும் பிரதேசங் களுக்கிடையிலும்) சமத்துவமற்ற முறையில் செய்யப்படும் ஒதுக்கீடுகள் தொடர்பானவையாகக் காணப்படுகின்றன. இவ்வாறான மீறல்கள் கூடியளவுக்கு உளப்பாங்குகளையும், சில செயல் முறைகளையும் சார்ந்தனவாகவும் காணப்படுவது உண்மையே. ஆயினும் அவை நடைமுறைப் படுத்தப்படாத நிலையில் இப்பாரபட்ச நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இந்த நிலைமை பல்வேறு சந்தர்ப்பங்களில் ஐக்கிய அமெரிக்காவிலும் (குறிப்பாக 1950 களில்) தென் ஆபிரிக்காவிலும் காணப்பட்டது. உளப்பாங்கு ரீதியான பாரபட்சமும், நிறுவன ரீதியான பாரபட்சமும் ஒன்றிலொன்று தங்கியவை. ஒன்றையொன்று அவை வலுப்படுத்தின. ஆயினும் நிறுவன ரீதியான பாரபட்சத்தைத் தடைசெய்யவும் சில சட்டவிதிகள் காணப்பட்டன. எடுத்துக் காட்டாக, ஐக்கிய அமெரிக்காவில் 1960களில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் வீட்டுவசதிகளில் பாரபட்சம் காட்டுவதைத் தடைசெய்த போதிலும் அதிகாரத்திலிருந்த குழுக்களும் தனியாட்களும் பின்பற்றிய "றெட்லைனிங்" எனப்படும்

வழிமுறைகளினூடாக வெவ்வேறு இனத்தவர்கள் வெவ்வேறு குடியிருப்புக்களில் வாழ வழிவகுக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக ஐக்கிய அமெரிக்காவில் தமக்கு அருகில் "விரும்பத்தகாத நிறத்தவர்கள்" வந்து குடியேறியதும் வெள்ளையர்கள் தமது இடங்களை விற்றுவிட்டு வெளியேறிய நிலைமை காரணமாக அமெரிக்காவில் கறுப்பர் சேரிகள் அதிகரித்தன.

ஒரு நாட்டின் அரசியல் யாப்பில் சட்டரீதியான அடிப்படை உரிமைகள் காணப்பட்ட போதிலும் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ள பக்கச்சார்பான மனோபாவங்கள் காரணமாகப் பாரபட்சங்கள் இடம் பெறலாம். இம் மனோபாவம் ஓர் உளவியல் நிலைப்பாட்டைக் காட்டுகின்றது. "நாம்" அல்லது "நாங்கள்" என்னும் எண்ணத்துக்கு எதிராகப் "பிறர்" பற்றிய கற்பனா சிந்தனைகள் நீண்டகாலமாக இருந்து வரும் ஒரு முகப்பட்ட கருத்துக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட எதிர் மறை உளப்பாங்கினை இது கருதுகின்றது. இவ் உளப்பாங்கு சில வகையான நோக்குகளுக்கும் எடுகோள்களுக்கும் இடமளிப்பதையே இவ் உளவியல் நிலைப்பாடு கருதுகின்றது. மறுபுறம் பாரபட்சம் என்பது வெளிப்படையான எதிர்மறை நடத்தைகள், நடவடிக்கைகள், செயற்பாடுகள் என்பவற்றைக் கருதுகின்றது. இதில் நடத்தைப்பாவங்கள், பரிமாணம் முக்கியமானதாகும். அரசு அல்லது அதன் துணை நிறுவனங்கள் பாரபட்சமாகச் செயற்படும் போது மனித உரிமைகள் மீறப்படுகின்றன. பெரும்பாலும் ஒரு பக்கச் சார்பான உளப்பாங்குகள், பாரபட்ச நடைவடிக்கைகளுக்குக் காரணமாகின்றன. இதனால் நிறுவன ரீதியான பாரப்ட்சம் தீவிரமடைய நேரிடுகின்றது.

இக்கட்டுரை இலங்கையில் காணப்படும் இவ்வாறான உளப்பாங்கு ரீதியான மற்றும் நிறுவன ரீதியான பாரபட்சத்துக்குக்கிடையிலுள்ள உட்தொடர்புகள் பற்றியது. குறிப்பாக, இக்கட்டுரை சுகாதார வசதிகள், கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் போன்ற அம்சங்களை ஆராய்கின்றது. இச் சமூக நிலைமைகளில் சமத்துவமின்மை ஏற்பட இரு காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. முதலாவதாக அரசையும் அதன் அதிகார அமைப்பையும் உள்ளடக்கிய அதிகரித்த வன்முறை, அதற்குச் சமமான முறையில் அரசுக்கெதிரான வன்முறையைத் தூண்டியமையாகும். இரண்டாவதாக், கடந்த இரு தசாப்தங்களில் இடம்பெற்ற மாபெரும் அபிவிருத்திப் பணிகளின் விளைவாகத் தவிர்க்க முடியாத வகையில் ஏற்பட்ட சமத்துவமின்மைகள் என்பது சிலர் கருத்து.

2. பொருளாதாரப் பின்னணி

இலங்கையின் பொருளாதார வரலாறானது மிகத் தெளிவான நான்கு கட்டங்களைக் கொண்டது. காலனித்துவத்திற்கு முற்பட்ட பிரபுத்துவப் பொருளாதாரம், காலனித்துவ வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட பெருந்தோட்டப் பொருளாதாரம், காலனித்துவத்திற்குப் பிற்பட்ட பாதுகாப்புத் தன்மை கொண்ட பொருளாதாரத் திறமுறை மற்றும் 1977 க்குப் பின்னரான ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் என்பன அவையாகும். இறக்குமதிப் பிரதியீட்டின் பொதுவான திறமுறையானது சுதந்திரத்திலிருந்து 1977 வரையும் மாற்றமின்றி இருந்ததுடன் தரக் கட்டுப்பாடுகளையும் ஒழுங்கமைந்த பொறி முறைகளையும் வலியுறுத்தி நின்றன. இக்காலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் மீது விலைக் கட்டுப்பாடுகளையும் அதே நேரத்தில் பரந்தளவிலான சமூக நலத்திட்டங்களையும் கொண்ட குறைந்த வளர்ச்சிப் போக்கு பிரதான பண்பாக இருந்தது. 1965 – 1980 காலத்தில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வருடாந்த வளர்ச்சி 4.0 வீதமாக இருந்தது.[1] கைத் தொழிலானது சர்வதேச ரீதியாக போட்டித்தன்மையற்றுக் காணப்பட்டதுடன் 1970 களின் நடுப்பகுதியில் வேலையின்மையும் 20 வீதத்தை நோக்கி உயர்வடைந்தது.

இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கைகளுடன் தொடர்பற்ற முறையில் ஒன்றன்பின் ஒன்றாக இரு நிகழ்வுகள் இடம் பெற்றன. 1960 களின் நடுப்பகுதியில் ஆரம்பித்த சனத்தொகை வளர்ச்சிக் கட்டுப்பாடுகளும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நடுத்தரமான வளர்ச்சியும், 1965 – 1980 காலத்தில் வறுமையின் தாக்கத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்குப் பங்களித்தன.[2] 1970 – 77 காலத்தில் அக, புறக் காரணிகளினால், குறிப்பாக விவசாய உற்பத்தியைப் பாதித்த தொடர்ச்சியான வரட்சிகளும் நில நெய் விலை அதிகரிப்புக்களும் பொருளாதார வளர்ச்சியைப் (தலா ஒருவருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மூலம் அளவிடப்பட்டது போன்று) பாதித்திருந்தன.

1980 – 90 காலத்தில் சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம் 4 ஆகக் காணப்பட்டதுடன், தலா ஒருவருக்கான நுகர்வு மிகக் குறைவான வளர்ச்சியைக் கொண்டிருந்த போதும் சிறந்த நுகர்வுப் பரம்பலின் காரணமாக வறுமையின் தாக்கத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சி காணப்பட்டது.

---

1 *Sri Lanka Poverty Assessment* (World Bank, Washington D.C.,1994)

2 *Ibid*

1989 இன் முன்னரான பொருளாதாரச் சீர்திருத்தங்கள் காரணமாக 1990 – 1993 காலத்தில் தலா ஒருவருக்கான நுகர்வு 1.8 சத வீத வருடாந்த வளர்ச்சியையும், வறுமையில் மேலும் வீழ்ச்சியையும் கொண்டிருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது.[3] அத்துடன் 1990 – 1992 காலத்தில் மெய்ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 5 வீத உயர்ச்சியும் 1991 இல் மேலும் 7 வீத வளர்ச்சியும் இடம் பெறுமெனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

வீழ்ச்சியடைந்து செல்லும் வறுமையில் இத்தகைய தொடர்ச்சியான போக்குக் காணப்பட்டாலும் இலங்கையின் ஏறக்குறைய 22.4 வீதமான சனத்தொகை 1991 இல் வறுமைக் கோட்டுக்குக் கீழ் காணப்பட்டதாக மதிப்பிடப்பட்டது. (வறுமைக் கோடானது தனி நபர் ஒருவருக்கு, மாதத்துக்கு ரூ.471.20 பெறுமதியான நுகர்வினை அடிப்படையாகக் கொண்டது) பிரதேச ரீதியான வறுமையின் பரம்பல் பற்றிய அளவீட்டின் படி வறுமையின் நிகழ்வானது கிராமியத்துறையில் மிக உயர்வாக 24.4 வீதத்தினையும், பெருந்தோட்டத்துறையில் குறைந்தளவாக 12.6 வீதத்தினையும், நகரத்துறையில் குறிப்பிடத்தக்களவில் 18.3 வீதத்தினையும் கொண்டிருந்தது. எனவே இலங்கைச் சனத் தொகையின் ஏறக்குறைய ஐந்திலொரு பகுதி வறுமையில் காணப்படுகின்றதுடன் உயிர் வாழ்விற்கான அடிப்படை உரிமையின் சமூக, பொருளாதார அம்சங்களுக்கும் வறுமைக்குமிடையிலான இணைப்பு கலந்துரையாடல்களின் போது கவனத்திற் கொள்ளப்படத்தக்கது.

3. சுகாதார நலன் : மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும்[4]

சமூக முன்னேற்றமும் அபிவிருத்தியும்[5] பற்றிய ஐக்கிய நாடுகள் பிரகடனமானது சுகாதார நலனின் முன்னேற்பாடுகள் பற்றிய அநேக உறுப்புரைகள் விசேட ஆய்வுக்குரியவையாகக் காணப்படுகின்றன. உறுப்புரை 10 (ஈ) ஆனது "சாத்தியமானால் இலவசமாக, முழுச் சனத்தொகைக்கும் உயர் தரத்திலான சுகாதாரத்தையும் சுகாதாரப்

---

[3] *Ibid*

[4] பெண்களின் உரிமைகள் பற்றிய அத்தியாயம் 16 இல், சுகாதாரம் பற்றிய பிரிவைப் பார்க்கவும்.

[5] Proclaimed by General Assembly Resolution 2542 of 11 December 1969

பாதுகாப்புக்கான முன்னேற்பாடுகளையும் அடைதல்" பற்றிக் கூறுகின்றது. உறுப்புரை 19 (அ) ஆனது "இலவச சுகாதார சேவை வசதிகள், போதுமான தடுக்கக் கூடிய, சுகப்படுத்தக் கூடிய வசதிகள், உடல்நல சேவை வசதிகள் என்பன முழுச் சனத்தொகையையும் அடையக் கூடியதாக இருக்க வேண்டும்." எனக் கூறுகின்றது. இலவச சுகாதார நலன் வசதிகளில் இலங்கை கொண்டிருந்த நீண்ட கால ஈடுபாட்டின் காரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையாகச் சார்பளவில் உயர்வான சுகாதாரக் குறிகாட்டிகளை அது கொண்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகையானது 1992 இல் 17.4 மில்லியனாகக் காணப்பட்டதுடன் 1.1 ஆக இருந்த அதன் சனத் தொகை வளர்ச்சி வீதம் 1994 இன் இறுதியில் 0.9 ஆக வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 1992 இல் பருமட்டான பிறப்பு வீதம் 1000 பேருக்குப் 19 ஆக இருந்ததுடன் தென் ஆசியாவிலுள்ள இலங்கையின் அயல் நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து மிகக் குறைந்த நிலையிலேயே காணப்பட்டது. 1992 இல் நாட்டின் மொத்தக் கருவள வீதம் 2.2 ஆக இருந்ததுடன் வாழ்வு எதிர்பார்ப்புக் காலம் 72 வருடங்களாகவும் இருந்தது. 1960 இல் 69.4 ஆக இருந்த சிசு மரணவீதம் (ஒவ்வொரு 1000 உயிர்ப்பிறப்புக்களுக்கு) 1992 இல் 17.6 ஆகச் சடுதியான வீழ்ச்சியைக் காட்டியது. இலங்கையின் பிரசவ மரண வீதமானது இந்தியாவின் 240 வீதத்துடன் ஒப்பிடுமிடத்து 80 ஆகவே காணப்பட்டது.

அட்டவணை 1: சுகாதார நலனில் அரசாங்கச் செலவீடு

வருடம்	மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சத வீதமாக
1970	*1.9*
1976	*1.7*
1980	*1.5*
1988	*1.8*
1992	*1.5*

Source: Griffin, C., *Health Care in Asia : A Comparative study of costs and financing,* World Bank Regional and Sectoral Studies (Washington D.C., 1992)

அட்டவணை 1 இல் காணப்படுவது போன்று சுகாதாரத்துக்கான அரசாங்கச் செலவீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகக் குறைவான பங்கினைக் கொண்டிருந்தது. இவ்வாறு ஒதுக்கீடுகள் குறைவாக இருந்தாலும் இலங்கையில் சுகாதாரக் குறிகாட்டிகள் நல்ல நிலையில் காணப்படுவதற்கு ஏனைய காரணிகள் காரணமாக இருக்க முடியும். இத்தகைய மேன்நிலைக்கு அடையாளம் காணப்படாத ஒன்றிணைந்த சமூக, கலாசாரச் சக்திகள் பங்களித்திருக்கலாம். ஏனைய தென் ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து, ஒப்பீட்டு ரீதியாக இலங்கைப் பெண்களின் சிறந்த கலாசார மனப்பாங்கு பிறப்பு வீத வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருக்க முடியும். அதே போல் மிக உயர்வான நிலையில் காணப்படும் குடும்பத் திட்டமிடல் முறைகளை ஏற்றுக் கொள்வோர் வீதம் (66%), குறைவான பிரசவ மரணம், குறைவான சிசு மரணம் என்பன பால் வேறுபாட்டு அமைப்பின் அம்சங்களுடன் தொடர்புடையது. பெண்களின் உயர்வான எழுத்தறிவும், கல்வியியல் அந்தஸ்தும் காரணமாகச் சுகாதார கல்விச் செய்திகளை அவர்கள் கிரகித்தலும், அதன்படி நடத்தலும் உயர்வான வீதத்தில் இடம் பெறுகின்றதுடன் அதன் விளைவினால் தடுப்பூசிப் பிரசாரங்கள் பரந்தளவிலான நன்மைகளை அளித்து வருகின்றன. இருப்பினும், பொருளாதார ரீதியாகப் பின்னடைந்த பகுதிகளில் மக்கள் பலமடங்கு இடர்களை எதிர் நோக்குகின்றனர். அவற்றில் போஷாக்கும், குறைவான சுகாதார நிலைமைகளும் முதலிடம் வகிக்கின்றன.

மனித வளங்களின் பின்னணியைக் கொண்ட ஆதரவுடன் சுகாதார அமைச்சினால் (எம்.ஓ.எச்) மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இலங்கையின் சிறந்த சுகாதாரக் குறிகாட்டிகளுக்குப் பல்வேறு வகைகளில் பங்களித்துள்ளன. 'யூனிசெவ்' இன் உதவியுடன் சுகாதார அமைச்சு மேற்கொண்ட பரந்தளவிலான பிரசாரங்களினால் இளம்பிள்ளை வாதம், தொண்டை அழற்சி நோய் என்பவை ஒழிக்கப்பட்டன. பிறந்த குழந்தைகளின் நரப் பிசிவு நோய் (neo-natal tetanus), எலும்புருக்கி நோய் (1960 இல் 100,000 சனத்தொகைக்கு 106 ஆக இருந்து 1991 இல் 35.7 ஆகக் குறைந்தது). கக்குவான் இருமல் (1960இல் 118/100,000 ஆக இருந்து 1991 இல் 0.2 ஆனது), ஆகியவற்றின் நிகழ்வுகளில் காணப்பட்ட வீழ்ச்சிகளினால் இறப்புடன் தொடர்பான பிரச்சினைகள் குறைவடைந்தன. இலங்கையில் பெரிதும் புகழ்ந்துரைக்கப்பட்ட சுகாதாரத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இன்றும் தொடர்ச்சியாகக் காணப்படும் பிரச்சினைகள் சார்பில் பொதுவானதொரு தன்னிறைவுக்கு இட்டுச் சென்றதா என்பது புலப்படவில்லை. இறப்புக்கள் நிலையானதாக

இருந்தாலும் அவை புதிய நோய்களின் தோற்றத்தினாலும் தொடர்ச்சியாக நிலைத்திருக்கும் நோய்களின் தாக்கங்களுடனும் இணைந்திருந்தன. அவையாவன:

(1) டெங்கு, இரத்தப்போக்குக் காய்ச்சல், யப்பானிய மூளைவீக்கம் (இறப்புவீதம் 1980 இல் 344/100,000, 1990இல் 644/100,000) போன்ற மலேரியா மற்றும் நுளம்பு தொடர்பான தொற்று நோய்களின் நிகழ்வுகள் அதிகரித்திருந்தன.

(2) நச்சு நோய்களின் நிகழ்வு அதிகரித்திருந்தன.

(3) கடுமையான சுவாசத் (respiratory) தொற்று நோய்களின் நிலைத்து நிற்கும் போக்குகள்.

(4) சில பகுதிகளில் வாந்திபேதியும் நீருடன் தொடர்பான நோய்களும் காணப்படுகின்றன. (இவற்றின் இறப்பு வீதங்கள் 1981 இல் 42/100,000, 1990 இல் 195: இறப்புக்கள் 1981 இல் 0.67, 1990 இல் 1.74)

(5) நஞ்சருந்தும் (தற்செயல் மற்றும் விருப்பினால்) நிகழ்வுகளில் விரைவான அதிகரிப்பு.

(6) வீதிப் போக்குவரத்து விபத்துக்கள் மற்றும் தொழில் சார்பான காயங்களுக்குட்படுவோர் அதிகரிப்பு

(7) புற்றுநோய், இருதய நோய், உயர் இரத்த அழுத்தம் போன்ற மூப்பியல் முறைப்பாடுகள் எனக் கருதப்படும் மரபுரீதியான நோய்களில் அதிகரிப்பு. (உயர் இரத்த அழுத்த நோய்கள் 1965 இல் 129/100,000, 1990 இல் 201: இருதய நோய் 1970 இல் 57/100,000, 1990 இல் 163: புற்று நோயினால் ஏற்பட்ட மரணங்கள் 1970 இல் 5.6/100,000, 1990 இல் 15.1)

(8) கரையோர வலயத்தில் அதிகரித்துவரும் எயிட்ஸ்/ எச்.ஐ.வி தொற்று நோய்கள்.

(9) 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளில் தொடர்ச்சியாகக் காணப்படும் போஷாக்கின்மை (சராசரியின் இழப்பு மதிப்பீடுகள் 1980/81 இல்

12.1%, 1988/ 89 இல் 18.4%, வளர்ச்சிக் குறைவு 1980/ 81 இல் 36.6%, 1988/ 89 இல் 36.4%)[6]

3.1 வள ஒதுக்கீடும் நோய் நிலையும் : தடுக்கக் கூடிய நிலையிலிருந்து குணப்படுத்தும் சுகாதாரத்துக்கான நகர்வு

1992 இல் புதிய தேசிய சுகாதாரக் கொள்கை பற்றிய பூர்வாங்கத் திட்டமானது தேசிய சுகாதாரம் பற்றிய இலங்கையின் அணுகு முறைகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. இவ் அறிக்கையானது, நோய் நிலைக்கான காரணிகளைப் போதிய கவனம் செலுத்தப்படாத சமூகத்தின் சுகாதாரம் பற்றிய கல்வி, தடுக்கக் கூடிய சுகாதாரம் என்பதுடன் தொடர்புபடுத்தலாம் என்பதனை எடுத்துக் காட்டியது. சுகாதார நலனுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பொதுச் சுகாதாரச் செலவீடானது 1977 இல் 7 வீதமாக இருந்து 1990 இன், மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 5 வீதமாக வீழ்ச்சியடைந்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1977 இல் 1.2 வீதத்தில் இருந்து 1990 இல் 1.1 வீதமாக வீழ்ச்சியைக் காட்டியது. (அட்டவணை 2) கடந்த இரு தசாப்தங்களில் தடுக்கக் கூடிய சுகாதார வசதிகளுடன் ஒப்பிடும் போது குணப்படுத்தும் சுகாதாரத்துக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதென்பதை வள ஒதுக்கீட்டின் நகர்வில் காண முடிகின்றது. 1979 இல் கூட, வளங்களின் பெரும்பகுதி (64% அல்லது சுகாதார வரவு செலவுத் திட்டத்தில் மூன்றிலிரண்டு) நோயாளிகளின் நலச் சேவைக்கே ஒதுக்கப்பட்டது. 1990இல் சுகாதாரச் செலவீட்டின் நாலில் மூன்று பங்கு (75%) நோயாளரின் நலன் சேவைகளுக்கே அளிக்கப்பட்டது. சமூகத்தின் சுகாதார சேவைகளுக்கான ஒதுக்கீடு 1979 இல் மூன்றிலொன்றிலிருந்து (29%), 1993 இன் மொத்தச் சுகாதார செலவீட்டின் பத்திலொன்றுக்குச் (13%) சிறிது அதிகமாக வீழ்ச்சியடைந்தது.

---

[6] "Nutritional Status Survey Report 1981/82 and 1988/89", Nutrition and Janasaviya Division, Ministry of Policy Planning and Implementation; and Ratnayake, R.M.K. and Nestel, P.S., "Nutrition and Health of Sri Lankan Children: Results from the first Nutrition and Health Survey", Report prepared by the Nutrition & Poverty Policy Division, Ministry of Ploicy Planning of Implementation (1993)

அட்டவணை – 2 : சுகாதாரச் செலவீட்டின் பரம்பல்
(சத வீதத்தில்)

சேவைகளின் வகை	1979	1981	1983	1985	1987	1990	1993
பொதுநிர்வாகமும் அலுவலரும்	7	8	4	7	20	8	24
நோயாளர் நலன்	64	71	81	66	59	74	62
சமூகத்தின் சுகாதாரம்	29	21	16	26	19	17	13
ஆயுர் வேதம்	0	0	0	0	0	1	0.4

Source : Central Bank of Sri Lanka, " National Health Bulletins" 1980 - 1992 and MOH, Personal Communique for 1993 data

3.2 சுகாதார நலனுக்கான வெவ்வேறு வாய்ப்புக்கள்

தனியார் எதிர் பொதுச் சுகாதார நலனின் கிடைக்கக் கூடிய பல்வேறு வாய்ப்புக்களைப் போல் கிராம, நகரப் பகுதிகளுக்கிடையிலும் சுகாதார நலனுக்கான வாய்ப்புக்களில் ஒப்புரவின்மை காணப்படுவதும் உண்மையே. சுகாதார நலக் கட்டுமானம், சேவைகள், ஆளணி என்பவற்றைப் பொறுத்தவரையில் கிராம, நகரங்களுக்கிடையில் சமனற்றதன்மை அதிகளவில் காணப்படுகின்றது. அட்டவணை 3 இல் சுருக்கமாகக் காட்டப்படுவது போன்று 1983 – 1993 காலத்தில் அரசாங்க வைத்தியசாலைகளின் எண்ணிக்கையில் (483 இல் இருந்து 500) மிகச் சிறிய அதிகரிப்பே அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால் சனத்தொகை 1983 இல் 16 மில்லியனிலிருந்து 1993 இல் 17 மில்லியனாக வளர்ச்சி பெற்றிருந்தது. அரசாங்க வைத்தியசாலைகளில் 50 வீதத்துக்கு மேற்பட்டவை மேற்கு, மத்தி, தென்மாகாணங்களில் (நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க இங்கு நகராக்கம் அதிகம்) அமைவு பெற்றுள்ளன. கிராமியப் பகுதிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட வைத்தியசாலைகள் அதிகளவிலான சனத்தொகைக்குச் சேவையாற்ற வேண்டிய நிலைமைகளினால் தரங்குறைந்த சேவைகளையே வழங்குகின்றன.

அட்டவணை - 3 அரசாங்க வைத்தியசாலைகளின் மாகாண ரீதியான பரம்பலும் அவை சேவையாற்றும் சனத்தொகையும், 1983 மற்றும் 1993

மாகாணம்	வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 1983	ஒவ்வொன்றும் சேவையாற்றும் சனத்தொகை	வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 1993	ஒவ்வொன்றும் சேவையாற்றும் சனத்தொகை
மத்திய	87	23,390	86	25,348
தென்	70	28,142	69	31,985
மேற்கு	64	63,218	79	55,531
வட மேல்	53	33,754	56	35,696
வடக்கு	51	22,823	47	24,635
வட மத்திய	46	19,565	49	20,795
சப்ரகமுவ	43	35,488	43	38,744
ஊவா	37	25,594	40	26,125
கிழக்கு	32	32,406	38	35,545
மொத்தம்/ சராசரி	483	31,917	500	34,367

Source : MOH, Medical Statistics Unit

கிராமப்புற சுகாதார வசதிகள் மிகவும் குறைந்த நிலையிலும் ஆளணி, பராமரிப்பு பொதுவாகப் பற்றாக் குறையான நிலையிலும் காணப்படுவதினால் அவசரகால நிலைமைகளின் போது பெரும் பிரச்சினை எழுகின்றது. எடுத்துக் காட்டாக, பொலநறுவை ஆதார வைத்தியசாலையில் காணப்படும் பற்றாக் குறையினால் வருடாந்தம் ஏற்படும் வயிற்றோட்ட நோய்களைச் சமாளிக்க முடியாமல் இருக்கின்றது. அதேபோல் அனுராதபுர மாவட்டத்தில் உள்ள கிராமிய வைத்தியசாலைகளில் வருடத்தின் சில காலத்தில் அதிகளவில் ஏற்படும் வயிற்றளைச்சல் நோய்களுக்கான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளின் காரணமாகப் பொலநறுவை ஆதார வைத்தியசாலைக்குக் காயமடைந்தவர்கள் கொண்டு வரப்படும் பொழுது குளுக்கோஸ், குருதி ஏற்றுவதற்கான சாதனங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் தெரிய வந்தது.

நகர, கிராமப் பகுதிகளுக்கிடையில் சுகாதார ஆளணியினரின் ஒதுக்கீட்டில் பரந்த சமமின்மை காணப்படுவது பொதுவான அம்சமாகும். 1992[7]

[7] Premaratne, C., "Recent Trends and Issues in Health and Nutrition Status of Sri Lanka" in *Staff Studies*, Vol. 22 (1&2) (Central Bank, 1992) pp 85-125

இல் பொது மருத்துவர் (45%), தாதிகளின் தொகையானது கொழும்பு மாவட்டத்தில் மிக உயர்வாகக் காணப்பட்டதுடன் சனத்தொகைக்கான பொது மருத்துவர் விகிதாசாரம் 1:2199 ஆகக் காணப்பட்டது. ஆனால் கொழும்பு மாவட்டத்துக்கு வெளியே உள்ள மாவட்டங்களில் இவ் விகிதங்கள் 1: 6024 – 1:10,000க்கு இடையில் மிக உயர்வாக இருந்தது. இலங்கையில் சனத்தொகைக்கான பொது மருத்துவரின் நாடு முழுவதற்குமான விகிதம் 1992 இல் 1: 6583 ஆகவும், பாகிஸ்தானில் 1: 2910 ஆகவும், இந்தியாவில் 2520, மலேசியாவில் 1430, சிங்கப்பூரில் 1310, கொரியாவில் 1160 ஆகவும் காணப்பட்டது. கடந்த 10 வருடங்களில் தாதியர், ஊழியர்களுக்கான பதவிகளில் அதிகரிப்புக் காணப்பட்டிருந்தாலும் அவர்களின் பரம்பல் குறிப்பாக மேற்கு மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் தீவின் ஏனைய பகுதிகளில் உள்ளது போன்று தரம் குறைந்த சேவையையே கொண்டிருக்கின்றது. 1992 இல் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மருத்துவரில் 50 வீதம் கொழும்பு மாவட்டத்தில் சேவையாற்றியிருந்தனர். ஆனால் அம்பாறை, மொனராகல மாவட்டத்தில் இவர்களில் ஒருவர் கூட இல்லை.[8]

3.3 செலவுகள், தரம் மற்றும் சேவை வழங்கலின் திறன்

நோயாளரின் நோக்கிலிருந்து பார்த்தால் பொதுச் சுகாதார நலனுக்கான செலவு மிகக் குறைந்ததே எனினும் அச் செலவை மதிப்பிடும் போது மிகக் குறைந்த தரம், திறனற்ற சேவை வசதிகள் என்பன சந்தர்ப்பச் செலவுடன் சேர்ந்து விடுகின்றன. இதனால் தான் அரசாங்க சுகாதார சேவைகள் மீதான தனியாரின் சுகாதாரத் தெரிவுகள் எப்பொழுதும் பொது மக்களினால் விரும்பப்படுகின்றன. அரசாங்க சுகாதாரப் பராமரிப்பு வசதிகள் எப்பொழுதும் மருந்துகளை வழங்க முடியாத நிலையில் இருப்பதினால் நோயாளி அவற்றை வர்த்தகச் சந்தையில் அதிக விலையில் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. படிமுறையான, உறுதியான போக்குக் கொண்ட மரபுரீதியான மருத்துவர்-நோயாளி தொடர்பானது ஒத்துப் போகாத நிலையில் காணப்படுவதுடன், பற்றாக் குறையான அறிவுறுத்தல்களும் நீடித்த உடல் நலக்கேட்டுக்கு வழிவகுக்கின்றது. ஏனெனில் அதிகளவிலான நோயாளிகளின் எண்ணிக்கை, பரிசோதனைகளை விரைவாக, நேரத்துக்கு முடிக்க வேண்டுமென்ற மருத்துவரின் போக்கு இதற்குக் காரணமாகின்றது. நோயைச் சரியாகக் கண்டறிவதற்கு அதுபற்றிய வரலாற்றை நுணுக்கமாக

---

[8] *Ibid*

அறிந்து கொள்ள வேண்டுமென்ற அம்சம் இச்செயற்பாட்டில் தவற விடப்படுகின்றது.[9] நோய்களைத் தெளிவாகக் கண்டறியாமல் பல வகையான மருந்துகளைக் குறித்துக் கொடுத்தல் பொதுவான வழக்கமாக உள்ளது.

3.4 தலையீடுகளின் பொருத்தமானதன்மை

நன்கு திட்டமிடப்பட்ட, பொருத்தமான, காலத்துடன் கூடிய சுகாதார நடவடிக்கைகள் புதிதாகத் தோற்றம் பெற்று வரும் பல நோய்களினால் உயிருக்கு ஏற்படும் அச்சுறுத்தலைத் தவிர்க்க முடியும். இவற்றுள் எயிட்ஸ்/எச்.ஐ.வி முக்கியமானவை. இருந்தாலும் பழையதும் தொடர்ந்து நீடித்து வருகின்ற நோய்களும் கூட பொதுமக்களின் ஒத்துழைப்பு, பொதுச் சுகாதாரக் கவனக் குறைவு என்பன மலேரியா, நீர் தொடர்பான நோய்கள் போன்ற நீடித்து நிலைத்து வரும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் போது மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்துவனவாக உள்ளன.

3.5 சுகாதாரக் கல்வியும் அறிவுக்கான உரிமையும்: முறைசார் தெரிவு

பொதுச் சுகாதாரக் கல்வியானது இலங்கையில் ஒரு விசேட தன்மையில் இடம் பெற்று வருகின்றது. சமுதாய ரீதியான கல்விப் பிரசாரமானது முன்னரே திட்டமிடப்பட்ட முறையிலல்லாது நோய் நிலவும் காலங்களிலேயே பொதுவாக இடம் பெறுகின்றது. பொதுசன தொடர்புச் சாதனங்கள், பாடசாலைப் பிரசாரங்கள் போன்ற பயனுறுதி வாய்ந்த பொறி முறைகளினூடாகப் பல்வேறு வயதுப் பிரிவினரையும் அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகவும் உள்ளன.

3.6 சுகாதாரம் தொடர்பான ஏனைய பிரச்சினைகள்

இலங்கையில் 1862 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க தொந்தரவுக் கட்டளைச் சட்டம் போன்ற பல்வேறு பொதுச் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தன. அத்துடன் உள்ளூர் அதிகார சபைகள் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதிலும் கவனம்

---

9 Eg.de Silva, H., "Patient History and Diagnosis," paper by member of Medical Faculty, University of Ruhuna (1993)

செலுத்தின. 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம், 1988 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டதுடன் அதில் காற்று மாசடைதல், நீர் மாசடைதல், இரைச்சலினால் ஏற்படும் கேடுகள், வளிமண்டலத்தினுள்ளும் நீர் வழிகளிலும் கைத்தொழில் கழிவுகளை வெளியேற்றுவதைக் கட்டுப்படுத்தல், சூழல் தர நியமங்கள் பற்றிய விதிகளை வரைவதற்கு மத்திய சூழல் அதிகார சபைக்கு அதிகாரங்களை வழங்குதல் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைக் கொல்லி கட்டுப்பாட்டுச் சட்டம் மேலும் பீடைக் கொல்லிகளைக் கட்டுப்படுத்தியது. பல்வேறு நிறுவனங்களிடையேயான சரியான கூட்டிணைப்பு இல்லாமை, சட்டங்கள் காலாவதியாதல், தண்டங்கள் பயனளிக்காமை, சூழல் தர நியமங்களின் பற்றாக்குறையும், அவை அமுல் நடாத்தப்படாமை போன்ற காரணங்களினாலும் இவ் எல்லாச் சட்டங்களும், விதிகளும் இலங்கையில் பயனற்றவையாகின.

3.7 போஷாக்கின்மை

இலங்கையில் போஷாக்கின்மையின் தன்மையும், பாதிப்புக்களும் அதனது வெளிப்படையாகத் துலங்காத தன்மையினால் பலரினால் கவனத்திற்கெடுக்கப்படுவதில்லை. 5 வயதுக்குட்பட்ட போஷாக்கற்ற பிள்ளைகளின் சத வீதமானது 33% – 35% வீச்சுக்கிடையில் உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது.[10] நிறைகுறைதல், குறை வளர்ச்சியினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் . சதவீதம் பற்றி தெளிவாக இல்லை. இலங்கையில் காணப்படும் இத்தகைய போஷாக்கின்மை சிலவேளைகளில் உயர்நிலையை அடையும் போது உடல் கரைவு ஏற்படுகின்றது. போஷாக்கின்மையினால் செயலாற்றல் குறைவடையும், அத்துடன் குறுகிய காலத்தில் புலப்படவும் மாட்டாது. நீண்டகாலத்தில் தெரியவரும் போது அக்குறைபாட்டினைத் தீர்த்தல் சாத்தியமற்றதாகி விடும். இவற்றுடன் தொடர்பான, மிகக் குறைந்த சுகாதாரத்தைக் கொண்டிருக்கும் சனத்தொகையின் சுகாதார நலத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான செலவுகள் பொதுவாகக் கவனத்திற்கெடுக்கப்படவில்லை.

---

10 Ratnayake, R.M.K. and Nestel P.S., "Nutrition and Health of Sri Lankan Children: Results from the First Nutrition and Health Survey", Report prepared by the Nutrition of Poverty Policy Division, Ministry of Policy Planning & Implementation (1993)

அண்மையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளில் சமூகத்தின் நுட்பங்கள், பாடசாலைச் செயலாற்றுகை குறைவாகக் காணப்படுவதற்குக் காரணமான நோய்களை எதிர்க்கும் ஆற்றல், வேலைக்கான குறைந்த இயலளவு, தொழில் செயலாற்றம், குறைந்த உழைப்பாற்றல் வீதங்கள், கிரகிக்கும் திறன் குறைவு என்பன சமூக, பொருளாதார வெற்றியினை நிர்ணயிக்கும் காரணிகளாக இருப்பதுடன் அவற்றுட் சில போஷாக்கின்மையின் விளைவாகவும் உள்ளன[11] எனக் கூறப்பட்டுள்ளது. போஷாக்கின்மையின் இத்தகைய பக்க விளைவுகளைப் பற்றிய ஆய்வுகளை மேற் கொள்வதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் காரணமாக இக் காரணிகள் இலங்கையில் பெருமளவு புறக்கணிக்கப்பட்டுள்ளன. மிக வறுமையான, நலிவடைந்த பிள்ளைகளின் பயனுறுதி வாய்ந்த செயற் பாட்டுக்கான நீண்டகாலச் செலவுகளைச் சேகரிக்கும் ஆய்வுகளே இன்றும் நடைபெற்று வருகின்றன.[12] இலங்கையின் விவசாய உற்பத்தி, உணவுக் கொள்கைகளில் போஷாக்குக் கொண்டிருக்கும் தாக்கங்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். கிராமப் பகுதிகளிலிருந்து நகரப் பகுதிகளுக்கு உணவு வளங்களைக் கொண்டு செல்லும் (இலங்கை போன்ற) நாடுகளிலும் வெளிநாடுகளுக்குப் பாரிய அளவில் ஏற்றுமதிகளைக் கொண்டிருக்கும் நாடுகளிலும் போஷாக்கின்மையானது நடுத்தர நிலையில் உள்ளதென அறிக்கைகள் தெரிவிக்கின்றன[13]. இலங்கையில் அநேகமான கிராமப்புற உணவு உற்பத்தியாளர்கள் புரதம் மற்றும் அவசியமான விட்டமின்களில் பற்றாக் குறையான உணவிலேயே வாழ்கின்றனர். தமது உற்பத்திகள் மிக முக்கியமான விட்டமின், போஷாக்குகளுக்கான மூலமாக விளங்கினாலும் பணத்தேவை கருதி அவற்றை நகரச் சந்தைகளுக்கு அனுப்பித் தியாகம் செய்கின்றனர். போஷாக்குப் பற்றாக் குறைக்கான இந்தப் போக்குகளின் விளைவுகள் பற்றி ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

3.8 நீர் மற்றும் உடல் நலனுக்கான அடைகை

சுத்தமான நீர், உடல் நல சுகாதாரத்தின் கிடைக்கும் தன்மையானது பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. 1992 ஆம் ஆண்டின் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையினரின் தரவுகளின் படி சுத்தமான

---

11 *A New Agenda for Women's Health and Nutrition*, World Bank (1994)

12 Chavez, A. and Martinez, B., *Growing in a Developing Community* (Instituo Nacional de la Nutricion, Mexico city, 1981)

13 Stavenhagen R, (ed), "Social Structures of Agrarian Structure in Mexico" in *Agrarian Problems and peasant Movements in Latin America* (Anchor Books, New York, 1967)

நீரைத் தீவு முழுவதும் 53 வீதமான குடியிருப்பாளர்களும், போதுமான உடல் நல சேவைகளை 61 வீதமானோரும் பெறுகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. இத்தரவுகளை மாகாணங்களுடன் தொடர்புபடுத்தும் போது பிரதேசங்களுக்கிடையில் தெளிவான சமமின்மைகள் தோன்றுகின்றன. (அட்டவணை 4) (வடக்குக் கிழக்குக்கான தரவுகள் கிடைக்கவில்லை) கிராம, நகர வேறுபாடுகளும் அட்டவணை 4 இல் தெளிவாக்கப்பட்டுள்ளது. மேற்கு மாகாணத்தில் 75 வீதமான குடியிருப்பாளர் சுத்தமான நீர், உடல் நல சேவைகளைப் பெறக் கூடியவர்களாக உள்ள அதேவேளை ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் இது 30 வீதமாகவே உள்ளது.

அட்டவணை 4: மாகாண அடிப்படையில் நீர் மற்றும் சுக நலனுக்கான அடைகை, 1992

மாகாணம்	சுத்தமான நீருக்கான சனத்தொகையின் அடைகை (சதவீதத்தில்)	போதுமான சுகநலனுக்கான சனத்தொகையின் அடைகை (சதவீதத்தில்)
சப்ரகமுவ	31	77
ஊவா	34	67
தென்	47	66
மத்திய	48	64
வடமேற்கு	55	63
வடமத்தி	58	68
மேற்கு	73	78

Source: UNICEF general data bases as per NWSDB data collection 1994

வயிற்றோட்ட நோய்கள் பற்றிய தரவுகள் அட்டவணை 5 இல் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிராம, நகரப்பகுதிகளுக்கிடையில் தெளிவான எந்த வேறுபாடுகளும் காணப்படவில்லை. நீரானது நகர, கிராம சூழல் வேறுபாடின்றி இரண்டிலும் சுத்தமற்றதாகவே உள்ளது எனினும் இதற்கான பல்வேறு காரணங்களைப் பிரித்தறிவதும் கடினமாக உள்ளது. வயிற்றோட்ட நோய்கள் பற்றிய தரவுகள், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளரை அல்லது வெளிநோயாளர்கள் தகவல்களிலிருந்தே பெறப்படுவதினால் இது எவ்வளவு தூரம் பிரச்சினையின் முழு அம்சத்தையும் பிரதிபலிக்கும் என்பதில் சந்தேகம் உள்ளது. ஏனெனில் இலங்கையில் நீருடன் தொடர்பான நோய்கள் அதிகளவில் முறைபாடு செய்யப்படுவதில்லை.

அட்டவணை 5: நீர், சுகாதார நலன் தொடர்பான நோய்கள் : 1992 இல் அவதானிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை

மாகாணம்	சனத்தொகை	வாந்திபேதி	சீதபேதி	பெருந்தோட்ட சனத்தொகை	வாந்திபேதி	சீதபேதி
சப்ரகமுவா	2,821,440	235	843	3715	1957	282
வட மத்திய	835,379	849	733	–	–	–
வட மேல்	1,926,551	444	798	3789	2	-
ஊவா	923,004	383	1389	194,550	4848	684
மேற்கு	2,821,440	545	985	3715	36	24
தெற்கு	1,710,354	505	1262	22,432	71	13
மத்திய	1,591,402	1613	2503	364,055	11,938	1440

Source : UNICEF general data bases as per NWSDB data collection 1994

4. கல்வி[14]

கல்வித்துறைப் பாராபட்சத்துக்கு எதிரான மகாநாட்டுடன்படிக்கை.[15] பல்வேறு இதர விடயங்களுடன் கல்வியைப் பாரபட்சமற்ற முறையில் மேம்படுத்துவதற்கான தேசியக் கொள்கையாக்கம் தொடர்பான நிலைமைகளை எடுத்துக் கூறுகின்றது. அதற்கேற்ப சனநாயக இலங்கைக் குடியரசின் அரசியல் யாப்பில் உள்ள அரசுக் கொள்கை அடிப்படைக் கடமைகள் பற்றிய வழிகாட்டல் தத்துவம் என்னும் பகுதியில் உள்ள உறுப்புரை 27 (ஏ) இல் அரசுக் குறிக்கோளானது "எழுத்தறிவின்மையை முற்றாக ஒழித்தலும் எல்லா மட்டங்களிலும் யாவருக்கும் சமமான கல்வி வாய்ப்பு உண்டு என்ற உறுதி மொழியை" வரையறை செய்கின்றது.

இலங்கையின் கல்வி முறை பல முக்கிய சாதனைகளைக் கொண்டது. யாவருக்கும் இலவசமாகக் கல்வி வழங்கும் கொள்கைகள் (ஆரம்ப, இடைநிலை, மூன்றாம் நிலை) ஆரம்பப் பாடசாலையில் உயர்ந்த மாணவர் சேர்வு வீதம் (பாடசாலை அனுமதி பெறும் வயதெல்லையில்

---

14 பெண்கள் உரிமைகள் பற்றிய அத்தியாயம் 16 இல் கல்வி பற்றிய பிரிவையும் பார்க்க.

15 Adopted in December 1960 by the General Conference of the United Nations Educational, Scientific and Cultural Organization (UNESCO)

உள்ளோரில் 100%) மாணவர்களின் சிறந்த பாடசாலைப் பங்கு கொள்வீதம், வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையான ஆசிரியர் - மாணவர் விகிதம் (1:24), உயர்ந்த எழுத்தறிவு வீதங்கள் (1992 இல் 88%), பெண்கல்விக்கு எதிரான பாரபட்சம் இன்மை, ஆரம்ப, கீழ், இடை நிலைப்பாடசாலை நிலைகளில் இலவச பாடநூல் விநியோகம் என்பன குறிப்பிடத்தக்கவை. மேலும் பிராந்திய நோக்கில் இலங்கைக் கல்வியின் பல்வேறு துறைகளில் தனது அயல் நாடுகளை விடச் சிறந்த சாதனைகளைச் செய்துள்ளது. எடுத்துக் காட்டாக ஆரம்ப, இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்விநிலைகளில் பெண்கள் சேர்வுவீதம், எழுத்தறிவு வீதம் என்பவற்றைக் கூறலாம்.[16] ஆயினும் கிராமப்புற, பெருந்தோட்ட, நகர்ப்புறப் பாடசாலைகளின் தராதரங்களைப் பொறுத்தவரையில் பல சமனற்ற தன்மைகளைக் காண முடிகின்றது. பெருந்தோட்டப் பாடசாலைகளில் காணப்படும் வசதிகளும் மாணவர்களின் கல்வித் தேர்ச்சி வீதங்களும் வருந்தத் தக்க நிலையில் உள்ளன. கிராமப்புற, பெருந்தோட்டத் துறைகளில் மாணவர் இடைவிலகல் வீதமும், திரும்பக் கற்கும் வீதமும் மிக உயர்ந்து காணப்படுகின்றது. (அட்டவணை 12) அதே வேளையில் மாணவரின் கல்வித் தேர்ச்சியும் குறிப்பிடுமளவுக்குக் குறைந்து காணப்படுகின்றது.

இன்று திறமைமிக்க நிர்வாகத்தை ஏற்படுத்துவதும், கல்வித் தராதரங்களில் உள்ள சமமின்மைகளை நீக்குவதும் முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. பாடசாலை வசதிகள், ஆசிரியர்களை அமர்த்துதல், பாட ஏற்பாடு, ஆசிரியர் பயிற்சி என்பனவற்றில் மேலும் கூடிய கவனத்தைச் செலுத்துவதன் மூலமே இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். பிற பரிகார நடவடிக்கைகளுடன் பயிற்சித் தேவைகளைக் கருத்திற் கொண்டு ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

குடியேற்ற ஆட்சிக் காலத்திலேயே நாட்டின் கல்வி முறையில் ஒப்புரவின்மைகள் தோன்றி விட்டன. அக்காலக் கல்வி முறை இரட்டைத் தன்மை கொண்டதாக இருந்தது. ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்ட ஒரு வகைக் கல்வி முறையும் சுய மொழிகளை (சிங்களம், தமிழ்) போதனா மொழிகளாகக் கொண்ட மற்றொரு அமைப்பும் நடைமுறையில் இருந்தது. ஆங்கிலப் பாடசாலைகள் நகர்ப்புறங்களில் அமைக்கப்பட்டு இருந்தன. இவற்றைக் கிறிஸ்தவ

---

[16] King, E.M. and Hill, M.A., *Women's Education in Developing Countries: Barriers, Benefits and Policies* (John Hopkins University Press, Baltimore, 1993)

மிஷனரிமார் நடாத்தி வந்தனர். செல்வந்த வகுப்பினர்க்கு மட்டுமே ஆங்கிலப் பாடசாலைக் கல்வி கிட்டுவதாக இருந்தது. 1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் யாவருக்கும் இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது. அரசாங்கம் சமயப் பிரிவினரின் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்னர் சுய மொழிக்கல்விக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது. இப்பாடசாலைகளுக்கு அரசாங்கம் தொடர்ந்து உதவி வழங்கவே அவை முன்னைய சமயக் குழுப் பாடசாலைகளின் தராதரங்களை எட்டிப் பிடிக்க முடிந்தது. ஆயினும் ஆசிரியர் பயிற்சியில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. அத்துடன் கல்வித் தகுதியற்ற பெருந்தொகையானோர் அண்மையில் ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இக் காரணங்களால் கல்வித் தராதரம் வீழ்ச்சியடைய நேரிட்டது.

அண்மைக்கால ஆய்வு ஆதாரங்களின்படி[17] சிறந்த அடிப்படைக் கல்வியை வழங்குவதால் பல்வேறு நன்மைகள் கிட்டுகின்றன. கல்வித் தேர்ச்சி, உற்பத்தித் திறனை மேம்படுத்துவதினால் பொருளாதார வருவாய் அதிகரிக்கின்றது. மக்களின் வருமான மட்டங்களும், சுகாதார நிலையும் நன்கு உயருகின்றன. கல்விக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் குறைந்து செல்வதைப் பார்க்குமிடத்து இந் நன்மைகள் கருத்திற் கொள்ளப்படவில்லைப் போல் தோன்றுகின்றது. இரு தசாப்தங்களுக்கு முன், 1972 இல் இலங்கையின் அரசாங்கச் செலவில் 13 வீதம் கல்விக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. 1992 இல் இவ் வீதம் 9.9 ஆகக் குறைவடைந்தது.[18]

யாவருக்கும் ஆரம்பப் பாடசாலைக்கு அனுமதி கிடைத்த போதிலும் (1992 இல் உத்தியோக பூர்வமான மாணவர் சேர்வுத் தொகை 20,27,000), கிராம, நகர்ப்புறப் பாடசாலைகளுக்கிடையில், அரசாங்க - தனியார் பாடசாலைகளுக்கிடையில் கல்வித்தராதரம், வள ஒதுக்கீடு, ஆளணி நியமனம், கட்டுமான வசதிகள் என்பவற்றில் சமனற்ற தன்மைகள் காணப்படுகின்றன. இதனால் சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் பெறுகின்ற கல்வியின் தராதரத்தில் வேறுபாடுகள் காணப்பட்டன. பின்னர் ஆராயப்பட்வுள்ள இடைவிலகல் வீதம் மாணவர்களின் கல்வித் தேர்ச்சி நிலை என்பன இப்பல்வேறு சமமின்மை, வேறுபாடுகள் என்பவற்றைத் தெளிவுறக் காட்டுகின்ற குறிகாட்டிகளாகும்.

---

[17] Lockheed, M.E. and Verspoor A.M. et al, *Improving Primary Education in Developing Countries* (Oxford University Press, Oxford, 1991)

[18] *World Development Report 1992*, (World Bank, Washington D.C.)

வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டமையால் தூரப்பிரதேச, கிராமப்புற, பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான ஒதுக்கீடுகளும், பாதிக்கப்பட நேர்ந்தது. இதனால் ஏற்கனவே இருந்து வந்த சமமின்மைகள் மேலும் விரிவடைந்தன. இவ்வாறு தொடர்ந்திருந்து வந்த சமமின்மைகள் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டன. எடுத்துக் காட்டாக கொழும்புப் பாடசாலைகளில் 17 வீதமானவை க.பொ.த. உ/நி விஞ்ஞான வகுப்புகளைக் கொண்டிருந்தன. மொனராகல மாவட்டத்தில் 2.5 வீதமான பாடசாலைகள் மட்டுமே இவ்வகுப்புகளைக் கொண்டிருந்தன. அவ்வாறே நன்கு பயிற்சி பெற்ற, தகுதி வாய்ந்த ஆசிரியர்களை ஒதுக்கீடு செய்வதிலும், பரந்தரீதியில் சமமின்மைகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக கொழும்பிலுள்ள 5 வீதமான பாடசாலைகளில் உள்ள விஞ்ஞான ஆசிரியர்கள் பட்டதாரிகள் ஆவர். அம்பாறை, மொனராகல மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் 2.5 வீதமானவைகளே பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டுள்ளன. இவ்வாறு சமனற்ற முறையில் ஆசிரியர்களை ஒதுக்கீடு செய்யும் போது கொழும்பு மாவட்ட மாணவர்களில் 46 வீதமானோர் விஞ்ஞானக் கல்வி வாய்ப்புகளைப் பெறுகின்றனர். அம்பாறை மாவட்ட மாணவர்களில் 15.7 வீதமானவர்களுக்கே இவ் வாய்ப்புக் கிட்டுகின்றது. கிராமப்புற, பெருந்தோட்டப் பாடசாலைகளில் நியமிக்கப்படும் ஆசியர்களில் பெரும்பாலானோர் பயிற்சி பெறாதவர்கள். இதனால் அவர்கள் தமது கற்பித்தல் பணியைச் செவ்வனே ஆற்றப் போதிய ஆயத்தத்தைப் பெறுவதில்லை. அட்டவணை 6 மேற்கு மாகாணத்துக்கு வெளியே தகுதி பெறாத ஆசிரியர்களின் வீதாசாரம் மிக அதிகமாக உள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை 6: மாகாணரீதியில் ஆசிரியர் நிலை, 1991

மாகாணம்	தகுதியற்ற ஆசிரியர்கள் (சதவீதத்தில்)	ஆசிரியர் பற்றாக்குறை (சதவீதத்தில்)
தென்	41.45	0.23
மத்திய	39.81	10.88
வட மத்திய	35.63	9.10
ஊவா	29.88	12.54
வட கிழக்கு	29.40	33.88
வட மேற்கு	27.42	4.59
சப்பிரகமுவ	26.87	5.61
மேற்கு	14.49	8.04

Source : Ministry of Education, Education Statistics Unit.

வளப்பற்றாக்குறை பாடசாலைகளின் நிர்வாகக் குறைபாடுகளுடன் இணையும் போது, பாடசாலைகள் பல நடைமுறையில் இயங்கினாலும் சிறந்த கல்விசார் விளைவுகளை அவை ஏற்படுத்த மாட்டாது. சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் இருப்பதற்கே பாடசாலைகளில் போதிய வசதிகள் இல்லை. பாடசாலைக் கட்டிடங்கள் பெரும்பாலும் இடிந்த நிலையில் காணப்படுகின்றதுடன் அவற்றைத் திருத்திப் பராமரிக்க வேண்டியும் உள்ளது. சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மேசைகள், கதிரைகள், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லை. கரும்பலகைகள் இருந்தாலும் வெண்கட்டி இருப்பதில்லை. அத்துடன் போதிய பாடநூல் பிரதிகளும், பயிற்சிப் புத்தகங்களும் மாணவருக்கான நூல் நிலைய வசதிகளும் இருப்பதில்லை. (பெறுமதி வாய்ந்த பொருட்கள் தொலைந்து விடலாம் அல்லது சேதமடையலாம் என்ற பயமும் உண்டு). பாட ஏற்பாடு பொருத்தமற்றதாகவும், காலத்துக்கு ஒவ்வாததாகவும் சரியான முறையில் வரையப்படாததாகவும் உள்ளது. அத்துடன் கற்பித்தல் சாதனங்களும் இதே நிலையிலேயே இருப்பதினால் மாணவர்கள் அடிப்படை எண்ணக் கருக்களையும், தத்துவங்களையும் சரியாகக் கிரகிப்பதுமில்லை. புரிந்து கொள்வதுமில்லை. இதனால் அவர்கள் பாடங்களை மனனம் செய்து கற்க முற்படுகின்றனர்.

4.1 கல்வி, சமூக நகர்வு மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி

சமூகத்தில் பொதுவாகவே கல்வித் தகுதிகளை மக்கள் நாடுவதற்குக் காரணம் கல்வி சமூக நகர்வுக்கான மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முன் நிபந்தனையாக விளங்குவதாகும்.[19] ஆரம்பப் பாடசாலை நிலையில் மாணவர் அனுமதிக்கு அரசாங்கம் வாய்ப்புக்களை வழங்கிய போதிலும் மூன்றாம் நிலைக் கல்விக்கான அனுமதியைப் பல காரணிகள் கட்டுப்படுத்துகின்றன. ரொட்ரிக்கோ[20] என்பவரின் கருத்தின்படி க.பொ.த உ/தி பரீட்சைக்கு அமர்வோரில் 9 வீதமானவர்களே (தேர்வுக்கு அமர்ந்தவர்களில் 1.7 வீதமானவர்களே) ஒவ்வொரு ஆண்டும் உண்மையில் அனுமதி பெறுகின்றனர். இதற்குக் காரணம் வசதிகளின்மையும்

---

[19] See Harbison, R.W. and Hanushek E.A., *Educational Performance of the Poor* (Oxford University Press, Oxford, 1992)

[20] Rodrigo, C., "*Structural Reforms and the Labour Market, 1972-92*: Sri Lanka Case Study" (Unpublished report) (Faculty of Graduate Studies, University of Colombo) (1993)

வளப்பற்றாக்குறையுமே. குணதிலக்க ஏற்கனவே செய்த மற்றொரு ஆய்வின்படி[21] இப்பிரிவினரில் 1.7 வீதமானவர்களும் ஆரம்பப் பாடசாலையில் அனுமதி பெறுவோரில் 1.5 வீதமானவர்களுமே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். ஆரம்பப் பாடசாலைக்குரிய உயர்ந்த அனுமதி வீதங்களுடன் ஒப்பிடும் போது இவ் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும்.

இடைநிலைப் பாடசாலை நிலையில் தேர்வுகளில் சிறந்த சித்திகளைப் பெற்று மூன்றாம் நிலைக் கல்வி நிலையில் அனுமதி பெறவேண்டும் என்ற போட்டி ஏற்படுவதன் காரணமாகப் பாடசாலைக் கல்விக்கு இணையாக ஒரு தனியார் போதனா முறை நாடெங்கும் தோன்றி வளர்ந்துள்ளது. இம் முறைமை நிறுவன மயமாக்கப்பட்டதுடன் முறை சார்ந்த பாடசாலை அமைப்பினால் ஊக்குவிக்கவும் படுகின்றது.[22] பொதுமக்கள் இந்த தனியார் போதனா முறையை விரும்பி அதில் பெரிதும் பங்கு கொள்வதால் பொதுப் பாடசாலை முறையினுடைய குறைபாடுகள் அதிகம் கவனிக்கப்படுவதில்லை. இத்தனியார் கல்வி நிலையங்கள் செலவு மிக்கவை. அத்துடன் அதனை ஒழுங்கமைக்க அதிக நேரத்தையும் சக்தியையும் செலவிட வேண்டியுள்ளது. இதனால் வறியவர்கள் இக்கல்வி நிலையங்களில் இருந்து நன்மை பெற முடிவதில்லை. அவர்களுடைய கல்வித் தேர்ச்சி பாதிக்கப்படுவதுடன் பொதுப் பாடசாலை முறையில் பிற மாணவர்களுடன் அவர்கள் போட்டியிட முடிவதில்லை. அத்துடன் சமூக நகர்வுக்கான வாய்ப்புக்களும் கிட்டுவதில்லை. குறைந்த கல்வித் தகுதிக்கும் வறுமைக்கும் இடையிலுள்ள இணைப்பிலிருந்து வறியவர்கள் வசதியுள்ளவர்களை விடக் குறைந்தளவு முறைசார்ந்த கல்வியையே பெறுகின்றனர். என அறியக் கூடியதாக உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி[23] செய்த ஆய்வொன்றின் படி இலங்கையில் வாழும் வறியவர்களில் 17 வீதமானவர்கள் முற்றாகவே எழுத்தறிவற்றவர்கள். 64 வீதமானவர்கள் ஆரம்பக் கல்வி மட்டுமே (5ஆம் தரம் அல்லது அதற்குக் குறைய) பயின்றவர்கள். வசதிமிக்கவர்களைப்

---

21 Gunatilleke, G., " *The Extent and Nature of the Structural Mismatch in the Domestic Labour Market*, Institute of Policy Studies, Research Studies, Employment Series No. 10 (Colombo, 1989)

22 Economic Review, May-June 1994, contains a series of articles examining various aspects of private tuition in Sri Lanka (People's Bank, Colombo)

23 Quibria, M.G. and Srinivasan T.N., *Rural Poverty in Asia: Priority Issues and Policy Options*, Economics and Development Resource Centre (ADB, Manila, Philippines, 1992)

பொறுத்தவரையில் 2 வீதமானவர்கள் மட்டுமே எழுத்தறிவற்றவர்கள். அவர்களில் 47 வீதமானவர்கள் ஆரம்பக் கல்வி பயின்றவர்கள்.

4.2 எழுத்தறிவு : தரவுகளில் துலங்காதவை

1990 இல் இலங்கையின் எழுத்தறிவு வீதம் 88 ஆக இருந்தது.[24] இது ஒப்பீட்டளவில் பிற தென்ஆசிய நாடுகளை விடக் கூடிய வீதமாகும். வளர்ச்சியடைந்த நாடுகளை எட்டிப்பிடிப்பதாகவும் உள்ளது. ஏற்கனவே ஆராயப்பட்டது போன்று வறியவர்களுக்கும் வசதிமிக்கவர்களுக்கும் எழுத்தறிவில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. பெருந்தோட்டத்துறையின் எழுத்தறிவு குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்து (67.8 வீதம்) காணப்படுகின்றது. (அட்டவணை 7) ஒப்பீட்டளவில் நகர்ப்புற (92.8 வீதம்), கிராமப்புற (89.2 வீதம்) எழுத்தறிவு வீதம் இதனை விட அதிகமானதாகும். கடந்த காலங்களில் பெண்களின் எழுத்தறிவு வீதம் சிறந்த முன்னேற்றத்தை (1953 இல் 55.6%, 1990 இல் 83.4%) கண்டுள்ளது. (அட்டவணை 8)

அட்டவணை 7: துறைசார் எழுத்தறிவு வீதங்கள் 1985/86 மற்றும் 1992

துறை	எழுத்தறிவு 1985/ 86	(சதவீதத்தில்) 1992
நகரம்	89.2	92.3
கிராமம்	84.6	87.1
பெருந்தோட்டம்	60.2	66.1

மூலம்: மத்திய வங்கி, குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரத் திணைக்களம், தொழிற்படை மற்றும் சமூக பொருளாதார அளவீடுகள்.(LFSES)

உயர்ந்த எழுத்தறிவு வீதங்கள் பற்றிக் கூறப்படுவதையிட்டு ஒரு விடயத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும். எழுத்தறிவு வீதங்களைத் தீர்மானிப்பதிலும், எழுத்தறிவு மட்டங்களை மதிப்பீடு செய்யவும் பயன்படுத்தப்படும் வழி முறைகள் பல சந்தர்ப்பங்களில் சிக்கலடைகின்றது. எழுத்தறிவு பற்றிய அளவீடுகள், எழுத்தறிவு பற்றிய வரைவிலக்கண வேறுபாடுகள் கையாளப்படும் வழிமுறைகளில் உள்ள தவறுகளினால்

[24] *World Development Report 1994* (World Bank, Washington D.C.)

சிக்கலுக்குள்ளாகின்றன. எழுத்தறிவுச் கணிப்புக்கள், ஒன்றில் மிகை மதிப்பீடாகவோ அல்லது குறைந்த மதிப்பீடாகவோ அமைகின்றன. அடிப்படை எழுத்தறிவிற்கும், நடைமுறை எழுத்தறிவிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் யாவரும் அறிந்ததே. ஆயினும் எழுத்தறிவு மதிப்பீடுகள் துரிதமாகச் செய்யப்படும் போது எழுத்தறிவுத் தகுதியினைத் தீர்மானிக்கும் நியமங்களிலிருந்து அவை திசை திரும்புகின்றன. எடுத்துக் காட்டாக, அடிப்படை எழுத்தறிவு பற்றிய யுனெஸ்கோவின் வரையறை சில சொற்களை வாசிக்கவும் ஒப்பிடவும் தேவையான ஆற்றலைக் குறிக்கும். நடைமுறை எழுத்தறிவு என்பது எழுத்துச் சாதனங்களிலிருந்து தகவல்களைப் பெறும் ஆற்றலைக் குறிக்கும். பெரிய சனத் தொகையை இலகுவாக மதிப்பீடு செய்ய முயலும் போது இந் நியமங்களிலிருந்து திசை திரும்ப நேரிடுகின்றது. எடுத்துக் காட்டாக ஜென்னிங்ஸ்[25] கூறியவாறு பல சந்தர்ப்பங்களில் சொற்களை எழுத்துக் கூட்டி வாசிக்கும் ஆற்றலே எழுத்தறிவு எனக் கருதப்பட்டது. எழுத்தறிவு மட்டங்களைத் தீர்மானிப்பது தொடர்பான பிரச்சினைகளில் இலங்கை மேலதிக கவனம் செலுத்த வேண்டும். மனித சாதனை விருத்தி தொடர்பான இலங்கையின் நோக்கங்களை நிறைவு செய்யப் புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடைமுறை எழுத்தறிவினை முன்னேற்றுவது முக்கிய இலக்காக அமைதல் வேண்டும்.

அட்டவணை - 8: பால் வகைப்படி எழுத்தறிவு வீதங்கள்

கணிப்புவருடம்	ஆண் (வீதத்தில்)	பெண் (வீதத்தில்) வீதம்	சனத்தொகையில் எழுத்தறிவு பெற்றோர் வீதம்
1953	*80.7*	*55.6*	*69.0*
1963	*85.6*	*67.3*	*77.0*
1971	*85.6*	*70.9*	*78.5*
1981	*90.5*	*82.8*	*86.5*
1990	*90.5*	*83.4*	*86.9*
1992	*90.0*	*83.8*	*86.9*

Source: Department of Censes and Statistics, Quarterly Report (1992)

---

[25] Jennings, J., *Adult Literacy* : *Master or Servant?* (University Press Ltd., Dhaka, 1990)

4.3 இடை விலகல்

அரசாங்கம் யாவருக்கும் பாடசாலைக் கல்வியை வழங்குவதாகக் கூறுகின்ற போதிலும் கல்வி முறைமையில் இருந்து அதிக வீதமான மாணவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ வெளியேறுகின்றனர். மாணவர்கள் க.பொ.த (சா/நி) நிலையை முடிக்காது பாடசாலைகளில் இருந்து இடையில் விலகுகின்றனர். அல்லது சாதாரண நிலையில் சரியாகக் கற்றுத் தேறாது, உயர்நிலை வகுப்புக்கு அனுமதி பெறாது பாடசாலை விட்டு வலகுகின்றனர். கல்வி அமைச்சின் தரவுகளின் படி (1989/90), ஆரம்பக் கல்வியை முடிக்கும் பிள்ளைகளில் 4.6 வீதமானவர்கள் பாடசாலையை விட்டு விலகுகின்றனர். பிற ஆய்வுகளின் படி இவ் இடைவிலகல் வீதம் இன்னும் அதிகமாகும். குறிப்பாக, பாடசாலை மாணவர் பற்றிய ஓர் ஆய்வின் படி[26] இவ் வயதெல்லையில் இடை விலகுவோர் 90 வீதமாகும். இடைவிலகல் க.பொ.த உயர் நிலை வரை தொடர்ந்து செல்கின்றது. அட்டவணை 9 இன் படி இடைவிலகல் மூன்று சந்தர்ப்பங்களில் இடம் பெறுகின்றது. ஆரம்பக் கல்வியை முடிக்கு முன்னரும் (19%), VI ஆம் தரத்திற்கும் VII ஆம் தரத்திற்கு இடையிலும் (15%), IX ஆம் தரத்திலும் (6%), க.பொ.த. சா/நி. கற்று முடிந்ததும் (25%), உ/நி தேர்வுக்குப் பின்னரும் (25%) இடைவிலகல் இடம் பெறுகின்றது. இவ்வாறான கூடிய இடைவிலகல் வீதம் கல்விச் செயற்பாட்டில் இடப்படும் முதலீடு சரியான விளைவுகளைத் தரவில்லை என்பதையே காட்டுகின்றது. ஏனெனில் 12 ஆண்டு பாடசாலைக் கல்வி முடியும் முன்னர் கூடிய வீதமான மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடை விலகுகின்றனர்.

இவ்வாறு மாணவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ பாடசாலையிலிருந்து விலகுவதிலிருந்து ஒரு குறிப்பிட்ட மாணவன் தனது பாடசாலைக் கல்வியை முழுமையாகக் கற்று முடிப்பதை நிர்ணயிக்கும் காரணிகள் பல்வேறு வகைப்படும் எனத் தெரிகின்றது. இவ்விடயம் தொடர்பான தரவுகள் விரிவான முறையில் இல்லை. இடைவிலகல் வீதம் கிராமப்புறங்களிலும், பெருந்தோட்டப் பகுதிகளிலும் மிக உயர்ந்ததாக இருக்கக் கூடும். கல்வியமைச்சின் பாடசாலை மதிப்பீட்டுத் தரவுகளின் படி வடக்கிலும், கிழக்கிலும் இடைவிலகல் வீதம் மிக அதிகமாக

[26] Gunatilleke, G., "*The Extent of Nature of the Structural Mismatch in the Domestic Labour Market*, Institute of Policy Studies, Research Studies, Exployment Series No. 10 (Colombo, 1989)

உள்ளது (அட்டவணை 10) இவ் அட்டவணையின் படி 5 ஆம் தரத்தில் இடைவிலகல் வீதம் மிக அதிகமாகவும், 9 ஆம் ஆண்டில் இவ்வீதம் குறைந்தும் உள்ளது.

அட்டவணை - 9: 1975 காலத்தில் இடைவிலகல் (1975 இல் சனத்தொகை வயது 5 வருடங்கள் = 335,000)

பாடசலைக் காலம்		சதவீதம்
1975இல் பாடசாலை அனுமதிகள்	303,000	90.0
பாடசாலை செல்லாத பிள்ளைகள்	32,000	9.5
1975 காலத்தின் தரம் 6 இல் மாணவர்கள்	239,000	71.0
ஆரம்ப நிலையில் இடைவிலகல்	64,000	19.1
தரம் 9 இல் மாணவர்கள்	189,000	56.0
தரம் 6 - 8 இடையில் இடைவிலகல்	50,000	14.9
தரம் 10 இன் காலத்திலிருந்து மாணவர்கள்	168,000	50.0
உ/நி பரீட்சையை எடுக்கத் தகுதியான மாணவர்கள்	85,000	25.0
சா/நி பரீட்சையின் பின் இடைவிலகல்	83,000	24.7
பல்கலைக்கழகத்துக்குச் செல்லத் தகுதியான மாணவர்கள்	28,000	8.0
உ/நி பரீட்சையின் பின் இடை விலகல்	80,000	23.5
பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்கள்	5000	1.5

Source: Gunatilleke, G., The Extent and Nature of the Structural Mismatch in the Domestic Labour Market, Institute of Policy Studies, Research Studies, Employment Series No. 10 (Colombo 1989)

இடைவிலகலுக்கான சில வெளிநிலைக் காரணிகள் உண்டு. விவசாயப் பயிர்ச் செய்கை அல்லது அறுவடை நடைபெறும் காலங்களில் பாடசாலைகளில் பயிலும் வயது வந்த பிள்ளைகள் விவசாய வேலைகளுக்கு அமர்த்தப்படுகின்றார்கள். அத்துடன் குறைந்த சுகாதார நிலைமையும் முக்கிய காரணியாக உள்ளது. பாடசாலைக் கல்வியில் இக் காரணிகள் ஏற்படுத்தும் எதிர் மறைத் தாக்கங்கள் பற்றி மேலும் ஆராயப்பட வேண்டும். மாணவர் இடைவிலகலை ஏற்படுத்தும் உள்நிலைக் காரணிகளாவன: கல்வியில் மாணவர் ஊக்கம், கற்பித்தல் முறைகள், குறைந்த அல்லது அதிக பட்ச ஒழுங்கு நடவடிக்கைகள் என்பன. பொதுவாகவே மாணவரின் பாடசாலைப் பங்கேற்பும், ஒழுங்கான வருகையும் அவர்களுடைய கல்வித் தேர்ச்சியுடன் இணைக்கப்பட்டு நோக்கப்படும் நிலையில் அவர்கள் எதனைக் கற்கின்றார்கள், கற்றல் செயற்பாடு எவ்வாறு அமைக்கின்றது என்பன பற்றி விரிவாக நோக்கப்படல் வேண்டும்.

அட்டவணை 10: மாகாண அடிப்படையில் 5 ஆம் தரத்தில் இடைவிலகல் வீதங்கள், 1989/90, 1991/92

மாகாணம்	5ஆம் தரத்தில் இடைவிலகல் 1989/90 (சத வீதம்)	9ஆம் வருடத்தில் இடைவிலகல் 1991/92 (சத வீதம்)
கிழக்கு	11.86	1.75
வட	6.45	10.59
மத்திய	4.23	3.31
வட மேற்கு	3.89	4.31
சப்ரகமுவ	3.86	3.92
ஊவா	3.74	4.79
வட மத்திய	3.69	4.31
மேற்கு	3.67	4.03
தென்	3.28	4.04

Source: Ministry of Education, School Census, 1989/90, 1991/92

அட்டவணை 11 : துறை ரீதியான பாடசாலைத் தவிர்ப்பு வீதங்கள்,1987

துறை	தவிர்ப்பு வீதம்
பெருந்தோட்டம்	34.7
கிராமம்	11.1
நகரம்	7.0
எல்லாத்துறைகளும்(சராசரியாக)	17.6

Source: Central Bank, Socio - Economic Achievement 1990

நகர்ப்புற, கிராமப்புற இடைவிலகலில் காணப்படும் வேறுபாடு பற்றிய மேற்கூறிய கருதுகோளுடன் பாடசாலைத் தவிர்ப்புப் பற்றிய மேற் கூறிய தரவுகள் நன்கு ஒத்துச் செல்லுகின்றன. அட்டவணை 11 இல் தரப்பட்டுள்ள தரவுகளின்படி கிராமப்புற (11.1%), நகர்ப்புற (7.0%) பாடசாலைத் தவிர்ப்பு வீதத்தை விடப் பெருந்தோட்டத் துறையில் நகர்ப்புற, கிராமப்புற மற்றும் பெருந்தோட்டத் துறையில் காணப்படும் கல்வி வாய்ப்புகளில் உள்ள வேறுபாடுகளை மீளக் கற்றல் பற்றிய தரவுகள் நன்கு எடுத்துக் காட்டும். க.பொ.த சா/ நி, க.பொ.த உ/ நி ஆகிய நிலைகளில் நாடளாவிய ரீதியில் மிக அதிகமாகக்

காணப்படுகின்ற போது பெருந்தோட்டத்துறையைப் பொறுத்த வரையில் இவ்வீதம் மோசமானதாகவே உள்ளது. பெருந்தோட்டத் துறைக்கான மீளக் கற்றல் வீதங்கள் ஆரம்பப் பாடசாலையிலும் தொடர்ந்து 8ஆம் தரம் வரையிலும் நாட்டில் காணப்படும் பிற அரசாங்கப் பாடசாலைகளை விட இரு மடங்காக உள்ளதை அட்டவணை 12 எடுத்துக் காட்டுகின்றது. ஆயினும் 9 ஆம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரைக்குரிய மீளக் கற்றல் வீதம் எல்லாத் துறைகளிலும் சமமானதாகக் காணப்படுகின்றது.

அட்டவணை 12: நாடளாவிய ரீதியில் அரசாங்கப் பெருந்தோட்டப் பாடசாலைகளில் மீளக் கற்றல் வீதம், 1990

தரம்	அரசாங்கப் பாடசாலைகளில் மீளக் கற்றல் வீதம்	பெருந்தோட்டப் பாடசாலைகளில் மீளக் கற்றல் வீதம்
1 - 5	8.0	16.2
6 - 8	4.9	9.2
9 - 11	20.6	19.9
12 - 13	19.8	21.4
சராசரி	10.4	15.5

Source: Ministry of Education and Higher Education, School Census

மாணவர்களின் கல்வித் தேர்ச்சியை மதிப்பீடு செய்ய ஒரு தரப்படுத்தப்பட்ட பரீட்சை பயன்படுத்தப்பட்டது.[27] இதிலிருந்து கிடைத்த தரவுகளின் படி 1AB பாடசாலைகளில் உள்ள மாணவரில் 22 வீதமானோர் இப்பரீட்சையில் சித்தி எய்தவில்லை. 1C பாடசாலை மாணவரில் 50.4 வீதமான மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தி எய்தவில்லை. 2 ஆம் வகையான பாடசாலை மாணவரில் 67.7 வீதமான மாணவர்களும், 3 ஆம் வகையான பாடசாலைகளில் 53.5 வீதமான மாணவர்களும் இப்பரீட்சையில் சித்தியடையவில்லை (அட்டவணை 13) கிராமப்புறங்களில் காணப்படும் பாடசாலைகளில் பெரும்பாலானவை 2 ஆம், 3 ஆம் வகையைச் சேர்ந்தவை. இப்பாடசாலைகளின் மிக உயர்ந்த சித்தியின்மை வீதங்கள் நகர்ப்புற, கிராமப்புற பாடசாலைகளுக்கிடையிலுள்ள சமமின்மைகளை மேலும் எடுத்துக் காட்டுகின்றன.

---

27 As per the national assessments conducted by the National Institute of Education shown in Table 13 (1990)

அட்டவணை 13 : பாடசாலை வகைப்படி குறைவுச் சித்தி

பாடசாலை வகை	குறைவுச்சித்தியின் காலம்	குறைவுச்சித்தி பெற்றோர்(வீதத்தில்)	குறைவுச்சித்தி பெற்றோர் (மொத்த சத வீதம்)
1 AB	3 வருடங்கள்	5.1	22.5
	2 வருடங்கள்	7.1	
	1 வருடம்	10.3	
1 C	3 வருடங்கள்	19.9	50.4
	2 வருடங்கள்	16.9	
	1 வருடம்	13.6	
2	3 வருடங்கள்	36.8	67.7
	2 வருடங்கள்	19.8	
	1 வருடம்	11.1	
3	3 வருடங்கள்	21.7	53.5
	2 வருடங்கள்	18.2	
	1 வருடம்	13.6	

குறிப்பு: 1AB வகை என்பது க.பொ.த (உ/நி) விஞ்ஞான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளைக் குறிக்கும்.

1C வகை என்பது க.பொ.த (உ/நி) வர்த்தகவியல், கலை-வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளைக் குறிக்கும்.

3ஆம் வகை என்பது 5 அல்லது 8 ஆண்டு வரையுள்ள வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளைக் குறிக்கும்

Source: Kularatna, Dharmadasa and Dharmawardene, *National Study of Wastage in Education in Sri Lanka 1990,* National Institute of Education

சாதாரணநிலை, உயர்நிலைப் பரீட்சையில் விஞ்ஞானத்திலும், கணிதத்திலும் மாணவர் பெற்றுள்ள சித்தி பெரும் ஏமாற்றத்தைத் தருகின்றது. மிக உயர்ந்த வீதமான மாணவர்கள் (சாதாரண நிலையில் 90%, உயர்நிலையில் 78%) இப் பரீட்சைகளில் 50க்குக் குறைவான புள்ளிகளையே (மொத்தப் புள்ளி 100) பெற்றுள்ளனர்.

அட்டவணை 14 : சாதாரண நிலை, உயர் நிலைப் பரீட்சைகளில் மாணவர் சித்தி, 1991

பரீட்சை வகை	50 புள்ளிக்குமேல் பெற்ற மாணவர் (வீதத்தில்)
சா/நி விஞ்ஞானம்	13
சா/நி கணிதம்	8
உ/நி பௌதீகம்	17
உ/நி இரசாயனம்	24
உ/நி தாவரவியல்	32
உ/நி விலங்கியல்	18
உ/நி கணிதம் (தூய)	20
உ/நி கணிதம் (பிரயோக)	23

Source: Balzano, B.A., Report to Asian Development Bank on Educational Achievement in Sri Lanka (ADB, 1991) (informal)

4.4 ஆசிரியர் செயலாற்றம்

இலங்கையின் ஆசிரியர் மாணவர் விகிதம் தனியார் பாடசாலைகளில் 24 தொடக்கம் அரசாங்கப் பாடசாலைகளில் 27 வரை உள்ளது. இது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையானது. கிராமப் புறங்களில் ஆசிரியர் மாணவர் விகிதம் மிக அதிகம். ஓர் ஆசிரியருக்கு 50 மாணவர் வரையும் உள்ளனர்.[28] 1990 ஆம் ஆண்டின் பாடசாலை மதிப்பீட்டுப் புள்ளி விபரங்களின்படி பெருந்தோட்டத் துறையில், மலைநாட்டு பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தலா ஆசிரியருக்கான மாணவர் வீதம் 39 ஆக இருக்கத் தீவு முழுவதற்குமான அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:23 ஆக இருந்தது. பயிற்றப்பட்ட ஆசிரியர் மாணவர் விகிதம் அரசாங்கப் பாடசாலைகளில் 49:1 ஆக இருக்க மலைநாட்டில் 161:1 ஆகக் காணப்பட்டது. பட்டதாரி ஆசிரியர்களின் விகிதாசாரம் மலைநாட்டில் 901:1 ஆக இருக்க ஏனைய அரசாங்கப் பாடசாலைகளில் 103:1 ஆகக் காணப்பட்டது.[29]

---

[28] See Satharasinghe, A.J., "Women's Participation in Education and its Impact on Development," *Economic Review* Jan/Feb 1995, pp 41-46

[29] See also Kanapathipillai, V; *A Decade of Change in the Plantations* (International Centre for Ethnic Studies, Colombo, 1992)

இலங்கையில் தற்போது காணப்படும் குடிசன நிலைமாற்றத்தின் காரணமாகப் பாடசாலைச் சேர்வில் வீழ்ச்சிப் போக்கு காணப்படுகின்றது. 2000 ஆம் ஆண்டில் ஆரம்பப் பாடசாலை மாணவர் சேர்வு 75,000 ஆகவும் இடைநிலைப் பாடசாலைச் சேர்வு 170,000 ஆகவும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.[30] அத்துடன் கல்லூரி நிலை மாணவர் சேர்வு 2000 ஆம் ஆண்டில் 27,000 ஆக அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 1991 இல் 10,000 அரசாங்கப் பாடசாலைகளும், 69 தனியார் பாடசாலைகளும் 547 பிரிவேனா அல்லது பௌத்த பாடசாலைகளும் இருந்தன. ஏறக்குறைய, இவ் அரசாங்கப் பாடசாலைகளில் 5 வீதமானவை 1AB வகை பாடசாலைகளாகவும், 15 வீதமானவை 1C வகை பாடசாலைகளாகவும் 35.8 வீதம் 2 ஆம் வகையினதாகவும், 43.9 வீதம் 3 ஆம் வகைப் பாடசாலைகளாகவும் காணப்பட்டன.

1981 ஆம் ஆண்டில் அரசாங்கப் பாடசாலைகளில் 135,000 ஆசிரியர்களே சேவையிலிருந்தனர். 1993 இல் இது மொத்தமாக 186,609 ஆக அதிகரித்தது. அரசாங்கப் பாடசாலைகளிலுள்ள முழு ஆசிரியர் படையில் 25 வீதமானோர் பட்டதாரிகள், 45 வீதமானோர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், 3 வீதம் பயிற்றப்படாத ஆசிரியர்கள் ஆவர். தராதரமுடைய ஆசிரியர்களின் பரம்பலானது மருத்துவர்களைப் போலவே நகரங்களுக்குச் சார்பானதாகக் காணப்பட்டது. சத்திரசிங்க என்பவரின்படி "தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் விருத்தியடைந்த மாவட்டங்களிலேயே செறிவாகக் காணப்பட்டனர். இதனால் நகர, கிராமப் பகுதிகளுக்கிடையில் கற்பித்தல் தரத்தில் இடைவெளி மேலும் உயர்ந்தது."[31]

இலங்கையின் கல்வி முறைமையில் தரம் குறைந்த ஆசிரியர் செயலாற்றம் ஒரு பிரச்சினையாக உள்ளது. பல காரணிகளுடன் தொடர்பானதாக இவை காணப்படுகின்றன. அவையாவன: ஆசிரியர் சேவைக்கு வேலையற்றோரில் இருந்து தகுதியற்ற தனிப்பட்டவர்களைச் சேர்த்தல், முன் அனுமதித் தகுதியாக எல்லா ஆசிரியர்களுக்கும் சேவைக்கு முன்னான பயிற்சிகளை அளிக்கும் நடைமுறை அல்லது கொள்கையின் பொதுவான பற்றாக்குறை, விடய அறிவையும், ஆசிரியர் திறமையையும் தரமுயர்த்துவதற்குச் சேவையிலுள்ள பயிற்சி மிகக் குறைவு, மிகக்

---

[30] National Institute of Education, data bases, compiled for workshop on Teacher Training (Unpublished data) (1994)

[31] See supra n 28, p 42

குறைந்த வேதனங்களினால் ஆசிரியர்களிடையே மிகக் குறைந்த ஒழுங்குணர்வு, தரங்குறைந்த வேலை நிலைமைகள், குறைவான சம்பளம் சாரா நஷ்ட ஈடுகள், பின்தங்கிய பகுதிப் பாடசாலைகளில் நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊக்குவிப்புக்கள் குறைவு, ஒரே சீரான முறைமையின்மை, வகுப்பறைகளில் ஆசிரியர்களின் மதிப்பீடுகளையும், பருவ காலக் கண்காணிப்பையும் தரப்படுத்தியமை, பதவி உயர்த்தல்/ சம்பளத்துக்கான தகுதி விதியை அடிப்படையாகக் கொண்ட செயலாற்றம் அல்லது உற்பத்தித் திறனின் பற்றாக் குறை என்பனவாகும்.

இலங்கையில் அரசாங்கக் கல்வி முறையில் தலையிடுகின்ற பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக மிக உயர்ந்த ஆசிரியர் வரவின்மை வீதம் காணப்படுகின்றது. தேசியக் கல்வி நிறுவனத்தின் அண்மைக்கால ஆய்வின் படி[32] பாடசாலை வருடத்தின் சராசரியாக 30 நாட்களுக்கு மேல் 25 வீதமான ஆசிரியர்களின் வரவின்மை காணப்பட்டது. கிராமப் பாடசாலைகளிலேயே பெரும்பாலான வரவின்மை காணப்பட்டது. எடுத்துக் காட்டாக ஆய்வில் காணப்பட்டது போன்று வரவின்மை பொலநறுவை மாவட்டத்தில் மிக உயர்வாக இருந்தது. கல்வியின் தரத்திலும், விடயங்களைக் கிரகித்தலிலும், பாடசாலைச் சித்தி மற்றும் இடைவிலகலில் இவ் வரவின்மை கொண்டிருக்கும் தாக்கம் எடுத்துக் கூற முடியாதவை. கொடுக்கப்பட்ட பாடசாலை வருடத்தில் பாடங்களைக் கற்பித்தல், கல்வி ரீதியான தொடர்ச்சி, படிப்பித்தலின் அளவு என்பதில் ஆசிரியரின் உயர்ந்த வரவின்மை பல தடைகளை ஏற்படுத்துகின்றது. கண்காணிப்பின்மையும், குறைந்த ஆட்சியியலும் பாடசாலைகளின் குறைந்த பொறுப்புக் கூறலை அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் ஏற்படுத்துகின்றது. ஆசிரியர் செயலாற்றம் மதிப்பிடப் படுவதில்லையாதலால் வெளியீட்டின் தரத்தை மதிப்பிட முடியாது. உண்மையில் மாணவனே தனது குறைவான உள்வாங்கல் இயலளவுக்காகக் குறை கூறப்படுகின்றான்.

4.5 தொழிற் கல்வியும் பயிற்சியும்

இலங்கையின் வேலையின்மை நோய்கான சஞ்சீவியாகத் தொழிற் பயிற்சி காணப்படுவதுடன் பாடசாலையை விட்டு விலகுபவர்களுக்கு முன்னைய அரசாங்கத்தின் கீழ் பல அமைச்சுகளினூடாக அவை

[32] National Institute of Education, *Teacher Attendance Study* (1992)

அளிக்கப்பட்டு வந்தன. 5 அமைச்சுகள் (உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக விவகார; இளைஞர், விளையாட்டு மற்றும் கலாசார; தொழிலாளர் மற்றும் தொழிற் பயிற்சி; கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்குதல்; பிடவை மற்றும் கைத்தறி) பிரதான பயிற்சிகளை வழங்கி வந்தன. ஏனைய 25 அமைச்சுகள் சேவையிலுள்ளவர்களுக்கும், ஆலைகளில் உள்ளோருக்கும், அலுவலர்களுக்கும் ஆரம்பப் பயிற்சிகளை வழங்கி வந்தன. புதிய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் பெரும்பாலான தொழிற் பயிற்சிகள் யாவும் தொழிலாளர் மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. தொழில் பயில்வோர் பயிற்சிகள் (விஞ்ஞான, தொழில்நுட்ப, மனித வள அபிவிருத்தி அமைச்சின் கீழ்) மற்றும் தொழில் நுட்பப் பயிற்சிகள் அவைக்குரிய அமைச்சுக்களினாலேயே கையேற்கப்பட்டன.

கடந்த இருபது வருடங்களில் இலங்கையின் தொழிற் பயிற்சிகளில் பிரதி செய்தல், கண்காணிப்பின்மை, தரக்குறைவு, கைத்தொழில் தேவைகளுக்கான பயிற்சியின்மை, ஊழியச் சந்தையின் போக்குகளை மதிப்பிடுவதில் பொறிமுறையின்மை, பயிற்சி முன்னேற்பாடுகளில் பால் ரீதியான ஆதிக்கம் என்பன பிரதான பண்புகளாக இருந்தன. தொழில் நுட்ப, தொழிற் பயிற்சி முறைமைகளில் மதிப்பீடு இன்மை, காலத்துக்குப் பொருத்தமற்ற விளக்க முறைகள், சாதனங்கள் மற்றும் வசதிகளின் உத்தம பயன்பாடு இன்மை என்பன பெரிதும் சீரழித்து வந்துள்ளதுடன் இதனால் மனித வள முன்னேற்றத்தில் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் அடையப்பட முடியாமல் போய்விட்டது. பெரும்பாலான பயிற்சி நெறிகள் ஆரம்பத்தில் உயர்வான சேர்வு வீதத்தைக் கொண்டிருந்தாலும் இடைவிலகல் உயர்வாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. உயர்கல்வி அமைச்சினால் அளிக்கப்பட்ட தொழில் நுட்பப் பயிற்சிகளில் இடைவிலகல் 50 வீதமாகக் காணப்பட்டது. இளைஞர், விளையாட்டு மற்றும் கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட தொழில்நுட்பவியலாளருக்கான பயிற்சி நெறிகளில் இது 30 வீதமாகக் காணப்பட்டது.

5. தொழில்

தொழிலுக்கான உரிமை (உறுப்புரை 6), மகிழ்ச்சியாக இருத்தலுக்கான உரிமை மற்றும் வேலை செய்வதற்கான சாதகமான நிலைமைகள் (உறுப்புரை 7) என்பன 1980 இன் இலங்கை அரசாங்கத்தினால்

பின்னுறுதிப்படுத்தப்பட்ட ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர் இல் காணப்படுகின்றது. தொழிலில் பாரபட்சமான கொள்கை எதற்கும் இலங்கை ஆதரவாக இல்லாவிட்டாலும் சமூகத்திற்கிடையில் காணப்படும் ஒப்புரவின்மை சனத்தொகையின் சில பிரிவினரைத் தொழில் பெறுவதை உறுதிப்படுத்துவதின்றும் தடுத்துவிடுகின்றது. இவை குறிப்பாக முறைசார் துறைகளில் காணப்படுகின்றன.

அண்மைய ஆய்வின்[33] படி வேலையின்மைக்கான பிரதான "அமைப்பு ரீதியான காரணம் தொழிலாளர் சந்தையின் கூறாக்கமேயாகும். பிறீவீஸ் என்பவர் வாதிப்பது போன்று "பாதுகாக்கப்பட்ட, பெருந்தோட்ட, பாதுகாக்கப்படாத கூறாக்கங்களுக்கு உள்ளே காணப்படும் தொழிலாளர் சந்தையின் பிரிவே உண்மையில் நெகிழ்ச்சியற்றதும் வேலையின்மையினதும் மிகப் பிரதானமான மூலாதாரமாக விளங்குகின்றது." இத்தகைய கூறாக்கத்துக்கு அப்பால் வறியவர்களினால் எதிர் நோக்கப்படும் "தொடர்ச்சியான தடைகள்" அவர்களிடையே காணப்படும் அதி உயர்ந்த வேலையின்மைக்குக் காரணமாக உள்ளன. ஒன்றுடன் ஒன்று தொடர்பான இத்தகைய கட்டுப்பாடுகளானது எடுத்துக்காட்டாக, வறியவர்களினால் தரமான கல்வியைப் பெற முடியாத நிலைமை, வீட்டில் வருமானம் தரும் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்காகப் பாடசாலைகளிலிருந்து சிறுவர்களை நிறுத்தல் போன்றவற்றினால் ஏற்படும் கீழ் மட்டக் கல்விச் சித்திகள், குறைந்த போஷாக்கு நிலைமை, உயர்வான இறப்பு வீதங்கள், சொத்துக்கள் இன்மை, முக்கிய தகவல்களுக்கான அடைவு இன்மை என்பவையாக இருக்கின்றன. இத்தகைய சமனற்ற தன்மையினால் தொழில் வழங்குவோரிடையே தொழிலின் இயலளவு மற்றும் பயிற்சி மட்டங்கள் பற்றி முற்கற்பிதமான எண்ணங்கள் ஏற்படுகின்றது.

5.1 தொழில் பற்றிய அரசாங்கக் கொள்கை[34]

இலங்கையின் வேலைப்படையில் 25 வீதத்தைக் கொண்ட பாதுகாக்கப்பட்ட அரச பகுதியின் தொழிலாளர் சந்தையில் அரசாங்க சேவை, இராணுவம், அரச சிறு கைத்தொழில் நிறுவனங்கள் (பெருந்தோட்டம் நீங்கலாக) என்பவவை உள்ளடக்கப்பட்டுள்ளன. தனியார் துறை 20 வீதமாக உள்ளது. விவசாயம், சேவைகள் மற்றும் சில தயாரிப்புக்களில்,

---

[33] Prywes, M., "Unemployment in Sri Lanka : Sources and Solutions", Draft paper, World Bank (1994)

[34] தொழிலாளர் உரிமைகள் பற்றிய அத்தியாயம் 10 இனைப் பார்க்க.

பாதுகாப்பற்ற கூறுகளில் (1992 இல் 3.4 மில்லியன் தொழிலாளர்கள்) பரந்து காணப்படுகின்றனர். தொழிலாளர் சந்தையின் பாதுகாக்கப்பட்ட கூறுகளில் வேதன வீதங்கள், இளைப்பாற்றுத் திட்டங்கள், விலக்கலுக்கான தகுதி விதி போன்றவற்றுக்கான ஆட்சியல் கொள்கைகள் சிறந்த வேலைப் பாதுகாப்பை வழங்கியுள்ளன. தனியார் துறையின் வேதனத்துடன் ஒப்பிடும் போது பொதுத் துறையின் தொழிற் தேர்ச்சியாளர் குறைவாக இருந்தாலும் கீழ்மட்ட அரச சேவை ஊழியர்கள் அவர்களின் வேதனம் சாரா தன்மைகளையும் (இளைப்பாற்று நன்மைகள், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம்) கவனத்திற் கொள்ளும் போது சிறந்த இழப்பீடுகளைப் பெறுகின்றனர். 1957 இல் உருவாக்கப்பட்ட தொழிலாளர் விசாரணை மன்று முறைமை, பாதுகாப்புடைய பிரிவுகளில் தொழில் புரியும் வேலையாட்களுக்கு நீதியற்ற முறையில் வேலை நீக்கப்படும் போது பாதுகாப்பை வழங்குகின்றது. மேலும், பொருளாதாரக் காரணிகளைக் கவனத்திற் கொள்ளும் போது வியாபாரத்தை மூடுதல் அல்லது உற்பத்தியில் வெட்டினை மேற் கொள்ளும் போது 1971 இன் தொழில் முடிவுறுத்தல் வேலையாட்களின் சட்டம் (TEWA) ஒரு தொழிலாளியின் ஏதேச்சார வெளியேற்றத்தைத் தடுக்கின்றது. இச்சட்டத்தின்படி அத்தகைய வேலையாளை விலக்குவதாக இருந்தால் அதற்கு முன் தொழில் ஆணையாளரிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும். அதே போன்று வேலைக்கான தகுதியின்மை நீண்ட நாட்களாக உடல் நலமின்மை போன்ற பல்வேறு சூழ்நிலைகளில் வேலையாளை நீக்கும் தொழில் கொடுப்போரை இச்சட்டம் தடுக்கின்றது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மேற் கூறப்பட்ட நன்மைகளினால் பாதுகாக்கப் பட்டிருந்தாலும் பொதுவான வருமான மட்டங்களும், மிகக் குறைந்த வாழ்க்கைத் தர நிலைமைகளும் இந் நன்மைகளின் தாக்கத்தைக் குறைத்து விடுகின்றன.

இலங்கையில் ஆகக் குறைந்த வேதன வீதமானது, அரசாங்கம் தொழில் மற்றும் முகாமைத்துவப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபையினால் நிர்ணயிக்கப்படுகின்றது. தொழில் ஆணையாளரினால் இவ் வீதங்கள் வெளியிடப்படுகின்றன. அவை எந்தளவுக்கு நடைமுறைப் படுத்தப்படுகின்றது, நிலையாக இருக்கின்றது அல்லது மீறப்படுகின்றதென்பதைத் தீர்மானிப்பது கடினம். வீடுகளில் உள்ள கைத்தொழில்களில் பணிபுரியும் பெண்கள் இத்தொழில் சட்ட நோக்கங்களுக்கு அமைவாக இல்லாததினால் பாரபட்சமான வேதனங்களினால் பாதிக்கப்படுகின்றார்கள். ஆண்களிலும் பார்க்கப் பெண்களுக்கு குறைவாக வேதனம் வழங்கப்படுவது பற்றிய சட்டத்தின்

கலைப்பு 1970களில் காணப்பட்டாலும் பால் ரீதியான பாரபட்சம் இந் நடைமுறைக்குப் பங்களிக்கின்றதுடன் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றது.[35]

5.2 தொழிற்படை பங்குபற்றலும் வேலையின்மையும்

1992 இல் இலங்கையின் தொழிற்படை 7 மில்லியனாக இருந்தது. இதில் ஏறக்குறைய 6.3 வீதம் ஆண்கள். 1960 களுக்கும் (20%) 1990 களுக்கும் (39%) இடையில் உள்ள 30 வருடகாலத்தில் பெண் தொழிலாளர் படையின் பங்குபற்றல் வீதமானது இரண்டு மடங்காகியுள்ளது. ஆனால் ஆண் தொழிலாளர் படையின் பங்குபற்றல் வீதம் அதிக மாற்றத்தைக் (67%) காட்டவில்லை).[36]

1960 களில் இருந்து வேலையின்மைப் பிரச்சினை இலங்கை அரசாங்கத்துக்குப் பாரிய பிரச்சினையாக உருவாகியது. 1963 இல் 7.7 வீதமாக இருந்த வேலையின்மை 1971 இல் 18.7 வீதமாக மிக உயர் அதிகரிப்பைக் காட்டியது.[37] 1982 இல் வேலையின்மையானது 11.7 வீதத்துக்கு வீழ்ச்சிடைந்ததாக நுகர்வோர் நிதி மதிப்பீட்டுத் தரவுகள் (Consumer Finance Survey) தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. 1985 இல் வேலையின்மையானது 14.1 வீதத்துக்கு (தொழிலாளர் படை மற்றும் சமூக – பொருளாதார மதிப்பீடு) உயர்ந்தாக மதிப்பிடப்பட்டதுடன் 1990 இல் அதுமேலும் 18.5 வீதத்துக்கு உயர்ந்தது.[38] 1993 இல் மதிப்பீடு செய்யப்பட்ட வேலையின்மை வீதமானது ஏறக்குறைய 13.8 ஆக உள்ளது.

இலங்கையில் வேலையின்மையின் மிக முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:

(1) இளைஞர் வேலையின்மை மிக முக்கியமாகக் காணப்படுகின்றது.

---

[35] Rice, C. and Wilber, J.E., *Childcare Needs of Low Income Women in Rural and Urban Sri Lanka*, Leaque of Women Voters, Overseas Education Fund in collaboration with the Sri Lanka Federation of University Women (1979)

[36] Department of Census and Statistics, *Labour Force Survey 1992*, (Colombo, Sri Lanka)

[37] An Alternate source, the Consumer Finance Surveys show 14% and 24% respectively for 1963 and 1973

[38] LFSES

(2) வேலையின்மையின் நீண்டகாலம் (48 வீதமானவர்கள் 12 மாதங்களுக்கு மேல் வேலையற்றவர்கள்)
(3) வேலையற்றோரின் உயர்ந்த கல்வித் தகமைகள்
(4) உயர்ந்த சதவீதமான பெண் வேலையற்றோர்
(5) உயர் சதவீதமான பெண் கல்வித்தகுதியுடைய வேலையற்றோர்.
(6) பெரும்பாலான வேலையின்மையும் நகரத்துக்குரியவையாக உள்ளது.
(7) கிராமியப் பகுதிகளில் தொடர்ச்சியான கீழுழைப்பு.

5.3 வேலையின்மையும் தொழிலாளர் சந்தையின் பாரபட்சமும்

மிக உயர்வான இளைஞர் வேலையின்மையானது (அட்டவணை 15 இல் காட்டப்படுவது போல்) இலங்கை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.[39] தொழிலாளர் சந்தையில் அவை எவ்வளவு தூரம் பாரபட்சத்தை மறைத்துக் காட்டக் கூடியவை என்பதை இத்தகைய வேலையின்மை பற்றிய புள்ளி விபரங்கள் சான்று பகரக் கூடும். விகிதாசாரமற்ற முறையில் ஆண் வேலையின்மையுடன் (10.8%) ஒப்பிடும் போது பெண் வேலையின்மை (20.8%) அதிகமாக உள்ளது. க.பொ உ/நி தரத்தையுடைய படித்த பெண்களின் வேலையின்மையானது (44.9%) மிக உயர்வாகக் காணப்பட, க.பொ உ/நி தரத்தையுடைய ஆண்கள் 18.7 வீதமாகவே உள்ளனர். இதிலிருந்து இளைஞர்களும், பெண்களும் கூட வேலைவாய்ப்பின் அடிப்படைச் சலுகைகளைப் பெற முடியாதவர்களாக இருக்கின்றனர்.

அட்டவணை – 15: வயது, பால் ரீதியான வேலையின்மை வீதங்கள் 1993 (சத வீதத்தில்)

வயது	பெண்கள்	ஆண்கள்
15–19	33.5	32.5
20–29	67.4	40.3
30–39	26.4	10.4
40–49	16.0	6.1
50–59	5.7	0
எல்லா வயதினரும்	10.2	21.0

Source: Department of Censes & Statistics, Labour Force sunney 1992, Colombo, Sri Lanka.

39 Department of Census and Statistics, *Labour Force Survey 1992*, (Colombo, Sri Lanka)

தொழில் பெறுவதில் மரபு ரீதியாகத் தேவைப்படும் ஆதரவு என்பதுதான் வேலையின்மையின் அறியப்படாத அம்சமாக இருக்கின்றது. அரசாங்கத் துறையிலுள்ள வேலைவாய்ப்புக்களுக்கு ஆட்களைத் திரட்டும் போது நாடளாவிய ரீதியல் போட்டிப் பரீட்சைகளும், நேர்முகப் பரீட்சைகளும் நடாத்தப்படுகின்றன. ஆயினும் நடைமுறையில் இப்பக்கச் சார்பின்மைக்கு முரணான சில செயற்பாடுகள் இடம் பெறுவதாகத் தெரிகின்றது. அரசியல் ஆதரவின் அடிப்படையிலும் சமூகத்தில் நல்ல நிலையிலுள்ள அதிகாரமும், செல்வாக்கும் மிக்கோரின் ஆதரவுடனும் வேலைவாய்ப்புகள் பெறப்படுகின்றன. ஆயினும் இதுபற்றி அதிகம் பேசப்படுவதில்லை என்பதுடன் இவ்வாறு நடைபெறுகின்றதென்று ஏற்றுக் கொள்ளப்படுவதுமில்லை. இவ்வாறான மானியமுறைப் பாணியிலான தொடர்புகள் இன்னும் இருப்பதும் உறவினர்களுக்கு முறையற்ற ஆதரவை வழங்குவதும் வேலைக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் முறைமையும் சமத்துவத்தை இல்லாதொழிக்கின்றன. அத்துடன் வேலைக்கமர்த்துவது பகிரங்கப்படுத்தப்படுவதும் இல்லை. இவையாவும் ஒன்றிணைந்து செயற்படும் போது திறமை, கல்வித் தகுதிகள் என்பவற்றினடிப்படையில் வேலை வழங்கும் முறையைத் தடை செய்கின்றன. அத்துடன் குடும்பத் தொடர்புகளும் சில சந்தர்ப்பங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெற உதவுகின்றன. இவ்வாறான குறைபாடுகள் நிறைந்த, பாரபட்சமான ஆட்சேர்ப்பு முறைகள் சமமின்மையை ஊக்குவிப்பதுடன் இந்நாட்டின் இளைஞர்கள் மத்தியில் விரக்தி மனப்பாங்கினை மேலோங்கச் செய்கின்றன.

மறுபுறம், வேரூன்றிக் காணப்படுகின்ற சில சமூக பொருளாதாரக் காரணிகள் வேலை வாய்ப்புகளில் பால் ரீதியான பாரபட்சங்களுக்கும் இடமளிக்கின்றன. பெண்களின் தகுதிகள், ஆற்றல்கள் என்பன தொடர்பாக காலங்காலமாக இருந்து வரும் தவறான எண்ணங்கள் பெண்களின் வேலை வாய்ப்புக்களை மட்டுப்படுத்துகின்றன.(இவ்வேலை வாய்ப்புகள், வருமானம், பொறுப்பு, தொழில் நிலை தொடர்பானது). பெண்கள் "உயர் அந்தஸ்து" அல்லது "கௌரவம்" வாய்ந்த தொழில்கள் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்கள் பெருமளவுக்கு அவர்கள் தமது பால் வகுப்புத் தொடர்பாகக் கொண்டிருக்கும் நியாயமான கருத்துக்களின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டவை. இதன் காரணமாகவும் அவர்களுடைய வேலை வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான பால் ரீதியான தொழில் வகைகள் பற்றிய கருத்துக்களை ஊழியர்கள் மட்டுமன்றித் தொழில் உரிமையாளர்களும் கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாகவே கல்வித் தகுதிகளையுடைய

பெண்களின் மத்தியில் வேலையின்மைப் பிரச்சினை மிக அதிகமாக உள்ளது.

இன்னொரு வகையிலும் பெண்பாலாரின் தொழில் வாய்ப்புக்களில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. தொழிற் சந்தையில் காணப்படும் முகாமைத்துவ, மேற்பார்வை தொழில் வாய்ப்புக்கள் கனிஷ்டநிலை, இடைநிலை, சிரேஷ்டநிலை என 3 வகைப்படும். இவையாவும் பெருமளவுக்கு ஆண்களுக்குரியவை என்றே கொள்ளப்படுகின்றது. குணவர்த்தன[40] என்பவர் மேற் கொண்ட ஓர் ஆய்வின் படி உயர் தொழில் மற்றும் இதனோடு தொடர்புடைய வேலை வாய்ப்புகளில் ஆண்களும், பெண்களும் சம அளவில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். ஆயினும் உயர் நிர்வாக முகாமைத்துவப் பதவிகளில் ஒரு சில பெண்களே அமர்ந்துள்ளனர். கீழ் மட்ட தொழில் தரங்களில் சம்பள வேறுபாடுகள் அதிகம் இல்லை.[41] எடுத்துக் காட்டாக ஆடைத்துறையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான சம்பளங்களே வழங்கப்படுகின்றன. பொறுப்பான பதவிகளில் ஆண்களின் தொகை அதிகமாக இருக்கும் போது மட்டுமே சம்பளங்களில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. எடுத்துக் காட்டாக ஆடைத் துறையில் பெண் தொழிலாளரின் தொகை அதிகமாகக் காணப்பட்டாலும் சம்பளச் செலவில் பெரும்பகுதியை ஆண் தொழிலாளரே பெறுகின்றனர்.[42]

5.4 கல்விச் சித்தியும் தொழிலும்

கல்வியில் குறைந்த சித்தியானது பல காரணிகளுடன் இணைந்து காணப்படுகின்றது. வறுமை, பிரதேச சமமின்மை, நகர, கிராமிய பகுதிகளுக்கிடையில் காணப்படும் பாடசாலைகளின் வேறுபாடான தரங்கள், கிராமிய சனத்தொகை மற்றும் வறியவர்களின் சமூக அசைவைக் கட்டுப்படுத்தும் பின் தங்கிய பாடசாலைகளின் அதிக உயர்வான ஆசிரியர் வரவின்மை, பரம்பரை பரம்பரையாகச் சமூகத்தின் மரபுரீதியான சமூக, பொருளாதாரப் பிரிவுகளை மீள உருவாக்கல் என்பன அவையாகும். இளம் வயது வந்த வேலையற்று இருப்போரில் க.பொ.த உ/நி (32%), க.பொ.த சா/த (22.3%) படித்தவர்கள் மிக

---

40 Gunawardena, C., "Women in Higher Education in Sri Lanka", *Higher Education Review* 19 (1987) pp 8-23

41 See supra n 35

42 See supra n 20

உயர்வாகக் காணப்படுவதினால் ஊழியச் சந்தையில் புதிதாக நுழைபவர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது.

நன்கு படித்த இளைஞர்களின் குறிப்பாக, அரசாங்க சேவையில் உயர் அந்தஸ்து, உயர்வான வேதனம் போன்ற உயர்ந்த எண்ணங்கள் நிறைவேறுவதற்கான ஒரு வேலை கிடைப்பதற்கு நீண்டகாலம் காத்திருக்க வேண்டியுள்ளது. இளம் வயது வந்தோருக்கான தனியார்துறை மற்றும் கைத்தொழில்களின் முன்னுரிமைகள் சராசரி உ/நிலை படித்தவர்களுக்கன்றி வித்தியாசமான பயிற்சியையுடையவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. இது பிரச்சினையை மேலும் அதிகரிக்கின்றது. பொருளாதார அழுத்தங்களுடன் அதிகரித்து வரும் கீழுழைப்புப் போக்குகளினால் பெரும்பாலான படித்த இளைஞர்கள் தமது கல்வித் தகுதிகளுக்குக் கீழான வேலையை ஏற்றுக் கொள்ளுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

அரசாங்கத்துறைகளிலும் கூட பெண்சேர்ப்பு வீதம் மிகக் குறைவாக உள்ளது. அட்டவணை 16 இல் காட்டப்படுவது போன்று இலங்கை நிர்வாக சேவைத் தொழிலாளர்களில் (வகுப்பு I, மற்றும் II) பெண் வேலைவாய்ப்பு 8 வீதத்துக்கும் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் அவர்களின் எண்ணிக்கை 1984 இல் சராசரியாக 11.7 வீதத்துக்கு அதிகரித்தது. 1992 இல் இது சராசரியாக 11.8 வீதமாகக் காணப்பட்டது.

அட்டவணை 16: இலங்கை நிர்வாக சேவையில் பெண்கள் (சத வீதத்தில்)

தரம்	1979	1984	1988	1992
தரம I	1.8	3.7	6.7	17.5
தரம் II, தரம் I	5.5	14.4	21.5	11.0
தரம II, தரம் II	9.2	12.1	16.1	10.9
மொத்தம்	7.6	11.7	16.0	11.8

மூலம்: வருடாந்த அறிக்கைகள், பொது நிர்வாகத் திணைக்களம் (கொழும்பு, இலங்கை)

அட்டவணை 17 : தொழிலின் அடிப்படையில் அரசாங்க மற்றும் கூட்டுத்தாபனங்களின் பெண் தொழிலாளரின் சத வீதம் 1980, 1985, 1990

தொழில்	1980	1985	1990
தொழில் தேர்ச்சியுள்ள, தொழில்நுட்ப மற்றும் அது தொடர்பான	56	46.8	13.5
நிர்வாக அல்லது முகாமைத்துவ	12	12.9	11.1
எழுதுவினைஞர் மற்றும் அது தொடர்பான	17	27.6	34.5
விற்பனைகள்	36	N.A	N.A
சேவை	3	N.A	N.A
விவசாயம், மிருகவளர்ப்பு காட்டியல், மீன்பிடி மற்றும் வேட்டையாடல்	15	11.1*	N.A

குறிப்பு: 3 வருட வேறுபாடான மதிப்பீட்டு வருடங்களின் (1980, 1985, 1990) கணிப்புத் தரவுகளின் பொருத்தமின்மையின் காரணமாகப் பின்வருமாறு பொருத்திக் கொள்ளப்பட்டது.

(1) 1985 உயர் தொழில் தகமை பெற்றோர், தொழில்நுட்ப மற்றும் அதனுடன் தொடர்பான தரவுகளுக்கு பொறியியலாளர் மற்றும் அதனுடன் தொடர்பான தொழில்நுட்ப வேலையாட்கள், மருத்துவ மற்றும் அதனுடன் தொடர்பான கணிப்புத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(2) 1985, 1990 ஆண்டுகளுக்கு, விற்பனைகள், சேவை மற்றும் விவசாயம் தொடர்பான துறைகளில் உள்ள பெண்களின் சத வீதம் பற்றிய எவ்வித தரவும் இல்லை.

* 1985 தவிர்ந்த ஏனைய வருடங்களுக்கு விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கையே உள்ளது.

மூலம்: கணிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 1980,1985,1990

5.5 ஆங்கில மொழித் திறன்களும் வேலை செய்வதற்கான தகுதியும்

இலங்கையில் குடியேற்ற ஆட்சி முடிவடைந்த பின்னரும் தொழில் வாழ்க்கையில் வெற்றி காண்பதற்கான ஒரு முன் நிபந்தனையாக ஆங்கிலத் தேர்ச்சி உள்ளது. குடியேற்ற ஆட்சிக் காலத்தில் உயர் சமூக வகுப்பினர் ஆங்கில மொழித் தேர்ச்சிக்கு முக்கிய இடமளித்திருந்தனர். இவ்வாறான சிந்தனைக்கும் வேலையின்மைப் பிரச்சினைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. 1956 ஆம் ஆண்டின் பின்னர் ஆங்கிலத் தேர்ச்சியினால் கிடைக்கக் கூடிய நன்மைகளைச் சிங்களம் மட்டும் சட்டம் பெரிதும் பாதித்தது. இவ்வகையில் இரு முரணான போக்குகளைக் காண முடிந்தது. முதலாவது குடியேற்ற ஆட்சியின் பின்னரும், ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையோரே பொதுவாக ஆற்றலும், தகுதியும் கொண்டவர்கள் என்னும் சிந்தனை. இரண்டாவது, தேசியவாதிகள் ஆங்கிலத்தையும், பிற குடியேற்ற ஆட்சிக்கால சிந்தனைகளையும் முற்றாக நிராகரித்தமை. இவ்விரு முரண்பட்ட சிந்தனைகள் ஒன்றிணைந்து தொழில் வாய்ப்புக்களில் குழப்பநிலையை ஏற்படுத்தின.

5.6 தொழிற் பயிற்சிகளும் தொழில் வாய்ப்புக்கான தயார்படுத்தலும்

இலங்கையில் காணப்படும் தொழிற் பயிற்சிக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் கைத்தொழிலிலிருந்து எழும் கேள்விகளுக்கேற்ப அமைந்திருக்கவில்லை. அவை கைத்தொழில்கள் மற்றும் முதலீட்டு வளர்ச்சிப்பகுதிகளின் தேவைக்கேற்றதான பயிற்சிகளை வழங்குகின்ற ஒரு பதிலிறுப்பை வழங்கவில்லை. குணதிலக்க[43] என்பவரது ஆய்வின் படி "இலங்கையில் காணப்படும் பொருத்தமின்மைப் பிரச்சினையானது அமைப்பு ரீதியானதாகக் காணப்படவில்லை." எனக் கருதப்படுகின்றது. அவரது கருத்தின்படி, பொருத்தமின்மை என்பது பல வழிகளில் இடம் பெறுகின்றது. (1) ஊழியச் சந்தையில் காணப்படும் தொழில்களின் வகைகளுக்கும், சிறந்த கல்வித் தகுதியுடைய வேலைப்படையினால் பங்கு கொள்ளப்படும் உயர்வான வேலைப்படைக்கும் இடையில் சமநிலையின்மை. (2) கைத்தொழில்களின் தேவைக்குப் பொருத்தமற்ற பயிற்சி பெற்ற வேலைப்படையின் தொழில் ரீதியான பொருத்தமின்மை, (3) தொழில் அமைப்பிற்கும் அபிலாஷைகளுக்குமிடையிலான (குணதிலக்க

---

[43] Gunatilleke, G., *The Extent and Nature of the Structural Mismatch in the Domestic Labour Market*, Institute of Policy Studies, Research Studies, Employment Series No. 10 (Colombo, 1989)

கூறுகின்ற எதிர்பார்ப்புக்களின் வெட்டுமுகம் என்பதுபோல்) பொருத்தமின்மை.

வேலைகளுக்குத் தயார் செய்தலானது தொழில் சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிச் சீர்திருத்தங்களின் செயற்றிட்டம் குறித்துக் காட்டுவது போன்று இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி வகைகளுக்கும் வேலைப்படைக்குமிடையில் ஒரு திறனடிப்படையிலான இடைவெளி காணப்படுகின்றது. ஏனெனில் பொருத்தமற்ற, தரக் குறைவான பயிற்சியே இடம் பெறுகின்றது. "இன்று கைத்தொழில்கள் அவற்றின் தேவைகருதி அதிகாரிகள், பொருத்தமான நிறுவனங்கள் என்பவற்றுடன் தகவல்களை வழங்கும் பயிற்சிகளை உள்ளடக்கிய ஒரு பொறிமுறை காணப்படவில்லை. குணதிலக்க என்பவரின் கருத்தின்படி "10 ஆம் தரத்தை அடைவதற்கு முன்பு பாடசாலையை விட்டு விலகும் 23 வீதமானவர்கள் எவ்வித சான்றிதழ்களும் அல்லது திறனுமின்றி தொழில் சந்தையில் நுழைகின்றனர்."

இன்று அரசாங்கம் பாடசாலையை விட்டு விலகுபவர்களின் திறனை உயர்த்துவதற்குத் தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தி வருகின்றது. ஆனால் அவை கைத்தொழில்களிலிருந்து எழும் தேவைக்குப் பொருத்தமானதாக அமையவில்லை. தொழிற் சந்தைப் போக்குகளுடன் இப்பயிற்சித் திட்டங்களானது ஒத்துப் போவதாகவும் தென்படவில்லை. தொழிற் சந்தை தகவல் சேவையினால் அவர்களுக்கு தகவல்கள் வழங்கப்படுவதுமில்லை. அவர்களது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மதிப்பிடப்படுவதுமில்லை. எனவே இதுபற்றி மேலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அட்டவணை 18 இல் காட்டப்பட்டிருப்பது போன்று 1978 – 1984 காலத்தில் தொழில்நுட்ப நிறுவனங்களில் பெண் சேர்வு வீதமானது இரண்டு மடங்குக்கு மேலாக அதிகரித்ததுடன் 1992 இல் மூன்று மடங்காக உயர்ந்தது. இருப்பினும் மொத்த மாணவர்களின் சேர்வு வீதமானது (தொழில்நுட்பவியலாளர் சான்றிதழுக்கான) 1984 இல் 1973 இன் சேர்வு வீதத்தின் மூன்றில் ஒன்றாக இருந்தது. அத்துடன் தொழில் நுட்பவியலில் தேசிய தராதரப் பத்திரப் பரீட்சைக்கான பெண்களின் சேர்வு வீதம் அதிகரித்தமை மிகவும் ஆர்வமூட்டுவதாக உள்ளது. ஆங்கில மொழிச் சான்றிதழ்களுக்கான மாணவர் சேர்வின் எண்ணிக்கையும் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 18: தொழில் நுட்ப நிறுவனங்களில் பெண்களின் சேர்வு, 1973, 1984, 1992 (சத வீதத்தில்)

பாடநெறி	1973	1984	1992
தொழில் நுட்பவியலில் தேசிய தகுதிச்சான்றிதழ்	7.7	19.0	25.4
தொழில்நுட்பச் சான்றிதழ்	5.5	9.0	15.0
வரைஞர் சான்றிதழ்	-	53.0	54.0
தொழில் நுணுக்க வர்த்தகங்கள்	0.5	0.6	0.2
கைவினைகள்	-	50.0	6.0
தையல்	-	48.0	83.0
மனையியல்	-	100.0	100.0
விவசாயம்	-	22.0	28.0
வியாபார மற்றும் வர்த்தகத் தகுதிச்சான்றிதழ்	32.0	44.0	53.5
வியாபார மற்றும் வர்த்தகச் சான்றிதழ்	-	71.0	72.0
ஆங்கில மொழி	30.0	53.0	59.0
மொத்தம்	15.0	37.0	45.1

மூலம்: கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு: தொழில்நுட்பக் கல்விப் பிரிவு

5.7 ஏற்றுமதிச் செய்முறை வலயம்

கைத்தொழில் வேலைப்படையில் பெண்களின் சத வீதம் உயர்வதற்கான ஆரம்ப ஊக்க நிலையானது 1956 க்கும் 1965 க்கும் இடையில் இடம் பெற்றது. இக்காலத்திலேயே இறக்குமதிப் பதிலீட்டில் விரைவான வளர்ச்சி காணப்பட்டது. கைத்தறி, நெசவு, செயற்கைப் பிடவைகள், பிளாஸ்ரிக் மற்றும் தோல் பொருட்கள், பொம்மைகள், மின்னியல் கருவிகள், மட்பாண்டங்கள் போன்ற பல தயாரிப்புக் கைத்தொழில்களில் பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்தன. 1953 இல் மொத்த வேலைப்படையில் பெண் வேதன வேலையாட்கள் 18.5 வீதமாக இருந்தனர். 1971 இல் இவர்களின் பங்கு பற்றலானது இத்துறைகளில் 81.6 வீதமாக அதிகரித்தது. 1980/81 இல் பெண்களின் வேலைப்படை பங்கு பற்றல் வீதமானது 25.8 ஆக இருந்து 1993 இல் 33.3 வீதமாக உயர்வடைந்தது.[44]

[44] Alailema, P., " Education Employment Linkages : The Macro Profile," *Sri Lanka Journal of Social Science*, Vol.15 (1992) pp 1-45; and Department of Census and Statistics, *Labour Force Survey* 1992 (Colombo, Sri Lanka)

1970 களில் முதலிட்டு ஊக்குவிப்பு வலயங்கள் திறக்கப்பட்டதுடன் கைத்தொழில் விரிவாக்கத்தின் இரண்டாவது அலை ஏற்பட்டது. 1983 இல் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட 52 கைத்தொழில்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் (FTZ) இயங்கின. இவற்றில் 56 வீதம் ஆடைத் தொழிற்சாலைகள், அவற்றில் இளம் பெண்கள் தொழில் புரிந்தனர். 1986 இல் இவ் வலயத்தில் இயங்கிய தொழிற்சாலைகள் 77 ஆக அதிகரித்ததுடன் அவற்றில் 38 வீதம் (29 தொழிற்சாலைகள்) ஆடைக் கைத்தொழில்களாகும். இவ் 77 தொழிற்சாலைகளில் பணிபுரிந்த மொத்த வேலைப்படையில் 79 வீதம் பெண்கள் (28,414 பெண்கள்) ஆக இருந்ததுடன் புடவைகள் தயாரிப்பு, அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்களில் 93 வீதமானோர் தொழில் புரிந்தனர். 77 தொழிற்சாலைகளின் வேலைப்படையில் ஆண்கள் 21 வீதத்தைக் கொண்டிருந்தனர். இவ் ஆண்களில் 38 வீதம் புடவைத் தயாரிப்புக்கள், ஆடை மற்றும் தோற் பொருட்களில் தொழில் புரிந்ததுடன் 33 வீதம் எயர் லங்காவிலும், 7 வீதம் இரசாயனக் கைத்தொழில்களிலும், இன்னுமொரு 7 வீதம் சேவை தொடர்பான கைத்தொழில்களிலும், 3 வீதம் உலோகமற்ற கனிய உற்பத்தித் தயாரிப்புக்களிலும், 2 வீதம் உலோக இயந்திரக் கைத்தொழில்களிலும், ஏறக்குறைய 10 வீதம் ஏனைய பல வகையான தயாரிப்புக் கைத்தொழில்களிலும் ஈடுபட்டிருந்தனர். இவ் ஒவ்வொரு பகுதிகளிலும் பெண்கள் ஆண்களை விட அதிகமாக இருந்தனர். 1992 இல் ஏற்றுமதிச் செய்முறை வலயத்தின் வேலைப்படையில் 78.2 வீதம் இளம் வயதினரைக் கொண்டதாகவும் பெண்களாகவும் இருந்தது.[45]

ஏற்றுமதிச் செய்முறை வலயங்களில் வேலை கொடுப்போர் இளம் பெண் வேலையாட்களையே பெரிதும் விரும்புவதினால் வேலைப்படையில் பெண்களின் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளது. இவ்வயதில் பெண்களின் வேலைவாய்ப்புப் பற்றிச் செய்யப்பட்ட ஆய்வில்[46] தொழிலிலிருந்த பெண்களில் 96 வீதமானோர் 30 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருந்தனர். அவர்களில் பெரும்பான்மையோர் (76%) 16-25 வயதுக்கிடைப்பட்டவர்களாக இருந்தனர். அதேவேளை 98 வீதமானோர்

---

[45] Kelly, T., " Trends and Outlook for Sri Lanka Labour Markets" *in Human Resource Development Review*, Human Resource Development Council (Colombo, 1994)

[46] Goonetilleke, H. and Goonesekere, S., "Daughters in Industry, "Report published by CENWOR (Colombo, Sri Lanka, 1986)

விவாகமாகாதவர்கள். இக் கைத்தொழில்களில் இளம் பெண் வேலைப்படையை விரும்புவதற்கு அவர்களின் இணங்கிப் போகும் தன்மையும், ஆர்வத்துடன் எளிதில் பயிலக் கூடிய தன்மையுமே காரணமாக இருக்கின்றது என தென், தென் கிழக்கு ஆசியா முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

5.8 தொழில் அபிலாஷைகள் எதிர் வறுமை

கிராமியத் துறையில் வேலையின்மையின் அதிகரிப்பு அட்டவணை 19 இல் காட்டப்படுகின்றதுடன் அதனை வறுமையுடன் தொடர்படுத்தவும் முடிகின்றது. வாழ்க்கைத்தர உயர்வும், ஒரு நபரின் வருமானத்தில் வாழ முடியாத மிகவும் கீழ்மட்ட வருமானத்தைக் கொண்டிருக்கும் பெரும்பாலான குடியிருப்பாளரின் இயலாத தன்மையும் அதிகமான இளம் பெண்களை வேலைப்படையில் சேருவதற்குத் தூண்டுதலாக இருக்கின்றது. ஆனால் பெண்களின் தொழில் பற்றிய மரபுரீதியான நியமங்கள் வேலைப்படையில் அவர்கள் சேர்வதைத் தடை செய்கின்றது. பெண்களின் வேதன தொழில் தொடர்பான சமூகத் தடைகளின் உடைவு, கைத்தொழில் வளர்ச்சியினால் ஏற்பட்ட தொழிலுக்கான வாய்ப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதனுடன் இணைந்த திருமணத்துக்கான வயது பின்தள்ளப்படலும், பெண்களின் வேலைப்படை பங்கு பற்றலை அதிகரித்துள்ளது. இருந்த போதிலும் வறுமையானது இத்தோற்றப்பாட்டுக்கான பிரதான தூண்டுதலாக விளங்குகின்றது.

அட்டவணை 19: துறை ரீதியாக வேலைப்படையில் வேலையற்றோர் (சத வீதத்தில்)

துறை	1978/79	1981/82	1985/86	1990/91
நகரம்	20.7	14.2.	19.5	18.4
கிராமம்	14.6	12.0	13.2	15.9
பெருந்தோட்டம்	5.6	5.0	7.8	N.A

Source: CFC 78/79, CFC 81/82 and Department of Census and Statistics

1986 இல் மேற்கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக வலயப் பெண் தொழிலாளரினைப் பற்றிய ஆய்வில் (அவர்களில் 68 வீதமானோர் சா/த அல்லது உ/தி தரமுடையவர்கள்) 96 வீதமான பெண் தொழிலாளரின்

முறையீட்டின் படி "இத் தொழிற்சாலை வேலையை வறுமையிலிருந்து விடுபடுவதற்கே பெற்றுக் கொண்டனர்" என அறிய முடிந்தது. மாற்றுத் தொழில் வாய்ப்புக்கள் இன்மையினால் இதில் சேருவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள், அத்துடன் ஆகக் குறைந்தது போலி மதிப்பையும், உணவைப் பெறுவதற்கான ஒரேயொரு தெரிவையும் கொண்டிருந்தது. உயர் வருமான நிலைகளில் க.பொ.த உ/தி தரத்தையுடைய பெண்கள் "கௌரவமான" வேலையை விரும்பினாலும் தொழில் நுட்பப் பயிற்சியுடைய வேலைகளில் அதிக ஆர்வம் காட்டவில்லை. மறுபக்கத்தில் அவர்களின் தகுதிகள் (உ/தி வரை) சொற்பப் பயிற்சிகளைக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

குணதிலக்க, குணசேகர[47] ஆகியோரினால் மேற் கொள்ளப்பட்ட ஆய்விலுள்ள குடும்ப வருமானத் தரவுகளின்படி 54 வீதமான குடும்பங்கள் மாதாந்தம் 700 ரூபாவுக்குக் குறைந்த வருமானத்தையே பெறுகின்றன. இதிலிருந்து வறுமைக்கும் தொழிலில் பெண்களின் உயர்வுக்கும் இடையில் இணைவு காணப்படுகின்றதென்ற கருதுகோள் உறுதிப்படுத்தப்படுகின்றது. 82 வீதமான குடும்பங்களின் தொழில் பின்னணியானது நிலமற்ற விவசாயத் தொழிலாளர், பகுதி நேரத் தொழில், பொதுத்துறையில் கீழ்மட்ட வேதனம் பெறும் தொழிலாளர் அல்லது வாழ்க்கைப் பயிர்ச் செய்கையைக் கொண்ட விவசாயிகளாகவே இருக்கின்றது. இத்தரவுகள் மேலும் வெளிப்படுத்துவதென்னவெனில் வறுமையின் தாக்கமானது ஒரு தள்ளு விசைக் காரணியாகச் செயற்பட்டு அதிகமான பெண்களை வேலைப்படையில் சேர்த்து விடுகின்றது. அதேபோல் இவ்வாய்வின் படி ஏற்றுமதிச் செய்முறை வலயத்துக்கு வெளியில் பணிபுரியும் பெண் குடும்பங்களில் 74 வீதமானது நிலமற்ற பகுதி நேர விவசாய தொழிலாளர்களையும், வேதனம் பெறும் தொழிலாளர்களையும் (60%), வாழ்க்கைப் பயிர்ச் செய்கையைத் (14%) தொழிலாகக் கொண்டவர்களையுமே உள்ளடக்கி உள்ளது.

ஆய்வின் படி 8 வீதமான பெண் தொழிலாளர்கள் ஆரம்ப நிலை வருமானம் தேடுபவர்களாக உள்ளனர். 90 வீதமான குடும்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் வேலை தேடும் நிலையிலுள்ளனர். அளவீடு செய்யப்பட்ட 70 வீதமான பெண்கள் தமது சேமிப்புகளில் அரைப்பகுதியையும், 14 வீதமானோர் தமது சேமிப்புக்களில் 100 வீதத்தையும் செலவழிக்கின்றனர். ஏற்றுமதிச் செய்முறை வலயங்களுக்கு

---

47 *Ibid*

வெளியே 60 வீதமான வேலை செய்யும் பெண்கள் தமது சேமிப்பில் 100 வீதத்தைச் செலவிடுகின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. தமது பெற்றோருடன் வாழும் ஏறக்குறைய அரைவாசி இளம் பெண்கள் தமது முழு வேதனத்தையும் அவர்களுக்குக் கொடுத்து விடுவதுடன் நாளாந்தம் போக்குவரத்துச் செலவுகளுக்கும் ஏனைய செலவுகளுக்கும் அவற்றினை மீண்டும் பெற்றுக் கொள்கின்றார்கள்.[48]

5.9 தொழிலில் இனரீதியான அமைப்பு

இலங்கையில் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைப்புக்களில் இனப் படையாக்கத்தின் செயற்பாடுகள் பற்றிச் சிறிதளவே ஆராயப்பட்டுள்ளது. பெருந்தோட்டத்துறையில் வேலையினரின் பெரும்பகுதி இந்தியத் தமிழர் (82%) ஆக இருப்பது குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலம் வரையும் இலங்கைப் பிரசாவுரிமை இன்மையினால் இப்பெருந்தோட்டச் சூழலிலிருந்து வெளியே நகர்வதற்கான திறனை அது தடுத்து வந்தது. சிறுபான்மைப் பிரிவாக இருப்பதினால் அதன் வேறுபட்ட சமய, கலாசார, மொழிப் பாரம்பரியம் என்பது பாரிய சமூகத்துடன் ஒன்றிணைந்து கொள்வதற்குத் தடையாக இருந்தது.[49] பெருந்தோட்டத் துறையில் இருந்து இச் சனத்தொகையின் அசைவும், அதற்கு இணையாகப் பெருந்தோட்டத் துறையை நோக்கிய சிங்களக் கிராமத்தவர்களின் அசைவும் 1964 இல் சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையின்படி இந்தியத் தமிழ் சனத் தொகையின் ஒரு பகுதிக்குப் பிரசா உரிமை வழங்கப்பட்ட போது இடம் பெற்றது.

பெருந்தோட்டத்துறைக்கு வெளியே அவர்களின் ஆதிக்கமானது கீழ்மட்ட நிலையிலேயே இருக்கின்றதுடன் தெருக்களைச் சுத்தம் செய்தல், குப்பை கூழங்களை அள்ளுதல், செருப்புத் தொழில் போன்ற கீழான அந்தஸ்துத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இது அவர்களின் தொழில் ரீதியான அசைவுடன் தொடர்பான சிக்கலான விடயங்களாக உள்ளன. குறைந்த எழுத்தறிவு மற்றும் கல்வியியல், சுகாதாரக் குறிகாட்டிகள் இச் சனத் தொகைக்கு மிக அவசியமாக நிவாரணம் அளிக்கப்பட வேண்டியதன் தேவையை எடுத்துக் காட்டுகின்றது.

---

[48] *Ibid* p 201
[49] See Supra n 29

5.10 சுருக்கம்

தொழிற் சந்தையின் பாரபட்சம், குறிப்பாக பால் ரீதியான, இன ரீதியான அல்லது சமூக - பொருளாதார அடிப்படையில் சில நோக்கங்களின் அடிப்படையிலோ அல்லது அவை இன்றியோ மேற்கொள்ளப் படுவதினால் பல எதிர் மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றது. நாடு முழுவதையும் உள்ளடக்கிய ஆய்வுகளின் படி, தொழில் சந்தையின் பாரபட்சமானது பொதுவான திறனின்மையை ஏற்படுத்துகின்றதுடன் உற்பத்தித் திறனிலும் வெளியீட்டிலும் வீழ்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது[50] பரம்பரையினருக்கிடையிலான அசைவையும், வருமானச் சமமின்மைகளினையும் வலியுறுத்துசின்றதுடன் அதனை அதிகரிப்பதாகவும் உள்ளது. இறுதியில் இது விரக்திக்கும், சமூக முரண்பாட்டிற்கும் பங்களிக்கலாம். பேட்சல் மற்றும் சபோட் என்பவர்கள் வாதிடுவது போன்று "பாரபட்சத்துக்கான மேலதிகச் செலவு" காணப்படுகின்றது. குழுக்களுக்கிடையில் தற்போதைய ஒப்புரவின்மையை அதிகரிப்பதன் மூலமும், ஒரு பரம்பரையிலிருந்து மற்றதற்கு இதனைப் பேணுவதன் மூலமும் அநீதியின் அடிப்படையாகக் கொண்ட ஒப்புரவின்மையின் ஆகக் குறைந்தது ஒரு பகுதியையாவது பாதுகாப்பதன் மூலமும் பாரபட்சமானது முரண்பாட்டினை வளர்த்துச் செல்வதாகவே இருக்கும்.[51]

6. முடிவுரை

சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றை உள்ளடக்கிய போதுமான வாழ்க்கைத் தரத்தையும் அதற்கான உரிமையுடனும் தொடர்பான பிரதான விடயங்கள் இக் கலந்துரையாடலில் எடுத்துக் கூறப்பட்டன. சமூக, பொருளாதர்ர நிலைமைகள் பற்றிய பிரதேச, துறைரீதியான (நகர/கிராம/பெருந்தோட்ட) மற்றும் பால் ரீதியான தேசிய மட்டத் தரவுகளைப் பிரித்துப் பார்க்கும் போது வாழ்க்கைத் தரத்தில் தெளிவான வேறுபாடுகளை இனங்காண முடியும். மக்களில் உள்ள ஒவ்வொரு குழுவினரும் சில சமூக - பொருளாதார உரிமைகளை எந்தளவுக்குக் கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படும்.

---

[50] Birdsall, N. and Sabot, R. (eds), *Unfair Advantage : Labour Discrimination in Developing Countries*, World Bank Regional and Sectoral Studies (Washington D.C., 1991)

[51] *Ibid*, p 7

12

சிறுபான்மையினர் உரிமைகளும் இனத்துவ முரண்பாடும்

1. அறிமுகம்

சிறுபான்மையினரின் உரிமைகள் மீதான சர்வதேச நாடுகளின் கவனமானது இனக்கலவரங்களின் வளர்ச்சிப்போக்கு, உள்நாட்டில் ஆயுதந் தாங்கியவர்களுடனான முரண்பாடுகள், அவ்வாறான முரண்பாடுகளுடன் இணைந்த மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் என்பனவற்றின் விளைவாக ஏற்பட்டுள்ளது. இத்தகைய முரண்பாடுகள் அநேகமாக, சிறுபான்மைச் சமூகங்கள் தமது தனித்துவம் பேணும் உரிமைக்காகக் கோரிக்கை விடுத்த வேளையிலும், அரசியல் பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியினைப் பற்றித் தீர்மானிக்கும் போதும் அடிக்கடி ஏற்பட்டன. தேசிய அல்லது இன, சமய மற்றும் மொழி அடிப்படைச் சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் ஒரு மனிதனுடைய உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் பிரகடனம் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைமுறைக்கு வந்தது. ஒரு நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தை இவை அங்கீகரிப்பவையாக அமைந்தன. பன்மைக் கலாசாரச் சமூகத்தில் சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாட்டைப் பேண• அவசியமானது என்பதுடன் அவை பொருளாதார உறுதிப்பாட்டுக்கும் அபிவிருத்திக்கும் உதவுவதாகவும் இருக்கின்றன.

இலங்கை அதன் இனப் போராட்டத்தை, அரசாங்கத்துக்கும் எல்.ரி.ரி.ஈ.க்குமிடையே நிலவிய கிளர்ச்சி என்ற வகையில் தவறாக நிர்வகித்தமையால்

அதன் விளைவுகளை 1994 இல் தொடர்ந்து அனுபவித்து வந்தது. ஆவணி மாதம் வரை பதவியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இனஎதிர்ப்பு அரசியலுக்கு அப்பால் சென்று, சிந்திக்க இயலாமல் அல்லது அதற்கான விருப்பமின்மையைத் தனது ஆட்சிக் காலத்தில் எடுத்துக் காட்டியது. இலங்கையில் காணப்படுவது பயங்கரவாதப் பிரச்சினையேயன்றி இனப்பிரச்சினையல்ல என்ற சனாதிபதி விஜேதுங்காவின் துணிபுரைக்கு முரணாகப் பொது சன ஐக்கிய முன்னணியை வழிநடத்தும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இலங்கையில் நிலவுவது இனப் பிரச்சினையே என எடுத்துக்காட்டிக் கடந்தகால வெற்றுப்பேச்சுக்கு முடிவு கட்டினார். நாட்டிலுள்ள சிறுபான்மைக் குழுக்கள் தொடர்பாகப் புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் பாராளுமன்றத்தின் ஆரம்ப நாளன்று சனாதிபதி குமாரதுங்காவின் கொள்கை விளக்கத்தில் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது. அது பின்வருமாறு:

> **இலங்கை பற்றிய ஒரு தூரநோக்கு எமக்கு உண்டு. இங்கே சகல சமூகங்களும் பயமின்றிப் பாதுகாப்பாக வாழலாம். மனித மாண்பு மதிக்கப்படுகிறது. பொதுவாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் சமமாக மதிக்கப்படுகின்றன. சகல சமுதாயங்களும் தமது தனித்துவம் பற்றி எடுத்துக் கூறவும் தேசத்தின் வாழ்வில் பூரணபங்கு கொள்ளவும் இடமளிக்கப்பட வேண்டும். இவை தேசிய, மாகாண அல்லது உள்ளூர் மட்டத்தில் இருத்தல் வேண்டும்.**

இலங்கையின் சனத்தொகை பல்வேறு மொழி மற்றும் மதக் குழுக்களைக் கொண்டது. 1981 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீட்டின்படி இலங்கையின் சனத்தொகைக் கூட்டு பின்வருமாறு: சிங்கள மொழி பேசுவோர் 74 சத வீதமாகவும், தமிழ் மொழி பேசும் 18.2 சத வீதத்தினரில் இலங்கைத் தமிழர் 12.7 சத வீதமாகவும் மலைநாட்டுத் தமிழர் 5.5 சத வீதமாகவும்; முஸ்லீம்கள் 7.37 சத வீதமாகவும், ஒரு சிறிய அளவினர் மலாயராகவும், ஆங்கிலோ-ஆசியராகவும் மற்றும் ஏனையோரும் உள்ளனர். இலங்கை ஒரு பல்லின நாடாக மட்டுமன்றி, உலகின் பிரதான மதங்கள் பலவற்றுக்குமுரிய இல்லமாகவும் விளங்குகிறது. சனத்தொகையில் 62 சத வீதத்தினர் பௌத்தர்கள்; 15.48 சத வீதத்தினர் இந்துக்கள்; இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் முஸ்லீம்களும் மலாயரும் 8 சத வீதத்தினர், கிறிஸ்தவ மதத்தினைச் சார்ந்த சிங்களவரும் தமிழரும் மொத்தச் சனத்தொகையில்

7.6 சத வீதமாவர்.[1] பெரும்பாலான பௌத்தர்கள் சிங்களவராகவும், இந்துக்கள் தமிழராகவும் உள்ளனர்.

மொழி மற்றும் சமயம் என்பவற்றைத் தவிர குறிப்பிட்ட கலாசார நடைமுறைகள் மற்றும் மரபு சார்ந்த நியமங்கள் போன்றவை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என வேறுபடுத்த உதவுகின்றன. இந்தக் குழுக்களிடையே கலாசாரம் மற்றும் மரபுகளில் குறிப்பிடத்தக்க சில பொதுத் தன்மைகள் நிலவினாலும், இப்பொதுத் தன்மைகள், தூரதிஷ்டவசமாக அவர்களுடைய தேசியவாத அரசியலுக்குள் அமிழ்ந்து விட்டன. புவியியல் ரீதியாக வடக்கு பிரதானமாக இலங்கைத் தமிழர்களையும், கிழக்கு 32 சத வீதமான முஸ்லிம்களையும் 43 சத வீதமான தமிழர்களையும் 25 சத வீதமான சிங்களவர்களையும் கொண்டுள்ளது. நாட்டின் தென்பகுதியில் மேல் மாகாணமும் மத்திய மாகாணமும் பல்லின மக்களையும் ஏனைய தென் மாகாணங்கள் முக்கியமாக சிங்களவரையும் பௌத்தரையும் கொண்டுள்ளன.

சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டரீதியான பொறுப்பு சர்வதேச மற்றும் உள்ளூர் மூலகங்களிலிருந்து தோன்றுகிறது. உள்நாட்டைப் பொறுத்த வரையில் குறிப்பிட்டளவான பாதுகாப்பு இலங்கையில் அரசியல் யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளதெனினும் இலங்கையின் அரசியல் யாப்பு குறிப்பான சிறுபான்மையினர் பாதுகாப்பு முன்னேற்பாடுகளைக் குறிப்பாகக் கொண்டிருக்கவில்லை. இது இனம், மொழி, சாதி, அல்லது பிறப்பிட அடிப்படையிலான வேறுபாடுகளைக் காட்டவில்லை. சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என வலியுறுத்துகிறது. மேலும் யாப்பின் 16 வது திருத்தமானது சகல அரச கருமங்களிலும் தொடர்பாடலிலும் தமிழ்மொழி உபயோகத்துக்கான உரிமையை வழங்கியுள்ளன.

சர்வதேச நிலையில், ஐ.சி.சி.பி.ஆர். தேசிய, இன, சமய மற்றும் மொழி அடிப்படைச் சிறுபான்மையினரின் ஐ.நா மனித உரிமைப் பிரகடனம் (சிறுபான்மையினர் உரிமைப் பிரகடனம்) மற்றும் ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர். இனால் உருவாக்கப்பட்ட சர்வதேச நியமங்களை நாட்டின் கட்சிகள் உள்ளூர் மட்டத்தில் அமுல்படுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளன. சர்வதேச சாதனங்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட உரிமைகளானது தமது சொந்தக்

---

[1] Statistical pocket book of the Domocratic Socialist Republic of Sri Lanka (Department of Census and Statistics, 1993)

கலாசாரத்தை அனுபவித்தல், மதத்தைப் பின்பற்றல், தமது மொழியைத் தனிப்பட்ட முறையிலும் பொதுவாகவும் உபயோகித்தல், அந்த மொழியில் கல்வி கற்றல், சமூக, பொருளாதார மற்றும் பொதுவாழ்க்கையில் பங்குபற்றும் உரிமை அத்துடன் நாட்டின் பொருளாதார முன்னேற்றம், அபிவிருத்தி என்பவற்றில் முழுமையான பங்கு பற்றல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன.[2]

இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் குறைபாடுகள் நாடற்றவர், மொழி, கல்வி, அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அரசாங்கத்துறை நியமனங்கள் என்ற விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் யாப்பின் 13 வது திருத்தமானது இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்குச் சட்டரீதியான அமைப்பை வழங்கியமை இத்தகைய பிரச்சினைகளை மட்டுமன்றி அவை உரிய முறையில் அமுல் செய்யப்படவில்லை என்பதையும் நிரூபித்துள்ளது. வடக்கும் கிழக்கும் 1994 இல் நடைபெற்ற போரினால் சீரழிக்கப்பட்டுள்ளது. கிழக்கில் ஏற்பட்ட பாரியளவிலான அழிவுகள் பெரும்பாலான பகுதிகளில் பெரும்பாலும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் அமைதியற்ற நிலையும் நிலவியது. வருடத்தின் முதல் அரைப்பகுதியில் வடக்கில் அழிவுகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. தேவாலயங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பன குண்டுத் தாக்குதல்களினால் அழிக்கப்பட்டன. பொருளாதாரத் தடையானது வடக்கிலுள்ள மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை மேலும் தூண்டுவனவாக இருந்தது. புதிய பொதுசன ஐக்கிய முன்னணி பதவி ஏற்றதைத் தொடர்ந்து பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டதுடன் அரசாங்கத்துக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நேரடிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இந்த அத்தியாயம், 1994 இல் சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பான முன்னேற்றங்களைக் குறிப்பாகச் சிறுபான்மையினர் சம்பந்தமான புதிய கொள்கை மற்றும் நிறுவன ரீதியான அபிவிருத்திகளைப் பரிசீலனை செய்கிறது.

---

[2] சிறுபான்மையினர் உரிமை தொடர்பான சர்வதேச நியமங்கள் மீதான விரிவான கலந்துரையாடல். பார்க்க, *Sri Lanka: State of Human Rights 1993* (Law & Society Trust, 1994)

2. பொதுவாகவும் தனியாகவும் சொந்தமொழியைப் பயன்படுத்தும் உரிமை

இலங்கையில் இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் ஆகிய மூன்று குழுவினர் தமிழ் மொழியைப் பேசுகின்றனர். இக்குழுக்கள் மூன்றும் இலங்கையின் சனத்தொகையில் 25 சத வீதமாகும். தமிழ் மொழியைப் பேசுவோரில் பெரும்பான்மையோர் வடக்குக் கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் வாழ்ந்தாலும் மேல் மாகாணத்திலும் தமிழ் மொழியைப் பேசுவோர் பெருமளவில் வாழ்கின்றனர். மேல் மாகாணமும் மத்திய மாகாணமும் சேர்ந்து தெற்கில் இரண்டு பல்லினங்கள் வாழும் மாகாணங்களைத் தோற்றுவிக்கின்றன. அரசாங்கத்துடனான தொழில் நடைமுறைகளில் தமிழ் மொழி பேசுவோர் தமது மொழியைப் பயன்படுத்தும் உரிமை 1988 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் படி 13 வது திருத்தத்தினூடாக அரசியல் யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது 1956 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்துடன் இணைந்திருந்த பிரதான பிரச்சினைகளுள் ஒன்றைத் தீர்த்து வைத்தது. அரசியலமைப்புத் திருத்தத்தில் அரசகரும மொழியாகத் தமிழும் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் தமிழுக்கும் சிங்களத்துக்கும் இடையான சமத்துவம் புறக்கணிக்கப்பட்டது. உத்தியோகபூர்வமான தொழில் நடைமுறைகளில் தமிழ்மொழி உபயோகத்திற்கு உறுதியளிக்கப்பட்டதாயினும் நடைமுறையில் இத்துறையில் தமிழ்மொழி பேசுவார் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன. அரசாங்கத்தின் தொடர்பாடல் சிங்களத்தில் இருந்தமை, தமிழ் மொழியில் எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ தொடர்பாடல் செய்ய இயலாமை, தமிழ்மொழியில் படிவங்களை நிரப்ப முடியாமை, தமிழ் மொழி மூலம் சட்டமன்றங்களில் வழக்குத் தொடர முடியாமை, தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்குப் பொருள் விளக்கம் சொல்வோர் மற்றும் மொழி பெயர்ப்பாளருக்கும் இருந்த பற்றாக்குறை காரணமாக வழக்குகளைத் தொடர்வதில் சொல்லொணாக் காலதாமதம், சிங்கள மொழியில் எழுதப்பட்ட பொலிஸ் பதிவுகளுக்கு மொழி பெயர்ப்பு வழங்கப்படாத நிலையில் கையெழுத்திடப்படல் கொழும்பு, கண்டி போன்ற பெருமளவில் தமிழ்மொழி பேசுவோர் வாழும் நகரங்களில் அரசாங்கப் போக்குவரத்தின் பெயர்ப் பலகைகள், பொதுவான குறிப்புகள் பெரும்பாலும் சிங்களத்தில் மட்டும் அல்லது சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருந்தன. பெருமளவு தமிழ் மாணவர்கள் இருந்த பல்கலைக் கழகங்களில் கூட பல பெயர்ப்

பலகைகள், வழிகாட்டும் குறிப்புகள் சிங்களத்தில் மட்டுமே இடம் பெற்றிருந்தன.

1994 இல் இலங்கை அரசாங்கமானது சகலவிதமான இனவேறுபாடுகளையும் நீக்குதல் பற்றிய சர்வதேச மகாநாட்டுடன்படிக்கையின் உறுப்புரை IX இன் கீழ் தனது அறிக்கையை இன வேறுபாடுகளை நீக்குதல் பற்றிய ஐக்கிய நாடுகள் குழுவுக்குச் சமாப்பித்தது. இவ்வறிக்கையின்படி, அரசகரும மொழித் திணைக்களம் மொழி தொடர்பாக அரசியல் யாப்பில் கூறப்பட்ட முன்னேற்பாடுகளை அமுல்படுத்துவதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தது:

1. சகல வெளியீடுகளும் பெயர்ப் பலகைகளும் மும்மொழிகளிலும் இடம் பெறவேண்டும்.

2. சிங்கள மொழி அரசாங்க உத்தியோகத்தர்களுக்குத் தமிழ் மொழியையும் தமிழ் மொழி பேசும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் சிங்கள மொழியையும், எல்லோருக்கும் ஆங்கில மொழியையும் "மொழியின் மூலம் சமாதானம்" என்ற அதனுடைய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கற்பிக்கத் தொடங்கியது.

3. 1989 ஆம் ஆண்டின் 25/89 (1) இலக்கச் சுற்றறிக்கையின்படி குறிப்பிட்ட மொழியில் பெறப்பட்ட சகல கடிதங்களுக்கும் அதே மொழியில் பதில் அனுப்பப்பட வேண்டும் எனச் சகல அரசாங்கத் திணைக்களங்களையும் கோரியது.

4. சகலவிதமான தொடர்புகளிலும் தமது தாய் மொழியைப் பயன்படுத்தும் உரிமை பற்றிப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தியது.

அரசாங்கப் பதிப்புகள் மற்றும் பெயர்ப்பலகைகள் யாவும் சிங்களத்தில் மட்டுமே இடம்பெற்றிருந்த போதிலும் சகல அரசாங்க நிறுவனங்களாலும் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளைக் கவனிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை இவ்அறிக்கை குறிப்பிடத்தவறியது. மேலும் 25/89 (1) ஆம் இலக்கச் சுற்றறிக்கை கடிதம் எழுதப்பட்ட மொழியிலேயே அதற்குப் பதில் அனுப்பப்படல் வேண்டும் எனச் சகல அரச திணைக்களங்களுக்கும் விடுத்த கோரிக்கையில் தொடர்ந்தும்

அக்கறை காட்டப்படவில்லை. தமிழ் மொழி பேசுவோருக்கு அரசாங்கத்துடன் தொடர்பானவற்றை மொழி பெயர்த்துச் சொல்வதற்குத் தமிழிலும் சிங்களத்திலும் அல்லது சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றோரைத் தேடிப்பிடிப்பது ஒரு பொது நிகழ்வாக இருந்தது. மொழிக் கொள்கையை அமுல்படுத்த ஏற்படுத்தப்பட்ட அரசகரும மொழி ஆணைக் குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதன் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்தது.அரச கரும மொழித் திணைக்களத்திலுள்ள ஓர் உத்தியோகத்தரின் கூற்றின்படி, ஆணைக் குழுவின் குறைவான செயற்றிறன் காரணமாக, 1994 இல் குறைந் தளவான முறைப்பாடுகளே அதற்குத் தெரிவிக்கப்பட்டன. மேலும் பொதுமக்களுக்கு அவர்களுடைய மொழியுரிமை பற்றிய அறிவைக் கொடுக்க எவ்வித நிகழ்ச்சித் திட்டங்களும் 1994 இல் மேற்கொள்ளப்படவில்லை.

அரசகரும மொழிகள் பற்றிய ஆணைக்குழு, 1994 புரட்டாதி மாதத்துக்கு முன்னைய காலத்தில் அதனுடைய ஆணையை அமுல்படுத்துவதில் வினைத்திறன் குன்றியதாகக் காணப்பட்டது. இதற்கு அரசியல் உதவியின்மையும் ஒரு காரணமாக இருந்தது. ஏனெனில், அதற்கு வளங்களுடன் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. இந்த ஆணைக் குழுவானது பொது நிருவாக அமைச்சின் விரிவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகவே கருதப்படலாயிற்று. ஆணைக் குழுவின் உத்தியோகத்தர்கள் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டனரெனினும் இதற்கான சட்டம் ஆணைக்குழு ஒரு சுதந்திரமான அமைப்பென்றே எடுத்துக் காட்டியது.

கோட்பாட்டளவில், ஆணைக் குழுவானது அதனுடைய நிதிவிடயங்களில் கட்டுப்பாடுகளைப் பேணி வந்தாலும், நடைமுறையில் அவை பொதுநிருவாகத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. அரசகரும மொழிக் கொள்கையை அமுல் படுத்தப் பாராளுமன்றம் 3.6 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது என்றும், கடந்த பல வருடங்களில் இதில் ஒரு மில்லியன் ரூபா மட்டுமே செலவு செய்யப்பட்டதுடன் அவற்றிலும் அநேகம் சம்பளமாகவே கொடுக்கப்பட்டது.

பொதுமக்கள் பலர் ஆணைக் குழுவைப் பற்றியும் அதனுடைய ஆணை பற்றியும், தொழிற்பாடு மற்றும் அதிகாரம் என்பன பற்றியும் அறிந்திருக்கவில்லை. ஆணைக்குழுவைப்பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு 1991 இல் இரு பக்கங்களைக் கொண்ட செய்தித்தாள் விளம்பரம் ஒன்று மட்டுமே கொடுக்கப்பட்டது. அதன் பின்னர், உதவி

நாடும் பொதுமக்கள் மத்தியில் அதனைப்பற்றித் தெரிவிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமையால் அரசியலமைப்பின்படி உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமையை நடைமுறைப்படுத்த முடியாமல் போயிற்று.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தமையைத் தொடர்ந்து ஆணைக் குழுவின் அமைப்பு மாற்றியமைக்கப்பட்டது. நடைமுறையிலுள்ள ஆணைக் குழுவானது தமது ஆணையை நிறைவேற்றக் கடுமையாக ஈடுபாடு காட்டுகின்றது. புதிய ஆணைக்குழு ×பொதுநிருவாக அமைச்சிலிருந்து நிதியை ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவும், தமது உத்தியோகத்தரைத் தாமே நியமிக்கவும் சுதந்திரமுடையதாக இருக்க வேண்டும் என விரும்பியுள்ளது. பொதுமக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் பற்றி அறிவிக்கும் பிரசாரம் ஒன்றை நடத்தவும் அவ்ர்களின் பிரதிநிதித்துவத்தைப் பெறவும் விரும்பியுள்ளது. அரச கரும மொழிக்கொள்கை அமுலாக்கம் 3 வருடப் பருவ நிகழ்ச்சித் திட்டமாக மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த மூன்று வருட நிகழ்ச்சித்திட்டம் தொடக்கத்தில் தொழில் நடைமுறைகளில் ஈடுபட்டுள்ள, கலப்புச் சனத்தொகை கொண்ட பிரதேசங்களில் உள்ள அரசாங்க நிறுவனங்கள் திணைக்களங்கள் போன்றவற்றை இலக்காகக் கொண்டது.

இப்பிரதேசங்களில் உள்ள வளங்களும், துறைகளும் முதலில் கவனத்திற் கொள்ளப்பட்டு நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். பொதுமக்களின் மொழித்தேவைக்குப் போதியளவு இடம்கொடுக்கும் வகையில் திணைக்களங்களின் வசதிகள் கவனிக்கப்படும்.

3. கல்விக்கான உரிமை

சிறுபான்மையினரின் கல்விக்கான உரிமை 1994 இல் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பாடசாலைகள் மீது குண்டுகள் போடப்பட்டதுடன் புறக்கணிப்பின் காரணமாகச் சீரழிந்தன. பொருளாதாரத் தடைகளினால் வடக்கிலுள்ள பாடசாலைக்குத் தேவையான சாதனங்களுக்குக் கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டதுடன் அப்பியாசக் கொப்பிகள் கூடக் கிடைப்பது அரிதாகியது. ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினால் தடைவிதிக்கப்பட்ட பொருட்களில் அப்பியாசக் கொப்பிகள், காகிதாதிகள், பாடசாலைப் பைகள், கரும் பலகைத் தீந்தை, ஆய்வுகூடச் சாதனங்கள் என்பன அடங்கும். தற்போதைய

அரசாங்கத்தினால் பொருட்கள் மீதான தடைகள் நீக்கப்பட்ட பின்னரும் இவ்வாறான பொருட்கள் வவுனியாவுக்கு அப்பால் போதியளவு எடுத்துச் செல்லப்படவில்லை. விடுவிக்கப்படாத பகுதிகளில் ஆசிரியர் பற்றாக்குறையானது கூடுதலான பாதிப்பை ஏற்படுத்தியது. 1995 மாசி மாதம் 13 ஆம் திகதி கல்வியமைச்சர், மாண்புமிகு றிச்சட் பத்திரன அவர்களுடன் கலந்துரையாடவெனத் தயாரித்த அறிக்கையில் இலங்கை ஆசிரியர் சங்கம் (இதன்பின்னர் சி.ரி.ரி.யு அறிக்கையெனக் குறிக்கப்படும்) பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது. **"வடக்குக் கிழக்குக்கு ஆசிரியர்களை நியமிக்க ஒரு விஷேட பரீட்சை 1994 மார்கழி 31 ஆம் திகதி நடத்தப்பட்டது. அங்கு 7000 க்கு மேல் இடம் காலியாக இருக்கின்றமையால் ஆகக் குறைந்தது 3,500 பேரேனும் தெரிவு செய்யப்படவேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்."** போர் காரணமாக ஆசிரியர்கள் பலர் இடம்பெயர்ந்துள்ளனர். காலியான இடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பித்தோரும் கூலிக்கு அமர்த்தப்பட முடியாதவர்கள். உதாரணமாக தொழில்நுட்ப ஆசிரியராக 30 பேர் விண்ணப்பித்தார்கள். அவர்களை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கோரும் கடிதங்கள் தாமதமாயின. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியபோது பதவிகள் யாவும் நிரப்பப்பட்டு விட்டன என அவர்களுக்குக் கூறப்பட்டது. சி.ரி.ரி.யு அறிக்கையில் **"1990 தொடக்கம் ஏனைய மாவட்டங்களில் உள்ள ஆசிரியர் தொகை கூடியுள்ளது எனவும் வட மாகாணத்தில் இது குறைந்துள்ளது"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் "தீவு முழுவதிலும் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் கல்விச் சேவை முகாமைத்துவம் தரமற்ற நிலையில் காணப்படுகின்றதுடன் தமிழரிடையே இலங்கைக் கல்வி நிருவாக சேவை பதவியணியினரின் தொகையிலும், பாரிய இடைவெளி காணப்படுகிறது" என்றும் சி.ரி.ரி.யு அறிக்கை எடுத்துக் காட்டியது.

தேசியக் கல்வி நிறுவகமும் தமிழ்மொழி சார்ந்த பணிகளைக் கவனிக்கப் போதியளவான தமிழ் உத்தியோகத்தர்களை நியமிப்பதில்லை. சி.ரி.ரி.யு. அறிக்கை பயிற்சிச் செயற்திட்ட செயல்முறையைப் பின்வருமாறு விவரிக்கின்றது. **கடந்த காலங்களில் சிங்கள மொழியில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் பின்னர் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு மீண்டும் தமிழில் மொழிபெயர்க்கப்படுதல் ஒரு நடைமுறையாக இருந்து வந்துள்ளது. ஆகவே தமிழ் மொழிச் செயற்திட்டங்கள் சிங்கள மொழிச் செயற்திட்டங்களிலும் பார்க்கக் காலம் தாமதித்தே தொடங்கின. இவை தமிழர்க்கும் முஸ்லிம்களுக்குமான சம சந்தர்ப்பத்தைப் புறக்கணித்தன.** மேலும்

தேசியக் கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்ட 14 பயிற்சி நெறிகளுள் மூன்று பயிற்சி நெறிகள் மட்டுமே தமிழ் மொழியில் நடைபெற்றன. இவற்றுள் இரண்டு பயிற்சி நெறிகள் தவிர்ந்த ஏனையவை வடக்குக் கிழக்கில் எங்கும் நடத்தப்படவில்லை. தமிழில் இடம்பெற்ற பயிற்சிநெறி கொழும்பில் மட்டுமே நடத்தப்பட்டது. தேசியக் கல்வி நிறுவனகத்தின் இத்தகைய நடைமுறையானது, தமிழ் மொழியில் கல்விப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைப் புறக்கணித்தல் தமிழ் மொழி பேசும் சமுதாயத்தினருக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதுடன் அரசியல் யாப்பின் 12 (2) வது உறுப்புரிமையை மீறுவதாகவும் உள்ளது. இவ்வுறுப்புரிமை பின்வருமாறு கூறுகிறது. **"எந்தவொரு பிரசையும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல், அபிப்பிராயம், பிறப்பிடம் என்ற வகையில் பாகுபடுத்தப்படக் கூடாது"** என்றும், உறுப்புரிமை 21 (2) **"ஒரு தேசிய மொழி கல்வி மொழியாக அல்லது தேசிய மொழியில் ஏதாயினும் பயிற்சி நெறிகள் இடம்பெற்றால் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள பீடத்திற்கு அல்லது துறைக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக, அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படும் போது, ஏனைய தேசிய மொழிகளும் கல்வி மொழியாக இடம்பெற வேண்டும்.** இந்த உறுப்புரிமையின் நோக்கம் உயல்கல்விக்குரியதாயினும் நிறுவனங்களைப் பல்கலைக்கழகம் உள்ளடக்குவதால் இக்கோட்பாடு தேசிய கல்வி நிறுவகத்துக்கும் பொருத்தமானதே.

பெருந்தோட்டப் பிரதேசங்களின் தேவை நீண்டகாலமாகக் கவனிக்கப்படாமையால், மலையத்தின் கல்வியும் ஆசிரியர் பற்றாக்குறை, தகைமையுடைய ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை என்பவற்றால் மிகவும் பின் தங்கியுள்ளது. மலையகத் தமிழருக்குப் போதியளவு கல்வி வாய்ப்புகள் வழங்கப்படாமையால் பெருந் தோட்டப் பொருளாதாரத்திற்குள்ளேயே அவர்கள் அடங்க வேண்டியுள்ளனர்.

1994 ஆடி வரைக்கும், வடக்குக், கிழக்கிலுள்ள கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கான ஊக்குவிப்புப்படி, ஆனி மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 19 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு நிதிப்பற்றாக்குறை காரணமாக வழங்கப்படவில்லை. அதே வேளையில் ஏனைய அரசாங்கத் திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியருக்கு இது வழங்கப்பட்டிருந்தது. தமிழ் மொழிப் பாடநூல்களும் ஆசிரியர் கைநூலும் வெளியிடப்படுவதில் காலதாமதம் உள்ளது. சி.ரி.ரி.யு. வின் கருத்தின்படி, "தமிழ் அதிகாரிகள் இன்மையால் தமிழ் மொழி நூல்களும், வழிகாட்டிகளும்

சிங்கள மொழியைப் போன்று ஒரே நேரத்தில் வழங்கப்படுவதில்லை. இவை தமிழர், மற்றும் முஸ்லிம்களுடைய கல்விச் சம சந்தர்ப்பத்தைப் புறக்கணிக்கின்றன. மேலும், வடக்குக்கு வெளியே சில தமிழ் மொழிப் பாடசாலைகளில் தமிழ் மொழி பேசும் ஆசிரியர் ஒருவரேனும் இல்லை. ஒருவன் தனது தாய்மொழியிலேயே கல்வியைப் பெற வேண்டும் என்ற உரிமையை இது நேரடியாகவே மீறுவதாக உள்ளது. இத்தகைய நிலைமைக்கு மலைநாட்டுத் தமிழ் மாணவர்கள் அடிக்கடி முகங்கொடுக்கின்றனர். குறிப்பாக, தென்பகுதிகளில் இப்பிரச்சினை நிலவுகிறது. இங்கு மலைநாட்டுத் தமிழ் பாடசாலைகள் தமிழ் மொழியைப் பேசாத அதிபர்களால் நிருவகிக்கப்படுவதுடன் தமிழ்மொழி தெரியாத ஆசிரியர்களும் இப்பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் தமிழர்களுக்கு நேரடியான பாரபட்சம் இழைக்கப்பட்ட இன்னொரு முக்கிய விடயம் உயர் கல்விக்கான வாய்ப்பாகும். இப் பாரபட்சம் தற்பொழுது மறைமுகமாக நிலவுகிறது. அரசாங்கத்தால் கொள்கை வேறுபாடு காட்டப்படக் கூடாது எனக் கூறப்பட்டாலும் நடைமுறையில், விஷேடமாக வடக்கிலுள்ள தமிழ் மாணவர்கள் மிகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள ஒவ்வொரு பீடத்துக்குமான மாணவர் தொகையைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வருடாவருடம் அதிகரித்துச் செல்கிறது. ஆயினும் 1990 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பீடத்துக்குமான மாணவர் தொகை அதிகரிக்கப்படாததினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது இயலளவுக்குக் குறைந்த மட்டத்திலேயே இயங்கி வருகிறது.

1990 இல் மோதல் தவிர்ப்புச் சீர்குலைந்த வேளையில், வடக்குக் கிழக்கில் உள்ள மாணவர்கள், குறிப்பாக வடக்கிலுள்ள மாணவர்கள் சொல்லொணாத் துயரங்களை அடைந்தனர். போரின் விளைவாக அவர்களுடைய வாழ்க்கையில் ஆபத்துக்களும், குழப்பங்களும் உண்டாயின. ஷெல் அடித்தல், மற்றும் குண்டுகளைப் பொழிதல் என்பவற்றிலிருந்து தம்மைக் காக்க வேண்டிய நிலை மாணவர்களுக்கு ஏற்பட்டது. போரினால் வகுப்பறைக் கல்வி ஓரளவு பாதிக்கப்பட்டதுடன் அடிப்படைத் தேவைகளுக்கான வாய்ப்புகள் கூட இருக்கவில்லை. மின்சார வசதி இல்லை. விளக்குக்கு எண்ணெய் கூடக் கிடைக்கவில்லை. அவர்கள் பகல் வெளிச்சத்திலேயே படித்தார்கள். போரின் காரணமாக அடிக்கடி குழப்பநிலை தோன்றியமையால் அவர்களால் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

4. உடல் நலம்

வடக்கிலும் கிழக்கிலும், ஆரோக்கியம் சம்பந்தமான பிரச்சினைகள் இரண்டு மடங்காக இருந்தன. முதலாவதாக உடல்நலப் பிரச்சினைகள் அதிகரித்துச் சென்றன. இரண்டாவதாக பராமரிப்பு ஆளணியினர் மற்றும் மருத்துவ ரீதியான வழங்கல்கள் இருக்கவில்லை. மக்களின் உடல்நலப் பிரச்சினைகளானது போஷாக்கின்மை, சுற்றாடல் பாதிப்பு, சுகநலத்துக்கான அடிப்படை அமைப்புகள் சேதமடைந்தமை, உடல், உளரீதியான பாதிப்புகள் போன்ற காரணங்களால் அதிகரித்தன. வடக்கிலுள்ள மக்கள் பல்வகைப்பட்ட தொற்றுநோய்களால் துன்பமடைந்தனர். மலேரியா, வாந்திபேதி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டனர். மலேரியா, நெருப்புக் காய்ச்சல், குருதி நஞ்சாதல் மற்றும் வாந்திபேதி போன்ற நோய்கள் இப்பிரதேசத்தில் இவ்வருடத்தில் காணப்பட்ட பொதுவான தொற்று நோய்களாகும். வட கொழும்பு மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த நுண்ணுயிரியல் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கே. வேலாயுதபிள்ளை அவர்கள் 10 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளில் குருதி நஞ்சூட்டப்படுதலுக்கு நுண்ணுயிரிகள் காரணம் எனக் கண்டறிந்தார். மற்றும் மந்த போஷாக்குள்ளவர்களையே நுண்ணுயிரிகள் தாக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணப் பொது வைத்தியசாலையைச் சேர்ந்த குழந்தை மருத்துவரின் கூற்றின்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 50 சத வீதத்தினர் போஷாக்குக் குறைவினால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலான சத வீதத்தினர் காய்ச்சல் மற்றும் குளிர் சுரத்தினால் இறக்கின்றனர். 1994 இல் முதல் மூன்று மாத காலப் பகுதியில் யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் 68 பிள்ளைகள் மட்டும் குருதி நஞ்சாதல் தாக்கத்தினால் இறந்தனர். இன்னொரு வகையான குருதி நஞ்சாதல் சகல வயதுக் குழுவினரையும் பாதித்தது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இறப்பதற்குப் பின்னணியாக இருந்த காரணிகளுள் மருந்துப் பற்றாக்குறை முக்கியமானது. மேலும், மருந்துப் பற்றாக்குறை, ஆய்வுகூட வசதிகள் மற்றும் பயிற்றப்பட்ட ஆளணியினர் போதாமையினால் இரத்தப் பரிசோதனை செய்து நோயை இனங்கண்டு நோய்க்கு ஏற்ற சிகிச்சையைச் செய்ய முடியாமையால் மரணங்கள் நேர்ந்தன. அகதி முகாம்களின் சுகாதார நிலைமை, போர் அழிவால் கழிவுநீர் அகற்றும் முறைகள் சேதமடைந்தமை, அவை கவனிக்கப்படாமை, வடக்கிலுள்ள மக்களின் சுகாதாரம் சம்பந்தமான இன்னல்களுக்குக் காரணமாயின.[3]

---

[3] வேலாயுத பிள்ளை, கே., "Septicaemia deaths in Jaffna" (unpublished) (North Colombo Medical College)

மருத்துவத் தொழில் செய்வோருக்கும் சுகாதார சேவை ஆளணியினருக்கும் பற்றாக்குறை ஏற்படுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் உள. முதலாவதாக, டாக்டர்கள், தாதிமார்கள் உள்ளிட்ட அநேக மருத்துவத் தொழில் செய்வோர் வெளிநாடு செல்வதற்கு உள்நாட்டு யுத்தம் காரணமாயிற்று. இரண்டாவது மிக முக்கிய காரணமான அரசாங்கத்தின் கல்விக்கொள்கையில் நிலவிய திட்டமிட்ட பாகுபாடு மற்றும் அதன் நடைமுறைகள் தற்பொழுது உணரப்படுகிறது. மருத்துவம் தொடர்பான சேவைப் பயிற்சி நெறிகளில் தமிழ் மொழி பேசுவோரின் அனுமதித்தொகை படிப்படியாகக் குறைந்தமை, பயிற்சி நெறிகள் சிங்களத்தில் மட்டும் வழங்கப்பட்டமை, பதவியுயர்வுப் பரீட்சைகள் சிங்களத்தில் மட்டும் நடத்தப்பட்டமை காரணமாகத் தமிழ் பேசும் பிரதேசங்களில் தமிழ் சுகாதார சேவை ஆளணியினர் பற்றாக்குறை நிலவக் காரணமாயிற்று. வடக்கு மற்றும் கிழக்கில் பணிபுரியக் குறைந்தளவினரான சிங்கள ஆளணியினரே விரும்புகின்றதுடன் தற்போதைய சூழலில் இது புரிந்துணரக் கூடியது. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அடிப்படைத் தாதிப்பயிற்சிக்கென உள்ள இரண்டு பாடசாலைகள் மட்டுமே தமிழ் பேசுவோரைத் தாதிப்பயிற்சி நெறிக்காக அனுமதிக்கின்றன. ஏனைய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் எவ்வித இடைமீடுகளுமின்றி இயங்கி வருகின்றன. குழந்தைகள் பாதுகாப்பு நிதியமும் "யுனிசெப்"பும் இவ் இடைவெளியை நிரப்புவதற்கும், தேவையைப் பூர்த்தி செய்யவும் பயிற்சியை வழங்குகின்றன. கிராமிய சுகாதார உதவியாளர்களைப் பணிக்கு அமர்த்துகின்றன. இவர்களால் அடிப்படைச் சுகாதார வசதிகளை வழங்கவும் பொது சுகாதார மருத்துவிச்சி மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர் போன்றோரின் கடமைகளையும் இவர்களால் ஓரளவுக்கு ஆற்ற முடியும். இத்தகைய நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளும் ஆதரவும், இப்பிரதேசத்தின் சமூக சுகாதாரச் சேவைகள் சீர்குலைந்தமையால் தவிர்க்கப்பட்டுள்ளன.[4]

1983 இன் முன்னர், இலங்கையில் மருத்துவக் கல்லூரிகளிலிருந்த பட்டம்பெற்ற பல தமிழர்கள் வடக்குக் கிழக்கில் பணிபுரிந்தனர். ஆயினும் தொடர்ந்து குழப்பங்களும் கலவரங்களும் இடம் பெற்றமையால் இத்தகைய பட்டதாரிகள் வடக்குக் கிழக்குக் வெளியே பணிபுரிய விரும்பினர் அல்லது நாட்டை விட்டுச் சென்றனர். வெளிநாட்டு டாக்டர் குழுவினரால் விஷேட மருத்துவ சேவை பருத்தித்துறை, திருகோணமலை,

---

4 நச்சினார்க்கினியன், சீ.எஸ்., "Current pattern of Health care and Resource Allocation" and "Ethnic conflict in Sri Lanka - The effect on Health," papers presented at the International Conference on Health titled *Victims of war in Sri Lanka : A Quest for Health consensus* (London, September 1994)

மட்டக்களப்பு ஆகிய இடங்களில் வழங்கப்பட்டது. கியூபா டாக்டர் குழு அம்பாறையில் உதவி செய்தது. இவ்வாறான நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் வழங்கிய மருத்துவசேவை போற்றத்தக்கது. அன்றேல் இப்பிரதேச நோயாளர்களுக்கு இத்தகைய சேவை கிடைக்க முடியாது.

மருத்துவ சாதனங்கள், இரசாயனப்பொருட்கள், மருந்துவகைகள் தடைசெய்யப்பட்டமை, மருத்துவ வசதிகள் போரினால் அழிந்துபோதல், இப்பிரதேச மருத்துவ சேவைக்கு ஒதுக்கப்பட்ட பணம் போதாமை ஆகியன பெறக்கூடிய மருத்துவ சேவையைப் பாழாக்கியது. இப்பிரதேசங்களில் உள்ள டாக்டர்களால் பல கடுமையான நோய்களுக்கு, வசதிக் குறைபாட்டினாலும், போதிய மருந்துகள் கிடைக்காமையாலும் தகுந்த சிகிச்சையைச் செய்யமுடியவில்லை. அத்தகைய நோயாளர்களைக் கொழும்புக்கு அனுப்ப வேண்டியநிலை உண்டாயிற்று. கடந்த பல வருடங்களாக இவ்வாறான நோயாளர்களைக் கொழும்புக்குக் கொண்டுவரும் சேவையை ஐ.சி.ஆர்.சி. செய்து வந்தது. யாழ்ப்பாண வைத்தியசாலையிலிருந்து கொழும்புக்கு வர ஏறக்குறை 30 மணித்தியாலம் எடுக்கும். பயணமும் வசதியானதல்ல. ஆயினும் நோயாளர்கள் சிறிய படகுகள் மூலம் யாழ்ப்பாண ஏரியைக் கடப்பதில் எதிர்நோக்கும் ஆபத்துக்களை இதன்மூலம் தவிர்த்துக் கொள்ள முடியும். துரதிஷ்டவசமாக ஐ.சி.ஆர்.சி. யினால் கொண்டுவரக் கூடிய நோயாளரின் தொகை வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கொழும்பில் சிகிச்சையளிக்கப்பட வேண்டியவர்கள் பலர் ஏரியினூடாக வர முடியாமையால் யாழ்ப்பாணத்திலேயே இருக்கவேண்டிய கட்டாய நிலை உள்ளது. நோயின் தன்மையைப் பொறுத்து ஐ.சி.ஆர்.சி. முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளது. மற்றும் சிலவகையான சிகிச்சை வசதி யாழ்ப்பாணத்திலும் உண்டு.

யாழ்ப்பாணத்தில் மொத்தம் 123 படுக்கை வசதிகள் கொண்ட 5 தனியார் வைத்தியசாலைகள், மருந்துவிலை உயர்வு, மருத்துவ வசதிகள் இன்மை காரணமாகச் சிறந்த முறையில் இயங்க முடியவில்லை. செலவு கூடியமையால் நோயாளர் பலர் இவ் வைத்தியசாலைகளின் சேவையைப் பெற முடியாதுள்ளது. கடந்த 2-3 வருடங்களில் இவ் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்ற நோயாளர்களின் தொகை 70 சத வீதமாகக் குறைந்துவிட்டது. கறுப்புச் சந்தையில் மருந்து கொள்வனவு செய்வதும் கடினம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறை விரிவுரையாளர் டாக்டர். சீ.எஸ்.நச்சினார்க்கினியன் 1994 ஆவணி 25 ஆம் திகதி

மேற்கொண்ட ஓர் ஆய்வின் மூலம் யாழ்ப்பாண நகரத்திலுள்ள பெரிய மருந்தகங்களில் கூட பென்சிலின் ஊசி மருந்துகள், Inj. Crystalline Penicillin, புரோ குளோரோரோபெராசின் மாத்திரைகள், விட்டமின் பி கூட்டு மாத்திரைகள், கொட்ரி மொக்ஸ்சாசோல் மாத்திரைகள், அலுரொக்ஸ் மாத்திரைகள் அமினோபிலின் மாத்திரைகள், பிறிட்னி சோலொன் மாத்திரைகள் போன்ற மருந்துகள் கிடைக்கவில்லை என எடுத்துக்காட்டப்பட்டது.[5]

மலையகத் தமிழரும் போதிய மருத்துவசதி, வாய்ப்புகளின்றிச் சிரமப்பட்டனர். இப்பிரதேசங்களில் மருத்துவ உத்தியோகத்தர்களுக்குக் கடும் பற்றாக்குறை நிலவுகிறது. அநேகமாக இவர்களுக்குப் பதிவுசெய்யப்பட்ட உதவி மருத்துவத் தொழில் செய்வோரின் (ஆர்.எம்.பி) சேவையே கிடைக்கிறது. பெருந்தோட்டச் சமுதாயத்தினரின் சிசுமரணம், பிரசவ மரணவீதங்கள் தேசிய சராசரியிலும் பார்க்க எப்பொழுதும் அதிகமாகவே இருக்கின்றது. போதியளவு மருத்துவத்தாதிகள் இன்மை, ஆரோக்கியமற்ற சூழலில் குழந்தைகளைப் பிரசவித்தல், தாய்மாரின் போஷாக்குக் குறைவு போன்றவை இதற்குக் காரணமாகும். பெருந்தோட்டச் சமுதாயத்தின் சுகாதாரப் பிரச்சினைக்கு பீடைக் கொல்லிகளின் பயன்படும் பெருந்தோட்டக் கைத்தொழலில் உள்ள ஏனைய இடையூறுகளும் காரணமாக இருக்கின்றன.

5. வேலைவாய்ப்பு

மொழிப் பிரச்சினையினாலும் ஏனைய சந்தர்ப்பங்களில் இன அடிப்படையிலும் வேலைவாய்ப்புக்களில் காட்டப்படும் பாகுபாடுகளினால் தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகின்றனர். அரசியல் யாப்பின் 12 (2) ஆம் உறுப்புரையில் கூறப்பட்ட பாதுகாப்புக்கு எதிரானதாக இது அமைந்துள்ளது. அரசியலமைப்பு ஏற்பாடு இரண்டு முன்னெச்சரிக்கைகளுடன் பின்பற்றப்பட்டன. (அ) ஒரு காரியாலய நடைமுறைகளைக் குறிப்பிட்ட ஒரு மொழியில் ஆற்றுவதற்கான மொழியறிவு இல்லாவிட்டால், குறிப்பிட்ட காலப்பகுதியில் அம்மொழியறிவைப் பெறவேண்டியது சட்டரீதியானது. (ஆ) பணிபுரியும் காலத்தில், ஒரு மொழியில் போதிய அறிவின்றிக் கடமைகளை மேற்கொள்ள முடியாவிட்டால் அம்மொழியில் போதிய அறிவைப் பெற வேண்டியது

---

5 *Ibid*

என்பது நியாயமானது. இந்தச் சொற் பிரயோகம் மொழிக்கொள்கையைத் துஷ்பிரயோகம்செய்ய இடமளிக்கிறதுடன் பாகுபாட்டினை நியாயப்படுத்தவும் உதவியாகவுள்ளது. இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் அரசாங்க சேவைகளில் நியமிக்கப்படுதல் கடந்த ஆண்டுகளில் வெகுவாகக் குறைந்துள்ளது. தற்பொழுது அரசாங்க சேவைகளில் இவர்களுடைய பிரதிநிதித்துவம் தேசிய இனவிகிதாசாரத்திலும் பார்க்கக் குறைவாக உள்ளது. குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 1992 இல் வெளியிடப்பட்ட அரசாங்க மற்றும் பொதுத்துறைப் பணியாளர் பற்றிய புள்ளிவிபர அறிக்கையில் 1990 ஆம் ஆண்டுக்கான தரவுகள் பின்வருமாறுள்ளன.

அட்டவணை 2 : பொதுத்துறையில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம்

சிறுபான்மைக் குழுக்கள்	சனத்தொகை (%)	அரசசேவை (%)	மாகாண சேவை (%)	உப அரசாங்க சேவை (%)
இலங்கைத் தமிழர்	12.7	5.9	7.1	8.2
மலையகத் தமிழர்	5.5	0.1	0.2	0.5
முஸ்லிம்கள்	7.4	2.0	4.6	1.0

தொழிலில் பாகுபாடு காட்டுதல் என்பது, இன மற்றும் மொழி அடிப்படையில் காட்டும் பாடுபாடுகளைத் தடுக்கின்ற அரசிலமைப்பு ஏற்பாடுகளை மீறுவதாக மட்டுமன்றி, உறுப்புரை 21 (1) இன் படி சட்டத்தின் சம பாதுகாப்பு என்பதையும் மறுப்பதாக உள்ளது. இவ்வுறுப்புரையானது சட்டத்தின் முன் எல்லோரும் சமம், எல்லோரும் சட்டத்தின் சம பாதுகாப்புக்கு உட்பட்டவர் எனவும் கூறுகிறது.

பாகுபாடுகளை நீக்குதல் மற்றும் அடிப்படை உரிமைகள் கண்காணிப்பு ஆணைக் குழுவின் சட்டவுரிமைகள், பாகுபாடுகள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்தல் மட்டுமன்றி சட்டப்படி எல்லோரும் சம பாதுகாப்பை அனுபவிக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்தும் அடிப்படை உரிமைகளைக் கடைப்பிடித்தலையும் கண்காணித்து வருகிறது. பாகுபாடு பற்றிய ஆணைக் குழுவுக்குப் பரந்த சட்ட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை பாகுபாடு பற்றிய முறைப்பாடுகளைக் கேட்டுத் தீர்த்தல்

மட்டுமல்லாமல் பாகுபாடுகாட்டும் நடைமுறைகளை அவதானித்து, அந் நடைமுறைகளை நீக்கும் நடவடிக்கைகளை எடுக்கவும் உரிமையுடையவை. ஆயினும் இவ் ஆணைக்குழு தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள சட்ட உரிமையின் பிரகாரம் திட்டமிட்ட பாகுபாடுகள் பற்றி ஆராய்வதற்கும் அவற்றை நீக்குவதற்குமான பணியைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டது.

துறைரீதியான பாகுபாடான சட்டங்கள், நடை முறைகளைப் பயனுறுதி வாய்ந்த முறையில் கண்காணிப்பதற்குப் பாகுபாடுகள் மீதான ஆணைக் குழுவினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஒழுங்கான முறையில் இடம்பெறும் பாகுபாட்டினையும், சட்டங்களின் சமமான பாதுகாப்பினை மீறுவதையும் இனங்காணுகின்ற ஸ்தாபனங்களும், நிறுவனங்களும் அந் நடவடிக்கைகளை அகற்றவும், தடுக்கவும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சட்டத்தின் சமமான பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும் பாகுபாடான நடைமுறைகளைத் தடுப்பதற்கும் குறைகேள் அதிகாரியினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

6. அரசாங்கத்துக்கும் எல்.ரி.ரி.ஈ க்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள்

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்றபின் பொருளாதாரத் தடையின் ஒரு பகுதி நீக்கப்பட்டமை, இனப்பிரச்சினையை இராணுவ நோக்கற்ற வழிகளில் தீர்ப்பதற்கு முயற்சிக்கின்றது என்பதை வெளிப்படுத்தியது. சனாதிபதி, இன விவகாரங்களுக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்குமான புதிய அமைச்சினை உருவாக்கினார். அதற்கு அவரே தலைமை வகித்தார். பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கும் குறிப்பாக பிரதம மந்திரி குமாரதுங்கவின் முயற்சிக்கும் பதிலிறுக்கும் வகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வி. பிரபாகரன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு பகிரங்கமாகத் தனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார். அரசாங்கத்தின் முதலாவது தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்ற சனாதிபதியின் செயலாளர் திரு. பாலபட்டபெந்தி விடுதலைப் புலிகளின் குழுவினரை யாழ்ப்பாணத்தில் சந்தித்தார். அரசாங்கத்தின் சமாதானக் குழு யாழ்ப்பாணத்தில் உணர்வு பூர்வமான வரவேற்பைப் பெற்றது. நாட்டில் நல்ல நிலைமை உருவாகி விட்டது என்ற மனநிலை பொதுவாகக் காணப்பட்டது.

கிளாலி என்னும் இடத்தில் யாழ்ப்பாணக் கடல் நீரேரியைப் பொதுமக்கள் கடப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை அரசாங்கம் நீக்கியது. எறிகணைத் தாக்குதலுக்கும் குண்டு போடுதலுக்கும் இருந்த மிகுந்த பயம் நீங்கி மக்கள் பயணம் செய்தாலும்,பயணம் கடினமானதாகவே இருந்தது. அதிக நேரமுமெடுத்தது. உணவு மற்றும் இராணுவரீதியற்ற பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நீக்கப்பட்டதெனினும் அமுல்படுத்தலில் பிரச்சினைகள் காணப்பட்டன. இத்தகைய பொருட்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றித் தடை முகாம்களில் வந்து குவிந்தமையை இராணுவம் குறை கூறியது. புதிய அரசாங்கத்தின் நடவடிக்கையால் வட பிரதேச மக்களின் வாழ்க்கை ஓரளவுக்கு இலகு படுத்தப்பட்டாலும் அறிவித்தல்கள் போதியளவில் அமுல்படுத்தப் படவில்லை என்ற முறைப்பாடுகளும் இருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் கூட்டத்தில் வெடித்த குண்டு அதன் சனாதிபதி வேட்பாளரையும் ஏனைய பலரையும் கொன்றமை பல அதிர்ச்சி அலைகளை நாட்டில் பரவச் செய்ததுடன் சமாதானப் பேச்சுவார்த்தையையும் தற்காலிகமாக இடைநிறுத்தியது. புதிய சனாதிபதி குமாரதுங்க இன முரண்பாடுகளுக்கான சமாதானத் தீர்வில் ஈடுபாடுகாட்டி மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார்.

7. முடிவுரை

1994 இல் சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பான சட்ட மற்றும் நிறுவனரீதியான நடை முறைகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இலங்கையில் சிறுபான்மையினர் அனுபவித்த உரிமைகள், ஐக்கிய நாடுகள் சாதனங்களிலும் இலங்கையின் அரசியல் யாப்பிலும் உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றில் சர்வதேச ரீதியான ஆகக் குறைந்த தரத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்கத் தவறியது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வெளியே கூடச் சிறுபான்மையினர் தமது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், சிறுபான்மையினருக்குச் சார்பான கொள்கையை வெளியிட்டு, சிறுபான்மையினர் உரிமைகளை அனுபவிப்பதற்குச் சார்பான சைகைகளைக் காட்டியது. 1994 இன் இறுதிப்பகுதியில், இவ் அரசாங்கம் பதவிக்கு வந்து சிறிதளவு காலமே என்பதால் எடுத்துரைக்கப்பட்ட

கொள்கையை அமுல்படுத்துதல் பற்றி மதிப்பிடுவது கடினம். எவ்வாறாயினும் சில செயற்பாடுகள் இடம்பெற்றன. அரசகரும மொழித் திணைக்களத்துக்குச் சில உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள். வடக்குக் கிழக்குக்கான பொருளாதாரத்தடை தளர்த்தப்பட்டது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பமானது. அவை யாவும் சரியான திசையிலே சென்று கொண்டிருந்தன. இந்த அத்தியாயத்தில் எடுத்துக் காட்டப்பட்ட விவகாரங்கள் பற்றி அரசாங்கம் கூடிய கவனம் எடுக்கும் எனவும் இவற்றுக்குப் பொருத்தமான வினைத்திறனுடைய சட்டரீதியான, நிறுவனரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் இலங்கையிலுள்ள சிறுபான்மைக் குழுக்கள் யாவற்றிற்குமுரிய சகல மனித உரிமைகளையும் பூரணமாக அனுபவிக்க இவை உறுதி செய்யும் எனவும் நம்பப்படுகிறது.

இலங்கையில் சமத்துவமுடைய பிரசைகளாகக் கௌரவத்துடன் வாழ்வதற்கு இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அரசாங்கத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பினுள் போதிய வளங்களைப் பயன்படுத்தவும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான நடைமுறைகளையும் கொண்ட அதிகார அமைப்பொன்றை உருவாக்குதல் வேண்டும். அங்கு சிறுபான்மையினரும் சமுதாயத்தின் சகல பிரிவினரும் தமது பொருளாதார, சமூக, கலாசார, அரசியல் அபிவிருத்திக்கு முக்கியமான கல்வி, சமூக, கலாசார, பொருளாதார அபிவிருத்தி போன்ற துறைகளில் சட்டவாக்க மற்றும் சட்டநிறைவேற்று விடயங்களில் தன்னாதிக்க அதிகாரமுடையோராய் விளங்குதல் வேண்டும். அத்துடன் நாட்டின் சகல பகுதிகளிலும் வசிக்கின்ற சிறுபான்மையினருக்கு வலுவான பாதுகாப்புக்களை வழங்கும் ஏற்பாடுகளும் அதில் இருத்தல் வேண்டும்.

2. மொழியைப் பொறுத்தவரையில் புதிய ஆணைக்குழுவின் அணுகு முறை துரிதமாக நடை முறைப்படுத்தப்படல் வேண்டும். இதற்கு அரசாங்கத்தின் பல்வேறு வளங்களும் அரசியல் திடசித்தமும் துணைபுரிதல் வேண்டும்.

3. பாரபட்சங்களை அகற்றவும் சிறுபான்மையின மக்கள் சமமான சட்டப் பாதுகாப்புப் பெறுவதை உறுதி செய்யவும் தேவையான

நிறுவன நடைமுறைகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறான நிறுவன அமைப்புகளாவன: பாரபட்சங்களை விசாரிக்கும் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரியின் அலுவலகம் போன்றன.

4. தமிழ் பேசும் மாணவர்கள் கல்வித்துறை வளங்களைப் பொறுத்தவரையில் எதிர்நோக்கும் சமமற்ற நிலைமைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தகுதி வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பெற்றுக் கொள்ளல். ஆசிரியர் பயிற்சிக்கான வசதிகள், ஆசிரியர்களுக்கான வழிகாட்டிகள், பாட நூல்கள், பாடசாலைகள் மற்றும் கல்விச் சாதனங்கள் என்பவற்றை அவர்கள் பெற்றுக் கொள்வதில் நிலவும் சமத்துவமின்மையை அகற்றுதல்.

5. பெருந்தோட்டப் பகுதிகளிலும், வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் சுகாதார வசதிகளை முன்னேற்றுதல், விஷேட மருத்துவர்கள், தாதிமார் போன்றோரை நியமித்தல் மற்றும் போதியளவு மருந்து வகைகளை விநியோகம் செய்தல் போன்றன.

13

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்

1. அறிமுகம்

இலங்கை கடந்த இரு தசாப்தங்களாகப் பல தொடர்ச்சியான ஆயுத முரண்பாடுகளை அனுபவித்து வந்துள்ளது. இனங்களுக்கிடையே நிலவும் பதட்டங்களை நன்கு கவனிக்காமையால் ஏற்பட்ட முரண்பாடுகள் பெருமளவில் உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தியதுபோல உளவியற் பாதிப்புகளுக்கும் காரணமாயிருந்தது.

முரண்பாடுகள் காரணமாகப் பெருந்தொகையான மக்கள் இடம் பெயர்ந்தனர். 1994 ஆம் ஆண்டின் இறுதியில் ஏறக்குறைய 525,000 பேர் நாட்டில் இடம் பெயர்ந்திருந்தனர் என அரசாங்க மதிப்பீடு கூறுகின்றது. 140,000 பேர் வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந்தனர். இவர்களுட் பலர் வெளிநாடுகளில் புகலிடம் கோரியுள்ளனர்.

இடம் பெயர்தல் மக்களுடைய பௌதீகப் பாதுகாப்புகளையும் வாழ்க்கைத் தரத்தையும் உடல் மற்றும் உள வளர்ச்சிக்கான ஆற்றலையும் பாதித்துள்ளது. தனிப்பட்ட சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்களும், சமூக பொருளாதார உரிமைகளை அனுபவிப்பதில் தடைகளும் அவர்களுடைய பூரண உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்வதில் தடைகளும் ஏனைய இலங்கையரிலும் பார்க்க இவர்களுக்கு அதிகமாக இருந்தன. அவர்களுக்கும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும் எதிர்காலம் நிச்சயமற்றதாக இருந்தது. இடம் பெயர்ந்தோர் வாழ்ந்த நிலைமைகள் அவர்களுடைய வேலைகள் மனித கௌரவத்துக்கு இழுக்காக இருந்தன. குறிப்பாக பெண்களும் பிள்ளைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

நாட்டைப் பொறுத்தமட்டில் உள்ளூர் அதிகார எல்லைக்குள் இடப்பெயர்வுகள் ஏற்பட்டிருந்தாலும் அது அகதிகளுக்கான பண்புகள் பலவற்றைக் கொண்டுள்ளன. ஆனால் அவர்களுடைய தேவைகளும் பாதிப்புகளும் அதிகம் இனரீதியான அல்லது ஏனைய முரண்பாடுகள் உருவாகும்போது ஏற்படும் இடம்பெயர்தலில் இவ்வாறானவை உண்டாகின்றன. சண்டையிடும் குழுக்கள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும்போது இடம்பெயர்தல் அடிக்கடி ஏற்பட்டுள்ளன. சர்வதேச தரம் இல்லாமையாலும், இதனால் உண்டாகும் பிரச்சினைகளைக் கவனிக்க நிறுவனங்களுக்கு விஷேட ஆணைகள் அளிக்கப்படாமையாலும் இவர்களுடைய பாதிப்புகள் சிக்கலடைந்துள்ளன.

2. இடம்பெயர்தல் கொள்கை

அரசாங்கக் கொள்கை மட்டத்திலும் அடிநிலை மட்டத்திலும் ஒரு தெளிவான ஏற்பாடு காணப்பட்டது. அவ்வாறே இடம் பெயர்தல் அணுகப்படுகிறது. முன்னர், அரசும், அரசுசாரா நிறுவனங்களும் நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்குவதிலேயே பரவலாகக் கவனம் செலுத்தின. இத்தகைய அணுகுமுறை, இடம் பெயர்தலை ஒரு தற்காலிக நிகழ்வு என்ற வகையில், இடைக் காலத்திலுள்ள மேலதிக தேவையென்றே கருதியது. ஆகவே அரசின் உதவித் திட்டங்கள் "அவசரகால புனர்நிர்மாண, புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் (ERRP) என அழைக்கப்படலாயிற்று. இந்நிகழ்ச்சித் திட்டத்தை அரசு நிருவகித்து வந்தது; அரசும் வெளிநாட்டு நன்கொடையாளரும் பணம் கொடுத்துதவினர். இது 1994 மார்கழியுடன் உத்தியோக பூர்வமாக முடிவடைந்தது.

ஆயினும், இடம் பெயர்தலானது ஓரளவு நிரந்தரத் தன்மையைப் பெற்றபோது அதன் அணுகுமுறைகள் மாற்றமடைந்தன. இடம்பெயர்ந்தோருக்கு உதவுதலுக்கான வலியுறுத்தல்கள் "வாழ்க்கைப் பொறுப்பேற்றல்" என்பதுடன் இடம்பெயர்ந்த சனத்தொகையின் சுதந்திர உணர்வைப் பேண முயற்சித்தல் என்பவனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. இப்பொழுது "கையேடு"களுக்குக் குறைந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது; இடம் பெயர்ந்த சனத்தொகை தம்மில் தாமே தங்கி வாழும் செயற்பாடுகளை உருவாக்குவதற்குக் கூடியளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக தொழில் மற்றும் வருமானம் பெறுதல் தொடர்பாக இவை அமைந்துள்ளன.

1995 இன் ஆரம்பத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இடம் பெயர்தல் தொடர்பான தனது கொள்கையை வெளியிட்டது.[1] அது கூறுவதாவது,

> நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணம் என்பது இனக்கலவரங்களாலும், பயங்கரவாத நடவடிக்கைகளாலும் பாதிக்கப்பட்ட மக்கள் கௌரவத்துடன் வாழத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் வழமையான வாழ்க்கைக்குத் திரும்பச் செய்தல், இழப்புகளுக்கும் சேதங்களுக்கும் நட்டஈடு வழங்குதல், பௌதீக, பொருளாதார மற்றும் சமூக ரீதியான முன்னேற்றத்துக்கு நிலையான சூழலை உருவாக்குதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனர் நிர்மாணமானது அபிவிருத்திச் செயல்முறைகளுடன் ஒன்றிணைந்த நடவடிக்கையாகக் கருதப்பட்டது.

புதிய கொள்கை பின்வருவனவற்றை வலியுறுத்துகிறது.

* இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படை மனித மாண்பினை அங்கீகரித்தல்.
* மீளக் குடியமர்த்தல் கட்டாயத்தின் பேரில் இடம்பெறாது.
* நலன்புரி சேவை முகாம்களின் தரத்தை மேம்படுத்தல்
* மீளமர்த்தலுக்கும், மீள்குடியேற்றத்துக்குமான உதவித்திட்டம் அளிக்கப்படும்.
* புனர்நிர்மாண, புனர்வாழ்வு வங்கியின் மூலம் பொருளாதார முயற்சிகளை ஆரம்பிக்கக் கடன் வழங்கப்படும். இது ஆரம்பிக்கப்படவுள்ளது.

காலப்போக்கில் நலன்புரி சேவை நிலையங்களை மூடிவிடுதலும் புதிய கொள்கையின் ஓர் அம்சமாகும். சகல முகாம்களும் ஒரு வருடத்துள் மூடப்படும் என அமைச்சர் அறிவித்துள்ளார். மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெயர்ந்தோரின் உளவியற் பாதிப்புகளை வெளிப்படுத்துவதில் எவ்வித கவனத்தையும் பெறவில்லை.

---

1 Ministry of shipping, ports, Rehabilitation and Reconstruction, " Performance, Policy, Strategies and Programmes 1994-1995" (Hereinafter, Ministry Document)

அன்றேல் அவை பாதிக்கப்பட்ட பல்வேறு சமுதாயத்தினரிடையே தொடர்புகளைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளையும் தேடவில்லை.

2.1 மீள் குடியமர்வு

இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவும் அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுள் ஒன்று மீள் குடியமர்வாகும். இடம் பெயர்ந்தோர் அவர்களுடைய சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியமர்த்தல் இடம் பெயர்தலுக்கான சிறந்த நடவடிக்கையாகக் கருதப்பட்டது. இருந்தாலும் இம் மீள் குடியமர்வு என்பது சிக்கலான தாமதமான செயல்முறையாகும். முரண்பாடுகளுக்குத் தெளிவானதொரு முடிவு இல்லை. அது இடம் பெயர்தலைத் தோற்றுவிக்கும். அந்தப் பிரதேசத்திலுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் சமூகப் பிணைப்புகள் அழிவுக்குட்படும்.

1993 ஆம் ஆண்டில் புனர்வாழ்வு, புனர்நிர்மாண மற்றும் சமூக நலன் சேவைகள் அமைச்சு, மீள் குடியமர்வுக்கான வழிகாட்டல் தொகுதியொன்றை வழங்கியிருந்தது.[2] இந்த மீள் குடியமர்வு நிகழ்ச்சித் திட்டமானது, நேரடியாகப் பணஉதவி நன்கொடைகளையும், ஏனைய மறைமுக உதவிகளையும் கொடுப்பதன் மூலம் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு, அவர்களுடைய சொந்தப் பிரதேசங்களில் வாழ்க்கையைத் தொடர உதவுதலை நோக்கமாகக் கொண்டது.

அரசாங்கத்தின் மீள் குடியமர்வு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையிலிருந்த மீள் குடியமர்வு வழிகாட்டல்களை வெளிப்படையாக நிராகரித்தது. இவ்வழிகாட்டல்களில் தற்செயலாகத் திரும்பி வந்து குடியமரும் அம்சமே முக்கிய கோட்பாடாக இருந்தது. இக்கோட்பாடு பெரும்பாலும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

1993ஆம் ஆண்டின் மீள்குடியமர்வு நிகழ்ச்சித் திட்டம் இவ் வழிகாட்டல்களை மீறியிருந்தது.[3] ஆயினும் 1994 இன் நினைவுகள் சற்றுச் சிக்கலானவை. அரச அனுசரணையுடன் நிகழ்ந்த மீள்குடியமர்வுத் திட்டங்களின் தொகை குறைந்தபோது, பெருந்தொகையான இடம்பெயர்ந்தோர் மீளக் குடியமர விருப்பம் தெரிவித்தனர். மன்னார் போன்ற தாம் முன்பு

---

[2] See *Sri Lanka: State of Human Rights* 1993 (Law & Society Trust, Colombo, 1994)

[3] *Ibid*

வாழ்ந்த மாவட்டங்களில் உள்ள சாதாரண நிலைமையை விட மோசமான நிலைமை காணப்பட்டமையே இதற்குக் காரணமாகும். திருகோணமலையில் உள்ள கிளப்பன்பேர்க் முகாமில் வாழ்ந்த இடம்பெயர்ந்த மக்கள் சிலர், தம் சொந்த இடங்களுக்குத் திரும்ப அரசாங்கம் வசதிகள் செய்து கொடுக்கவில்லையெனக் குறைகூறினர்.

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி நிருவாகத்தின் கொள்கை அமைப்பில் விஷேடமாக இடம் பெயர்ந்தோரின் மீள்குடியமர்வில் இராணுவம் பிரதான பங்கினை வகித்தது. "தடை நீக்கம்" செய்யப்படும் வரை மீளக்குடியமர்வு இடம் பெறாது என இராணுவம் கூறியது. இது அடிக்கடி இராணுவத்தின் கட்டளைகளையும் எதிர்பார்த்திருந்தது. ஆயுதப்படையினரால் நடை முறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் 1994 இல் விஷேடமாக அரசாங்க மாற்றத்தால் குறைவடையத் தொடங்கியது. ஆயினும், இராணுவத்தின் செல்வாக்குத் தொடருமா அல்லது குறைந்துள்ளதா என்பது தெளிவாக இருக்கவில்லை.

"தடை நீக்கப்பட்ட" பிரதேசம் என அரசாங்கம் பிரகடனப்படுத்திய பிரதேசங்கள் மீள்குடியமர்வுக்கும் பொருத்தமானவையாக இருந்தாலும் அவை பொருளாதார நடவடிக்கைகளுக்குச் சாதகமாக இருக்கவில்லை. குடியேறுவோர் வீடுகளை அமைக்கும் பொழுது, அவர்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தடைகள் தோன்றலாம். மீன்பிடி தடை செய்யப்படலாம். அல்லது பாதுகாப்புக் காரணங்களுக்காக நீர்ப்பாசன வசதியில்லாமல் பயிர்ச்செய்கை பாதிக்கப்படலாம்.

1994இல் ஏறக்குறைய 16,000 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டன.[4]

அம்பாறை	3,264
திருகோணமலை	5,285
மட்டக்களப்பு	4,117
வவுனியா	3,630
மன்னார்	339

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கப்பல்துறைக் கிராமத்தில் 167 குடும்பங்களை அரசாங்கம் மீளக் குடியமர்த்தியது. அரசாங்கம் இதனை ஒரு மாதிரி மீளக் குடியமர்த்துதலாகக் கருதுகிறது. ஏனைய

---

4 Ministry Document, Supra n 2 p 41

பிரதேசங்களிலும் இதனைப் போல அமைக்க எண்ணுகிறது. பல வருடங்களாகச் சில குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன; அவை பல தடவைகள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன. 1990 ஆனி மாதம் தொடக்கம் மொத்தம் 98,253 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன.[5]

மீளக் குடியமர்ந்தோருக்கு, குடியிருத்தல் கொடுப்பனவாக 2,000 ரூபாவும், பொருளாதார நடைமுறைகளை மீண்டும் ஆரம்பிக்க உற்பத்தி முயற்சி மானியமாக 4,000/- ரூபாவும் (குடும்பத்தின் மாதாந்த வருமானம் 2,500 ரூபாவுக்குக் குறைவாக உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டது) அத்துடன் வீடமைப்பு மானியமும் கொடுக்கப்பட்டது. ஆயினும் மீளக்குடியமர்த்தலுக்கான கொடுப்பனவுகள் குறிப்பாக வீடமைப்பு மானியம் கொடுக்கப்படவில்லையென முறைப்பாடுகள் அடிக்கடி தெரிவிக்கப்பட்டன. அரசாங்க உத்தியோகத்தர்கள் கூட இதனை ஒப்புக் கொண்டார்கள். பல அரசாங்க நிறுவனங்களின் ஈடுபாட்டுடன், திறைசேரியின் பணப்பாய்ச்சல் பிரச்சினைகளும் மானியங்கள் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்படாமல் இருப்பதற்குக் காரணமாயின. முன்னர் மீளக் குடியமர்ந்தவர்களுக்கும் அதற்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கும் மூன்று அல்லது ஆறு மாதங்களின் பின்னர் அரசாங்க உணவுப் பங்கீட்டு அட்டை வழங்குதல் நிறுத்தப்பட்டது. புதிய கொள்கையின்படி, உணவுப் பங்கீட்டு அட்டையானது மீளக் குடியமர்ந்த குடும்பம் உற்பத்தி முயற்சிக்கான மானியத்தைப் பெற்று ஆறு மாதங்களின் பின்னர் அது நிறுத்தப்படும். அரசாங்கம் மாறியதைத் தொடர்ந்து, சிலர் மீளக் குடியமர்தலைத் தவிர்த்தனர். ஏனெனில் புதிய அரசாங்கத்திடமிருந்து வேறொரு திகதியில் நல்ல தொகையைப் பெறலாம் என எண்ணினர்.

புதிய அரசாங்கத்தின் இடம்பெயர்தல் பற்றிய கொள்கை மீளக் குடியமர்த்தும் துரித நிகழ்ச்சித் திட்டத்தை, நலன்புரிச்சேவை நிலையங்களை மூடிவிடும் குறிக்கோளுடன் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கிறது.[6] மீளக் குடியமர்த்தும் செயல்முறை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. முதலாவது கட்டத்தில் தற்காலிகக் குடிசைகள் அமைக்கப்படும். இங்கு மீளக் குடியமர்வோர் குடியிருத்தல் கொடுப்பனவாக 2,000 ரூபாவையும், 1000 ரூபா பெறுமதியான பொருட்களையும் பெற்றுக்கொள்வர். ஒரு குடும்பம் தனது பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது

[5] *Ibid*
[6] *Ibid*, p 32

எனப் பிரதேசச் செயலாளர் திருப்தியடையுமிடத்து அவருடைய சிபார்சின் பேரில் உற்பத்தி முயற்சிக்கான கொடுப்பனவாக 1000 ரூபா கொடுக்கப்படும். பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்துக்கு 6 மில்லியன் ரூபா வரையில் இலகு கடன் என்ற வகையிலும் உற்பத்தி முயற்சிக்கான கொடுப்பனவு வழங்கப்படும்.

இரண்டாம் கட்டத்தில் நிரந்தர வீடமைப்பைத் துரிதப்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு, 25,000 ரூபா மானியமும், 25,000 ரூபா கடனும் வழங்கப்படும். புனர்நிர்மாண, புனர்வாழ்வு வங்கி ஆரம்பிக்கப்படும் பொழுது இரண்டாவது கட்டத்தில் பொருளாதார நடவடிக்கைக்கான கடன்களும் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

மீளக் குடியமர்தலில் இடம்பெயர்ந்தோரின் சுயஈடுபாடு இல்லை என விமர்சிக்கப்பட்டுள்ளது. ஓர் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> *பெரும்பாலும் எல்லா விடயங்களிலும், திட்டமிடல் நடவடிக்கை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் போன்றவற்றில் பொதுமக்கள் தவிர்க்கப்பட்டுள்ளனர். சனநாயகரீதியான நடைமுறையில் உத்தியோகத்தர்கள் தீவிர கவனமெடுக்கவில்லை. அவர்களுடைய கருத்தில் "மக்களுடைய பங்கு பற்றல்" என்பது உள்ளூர் மக்களிடமிருந்து இலவசமாக வேலை வாங்குதல் மூலம் அமுலாக்கல் செலவைக் குறைத்தல் என்ற அளவிலேயே இருந்தது.*[7]

தற்பொழுது இடம்பெயர்ந்தோர் எல்லோரும் மீளக்குடியமர விரும்புகின்றனர். அதற்குப் பல காரணங்களையும் தெரிவிக்கின்றனர்.

* நிலத்துக்கான அவர்களுடைய உரிமை பற்றிய தெளிவின்மை.
* அரசிடமிருந்து பல உதவிகளை எதிர்பார்த்தல்.
* அவர்களுடைய சொந்தப் பிரதேசங்களில் "தடைநீக்கம்" செய்யப்படவில்லை; பாதுகாப்பில்லை.
* அவர்களுடைய பிள்ளைகளின் கல்வி சீர்குலைந்துள்ளது.

கிணறு, பாடசாலைகள், வீதிகள் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் சொந்தப் பிரதேசங்களில் இல்லை. அத்துடன் வருமானம்

---

7 Rajasingham, M., "Emergency Reconstruction and Rehabilitation Programme," Position Paper of the NGO - Donor Consortium (October 1994)

பெறும் சந்தர்ப்பங்களும் இல்லை. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமக்கென ஒரு மீள் குடியமர்வு நிகழ்ச்சித் திட்டத்தைக் கொண்டிருக்கிறதுடன் அதன் மீதான இராணுவத்தின் கவனம் முக்கியமாக இடம்பெறுகின்றது.

2.2 மீள் அமர்த்தல்

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கக் கொள்கையின்படி, மக்களை அவர்களுடைய சொந்தப் பிரதேசங்களில் மீளக் குடியமர்த்த முடியாவிடில், அவர்கள் தற்காலிகமாக அரசாங்கக் காணியில் இருத்தப்படுவார்கள்.

2.3 ஊழல்

ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகள் அடிக்கடி தெரிவிக்கப்படுகின்றன. உள்ளூரில் இடம் பெயர்தோருக்காக அனுப்பப்படும் உணவுப்பொருட்கள், குறிப்பிட்ட இடத்தை வந்து சேருமுன்னர் கொழும்பில் அபகரிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளது. உணவுப் பொருட்களைக் கொண்டு செல்லல் பற்றிய ஒப்பந்தங்கள் பற்றியும் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஊழலுக்கான ஆதாரங்கள் இல்லை, குற்றச்சாட்டுகளை நிரூபித்தலும் கடினம். பொருட்கள், சேவைகளைப் பெறுதலில் வழிகாட்டல்களை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டியதில்லை என நிவாரண நடைமுறைகள் தெரிவிப்பதினால் அவை ஊழல்களுக்குப் பெரிதும் இடமளிப்பதுடன் அதிகரிப்பதாகவும் உள்ளது.

3. உள் நாட்டில் இடம் பெயர்ந்தோர்

"உள்ளூர் மட்டத்தில் இடம் பெயர்ந்தோர்" என்பதற்குப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் காணப்படவில்லை. செயலாளர் நாயகத்தின் பகுப்பாய்வு அறிக்கையொன்று இடம்பெயர்ந்த ஆட்கள் பற்றிப் பின்வருமாறு வரையறை செய்கிறது.

> *பெருமளவில் ஆட்கள் சடுதியாக அல்லது எதிர்பாராத வகையில் உண்டாகும் ஆயுதமேந்திய முரண்பாடுகளால், உள்நாட்டுச் சச்சரவுகளால், திட்டமிட்ட மனித உரிமை மீறல்களால் அல்லது இயற்கை அல்லது மனிதன் உருவாக்கிய அழிவுகளால், வீட்டைவிட்டு*

வெளியேறுமாறு கட்டாயப்படுத்தப்படும் போது அவர்கள், அவ்விடங்களை விட்டு வெளியேறித் தமது நாட்டு எல்லைக்குள் வசித்தல்.[8]

இவ் வரைவிலக்கணமானது பிரான்சிஸ் டெங் என்பவரால் அவருடைய இலங்கை பற்றிய அறிக்கையில்[9] குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் அவர் மேலும் கூறுவதாவது, இலங்கையின் நிலைமையைப் பொறுத்த மட்டில் பொருத்தமான, சரியான வரைவிலக்கணத்தைக் கூறுதல் கடினமானது என்கிறார். எவ்வாறாயினும் பெருமளவில் உள்ளூர் மட்டத்தில் இடம்பெயர்ந்தோரை அவர்கள் விஷேட முகாம்களில் இருப்பதனைக் கொண்டும், உதவிக்கும் பாதுகாப்புக்குமான விஷேட தேவைகளைக் கொண்டும் இனங்காணலாம்.

இலங்கையிலுள்ள முரண்பாடுகள் 5 வகையான இடம் பெயர்ந்தோரைத் தோற்றுவித்துள்ளது.

* இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்வோர்
* இடம் பெயர்ந்து முகாம்களுக்கு வெளியே வாழ்வோர்.
* தமிழ் நாட்டிலிருந்து திரும்பிய அகதிகள் தற்காலிக முகாம்களில் வாழ்தல்.
* மீளக் குடியமர்ந்தோர்.
* மேற்கு நாட்டு அரசுகளால் தாய் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட்ட புகலிடம் கோருவோர்.

அரசாங்கத்தின் புள்ளி விபரங்களின்படி, 1994 ஆடி மாத இறுதியில் இலங்கையில் 524,202 பேர் இடம் பெயர்ந்திருந்தனர்.[10] இப் புள்ளி விபரங்கள் பங்கீட்டு உணவைப் பெற்றோரை மட்டும் உள்ளடக்குகின்றன. ஆயினும் உண்மையான புள்ளிவிபரம் இதனிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கலாம். மறுபுறத்தில், வடக்கில் பங்கீட்டு அட்டையைப் பெறப் பதிவு செய்த இடம் பெயர்ந்தோரில் பலர் விடுதலைப் புலிகளால்

---

8 Deng, F.,"Analytical Report of the Secretary General on Internally Displaced Persons", E/CN. 4/1992/23. para 17

9 Deng, F., "Profiles in Displacement: Sri Lanka," submitted pursuant to the Commission on Human Rights Resolution 1993/ 94, E/CN. 4/ 1994/ 44/ add.1, 25/1/1994, para 132

10 Ministry Document., supra n 2

செயற்கையாக உருவாக்கப்பட்டோர் என்ற ஐயமும் நிலவுகிறது.[11] உள்ளூரில் இடம் பெயர்ந்தோரிடையே உத்தியோக பூர்வமான இனரீதியான தகவல்கள் இல்லையெனினும் ஏறக்குறைய 78% தமிழரும், 13% முஸ்லீம்களும், ஏறக்குறைய 8% சிங்களவரும் இத்தொகையிலடங்குவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

4. சர்வதேச நியமங்கள்

சர்வதேச அடிப்படையிலான மனித அடிப்படைச் சட்ட விதிகளுக்கு அப்பால் இடம்பெயர்தலுக்கு நேரடியாகப் பிரயோகிக்கத்தக்க சர்வதேச நியமங்கள் தற்காலத்தில் இல்லை. சர்வதேச சமுதாயத்தின் முன்னுள்ள பிரதான அம்சங்களில் ஒன்று இடம் பெயர்ந்த ஆட்களைப் பாதுகாக்கும் தரங்களையும் செயன்முறைகளையும் விருத்தி செய்தலாகும். இது பற்றிய ஒரு முயற்சி பிரான்சிஸ் டெங் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. இவர் உள்ளூரில் இடம் பெயர்ந்த ஆட்களுக்கான ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் விஷேட பிரதிநிதி ஆவர். மனித உரிமைகள் பற்றிய ஆணைக் குழுவின் 51 ஆவது செயலமர்வில் இவ் விஷேட பிரதிநிதி "சட்டப் பிரமாணங்களின் தொகுப்பும் பகுப்பாய்வும்" என்ற விடயத்தை உள்ளூரில் இடம் பெயர்ந்தோர் சம்பந்தமாக முன்வைத்தார்.[12] இவ்வாய்வின் ஒரு முக்கிய முடிபாகப் போதியளவு சட்டரீதியான பாதுகாப்பு இல்லை என்பதிலும் பார்க்க நடைமுறையிலுள்ள சட்டங்களையும் பிரமாணங்களையும் அமுல் படுத்த அரசியலுறுதியின்மை ஒரு பிரதான பிரச்சினையாகும் என எடுத்துக் காட்டப்பட்டது.[13]

4.1 மனித உரிமைகள் சட்டம்

மனித உரிமைகள் பற்றிய சர்வதேச மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ள சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் கோட்பாடுகள் இடம் பெயர்தல்

---

11 This comment was made by a member of an international NGO in an interview in 1994.

12 E/CN.4/1995/CRP. 1, 30 January 1995. The compilation was based on studies conducted by three institutions: the Ludwig Boltzmann Institute for Human Rights, the American Society of International Law and the International Human Rights Law Group. The Study was reviewed by a meeting of international Legal orperts in Vienna in October 1994.

13 "Compilation and Analysis of Legal Norms" Para p 75

பற்றிய விவகாரத்தை நேரடியாக எடுத்துக் கூறாவிட்டாலும் கூட, அவை இடம் பெயர்ந்தோருக்கும் பொருந்தும். சர்வதேச சட்டத்தின் விதிகள் (யு.டி.எச்.ஆர்: ஐ.சி.சி.பி.ஆர் மற்றும் ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர் என்பவற்றைக் கொண்ட) மக்கள் எல்லோருக்கும் பொருந்தும். மனிதாபிமானச் சட்டத்தின் கோட்பாடுகள் போலன்றி சர்வதேச மனுவின் முன்னேற்பாடுகள் ஆயுதப் போராட்ட நிலைமைகளுக்கே மிகப் பொருந்தும். அகதிகள் பற்றிய சட்டமானது ஒருவர் சர்வதேச எல்லையைக் கடந்து புகலிடம் கோரினாலே அது பிரயோகிக்கப்படலாம்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் உரிமைகள் பற்றிய ஒரு பரந்த நோக்கினைக் கொண்டது. இது உள்நாட்டு மற்றும் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளை இரண்டுங்கெட்ட நிலைக்கு உள்ளாக்கிறது. சில உரிமைகள் உடனடிச் சம்பந்தமுடையவை.

> நடமாடும் சுதந்திரம் பற்றிய உரிமை மற்றும் ஒருவரின் வாழிடத்தைத் தெரிவு செய்யும் உரிமை (உறுப்புரை 13, யு.டி.எச்.ஆர்: உறுப்புரை 12, ஐ.சி.சி.பி.ஆர்) இது ஒருவரின் பிறப்பிடத்தை விட்டு அகலவும், வசிப்பிடத்தை விட்டு அகலவும், வசிப்பிடத்தைத் தற்காலிகமாக மாற்றவும்: சொந்த வீட்டுக்குத் திரும்பவும்: சர்வதேச எல்லையைக் கடந்து வெளிநாட்டில் புகலிடம் கோரவும் உள்ள உரிமைகளை உள்ளடக்குகிறது.[14] கட்டாயத்தின் பேரில் மீளக் குடியமர்தலுக்கான உரிமை, கட்டாயத்தின் பேரில் ஒருவருடைய சொந்த நாட்டை விட்டுச் செல்லும் உரிமை என்ற வகையில் அவ்வுரிமை இருக்கக் கூடாது. இவ்வாறான உரிமைகளைத், தேசிய பாதுகாப்பு, பகிரங்கக் கட்டளை, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் அல்லது உரிமைகளைப் பாதுகாத்தல், ஏனையவரது சுதந்திரத்தைப் பேணல் என்ற வகையிலேயே மட்டுப்படுத்தலாம். வாழ்க்கை உரிமையை விலக்காத (உறுப்புரை3, யு.டி.எச்.ஆர்: உறுப்புரை 6, ஐ.சி.சி.பி.ஆர்) மனித கௌரவத்துடன் வாழ்தல் தொடர்பான உரிமை.
>
> போதிய வாழ்க்கைத் தரத்துக்கான உரிமை, இவற்றுள் போதியளவு உணவு, உடை, வீடு மற்றும் வாழ்க்கை நிலைமைகளின் தொடர்ச்சியான முன்னேற்றம் என்பன அடங்குகின்றன. (உறுப்புரை 11, ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர்)

---

[14] *Ibid*, para 29

சட்டத்தின் முன் ஒரு மனிதனாக எல்லா இடங்களிலும் அங்கீகரிக்கும் உரிமையைக் குறைத்துக் கூறாமை (உறுப்புரை 6, யு.டி.எச்.ஆர்; உறுப்புரை 16, ஐ.சி.சி.பி.ஆர்) ஆகவே விமானப் பயணத்தின் போது ஒருவர் தன்னை இனங்காணக் கூடிய ஆவணங்களை இழந்ததினால் அந்த இடம்பெயர்ந்த நபருடைய சட்டப்படியான ஆளுமையையும், அரசாங்க சேவைக்கான வாய்ப்புகளையும் அல்லது வழக்காடுமன்றங்களில் தோன்றுதலையும் தடுத்துவிடக்கூடாது.

பாகு பாடு காட்டலுக்கு எதிரான உரிமை (உறுப்புரைகள் 2 மற்றும் 7, யு.டி.எச்.ஆர்; உறுப்புரிமை 2 மற்றும் 3, ஐ.சி.ஈ.எஸ்.சி.ஈ; உறுப்புரை 2, 3 மற்றும் 26 ஐ.சி.சி.பி.ஆர்).

4.2 உடன்பாடான செயலும் இடம்பெயர்தலும்

வியன்னா பிரகடனமும் "நன்கு பாதிப்படைந்த குழுக்களின்[15] மனித உரிமை மேம்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் முக்கியத்துவங் கொடுக்க வேண்டும்" எனப் பின்வரும் அடிப்படையில் எடுத்துக் காட்டுகிறது.

> *"கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக ஆதரவு போன்ற குறிப்பான விடயங்களில் தேசிய மட்டத்தில் நடவடிக்கைகளை எடுக்கவும் அதனுடைய சனத்தொகையில் பாதிக்கப்பட்ட துறைகளிலுள்ள மக்களின் உரிமைகளை மேம்படுத்தவும், பாதுகாக்கவும், தமது சொந்தப் பிரச்சினைகளுக்குத் தாமே தீர்வுகாண்பதில் ஆர்வமுள்ளவரின் பங்கு பற்றலை உறுதிசெய்யவும் அரசாங்கத்துக்குக் கடப்பாடு உண்டு."*

உள்ளூரில் இடம் பெயர்ந்த ஆட்கள் பாதிக்கப்பட்ட குழுவினர் அடங்கியிருந்தால் ஏனைய சனத்தொகைப் பிரிவினரிலும் பார்க்க, அவர்களுடைய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்கும் சாத்தியமும் உள்ளது.

ஒருவர் தொடர்ந்து இடம்பெயர்ந்தவராக இருந்து, குறிப்பிட்ட காலப்பகுதியில் நன்கு பாதிக்கப்பட்டவராக இருந்தால், உடன்பாடான

---

[15] Vienna Declaration and Programme of Action, United Nations (1993) para 24

செயல் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ள விஷேட சலுகைகளுக்கான உரிமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். உடன்பாடான செயல் நிகழ்ச்சித் திட்டங்கள் வரலாற்று ரீதியாகப் பாகுபாடுகாட்டப்பட்ட எதிர்க்குழுவினருக்கு உதவும் தற்காலிக நிகழ்ச்சித் திட்டம் என்று கருதப்பட்டது. சில விடயங்களில் இது சரியெனவும் நிறுவப்பட்டது. பாகுபாடு காட்டப்பட்ட குழு உறுப்பினர்களின் கல்வி, வேலை மற்றும் ஏனைய வளங்கள் போன்றவற்றுக்கான வாய்ப்புகளுக்கு உத்தரவாதமளிக்க முயன்றன. இடம் பெயர்ந்தோர் விடயத்தில், அவ் இடப் பெயர்வானது சந்தர்ப்பங்களுக்கும், வளங்களுக்குமான சமவாய்ப்புகள் மறுக்கப்பட்டமையினால் விளைந்தது எனில் உடன்பாடான செயலின் குறுங்கால நிகழ்ச்சித் திட்டம் பொருத்தமானதாக விளங்கும்

4.3 ஏனைய சர்வதேச சாதனங்கள்

ஏனைய சர்வதேச சாதனங்களும் உள்ளூரில் இடம்பெயர்ந்தோரின் பாதுகாப்புக்கு உபயோகிக்கக் கூடிய கோட்பாடுகளைக் கொண்டுள்ளன. இவற்றுள் மனித உரிமைகள் மற்றும் மக்கள் குடியெழுந்து செல்லல் பற்றிய ஐ.நா. பொதுச்சபையின் தீர்மானம் (1991) மற்றும் கட்டாய வெளியேற்றம் பற்றிய ஐ.நா. உப ஆணைக் குழுவின் தீர்மானம் (1991) என்பனவும் அடங்கும்.

இவ்வாறான சர்வதேச சாதனங்களிலிருந்து குறிப்பான நியமங்களை உய்த்துணரல் சாத்தியமானது. இடம் பெயராமல் இருப்பதற்கான உரிமை அல்லது அதிகாரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் விளக்கமளித்தது போன்று தங்கியிருத்தலுக்கான உரிமை என்பதும் இதில் உள்ளடங்கியது. ஏனைய தரங்கள், முரண்பாட்டின் விளைவுகளிலிருந்து தப்பி ஓடிப்போதலுக்கான உரிமை, மீண்டும் பழைய இடத்துக்குப் போகாதிருக்கும் உரிமை, அல்லது அவர்களுடைய விருப்பத்திற்கு எதிராக மீளக்குடியமர்த்தல் மற்றும் முரண்பாடுகளுக்கு இடையில் காணப்படும் நிலைமைகள் எல்லாம் சர்வதேசச் சாதனங்களில் அடங்கியுள்ள கோட்பாடுகளின் பரந்த கூற்றுக்களின் பாதிப்புகளிலிருந்து நழுவிச் சென்றுள்ளன.

ஏனைய மனித உரிமைச் சாதனங்களும் சி.ஈ.ஆர்.டி. துன்புறுத்தல் மகாநாட்டுடன்படிக்கை (சி.ஈ.டி.எ.டபிள்யூ) மற்றும் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய மகாநாட்டுடன்படிக்கை (சி.ஆர்.சி.) அடங்கலாக, இடம்பெயர்தலுக்குப் பொதுவாகப் பொருந்தக் கூடியவை.

4.4 மனிதாபிமானப் பண்புச் சட்டங்கள்

சர்வதேச மனிதப் பண்பு சட்டக் கோட்பாடுகள் கூட இடம் பெயர்தலில் பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன் நடைமுறைக்குப் பொருத்தமான தாயும் உள்ளூர் இடம்பெயர்தலில் அக்கறை கொண்டதாயும் உள்ளது. ஜெனீவா மகாநாட்டுடன்படிக்கை 3 ஆவது பொது உறுப்புரையும் மேலதிக விருப்புரிமைப் பின்னேடு II ஆவதும் சர்வதேச ரீதியிலான முரண்பாடுகளுக்கு நேரடியாகப் பொருந்தக் கூடியன. மனிதாபிமானப் பாதுகாப்பின் அடிப்படைத் தரங்களைக் குறைக்க முயற்சிக்கின்றன. இவற்றில் முரண்பாட்டுக்கு உட்படும் இரண்டு கட்சியினரும் போரில் நாட்டமற்றவர்கள் சார்பாகக் கட்டுப்பட வேண்டியவர்களாகின்றனர். இலங்கை, மேலதிக விருப்புமைப் பின்னேடு II என்பதைப் பின்னுறுதிப் படுத்தவில்லை. அது அவ்வாறு செய்யப்பட வேண்டுமானால், முரண்பாட்டுக்கு உட்படும் இரண்டு குழுக்களும் விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

மேலதிக விருப்புரிமைப் பின்னேடு II இன் 17 ஆவது உறுப்புரை உள்நாட்டுச் சனத்தொகையினரில் அவர்களுடையை பாதுகாப்புத் தொடர்பாக அல்லது இராணுவக் காரணங்களுக்காக இடம்பெயர்தலைத் தடைசெய்கிறது. இவ் விதிவிலக்கான நிலைமைகளின் கீழ் , உள்நாட்டுச் சனத்தொகை இடம்பெயர்ந்தால் அவர்கள் "இருப்பிடம், சுகாதாரம், பாதுகாப்பு, போஷாக்கு நிலைமைகளைத் திருப்திகரமாகப் பெற " நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பிரான்சிஸ் டெங் என்பவர் 17 ஆவது உறுப்புரையானது பொதுவான கலவரங்களால் ஏற்படும் பீதிகாரணமாக மக்கள் பயந்து ஓடினால், கட்டளையின்படி அல்லது கட்டாயத்தின் பேரில் அசைய வேண்டும் என வேறுபடுத்தப்பட்ட வகையில் எதனையும் கூறவில்லை எனத் தெரிவித்துள்ளார்.[16] ஆயினும் உறுப்புரை 17 (2) "உள்நாட்டு மக்கள் முரண்பாடுகள் தொடர்பான காரணங்களுக்காகத் தமது சொந்தப் பிரதேசத்தை விட்டுச் செல்லுமாறு கட்டாயப்படுத்தப்படக் கூடாது" எனத் தெரிவிக்கிறது. கலவரம் காரணமாக மக்கள் இடம்பெயருமாறு கட்டாயப்படுத்தப்படும் பொழுது இவ்விதிக்கு இன்னும் விரிவான விளக்கம் கொடுத்தலும் சாத்தியமானது.[17]

---

[16] See Deng, *Protecting the Dispossessed : A Challenge, for the International Community* (Brookings Institution. Washingtion D.C., 1993) P 7

[17] Article 17 of Additional protocol II is one of the few international provisions which addresses the forced dislocation of people.

பொது உறுப்புரை 3 மற்றும் மேலதிக விருப்புரிமைப் பின்னேடு II ஆவதும் கொலை, துன்புறுத்தல் தொடக்கம் தனிப்பட்ட தாக்குதல் வரையுள்ள இருபத்து மூன்று வெவ்வேறு சட்டங்களைத் தடைசெய்துள்ளது. அத்தியாவசிய விநியோகங்கள் இல்லாத இடங்களில், நிவாரண நடவடிக்கைகளை மனிதாபிமானத்துடன் எவ்வித பாகுபாடுகளுமின்றி அரசு மேற்கொள்ள முன்வரவேண்டும் என்பதை இது மேலும் வலியுறுத்துகிறது. விருப்புரிமைப் பின்னேடு II இன் 4 (3) உறுப்புரையின்படி பிள்ளைகளுடைய கல்விசார் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் தமது பெற்றோருடன் சேர வசதி செய்யும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. முரண்பாடுகளின் போது 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளைப் பயன்படுத்துதலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

5. இலங்கையின் உள்நாட்டுப் பிரமாணங்களும் இடம்பெயர்ந்தோரின் உரிமைகளும்

இடம் பெயர்ந்தோருள் பலர் இலங்கைப் பிரசைகள் மட்டுமன்றி அதனுடைய ஆட்சியதிகார எல்லைக்குள் வசிப்பவர்கள். அரசியலமைப்பின் மூன்றாவது அத்தியாயத்தின்படி உத்தரவாதமளிக்கப்படும் அடிப்படையுரிமைகளுக்கும் நாட்டில் வழங்கப்படும் ஏனைய அடிப்படை வசதிகளை அனுபவிக்கவும் அவர்கள் உரித்துடையவர். பிரான்சிஸ் டெங் குறிப்பிட்டது போல, மனித வாழ்க்கை மற்றும் கௌரவம் ஆகியவற்றின் ஆகக்குறைந்த தரத்தைப் பேணுதல் - உடல் பாதுகாப்பு, வீடு, உணவு, உடை, அடிப்படைச் சுகாதாரம் ஒரு நபரின் சூறுபடாநிலை குடும்பம் ஓர் அடிப்படைச் சமுதாய அலகு - தேசிய அரசாங்கத்தின் பொறுப்பாகும்.[18]

அரசியலமைப்பின் உறுப்புரை 14 (1) இன்படி, சகல பிரசைகளுக்கும் இடம்பெயரவும் அவர்களுடைய வதிவிடங்களைத் தெரிவு செய்யவும் உரிமையுண்டு. இந்த உரிமையானது தேசிய பொருளாதாரத்தின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்படக் கூடியது. உறுப்புரை 15 (7) இல் குறிப்பிட்டுள்ள ஏனைய கட்டுப்பாடுகள் இதற்குப் புற நீங்கலானவை.

---

18 Deng, F., "Comprehensive study on Internally Displaced persons," Report of the Representative of the Secretary General submitted pursuant to Commission on Human Rights Resolution 1992/73, E/CN.4/1993/35.

அவையாவன: தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு அல்லது ஒழுக்கம், அங்கீகாரம் பெறுதல், ஏனையோரது உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் மதிப்பளித்தல், ஒரு சனநாயக சமுதாயத்தில் உள்ளவர்களின் பொதுநலன் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்திசெய்தல். முரண்பாடுகள் சம்பந்தமான இன்றைய நிலைமையில், இடம் பெயர்ந்தோர் தமது நடமாடும் உரிமையைப் பயன்படுத்த முடியாது. மேலும் இடம் பெயர்ந்தோரைக் கட்டாயத்தின் பேரில் மீளக் குடியமர்த்தலும் இந்த உரிமையை மீறுவதாக அமையும்.

5.1 குடும்ப உரிமைகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டமானது சமூகத்தின் அடிப்படை அலகாகக் குடும்பத்தைக் கருதுகின்றது. அதற்குப் பாதுகாப்பும் ஆதரவும் அவசியமானது.[19] மனித உரிமைகள் சட்டம் அந்தரங்கம் பேணும் உரிமையையும் பாதுகாக்கின்றது.[20] இடம் பெயர்தல் இத்தகைய உரிமைகளைப் பல வழிகளில் குறிப்பாகப் பாதித்துள்ளது. பல குடும்பங்களிலுள்ள ஆண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமற் போயுள்ளனர். அதனால் குடும்பத்தை நிருவகிக்கும் பொறுப்பைப் பெண் ஏற்க வேண்டியுள்ளதுடன் பொருளாதாரச் சுமைகளையும் தாங்க வேண்டியுள்ளது.

குடும்ப முரண்பாடுகளை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் குடும்ப வாழ்வின் அந்தரங்கம் பாதிக்கப்பட்டுள்ளது. முகாம்களில் உள்ள வாழ்க்கைத்தரம் முன்னர் அனுபவித்ததிலும் பார்க்கக் குறைந்த தரத்தினது. முகாம் வாழ்க்கை சிறப்பாகப் பெண்களின் அந்தரங்கத்தைப் பேணவில்லை. அவர்களுடைய வாழ்க்கை முறையை வெகுவாகப் பாதித்துள்ளது.

5.2 மீள்குடியமர்தல் பிரமாணங்கள்

ஒருவருடைய சொந்த வாழ்விடத்தில் மீளக்குடியமர்தல் மூன்றாவது குழுவினாலேயே ஒழுங்கு செய்யப்படுகிறது. மூன்றாவது குழுவினால் கவனிக்கப்படும் மீள்குடியமர்தல் நிலைமைகள் வழமைக்குத் திரும்பும் சந்தர்ப்பங்களிலேயே இடம் பெறும். ஆகவே இடம் பெயர்தலை ஊக்குவித்த மூலகாரணங்கள் அகற்றப்பட வேண்டும். இடம் பெயர்ந்த

---

19 Article 16 (3) of UDHR, Article 10 (1) of the ICESCR and Article 23 of the ICCPR

20 Article 12 of the UDHR and Article 17 of the ICCPR

ஆள் சாதகமான பாதுகாப்பான சூழலை அனுபவிப்பதுடன் அவன் அல்லது அவள் பிரச்சினையற்ற அல்லது குழப்பமற்ற விதத்தில் வாழ்க்கையை மீள ஆரம்பிக்க வேண்டும்.

ஐ.சி.சி.ஆர்.பி. இன் உறுப்புரை 12 இல் உள்ள சுதந்திரமான அசைவை விருத்தி செய்யும் சாத்தியக்கூறுகளும் உண்டு. அகதிகள் சட்டத்தின் குற்றமற்றவர் என்ற ஊகத் தத்துவத்தின் படி ஒருவருடைய அடிப்படைச் சுதந்திரம் அல்லது வாழ்க்கை ஆபத்தை எதிர்நோக்கும் பட்சத்தில் அவரை நாட்டுக்குத் திரும்புமாறு கட்டாயப்படுத்த முடியாது. நடமாடும் சுதந்திரம் ஒரு பிரதேசத்தில் வாழும் சகலருக்கும் பொருந்தும். அதே வேளையில் அப்பிரதேசத்தில் அவருடைய வாழ்க்கைக்கு அல்லது அடிப்படை உரிமைக்கு ஆபத்து ஏற்படும் நிலைமையில் அவரை அங்கு திரும்பிச் செல்லுமாறு கட்டாயப்படுத்த முடியாது என்பதற்கும் உத்தரவாதமளிக்கிறது. சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின்படி, தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் அல்லது ஏனையவரது உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாத்தல் என்பதன் அடிப்படையில் இவ்வுரிமை கட்டுப்படுத்தப்படலாம். இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் பலர் மீண்டும் வீடுகளுக்குச் செல்ல விரும்புகின்றனர். வீட்டுச் சூழலிலும் பார்க்க முகாம்களில் நிலைமை குறைவாக இருத்தலே இதற்குக் காரணமாகும். அங்கு காணப்படும் அடிப்படை வசதிகள் குறைவாக இருத்தலும் அப்பிரதேசம் பிரச்சினைக்குட்பட்ட பிரதேசமாக இருப்பதும் காரணமாகும். முகாம் வாழ்க்கையில் பெருமளவிலான மாயைத் தோற்றங்கள் உள்ளன. இதே வேளையில் புறத்தூண்டுதலின்றித் திரும்புதலும் வழமை நிலைக்குத் திரும்புதல் என்றே விளக்கப்படுகின்றது. இலங்கையில் தற்பொழுது அவ்வாறு காணப்படுகின்றதென விபரிக்க முடியாது.

5.3 தொடர்ந்திருக்கும் உரிமை

தொடர்ந்திருக்கும் உரிமையானது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில்[21] ஓர் உரிமையாகக் குறிப்பாக எடுத்துக் காட்டப்படவில்லை. இருப்பினும்

---

21 See Goodwin - Gil, G., "The Right to leave, the Right to Return and the Question of a Right to Remain,"paper prepared for the Colloquium, *The Problems of Refugees in the Light of Contemporary International Law Issues*, organised by the Graduate Institute of International Studies and the UNHCH (Geneva, 26 - 27 May 1994)

இவ்வுரிமையை மனித உரிமைகள் சட்டத்தின் ஏனைய விதிகளிலிருந்து உய்த்துணரமுடியும். இலங்கையில் பெறப்பட்ட அனுபவத்தின் மூலம் தங்கியிருத்தல் பற்றிய உரிமையானது பௌதீக ரீதியாக இருத்தலை மட்டும் கருதவில்லை.அது பௌதீக ரீதியாக விட்டுச்செல்லும் உரிமையையும் அடக்குகிறது. அதே வேளையில் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் விட்டுச்செல்லும் உரிமையையும் ஒருவருடைய நாட்டுக்குள் புகுவதையும் அங்கீகரிக்கிறது. ஒப்புநோக்குமிடத்து விட்டுச்செல்லும் உரிமையும் ஒரு பிரதேசத்தினுள் பிரவேசிக்கும் உரிமையும் அரசாங்கத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. அல்லது ஏனைய சில உள்பொருள் அங்கீகரிக்கப்படக் கூடியது. நகர்வு பற்றிய சுதந்திரத்தில் அடங்கியுள்ள இந்த உட்பொருள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5.4 நிவாரணமும் உதவியும்

அவசரகால புனர்நிர்மாண மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் 1987 இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தில் வீடமைப்பு, போக்குவரத்து, பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், வீதிகள், விவசாயம், விவசாய சேவைகள், விலங்கு வளர்ப்பு மற்றும் ஏனைய துறைகள் அடங்கியுள்ளன. அரசாங்கத்தின் புள்ளி விபரங்களின்படி 1987 ஆடி மாதம் தொடக்கம் 1994 இறுதி வரை மொத்தம் 19.1 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.[22]

இலங்கை அரசு இடம் பெயர்ந்தோருக்குப் பல்வேறு வகையான உதவிகளை வழங்கி வருகிறது.

1. ஒருவருடைய உறவினர் கொல்லப்பட்டால் அல்லது காயமடைந்தால் வழங்கப்படும் நட்டஈட்டுக் கொடுப்பனவுகள்
2. இடம் பெயர்ந்து "முகாம்களில் " வசிப்போருக்கும் உறவினருடன் வசிப்போருக்கும் பங்கீட்டு உணவு.
3. ஒருவர் தமது சொந்த இடத்துக்கு மீண்டும் போக விரும்பினால் அவருக்கு வீடுகட்டும் உதவி உட்பட மீளக்குடியமர்த்தலுக்கான உதவிகள்.

---

22 Ministry Document, Supra n 2, P 24

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் புனர்வாழ்வு, புனர்நிர்மாண மற்றும் நலன்புரிச் சேவைகள் அமைச்சு இடம்பெயர்ந்தோருக்கான உதவிகளை வழங்குவதற்குப் பொறுப்பாக இருந்தது. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இது துறைமுக, கப்பற்படுத்தல், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சின் கீழ் வருகிறது. பல்வேறு அமைச்சுகளுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்குமிடையே இயைபு இல்லாமையினால் இலங்கையில் இடம்பெயர்தல் தொல்லை தருவதாக அமைந்தது. அமைச்சுகளுக்கு இடையேயான செயலணிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளன. இது சிறப்பாக இயங்குமானால் தடைகளை நீக்கியிருக்க முடியும். ஆனால் 1994 இன் இறுதிவரை ஊக்கமுடன் இயங்கவில்லை.

5.5 உணவுக்கான உரிமை

1994 மார்கழி வரை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதிகளுக்கும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதிகளுக்கும் அரசாங்கம் உணவுப் பங்கீட்டை வழங்கி வந்தது. இடம் பெயர்ந்தோருக்கு உரிமையான பங்கீட்டு அட்டைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு தமது சூழலில் உள்ள கூட்டுறவுக் கடைகளில் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம். அரசாங்கத்தின் புள்ளி விபரங்களிலிருந்து, இடம் பெயர்ந்தோருக்கான உணவுப் பங்கீட்டினை வழங்க 1994 இல் 2,133 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.[23]

ஆயினும் 1994 கார்த்திகை மாதத்தில் திருகோணமலை மாவட்டத்தில் உணவுப் பங்கீட்டு அட்டைக்குப் பதிலாக பணம் வழங்கும் முன்னோடிச் செயல் திட்டமொன்றை அரசு ஆரம்பித்தது. இத்திட்டம் வினைத்திறனுடையது எனக் காணப்படுமிடத்து ஏனைய பிரதேசங்களுக்கும் விரிவாக்கப்படும்.

பின்வரும் அடிப்படையிலே உணவுப் பங்கீடு வழங்கப்படுகின்றது.

5 நபர் கொண்ட குடும்பம் ஒரு வாரத்துக்கு 315 ரூபா
4 நபர் கொண்ட குடும்பம் ஒரு வாரத்துக்கு கூடியது 252 ரூபா
3 நபர் கொண்ட குடும்பம் ஒரு வாரத்துக்கு கூடியது 210 ரூபா

---

[23] *Ibid* , P 38

2 நபர் கொண்ட குடும்பம் ஒரு வாரத்துக்கு கூடியது 154 ரூபா
1 நபர் கொண்ட குடும்பம் ஒரு வாரத்துக்கு கூடியது 84 ரூபா

5.6 கல்வி

புதிதாக மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் பணியாற்றுவதற்கு ஆசிரியர்களைத் தேடுவதே கல்வி தொடர்பாக உள்ள பிரதான பிரச்சினையாக இருந்தது. ஆசிரியர்கள் இந்தப் பிரதேசங்களுக்குச் செல்வதற்குப் பணரீதியான ஊக்குவிப்புகள் வழங்கப்படுவதில்லை எனினும் அரசாங்க உத்தியோகத்தர்களினால் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. சில பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு ஒக்ஸ்பாம் (Oxfam) போன்ற அரசுசாரா நிறுவனங்கள் ஆதரவு வழங்குகின்றன. முகாம்களில் உள்ள பிள்ளைகளிலும் பார்க்க, மீளக் குடியமர்த்தப்பட்ட பிள்ளைகளுக்கான கல்வி வாய்ப்புகள் குறைவு. இவர்களுக்கு ஆரம்ப பாடசாலைகளுக்கான வாய்ப்புகளே உண்டு. புத்தளத்திலுள்ள இடம் பெயர்ந்தோரில் பலர் மாலை நேரப் பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது அல்லது அங்கேயுள்ள பாடசாலைகளில் உள்ளவர்களோடு சேர்ந்து நெரிசலுக்குட்பட வேண்டியுள்ளது.

அகதி முகாம்களிலிருந்து வரும் பிள்ளைகள், பொருத்தமற்ற சூழலிலும் பொதுப்பரீட்சைகளுக்குத் தோற்றிச் சித்தியடைகின்றனர். உதாரணமாக, கிளப்பன்பேர்க் முகாமிலிருந்த 9 பிள்ளைகள் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையின் இறுதியில் நடைபெற்ற க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். ஆயினும் பெருந்தொகையினர் சித்தியடையத் தவறியுள்ளனர்.

5.7 வீடு கட்டும் உரிமை

இடம் பெயர்ந்த சகல குடும்பத்தினரும் மீளக் குடியமர்ந்தபோது, தற்காலிகக் குடிசையொன்றை அமைக்க 5,000 ரூபா மானியமாக வழங்கப்பட்டது. இக் குடிசை அமைச்சின் விதிமுறைகளுக்கமைய கொங்கிறீட் நிலத்துடன் கூடியதாக அமைக்கப்பட வேண்டும். பொதுசன முன்னணி அரசாங்கம் பதவியேற்றபின் இத்தொகை 7,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினூடாக (என்.எச்.டி.ஏ.) வீடமைப்பு மானியம் வழங்கப்பட்டு வந்த போதிலும் அது மிக மெதுவாகவே செயல்பட்டது. வினைத்திறனின்மை மற்றும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் பல என்.எச்.டி.ஏ க்கு எதிராகக் கூறப்பட்டன.

புதிய மீளக்குடியமர்த்தல் கொள்கையின் இரண்டாவது கட்டத்தில் ஒரு குடும்பத்தின் வீடு அழிக்கப்பட்டிருந்தால், அதற்கு 25,000 ரூபா மானியமாகக் கிடைக்க வழிசெய்யப்பட்டது.[24] இதற்கு மேலாக ரூபா 25,000 சலுகையடிப்படையிலான வட்டி வீதத்தில் வழங்கப்பட்டது. வீடுகள் சேதமடைந்தவிடத்து, அத்சேதத்தைத் திருத்த ரூபா 25,000 உதவியாக வழங்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டில் 10,604 குடும்பங்கள் 141,662,473 ரூபாவை வீடமைப்பு உதவி மானியமாகப் பெற்றுக் கொண்டன. 1988 இல் இந் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்ததிலிருந்து வீடமைப்பு உதவியாக மொத்தம் 568,876,230 ரூபா செலவு செய்யப்பட்டது. (64,986 குடும்பங்கள்)[25]

5.8 வேலைசெய்யும் உரிமை

தொழில் என்பது தொழிலாளரது சுதந்திர உணர்வையும், தன்னம்பிக்கையையும் தோற்றுவிக்கும் என்பது மட்டுமன்றி அது உளவியல் சார்ந்த பாதிப்புகளையும் ஏற்படுத்தும். வேலையிலும் பாடசாலையிலும் காணப்படும் ஒழுங்கான வரவுகள் வழமை நிலையின் அளவினை எடுத்துக் காட்டுவதுடன் இடம் பெயர்ந்தோரின் வாழ்வுணர்வையும் மேம்படுத்தும். இலங்கையில் காணப்படுவது போன்ற ஒரு தந்தை வழிச் சமூகத்தில், தந்தை பொருள் ஈட்டுபவராகவும் தாய் வீட்டைப் பராமரிப்பவராகவும் விளங்குவர். இவையும் அவர்களுடைய மரபுரீதியான சமூகப் பாத்திரங்களைப் பாதிக்கின்றன.

விவசாயம், மீன்பிடி, விலங்கு வளர்ப்பு, மரவேலை, மேசன் வேலை, வியாபாரம் போன்ற வடக்குக் கிழக்கின் பிரதான தொழில் முயற்சிகள் சீமெந்து, இரும்பு, விவசாய இரசாயனங்கள், வளமாக்கிகள் போன்ற பொருட்களுக்குத் தடைவிதித்தபோது வெகுவாகப் பாதிக்கப்பட்டன. மேலும் கடன்களும் மட்டுப்படுத்தப்பட்டதுடன் தடை நீக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டுமே கிடைத்தன. அரசுசாரா நிறுவனங்களின் கடனுதவித் திட்டங்களும் மட்டுப்படுத்தப்பட்டனவாக இருந்தன. அரசாங்கமானது ஒரு புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு வங்கியை அமைத்து, அதன் மூலம் இடம்பெயர்ந்தோரின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவப் போவதாகவும் அண்மையில் அறிவித்தது.

---

[24] *Ibid*, p 23
[25] *Ibid*

அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்லல் உட்பட ஏனைய கட்டுப்பாடுகளும் தொழிலில் காணப்பட்டன. உதாரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான பகுதியில் விவசாயம் செய்வோர் கடனீரேரிக்கு ஊடாக விவசாய உபகரணங்களையும் உழவியந்திர எரிபொருளையும் கொண்டு செல்லும் போது தடைகளை எதிர்நோக்கினர். ஏறாக்குளம், மைலவெட்டுவான், பெரிலாவெளி போன்ற ஏனைய இடங்களுக்குப் பாதுகாப்புக் காரணங்களால் செல்ல முடியவில்லை. நெல் போன்ற அறுவடை செய்யப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்லவும் தடைகள் இருந்தன. சிறிய உழவியந்திரத்தில் ஆகக் கூடியது 30 நெல் மூடைகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதிபெறவேண்டிய தேவையும் இருந்தது. 1994 இல் இருந்து மீன்பிடித்தலுக்கான தடையும் சில பிரதேசங்களில் நடைமுறையிலிருந்தது.

இடம் பெயர்ந்தோர் பலர் ஏதோ ஒருவகைத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவை ஒழுங்கற்றவையாக அல்லது தற்காலிகமானவையாக இருந்தாலும் ஓரளவு ஊதியத்தைக் கொடுத்தன. ஆண்களிலும் பார்க்கப் பெண்களே பெருமளவில் வேலைகள் செய்தனர் என்பதற்குச் சான்றுகளும் உள்ளன. ஆயினும் இடம் பெயர்ந்தோர் பலர் தமக்கு வேலைவாய்ப்பு வசதிகள் இல்லையெனப் பொதுவாகக் குறை கூறினர். மற்றும் சில உள்ளூர்களில் வாழும் மக்கள் இடம் பெயர்ந்தோர் வேலை தேடி வருவதை விரும்பவில்லை. புத்தளப் பிரதேசத்தில் வாழும் இடம் பெயர்ந்தோர் குறைந்த கூலிக்கு வேலை செய்கின்றனர் என்ற முறைப்பாடும் இருந்ததுடன் அது உள்ளூர் மக்களுடனான தொடர்பைப் பாதித்தது. அரசு சாரா நிறுவனங்கள் பல வருமானந்தரும் தொழில்கள் பலவற்றையும் பயிற்சிச் செயல்திட்டங்களையும் இட ம் பெயர்ந்தோருக்கென ஆரம்பித்தது. நெல் வேளாண்மை, கோழி வளர்ப்பு, தச்சுவேலை போன்றவற்றில் இவர்களை வேலைக்கு அமர்த்துவதே அவர்களுடைய நோக்கமாக இருந்தது.

பிரான்சிஸ் டெங் தனது இலங்கையைப் பற்றிய அறிக்கையில், நாட்டிலுள்ள வளங்கள் வரையறுக்கப்பட்டவை: அரசாங்க நிகழ்ச்சித் திட்டங்களில் வருமானம் தரும் நடவடிக்கை மற்றும் வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார். டெங்கினுடைய சிபார்சுகளின் விளைவாக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் அரச அனுசரணையுடன் கூடிய நிகழ்ச்சித்

திட்டங்கள் உருவாகின.[26] அநேகமான வேலைவாய்ப்புத் திட்டங்கள் அரசுசாரா நிறுவனங்களாலேயே ஆரம்பிக்கப்பட்டன. அரசாங்கத்தின் நேரடித் தலையீடு உற்பத்தி முயற்சிக்கான உதவி என்பதில் மட்டும் காணப்பட்டதுடன் சில சமயங்களில் தவணையடிப்படையிலும் கொடுக்கப்பட்டது. சர்வதேச அபிவிருத்தி முகவரகத்தின் கீழ் (ஐ.டி.ஏ) பொருளாதார நடவாடிக்கைகளுக்கான கடன் வழங்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 176 பேருக்கு 50,849,000 ரூபா இத்திட்டத்தின் கீழ் கடனாகக் கொடுக்கப்பட்டது.[27] வேறு சில கடன்களும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ஏ.டி.பி.) யினால் விவசாயத் தொழிற்திட்டங்களுக்கு வழங்கப்பட்டன. 1994 இல் 79,321 குடும்பங்களுக்கு உற்பத்தி முயற்சிக்கான உதவியாக இத் திட்டத்தினால் 315,565,000 ரூபா வழங்கப்பட்டது. 1988-1993 வரையில் இத் திட்டத்தின் கீழ் 145,770,727 ரூபாவை 330,944 குடும்பங்கள் பெற்றுக்கொண்டன.[28] இராணுவத்தின் கட்டாயத்தின் பேரில் வேலை செய்தோர் தொகை 1994 இல் குறைந்திருந்தது.

5.9 சுகாதார உரிமை

சுகாதார வாய்ப்புகள் முகாம்களிடையே வேறுபட்டுக் காணப்பட்டன. முகாம்களில் சுகநல வசதிகள் கிடைக்கவில்லையெனினும் அங்கு வசித்தோர் சுற்றுப்புறத்தில் கிடைக்கும் வசதிகளைப் பெற்றுக் கொண்டனர். நடமாடும் சிகிச்சை சில முகாம்களுக்குக் கிடைத்தது. பல அரசுசாரா நிறுவனங்கள் இடம் பெயர்ந்தோருக்குரிய சுகநல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தின. தடைநீக்கப்படாத பகுதிகளில் இயங்கிய சுகநலச் சேவையின் தரம் தடைநீக்கப்பட்ட பகுதிகளில் காணப்பட்டவற்றிலும் பார்க்கத் தரம் குறைந்ததாக இருந்தது.

அரசுசாரா நிறுவனத்தின் சுகநலத் திட்டம் ஒன்று "கிழக்குக்கான மனித மற்றும் பொருளாதார அபிவிருத்தி (ஈ.எச்.ஈ.டி) என்ற பெயரில்

---

26 See also the comments made by United Nations officials to the Special Representative, that although income generation remained high on the agenda of the state, its scale was limited, Deng, F., "Human Rights, Mass Exoduses and Displaced Persons," Report of the Representative of the Secretary General submitted persuant to Commission on Human Rights Resolution 1993/ 95 and 1994/ 68, E/CN.4/1995/50 (2 February 1995) para 53.

27 Ministry Document Supra n 2 p 49

28 *Ibid*, p 44

தேவாலயத்தைச் சேர்ந்த அரசுசாரா நிறுவனத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் நடத்தப்பட்டது. இச் செயற்றிட்டம் தவணை மருத்துவப் பயிற்சியை 44 பெண்களுக்கு வழங்கியது. இவர்கள் ஆரம்ப சுகாதார வசதிகளையும் சுகநல ஆலோசனைகளையும், அச்சேவை கிடைக்காத பகுதிகளுக்கு வழங்கி வந்தனர். 1994 ஈ.எவ்.எச்.டி. தனது செயல்திட்டத்தை மேலும் 32 பகுதிகளுக்கு விரிவாக்கத் திட்டமிட்டதுடன் துணை மருத்துவர்கள் இடம் பெயர்ந்தோரை மட்டுமன்றி ஏனைய பொதுமக்களையும் கவனித்து வந்தது. வரையறைக்குட்படாத மருத்துவர்கள் (MSF) கிழக்கில் பல வருடங்களாக இயங்கி வந்த போதிலும் 1994 சித்திரை மாதத்தில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். இடம் பெயர்ந்தோருக்கான சுகநல சேவையை வழங்குவதில் செஞ்சிலுவைச் சங்கமும் ஈடுபட்டு வருகிறது.

5.10 கிழக்கு

கிழக்கிலுள்ள நகரப் பிரதேசங்களில் ஆயுதப்படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் பொது மக்களுடன் தொடர்புகளைப் பேணுவதிலும் சிறப்பாக இயங்கினார்கள் எனக் கருதப்படுகின்றது. சுற்றி வளைத்து மேற்கொள்ளப்படும் தேடுதல் நடவடிக்கைகள் சிறியளவிலேயே இடம்பெற்றன. காணாமற் போனோர் தொகை குறைவு. ஆயினும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு உதவிவரும் தமிழ் குழுக்களின் துன்புறுத்தல்கள் (வற்புறுத்திப் பணம் பறித்தல் உட்பட) தொடர்ந்தும் இடம்பெற்றன.

5.11 கொழும்பு

1993 ஆனி மாதம் வரை கொழும்பு நகரத்தில் 6 முகாம்கள் இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டன. ஆயினும் 1993 சித்திரை தொடக்கத்தில், அரசு இம்முகாம்களை மூட ஆரம்பித்தது. சனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலியையும் சனாதிபதி பிரேமதாசவையும் விடுதலைப்புலிகள் கொலை செய்தார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்ட பின்னர் முகாம்களை மூடிவிடும் செயல் முறைகள் துரிதப்படுத்தப்பட்டன. 1994 தை மாதத்தில் இம் முகாம்களில் இரண்டு மட்டுமே கொழும்பில் இருந்தன. அவையும் 1994 வைகாசி மாதத்தில் மூடப்பட்டுவிட்டன. முஸ்லிம்கள் வாழும்

இரண்டு முகாம்கள் மட்டும் கொழும்பில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

கொழும்பு முகாம்களில் வாழ்ந்த இடம் பெயர்ந்த தமிழர் பல கிழக்குக்கும் சிலர் வவுனியாவுக்கும் மீண்டும் அனுப்பப்பட்டனர். கொழும்பு முகாம்களில் இருந்த சில முஸ்லிம்கள் பாணந்துறையில் மீளக்குடியமர்ந்தனர்.

5.12 இடம்பெயர்ந்தோரும் அரசியலில் பங்குபற்றும் உரிமையும்

உள்ளூர் மற்றும் பொதுத்தேர்தல்கள் 1994 இல் இடம்பெற்றன. ஆவணி மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலும் கார்த்திகை மாதம் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலிலும் இடம் பெயர்ந்த ஒருவர் தான் வசிக்கும் இடத்திலிருந்து கொண்டு தனது சொந்த மாவட்டத்திலுள்ள வேட்பாளருக்கு வாக்களிக்கலாம் எனத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. உதாரணமாக, யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் தாம் தற்பொழுது வாழும் இடத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள வேட்பாளருக்கு வாக்களிக்கலாம். இடம் பெயர்ந்தோர் பொதுத்தேர்தல்களில் பங்குபற்ற வேண்டும் என்பது பற்றிய விடயம் அத்தியாயம் 2 இல் உள்ள அரசியலில் பங்குபற்றும் உரிமை என்னும் விடயத்தில் நன்கு ஆராயப்பட்டுள்ளது.

5.13 மடு பொதுப் புனர்வாழ்வு மையம்

யு.என்.எச்.சி.ஆர் மடுவில் தனது நடவடிக்கைகளை மீண்டும் 1991 புரட்டாதி அளவில் ஆரம்பித்தது. மக்கள் காட்டிய பல எதிர்ப்புகளைத் தொடர்ந்தும் யு.என்.எச்.சி.ஆர் இன் வாகனமொன்று 1993 கார்த்திகையில் சேதப்படுத்தப்பட்டமையால் இவர்களது நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தன.[29]

மடுவிலும் மன்னார்த் தீவிலும் செயல்பட்ட மடு பொதுப் புனர்வாழ்வு மையம் (ஓ.ஆர்.சி.) 1991 புரட்டாதி மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இது யு.என்.எச்.சி.ஆர் இன் பொறுப்புகளில் ஒரு பகுதியைக் கவனித்து வந்தது. இது முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டோருக்குப் புகலிடம் வழங்கியதுடன், இதன் விளைவாக இந்தியா செல்ல விரும்பியவர்களுக்கும்

---

[29] See *Sri Lanka: State of Human Rights 1993* (Law & society Trust, Colombo, 1994) pp 270-273

உதவி நல்கியது.[30] ஓ.ஆர்.சி. இன் நடுநிலைமையை அரசும் விடுதலைப்புலிகளும் பெருமளவில் மதித்தன. ஆயினும் இந்நடுநிலை மீறப்பட்ட பல சந்தர்ப்பங்களும் உண்டு. ஓ.ஆர்.சி. இன் அயற்பிரதேசங்களில் பிரச்சினைகள் அதிகரித்தபோது இங்கு வந்தோர் தொகை துரிதமாக அதிகரித்தது. யு.என்.எச்.சி.ஆர். இன் தகவல்களின்படி, மடு ஓ.ஆர்.சி இல் நிலவிய பதட்டநிலை 1994 இல் குறிப்பிடத்தக்களவில் குறைந்தது. மடு முகாமில் ஏறக்குறைய 5,000 பேர் வரையில் இருக்கிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் இதற்கு மேலாக வந்து போகும் தொகையினரும் உள்ளனர். சுற்றுப்புறங்களில் வசிப்போரும் பிரச்சினைகள் அதிகமாகும் போது பங்கீட்டைப் பெறவும் புகலிடமாகவும் ஓ.ஆர்.சி.யினைப் பயன்படுத்துகின்றனர்.

5.14 சுதந்திரமான நடமாடலும் பொருட்களும்

கிழக்கின் சில பகுதிகளில் மூதூர் போன்ற இடங்களில் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சில வகைப் பொருட்களை எடுத்துச் செல்லலும் தடைசெய்யப்பட்டுள்ளது. மூதூரிலிருந்து திருகோணமலைக்குப் பயணஞ்செய்தல் இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்துடன் மட்டுமே மேற்கொள்ளப்படலாம். இராணுவ தடைமுகாம்களும் அடிக்கடி இடம் பெயர்தலைத் தடைசெய்கின்றது.

வடக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளிலிருந்து தெற்கிற்கு வருவதற்கு 1994 ஆண்டு முழுவதிலும் கடினமாக இருந்தது. விடுதலைப் புலிகள் வடக்கிலிருந்து மேற்கொள்ளப்படும் பயணங்களைக் கட்டுப்படுத்தினர். ஆயினும் அங்கிருந்து பயணஞ்செய்தோர் தொகை 1994 வைகாசி மாதத்தின் பின்னர் அதிகரிக்கத் தொடங்கியது.[31] இப் பிரதேசத்தை விட்டகல்வதற்கு விடுதலைப் புலிகளின் அனுமதி அவசியமானதாக இருந்ததுடன் ஓர் ஆண் உறவினர் பிணையாக இருக்க வேண்டிய நிலையும் சில சமயங்களில் ஏற்பட்டது.

---

[30] See Clarence, W.D., "Open Relief Centres: A Pragmatic Approach to Emergency, Relief and Monitoring During Conflict in a Country of Origin," *International Journal of Refugee Law* 3 (1991) p 322

[31] Deng's 1995 Report, supra n 26

5.15 பெண்கள் மீது இடம்பெயர்தல் ஏற்படுத்திய பாதிப்பு

இந்த முரண்பாடுகளால் அநேகம் பாதிப்புக்குட்பட்டவர்கள் பெண்களே. – ஒழுக்கரீதியாக, உடல்ரீதியாக, பணரீதியாக – சிலர் தமது கணவன்மாரை மட்டுமன்றி வளர்ந்த மகன்மாரையும் இழந்தனர். பெண்களில் பலர் அதிர்ச்சியுற்றனர். அவர்களுடைய கணவன் இறந்துவிட்டாரா அல்லது உயிர் வாழ்கின்றாரா என்பதை உறுதிப்படுத்துவதிலேயே இவை நடைபெற்றன. 1985 தொடக்கம் சிலர் முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் வாழ்ந்தனர்.[32]

குடும்பவாழ்க்கையைப் பராமரிக்கும் பொறுப்பு பெரும்பாலும் பெண்களைச் சார்ந்தது. விசேடமாகக் கணவனை இழந்தோருக்கு இந்நிலையேற்பட்டது. வழக்கமான குடும்ப அமைப்பு வழங்கிய சிறிதளவு உறுதிப்பாடு கூடச் சீர்குலைந்தது.[33] கணவன்மார் காணாமல் போதல் சில பெண்களுடைய மறுமணம் புரியும் இயல்பையும் பாதித்தது.[34]

குடும்பத்துக்கு உதவியாக இருந்த கணவன் அல்லது மகனை இழந்த பெண்களுக்கு அரசு நட்டஈடு கொடுகின்றது. கணவனை இழந்த பெண்களுக்கு 50,000 ரூபாவும், மகனை இழந்தோருக்கு 25,000 ரூபாவும் வழங்கப்பட்டது. ஆயினும், இதற்கு விண்ணப்பிக்கும் முறை மிகச்சிக்கலானதாகக் காணப்பட்டதினால் பெண்களில் கணிசமான தொகையினர் இதற்கு விண்ணப்பிக்கவில்லை.[35] உள்ளூர் மாவட்ட உத்தியோகத்தர், பொலிஸ், இராணுவம் ஆகியோரிடமிருந்து கடிதம் பெற்றாலே ஒரு விதவையால் நட்டஈட்டு விண்ணப்பப் படிவத்தைப் பெறமுடியும். அதன்பின்னரும் பெருந்தொகையான விண்ணப்பதாரிகள் நட்டஈட்டைப் பெற முடியவில்லை. சில விடயங்களைப் பொறுத்தமட்டில் நட்டஈடு கிடைக்க ஒரு வருடத்துக்கு மேலும் எடுக்கலாம். பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1994 கார்த்திகை மாதத்தில் விதவைகளுக்கு

---

32 Robinson C., *Sri Lanka: Island of Refugees* US Commitee of Refugees, Washington D.C., 1991) p 12. (Hereinafter, USCR Report)

33 See also Coomaraswamy, R., "Preliminary Report submitted by the special Rapporteur on violence against women, its causes and consequences," E/Cn.4/1995/42 (22 November 1994) para 295

34 Deng, Supra n 9, Para 64

35 US Committee for Refugees Report collaborated by interniews with NGO representatives

நட்டஈடு வழங்குவதற்கு உதவும் முகமாகப் புதிய சட்டமொன்றை அறிமுகம் செய்தது. இறப்புப் பதிவில் சட்டத்தின் இரண்டாம் பிரிவு (தற்காலிக ஏற்பாடு) ஒருவர் காணாமற் போய் ஒரு வருடத்தின் பின்னர் உறவினர் ஒருவர் மரண அத்தாட்சிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்கலாம் எனக் கூறுகிறது. முன்னையதன்படி உறவினர் ஒருவர் மரண அத்தாட்சிப் பத்திரம் பெற, ஒருவர் காணமற்போய் ஐந்து வருடம் முடிந்திருக்க வேண்டும்.

இடம் பெயர்ந்த பெண்கள் மத்தியில் அவர்களது சுதந்திர உணர்வைப் பேணுதலை இலக்காகக் கொண்ட செயற் திட்டங்கள் பெண்கள் குழுக்களால் தொடங்கப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தில் 1985 இல் ஆரம்பித்து வைக்கப்பட்ட பெண்கள் நிறுவனம் உடைகள் பங்கீட்டுப்பொருள் மற்றும் ஏனைய வகை நிவாரணங்களை வழங்குதல் என்பவற்றோடு தற்பொழுது வருமானம் பெறக் கூடிய செயல்திட்டங்களிலும் கவனம் செலுத்துகின்றது. இந்த நிறுவனமும் கணவனை இழந்த பெண்கள் நட்டஈடு பெற உதவுகிறது. சில அரசசாரா நிறுவனங்களும் விதவைகளுக்கு நிதிஉதவி செய்கின்றன. சில அரசசாரா நிறுவனங்கள் பெண்களை வீட்டுத்தலைவராகக் கொண்டவர்களுக்கு சுயவேலைவாய்ப்புச் செயல்திட்டங்கள் மூலம் உதவுகிறது.

6. முடிவுரை

ஐ.நா. பொதுச்செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி பிரான்சிஸ் டெங் (Francis Deng) தனது இலங்கை பற்றிய அறிக்கையில் உள்ளூரில் இடம் பெயர்ந்தோரைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> *மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்னுங்கருத்தில், இலங்கையில் கூட இடம் பெயர்ந்தோர் ஏனைய மக்களிலும் பார்க்கக் குறிப்பிட்ட வழிகளில் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். அவர்கள் கட்டாயத்தின் பேரில் மீளக் குடியமர்ந்திருக்கலாம். அடிக்கடி சுற்றி வளைப்புக்கு உட்படுதல்; எழுந்தமானமான முறையில் தடுத்து வைக்கப்படுதல் அல்லது கைது செய்யப்படல், உலர் உணவு கிடைக்காமை, அல்லது அடிக்கடி தொழில் கிடைக்காமை, ஆகிய பல பாதிப்புகள் உள்ளன. இடம் பெயர்ந்தவர்கள் பெரும்பாலும் தன்னம்பிக்கையுடையோராயும் இனங்காணப்பட்டுள்ளனர்.*

முரண்பாடுகளினால் ஏற்பட்ட அழிவுகளைப் பொறுத்தும் நிலைமைக்குத் தக்கபடி வாழ்கின்றனர்.[36]

இடம் பெயர்ந்தோர் தொடர்ந்தும் பாதிப்புக்கு உள்ளாகினர். 1994 ஆம் ஆண்டு முழுவதிலும் தனிமைப்படுத்தப்பட்ட குழுவினராகவும் விளங்கினர். தொடர்ந்தும் கட்டாயமாகக் குடியேற்றப்பட்டார்கள். வேண்டிய நேரத்தில் மீளக் குடியமர அனுமதி வழங்கப்படவில்லை. நடமாடவும், பொருட்களை எடுத்து செல்லவும் கட்டுப்பாடுகள். அவர்களுடைய கல்வி வாய்ப்புகள், சுகாதார வசதிகள் மற்றும் தொழில் என்பன ஏனைய மக்களிலும் பார்க்கக் குறைவாகவே இருந்தன. பரந்தளவிலான தீர்மானங்களை மேற்கொள்ளலில் அவர்களுடைய பங்குபற்றல் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. இவற்றிக்கும் மேலாக, அவர்கள் தமது உயிருக்கும் சுதந்திரத்துக்கும், பெரும் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்தார்கள். இடம் பெயர்ந்த பெண்களும் குழந்தைகளும் பாதிக்கப்பட்டனர். பெண்கள் பலர் மேலதிகப் பொறுப்புகளை ஏற்குமாறு உடனடியாகப் பணிக்கப்பட்டார்கள். இவர்கள் கலவரங்களாலும், சுரண்டல்களாலும் பெரிதும் பாதிப்படைந்தனர்.

டெங் தனது முடிவுரையில்

> *"முரண்பாடுகளுக்கு ஓர் அரசியல் தீர்வு வந்தாலன்றி இம் முரண்பாடுகள் நீங்கும் என்பதோ உள்ளூர் இடம் பெயர்தல் பிரச்சினை தீரும் என்பதோ நம்பிக்கை தருவதாக இல்லை. முரண்பாடுகளில் அங்கம் வகிக்கும் கட்சிகள், இலங்கையின் மக்கள் நலனை இடருக்குள்ளாக்கக் கூடிய யுத்தத்தினைத் தொடரக்கூடிய தமது நோக்கத்தினைக் கவனமாக எண்ணிப் பார்க்கும் நேரமிது"* [37]

1994 இல் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்தால் (அது நீண்டதும் சிக்கல் வாய்ந்ததுமாகும்) இடம் பெயர்தல் தொடர்பான விவகாரங்கள் தோன்றும். இந்தியாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடம் பெயர்ந்தோர் இலங்கைக்கு வருதல் அதிகரிக்கக் கூடும்.

---

[36] Deng, supra n 9, para 135

[37] *Ibid,* para 146

7. பரிந்துரைகள்

இடம் பெயர்ந்தோர் சம்பந்தமான கொள்கையும் செயற்பாடும், சமத்துவக் கோட்பாடு, பாகுபாடின்மை, பங்கு பற்றல், மனித கௌரவம், மற்றும் கூட்டுறவு என்பவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். அது தூய்மையானதாகவும் நன்கு இயைபுபடுத்தப்பட்டதாகவும் உண்மைத் தன்மையினதாகவும் இருத்தல் வேண்டும். இடம் பெயர்ந்தோரிடமிருந்து கருத்துக்களைப் பெறுவதில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். இடம் பெயர்ந்தோர் குழுக்களுடனும் அரசு சாரா நிறுவனங்களுடனும் பணிகளில் ஈடுபடும் போது அவர்கள் கருத்தையும் அறிதல் வேண்டும். மீளக் குடியமர்த்தல் தற்காலிகமானது என்பதையும் மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசம் வாழ்க்கைக்கு உகந்தது என்பதையும் அரசு உறுதிசெய்ய வேண்டும். போதியளவு அடிப்படை வசதிகள் மற்றும் வருமானம் பெறும் வாய்ப்புகள் என்பவற்றையும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இடம் பெயர்ந்தோரை மீளத் திரும்பும்படி வற்புறுத்தக் கூடாது. அவர்கள் திரும்பிச்செல்ல விரும்புமிடத்து அதனைத் தீர்மானிக்கப் போதிய தகவல்கள் வழங்கப்பட வேண்டும். சுகநலம், ஆரோக்கியம், கல்வி, தொழில், வருமானம் பெறும் வழி, வீடமைப்பு, வழிகாட்டல், சமுதாயங்களுக்கிடையேயான உறவு என்பவற்றில் குறிப்பான கவனம் தேவை. வீட்டுத் தலைவியாக இருக்கும் பெண்களின் தேவைகளுக்கு விசேட அவதானம் கொடுக்க வேண்டும். கொள்கையாக்கம் மற்றும் முகாம்களை நடாத்துதல் ஆகியவற்றில் பெண்களின் பங்கு பற்றல் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

14

அகதிகளும் திருப்பியனுப்புதலும்

1. அறிமுகம்

இனப்பிரச்சினையினால் மக்கள் உள்நாட்டிலும், வெளிநோக்கியும் இடம் பெயர்ந்தனர். வெளிநோக்கி இடம் பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையோர் இந்தியாவில் தமிழ் நாட்டுக்கும், ஏனையோர் மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவுக்கும் சென்று புகலிடம் பெற்றனர்.

1991 இல் அகதிகளுக்கான (யு.எஸ்.சி.ஆர்) யு.எஸ் குழுவின் மதிப்பீட்டின் படி 210,000 இலங்கையர் தமிழ் நாட்டில் அகதிகளாகக் காணப்பட்டனர்.[1] 1987 இல் இருந்து 1990 வரை யு.என்.எச்.சி.ஆர் ஏறக்குறைய 43,000 அகதிகளை இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்புவதில் உதவி புரிந்தது. ஆனால் 1990 ஆனியில் மீண்டும் ஏற்பட்ட வன்முறைகளின் காரணமாக நிகழ்ச்சித் திட்டம் இடை நிறுத்தப்பட்டதுடன் அனுப்பப் பட்டவர்களில் பெரும்பாலானோர் இந்தியாவுக்கே மீண்டும் திரும்பியிருந்தனர்.

1993 இல், ஏறக்குறைய ஒரு வருடத்தின் பின் தமிழ் நாட்டிலிருந்து இலங்கை அகதிகளைத் திருப்பியனுப்பும் பணி மீளத் தொடங்கப்பட்டது. இவ்வகதிகளில் பெரும்பாலானோர் 1990 இல் இருந்து தமிழ் நாட்டில் தங்கியிருந்தனர். உண்மையில் திருப்பியனுப்புவதற்கு முன் இந்திய அரசாங்கம் அகதிகளைத் திரும்பச் செய்வதற்குத் தூண்டும் வகையில் பல தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்தது.

---

1 Robinson, C., *Sri Lanka : Island of Refugees* (USCR, 1991) washington D.C., 1991) p 2

இந்திய அரசாங்கத்தினால் யு.என்.எச்.சி.ஆர். இடம் கொடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி தமிழ் நாட்டில் வாழ்ந்த இலங்கை அகதிகள் 106,400 பேரில் 76,000 பேர் முகாம்களிலும் 30,000 பேர் முகாமுக்கு வெளியிலும் காணப்பட்டனர்."ஏனைய மூலாதாரங்களை" மேற்கோள் காட்டி வெளியிடப்பட்ட யு.எஸ்.சி.ஆர் தகவலின்படி முகாம்களுக்கு வெளியில் வாழ்ந்தோர் 98,000 பேருக்கு மேல் இருந்தனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.[2]

1993 இல் மேற் கொள்ளப்பட்ட திருப்பியனுப்புதல் செய்முறைகளின் தன் விருப்பான போக்குப் பற்றி 'ஆசியா வாட்ச்' உட்படப் பல குழுக்கள் கேள்வி எழுப்பின. அகதிகள் தன்னிச்சையாகத் திரும்புவதற்கான சூழலை ஏற்படுத்தும் வரை திருப்பியனுப்புதலைத் தள்ளி வைக்குமாறு இந்திய, இலங்கை அரசாங்கங்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. சென்னையில் இந்நிறுவனம் அகதிகளுடன் மேற்கொண்ட நேர்காணலில் இச் செயற்பாடு தன்விருப்பற்றது எனக் கூறியிருந்தது. இச் செயற்பாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட பங்கினையே கொண்டிருந்த யு.என்.எச்.சி.ஆர் அகதிகள் தமது சொந்த விருப்பின் பேரிலேயே திரும்ப வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது. திருப்பியனுப்புதல் தன் விருப்பாக இருக்க வேண்டும் என்ற கருத்தையே யு.எஸ்.சி.ஆரும் கொண்டிருந்தது.[3]

1993 புரட்டாதி மாதம் நடுப்பகுதியில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 4,972 நாடு திரும்பியோரில் 1,626 பேர் தமது வீடுகளுக்குத் திரும்பியிருந்தனர் என யு.எஸ்.சி.ஆர் தெரிவித்தது. வேறு 2,971 பேர் வவுனியாவிலுள்ள ஆசிக்குளம், வேப்பங்குளம் தற்காலிக முகாம்களுக்குச் சென்று தங்கியிருந்தனர். இந்தத் தற்காலிக முகாம்களில் (ஆசிக்குளமும் செட்டிகுளமும்) காணப்பட்ட நிலைமைகள் இந்தியாவில் இருந்ததிலும் பார்க்கச் சிறந்தாக இருந்தமையை யு.எஸ்.சி.ஆர் அவதானித்ததுடன் இந்நிலைமையே அகதிகளை நாடு திரும்பத் தூண்டியதல்லாமல் தமது வீடுகளுக்குச் செல்ல வேண்டுமென்ற விருப்பம் அன்று.

---

2 USCR, *People want peace : Repatriation and Reintegration in War - Torn Sri Lanka* (Washington D.C., 1994) p 22

3 See *Sri Lanka: State of Human Rights 1993* (Law & Society Trust, Colombo, 1994)

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களை விட மேலும் ஆயிரக்கணக்கானோர் ஐரோப்பாவுக்கு அகதிகளாகச் சென்றனர். 1994 இல் புகலிட அந்தஸ்துக் கிடைக்காத இலங்கையரைச் சுவிஸ் அரசாங்கம் திருப்பி அனுப்ப ஆரம்பித்தது.

2. 1994 இல் திருப்பியனுப்புதல்

1994 இல் இந்தியாவிலிருந்து திருப்பியனுப்புதல் தொடர்ந்தது. 1994 இல் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு மொத்தமாக 8,147 பேர் (2,642 குடும்பங்கள்) திரும்பியிருந்தனர்.[4]

1993 இல் 6,927 அகதிகள் திருப்பியனுப்பப்பட்டிருந்தனர். 1995 மாசி 17ஆம் திகதிக்கும் பங்குனி 21 ஆம் திகதிக்குமிடையில் மேலும் 10,122 பேர் திருப்பியனுப்பப்பட்டனர். 5,468 பேர் மன்னார் தீவைச் சேர்ந்தவர்கள். 1992 தை மாதத்திலிருந்து இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 54,200 ஆகும். மேலும் 56,086 பேர் தமிழ் நாட்டில் 123 முகாம்களில் இருக்கின்றனர்.[5]

1994 இல் திருப்பியனுப்புதல் நடவடிக்கை இரு கட்டங்களாகச் செயற்படுத்தப்பட்டது. முதலாவது தை 28 – மாசி 19க்கு இடையில் 3,575 பேர்கள் தலைமன்னாருக்குத் திரும்பினர். இரண்டாவது புரட்டாதி 20 – 30 க்கு இடையில் 4,572 பேர் திருகோணமலைக்குத் திரும்பியிருந்தனர். ஐப்பசி மாதத்தின் ஆரம்ப காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட கொள்ளை நோயின் தாக்கத்தினால் 700 பேரை ஏற்றி வர இருந்த ஐந்தாவது கப்பல் பயணம் இரத்துச் செய்யப்பட்டது. 2,500 அகதிகளைத் தலைமன்னாருக்குக் கொண்டு வர இருந்த இன்னுமொரு கப்பல் தொழில் நுட்பப் பிரச்சினையினால் பிரயாணத்தைத் தொடங்கவில்லை.

இந்திய அரசாங்கம் திருப்பியனுப்புதல் நிகழ்ச்சித் திட்டத்துக்கான சர்வதேச உதவிகளை ஏற்றுக் கொள்வதில் உறுதியாக மறுத்து வந்தது. திருப்பியனுப்புதல் நடவடிக்கைகளின் சர்வதேசக் கண்காணிப்பை அனுமதிப்பதற்கு இந்திய அரசாங்கம் மறுத்து வந்தது. திரும்பிச் செல்ல

---

4 UNHCR information sheet, 18 November 1994

5 UNHCR source

விரும்பியவர்களிடம் அவர்களது பயணத்துக்கு முன்னர் அவர்களுடன் நேர்காணலை மேற்கொள்ள யு.என்.எச்.சி.ஆருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

திரும்பிச் சென்றவர்கள் பெரும்பாலும் அரசாங்க மற்றும் எல்.ரி.ரி.ஈ கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்தே வந்திருந்தனர். யு.என்.எச்.சி.ஆர் இவ் அகதிகளை எல்.ரி.ரி.ஈ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லவும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. திரும்பி வரும் அகதிகள் முதலில் வட கிழக்கிலுள்ள தற்காலிக முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். "தடை நீக்கப்பட்ட" பகுதிகளிலிருந்து வந்தோர் (அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி) அங்கு அனுப்பப்பட்டனர். "தடை நீக்கப்படாத" பகுதியில் இருந்து (எல்.ரி.ரி.ஈ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம்) வந்தோர் தற்காலிக முகாம்களிலேயே தங்கியிருந்தனர். தடை நீக்கப்படாத பகுதிகளுக்குத் தன் விருப்பின் பேரில் செல்ல விரும்புபவர்களைத் திரும்பிச் செல்ல அனுமதித்தனர்.

யு.என்.எச்.சி.ஆர் புள்ளி விபரத்தின்படி 1994 இல் திரும்பி வந்த 52.5 வீதமானோர் அவ்வருட முடிவிற்குள் தற்காலிக முகாம்களை விட்டுச் சென்றிருந்தனர்.[6] தமது சொந்தப் பகுதிகளுக்கு அவர்கள் திரும்பியிருந்தனர். புரட்டாதி மாதத்தில் திருப்பியனுப்பப்பட்டவர்களில் அநேகமானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாகையால் அங்கேயே திரும்பிச் சென்றனர்.[7] 1994 புரட்டாதி மாதத்தில் மூன்று கப்பல் பயணத்தின் போது 1,058, 1,152, 1,189 அகதிகள் திருகோணமலைத் துறை முகத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் அலஸ் பூங்கா தற்காலிக முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். திருகோணமலை நகருக்கு வெளியில் அமைந்திருக்கும் இம் முகாம் யு.என்.எச்.சி.ஆரினால் இயக்கப்படுகின்றது.

3. தன் விருப்புத் தன்மை

தமிழ் நாட்டிலுள்ள முகாம்களுக்கு விஜயம் செய்த இந்திய அதிகாரிகள் திரும்பிச் செல்ல விரும்பும் குடியிருப்பாளர்களைத் தேடினர். இலங்கையை அவர்கள் அடைந்தபின் பெறவிருக்கின்ற உதவிகளின் விபரங்களைப்

---

6 UNHCR information sheet, 18 November 1994

7 UNHCR source

பற்றிய யு.என்.எச்.சி.ஆரின் துண்டுப் பிரசுரத்தை (தமிழிலும் ஆங்கிலத்திலும்) அவர்கள் அகதிகளுக்கு விநியோகித்தனர். தன் விருப்பின் பேரில் நாடு திரும்ப விரும்பிய அகதிகள் தமிழ் நாட்டில் தற்காலிக முகாம்களில் இருந்த போது அவர்களை நேர்காண யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

திருப்பிச் செல்லல் நடவடிக்கையானது முற்றுமுழுதாக ஒரு தன் விருப்பான செயல் என்ற முடிவான தீர்மானத்துக்கு வருதல் மிகவும் கடினமானது. அங்கிருந்து செல்வதற்கான "உந்து விசை"யை ஏற்படுத்துவதற்கு அகதிகள் மீது அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மாறாக, திருப்பியனுப்பப்படுபவர்களில் அநேகர் திரும்பிச் செல்வதையே விரும்பியதாகத் தெரிந்தது.

யு.என்.எச்.சி.ஆர். இன் கொழும்பிலிருந்த சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி 1995 மாசி - பங்குனியில் திருப்பியனுப்புதல் தொடர்பான நடவடிக்கைகளைக் காண்காணித்தார். திரும்பி வந்தவர்களில் எல்லாரையும் அவர்கள் அனுப்பப்படுவதற்கு முன்பு நேர்காணல் செய்தது. 10,000 க்கு மேற்பட்டவர்கள் திரும்புவதற்கான பட்டியலில் சேர்க்கப்பட்டதுடன் 176 பேர் (1.7%) விலக்கப்பட்டனர். திரும்பி வருவதற்கு விரும்பாதவர்கள் கடன் மீள் செலுத்தல், முதிர்ச்சி, நிரந்தரவைப்பு, பிள்ளைகளின் கல்வி போன்றவற்றால் திரும்பி வர விரும்பாத காரணங்களைக் குறிப்பிட்டதாக யு.என்.எச்.சி.ஆர் தெரிவித்திருந்திருந்தது. உதாரணமாக, நாட்டை விட்டு நீங்குவதற்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதென்று கருதப்பட்ட 32 பேர் திருப்பியனுப்புதல் நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்டதுடன் ஏனைய முகாம்களுக்கு மாற்றப்பட்டதுடன் அவ்விடயம் தொடர்பாக இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது.

1994 புரட்டாதி மாதத்தில் திரும்பியிருந்தவர்களில் 98 வீதமானோர் இலங்கையில் இருந்த அவர்களின் நண்பர்கள், உறவினர்களிடமிருந்து திரும்பி வருமாறு கோரிய தகவல்களைப் பெற்றிருந்தனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டது. "நாடு திரும்பியவர்கள் எந்தப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பிரச்சினைகளையும் எதிர் நோக்கவில்லை"[8] "மக்கள் திருப்பியனுப்பப்படுவதையே எதிர்பார்க்கிறார்கள்" என்ற வகையில் யு.என்.எச்.சி.ஆர் செயலாற்றியது. திருகோணமலை மாவட்டத்தில் அரசு சார்பற்ற பணியாளர் மேற்கொண்ட நேர்காணலின் போது நாடு

---

8 UNHCR Communication, April 1995

திரும்பிவர்களில் பெரும்பாலானோர் தன் விருப்பிலேயே திரும்பியிருந்தனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

4. யு.என்.எச்.சி.ஆரின் பங்கு

இந்தியாவில் அகதிகளுடன் சென்று நேர்காணலை மேற்கொள்ள யு.என்.எச்.சி. ஆருக்கு அனுமதி வழங்கப்படாவிட்டாலும் அகதிகள் புறப்படும் தருணத்தில் அவர்களின் விருப்புகளை அறிய அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்நிறுவனம் இத்தகைய வரையறுக்கப்பட்ட பங்கினைக் கொண்டிருந்த போதும் முற்றாக இல்லாத நிலையில் இதன் முயற்சி வரவேற்கக் கூடியது. அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் யு.என்.எச்.சி.ஆரின் தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தாலும் அத்தகைய எந்த வரையறுக்கப்பட்ட நிலையிலும் இந்தியாவில் அதன் முயற்சியைப் பூரணமாகப் பயன்படுத்துவதற்கு தற்போது முயன்று வருகின்றது.

இலங்கையில் யு.என்.எச்.சி.ஆரின் பணியானது திரும்பி வருபவர்கள் மீள இணைவதற்கு உதவுவதாக உள்ளது. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குத் திரும்பி வருபவர்கள், மீளக் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் அதேயளவு உதவியைப் பெறத் தகுதியுடையவர்கள். இது பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான உற்பத்தி முயற்சிகளுக்கான உதவியில் (Productive Enterprises Grant) உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் வீடமைப்புக்கான உதவி, உணவு அட்டை என்பன 'பெக்' உதவியைப் பெற்ற திகதியிலிருந்து 6 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்.

எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்றவர்களுக்கு குடியமர்த்தலுக்கு முன்னான வீடமைப்பு உதவித் தொகையான ரூ.5,000 வழங்கப்பட்டதுடன் அவர்கள் அரசாங்க உணவு அட்டைகளைப் பெறவும் தகுதியுடையவர்கள். யு.என்.எச்.சி.ஆர். சிறிய அளவிலான "நுண் செயற்றிட்டங்களை" அல்லது விரைவான பலனைத் தரும் செயற்றிட்டங்களுக்கு (QUIPS) உதவி புரிந்தது. 1994 ஆடிக்கும் 1995 மார்கழிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒதுக்கப்பட்ட 12.9 மில்லியன் யு.எஸ்.டொலர்களில் 4.7 மில்லியன் யு.எஸ்.டொலர்கள் இத்தகைய நுண் செயற்றிட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது.[9]

---

9 UNHCR, *Appeal for Repartriation to Sri Lanka* (Geneva, June 1994)

5 ஐரோப்பாவிலிருந்தும் மேற்கிலிருந்தும் வரும் அகதிகள்

கடந்த சில வருடங்களாக ஐரோப்பாவில் 100,000 மேற்பட்ட இலங்கையர்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.[10] இத்தரவுகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவது மிகவும் கடினமானது. 1994 தை மாதம் 12 ஆம் திகதி சுவிற்சர்லாந்தில் புகலிட அந்தஸ்து கிடைக்கப் பெறாதவர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பான உடன்படிக்கையில் சுவிற்சர்லாந்தும், இலங்கையும் கைச்சாத்திட்டன. இவ்வுடன்படிக்கையில் எத்தகைய தரவுகளும் குறிப்பிடப்பட வில்லையெனினும் சுவிஸ் அதிகாரிகள் 2 வருட காலத்திற்குள் 600–800 பேர் வரையில் திருப்பியனுப்பப்படுவார்கள் எனக் குறிப்பிட்டிருந்தனர். உடன்படிக்கையின் படி அண்மைக் காலங்களில் சுவிற்சர்லாந்தை வந்து சேர்ந்தவர்கள் முதலில் அனுப்பப்படுவர். 6,200 பேருக்கு மேற்பட்டவர்கள் 1990 ஆனி மாதத்துக்கு முன்பு சென்றவர்களாகையால் அவர்களைத் தொடாந்தும் அங்கிருக்க அனுமதிக்கப்பட்டது.

திருப்பியனுப்பப்படுபவர் சட்டம் ஒழுங்கு அதிகாரிகளினால் தேடப்படுபவராக இருந்தால் அது சாதாரண நடை முறைகளின் ஊடாகவே மேற் கொள்ளப்படும் என இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தது எனினும் இது எதனைக் கருதுகின்றது என்பது தெளிவாக இல்லை. திருப்பியனுப்பப்படும் எவரும் பிரச்சினைக்குரிய பகுதிகளுக்குப் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படமாட்டார் என்பதற்கும் அரசாங்கம் இணங்கியது. திரும்பி வருபவர் புறப்படுவதற்கு முன் தகுதியான பிரயாணப் பத்திரங்கள் அளிக்கப்படும். யு.என்.எச்.சி.ஆர் திருப்பியனுப்பப்படும் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் பொறுப்பினை எடுத்துக் கொண்டதுடன் அது பின்வருமாறு வரையறுக்கப்பட்டது.

"திரும்பி வருபவர் எதிர்கொள்ளும் பாதுகாப்புப் பிரச்சினை தெர்டர்பாக (அந்த நபரைத் திருப்பியனுப்பும் அரசாங்கத்துடன் / நாட்டின் தூதுவரகத்துடன் இணைந்து) இலங்கையின் தகுதி வாய்ந்த அதிகாரிகளுடன் பேசவும் / அல்லது விளக்கங்களைப் பெறவும் யு.என்.எச்.சி.ஆர் செயற்படும்.[11]

[10] Olsen, B., "Sri Lanka" in Baer et al (eds) *Human Rights in Developing Countries Yearbook 1994* (Kluwer Netherlands,) p 378

[11] "Information note on UNHCR position concerning the return of rejected Sri Lankan Asylum Seekers," UNHCR Document, 3 February 1995

திரும்பி வருபவர்கள் ஆரம்பத்தில் இலங்கை செஞ்சிலுவை முகாம்களில் அல்லது செஞ்சிலுவையினால் நடாத்தப்படும் விடுதிகளில் தங்க வைக்கப்படுவர். 1994 ஆனி மாதத்தில் சுவிற்சர்லாந்திலிருந்து திருப்பி அனுப்பப்படுதல் ஆரம்பமாகியதுடன் அவ் வருட இறுதியில் ஏறக்குறைய 95 பேர் திருப்பியனுப்பப்பட்டிருந்தனர்.[12] யு.என்.எச்.சி.ஆரின் தகவல்களின் படி இவர்களில் எவராவது எந்தவித அபாயத்தையும் எதிர் கொள்ளவில்லை. எனினும் நடவடிக்கைகள் "எவ்வித இடையூறுமின்றி" இடம் பெற்றன.

திரும்பி வருபவர்கள் பிரயாணம் செய்வதற்கு வசதியாக சுவிற்சர்லாந்திலுள்ள இலங்கைத் தூதுவரகத்தினால் "அவசரகாலச் சான்றிதழ்" வழங்கப்பட்டது. விமான நிலையத்திலிருந்து பிரயாணம் செய்வது உள்ளிட்ட உள்ளூர் செலவுகளுக்கென ஏறக்குறைய 10,000 சுவிஸ் பிராங் கொடுக்கப்பட்டது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் கொழும்பில் நுகேகொடையில் விடுதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் திரும்பி வருபவர்கள் சிறிது நாட்களுக்கு இவ் வசதியைப் பயன்படுத்தினார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட அவசரகாலச் சான்றிதழ்களையும் உள்ளூர் பொலிஸ் நிலையத்திலிருந்து பெறும் பொலிஸ் சான்றிதழையும் ஒப்படைத்து தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாக இருந்தனர். யு.என்.எச்.சி.ஆர். தகவல்களின்படி ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் அடையாள அட்டையை வழங்குவதற்கு 3 கிழமைகள் எடுத்திருந்தன.

இத்தகைய முன்னேற்றங்களை ஏனைய ஐரோப்பிய நாடுகளும் ஆர்வத்துடன் பின்பற்றின. வைகாசி மாதத்தில் டச்சு அரசாங்கம் தனது நாட்டில் புகலிடம் கிடைக்காத 15,000 தமிழர்களைத் திருப்பி அனுப்புவது தொடர்பாகப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்ததாக அறிவித்தது. 1995 இன் ஆரம்பத்தில் செய்தி அறிக்கைகளின் படி பெருமளவிலான இலங்கையர்களை நோர்வேயும் திருப்பியனுப்பத் தீர்மானித்தது.

1994 பங்குனி மாதத்தில் சில ஸ்கன்டிநேவிய நாடுகள் மற்றும் கனடாவைச் சேர்ந்த குடிவரவு அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்து தென் பகுதியில் அகதிகள் திரும்பி வருவதற்கான சூழ்நிலை காணப்படுகின்றதா என ஆராய்ந்தனர். 1995 ஆரம்பத்தில் நோர்வேயின் அகதிகள் கழகத்தின் பிரதிநிதிகளும், டானிஸ் அகதிகள் நிறுவனத்தின்

---

12 UNHCR source

பிரதிநிதிகளும் நிலைமைகளைப் பரீட்சிப்பதற்கு இலங்கைக்கு விஜயம் செய்தனர். மேற்கிலிருந்து நாடு திரும்புபவர்கள் அபாயத்தை எதிர் கொள்ளக் கூடுமா என்பதைத் தீர்மானிப்பது மிகவும் கடினமானது. ஒவ்வொரு விடயங்களும் அதன் தரத்தினடிப்படையிலேயே மதிப்பிடப்பட வேண்டும்.

6. சர்வதேச நியமங்களும் முடிவுரையும்

குற்றமற்றவர் என்ற ஊகத்தின் (non refoulement) தத்துவமானது சர்வதேச அகதிச் சட்டத்தின் மையமாக விளங்குகின்றது. இத்தத்துவமானது (அகதிகள் அந்தஸ்து தொடர்பாக 1957 மகாநாட்டுடன் படிக்கையின் உறுப்புரை 33 இலும், 1967 விருப்புரிமைப் பின்னேட்டிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது) ஒரு நாட்டில் ஒருவரின் உயிருக்கு அல்லது அடிப்படைச் சுதந்திரத்துக்கு ஆபத்து இருக்குமாயின் அங்கு அவர் திருப்பியனுப்பப்படுதலைத் தடுக்கின்றது. இந்தியாவோ அல்லது இலங்கை அரசாங்கமோ 1951 இன் மகாநாட்டுடன் படிக்கையைப் பின்னுறுதிப் படுத்தவில்லை. இருப்பினும் குற்றமற்றவர் என்ற ஊகத் தத்துவம் சர்வதேச மரபுச் சட்டத்தின் ஒரு பகுதியாகப் பரந்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.[13]

ஒரு நபரின் அவன் அல்லது அவளின் நாட்டுக்குத் திரும்புதலானது தன் விருப்பாக இருந்தால் மாத்திரமே சர்வ தேசச் சட்டத்தினால் அனுமதிக்கப்படுகின்றது. ஒரு நபர் தேசியம், இனம், மதம், குறிப்பிட்ட சமூகக் குழுவின் அங்கத்தவர் அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பவற்றின் அடக்கு முறைப்பயத்தினால் நன்கு பாதிக்கப்பட்டிருப்பவரே அகதி என மகாநாட்டுடன்படிக்கை வரையறுக்கிறது.

ஐக்கிய நாடுகளினால் 1951 இன் மகாநாட்டுடன் படிக்கையின் அமுலாக்கலை மேற் பார்வையிடவும் தன் விருப்பான நாடுதிரும்பல் நடவடிக்கைகளில் அரசாங்கத்துக்கும் தனியார் முயற்சிகளுக்கும் உதவியளிக்கவுமே யு.என்.எச்.சி.ஆர் உருவாக்கப்பட்டது.

---

[13] Goodwin - Gil, G., "Non refoulement and the New Asylum Seekers", *26 Virginia Journal of International Law* (1986) pp 897 - 920

தன் விருப்பு முடிவானது உண்மையானதாக இருக்க வேண்டுமெனின் திரும்புதலுக்கான தீர்மானத்தை எடுப்பதற்கு இடம் பெயர்ந்த ஒரு நபருக்குப் போதுமான தகவல்கள் அளிக்கப்பட வேண்டும். 1992 இல் வெளியிடப்பட்ட சுருக்கமான பத்திரத்தில் மனித உரிமைகளுக்கான சட்டத்தரணிகள் குழு பின்வருமாறு வாதாடுகின்றது:

> *"இதற்குத் தர்க்க ரீதியான நியாயமுண்டு. ஓர் அகதியைப் பொறுத்தவரையில் அவர் தாம் நாடு திரும்பிய பின்னர் துன்புறுத்தலுக்கு ஆளாகவிடில் மட்டுமே தாமாக விரும்பி நாடு திரும்புவார். எனவே அகதிகள் இவ்விடயத்தில் சுதந்திரமாகவும் எதுவித கட்டுப்பாடற்ற முறையிலும் தமது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டியது மிகவும் அவசியமானது. நாடு திரும்பும் தீர்மானம் தன் விருப்புடன் அமைய அத்தீர்மானம் விவேகமானதொன்றாகவும் பல்வேறு விபரங்களினை அறிந்ததன் பின்னர் மேற் கொள்ளப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்".*[14]

எவராவது நாடு திரும்ப வேண்டும் என நிர்பந்திக்கப்படுவது சர்வதேச சட்டத்தை மீறுவதாகும். அகதிகள் பயமுறுத்தப்படும் சந்தர்ப்பங்களில் இந் நிர்ப்பந்தம் வெளிப்படையாகத் தெரியும். வேறு சந்தர்ப்பங்களில் இது சற்று மறை முகமானதாகவும் இருக்கும். எடுத்துக் காட்டாக முகாம்களில் மோசமான நிலைமையை ஏற்படுத்தி விடலாம். முகாம்களுக்குச் செல்வதைக் கடுமையாக்கலாம். முகாமுக்கு வெளியே வேலை செய்வதைத் தடை செய்யலாம். அத்துடன் அகதிக் குழுக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் முகாம்களுக்குச் செல்வதைத் தடை செய்யலாம். இடம் பெயர்ந்தோரைக் கைது செய்வதும் தடுத்து வைப்பதும் இவ்வாறான ஒரு வகை மறைமுகமான பயமுறுத்தலாகும்.

சுவிற்சர்லாந்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களின் நிலைமை மிகவும் சிக்கலானது. அவர்கள் தன் விருப்பில் திரும்பி வரவில்லை. அவர்கள் கோரி நின்ற புகலிட அந்தஸ்து மறுக்கப்பட்டதன் அடிப்படையிலேயே அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் எனினும் அவர்களின் உயிர்அல்லது அடிப்படைச் சுதந்திரம் எவ்வித இடையூறுகளுக்கும் உட்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகக் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டன.

---

14 "General Principles Relating to the Promotion of Refugees Repartriation : A briefing paper" Lawyer's Committee for Human Rights, (may 1992) p 6

இலங்கையில் நிச்சயமற்ற பாதுகாப்புச் சூழ்நிலை காணப்படும் போது ஐரோப்பாவிலிருந்து திரும்பி வருபவர்களின் உயிர்களுக்கு அல்லது அடிப்படைச் சுதந்திரத்துக்கு ஆபத்து இல்லை என்று பொதுவான வாக்குறுதியை அளித்தல் கடினமானது. அவர்களுடைய உயிருக்கும் சுதந்திரத்துக்கும் நிச்சயமாக ஆபத்து உண்டு என்று ஒரு மாற்று நிலைப்பாட்டை மேற்கொள்வதோ முடியாது. ஒவ்வொரு விடயமும் தனித்தனியாக நோக்கப்பட வேண்டும்.

நாடு திரும்புவதைக் கண்காணித்தல் முக்கியமானது. இன்று யு.என்.எச்.சி.ஆர். மிக நிதானமாகக் கண்காணிப்பது போதாது என்பது தெளிவானது. இந் நிலையில் மிகச் செயற்றிறனும், பயனுறுதியும் மிக்க கண்காணிப்பு தேவைப்படுகின்றது. அத்துடன் நாடு திரும்பியோர் மீண்டும் இணைந்து கொள்ள உதவ வேண்டும். இதற்கு இவ் வகதிகளின் தேவை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டே அளவீடு செய்யப்படல் வேண்டும். அத்துடன் அரசு சார்பற்ற நிறுவனங்கள் இதில் தீவிர ஈடுபாடு காட்டுதலும் வேண்டும்.

15

சிறுவர்களின் உரிமைகள்

1. விசேட நிலைமைகளில் சிறுவர் - அவர்களின் உரிமைகள் பற்றிய ஒரு மதிப்பீடு

இலங்கை: மனித உரிமைகள் நிலை 1993[1] இல் சிறுவர் தொடர்பாக இலங்கையிலுள்ள சட்டம் பற்றிய மேலோட்டமான கருத்தைத் தந்துள்ளோம். இவ்வருடம் விஷேட வகையினருள் அடங்கும் சிறுவர் மீது கவனம் செலுத்துவதுடன் அவர்கள் தொடர்பாக இலங்கையிலுள்ள சட்டங்கள் சிறுவர்களின் உரிமைகள் பற்றிய மகாநாட்டுடன்படிக்கையில் எடுத்துக் கூறப்பட்ட சர்வதேச நியமங்களும், ஏனைய சர்வதேசக் கட்டுறுத்துக்களும் சிறுவர்களுக்குப் பொருந்துகின்றனவா என நோக்கவுள்ளோம். குற்றவியல் சட்டங்களை மீறிய சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கும், பாலியல் இம்சைகளுக்கும் உள்ளானவர்கள், மற்றும் வேலைகளுக்கு அமர்த்தப்பட்டவர்கள் ஆகியோர் பற்றியே இவ்விடயம் நோக்குகின்றதுடன் இச் சிறுவர்கள் பற்றிய இலங்கைச் சட்டங்களின் பலத்தையும் பலவீனத்தையும் எடுத்துக் காட்டுவது எமது நோக்கமாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பற்றி இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்படவில்லையெனினும் இவ்விடயத்திலே ஆய்வுகள் இடம் பெறவேண்டியது அவசியமானது. இவ்வாறான சிறுவர்களின் நிலைமை பற்றிய கருத்தை வெளியிடப் போதிய தரவுகள் எம்மிடம் இல்லை என்பதால் அவர்களுடைய பிரச்சினைகளையும் எடுத்துக் கூற முடியவில்லை.

---

[1] (Law & Society Trust, Colombo, 1994)

2. குற்றவியல் சட்டத்தை மீறும் சிறுவர்கள்

சிறுவர் உரிமைச் சட்டத்தின் (சி.ஆர்.சி) 37ஆம் 40ஆம் உறுப்புரைகள் குற்றவியல் சட்டத்தை மீறிய சிறுவர்களின் உரிமைகள் பற்றி எடுத்துக் கூறுகின்றதுடன் அதிலுள்ள ஏனைய பொது ஏற்பாடுகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும். இவ் ஏற்பாடுகள் குழந்தைகளின் சகல செயல்கள் பற்றியும் எடுத்துக் கூறுவதுடன், அவர்களுடைய விருப்பங்களையும் கவனிக்க வேண்டும் என்கிறது.[2] குழந்தைகளின் பெற்றோர், பாதுகாவலர் அல்லது குடும்ப அங்கத்தவர்களின் அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள், நடவடிக்கைகள், அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சகலவிதமான பாகுபாடுகள் மற்றும் தண்டனைகளிலிருந்தும் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.[3]

சி.ஆர்.சி. யின் 37ஆம் உறுப்புரையானது பிள்ளைகள் துன்புறுத்தல், கொடூரம், மனிதாபிமானமின்மை, இழிவாக நடத்தப்படுதல் அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படக் கூடாது எனக் கூறுகின்றது. குறிப்பாக 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக அவர்களை விடுவிக்கப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லாவிட்டால், தண்டனையோ அல்லது ஆயுட்காலச் சிறைத் தண்டனையோ விதிக்கப்படக் கூடாது. குற்றவியல் சட்டத்தின் 37 ஆம் உறுப்புரையில் எடுத்துக் கூறப்பட்ட ஏனைய முக்கிய உரிமைகளாக சட்டத்துக்கு முரணாக, அல்லது பக்கச்சார்பான முறையில் அவன் அல்லது அவளுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது; கைது செய்யக்கூடாது. சட்டத்தின்படி தடுத்து வைக்கவும் சிறையிடவும் முடியுமெனினும் அதனை ஓர் இறுதி நடவடிக்கையாகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே மேற்கொள்ள முடியும். சுதந்திரமற்ற நிலையில் உள்ள பிள்ளைகள் அவர்களின் வயதினைக் கருத்திற் கொண்டு மனிதாபிமானத்துடன் நடத்தப்பட வேண்டும். இவ்வாறான பிள்ளைகள் பெரியோர்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு, நன்கு பராமரிக்கப்பட வேண்டும். அங்கு அவருடைய முக்கிய விருப்பத்தைக் கருத்திற் கொள்ள வேண்டுமென்பதில்லை. அவன் அல்லது அவள் தனது பெற்றோருடன் தொடர்பு கொள்ளும் உரிமை மற்றும் பார்வையிடும் உரிமையானது விதிவிலக்காகக் கட்டுப்படுத்தப்பட்டாலன்றி, அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 37 ஆம் உறுப்புரையின்படி, சுதந்திரத்தை

---

2 உறுப்புரை 3.1

3 உறுப்புரை 3.2

இழந்தவர்கள் சட்ட உதவியை நாட முடியுமெனினும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்களுக்குச் சவால் விடும் உரிமையும் அவர்களுக்கு இருக்கின்றது.

உறுப்புரை 40, சட்டத்தின் முன் சமம் என்பதை உறுதிப்படுத்துவதுடன் தண்டனை முறைமையின் கீழ் ஒரு சிறுவன் குற்றமிழைத்தால் வழக்கும் தொடரலாம். ஆகவே ஐ.சி.சி.பி.ஆர் இன் 9 தொடக்கம் 18 வரையுள்ள உறுப்புரைகளில் பிள்ளைகளின் உரிமைப் பிரயோகம் உறுதி செய்யப்படுகிறது. மகாநாட்டுடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய உரிமைகளின்படி பிள்ளைகள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படும் வரையில் அவர்களைக் களங்கமற்றவர்கள் எனக் கருதுவதுடன் உரிமைகளை அவர்களுக்கு எதிராக உறுதிப்படுத்தவும் ஆர்வம் காட்டக் கூடாது. சாட்சிகளை விசாரிக்கும் உரிமை அல்லது விசாரணைக்குட்பட்ட சாட்சிகளை வைத்திருக்கும் உரிமை; விளக்கமளிப்பவரின் உதவியை நாடும் உரிமை, குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனையின் நீதிமுறை மீளாய்வுக்கான உரிமை என்பனவும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகைய உரிமைகள் தகுந்த செயல்முறைப் பிரமாணங்களுடன் இணைந்துள்ளதுடன் பால்யத் தீர்ப்புக்கான நலன்புரி மாதிரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. 40 ஆம் உறுப்புரையில் அடங்கியுள்ள சில உரிமைகள் பால்யத் தீர்ப்புக்கான நலன்புரி மாதிரியுடன் பெருமளவுக்கு இணைந்துள்ளன. அவனுக்கு அல்லது அவளுக்கு எதிரான எந்தக் குற்றத்தையும் கவனமாக எடுத்துரைக்க வேண்டும் என்பதற்கான உரிமை, பொருத்தமானவிடத்து அவன் அல்லது அவளுடைய பெற்றோருக்கு அறிவிக்கும் உரிமை, சட்ட நடவடிக்கையின் சகலகட்டங்களிலும் அவன் அல்லது அவளுடைய தனிமை முழுமையாகக் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதற்கான உரிமையும் உள்ளது. குற்றவியல் சட்டத்தை மீறும் பிள்ளைகளைச் சட்டரீதியான நடவடிக்கைகளின்றிப் புகலிடமளிப்பதற்கான அவசியத்தை 40 ஆவது உறுப்புரை மேலும் வலியுறுத்தியுள்ளது. இவ்வாறான பிள்ளைகளைக் கவனிப்பதற்கு பல்வேறுபட்ட ஏற்பாடுகளும் இருக்க வேண்டும் என்பதுடன், நிறுவனரீதியான பராமரிப்புக்கு மாற்று ஏற்பாடுகளும் வேண்டும்.

இப்பிரமாணங்களை இலங்கைச் சட்டம் எவ்வாறு மதிக்கின்றதென்பதற்கான சில விடயங்களை இங்கே நோக்கலாம்.

2.1 பிள்ளைகளின் குற்றவியல் ஆற்றல்

இலங்கைச் சட்டத்தின்படி, குற்றவியல் பொறுப்புகளை ஏற்க வேண்டிய ஆகக் குறைந்த வயது 8 ஆக இருந்தாலும்[4] குற்றப் பொறுப்புக்கான ஆகக் குறைந்த வயது எதுவென மகாநாட்டுடன்படிக்கையில் எடுத்துக் காட்டப்படவில்லை. ஆனால் பெஜ்ஜிங் விதிகள் [5] பிள்ளையின் மனவெழுச்சி, உள மற்றும் அறிவாற்றல் முதிர்ச்சி ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளும்போது மிகக் குறைவாக இருக்கக் கூடாது எனக் கூறுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்குமிடத்து குற்றப் பொறுப்புக்கான இலங்கையிலுள்ள கீழ் வயதெல்லை மிகக் குறைந்தது என்றே கருதப்படுகின்றது.

2.2 விசாரணைக்கு முந்திய விசாரணைச் செயல்முறைகள்

விசாரணைக்கு முந்திய மற்றும் விசாரணையின் போதுள்ள நடைமுறைகள் பற்றிய இலங்கைச் சட்டத்தின் சில விதிமுறைகள் மகாநாட்டுடன்படிக்கையினையும் ஏனைய சில சர்வதேச சாதனங்களையும் தெளிவாகப் பின்பற்றுகின்றன. ஆகவே, கைது செய்யப்படும் பிள்ளை அல்லது இளைஞன் பொலிஸ் நிலையத்திலும் சட்டமன்றத்திலும் வயது வந்தவர்களுடன் சேர்த்து வைக்கப்படக் கூடாது.[6] கைது செய்யப்படும் ஒரு பிள்ளை அல்லது இளைஞன் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அவன் அவனுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வாக்கு மூலத்தைப் பதிவுசெய்து கொண்டு உத்தரவாதியுடன் அல்லது உத்தரவாதியின்றி அத்தகைய ஆளை விடுவிக்கலாமா எனத் தீர்மானிக்க வேண்டும்.[7] பிள்ளையின் குற்றம்[8] உடன் தொடர்புடையதாயின், அவனைப் பொருத்தமற்ற கூட்டுக்களிலிருந்து பிரித்து வைத்தல் அவசியமானது அல்லது அந்த அலுவலர் பிள்ளை விடுவிக்கப்படுவதால் இறுதித் தீர்ப்புகள் தோல்வியடையும் என நம்புவதற்குக் காரணம் இருந்தால், அச்

---

4 Penal code, section 75

5 United Nations Standard Minimum Rules for the Administration of Juvenile Justice

6 Children and Young Persons Ordinance (CYPO) No. 48 of 1939, Section 13

7 *Ibid,* Section 14 (1)

8 See schedule 2, CYPO

சிறுவனைச் சிறைக்கூடத்தில் அல்லது அமைச்சரால் பிரேரிக்கப்படும் ஆளொருவர் வீட்டில் தடுத்து வைக்கலாம்.[9]

ஏனைய ஏற்பாடுகள் பிள்ளைகளின் உரிமைகளைப் பொறுத்த வரையில் சர்வதேச நியமங்களிலும் பார்க்கக் குறைவாக இருக்கின்றன. ஒரு பிள்ளையைக் காவலில் வைத்தல், அல்லது விசாரணை செய்வதற்கான சட்டம் அப்பிள்ளையைச் சிறையில் வைப்பதற்கும் அதிகாரத்தை வழங்குகிறது.[10] இவ் ஏற்பாடு கடும் விமர்சனத்துக்கு[11] உட்பட்டதாக இருப்பதுடன் பெஜ்ஜிங் விதிகளுக்கு முரண்பாடாகக் காணப்படுவதுடன் தடுப்புக் காவல் பற்றிய பூர்த்தியாகாத விசாரணைகளை இது ஆழமாகவும் மேற்கொள்கிறது. இவ் விதிகளின்படி இடம்பெறும் தடுப்புக் காவல் இறுதி நடவடிக்கையாக மாத்திரமே மிகக் குறுகிய காலத்திற்குப் பயன் படுத்தப்பட வேண்டும். தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்குப் பதிலாக சில சாத்திய சூழ்நிலைகளில் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.[12] தடுப்புக் காவலுக்கும் உத்தரவு வழங்கப்படுகையில், பிள்ளைகளை வளர்ந்தவர்களுடன் வைத்திருத்தல் கூடாது.[13] இத்தகைய ஏற்பாடுகளை நோக்கும் போது இலங்கைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் தெளிவாகியுள்ளது. ஒரு பிள்ளையை அல்லது இளைஞனை வளர்ந்தோருக்கான சிறையில் தடுத்து வைப்பதற்குரிய தெரிவுகள் அகற்றப்பட வேண்டும். மேலும் இலங்கைச் சட்டத்தில் பிள்ளைகளையும் இளைஞரையும் தடுத்து வைத்தலுக்கான மாற்று வழிகள் பற்றி அதிகளவில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

பால்யத் தீர்ப்புகள் சுதந்திரமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் இடம்பெறுதல் அவசியமானது. சர்வதேச சாதனங்களில் இவற்றுக்கான பிரமாணங்கள் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.[14] பெஜ்ஜிங்

---

9 Proviso to section 14 (1) and 14 (2). Currently the subject is assigned to the Minister of Health, Social Services and Highways. See Government Gazette 832/15, 19 August 1994. See also Article 44 (1) A of the constitution which empowers the president to assign subjects and functions to such ministers.

10 Section 15 (1)

11 *Report on the Sentencing of Young Offenders*, Sessional paper, 1 November 1988 (Department of government printing, Sri Lanka)

12 Article 13.1 and 13.2

13 Article 13 .4

14 Beijing Rules, Article 14.1; CRC, Article 40.2

விதிகள் குறிப்பாக சட்ட நடவடிக்கைகள் பிள்ளையின் விருப்பத்துக்குச் சாதகமாக அமைய வேண்டும் என்பதுடன், பால்ய வயதினர் சட்ட நடவடிக்கைகளின் போது சுதந்திரமாகத் தமது கருத்துக்களை எடுத்தும் விளக்கக் கூடிய சூழ்நிலையும் இருக்க வேண்டும்.[15]

இவ்வாறான நடவடிக்கைகள் அதிகாரபூர்வமற்ற வகையில் இலங்கைச் சட்டத்தில் ஓரளவுக்கே அடையப்பட்டுள்ளது. ஆகவே பால்ய நீதிமன்றம் வழக்கமான ஏனைய நீதிமன்ற விசாரணைகள் நடைபெறும் இடத்தில் அல்லாது வேறு இடத்தில் நடைபெற வேண்டும்.[16] வழக்கமான நீதிமன்ற நடவடிக்கைகளினால் பிள்ளை பாதிக்கப்படவில்லையென உறுதிசெய்ய வேண்டும். இலகுவான மொழியிலே குற்றத்தின் சுருக்கம் எடுத்துக் கூறப்படல் வேண்டும்.[17] ஆயினும் இத்தகைய ஏற்பாடுகள் பயனுறுதி வாய்ந்த முறையில் குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளில் பங்கேற்கிறார்கள் என்பதை உறுதி செய்வதில்லை. ஏனைய நியாயாதிக்கங்களும் நடவடிக்கைகளை அதிகாரபூர்வமற்ற வகையில் வெவ்வேறு வழிகளிலே உறுதி செய்கின்றன. ஆகவே அவை வழக்கமான நீதிமன்ற அறையை அதிகாரபூர்வமாக வைத்திருப்பதுடன், வழக்கறிஞர், நீதிபதி போன்றோரின் உத்தியோகபூர்வ உடையும் கைவிடப்பட வேண்டும். இத்தகைய மாற்று ஏற்பாடுகள் இலங்கைச் சட்டங்களில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு சிறுவன் சட்டப்படி பிரதிநிதித்துவம் செய்யப்பட வேண்டும் என்பதற்கான வேண்டுகோள் இலங்கைச் சட்டத்தில் இடம் பெறவில்லை. "சீபோ" (Cypo) ஆனது ஒரு நீதிமன்றத்திலே பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பங்கு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அழுத்தமாக முன்வைக்கிறது.[18] இவை மட்டும் போதுமானவையன்று. பிள்ளைக்குச் சட்டரீதியான அல்லது ஏனைய உதவிகள் வழங்கப்பட வேண்டுமென சி.ஆர்.சி. குறிப்பிடுகின்றது.[19] சட்ட நடவடிக்கைகள் இடம்பெறும்போது பெற்றோர் அல்லது பாதுகாவலர் பிரசன்னமாக இருப்பதற்கும் ஆலோசனை பெறுவதற்கும் உள்ள உரிமையை பெய்ஜிங் விதிகள் எடுத்துக் காட்டுகின்றன.[20]

---

15 Article 14.2
16 CYPO, Section 7 (2)
17 *Ibid,* Section 9
18 CYPO, Section 16. See also section 9 (5) (b)
19 Article 40.2 (b) (iii)
20 Article 15.1 and 15.2

ஒரு பிள்ளை அவனது அல்லது அவளது தனிமையை முழுமையாக மதிக்க வேண்டும் எனவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் போது சகல கட்டங்களிலும் இவ்வுரிமை பிள்ளைக்கு இருக்கிறது என உத்தரவாதமளிப்பதும்[21] முக்கியமானது. இவ்வகையில் இலங்கையின் சட்டம் திருப்திகரமாகவுள்ளது. ஆகவே உறுப்பினர்களும் நீதிமன்ற அலுவலர்களும், வழக்கில் ஈடுபடும் குழுக்களும் அவர்களுடைய சட்டத்தரணிகளும் சாட்சிகளும் ஏனையவர்களும் நீதிமன்றத்தின் விசேட அதிகாரத்தின்படி அங்கு பிரசன்னமாகலாம். சட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை தயாரித்தல் வன்மையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.[22] மற்றும் சட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை அல்லது படங்களை வெளியிடுதலும் தடுக்கப்பட்டுள்ளது.[23] சி.ஆர்.சி பெஜ்ஜிங் விதிகளும் பால்யக் குற்றவாளி ஒருவரை நீதிமன்றச் செயல்முறையிலிருந்து வேறுதிசையில் செல்ல வைப்பதை வலியுறுத்துகிறது.[24] இலங்கையில் இக்குறிக்கோள் ஓரளவுக்கே எய்தப்பட்டுள்ளது. இணக்க சபைச் சட்டம்[25] சில குறிப்பிட்ட குற்றங்களைப் பொறுத்த வரையில், ஒரு வழக்கு ஏற்கனவே இணக்க சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அது தீர்க்கப்படாமை பற்றிய சான்றுப்பத்திரம் வழங்கப்படா விட்டால் நீதிமன்றத்தில் எவ்வித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது எனக் கூறுகின்றது. ஆயினும் இணக்க சபையின் நியாயாதிக்க எல்லை சில குற்றங்களைப் பொறுத்த வரையில் வரையறுக்கப்பட்டுள்ளது. சீபோ வேறு வழிச் செலுத்தும் கோட்பாட்டை மீறுவதுபோலத் தெரிகிறது. ஒரு நீதவான் நீதிமன்றம் பால்ய நீதிமன்றம் போலச் செயற்படும் போது, அதில் ஓர் இளைஞன் மீது யாதாயினும் குற்றம் சுமத்தப்பட்டால் அதனைச் செவிமடுப்பதற்கும் அதனைத் தீர்மானிப்பதற்கும் சட்ட அதிகாரம் உண்டு என அதனோடு தொடர்பான முன்னேற்பாடு கூறுகின்றது.[26]

வேறு வழிச்செலுத்தல் என்னும் விடயம் பலம் வாய்ந்தது. குற்றத்தின் இயல்பு, மீறுவோருடைய சூழ்நிலை, அவன் அல்லது அவளுடைய முன்னைய நடத்தை, குற்றங்களைக் கவனிக்கவென நீதிமன்ற முறைமைக்கு

---

[21] Article 40.2 (b) (vii)
[22] CYPO, Section 11
[23] *Ibid*, Section 20
[24] CRC Article 40.3 (b), Beijing Rules, Article 11
[25] No. 72 of 1988
[26] CYPO, Section 4 (1)

வெளியே கிடைக்கும் பெறுமதிமிக்க சேவைகள், தீர்ப்பினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் போன்றவற்றில் தகுந்த கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

பிள்ளைக் குற்றவாளிகள் பற்றிய விடயத்தில் பலவிதமான தீர்ப்புத் தெரிவுகள் சி.ஆர்.சி க்கு அவசியமானது.[27] இலங்கைச் சட்டத்தில் சிறுவர்களும் இளைஞரும் (16 வயதுக்கு உட்பட்டவர்கள்)[28] "சீபோ"வின் சுற்றுப் பரப்பெல்லைக்குள் அடக்கப்படுகின்றனர். இவர்கள் மீது விதிக்கப்படும் தீர்ப்புகள் வயது வந்தோர் மீது விதிக்கப்படும் தீர்ப்பிலும் பார்க்க வேறுபட்டிருக்க வேண்டும். 16 வயதுக்கும் 22 வயதுக்குமிடையேயுள்ள இன்னொரு வகையான சட்டத்தை மீறுவோர் இளம் குற்றவாளிகள் என அழைக்கப்படுவார்கள்.[29]

இலங்கைச் சட்டத்தின் கீழ் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் எந்தக் குற்றத்தின் பேரிலும் சிறையில் வைக்கப்படக் கூடாது. 14–16 வயதுக்கு இடைப்பட்டோரைப் பொறுத்தவரையில் அவர்கள் நேர்மையற்றவர் அல்லது ஒழுக்கக்கேடானவர் என நீதிமன்றம் அவதானிக்குமிடத்து மட்டும் சிறையில் வைக்கப்படலாம். (இவ்விரு சொற்களும் வரையறுக்கப்படாதவை)[30] இச் சட்டத்தில் சிறை வைக்கப்படுவதற்கான நிறுவனஞ்சார்ந்த, மற்றும் நிறுவனஞ்சாராத மாற்றுவழிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, பேரவைக்குத் தேவையான பல வகையான ஒழுங்கமைப்புகள் இலங்கைச் சட்டத்தில் ஓரளவுக்குக் காணப்படுகின்றது. நிறுவனரீதியான தெரிவுகளாக விளக்கமறியலில் வைத்தல்[31] அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் மூன்று ஆண்டுகளுக்குச் சேர்த்து விடுதல்[32] ஆகியவற்றைக் குறிப்பிடலாம். சிறைச்சாலைகளை விட வேறு அம்சங்களையே இந்நிறுவனங்கள் விரும்புகின்றனவெனினும் பிள்ளைகள் வாழ்நாள் முழுவதும் இந்நிறுவனங்களில் இருந்ததற்காக ஓர் அவப்பெயர் இருக்கவே செய்யும். இந்நிலையில் பிள்ளைகளுக்கான நீதிமன்றின் நீதிவான் இவ்வாறான நிறுவனங்கள் அல்லாத வேறு ஏற்பாடுகளைச் செய்வது விரும்பத்தக்கது.

---

27 Article 40.4
28 Section 88
29 See Youthfull Offenders (Training schools) Ordinance No. 28 of 1939 Section 16
30 CYPO, Section 23 (2)
31 *Ibid,* Section 25 (1)
32 *Ibid,* Section 26 (1)

இவ்வாறான நிறுவனரீதியற்ற மாற்று ஏற்பாடுகளில் ஒன்று "பொருத்தமான ஆள்" என்பதாகும். பிள்ளை இவருடன் மூன்றாண்டுகளைக் கழிக்கும். பொருத்தமான ஆள் என்பதற்கான சட்டரீதியான வரையறை எவையும் இல்லை. ஆயினும் சட்ட ஏற்பாடுகளில் பொருத்தமான ஆள் என்பவர் பிள்ளையின் உறவினர் எனக் குறிப்பிட்டுள்ளது.[33]

பெற்றோரிடம் அல்லது சுற்றத்தாரிடம் பிள்ளைகளை ஒப்படைத்தல் இன்னொரு தெரிவாகும்.[34] இது ஒரு தகுதிகாண் ஒழுங்காக அல்லது நன்னடத்தைக்கான பிணையாக இருக்கலாம். இவ்வாறே, நல்லறிவுரை புகட்டப்பட்ட பின்னர் குறிப்பிட்ட செயலைச் செய்யாமலிப்பதாக ஒருவர் நீதிமன்றத்துக்கு முன்னால் எழுதிக்கொடுக்கும் பத்திரத்தினடிப்படையில் விடுவிக்கப்படுதல் இன்னொரு மாற்று வழியாகும்.[35] ஏனைய நிறுவனஞ் சாரா நடவடிக்கையாக ஒத்திவைக்கப்பட்ட தீர்ப்பு[36] மற்றும் சமுதாயத் தீர்ப்புக் கட்டளைகள்[37] என்பன குற்றவியல் ஒழுங்குச்சட்டத் தொகுப்பில் உள்ளன. இவ்வாறான தீர்ப்புகள் பால்ய நீதிமன்ற நீதிவானால் வழங்கப்பட முடியுமா என்பது சந்தேகமே. அவ்வாறே சீபோ இன் கீழ்வரும் தண்டனைகளை மட்டும் அவர் வழங்க முடியுமா என்பதும் சந்தேகமே.

இலங்கையின் சட்டத் திருத்தங்கள் ஏனைய நிறுவனம் சாரா நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் தீர்ப்புக்கான சிந்தனைகள் நிறுவனரீதியான நடவடிக்கைகளிலும் பார்க்க நிறுவனஞ்சாரா நடவடிக்கைகளுக்கே கூடிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். குற்றப் பொறுப்புக்கான வயது, மற்றும் தீர்ப்புக்கான விருப்பத் தெரிவு போன்ற விடயங்களில் குற்றவியல் சட்டத்தை மீறும் பிள்ளைகள் பற்றிய சட்டவிதிகளிலுள்ள குறைபாடுகளுக்குத் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டாலும் குற்றவியல் நீதி அமைப்பில் பிள்ளைக்குச் சரியான பாதுகாப்பில்லை. வழக்குத் தீர்ப்பில் உண்டாகும் தாமதம் பால்யக் குற்றவாளிகளில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். குறிப்பாக அவர்களைப் பிணையில் விடாமலிருந்தால் இவ்வாறு நிகழும். வழமையாகப் பாடசாலைக்குச் செல்வதில் தடையேற்படுதல் பழக்கப்பட்ட சூழ்நிலையிலிருந்து அவர்களை அகற்றுதல் போன்றவை தவிர்க்க

---

33 *Ibid,* Section 27 (1) (b)
34 *Ibid,* Section 27 (1) (a)
35 *Ibid,* Section 27 (1) (c) and 30
36 Code of Criminal procedure Act No. 15 of 1979, Section 306 (1)
37 *Ibid,* Section 18

முடியாத விளைவுகளைத் தரும்.[38] 1994 ஆம் ஆண்டில் நான்கு விளக்கமறியல் இடங்களில் 99 பிள்ளைகள் தடுத்து வைக்கப்பட்டனர் எனப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.[39] இத்தொகை குறைவாக இருந்துள்ள போதிலும் இவர்களை நீண்ட நாட்களுக்கு விளக்கமறியலில் வைத்திருத்தல் பெஜ்ஜிங் விதிகளுக்கு முரணாகவுள்ளது.[40] 226 பிள்ளைகள் 1994 இல் நாட்டிலுள்ள நான்கு சான்றிதழ் பெற்ற பாடசாலைகளிலும், ஓர் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையிலும் சீர்திருத்தப்பட்டார்கள்.[41] இவ்வாறான புள்ளிவிபரங்கள் சீர்திருத்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட பிள்ளைகளின் தொகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எடுத்துக் காட்டவில்லை. ஆயினும் ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட நிறுவனரீதியான விருப்பத்தெரிவுகள் போதியளவில் பயன்படுத்தப்படவில்லையென இவை தெரிவிக்கின்றன. ஒரு சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தரின் கூற்றுப்படி, நிறைவேற்றுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விதிகளை நீதிபதிகளும் நன்கு அறிந்திருக்கவில்லையென்றும் கிடைக்கக் கூடிய விருப்பத் தெரிவுகள் பற்றியும் அவர்கள் அறிந்திருப்பது போல் தெரியவில்லை என்றும் தெரிகிறது.[42] ஒரு குறுகிய காலத்திற்குப் பால்யக் குற்றவியல் நடுவராகக் கடமையாற்றிய நீதிபதி ஒருவரால் இவை சான்றுகளுடன் எடுத்துக் காட்டப்பட்டன. அவர் பிள்ளையின் விருப்பத்துக்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிச் சிந்திக்கவில்லை. ஆயினும் நீதிபதிகளுக்குச் சில விருப்பத் தெரிவுகள் உள்ளதாக நம்பினார்.[43] இவைபற்றி அறியாமல் இருப்பதற்கான காரணங்களுள் ஒன்று பால்ய நீதிமன்ற நீதிவான் கல்விசார்ந்த அல்லது தொழில் சார்ந்த ஆய்வுகளில் ஈடுபட்ட காலத்தில் அதுபற்றிய குறிப்பான கவனத்தைப் பெறவில்லை என்பதாகும்.

கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய இன்னொரு அம்சமாக, சான்றிதழ் பெற்ற பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட

---

38 See further, *Report on the Implementation of the convention of the Rights of the Child* (Marga Institute, 1994) p 63

39 Jayasekera, R.W., *"Juvenile Justice, Laws, Policies and practices,"* Regional Training programme, *Juvenile Justice and the Rights of the Child: A challenge for the 21st century* (Bangkok, 1994)

40 Article 13.1

41 Supra n 39

42 Interview, Probation Officer, Department of Probation and Child Care, 17 December 1994

43 Interview, 18 September 1994

பயிற்சியைக் குறிப்பிடலாம். இப்பயிற்சி தொழிற் பயிற்சியாக இருக்க வேண்டும் என்பதாகவன்றி பிள்ளையின் பூரண ஆளுமை வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டது. இவை அங்கு கிடைக்கக் கூடிய வளங்களின் துணையோடு எய்தப்பட்டனவா என்பதும் சந்தேகத்திற்குரியது. இக்கட்டுரை ஆசிரியர் தாய்லாந்திலுள்ள ரேயோங் (Rayong) என்னுமிடத்திலுள்ள சீர்திருத்த நிறுவனத்துக்குச் சென்று அப்பாடசாலையில் பிள்ளைகளுக்கு உள்ள வசதிகளையும் போதனை முறைகளையும் அவதானித்தார். இங்கு தொழிற் பயிற்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதுடன், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு பயிற்சிநெறிகள் வழங்கப்பட்டன. இங்கேயுள்ள ஆசிரியர்களின் நோக்கம் பிள்ளைகளின் வேலைகளைப் பாதுகாத்தலும், அவ்வேலைகளுக்கு அவசியமான திறன்களைப் பயிற்றுவிப்பதுமாகும். தேவையான திறன்களைப் பெறாமல் அவர்களை வெளியே அனுப்புதல் மீண்டும் குற்றங்களைப் புரியக் கூடிய வாழ்க்கைக்கே அவர்களைத் தூண்டும் எனக் கருதப்பட்டது. இலகுப் பொறியியல், மட் பாண்டம், விளையாட்டுப் பொருள் உற்பத்தி, பின்னல்வேலை, பட்டுப்பூக்கள் செய்தல் போன்ற சில திறன்களைப் பிள்ளைகள் பயின்றனர். இசையில் ஆற்றலுள்ள பிள்ளைகளுக்கு இசைக் கருவிகளை மீட்டவும் பயிற்சி வழங்கப்பட்டது. சிலர் பாடகர்களாகவும் பயிற்றப்பட்டனர். ஒழுக்கக்கல்வி, அடிப்படை மொழித்திறன்கள் மற்றும் கணிதம் ஆகியனவும் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக இருந்தன. ஆயினும் பிள்ளைகள் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழத் தேவையான பயிற்சியை சான்றிதழ் பெற்ற பாடசாலைகள் வழங்கவில்லை என்பது இக்கட்டுரையாசிரியரின் கருத்தாகும். நன்னடத்தை மற்றும் பொருத்தமான ஆள் போன்ற சில இலகு நடவடிக்கைகள் தேடப்பட வேண்டும். 1988 இல் விமலரத்தின குழுவினர்[44] பால்யக் குற்றவாளிகளின் புனர்வாழ்வு பற்றிய விடயத்தில் நன்னடத்தைக்குப் பிரதான இடங்கொடுக்க வேண்டுமென எடுத்துக் கூறினர்.[45] மேலும் இன் நன்னடத்தைக் கட்டளைகள் மேற்பார்வைக் கட்டளைகளாக மாற்றப்பட வேண்டும் எனவும் அவர்கள் விதந்துரைத்தனர். நன்னடத்தை என்ற சொல் எதிர்மறைப் பொருளையும் தருகிறது. அவ்வாறான மேற்பார்வைக் கட்டளைகள் எண்ணற்ற நிபந்தனைகளுடன் கூடியவையாக இருப்பதுடன், அவை ஒரு குறிப்பிட்ட பிள்ளையின் விஷேட தேவைகளை நிறைவு செய்வனவாகவும் உள்ளன.[46]

---

[44] *Report on the Sentencing of Young Offenders*

[45] *Ibid,* P 10

[46] *Report on the Sentencing of Young Offenders*, Draft Legislation, Appendix E, Section 70

பிள்ளைக் குற்றவாளியை அவனுடைய குடும்பம் அல்லது சமுதாயத்தின் நிலைகளுக்கு ஏற்பவே பராமரிக்க வேண்டும் எனப் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது. பால்ய வயதினரின் தவறான நடத்தைகள் குடும்பச் சூழல் மற்றும் சமுதாயம் என்பனவற்றிலிருந்தே தோன்றுகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த அணுகுமுறை இடம்பெறுகிறது. இச்சூழல் மேம்படுத்தப்படாவிட்டால் அல்லது உறுதியானதாக இருந்தால் பால்ய வயதினர், சமூகத்துக்கு ஓர் அச்சுறுத்தலாக விளங்குவர். மேலும் இம் முறையிலான நடத்துமுறையானது செலவுப் பயன்பாட்டைப் பொறுத்தும் அனுகூலமாக அமையும்.

3. தவறான மற்றும் பாலியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட சிறுவர்கள்

ஒப்பந்தத்தின் 19 ஆம், 34 ஆம் உறுப்புரைகள் பிள்ளைகளைத் தவறான மற்றும் பாலியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல் பற்றி விளக்குகின்றன. இவ்விதியின் விஷேட அம்சம் என்னவெனில், பிள்ளையைத் தவறான மற்றும் பாலியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்தும் நடவடிக்கைகளைத் தடுக்கும் விடயங்களை வலியுறுத்துகிறது. ஆகவே உறுப்புரை 19 (2) ஒரு பிள்ளையைத் தவறாக, நடத்தும் போது அவற்றை இனங்காணல், அறிக்கை சமர்ப்பித்தல், புலன்விசாரணை செய்தல், நடவடிக்கை எடுத்தல், தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளல் போன்றவற்றைக் கவனிக்க வேண்டும் எனக் கூறுகிறது. உறுப்புரை 34, பிள்ளைகளைச் சகலவிதமான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் நோக்கில் தவறாகப் பயன்படுத்துதல் என்பவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும் எனக் கூறுகிறது. குறிப்பாக, சட்ட முரணான பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டுதல் பிள்ளைகளை விபச்சாரத்துக்குப் பயன்படுத்துதல், அல்லது சட்டமுரணான பாலியல் நடத்தை மற்றும் விபச்சார வருணனை நிகழ்ச்சிகளிலே தவறாகப் பயன்படுத்துதல் என்பனவற்றுக்கு எதிராக, தேசிய ரீதியில், இருபக்க மற்றும் பல்பக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் குறிப்பிடுகிறது. இவ்வாறான தரங்களுக்கு ஏற்ப இலங்கைச் சட்டமும் மதிப்பிடப்பட வேண்டும்.

இலங்கையின் சட்டத்தில் பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்தலை நேரடியாகக் கண்காணிக்கும் சட்டரீதியான ஏற்பாடுகள் எவையும் இல்லை. "சீபோ" இல் இடம்பெறும் குறிப்பிட்ட ஏற்பாடுகள் பிள்ளைகள்

துஷ்பிரயோகம் பற்றிய நோக்கில் பரந்தவையாக உள்ளன.[47] இவை உருவாக்கப்பட்ட காலத்தில் பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்தல் என்னும் விடயம் தேசிய மற்றும் சர்வதேச கவனத்தைப் பெற்றிருக்கவில்லை. இவ்வாறான தோற்றப்பாட்டின் சில அம்சங்களை மட்டுமே இவை கவனிக்கின்றன. இரண்டாவது விடயம் பற்றிய மிக விரிவான (உறுப்புரை 71) முன்னேற்பாடு உடல் மற்றும் உள துஷ்பிரயோகத்தையும் உள்ளடக்குகிறது எனினும் இது நடைமுறையில் இல்லை.[48] தண்டனைச் சட்டக் கோவையின்[49] சில ஏற்பாடுகள் கூட பிள்ளைகள் துஷ்பிரயோகத்துக்குட்படுதலைக் கவனிக்கத் தகுந்தனவாக உள்ளன.[50] குற்றவியல் வலு, தாக்குதல் மற்றும் தீங்குதரும் காயம் போன்றன சிலவகையான பிள்ளைத் துஷ்பிரயோகத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை இன்னும் பயன்பாடுடையவையாக இருக்க வேண்டுமெனின் கலகம் பற்றிய சட்டங்களைப் பரவலாக அடக்கத்தக்க வகையில் பிற்சேர்க்கைகள் இடம்பெற வேண்டும். மீள்வரைவு செய்யப்பட வேண்டும். தற்போதைய நிலையில் அவை குறுகிய நோக்குடையவை.[51]

பிள்ளைகளைப் பாலியல் நோக்கில் துஷ்பிரயோகம் செய்தல் பற்றிய தற்போதைய சட்டம், தண்டனைச் சட்டக் கோவையில் பல்வேறு ஏற்பாடுகளைப் பிரதானமாகச் சேர்ப்பதன் மூலம் திருத்தஞ் செய்யப்பட வேண்டும். இச்சட்டத்தில் விபச்சாரம் என்பது வரையறுக்கப்படவில்லை. ஆனால் தரகுபார்த்தல் அல்லது ஒரு சிறுமி விபச்சாரியாக மாறத் தரகு பார்த்தல் ஒரு குற்றமாகும்.[52] விபச்சாரத்தில் ஈடுபடும் ஒரு சிறுமியை தமது பாதுகாப்பில் வைத்திருக்கும் ஒருவர் குற்றச்சாட்டுக்குட்படக் கூடியவராவர்.[53] ஒரு பெண் குற்றமிழைத்தவர் எனத் தகுந்த சான்றுகளுடன் நன்னடத்தை அதிகாரி அளிக்கும் தகவலின் பேரில் ஒரு நீதிபதி அவளைத் தேடுவதற்கு ஆணைபிறப்பிக்கும் அதிகாரம் உடையவர். அது கண்டுபிடிக்கப்பட்டு, நீதிபதியின் முன்னிலையில் கொண்டுவரப்படும் வரையில், அவளுடைய பாதுகாப்புக் கருதி 7 நாட்களுக்கு மேற்படாமல்

---

47 Sections 34 and 71
48 See part V, CYPO and particularly Section 71
49 No. 2 of 1883. See Section 311
50 See Section 311
51 See *Technical Committee Report on Child Abuse, Aspects of Substantive Law*, Ministry of Reconstruction Rehabilitation and Social Welfare. (1994)
52 Penal Code No. 2 of 1883, Section 360 A
53 Vagrants Ordinance Section 11

ஓர் இடத்தில் தடுத்து வைக்கப்படலாம்.[54] வயதுவந்தவர் ஒருவர் ஒரு சிறுமியைக் கெடுக்க அல்லது விபச்சாரத் தொழிலுக்குக் காரணமாக இருந்தார் எனக் குற்றங்காணப்பட்டால், அப் பிள்ளையை அவளுடைய உறவினரிடம் அல்லது பெற்றோரிடம் அல்லது "சமுதாயத்திலுள்ள பொருத்தமான ஆளிடம்" ஒப்படைக்கலாம்.[55] மேலும் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் கிராமசேவை அலுவலர் ஆகியோர் தமது கடமையை உதாசீனம் செய்வார்களாயின் இந்த இசைவாணை அவர்களுக்கும் பொருந்தும்.[56] விபச்சாரிகள் கட்டளைச் சட்டமானது,[57] ஒருவர் விபச்சார விடுதியை நடத்தினால், அல்லது அதனை நிருவகிக்க உதவினால் அதனை ஒரு குற்றமாகக் கருதும். இவ்வாறான ஓர் இடத்தின் குத்தகைக்காரர், அல்லது அங்கு வசிப்போர் மற்றும் சொந்தக்காரர், அவ்விடம் விபசார விடுதியாகப் பயன்படுகிறது என அறிவாரானால், இச்சட்டத்தின்படி அவரும் குற்றத்துக்குப் பொறுப்பாவார். விபச்சாரத்துக்கான இத்தகைய ஏற்பாடுகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் அவசியம். குற்றஞ் செய்வோரைப் பயமுறுத்தித் தடைசெய்யவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் இது உதவும். முதலாவதாக, விபச்சாரத்தில் ஈடுபடும் ஆண்கள் மீது (சட்ட ஏற்பாடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டும். இவை தற்போது சட்ட ஏற்பாடுகளுக்கு புறம்பாக உள்ளன. இரண்டாவதாக, இக்குற்றமானது ஒரு பிள்ளையை விபச்சாரத்துக்குத் தூண்டும் சகலவிதமான நடத்தைகளையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் மீளவரையறை செய்யப்பட வேண்டும். பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுதலையும் தடுக்க வேண்டும். தற்போதுள்ள தீர்ப்புகள் போதாததாக இருப்பதினால் அவை திருத்தியமைக்கப்பட வேண்டும்.[58]

பிள்ளைகளைத் தகுந்த முறையில் பாதுகாக்க வேண்டுமெனில் கற்பழிப்பு, முறைகேடான புணர்ச்சி என்பன தொடர்பான சட்டங்களில் திருத்தம் அவசியமாகிறது. பிள்ளைக் கற்பழிப்பைத் தடுக்கும் பிரதான வழியாக கற்பழிப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதைத் திருத்துதல் வேண்டும்.[59] கற்பழிப்புச் சட்டத்தின்படி, ஆண் ஒருவன் 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமியுடன் அவள் விருப்பத்தின் பேரிலோ அல்லது

---

[54] *Ibid*, Section 17
[55] *Ibid*, Section 14
[56] *Ibid*, Section 20
[57] No. 5 of 1889 (as amended)
[58] *Technical committee Report on Child Abuse*, p 7
[59] See Section 363, penal code

அவ்வாறில்லாவிட்டாலோ பாலியல் தொடர்பு கொள்வதைக் கற்பழிப்பு எனக் கூறுகிறது. 12 வயது என்ற உயர் வயதெல்லையை மேலும் கூட்ட வேண்டும் என்பதற்கான அவசரத் தேவையை தொழில்நுட்பக் குழு இனங்கண்டுள்ளது.[60] இதனை விட, இலங்கைச் சட்டத்தில் கற்பழிப்புக்கான ஆகக்குறைந்த தண்டனை என்ன எனவும் குறிப்பிடப்படவில்லை. தொழில்நுட்பக் குழு தனது சிபார்சில் கற்பழிக்கப்பட்ட பெண்பிள்ளை 16 வயதுக்குட்பட்டவராக இருந்தால் ஆகக் குறைந்தது 5 வருட தண்டனையுடன் குற்றப்பணமும் கட்டாயம் செலுத்தப்படல் வேண்டும் என எடுத்துக் காட்டியுள்ளது.[61] இச் சிபார்சு நடைமுறைப்படுத்தப்பட்டால், கற்பழிப்பு ஒரு பாரதூரமான குற்றம் என்றும் அதனைக் கடுமையான முறையில் கவனிக்க வேண்டும் எனவும் எண்ணுவர்.

இலங்கைச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டிய இன்னொரு விடயம் முறை தகாப் பாலியலாகும். சி.ஆர்.சி உறுப்புரை 19 இல், ஒரு பிள்ளையானது பெற்றோர், சட்டரீதியான பாதுகாவலர், அல்லது பிள்ளையைக் கவனிக்கும் வேறொருவரின் பாதுகாப்பில் இருக்கும்போது பாலியல் துஷ்பிரயோகம் உட்படச் சகல வகையான துஷ்பிரயோகங்களுக்கும் எதிராகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெளிவாக விடுக்கப்பட்டுள்ளது. சீர்குலைந்த குடும்பங்களில் முறைதகாப் பாலியல் அடிக்கடி இடம்பெறுவதினால் அதனைத் தடுத்தல் கடினமானது. முறைதகாப் பாலியல் சம்பந்தமாக எழும் பிரச்சினைகளைத் தடுத்தல் என்பது ஒருபுறமிருக்க, தற்பொழுது தண்டனைச் சட்டத்தொகுப்பில் முறைதகாப் பாலியல் ஒரு குற்றமாகக் குறிப்பிடப்படவில்லை. நாட்டின் திருமணச் சட்டத்தில் ஒரு குற்றமாகக் குறிப்பிடப்படுவதால் குறைந்தளவிலான குற்றமாகவே கருதப்படுகிறது.[62] இலங்கைச் சட்டம் 19 ஆம் நூற்றாண்டின் ஆங்கிலப் பொதுச் சட்டத்திலிருந்து தோற்றம் பெற்றது. அதில் முறைதகாப் பாலியல் ஒரு குற்றமாகக் கருதப்படவில்லை. ஆயினும் இதுவரையில் இலங்கைச் சட்டத்தில் மாற்றம் செய்யப்படவில்லை. இங்கிலாந்தில் இது ஒரு தண்டனைக்குரிய குற்றமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் பிள்ளையொன்று குடும்பத்தில் அல்லது அதற்கு வெளியில் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமாயின், இச்

---

[60] *Technical committee Report on Child Abuse*, p 2

[61] *Ibid*, P 3

[62] Marriages (General) Ordinance No. 19 of 1907, Section 17

சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமானது. முறைதகாப் பாலியல் ஒரு பாரதூரமான குற்றமாக இருப்பதினால் பொருத்தமான குற்றவியல் தண்டனைகள் அவசியமானவை.

ஆகவே இலங்கைச் சட்டத்தில் தவறான மற்றும் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பிள்ளைகள் பற்றிய விடயத்தைக் கவனிக்க உறுதியான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையுண்டு. நடைமுறையிலுள்ள சட்டங்களானது பாலியல் துஷ்பிரயோகங்கள் மக்கள் கவனத்தைப் பெறாத காலகட்டத்தில் வரையறுக்கப்பட்டவை. இப்பிரச்சினையைத் தகுந்த முறையில் கவனிப்பதற்கு இச்சட்டங்கள் போதாதினால் சட்டச் சீர்திருத்தங்கள் மிக அவசரமாகச் செய்யப்பட வேண்டும். அவற்றைச் சிறந்த முறையில் நடை முறைப்படுத்தும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

குற்றவியல் சட்டத்தை மீறும் பிள்ளைகளிலும் பார்க்கப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்பட்ட பிள்ளைகளின் அடிப்படை நிலைமைகள் நன்றாக இல்லை. குற்றவியல் சட்டத்தை மீறும் பிள்ளைகளின் விடயத்தில் பிள்ளை-மையச் சட்டம் என ஓர் அமைப்பு உண்டு.

பிள்ளைகளைக் க்றப்பழித்தலில் காணப்பட்ட துரித அதிகரிப்பு 1994 இல் கட்டுப்படுத்தப்பட்டது. 1994 முதல் 10 மாதங்களிலும் 141 கற்பழிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன. அவற்றுள் 89 பிள்ளைகள் தொடர்பானவை[63] கற்பழிப்பு என்ற குற்றத்துக்கு அப்பால், 100க்கு மேற்பட்ட பாரதூரமான குற்றங்கள் 1994 இன் முதல் காலப்பகுதியில் இடம்பெற்றன. இவை சிறுவர் பாலியல் படங்கள், குழந்தைக்கொலை, கொலை, துன்புறுத்தல் என்பவற்றையும் உள்ளடக்கும்.[64] பிள்ளைகள் குடும்பத்துக்குள்ளும் அதற்கு வெளியேயும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றனர். இவ்வாறான துஷ்பிரயோகத்தின் தீமைகளைச் சமுதாயம் உணர்ந்து செயற்பட வேண்டும். அத்துடன் துஷ்பிரயோகம் பிள்ளைகளின் வளர்ச்சியில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை நன்குணர்ந்த பொலிஸ் படையினரும் தேவைப்படுகின்றனர். இவ்வாறான உணர்வைச் சமுதாயத்துக்கு வழங்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆற்ற வேண்டிய பங்கினை அதிகம் வலியுறுத்திக் கூறவேண்டியதில்லை. "சமாதானம்" என்னும் ஓர் அமைப்பு இத்தகைய செயற்றிட்டம் ஒன்றை

---

63 *The Island*, 31 January 1995
64 Statistics provided by the police in 1994

ஏற்கனவே தொடங்கியுள்ளது. இவ்வமைப்பு சுற்றாடலையும் பிள்ளைகளையும் பாதுகாக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது. அத்துடன் இவ்வமைப்பு ஆசிய உல்லாசப் பயணத்துறையில் பிள்ளைகள் விபச்சாரத்தில் ஈடுபடுவதை ஒழிக்கும் நோக்கில் செயற்பட்டு வரும் ஈ.சி.பி.ஏ.ரி. அமைப்புடன் (ECPAT) இணைந்துள்ளது. பொலிசாரும் இவ்வாறு அதிகரித்துவரும் துஷ்பிரயோகம் குறித்துத் துரிதமான சில நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். பொலிஸ் தலைமை அலுவலகத்திலும் நாடெங்கிலும் உள்ள பொலிஸ் நிலையங்களிலும் இவ்விடயத்துக்கென அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ் அலுவலர்கள் இவ்விடயத்தில் ஈடுபாடுள்ளவர்களாகவும் பயிற்சி பெற்றோராகவும் ஆலோசகராகவும் இருக்க வேண்டிய அவசியம் உண்டு.

இவ்வாறான குற்றங்களைக் கண்டுபிடிப்பது மட்டும் போதுமானதல்ல. குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதும் குற்றவாளி மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர் குற்றவாளியென நிரூபிக்கப்படுமிடத்து, புரிந்த குற்றத்தின் பாரதூரமான தன்மைக்கேற்ற தண்டனை வழங்கப்படல் வேண்டும். பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட சில அண்மைக்கால சம்பவங்கள் பாரதூரமான பாலியல் குற்றங்களைப் பற்றி அறிக்கை சமர்ப்பித்தல், விசாரணை மேற்கொள்ளல், சட்ட நடவடிக்கையெடுத்தல் தொடர்பாகப் பல பிரச்சினைகள் இருப்பதைச் சுட்டிகாட்டுகின்றன. 1994 ஐப்பசி மாதச் செய்திப் பத்திரிகையில் ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தனது மருமகளைக் கற்பழித்த சம்பவம் குறித்துச் செய்திகளை வெளியிட்டன. அச்செய்தியின்படி பாதிக்கப்பட்டவர் குற்றம் புரிந்தவரின் பதவியைக் கருத்திற் கொண்டு இச்சம்பவம் பற்றி முறைப்பாடு செய்ய விரும்பவில்லை.[65] இச்சம்பவம் பற்றிய வேறொரு செய்தியின்படி பாதிக்கப்பட்டவர் பின்னர் தற்கொலை செய்து கொண்டார். ஆரம்ப முறைப்பாடு பற்றி நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட வில்லையென அச்செய்தி கூறியது. அச்செய்தியின்படி குற்றப்புலனாய்வுத் திணைக்களம் இந்தத் தற்கொலைக்கும் கற்பழிப்புச் சம்பவத்துக்குமிடையே ஏதேனும் தொடர்பு இருக்கிறதா என விசாரிக்க முற்பட்டது.[66] ஒரு 16 வயதுச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் பற்றி முறைப்பாடு செய்வதிலுள்ள இடையூறுகளையும் புலனாய்வுச் செயற்பாடு சரிவர இயங்கவில்லை என்பதையும் இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

---

[65] *The Island,* 11 October 1994
[66] *The Island,* 26 January 1995

1994 இல் கவனத்தில் கொள்ளப்பட்ட இன்னொரு முக்கிய வழக்கு, ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகரால் 11 வயதுப் பிள்ளை கற்பழிக்கப்பட்டமையாகும். இவ்விடயம் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்ட வேளையில், விசாரணை நடந்தபோது சட்டமா அதிபர் குறுக்கிட்டு, போதிய சான்றுகள் இல்லையெனக் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார். ஆயினும் அவர், புலனாய்வுகளைத் தொடருமாறு குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பணிப்பு விடுத்தார். அதன் விளைவாக வழக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.[67] பாலியல் குற்றம் என்பதற்குப் புறம்பாக, குற்றம் சாட்டப்பட்டவர் நாட்டின் தொழில் சட்டங்களை மீறியமை வெளிப்படையாகத் தெரிந்திருந்த போதும் அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கூட்டுத்தன்மையற்ற குடும்பங்களில் நிகழும் பாலியல் துஷ்பிரயோகம் முதலாவது விடயமாகக் கலந்துரையாடப்பட்ட பின்னர் இரண்டாவதாக, வேலை வழங்குவோர்/வேலைகொள்வோர் தொடர்பில் நிகழும் துஷ்பிரயோகங்களும் கலந்துரையாடப்பட்டன. இலங்கையில் விபச்சாரத்தில் பெருந்தொகையான பிள்ளைகள் ஈடுபடுகின்றனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இது உல்லாசப் பயணத் துறையின் வளர்ச்சியுடன் இணைந்துள்ளது. ஏறக்குறைய 30,000 பிள்ளைகள் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக அண்மைக்கால அறிக்கையொன்று கூறுகிறது.[68] வறுமை, குடும்ப வாழ்க்கைச் சீர்கேடு, பெற்றோர் கட்டுப்பாடின்மை, கவனிப்பின்மை, அறியாமை என்பன பிள்ளை விபச்சாரத்துக்கான பிரதான காரணங்களாகக் கூறப்படுகின்றன. ஆயினும் பிள்ளை விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ள இளம்பெண்களின் தொகை, இத்துறையில் ஈடுபடுவோரின் மொத்த எண்ணிக்கையில் 30 சதவீதமாக அதிகரித்துள்ளது.[69] இன்று பரவலான கவனத்துக்கு உட்படும் இன்னொரு முக்கிய விடயமாக பாலியல் படங்களை எடுக்கப் பிள்ளைகளைப் பயன்படுத்துவதைக் குறிப்பிடலாம்.[70] இந்தப் பிரச்சினைகள் குறித்து அரசாங்க நிறுவனங்களின் பொறுப்பும் போதாதுள்ளது. நன்னடத்தைத் திணைக்களமும் பிள்ளைப் பாராமரிப்புத் திணைக்களமும் கல்வியமைச்சு மற்றும் உல்லாசப் பயணத்துறையுடன் இணைந்து சிறுவர் பாலியலை ஒழிக்கப் பொதுத் தகவல்களையும்,

---

[67] *The Island*, 11 June 1994

[68] UNICEF, *Progress of Nations* (New york, 1994) p 56

[69] *The Sunday Times*, 10 July 1994

[70] *The Island*, 9 October 1994

விழிப்புநிலை நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டமும் பாடசாலையை இடைநிறுத்தம் செய்த, மற்றும் பெற்றோரை விட்டுச் சென்ற 100 பிள்ளைகளைக் கவனித்து வருகிறது.[71] இவ்வாறான நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுவதுடன் அரசுசாரா முகவர்களின் பரந்துபட்ட ஈடுபாடும் இதன் வெற்றிக்கு அவசியமானது.

சில வழக்குகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளை ஒப்பிடும் போது அவை இலகுவானவையாக உள்ளன. பிரான்சு நாட்டுப் பிரசையொருவர் பல ஆண் பிள்ளைகளுடன் தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டபொழுது அவருக்கு 1500 ரூபா அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் 1994 இன் ஆரம்பத்தில் விதிக்கப்பட்டது.[72] ஓர் உள்ளூர் நபரும் இரண்டு 12 வயதுப் பையன்களுடன் தகாத முறையில் நடந்து கொண்டமைக்கு அவருக்கு அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. பொலிசார் பலர் பாலியல் குற்றங்களை இழைத்தமைக்காக அவர்கள் மீது குற்றங் காணப்பட்டு அவர்களுக்கு நான்கு வருடச் சிறை விதிக்கப்பட்டு பின்னர், நன்னடத்தையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.[73]

மேற்கூறிய தீர்ப்புகளின் அடிப்படையில் தொழில்நுட்பக் குழுவினரின் விதந்துரைகள் முக்கியம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இக்குழுவினர் பாலியல் குற்றம் தொடர்பான ஆகக் குறைந்த சில தண்டனைகளையும், ஏனைய குற்றங்களுக்குச் சில குறிப்பான தண்டனைகளையும், சிபார்சு செய்துள்ளனர். இவ்வாறான சட்டரீதியான மாற்றங்கள் நடைமுறையிலுள்ள எளிமையான தண்டனைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது இன்றியமையாதது.

4. தொழில்புரியும் சிறுவர்

சி.ஆர்.சி. இன் 32 ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட பிள்ளைகளின் உரிமையில் அவர்கள் பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்படுத்தப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதாரச் சுரண்டல்

---

71 *Report on the Implementation of the convention on the Rights of the Child* 1994, p 57

72 *The Island*, 3 February 1994

73 *The Island*, 5. December 1993

என்பது வரையறுக்கப்படவில்லையெனினும், பிள்ளைகள் பணிகளில் ஈடுபடுத்தப்படும் பொழுது அது அவர்களின் கல்வியைப் பாதிக்கக் கூடாது. அல்லது பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்குக் கேடுவிளைவிப்பதாக அல்லது உடல், உள, ஆத்மீக, ஒழுக்க மற்றும் சமூக அபிவிருத்திக்குத் தடையாக இருக்கக் கூடாது.[74] இவ்வுறுப்புரை அமுல் நடத்தப்படுவதை உறுதிசெய்யுமாறு சட்டரீதியான, நிருவாகரீதியான, சமூக மற்றும் கல்விரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென நாட்டின் கட்சிகள் கேட்கப்பட்டுள்ளன. வேலை வழங்குவதற்கான ஆகக் குறைந்த வயது அல்லது வயதுகள் குறிப்பிடப்பட வேண்டும் எனவும், இக்கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. வேலைநேரம், வேலை நிலைமைகள் என்பவற்றுடன், இவ்வுறுப்புரை சரியாகக் கடைப்பிடிக்கப்படாவிட்டால் அவர்களுக்கு உரிய தண்டனைகள் அல்லது ஏனைய சட்டத் தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளன.[75]

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டம் ஓரளவுக்கு சி.ஆர்.சி. இன் 32 ஆம் உறுப்புரையுடன் ஒத்துச் செல்கிறது. வேலையின் தன்மையைப் பொறுத்து, வேலைக்குரிய ஆகக் குறைந்த வயதுகளை வேறாகக் குறிப்பிடும் பல்வேறு சட்ட ஏற்பாடுகளும் உள்ளன.

இலங்கையில் வேலை செய்வதற்கான ஆகக் குறைந்த வயது 12 ஆகும். பெண்கள், இளம் நபர்கள் மற்றும் பிள்ளைகளின் வேலைதொடர்பான பிரதான சட்டங்களின் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டது. இச்சட்டம் "பெண்கள், இளம் நபர்கள் மற்றும் பிள்ளைகள் வேலை பற்றிய கட்டளைச் சட்டம்"[76] என அழைக்கப்படுகிறது. இத்தகைய ஒழுங்குமுறைகளில் பல தொழில்களைக் கொண்ட பட்டியல் உள்ளது. இதில் 12 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் வேலைக்கு அமர்த்தப்படக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. இச்சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் அடிப்படைக் கருத்து 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் வேலைசெய்வது முற்றாகவே தடுக்கப்படல் வேண்டும். 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள்[77] சில வகையான தொழில்களில் தான் வேலை செய்யலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது. வயது வந்த

---

[74] Article 32.1

[75] Article 32.2

[76] No. 47 of 1956

[77] A "child" is defined in the Employment of Women, Young Persons and Children Ordinance as a person under 14 years of age. See Section 34

பிள்ளைகள் மீது அதிக கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. 14 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் "இளையோர்"[78] என வரையறை செய்யப்பட்டனர். அவர்கள் இரவில் வேலை செய்யக் கூடாது என்பதைத் தவிர அவர்களுடைய வேலை நிலைமைகளை ஒழுங்குபடுத்தும் ஏற்பாடுகள் எதுவும் இல்லை எனலாம்.[79] 12 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் மீன்பிடி பெருந்தோட்டத்தொழில், தெரு வியாபாரம் என்பவற்றில் ஈடுபடக் கூடாதெனத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. 14 வயதுக்கு மேற்பட்ட "இளையோர்" இத்துறைகளில் வேலை செய்யலாம். இச்சட்டம் பிள்ளைகளின் வேலை நிலைமைகளை ஒழுங்குபடுத்த முயற்சித்தது. பாடசாலை நேரங்களிலும் பிற்பகல் 8 மணிக்கும் முற்பகல் 6 மணிக்குமிடையே பிள்ளைகள் வேலையில் அமர்த்தப்படக் கூடாது. பாடசாலை நாட்களில் பிள்ளைகள் இரண்டு மணித்தியாலங்களே வேலை செய்யலாம் எனினும் அவர்களுக்குக் காயத்தை ஏற்படுத்தக்கூடிய பாரதூரமான பொருட்களைத் தூக்கிச் செல்லல், உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் எத்தொழிலிலும் ஈடுபடுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.[80]

குடும்பப் பணிகளுக்கு வேதனம் வழங்கப்படுவதில்லை என்பது இந்நாட்டுச் சமூகத்தில் காணப்படும் ஒரு முக்கிய அம்சமாகும். இத்தகைய வேலைகளை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் எதுவுமில்லை. ஒப்பந்தத்தின்படி, எவருமே பிள்ளைகளைப் பொருளாதாரரீதியாகச் சுரண்டக் கூடாது. ஆனால் இவ்வாறான ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு முரணானதாகவே குடும்பப்பணி அமைகின்றது.

இலங்கையில் வீட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ள பிள்ளைகளின் நிலைமை குறித்து அக்கறை செலுத்தப்படுகின்றது. இப்பணியில் ஈடுபட்டுள்ள பிள்ளைகள் பற்றிய புள்ளி விபரங்கள் முறையாகச் சேர்க்கப்படவில்லை. சில மதிப்பீடுகள் மட்டுமே உண்டு. நகர்ப்புறங்களில் பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அமர்த்துவது சாதாரணமாக அதிகரித்துவரும் ஒரு நிகழ்வாகும். செல்வந்தர் மட்டுமன்றிச் சகல பிரிவினரும் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துகின்றனர்.[81] பிள்ளைகள் தொழில் செய்யும் நிலை

[78] A "young person" is defined in Section 34 (1) as a person who has attained the age of 14 but is under age of 18.

[79] *Ibid*, Section 2 (1). There are limited exceptions to this prohibition. See Section 3 (3) and 3 (4)

[80] Employment of Women, Young Persons and Children Ordinance, Section 13 (1)

[81] Goonasekere, S.W.E., *Child Labour in Sri Lanka: Learning from the past* (ILO Child Labour Collection, Geneva, 1993)

பரவலான வறுமையுடன் தொடர்புபட்டது என்பதில் ஐயமில்லை. இப்பிள்ளைகளில் 75 சத வீதத்திற்கு மேற்பட்டவர்கள் பெருந்தோட்ட மற்றும் நகர்ப்புறக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.[82] சம்பளமற்ற குடும்பப் பணிகளில் ஈடுபட்டுள்ள பிள்ளைகளை விட வீடுகளில் வேலை செய்யும் பிள்ளைகள் அதிகமாகத் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் சந்தர்ப்பம் உண்டு. பிள்ளைகள் வேலைசெய்யும் நிலைமைகள் தொடர்பான, விரிவான ஒழுங்குவிதிகள் இருந்தாலும் அவற்றை முறையாக நடைமுறைப்படுத்தப் பொருத்தமான முறைகள் எவையுமில்லை. எனவே நடைமுறையில் இவ்வொழுங்கு விதிகளால் எதுவித பயனும் இல்லை.

பிள்ளைகளின் வீட்டுவேலை தொடர்பான சட்டத்தை அமுல் நடத்துவதில் சில பிரச்சினைகள் உள்ளன. இப்பிரச்சினைகளை எழுதுவதற்கு முக்கிய காரணம் இச்செயற்பாட்டில் தொழிற்றிணைக்களம், பொலிசார், பிள்ளை பராமரிப்புத் திணைக்களம் ஆகிய மூன்று வெவ்வேறு திணைக்களங்கள் சம்பந்தப்படுவதே. பிள்ளைப் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் தமது பத்திரிகைப் பேட்டியொன்றில் 1993 ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பாக 1400 மனுக்கள் பெறப்பட்டதாகத் தொவித்தாரெனினும் இம்முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு தேவையான வசதிகளை இத்திணைக்களம் கொண்டிருக்கவில்லை.[83]

பொருளாதாரச் சுரண்டலுக்கு மேலாக, ஏனைய வகைத் துஷ்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்கள் பிள்ளைகளை வீட்டுவேலைக்காரராகப் பணிக்கமர்த்தப்படும் போது ஏற்படுகின்றன. தனிப்பட்ட சூழலில் பிள்ளை வசிக்கும் போது அதற்கு உதவிக்கு யாருமில்லை. அவன் அல்லது அவளுடைய பெற்றோர் வேலைகொள்வோருடன் கண்டுங்காணாதது போல் இருப்பதுடன் அங்கிருந்து பிள்ளையை அழைத்துச் செல்வதற்கும் தயங்குகின்றனர். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் குழுக்களும் வினைத்திறனற்றவையாக இருப்பதால் சீர்ப்படுத்தலும் திறன்மிகுந்ததாக இல்லை. இளம் வீட்டு வேலையாட்களுக்கு ஏற்படும் துஷ்பிரயோகத்தின் வகைகள் செய்தித்தாள்களில் பல்வேறு வடிவங்களை எடுக்கின்றன. தண்டனை என்ற வகையில் உடல்ரீதியான துஷ்பிரயோகங்கள் இடம் பெறுகிறது[84] எனக் குறிப்பிடுகின்றன.

---

[82] *Ibid,* P 11

[83] *Daily News* , 7 June 1994

[84] *Lankadeepa,* 1 March 1994; *The Sunday Leader,* 11 September 1994

தொழில்நுட்பக் குழு பிள்ளையை வேலைக்கு அமர்த்துதல் பற்றிய தனது அறிக்கையில்,[85] வேலை செய்வதற்கான ஆகக் குறைந்த வயது 15 என விதந்துரைத்துள்ளது. பாடசாலை நேரத்தின் பின் குடும்ப அலுவல்களில் தமது பெற்றோருடன் அல்லது பாதுகாவலருடன் இணைந்து வேலையில் ஈடுபடும் பிள்ளைகளுக்கு இது பொருந்தாது. மாகாண மட்டத்தில் கண்காணிப்புக் குழுவொன்றை உருவாக்குதல் பற்றியும் குழு விதந்துரைத்துள்ளது. இவ் விதந்துரைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும். மேலும் குழுவினரின் விதந்துரையின்படி, பிள்ளை தொழிற் சட்டங்களை மீறுதல் பால்ய நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள் வரவேண்டும் என்றும், குற்றவாளியான பிள்ளைகள் "பாதுகாக்கப்பட்ட ஆள்" என்ற வகையிலே கவனிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அத்தகைய ஆள் குற்றவாளியென்ற வகையில் நடத்தப்படக் கூடாது என்பது முக்கியமானது. இவ்வாறான பிள்ளைகள் பெற்றோரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட அல்லது பதிவு செய்யப்பட்ட பாதுகாவலரின் கவனத்தில் வளர்வதை உறுதிசெய்யச் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான ஏற்பாடு பிள்ளைகள் சுவீகாரச் சட்டத்தில் காணப்பட்டாலும் பலருக்கும் இதுபற்றித் தெரியாது. அதனால் இச்சட்ட விதி அதிகம் பயன்படுத்தப்படுவதில்லை. அறிக்கையில் மேலும் இந்நிலைமைகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் விழிப்புணர்வைப் பெறும் நிகழ்ச்சித் திட்டங்களும் காணப்படுகின்றன. இம் முயற்சிகள் கடந்த காலங்களில் வெற்றி பெற்றன. ஆயினும் இவற்றைத் தொடர்ந்து நடத்துவதும் அவசியம்.

5. முடிவுரை

இந்த மதிப்பீட்டு அறிக்கை குற்றவியல் சட்டத்தை மீறிய பிள்ளைகள், துஷ்பிரயோகத்துக்கும் பாலியல் ரீதியாகப் பயன்படுத்தப்பட்டோர் மற்றும் வேலையில் அமர்த்தப்பட்டோர் ஆகிய மூவகைப்பட்ட பிள்ளைகள் பற்றியது. இவ்வறிக்கை சட்டச்சீர்திருத்தங்களின் தேவையைப் பற்றியும், சட்டங்கள் மேலும் சரிவர நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

---

[85] *Report on Child Employment,* Ministry of Reconstruction, Rehabilitation and Social Welfare(1993)

பால்ய வயதினருக்கு நீதிவழங்குவதைப் பொறுத்தவரையில் தண்டனை முறைகளில் மாற்றம் தேவை. அவ்வாறே குற்றவியல் பொறுப்பேற்பதற்கான சட்டவயது, பிள்ளைகளின் வழக்கு விசாரணைக்கு முற்பட்ட நடைமுறைகள், மற்றும் விசாரணை நடை முறைகள் என்பவற்றிலும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன: நிறுவனமயமாக்கலில் கவனம் செலுத்துவதை விடுத்துச் சமுதாயத் தேவைகளைக் கருத்திற் கொண்டு திருத்தங்களைச் செய்யும் விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும்.

பிள்ளைகளின் துஷ்பிரயோகம் பற்றிய விடயம் சில குறிப்பிட்ட சட்டத்துறை மாற்றங்களை வேண்டி நிற்கிறது. அத்துடன், இவ்விடயம் பற்றி விசாரித்து, நீதிமன்றத்தில் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்காடுவதில் கூடிய உறுதியும் தேவை என்பதை இது வலியுறுத்துகிறது. ஆயினும் இவ் அம்சத்தில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. துஷ்பிரயோகத்துக்குள்ளான பிள்ளைகள் கூடியளவுக்கு வன்முறையுடன் கூடிய குற்றவியல் நடத்தையை வளர்த்துக் கொள்கின்றனர் என்பது பற்றி இன்று ஆய்வு ரீதியாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வேறு சில ஆய்வுகளின்படி துஷ்பிரயோகத்துக்குள்ளான வளர்ந்தோர் தமது பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்யக் கூடிய அல்லது கவனிக்காமல் விடக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நன்னடத்தை, பிள்ளைப் பராமரிப்புத் திணைக்களத்தை மறுசீரமைப்புச் செய்தல், உள்நிலைப் பயிற்சி, தொண்டர் நன்னடத்தை அதிகாரிகள் ஆகியோரைப் பயன்படுத்தல், அரசுசாரா அமைப்புகளின் பங்களிப்பு ஆகிய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள உரிமைகளை இலங்கை வாழ் பிள்ளைகளுக்கு வழங்கப்படல் இன்றியமையாதவையாகும்.

பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதலில் உள்ள முக்கிய பிரச்சினை நடைமுறைப்படுத்தலாகும். இது தொடர்பான சட்டமும் விதிமுறைகளும் இருந்தாலும் அவை நடை முறைப் படுத்தப்படுவதில்லை. எனவே சட்டத்துறை மாற்றங்கள் மட்டும் போதுமானவை எனக் கூறுவதற்கில்லை.

செல்வி. சாரியா பசநாயக்க என்பவரின் உதவியை இக்கட்டுரையாளர் நன்றியுடன் குறிப்பிடவிரும்புகிறார்.

16

இலங்கையில் பெண்களின் நிலை

1. அறிமுகம்

இவ் அத்தியாயமானது இலங்கைப் பெண்களின் மனித உரிமைகள் நிலைபற்றி மதிப்பீடு செய்கின்றது. பெண்களுக்கு எதிரான சகல பாரபட்சங்களையும் நீக்குதல் (CEDAW) பற்றிய மகாநாட்டு உடன்படிக்கை 1981 ஆம் ஆண்டிலேயே பின்னுறுதிப்படுத்தப்பட்டது. எனினும் அதன் விதிகள் மனித உரிமைகளை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நியமங்களையும், செயன் முறைகளையும் எந்தளவுக்கு உருவாக்கியுள்ளன என்பது பற்றி இவ் அத்தியாயம் வினா எழுப்புகின்றது.

பெண்களின் மனித உரிமைகளின் நிலைமை பற்றிய பகுப்பாய்வானது ஒரு பரந்த நோக்கைக் கொண்டு அமைய வேண்டியுள்ளது. ஒரு குறிப்பிட்ட பெண்கள் குழுவினரின் அந்தஸ்தும், அனுபவமும் முக்கியமாகக் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. எனவே இவ் அத்தியாயத்தில் "பெண்கள்" என்னும் பதம் சகல பெண்களையும் உள்ளடக்கியதாகப் பிரயோகிக்கப்பட்ட போதிலும் உப குழுக்களைச் சார்ந்த பெண்களின் குறிப்பான பிரச்சினைகள் இங்கு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. அடுத்து, சில விடயங்களில் பெண்கள் முகங் கொடுக்கும் சிரமங்கள் வெளிப்படையாகத் தெரிவதில்லை. பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றிய புள்ளி விபரத் தகவல்கள் போதுமானவையாக இல்லை. கற்பழிப்பு, விபசாரம், உள்வீட்டு வன்முறைகள் பற்றிய விபரங்கள் முழுமையாகக் கிடைப்பதில்லை. இங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இத்தகைய குற்றங்களை முறையிடுவதற்குப் பெண்கள் எவ்வளவு தூரம் தயாராக இருக்கின்றார்கள் என்பது சந்தேகமே. அத்துடன் இத்தகைய குற்றச் செயல்களின் மீது நடவடிக்கை எடுக்க எந்தளவிற்கு அதிகாரிகள் தயாராக இருக்கிறார்கள் என்பதைப் பற்றிய விபரங்களும் போதுமான

அளவுக்குக் கிடைப்பதில்லை. அத்துடன் பொதுத்துறை / தனியார்துறை என்னும் இரு கூறுபட்ட பிரிவானது பெண்களின் பிரச்சினைகளையும் அனுபவங்களையும் குறிப்பாக வீட்டுப் பிரச்சினைகளை மூடி மறைத்து விடுகின்றது.

இத்தகைய கருத்துக்கள் தவிர, இலங்கையில் பெண்களின் நிலையானது பல குறிகாட்டிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. சமூக,பொருளாதார அந்தஸ்து, கல்வித் தகைமைகள், சுகாதாரம், பொருத்தமான சட்ட ஏற்பாடுகளின் ஆய்வு மற்றும் பொருத்தமான அறிக்கைகள் ஆவணங்களையும் ஆய்வு செய்தல் என்பன இங்கு பயன்படுத்தப்படுகின்றன. இலங்கைப் பெண்களின் நிலையை மதிப்பீடு செய்வதற்கு அவசியமான நியமங்களும், நிபந்தனைகளும் பின்வரும் பிரதான ஆவணங்களிலிருந்து பெறப்படுகின்றது: CEDAW, இலங்கை அரசியல் யாப்பு மற்றும் இலங்கைப் பெண்கள் பட்டயம், 1993. அத்துடன் இம் மதிப்பீடானது ஐ.சி.சி.பி.ஆர், ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர். (ICCPR, ICESCR), உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரகடனம் ஆகியவற்றின் முன்னேற்பாடுகளையும், உறுப்புரைகளையும் கவனத்தில் கொண்டுள்ளது. பெண்களின் நிலைமை பின்வரும் வகையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

(i) அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள்

- அரசியல் யாப்பு முன்னேற்பாடுகள்
- ஏனைய சாதனங்கள். தேசிய மற்றும் சர்வதேசிய பொது வாழ்வில் பங்குபற்றல்

(ii) பொருளாதார சமூக உரிமைகள்

- திருமணம், குடும்பம் மற்றும் விவாகரத்து
- சுகாதார அந்தஸ்து
- கல்வி மட்டங்கள்
- பொருளாதார ரீதியான பங்கு பற்றலும் தொழில் சட்டங்களும்

(iii) பெண்களுக் கெதிரான வன்முறை

மேற் கூறிய விடயங்களிலிருந்து பெண்களின் தற்போதைய நிலைமை பற்றிய ஒரு பொதுவான பார்வை பெறப்படுகின்றது. அத்துடன் CEDAW வின் முன்னேற்பாடுகள் தொடர்பான மீறல்களும் இனங் காணப்படுகின்றன.

2. அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள்

2.1 அரசியல் யாப்பு முன்னேற்பாடுகள்

இலங்கை அரசியல் யாப்பின் உறுப்புரை 12 (2) "பால் அடிப்படையில் எந்தவொரு பிரசைக்கும் எதிராகப் பாகுபாடு காட்டப்படக்கூடாது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் உறுப்புரை 12 (4) இல் "இந்தப் பிரிவில் உள்ள எந்தவொரு ஏற்பாடும் பெண்கள், பிள்ளைகள் மற்றும் வயது குறைந்தோரின் முன்னேற்றம் கருதிச் சட்டங்கள், துணைச் சட்டங்கள் அல்லது நிர்வாக நடவடிக்கைகளில் விசேட முன்னேற்பாடுகளைச் செய்வதைத் தடுப்பதாக அமையக் கூடாது" எனக் கூறுகின்றது. அத்துடன் இலங்கையின் உயர் நீதிமன்றம் அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருந்த போதும் இதுவரை பால் ரீதியான பாரபட்சம் தொடர்பான எந்தவொரு வழக்கும் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவில்லை.

2.2 ஏனைய பொருத்தமான தேசிய சாதனங்கள்

* திருமண உரிமைகள் மற்றும் சொத்துரிமை பெறுதல் கட்டளைச் சட்டம் (1876)
* திருமணம் செய்த பெண்களின் சொத்துக் கட்டளைச் சட்டம் (1923)
* பிரசவ நன்மைகள் சட்டம் இல. 43, 1985 (திருத்தப்பட்டது)
* பிரசவ நன்மைகளை நிர்வாக விதிகளின் படி (பொ.நி.சுற்றறிக்கை 22/98, 1988) பொதுத்துறைக்கு விரிவாக்கல்
* குழந்தைகள் பட்டயம் 1992 (சனாதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டது)

இலங்கைப் பெண்கள் பட்டயம் இங்கு மிகவும் பொருத்தமானதுடன் அதில் கொள்கை உருவாக்கம் தொடர்பான பால்சார் சமத்துவ நியமங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இப் பட்டயமானது அரசாங்க நிர்வாகத்தின் கொள்கைப் போக்கினை வழிகாட்டும் என எதிர் பார்க்கப்பட்டாலும் இப்பட்டயத்துக்குச் சட்ட அதிகாரம் கிடையாது. எனவே பெண்கள் பட்டயத்துக்கு இத்தகைய அதிகாரத்தை வழங்கும் ஆலோசனை வரவேற்கப்பட வேண்டியது.

இப்பட்டயத்தின் படி பெண்களுக்கான தேசியக் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அக் குழுவுக்குப் பட்டயத்தின் முன்னேற்பாடுகளின் பிரயோகம் மற்றும் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும்

அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பால் ரீதியான பாகுபாடுகள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்கவும் சம்பந்தப்பட்டவர்களுடன் விசாரணை மேற் கொள்ளவும் அதிகாரம் கொண்டுள்ளது. ஆனால் இக்குழுவிற்குச் சட்ட ரீதியான அதிகாரம் வழங்கப்பட்டால் பெண்களின் நன்மைகள் தொடர்பான இதன் செயற்பாடுகள் காத்திரமானவையாக இருக்கும். இன்னும் சில வருடங்களில் இக் குழுவிற்குப் பதிலாக ஒரு வலுமிக்க ஆணைக் குழு நிறுவப்படும் என்னும் எதிர்பார்ப்பும் உள்ளது.

2.3 பொருத்தமான சர்வதேச சாதனங்கள்

* சி.ஈ.டி.ஏ.டபிள்யூ.1981
* திருமணம் செய்த பெண்களின் தேசியம் தொடர்பான ஐ.நா மகாநாட்டுடன்படிக்கை 1957.
* ஐ.எல்.ஓ மகாநாட்டுடன்படிக்கை, இல. 45 (சுரங்கம் உட்பட எல்லா வகையான நிலக்கீழ்வேலை பற்றிய பெண்களின் தொழில் 1935.
* ஐ.எல்.ஓ மகாநாட்டுடன்படிக்கை (இல. 81) (கைத்தொழில் வர்த்தகத்தில் தொழில் பரிசோதனை) 1947
* ஐ.எல்.ஓ மகாநாட்டுடன்படிக்கை (இல. 41) (இரவு வேலை) 1934
* ஐ.எல்.ஓ மகாநாட்டுடன்படிக்கை இல. 100 ஆண், பெண் வேலையாட்களுக்குச் சமமான வருமானம்), 1993
* ஐ.எல்.ஓ மகாநாட்டுடன்படிக்கை (இல .103) மகப்பேற்று நன்மைகள் 1952
* பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான பொதுச் சபைத் தீர்மானம் (காரணங்கள், விளைவுகள் உட்பட) 1993

அரசியல் யாப்பும், மேற்கூறப்பட்ட தேசிய, சர்வதேச் சாதனங்களும் பெண்களின் உரிமைகளை வடிவமைப்பதோடு தீர்வு வழிகளையும் காட்டுகின்றன.

2.4 பொது வாழ்வில் பங்கேற்றல்

பொது வாழ்வில் பெண்கள் பங்கேற்றல் தொடர்பான தரவுகளினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் மிகவும் குறைவாக உள்ளன. 1955 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சரவை மட்டத்திலான அமைச்சர்களில்

பெண்கள் 10 வீதத்துக்கும் குறைவாகவே உள்ளனர்.[1] (அட்டவணை 1) அமைச்சரவை அந்தஸ்து இல்லாத பெண் அமைச்சர்களின் விகிதமும் இதே அளவாகவே உள்ளது. (அட்டவணை 2)

அட்டவணை 1: அமைச்சரவை மட்டத்திலான அமைச்சர்கள்

	மொத்தம்	ஆண்	பெண்	சத வீதம்
1980	26	25	1	3.8
1985	28	26	2	7.1
1990	26	25	1	3.8
1993	29	28	1	3.4
1994	23	20	3	13.0

அட்டவணை 2 : அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள்

	மொத்தம்	ஆண்	பெண்	சத வீதம்
1980	39	39	0	0
1985	42	42	0	0
1990	52	47	5	9.5
1993	52	47	5	9.5
1994	31	28	3	9.7

1993 இல் அமைச்சரவை அந்தஸ்து அற்ற 55 செயலாளர்களில் 7 பேர் (13%) பெண்கள் எனினும் அவர்களில் யாரும் அமைச்சரவைச் செயலாளர்களாகப் பணியாற்றவில்லை.[2] உள்ளூராட்சிச் சபைகளிலும் பெண்களின் பிரதி நிதித்துவமும் குறிப்பிடத்தக்களவில் இல்லை. 1983 இல் மாநகர சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 3 பேர் பெண்களாக (1.3%) இருந்தனர். இந்நிலை 1993 இல் 2.9 வீதமாக

---

[1] ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் தேசிய அறிக்கை. பெண்கள் (நகல்) பற்றிய 4 ஆவது உலக மகாநாடு. (பெண்கள் விவகார அமைச்சு, கொழும்பு, 1994). புள்ளிவபரத் தகவல்களை வழங்கியமைக்காக திருமதி. லலிதா திசாநாயக்காவுக்குக் கட்டுரையாளர்கள் நன்றியைத் தெரிவிக்கின்றனர். நகல் அறிக்கையின் பக்க இலக்கங்கள் தரப்படவில்லை.

[2] *Ibid*

சிறிது அதிகரித்ததுடன் 1993 இல் நகர சபை அங்கத்தவர்கள் 247 பேரில் 6 பேர் மட்டுமே (1.7%) பெண்களாக இருந்தனர். 1991 இல் 12 மாநகர சபை முதல்வர்களில் ஒருவர் மட்டுமே பெண் ஆக இருந்தார்.[3]

1993 இல் நீதித்துறையில் பெண்களின் பங்கு கணிசமான அளவுக்கு உயர்ந்ததுடன் கீழ் நீதிமன்றங்களின் (மாவட்ட/நீதிவான்/ஆரம்ப) நீதிபதிகளில் 23 வீதம் பெண்களாவர். ஆனால் உயர் நீதிமன்றங்களில் (மேல்/முறையீட்டு நீதிமன்றம்/உயர்) பெண்களின் வீதம் குறிப்பிடக் கூடிய அளவுக்கு (4.7%) குறைவாக உள்ளது. வழக்கறிஞர்களில் 44 வீதம் பெண்களாக இருக்கும் போது நீதிமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பது கேள்விக்குரியதாகும்.[4]

சட்டரீதியான வரையறைகள் ஏதுமற்ற இவ்வாறான பொதுத் துறை வாழ்வில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் கீழ்மட்டத்திலிருப்பது திட்டமிட்ட பால் பாகுபாட்டுக்குச் சான்றாக இருப்பதுடன் ஒரு "கண்ணாடி உச்சமட்டம்" தொழிற்படுவதையும் வெளிப்படுத்துகின்றது. பொதுவாழ்வில் பெண்களின் பங்கு பற்றலைத் தடை செய்யும் பல காரணிகள் பன்முகப்படுத்தப்பட்டனவாகவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டும் காணப்படுகின்றன. ஒரு வழியில் அபேட்சகர் பட்டியலுக்கு அரசியல் கட்சிகள் பெண்களைத் தெரிவு செய்யும் போது திறமைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதில்லை. இன்னொரு வழியாகப் பார்க்கும் போது குடும்பப் பொறுப்புக்கள் காரணமாக ஒருசில பெண்களே உயர் பதவிகளில் நாட்டமும் கொள்கின்றனர்.

CEDAW இன் உறுப்புரை 7 பொதுவாழ்வில் பெண்களின் பங்கு பற்றல் தொடர்பான முன்னேற்பாடுகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக உறுப்புரை 7 (ஆ) "நாட்டின் கட்சிகள் அரசாங்கக் கொள்கை உருவாக்கத்தில் பெண்கள் பங்கு பற்றுவதற்குள்ள உரிமையையும் அவற்றை அமுல்படுத்தல், பொதுத்துறைப் பதவிகளை வகித்தல் மற்றும் அரசாங்கத்தின் சகல மட்டங்களிலும் பொதுச் செயற்பாடுகளை ஆற்றுதல் ஆகியவை தொடர்பான பெண்கள் உரிமையையும் உறுதிப்படுத்த வேண்டும்." எனக் கூறுகின்றது.

---

[3] *Ibid*
[4] *Ibid*

உயர் பதவி வகித்தல் என்பதைத் தவிர இலங்கையின் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஆண்களுக்குச் சமத்துவமாக இருக்கவில்லை. இந் நிலைமைக்குக் காரணமான பல்வேறு காரணிகள் பற்றி ஆய்வுகள் செய்யப்படவேண்டும். அதேபோல் பெண்களை அரசியல் செயன் முறைகளில் ஊக்கத்துடன் பங்குபற்றச் செய்யும் உபாயங்களும் விருத்தி செய்யப்பட வேண்டும். அவ் உபாயங்கள், இவ்வாறு பெண்கள் பங்குபற்றுவதன் மூலமாக அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய நலன்களைப் பற்றிய தகவல்களைப் பரப்புவதோடு சமத்துவமான பங்கு பற்றலுக்குத் தடையாக உள்ளவைகளும் நீக்கப்படுவதற்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

3. பொருளாதார சமூக உரிமைகள்

3.1 திருமணம், குடும்பம் மற்றும் விவாகரத்து

சட்டங்கள் தனிப்பட்ட உறவுகளில் தலையிடுவதில்லை எனக் கூறப்பட்ட போதும் சொத்து, சொத்துக்களைப் பெறுதல் மற்றும் திருமணம் தொடர்பான சட்டங்கள் குடும்பத்தில் பெண்களின் அந்தஸ்தைக் குறைக்கின்றன. குணசேகர என்பவர் "இலங்கையின் குடும்பச் சட்டத்திலுள்ள பன்முகத் தன்மையானது சட்ட ஒருமைப்பாட்டை அறிமுகம் செய்யவும், பால் ரீதியான சமத்துவத்தை உறுதி செய்யவும் பொதுவான சட்ட விழுமியங்களை முன் வைப்பதற்கும் தடையாக உள்ளது".[5] எனக் கூறுகின்றார்.

குடும்ப உறவுகளை நான்கு வேறுபட்ட சட்டமுறைகள் தீர்மானிக்கின்றன.

* பொது
* கண்டிய
* தேசவழமை
* முஸ்லிம்

---

[5] Goonesekere, S.W.E., "Status of Women in the Family Law of Sri Lanka" in kiribamune, S. and Samarasinghe, V.(eds), *Women at the Crossroads: A Sri Lankan Perspective* (International Centre for Ethnic Studies, 1990)

குடும்ப உறவுகளைச் சீர் செய்யும் சட்டங்களுக்கிடையிலான முரண்பாடுகள் இன மற்றும் மத பன்முகத்தன்மையை உறுதி செய்வதற்கான நாட்டின் கடப்பாட்டைப் பிரதிபலிக்கின்றன எனக் கூறப்படுகின்றது. எனினும் நடைமுறையில் சட்டங்களும் அவற்றிற்கிடையிலான இடைத் தொடர்புகளும் பால் சார்ந்த சமத்துவத்தை அடைவதற்குத் தடையாக உள்ளன. இவ்வாறு தெளிவாக அடையாளம் காணக் கூடிய முரண்பாடுகளைப் பின்வருமாறு விளக்க முடியும்.

திருமணத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம் அல்லாத இலங்கைப் பெண்கள் ஒரே மாதிரியான சட்ட உரிமைகளைக் கொண்டுள்ளனர். எனினும் கண்டிய மற்றும் பொதுச் சட்டங்களின்படி திருமணத்துக்கு சட்டப்படி இணங்கும் வயது பெண்களுக்குப் 12 ஆகவும், ஆண்களுக்கு 14 ஆகவும் உள்ளது. இலங்கை பின்னுறுதிப்படுத்திய சி.ஈ.டி.ஏ.டபிள்யூ. மற்றும் குழந்தைகள் உரிமை, அரசியல் யாப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் இவ்வாறான ஏற்றத் தாழ்வுகள் அனுமதிக்கப்படலாமா என்பது கேள்விக்குரியது. இவ்வாறான ஏற்றத் தாழ்வுகளும் திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதும் தாய்மை அடைதல் தான் பெண்களின் முதன்மையான கடமை என்னும் சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

திருமணத்துக்கு இணங்குதல் தொடர்பான ஏற்பாடுகள் பொதுத் திருமணக் கட்டளைச் சட்டம் (1907), கண்டிய திருமணச்சட்டம் (1952) ஆகியவற்றின் கீழ் மாறுபடுகின்றன. இவற்றில் முதலாவது சட்டம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமண வயது 18 எனக் கூற, இரண்டாவது பெண்களுக்கு 16 எனவும், ஆண்களுக்கு 18 எனவும் விதிக்கின்றது. இது பெண்களின் கடமை மற்றும் பாலியல் தொடர்பான கருத்துக்களை உறுதிப்படுத்துவதாக இருக்கின்றது.

முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்திலும் பெண்களைப் பற்றிய மனப்பாங்குகள் சட்ட ஏற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம். இச் சட்டத்தின் படி ஒரு பெண் பூப்பெய்தியவுடன் திருமணம் செய்ய முடியும். ஆனால் வயது 12 க்கு குறைவாக இருப்பின் காதி (Quazi) யின் அனுமதி வேண்டும். இச்சட்டமானது ஆண்களுக்கான திருமண வயது, இணக்கத்துக்கான தேவை பற்றி எதனையும் விதிக்கவில்லை. ஆனால் காதியின் அனுமதி இல்லாதவிடத்து பெண்கள் திருமணம் முடிக்கத் தமது பாதுகாவலரின் அனுமதி பெறவேண்டும். அத்துடன் முஸ்லிம் பெண்கள், முஸ்லிம் அல்லாத ஓர் ஆணை மணம்

முடிக்க தடை செய்யப்பட்டிருந்தாலும் அத்தடை ஆண்களுக்கு இல்லை. அத்துடன் பொதுத் திருமணக் கட்டளைச் சட்டம், கண்டிய திருமணச் சட்டம் மற்றும் தேச வழமை ஆகியவை ஒரு நேரத்தில் ஒரேயொரு சட்ட பூர்வத் திருமணத்தை மட்டுமே அங்கீகரிக்கும் போது முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் பலதார முறையை அனுமதிக்கின்றது. அண்மைக் காலத்தில் முஸ்லீம் சமூகத்தில் உருவாகியுள்ள அடிப்படை வாதம் இம்முன்னேற்பாடுகள் சிலவற்றைக் கையாள முடியாததாக மாற்றியுள்ளது. அத்துடன் உடை மற்றும் நடை மாற்றம் தொடர்பான மேலதிகக் கட்டுப்பாடுகள் முஸ்லிம் சமூகம் முகம் கொடுக்கின்ற சங்கடத்தை ஏற்படுத்தும் யதார்த்தமாகும்.

விவாகரத்து விடயத்திலும் இவ்வாறான வித்தியாசங்கள் சட்டங்களுக்கிடையே உள்ளன. பொதுத் திருமணக் கட்டளைச் சட்டம், சிவில் நடைமுறைக் கோவை என்பன சோரம் போதல், கைவிட்டுச் செல்லல், குணப்படுத்த முடியாத மலட்டுத் தன்மை, இரு வருடங்கள் சட்ட ரீதியாகப் பிரிந்திருத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் விவாகரத்துக்கான முறையீட்டை இருபாலாரும் தாக்கல் செய்ய அனுமதிக்கின்றன. ஆனால் கண்டிய திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் விவாகரத்து விடயங்களில் பெண்களுக்கு பாகுபாடு காட்டுகின்றது. இச் சட்டத்தின் படி ஒரு பெண் விவாகரத்துக் கோர துரோகமிழைத்தல் மட்டும் போதுமான காரணமாக இல்லை. அதற்கு மேலதிகமாக முறைதகாப் புணர்ச்சி அல்லது கொடுமையிழைத்தல் ஆகியவையும் சேர்க்கப்பட வேண்டும். ஆனால் இருபாலாரின் சம்மதத்தின் பேரில் அல்லது மகிழ்ச்சியுடன் இணைந்து வாழ முடியாத பட்சத்தில் இச்சட்டம் விவாகரத்தை அனுமதிக்கின்றது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும். முஸ்லிம் சட்டத்தின் படி தனது மனைவியை விவாகரத்துச் செய்யக் கணவன் காரணம் காட்ட வேண்டியதில்லை.

சிங்களப் பெண்களும் தேச வழமைச் சட்டத்துக்கு உட்பட்ட பெண்களும், முஸ்லிம் பெண்களும் அவர்களது சட்டங்களின் அடிப்படையில் சுதந்திரமான சொத்துரிமையைக் கொண்டுள்ளனர். எனினும் முஸ்லிம் பெண்களின் உரிமைகள் இஸ்லாமிய சட்டத்தில் உள்ள சொத்துரிமை சம்பந்தமான சில வரையறைகளினால் பாதிக்கப்படுகின்றன. குணசேகர கூறியுள்ளதைப் போல் "மரபுச் சட்டங்களில் இல்லாத கட்டுப்பாடுகள் சொத்துரிமை பெறுதலைச் சீர் செய்யும் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன." இவ்வாறாக, "ஒரு திருமணம் செய்த பெண் தனது குடும்பச் சொத்துக்களில் கொண்டிருக்கும் உரிமையை இழக்கிறார்.

இது இம் முறைமைகளுக்கு உட்பட்டுள்ள சில குறிப்பிட்ட சிங்கள, தமிழ் பெண்கள், ஆண்களுக்குள்ள சொத்துரிமைகளைத் தாமும் பெறுவதைத் தடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது"[6] எனலாம்.

திருமண உறவு முறிவடையும் சந்தர்ப்பங்களில் சொத்துக்களைப் பிரிக்கும் விடயத்திலும் இவ்வாறான ஏற்றத் தாழ்வுகள் சட்டங்களுக்கிடையில் காணப்படுகின்றன. திருமணம் முடித்த பெண்களின் சொத்துரிமை கட்டளைச் சட்டத்தின்படி இருபாலாரும் தாம் ஆரம்பத்தில் கொண்டிருந்த சொத்துக்களை மீளப் பெறுகின்றனர். ஆனால் அண்மைக் காலங்களில் நீதிமன்றங்கள் கூறிய தீர்ப்புக்களில் ஒரு பாலாரின் சொத்துக்களில் மறுபாலார் செய்த பங்களிப்புக்களுக்கு மதிப்பளிக்கும் போக்குக் காணப்படுகின்றது. கண்டியச் சட்டத்தின்படி திருமணம் முடித்த பெண்கள் தனியான சொத்துரிமைகளைக் கொண்டிருப்பதை நீதி மன்றங்கள் பாதுகாக்கின்றன.[7] முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின்படி திருமணம் முறிந்து மூன்று வருடங்களில் சீதனம் திரும்பப் பெறப்படவேண்டும். அத்துடன் இச்சட்டத்தின் படி ஒரு பெண் தனது சீதனத்தைத் திருமண வாழ்வின் போதே எத்தருணத்திலும் திரும்பப் பெறமுடியும்.

மேற்படி நான்கு முறைமைகளைப் பற்றிய சுருக்கமான மதிப்பீடு தனியாள் உறவுகளில் பால் பாகுபாடுகளும், சமத்துவமின்மைகளும் இருப்பதைக் காட்டுகின்றன. குடும்பச் சட்டங்கள் தொடர்பாக, இலங்கையில் கைக்கொள்ளப்படும் பன்முகப்பட்ட அணுகு முறையானது ஆண் மேலாண்மையைப் பாதுகாக்கின்றது. பெண்கள் உரிமைகள் தொடர்பாக ஒரு சமத்துவ அணுகு முறையைக் கைக்கொள்வதைத் தடுக்கின்றது. அரசியல் யாப்பிலுள்ள அடிப்படை உரிமைகள் பற்றிய உத்தரவாதம் வரையறையுள்ளது. ஏனெனில் பாகுபாடு காட்டக் கூடிய தற்போதைய சட்டங்களை மீளாய்வு செய்யும் ஏற்பாடுகள் இதில் உள்ளடக்கப்படவில்லை. தனியாள் உறவுகள் பற்றிய சி.ஈ.டி.ஏ.டபிள்யூ. வின் உறுப்புரை 5(அ) பின்வருமாறு கூறுகின்றது.

"பாகுபாடுகளை நீக்குதல் மற்றும் ஆண், பெண் பாலாரிடையேயும் உயர்வு, தாழ்வுகளை உருவாக்கும் மரபுகளையும் ஏனைய நடை

---

6 Goonesekere, S.W.E., "Women and Law" in *Status of Women (Shri Lanka)* (Ministry of Health and Women's Affairs, 1993)

7 See supra n 5, p 165

முறைகளையும் நீக்குதல் ஆகிய குறிக்கோளை அடையும் பொருட்டு ஆண்கள், பெண்களின் சமூக, கலாசார நடத்தைக் கோலங்களை மாற்றுவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்".

3.2 சுகாதார நிலைமை

சி.ஈ.டி.ஏ.டபிள்யூ. வின் உறுப்புரை 12 (1) உடல் நலப் பராமரிப்பில் பெண்களுக்கெதிராகக் காட்டப்படும் பாரபட்சத்தை நீக்கும் பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கொள்ள வலியுறுத்துகின்றது. குறிப்பாக உறுப்புரை 12 (2) பின்வருமாறு கூறுகின்றது:

> "கர்ப்பந்தரித்தல், மகப்பேறு மற்றும் சிசு பராமரிப்புக் காலத்தில் பெண்கள் பொருத்தமான, தேவையானவிடத்து, இலவசமான சேவையையும், கருவுற்றிருக்கும் காலத்திலும், பாலூட்டும் காலத்திலும் போஷாக்கு பெறுவதையும் நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும்".

உடல் நல பராமரிப்பு எந்தளவுக்குப் பொருத்தமான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பது மரணவீதம், சனத் தொகையில் மருத்துவர், தாதிகள் வீதம், உடல் நலத்துக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் ஆகிய குறிகாட்டிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும். ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெண்களின் நிலையை ஒப்பீடு செய்வதற்கு "மனித அபிவிருத்தி அறிக்கை, 1994" இல் உள்ள தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. மனித அபிவிருத்திச் சுட்டெண் ஆயுள் எதிர்பார்ப்பு, கல்வி அடைவு மற்றும் வருமானம் ஆகியவற்றை ஒன்றிணைப்பதன் மூலம்[8] பெறப்படுகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இச் சுட்டெண்ணின் அடிப்படையில் இலங்கை 90 ஆம் இடத்தில் உள்ளது. நடுத்தர மனித அபிவிருத்தியைக் கொண்ட நாடுகளில் இலங்கை இடம் பிடித்துள்ளது. இவ் அறிக்கையின் படி 1988-90 காலப் பகுதியில் கர்ப்பிணிப் பெண்களில் 86 வீதமானோர் முன் பிரசவப் பராமரிப்பினைப் பெற்றிருந்தனர். இதே கால இடைவெளியில் நடுத்தர அபிவிருத்தி கொண்ட நாடுகளில் இப்பராமரிப்புக்

---

[8] *The Human Development Report,* United Nations Development Programme (UNDP) (Oxford University Press, Delhi, 1994) p 90

குறைவாகவே காணப்பட்டது. உதாரணமாக, தாய்லாந்து 53%, பிலிப்பைன்ஸ் 77%, மலேசியா 56% ஆகக் காணப்பட்டது.[9]

இலங்கையில் சுகாதார அமைச்சினால் நடத்தப்படும் தாய் - சேய் உடல் நலத்திட்டம் இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். 1926 இல் ஆரம்பிக்கப்பட்ட தாய் உடல் நல சேவைத்திட்டத்தின் படி பயிற்றப்பட்ட மருத்துவ மாதர் குழந்தைப்பேற்றைக் கவனிக்க வீடுகளுக்கு வருகை தருகின்றனர். 1992 இல் மட்டும் இவ்வாறான 6000 வருகைகள் பொதுமருத்துவ மாதர்களால் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்பது மதிப்பிடப்பட்டுள்ளது.[10] எனினும் கர்ப்பிணிப் பெண்களின் உடல் நலநிலை மிகவும் குறைவாக இருப்பதுடன் இலங்கையில் இவ்வாறான பெண்களில் குறிப்பிடக் கூடிய எண்ணிக்கையினர் இரத்தச் சோகை உள்ளவர்களாக இருந்தனர். 1975-90 காலப்பகுதியில் 62 வீதமான தாய்மை அடைந்த பெண்கள் இரத்தச் சோகையினால் பீடிக்கப்பட்டிருந்தனர். இவ்வீதம் தாய்லாந்தில் 52 ஆகவும், பிலிப்பைன்சில் 48 ஆகவும் மலேசியாவில் 34 ஆகவும் இருந்தது.[11]

பெரும்பாலான மகப்பேறுகள்(85%) பயிற்சி பெற்றோரினால் அவதானிக்கப்பட்டாலும் பிரசவ மரணம் 100,000 உயிருள்ள பிறப்புக்களுக்கு 180 ஆகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பிரசவ மரணவீதம் உயர் நிலையில் உள்ளன. எனினும் இவ் வீதம் கனடா, யப்பான், நியூசிலாந்து முதலிய நாடுகளில் 5-20 வீதமாக உள்ளன என்பது கவனிக்கத்தக்கது. பாதுகாப்பான குடும்பத்திட்டம், தாய்மையின் போதும் பிரசவத்தின் போதும் ஆகக் குறைந்த பராமரிப்பை அளித்தல், பிரச்சினையுள்ள பெண்களை வைத்தியசாலைக்கு அனுப்புதல் என்பவற்றின் மூலம் இம் மரணங்கள் தவிர்க்கப்பட முடியும்.[12]

எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் வேகமாகப் பரவுதலினால் பெண்களின் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. உலகில் எச்.ஐ.வி இன் பாதிப்புக்குள்ளான 15 மில்லியன் மக்களில் 12.5 மில்லியன் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இருக்கின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1993 இல் கண்டுபிடிக்கப்பட்ட 43 எச்.ஐ.வி

---

9 *Ibid*, p 150
10 See supra n 1
11 *The Human Development Report*, p 150
12 *Ibid*, p 150

நோயாளிகளில் 11 பேர் பெண்களாவர். பெண்-ஆண் விகிதம் 1:3 ஆகும். இது 1990 இல் 1:10 ஆக இருந்தது. பாதிப்புக்குள்ளான பெண்களில் பெரும்பாலானோர் தமது கணவன்மாரிடமிருந்து அல்லது வெளிநாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக வேலை செய்ததன் மூலமே நோயைப் பெற்றனர் என அறியப்பட்டுள்ளது. மிகக் குறைந்த அளவினர் மட்டுமே வர்த்தக ஊழியர்கள். இத்தகைய போக்குகள், பெண்கள் எவ்வளவு தூரம் நோய்க்கு எளிதில் ஆளாகும் நிலையிலிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது. எனவே தடுப்பு முறைகள் பற்றிய அறிவு பரப்பப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.[13]

சனத் தொகையில் மருத்துவர், தாதிமார் விகிதமும் உடல் நலப் பராமரிப்புக்கான வரையறையை விதிக்கின்றது. இலங்கையில் மருத்துவர்களின் விகிதம் 7140 நபர்களுக்கு ஒருவராகும். இது தாய்லாந்தில் 5000 : 1 ஆகவும், பிலிப்பைன்ஸில் 8330 : 1 ஆகவும், இந்தியாவில் (குறைந்த அபிவிருத்தி) 2440 : 1 ஆகவும் உள்ளது. இலங்கையில் சனத் தொகைக்கான தாதிமார் விகிதம் 1400 : 1, தாய்லாந்தில் 910 : 1, மலேசியாவில் 690 : 1 ஆகவும் உள்ளது.[14]

1960 இல் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் சுகாதாரத்துக்கான செலவு 2 வீதமாக இருந்ததுடன் 1990 இல் 1.9 வீதமாகக் குறைவடைந்தது. இதே கால கட்டத்தில் இலங்கையைப் போன்ற நாடுகளில் சுகாதாரத்துக்கான பொதுச் செலவீடுகள் அதிகரித்துள்ளன. உதாரணமாக, தாய்லாந்தில் இச் செலவீடு 1960 இல் 0.4 வீதத்திலிருந்து 1990 இல் 1.1 வீதமாக அதிகரித்தது.[15]

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி வாழ்க்கையையும், சுதந்திரத்தையும் அனுபவிப்பதற்கு உடல் நலத்துடன் இருப்பது அவசியமானதுடன் அதற்குத் தூய்மையான குடிநீரும், சுகாதாரமும் தேவை. இவை சுகாதார வசதிகளைப் போலவே முக்கியமானவை. 1984-91 காலப்பகுதியில் இலங்கையில் 71 வீதமானோர் தூய்மையான நீர் வசதியையும், 60 வீதமானோர் சுகாதார வசதிகளையும் பெற்றிருந்தனர். இது மலேசியாவில் முறையே 90%, 72% ஆகவும், தாய்லாந்தில் 76%, 74% ஆகவும் இருந்தது.[16] பெண்களின் உடல் நலனை மேம்படுத்துவதில்

---

13 *Ibid*, p 28
14 *Ibid*, p 152
15 *Ibid*, p 152
16 *Ibid*, p 132

இலங்கை உறுதியான முயற்சிகளைக் கொண்டிருக்கின்றது. 1989-91 காலப்பகுதியில் 90 வீதமான இலங்கைச் சனத்தொகைக்கு சுகாதார வசதிகள் கிடைக்கக் கூடியதாக இருந்தமை இதனை உறுதி செய்கின்றது. எனினும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் மிகவும் அவசியமானவை.

3.3 கல்வி மட்டங்கள்

உயர்மட்ட எழுத்தறிவு வீதம் இலங்கைச் சமூகத்தின் பண்புக் கூறாக இருந்த போதிலும் பால் ரீதியாகப் பகுப்பாய்வு செய்யும் போது பெண்களின் எழுத்தறிவின்மை வீதம் மிகவும் உயர்வாக உள்ளமை தெளிவாகின்றது. (அட்டவணை 3). 1992 ஆம் ஆண்டுக்குரிய தரவுகள் வடக்கு, கிழக்கை உள்ளடக்கவில்லை.

அட்டவணை 3: பால், வயது ரீதியில் எழுத்தறிவு மட்டம்[17]
(சத வீதத்தில்)

வயது	பெண்கள்		ஆண்கள்	
	1985	1992	1985	1992
15-24	12.5	5.5	11.0	7.5
25-34	12.5	10.5	9.0	10.0
35-44	18.5	12.5	10.0	7.5
45 க்கு மேல்	40.5	36.5	16.0	15.0

25-34 வயதுப் பிரிவுகளில் பால் ரீதியான ஏற்றத் தாழ்வு குறைவாகக் காணப்படுவதைப் பகுப்பாய்வு காட்டுகின்றது. எனவே கீழ்மட்ட சமூக, பொருளாதாரக் குழுக்களுக்கும் கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கின்றன என்பது தெளிவாகின்றது. 1992/93 காலப்பகுதியில் 12-13 வயதுப் பிரிவினரில் சுமார் மூன்றிலிரண்டு பங்கினர் (57.9%) பாடசாலைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

1992 இல் ஆண்களுக்கான சராசரிப் பாடசாலை வருடங்கள் 8 ஆகவும், பெண்களுக்கு 6.3 ஆகவும் இருந்தன.[18] ஆனால் இச்சராசரி மலேசியாவில்

---

[17] Data in 1992 excludes the North East. See supra n 1

[18] *The Human Development Report*, p 138

முறையே 5.9, 5.2 ஆகவும், தாய்லாந்தில் 4.4, 3.4 ஆகவும் இருந்தன.[19] இலங்கையானது நடுத்தர அபிவிருத்தி நாடுகளில் மிக உயர்ந்த சராசரியைக் கொண்டிருந்த போதிலும் "நான்கு தசாப்தங்களாக ஆக்க பூர்வமான கல்விக் கொள்கைகள் பின்பற்றப்பட்ட போதும் சகலருக்குமான ஆரம்பக் கல்வியைப் பெறமுடியவில்லை".

பாடசாலை வருடங்களைப் பொறுத்த வரை ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வுகளுக்கு சமூக – பொருளாதார, கலாசாரக் காரணிகளைக் கூற முடியும். பாடசாலை வருடங்களை அதிகரிப்பதற்காகக் குறைந்த பங்கு பற்றல் வீதம், கூடிய பாடசாலை இடைவிலகல் வீதம், பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைகளில் குறைந்த சாதனை மட்டம் ஆகிய பரப்புகளில் கவனம் செலுத்தப்பட்டு அதற்கான உபாயங்கள் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

உயர் தொழில்சார் மற்றும் தொழில் சார் பட்டப் படிப்புக்கள் அல்லது டிப்ளோமாக்கள் ஆகியவற்றில் பங்கு பற்றல் பற்றிய பகுப்பாய்வானது பால்ரீதியான பங்கின் அனுமான செல்வாக்கைக் காட்டுகின்றது. பல் வைத்தியம் (48.2%), சட்டம் (52.9%), மருத்துவம் (42.1%) ஆகிய கற்கை நெறிகளில் பெண்களின் பங்குபற்றல் வீதம் உயர்வாக இருப்பினும் பொறியியலிலும் (11.9%) மற்றும் விஞ்ஞானக் கற்கை நெறிகளிலும் (32.1%) பங்கு பற்றல் வீதம் மிகவும் குறைந்து காணப்படுகின்றது.[20]

சி.ஈ.டி.ஏ.டபிள்யூ. வின் உறுப்புரை 10 ஆனது "சகல நாடுகளும் கல்வியில் பாகுபாட்டை ஒழிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" எனக் கூறுகின்றது. முக்கியமாக, உறுப்புரை 10 (இ) பின்வருமாறு கோருகின்றது:

---

19 *Ibid,* p 138

20 *Sri Lanka : State of Human Rights 1993* (Law & Society Trust, Colombo, 1994) p 207. எழுதும் போது மிக அண்மைய தரவுகள் கிடைக்கப் பெறவில்லை. மேலும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பெண்களின் சேர்வு விகிதமும் மிகக் குறைவு, மனையியல், தையல், வர்த்தக மற்றும் வியாபார ஆங்கிலம், கணக்கியல் போன்ற நெறிகளில் பெண்கள் சேரும் போக்குக் காணப்பட்டது. வர்த்தகத் தொழில் நுட்பம், கைவினை சார்ந்த துறைகளில் சிறிய விகிதமளவில் பெண்கள் சேர்ந்துள்ளனர். தனிப்பட்ட பெண்களினால் மேற் கொள்ளப்படும் தெரிவுகள் பற்றிய தகவல்கள் பால் ரீதியாகவே நடைபெறுகின்றதென்ற எடுகோள் தெளிவானது. நிறுவனத்திற்குள்ளேயும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் வழிகாட்டலும் அவ்வாறே உள்ளது.

"கல்வியின் சகல மட்டங்களிலும், சகல வடிவங்களிலும் ஆண்கள், பெண்கள் ஆகியோரின் பங்குகள் பற்றிய மரபு சார்ந்த கருத்துக்கள் களையப்பட வேண்டும். இந் நோக்கத்தைக் கூட்டுக் கல்வி மற்றும் ஏனைய வகையான கல்வியை ஊக்கப்படுத்துவதன் மூலமே அடைய முடியும்".

இலங்கையில் கல்வி இரு பாலாருக்கும் சமத்துவமாக வழங்கப்பட வேண்டுமென்பதற்கான நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டுள்ளது எனினும் பெண்கள், ஆண்களுக்கு மட்டுமே உரியது என்று கருதப்படும் துறைகளிலும் பிரவேசிப்பதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். தொழில் சார் கற்கை நெறிகளிலேயே பால் ரீதியான ஏற்றத் தாழ்வுகள் வெகுவாகக் காணப்படுகின்றன. உயர் தொழில் கற்கை நெறிகளில் இவை காணப்படுவதில்லை. இதிலிருந்து சமூக, பொருளாதாரக் காரணிகளின் செல்வாக்குப் புலப்படுகின்றது. எனவே இவ் விடயத்தில் கல்வியாளர்களும் கொள்கை வகுப்போரும் கவனம் செலுத்த வேண்டும்.

3.4 பொருளாதார பங்குபற்றலும் தொழிற் சட்டங்களும்

பெண்களின் பங்கு பற்றிய மரபு சார்ந்த அனுமானங்கள் பெண்களின் பொருளாதார பங்குபற்றல் அம்சங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பெண்களில் வேலையின்மை மிக உயர்வாக இருக்கிறது. இது பெண்கள் "தாய்" அல்லது "இடைநிலைப் பணம் தேடுவோர்", அவர்களின் முதன்மையான கடமை குழந்தைகளைப் பெற்றெடுப்பதும் வளர்ப்பதுமாகும் என்னும் கருதுகோளைக் காட்டி நிற்கின்றது.

இப் பகுதியில் பெண்களின் பொருளாதார நிலை பின்வரும் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகின்றது.

1. வேலையின்மை வீதம்
2. வேலை நிலைமைகள்
3. தொழிற் சட்டங்கள்

3.4.1 தொழிலின்மை வீதங்கள்

பெண்களின் வேலையின்மை விகிதம் ஆண்களை விட இருமடங்காக இருப்பதுடன் மொத்த வேலையின்மை விகிதம் 13.6 ஆகும். பெண்களின் வேலையின்மை மிக உயர்வாக 21 சதவீதமாக[21] இருக்க ஆண்களின்

---

[21] See supra n 1

வேலையின்மை விகிதம் 9.9 ஆகவே காணப்படுகின்றது. மேலும் பெண்களின் மொத்த வேலையின்மை வீதம் 1993 இல் 21.1 வீதமாக இருந்த பொழுது நகர்ப்புறப் பெண்களின் வீதம் 27.9 ஆகக் காணப்பட்டது உண்மை.

அட்டவணை 4 : பால் ரீதியாக வேலையின்மை வீதம்[22]

வருடம்	மொத்தம்	ஆண்	பெண்
1985/86	14.1	10.8	20.8
1990	14.0	9.1	23.4
1993	13.6	9.9	21.0

பெண்களின் வேலையின்மை வீதம் இன்னும் அதிகமாக இருக்கக் கூடும். வேலை தேடியோர் அதனைக் கைவிடும்படி வற்புறுத்தப்படும் பொழுதும் வேலை தேடுவதை விட்டு விடுவதிலும் இது நிகழ முடியும். பெருமளவான பெண்கள் சுயவேலைகளில் ஈடுபடுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குறைந்த வருமானமும் குறைந்த கல்வி மட்டமும் உடைய பெண்களில் பெருந்தொகையானோர் வெளிநாடுகளில் பணிப் பெண் வேலைகளைத் தேடிச் செல்கின்றனர் என்பதும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

3.4.2 தொழில் நிலைமை

கீழே தரப்படும் தரவுகள் தொழில் வீதத்தைத் துறை ரீதியாகவும், பால் ரீதியாகவும் (வடக்கு கிழக்கு நீங்கலாக) எடுத்துக் காட்டுகின்றன. 1993 இல் ஏறக் குறைய மூன்றிலிரண்டு பகுதி (34.8%) பெண்களாவர். 1985/86 காலப் பகுதியில் சம்பளம் பெறும் தொழில்களில் பெண்களின் பங்குபற்றல் ஓரளவே (3.3%) அதிகரித்துள்ளது.[23] 1989/90 காலப்பகுதியில் நிர்வாகிகள், முகாமையாளர்களில் 7 வீதம் மட்டுமே பெண்களாவர்.[24]

இச் சூழ்நிலையில் எவ்வளவு தூரம் பிள்ளைப் பராமரிப்பு வழங்கப்படுகின்றது என்பது கவனிக்கத்தக்கது. இலங்கையில் பிள்ளைப்

---

22 வடக்கு கிழக்கு சேர்க்கப்படவில்லை. பார்க்க supra n 1

23 *Sri Lanka: State of Human Rights 1993* (Law & Society Trust, Colombo, 1994) P 215

24 *The Human Development Report*, p 144

பராமரிப்பு ஒரு பொதுவான வசதியாக வழங்கப்படவில்லை. கொள்கை ரீதியாகப் பார்க்கும் போது குழைந்தையின் நலவுரிமையில் தற்காலிகமான ஓர் அழுத்தம் வழங்கப்படுகின்றதேயொழிய வசதிகளை அளிப்பதன் மூலம் பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. உயர்வான சமூக, பொருளாதார அந்தஸ்துள்ள பெண்களுக்குப் பணம் செலுத்திப், பிள்ளைப் பராமரிப்பை வீட்டிலேயே பெறமுடியும். ஆனால் கீழ்மட்ட வருமானம் கொண்டவர்களுக்கு இவ்வாறான வசதிகள் குறைவு. எனவே வீட்டுக்கு வெளியே சம்பளத்துடன் கூடிய தொழில் வாய்ப்புக்களைப் பெறுவது கடினமாகும்.

சில நகர்ப்புறங்களில் உள்ளூராட்சிச் சபைகள் இவ்வாறான பகல் நேரக் குழந்தைப் பராமரிப்பு வசதிகளைத் தற்போது வழங்குகின்றன. ஆரம்பத்தில் கூலித் தொழிலாளர்களாகப் பணிபுரியும் கீழ் மட்ட வருமானம் கொண்ட பெண்களுக்கான "பாலூட்டும் நிலையங்களாகவே" (Milk Feeding Centres) இவை தொழிற்பட்டன. இவ்வாறான 250 பொதுப் பராமரிப்பு நிலையங்கள் 19 மாவட்டங்களில் பரந்துள்ளதுடன் அவற்றில் பெரும்பாலானவை அரசு சார்பற்ற நிறுவனங்களினாலும், சமய நிறுவனங்களினாலும் பராமரிக்கப்படுகின்றன. அத்துடன் இவை கொழும்பு, கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகமாகக் காணப்படுகின்றன. சில நிலையங்களில் கட்டணமும் வசூலிக்கப் படுகின்றது. சில கைத் தொழில் நிலையங்களில், பெண் உழைப்பு பெறுமதியாகக் கருதப்படும் இடங்களில் குழந்தைப் பராமரிப்பு வசதிகள் நிர்வாகத்தினால் வழங்கப்படுகின்றது. பெருந்தோட்டப் பகுதிகளில் சகல பெண்களும், வளர்ந்த சிறுமிகளில் பெரும்பாலானோரும் கொழுந்து பறிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளதினால் தோட்ட முகாமைத்துவம் குழந்தைப் பராமரிப்பு நிலையங்களை நடத்துகின்றன. ஏறக்குறைய 1425 நிலையங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ் ஏற்பாடுகள் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கு உதவுவதுடன் தோட்ட நிர்வாகத்துக்கும் நன்மை அளிக்கின்றது.

3.4.3 தொழிற் சட்டங்கள்

1930 களில் பல்வேறு தொழிற் சங்கப் போராட்டங்களைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட தொழிற் சட்டங்கள், பெரும்பாலும் பிரித்தானிய மாதிரியைக் கொண்டிருந்தன. பின்வரும் தொழிற் சட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட துறையில் அமுலில் இருக்கின்றன.

* மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம் இல. 32, 1939: இல. 35, 1946: இல 26, 1952: இல.6, 1958: இல 24, 1962: இல 1, 1966: இல.13, 1978: இல 43,1985 இனால் திருத்தப்பட்டது.
* தொழிற் சாலைக் கட்டளைச் சட்டம் இல. 45,1942
* கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டம், இல.19, 1954
* பெண்கள் இளவயதினர் மற்றும் பிள்ளைகளுக்கான தொழில் சட்டம் இல. 47, 1956
* ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் இல. 15, 1958
* சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டம் இல. 4, 1973
* சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம் இல. 27, 1941

பொருளாதார ரீதியாகப் பெண்களைக் கீழ்மைப்படுத்தும் பாரபட்சமான தொழில் நடைமுறைகளுக்கு எதிரான குறிப்பான சட்டங்கள் இயற்றப்படவில்லை. அது மட்டுமல்லாமல் அரசியல் யாப்பு ஏற்பாடுகள், சி.ஈ.டி.ஏ.டபிள்யூ. விதிகளுக்கு ஏற்புடையதாக பெண்களின் தொழில் பங்கு பற்றலையும், சமத்துவமான நடை முறைகளையும் உறுதிப்படுத்தும் சட்ட ஏற்பாடுகளோ அல்லது நிர்வாக ஏற்பாடுகளோ உருவாக்கப்படவில்லை. எனினும் தனியார் துறையில் இடம் பெறும் பாரபட்சங்களை அறிவதற்காக ஓர் ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. பால் ரீதியான பாரபட்சங்களைக் கொண்டிருக்கும் சில நடைமுறைகள் இவ் ஆணைக் குழுவின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

பெண் ஊழியர்கள் தொடர்பான சகல சட்டங்களும் அவர்களைப் பாதுகாக்கும் போக்கினைக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக பெண் எழுதுவினைஞர்கள், பயிற்சிபெற்ற தொழிலாளரை வெகுவாகப் பாதுகாக்கின்றது. வெள்ளைச் சட்டைத் தொழில்கள் குறைவான கஷ்டங்களையே கொண்டிருந்த போதும் நீலச் சட்டைத் தொழில்களை விடக் , கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. பொதுவாகக் கடைகள், அலுவலகங்களில் தொழில் புரியும் பெண்களைக் காலையில் 6 மணிக்கு முன்னதாகவோ, மாலையில் 6 மணிக்குப் பின்னதாகவோ வேலைக்கு வருமாறு கோர முடியாது. ஆனால் தொழிற்சாலைகளில் இரவு 8 மணி வரை வேலை வழங்க முடியும். அத்துடன் கடைகள், அலுவலகங்களில் வேலை செய்யும் பெண்களை ஒரு நாளில் 9 மணித்தியாலத்துக்கு மேல் வேலை வாங்க முடியாது. ஆனால் தொழிற்சாலைப் பெண்கள் ஒரு நாளில் 12 மணித்தியாலங்கள் வேலை செய்யலாம்.[25]

---

[25] பார்க்க supra n 6

இவ்வாறான பாதுகாக்கும் சட்டங்கள் பல முரண்பாடான நிலைமைகளைத் தோற்றுவிக்கின்றன. உதாரணமாக இரவு வேலையை நீக்கும் விடயத்தில் அரசாங்கக் கொள்கை பிரச்சினைகளை அதிகரிக்கின்றது. அரசாங்கம், பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவின் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் பல நாட்டு முதலீட்டைக் கவர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றது. ஆனால் இங்குள்ள தொழிற்படையில் 75 வீதத்தினர் பெண்களே.

இலத்திரனியல் கைத்தொழில்களில் உள்ள மூன்று கடைமை நேரங்களில் ஒன்று இரவு 10.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை நீடிக்கின்றது. பெண் ஊழியம் "மலிவானதாகவும்" "பிரச்சினையற்ற"தாகவும் கருதப்படுவதினால் வேலை கொள்வோரால் பெரிதும் விரும்பப்படுகின்றது. இவ்வாறான வேலை நிலைமைகளை இலங்கை அரசு ஆதரிப்பதன் காரணமாக, தான் பங்காளியாக இருந்த சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் இரவுவேலை மகாநாட்டுடன்படிக்கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது. தொழிற் சங்கங்கள் இவ்வாறான இரவு நேர வேலையை எதிர்த்த போதிலும் பெண்கள் தமக்கு வருமானம் கிடைக்குமெனில் இரவு வேலை செய்வது நல்லது என்பது பல பெண்களுடனான நேர்காணலில் இருந்து அறிய வந்தது.

இலங்கையின் தொழிற் சட்டங்கள் 1930களில் நிறைவேற்றப்பட்டதினால் அவை தற்போதைய பொருளாதாரப் போக்குகளுக்குப் பொருத்தமானவையாக இல்லை. உதாரணமாக அண்மைக் காலங்களில் பெருந்தொகையான இலங்கைப் பெண்கள் பயிற்சியற்ற தொழிலாளர்களாகவும் வீட்டுப் பணிப் பெண்களாகவும் மேற்காசிய நாடுகளுக்குச் செல்கின்றனர். இத் தொழிலாளர்களை அரசாங்கம் "தேசிய முதலீடு" எனக் கருதினாலும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க அண்மைக் காலங்களிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வூழியர்கள் ஓர் அந்நியச் சூழலில் ஏற்படக் கூடிய நிச்சயமற்ற தன்மைகளினாலும், சமூக பொருளாதாரப் பாதுகாப்பின்மை காரணமாகவும் பிரச்சினைக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு பெருந்தொகையானோர் வெளியேறுவதினால் அவர்களது குடும்பத்திலும், திருமண உறவுகளிலும் ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அத்துடன் தொழில் அமைச்சில் வெளிநாட்டு வேலைகளைப் பெற்றுத் தரும் முகவர்கள் பற்றி விசாரிக்க ஒரு வெளிநாட்டு வேலைவாய்ப்புப்

பணியகம் நிறுவப்பட்டுள்ளதுடன் பெண் ஊழியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவது அப்பணியகத்தின் பணிகளில் ஒன்றாக இருக்கின்றது. வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்களின் நிலைமைகளை அவதானிக்குமாறு இலங்கைத் தூதரங்கள் பணிக்கப்பட்டுள்ளன. 1994 இல் இலங்கை சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் 144 ஆம் இலக்க மகாநாட்டுடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. இம் மகாநாட்டுடன்படிக்கை புலம் பெயர் ஊழியர்களைப் பற்றிய முன்னேற்பாடுகளைக் கொண்டுள்ள போதிலும் அவ்விடயத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் என்ன வென்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

உள் நாட்டிலும் கூட, வீட்டுப் பணிப் பெண்களாக வேலைக் கமர்த்தப்பட்டுள்ள பெண்களின் தொழில் நிபந்தனைகளைப் பார்க்கும் போது அவர்கள் சுரண்டலுக்கு உட்பட்டிருப்பது தெரிகின்றது. இவர்களது தொழில் நிபந்தனைகள் ஒழுங்கமைக்கப்படவில்லை. அத்துடன் போதுமான வருமானம் இல்லாமல் நீண்ட நேரம் பணியாற்றுமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். இப் பெண்கள் தமது குடும்பத்தைப் பராமரிக்க வேண்டியுள்ளது. அத்துடன் அவர்கள் பயிற்சி பெற்றவர்களும் அல்லர். எனவே இலகுவாகச் சுரண்டலுக்கு ஆளாகின்றனர். இவ் விடயம் தொடர்பாகப் பாதுகாப்பளிக்கும் சட்ட ஏற்பாடுகள் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. இவர்களைப் பதிவு செய்தல், நெகிழ்ச்சித் தன்மையுள்ள வருமானம் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் முதலியவை நியாயபூர்வமான வேலை நிபந்தனைகளுக்கு வசதியளிக்கக் கூடும்.

தொழிற் சட்டங்களுக்கு உட்படாத முறையில் "முறையியல் துறை" பற்றியும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். ஊதியமற்ற விவசாய நடவடிக்கைகள், சிறுவியாபாரம், வீட்டுக் கைத் தொழில்கள் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் தொழில் வகைகளிலிருந்து விலகி நிற்கின்றனர். இப் பெண்கள் சட்டரீதியான கட்டுப்பாடுகளால் பாதுகாக்கப்படுவதில்லை. அத்துடன் தொழில் நுட்பப் புத்தாக்கங்கள் இவர்களை அடைவதுமில்லை. மேலும் இவர்கள் ஒரு பெரிய 'பெண் தொழிலாள ஒதுக்காக' அடைபட்டுக் கிடக்கின்றனர். இப் பெண்களில் பெரும்பாலானோர் சமூகத்தின் ஓரத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். பலர் தமது கணவன்மாரால் கைவிடப்பட்டவர்கள். முறைசார் ஏற்பாடுகள் மூலமாகத் தமது வயிற்றுப் பிரச்சினையை ஒருவாறு தீர்த்துக் கொள்ள முயல்பவர்கள். பதிவு செய்தல், வருமான நியமங்கள், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் ஆகியவை இவர்களது குறைந்த பட்ச வருமானத்தை

அழித்து விடக் கூடும். இவர்களுக்கு மிக அவசியமானது பாதுகாப்புச் சட்டங்களல்ல. தொழில் ரீதியான பயிற்சியும் அபிவிருத்தி உதவியும், தொழில் நுட்பப் புத்தாக்கங்கள் பற்றிய அறிவுமாகும்.

எமது கவனத்தை ஈர்க்க வேண்டிய இன்னும் ஒரு துறை வீட்டை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முயற்சிகளாகும். பெண்கள் வீட்டிலிருந்து கொண்டே சுதந்திரமான ஒப்பந்தக்காரர்களாக இவ் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்குப் பேரம் பேசும் சக்தியோ அல்லது ஒன்று கூடும் சுதந்திரமோ இல்லை. இவர்களைப் பாதுகாக்கத் தற்பொழுது எவ்விதமான சட்ட ஏற்பாடுகளுமில்லை. இப் பெண்கள் வேலை மற்றும் குடும்பம் ஆகிய இரு பொறுப்புக்களுக்கிடையே சிக்குண்டுள்ளனர்.

இறுதியாக, இப்பகுதியில் விபசாரம் ஒரு தொழில் வாய்ப்பு என்னும் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகின்றது. எனினும் விபசாரமானது பெண்களுக்கெதிரான ஒரு வன்முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. விபசாரத்துக்கு அழைத்தல், அதில் ஈடுபடுதல், விபசார விடுதிகளை நடாத்துதல் ஆகியவை தொடர்பான சட்டங்கள் நடைமுறைக்குப் பொருத்தமற்றவை.[26] நடைமுறையில் உள்ள சட்டங்கள் விபசாரத்தைத் தடைசெய்வதுமில்லை, பாதிப்புக்குள்ளாகி சுரண்டலுக்குட்படும் பெண்களைக் காப்பாற்றுவதுமில்லை. விபசாரமானது தொழில் வாய்ப்புக்கான ஒரு நடைமுறை வழியென வாதிடப்படுகின்றது. அத்துடன் விபசாரத்தை ஒழித்துவிட முடியாது. ஆகவே விபசாரிகளை வன்முறையிலிருந்து பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

4. பெண்களுக்கெதிரான வன்முறை

அண்மைக் காலங்களில் பெண்களுக்கெதிரான வன்முறை பெண்களின் மனித உரிமைகளுக்கெதிரான ஒரு மீறலாக இனங்காணப்பட்டுள்ளது.[27] இலங்கையைப் பொறுத்தவரையில் இப்பிரச்சினை கடந்த சில வருடங்களாகவே கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது குடும்ப வன்முறை மற்றும் பால் ரீதியான துன்புறுத்தல் ஆகியவற்றுக்கெதிரான

---

[26] *Ibid*, p 12

[27] பார்க்க, பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழித்தல் பற்றிய ஐ.நா.பிரகடனம் 1993

குறிப்பான சட்டங்களில்லை. அண்மைக்கால ஆய்வுகள் குறிப்பாக அரசு சார்பற்ற நிறுவனம் (WIN - Women in Need) கூறுவதைப் போன்று உள்வீட்டு வன்முறை ஒரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்த கணவன், மனைவியரிடையே 60 வீதத்துக்கு அதிகமானதாக இருக்கலாம். கற்பழிப்புத் தொடர்பாக 1890 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் தற்போதைய நிலையில் பெண்களைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமானதாக இல்லை. கற்பழிப்பு மற்றும் பாலுறவுத் துன்புறுத்தல்கள் தொடர்பான சட்டங்கள், இன்றைய பிரச்சினைகளான பாதுகாப்பிலிருக்கும் பொழுது குற்றம் புரிதல் அல்லது வீட்டுப் பணி தொடர்பான குற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கவில்லை. இச் சூழ்நிலைகளில் பெண்கள் இலகுவாகப் பாதிக்கப்படுவதைக் கருத்திற் கொண்டு அவர்களைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான ஏற்பாடுகள் உருவாக்கப்படல் வேண்டும்.

எனினும் கடந்த சில வருடங்களாக அணுகு முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1993 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பிரதான பொலிஸ் பிரிவுத் தலைமை அலுவலகங்களில் விசேட பிரிவுகள் உருவாக்கப்பட்டு அவைகள் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எதிரான வன்முறைக் குற்றங்களைத் தடுக்கவும், கண்டறியவும், புலனாய்வு செய்யவும் அதிகாரங்களைக் கொண்டிருந்தன. பெண்கள் அல்லது அவர்களது பிள்ளைகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் போது அவர்கள் பாதுகாப்புத் தேடிச் செல்லக் கூடிய சில அகதி மையங்கள் உள்ளன. இவை தற்காலிக உறைவிடங்களாக இருப்பதுடன் அரசுசார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்படும் இவை பெரும்பாலும் கொழும்பில் மாத்திரமே உள்ளன.

சமூக சேவைகள் திணைக்களத்தினால் இத்தகைய ஒரு தடுப்பு நிலையம் நிர்வகிக்கப்படுகின்றது. இங்கு புகலிடம் தேடும் பாதிக்கப்பட்ட பெண்கள் பெரும்பாலும் 'குற்றவாளிகள்' என்ற அடையாளத்துக்கு உட்படுத்தப்படுவதினால் இந் நிறுவனத்திலுள்ள பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பது மிகவும் கடினமானது.

இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கும், சர்வதேச சாதனங்களில் காட்டப்படும் நியமங்களை ஏற்பதற்கும் ஒரு தேசியத் திட்டம் அவசியமானது. இதற்குச் சட்ட ஏற்பாடுகள் மட்டும் போதுமானவையல்ல. அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புகலிடங்களும், சேவைகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். பொலிஸ், நிதித்துறை அதிகாரிகளுக்குச் சிறப்புப் பயிற்சியும், இவ்விடயம் தொடர்பான தரவுகளை முறையாகச் சேகரிக்கும் பயிற்சியும் அவசியமானவைகளாகும்.

சமூகத்தை இராணுவ மயப்படுத்தும் போது பொதுவாக, வன்முறை அதிகரிக்கின்றதுடன் குறிப்பாகப் பெண்களுக்கெதிராக வன்முறை அதிகளவில் இடம் பெறுகின்றது. ஜே.வி.பி கிளர்ச்சியும் இனத்துவப் பிணக்குகளும் வன்முறை மரபினை எடுத்துக் காட்டுகின்றன. பிணக்குத் தீர்வுக்கு அகிம்சை வழிகளை நாடும் சமூகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.[28] இலங்கையில் இராணுவ நடவடிக்கைகள் மூலம் பெருந்தொகையான பெண் அகதிகள், விதவைகள். மற்றும் வீட்டுச் சுமையைப் பெண்கள் பொறுப்பேற்றல் முதலிய பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இவை தொடர்பாக உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். அத்துடன் வெளிநாடுகளுக்குச் செல்லும் வீட்டுப் பணிப்பெண்களின் பிரச்சினையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இச்சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான வன்முறையை நீக்குவதற்கு சனநாயகச் சூழல், பங்கேற்பு மற்றும் அகிம்சை ஆகியவை உதவியாக இருக்கும்.

5. முடிவுரை

இம்மதிப்பீட்டில், இலங்கையில் பெண்களின் அந்தஸ்தை உறுதி செய்யப் பல்வேறு சட்ட மற்றும் சமூக, பொருளாதாரக் குறிகாட்டிகள் கையாளப்பட்டுள்ளன. இறுதியில் சில கருத்துக்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. வெவ்வேறு துறைகளுக்கேற்ப, வெவ்வேறு மட்டங்களில் பொதுவாகப் பெண்களின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை இக் குறிகாட்டிகள் எடுத்துக் காட்டுகின்றன. குறைந்த அரசியல் பிரதி நிதித்துவம், சமனற்ற சம்பளம், வருமானம் தரும் உழைப்பிற்கான வாய்ப்பின்மை, உள்வீட்டு வன்முறைக்கு எதிராகப் போதிய பாதுகாப்பின்மை போன்ற இன்னும் குறிப்பிடக் கூடிய பிரச்சினைகளும் காணப்படுகின்றன.

வேலை வாய்ப்புத் தொடர்பான புள்ளி விபரங்கள் சிறந்தவைகளாக இருப்பினும் இலங்கையின் வேலைப்படையானது பால் ரீதியாகப் பிளவு பட்டுள்ளது. பெண்கள் கீழ் மட்ட, அரைப் பயிற்சியுள்ள தொழில்களிலேயே

---

[28] See Coomaraswamy, R., *Preliminary report submitted by the special Rapporteur on violence against women, its causes and consequences* (presented at the 51st session of the commission of Human Rights) E/CN.4/ 1995/42.22 (22 November 1994)

அதிகமாக ஈடுபட்டுள்ளனர். அத்தொழில்களில் வருமானம் குறைவாகும். முகாமைத்துவப் பதவிகளிலும், பொது வாழ்விலும் பெண்களின் பிரதி நிதித்துவம் மிகவும் குறைவாக இருக்கும் அதேவேளை பெண்களின் தொழிற் சங்க நடவடிக்கைகளும் குறைவாகவே உள்ளன.

அரசாங்கக் கொள்கை உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளான உள்வீட்டு வன்முறை, பாதுகாப்பு மற்றும் குடும்ப உறவினர் தொடர்பான சட்டங்கள் குறைவான செல்வாக்கையே செலுத்துகின்றன. பொதுவாழ்வில் பெண்களுக்கு எத்தகைய அந்தஸ்து வழங்கப்பட்டாலும் பெண்களின் அந்தஸ்து பற்றிய மதிப்பீட்டின் போது அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பெண்களின் விடயத்தில் இரட்டை அணுகு முறை பின்பற்றப்படுவதாகத் தெரிகின்றது. இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று நிச்சயமாகத் தொடர்புள்ளவை எனக் கூறுவதற்கில்லை. ஒரு புறத்தில் தாய்மைக்கு மகப்பேற்றுச் சகாயப்பணம் வழங்குவதன் மூலம் சமூக அந்தஸ்து வழங்கப்படுகின்றது. ஆனால் மறுதலையாகக் குழந்தைப் பராமரிப்புக்குரிய ஏற்பாடுகள் செய்யப்படாததன் மூலம் சமூகம், தாய்மைப் பேற்றைத் தண்டிக்கின்றது. எனவே தொழிலையும், குடும்பத்தையும் தெரிவு செய்த பெண்களுக்குக் குழந்தைப் பராமரிப்பு ஏற்பாடுகள் ஆறுதல் தருவதாக இல்லை. இலங்கைப் பெண்கள் ஏனைய சமூகங்களின் பெண்களைப் போலவே தெரிவுகளை மேற் கொள்ள வேண்டும் என்பதல்ல. ஆனால் அவர்களுக்குத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதே முக்கியமானது.

மேலும் பெண்களின் அந்தஸ்துக்கு இனத்துவம், பால் மற்றும் சமூக-பொருளாதார நிலை ஆகியவை அடித்தளமாக அமைகின்றன. தொழில் பற்றிய தீர்மானங்களை மேற் கொள்வதற்குச் சமூக மயமாக்கல் செயன்முறைப் பங்களிப்பைச் செய்கின்றது. இதுவே பயிற்சியற்ற அல்லது அரைப் பயிற்சி கொண்ட பெண்கள் மத்தியில் காணப்படும் உயர்மட்ட வேலையின்மை வீதத்துக்கும் பங்களிப்புச் செய்கின்றது. இனத்துவம், சமூக பொருளாதார நிலை ஆகிய காரணிகளின் தாக்கம் வேலையின்மை மாதிரியிலும் கல்வி அடைவிலும் காணப்படுகின்றது.

மனித உரிமைகளின் அடிப்படைகளில் ஒன்று, அதிகாரத் துஷ்பிரயோகங்களுக்கெதிரான பாதுகாப்பை வழங்குவதாகும். இது

உயர் நீதிமன்றத்தின் மீது பாரப்படுத்தப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளது. எனினும் இவ் அதிகாரத்தின் பயன்பாடு மிகவும் குறைவானது. இலங்கைப் பெண்களைப் பொறுத்தமட்டில் தமது உரிமைகள் பாதிக்கப்படும் போது அதனை ஈடு செய்து கொள்வதற்கான தகவல்களைப் பெறும் வாய்ப்பு மிகவும் குறைவே.

பெண்களுக்கான தெரிவுகள் இருக்கின்ற தென்பதை உறுதிப்படுத்தக் கூடிய, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க இலங்கை அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் சட்டங்களாகவோ, கொள்கைகளாகவோ, அல்லது வேறு ஏற்பாடுகளாகவோ இருக்கலாம். ஆனால் அவை பெண்களுக்கு எதிரான பாரபட்ச நடவடிக்கைகளை நீக்குவதாக இருக்க வேண்டும். பெண்கள் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு முதற்படியாக சமத்துவமின்மை நீக்கப்படல் வேண்டும். இதனைச் செய்து முடிக்க விசேடமான நிகழ்ச்சித் திட்டங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

Bibliography

Abadzi, H., *What We Know About Acquisition of Adult Literacy*, World Bank Discussion Papers, No. 245 (World Bank, Washington D.C., 1994)

Aleilema, P., "Education-Employment Linkages: The Macro Profile," *Sri Lanka Journal of Social Science*, Vol. 15 (1992)

Amnesty International, *'Disappearances' and Political Killings - Human Rights Crisis of the 1990s: A manual for action* (Amsterdam, 1994)

Amnesty International, *Sri Lanka: A Human Rights Crisis* (London, 1990)

Amnesty International, *Sri Lanka: Extrajudicial Executions, 'Disappearances' and Torture, 1987 to 1990* (London, 1990)

Amnesty International, *Sri Lanka: Time for Truth and Justice - Observations and recommendations regarding the commissions investigating past human rights violations* (AI Index: ASA 37/04/95, London, April 1995)

Amnesty International, *Sri Lanka: When will justice be done?* (AI Index: ASA 37/15/94, London, July 1994)

Analytical Report of the Secretary General on Internally Displaced Persons, E/CN.4/1992/23.

Article 19, *An Agenda for Change: The Right to Freedom of Expression in Sri Lanka* (London, October 1994)

Article 19, *Words into Action: Censorship and Media Reform in Sri Lanka*, Censorship News Issue 39 (March 1995)

Balzano, B.A., Report to the Asian Development Bank on Educational Achievement in Sri Lanka (Asian Development Bank, 1991) (informal)

Balzano, B.A., "Science and Mathematics Education in Sri Lanka" (Report to the Asian Development Bank) (1991)

Bastian, S. (ed), *Devolution and Development in Sri Lanka* (International Centre for Ethnic Studies, Colombo, 1994)

Birdsall, N. and Sabot, R. (eds), *Unfair Advantage: Labour Discrimination in Developing Countries*, World Bank Regional and Sectoral Studies (Washington D.C., 1991)

Bose, S., "The Eelam Struggle: Challenges and Prospects," 17 *Lanka Guardian* #12 (Colombo, October 1994)

British Refugee Council, *Sri Lanka Monitor* (London, October 1994)

Central Bank of Sri Lanka, *National Health Bulletins, 1980-1992* (Colombo, 1992)

Central Bank of Sri Lanka, *Socio-Economic Achievement 1990* (Colombo)

Chavez, A. and Martinez, B., *Growing in a Developing Community* (Instituo Nacional de la Nutricion, Mexico City, 1981)

Civil Rights Movement, *Commissions to Investigate "Disappearances,"* E 01/11/94 (CRM, Colombo, 28 November 1994)

Civil Rights Movement, Document E 01/7/94

Civil Rights Movement, *The Anti-Torture Bill*, E 03A/11/94, 30 November 1994

Civil Rights Movement, "The Current Emergency Regulations," E 02/11/94 (November 1994)

Clarence, W.D., "Open Relief Centres: A Pragmatic Approach to Emergency Relief and Monitoring During Conflict in a Country of Origin," 3 *International Journal of Refugee Law* (1991)

Coomaraswamy, R., *Preliminary report submitted by the Special Rapporteur on violence against women, its causes and consequences* (presented at the 51st session of the Commission of Human Rights) E/CN.4/1995/42.22 (November 1994)

Consumer Finance Survey 1978/79 and 1981/82

Deng, F., "Analytical Report of the Secretary General on Internally Displaced Persons," E/CN.4/1992/23

Deng, F., "Comprehensive Study on Internally Displaced Persons," Report of the Representative of the Secretary General submitted pursuant to Commission on Human Rights Resolution 1992/73, E/CN.4/1993/35

Deng, F. "Human Rights, Mass Exoduses and Displaced Persons," Report of the Representative of the Secretary General submitted pursuant to Commission on Human Rights Resolution 1993/95 and 1994/68, E/CN.4/1995/50 (2 February 1995)

Deng, F., "Profiles in Displacement: Sri Lanka," E/CN.4/1994/44/add.1 (25 January 1994)

Deng, F., *Protecting the Dispossessed: A Challenge for the International Community* (Brookings Institution, Washington D.C., 1993)

Department of Census and Statistics, *Labour Force and Socio-Economic Survey, 1985/86* (Colombo, 1987/90/93)

Department of Census and Statistics, *Labour Force Survey 1992* (Colombo, Sri Lanka)

Department of Census and Statistics, *Quarterly Report* (1992)

Department of Public Administration, Annual Reports (Colombo, Sri Lanka)

De Silva, H., "Patient History and Diagnosis," paper by member of Medical Faculty, University of Ruhuna (1993)

Economic Review, May-June 1994 (People's Bank, Colombo)

Ekanayake, C.R., *Asian Regional Studies of Children with Special Educational Needs, A Sri Lanka Case Study* (submitted to the World Bank) (1993)

Free Media Movement press release, *Misuse of state media organs and interfering with private-owned media by the PA Government for the election campaign* (3 November 1994)

Gomez, M., "The Northern Polls" in *Law and Society Trust Fortnightly Review*, Volume V, Issue 28 (Colombo, September 1994)

Goodwin-Gil, G., "Non-refoulement and the New Asylum Seekers," 26 *Virginia Journal of International Law* (1986)

Goodwin-Gil, G., "The Right to Leave, the Right to Return and the Question of a Right to Remain," paper prepared for the Colloquium: *The Problems of Refugees in the Light of Contemporary International Law Issues*, organised by the Graduate Institute of International Studies and the UNHCR (Geneva, 26-27 May 1994)

Goonesekere, S.W.E., *Child Labour in Sri Lanka: Learning from the Past* (ILO Child Labour Collection, Geneva, 1993)

Goonesekere, S.W.E., "Status of Women in the Family Law of Sri Lanka" in Kiribamune, S. and Samarasinghe, V. (eds), *Women at the Crossroads: A Sri Lankan Perspective* (International Centre for Ethnic Studies, 1990)

Goonesekere, S.W.E., "Women and Law" in *Status of Women (Shri Lanka)* (Ministry of Health and Women's Affairs, 1993)

Goonetilleke, H. and Goonesekere, S.W.E., *Daughters in Industry* (CENWOR, Colombo, 1986)

Griffin, C., *Health Care in Asia: A Comparative Study of Costs and Financing*, World Bank Regional and Sectoral Studies (Washington D.C., 1992)

Gunatilleke, G., *The Extent and Nature of the Structural Mismatch in the Domestic Labour Market*, Institute of Policy Studies, Research Studies, Employment Series No. 10 (IPS, Colombo, 1989)

Gunawardena, C., "Women in Higher Education in Sri Lanka," *Higher Education Review* 19 (1987)

Harbison, R.W. and Hanushek E.A., *Educational Performance of the Poor* (Oxford University Press, Oxford, 1992)

Hayner, P.B., "Fifteen Truth Commissions - 1974 to 1984: A Comparative Study" in 16 *Human Rights Quarterly* (1994)

Hopkins, M.J.D. and Yogaratnam, T., *The Socio-Economic Dimensions of Poverty in Sri Lanka and Policy Implications*, A USAID sponsored study conducted by Development Alternatives Inc. (1990)

Hoole, R., "Loss of Civil Courage and Civil War," 2 *Counterpoint* #2 (Colombo, June 1994)

Human Rights Task Force, *Annual Report: 10 August 1992 to 10 August 1993*

Human Rights Task Force, *Annual Report: 10 August 1993 to 10 August 1994*

INFORM, *Situation Report - March 1994* (Colombo)

INFORM, *Situation Report - September 1994* (Colombo)

INFORM, *Situation Report - October 1994* (Colombo)

INFORM, *Situation Report - November 1994* (Colombo)

INFORM, *An Overview of the Human Rights Situation in Sri Lanka: 1994* (15 February 1995)

INFORM, *Special Dossier on Mass Graves at Suriyakanda*

"Internally Displaced Persons: Compilation and Analysis of Legal Norms," presented at the 51st session of the Commission on Human Rights, E/CN.4/1995/CRP.1 (30 January 1995)

International Human Rights Law Group, *Report of the International NGO Observer Mission to Sri Lanka Parliamentary Elections* (September 1994)

Jayasekera, R.W., "Juvenile Justice, Laws, Policies and Practices," Regional Training Programme on *Juvenile Justice and the Rights of the Child: A Challenge for the 21st Century* (Bangkok, 1994)

Jennings, J., *Adult Literacy: Master or Servant?* (University Press Ltd., Dhaka, 1990)

Kanapathipillai, V., *A Decade of Change in the Plantations* (International Centre for Ethnic Studies, Colombo, 1992)

Kelly, T., "Trends and Outlook for Sri Lanka Labour Markets," *Human Resource Development Review* (Human Resource Development Council, Colombo, 1994)

King, E.M. and Hill, M.A., *Women's Education in Developing Countries: Barriers, Benefits and Policies* (John Hopkins University Press, Baltimore, 1993)

Korale, R.B.M., *A Statistical Overview of Employment and Unemployment Trends*, Institute of Policy Studies, Research Studies, Employment Series 5 (IPS, Colombo, 1989)

Kularatna, Dharmadasa and Dharmawardene, *National Study of Wastage in Education in Sri Lanka 1990* (National Institute of Education)

Law & Society Trust, *Sri Lanka: State of Human Rights 1993* (Colombo, 1994)

Lawyers' Committee for Human Rights, "General Principles Relating to the Promotion of Refugee Repatriation: A briefing paper" (May 1992)

Lockheed, M.E. and Verspoor A.M. *et al*, *Improving Primary Education in Developing Countries* (Oxford University Press, Oxford, 1991)

Loganathan, K., "Options Before the Tamil Speaking People," 2 *Counterpoint* #3 (Colombo, July 1994)

Manifesto of the People's Alliance government (Government Information Department, 1994)

Ministry of Education, School Census, 1989/90 and 1991/92

Ministry of Health, *Sri Lanka National Report on Population*, presented at the International Conference on Population and Development (Cairo, Egypt, 5-13 September 1994)

Ministry of Policy Planning and Implementation, "Nutritional Status Survey Report 1981/82 and 1988/89," Nutrition and Janasaviya Division (1992)

Ministry of Reconstruction, Rehabilitation and Social Welfare, *Report on Child Employment* (1993)

Ministry of Reconstruction, Rehabilitation and Social Welfare, *Technical Committee Report on Child Abuse, Aspects of Substantive Law* (Colombo, 1994)

Ministry of Shipping, Ports, Rehabilitation and Reconstruction, "Emergency Reconstruction and Rehabilitation Programme, Phase II, Inception Report" (September 1994)

Ministry of Shipping, Ports, Rehabilitation and Reconstruction, "Performance, Policy, Strategies and Programmes 1994-1995"

Movement for Free and Fair Elections, *Interim Report on the Sri Lanka Parliamentary Elections of 16 August 1994* (Colombo)

Movement for Inter-Racial Justice and Equality (MIRJE), "For a Federal Political Structure," 27 *Social Justice* 80 #11 (November 1993)

Nachinarkinian, C.S., "Current Pattern of Health Care and Resource Allocation" and "Ethnic Conflict in Sri Lanka - The Effect on Health," papers presented at the International Conference on Health titled *Victims of War in Sri Lanka: A Quest for Health Consensus* (London, 17-18 September 1994)

Nadesan Centre, Emergency Law: Docinform 65 (3rd ed) (Colombo, March 1994)

Nadesan Centre, Emergency Law: Docinform 72 (Colombo, November 1994)

Nadesan Centre, Emergency Law: Docinform 75 (Colombo, February 1995)

Nadesan Centre legal briefing, *Arrest and Detention under the Current Emergency Regulations* (Colombo, April 1995)

National Institute of Education, "Teacher Attendance Study" (Maharagama, 1992)

Ninth Parliament of Sri Lanka: Presidential Election 1988, General Election 1989 (The Associated Newspapers of Ceylon Ltd., Lake House, Colombo)

NORAD, *Report on Environment and Population in Sri Lanka* (1991)

Olsen, B., "Sri Lanka" in Baer *et al* (eds), *Human Rights in Developing Countries Yearbook 1994* (Kluwer, Netherlands, 1994)

Organisation of Professional Associations, *OPA Elections Watch Report, General Elections August 1994* (15 September 1994)

Parliamentary General Election of Sri Lanka 16th August 1994 - Report of the International Observer Group (Colombo)

Plender, R., "The Legal Basis of International Jurisdiction to act with Regard to the Internally Displaced," *6 International Journal of Refugee Law* (1994)

Premaratne, C., "Recent Trends and Issues in Health and Nutrition Status of Sri Lanka," *Staff Studies*, Vol. 22 (1&2) (Central Bank, 1992)

Presidential Election Sri Lanka - 1994: Report of the International Poll Observers (November 1994)

Prywes, M., "Unemployment in Sri Lanka: Sources and Solutions" (Draft paper) (World Bank, 1994)

Quibria, M.G. and Sirinivasan T.N., *Rural Poverty in Asia: Priority Issues and Policy Options*, Economics and Development Resource Centre (Asian Development Bank, Manila, 1992)

Rajasingham, M., "Emergency Reconstruction and Rehabilitation Programme," Position paper of the NGO - Donor Consortium (October 1994)

Ratnayake, R.M.K. and Nestel, P.S., *Nutrition and Health of Sri Lankan Children: Results from the First Nutrition and Health Survey*, Report prepared by the Nutrition and Poverty Policy Division, Ministry of Policy Planning and Implementation (Colombo, 1993)

Report of the Commissioner of Elections on the Second Presidential Election of Sri Lanka held on 19.12.1988 (1992)

Report on the Implementation of the Convention of the Rights of the Child (Marga Institute, Colombo, 1994)

Report on the Sentencing of Young Offenders, Sessional Paper (Department of Government Printing, Colombo, November 1988)

Report to the 47th session of the UN Commission on Human Rights, E/CN.4/1991/20

Review of Emergency Regulations, The Centre for the Study of Human Rights, University of Colombo, Sri Lanka, in association with the Nadesan Centre (1993)

Rice, C. and Wilber, J.E., *Childcare Needs of Low Income Women in Rural and Urban Sri Lanka*, League of Women Voters, Overseas Education Fund in collaboration with the Sri Lanka Federation of University Women (1979)

Robinson, C., *Sri Lanka: Island of Refugees* (US Committee for Refugees, Washington D.C., 1991)

Rodrigo, C., *Economic Growth, Structural Adjustment and the Labour Market: The Post 1977 Experience of Sri Lanka*, A Report to the World Bank (Faculty of Graduate Studies, University of Colombo, 1992)

Rodrigo, C., *Structural Reforms and the Labour Market, 1977-92: Sri Lanka Case Study* (unpublished) (Faculty of Graduate Studies, University of Colombo, 1993)

Saravanamuttu, P., "Giving Peace a Chance" in 2 *Counterpoint* #4 (Colombo, Aug/Sept 1994)

Satharasinghe, A.J., "Women's Participation in Education and its Impact on Development," *Economic Review* (Jan/Feb 1995)

Senanayake, M.A.P., "Housing and Land" in 29 *LOGOS* (1991)

Sivarajah, A., "Emerging Political Patterns in the Estate Sector and the Problems of Political Mobilisation" in *Sri Lanka's Plantations in the 90s* (Special Issue of *The Thatched Patio* #3, International Centre for Ethnic Studies, Colombo, May/June 1991)

Sivathamby, K., "The Sri Lankan Ethnic Crisis & Muslim-Tamil Relations - A Socio-Political Review" in Abeyesekera, C. and Gunasinghe, N. (eds), *Facets of Ethnicity in Sri Lanka* (Social Scientists Association, Colombo, 1987)

Sri Lanka Government Report Under Article IX of the International Convention on the Elimination of All Forms of Racial Discrimination to the Committee on Elimination of All Forms of Racial Discrimination

Statement of the Special Representative of the Secretary General on Internally Displaced Persons to the 50th Session of the Commission of Human Rights (1994)

Statistical Pocket Book of the Democratic Socialist Republic of Sri Lanka (Department of Census and Statistics, 1993)

Stavenhagen, R. (ed), "Social Structures of Agrarian Structure in Mexico" in *Agrarian Problems and Peasant Movements in Latin America* (New York, Anchor Books, 1967)

The Ceylon Tamil Teacher's Union Memorandum for Discussions with Hon. Richard Pathirana, Minister of Education and Higher Education on 13 February 1995

The Parliament of Sri Lanka - Presidential Election 1982, Referendum 1982, General Election 1977, Elections 1977 to 1986 (The Associated Newspapers of Ceylon Ltd., Lake House, Colombo)

The Sri Lanka National Report to UN Fourth World Conference on Women (draft) (Ministry of Women's Affairs, Colombo, 1994)

Theva Rajan, A., *Tamil as an Official Language: Retrospect and Prospect* (International Centre for Ethnic Studies, Colombo, 1995)

UNDP, *The Human Development Report* (Oxford University Press, Delhi, 1994)

UNHCR, *Appeal for Repatriation to Sri Lanka* (Geneva, June 1994)

UNHCR, "Information note on UNHCR position concerning the return of rejected Sri Lankan Asylum Seekers," (3 February 1995)

UNHCR information sheet, 18 November 1994

UNHCR, "Protection Aspects of UNHCR Activities on Behalf of Internally Displaced Persons," EC/SCP/87 (17 August 1994)

UNICEF, *Progress of Nations* (New York, 1994)

University Teachers for Human Rights (Jaffna) Report No. 13

US Committee for Refugees, *People Want Peace: Repatriation and Reintegration in War Torn Sri Lanka* (Washington D.C., 1994)

Vasundhara Mohan, R., *Identity Crisis of Sri Lankan Muslims* (R.M. Mittal, Delhi, 1987)

Velauthapillai, K., "Septicaemia deaths in Jaffna," (unpublished) (North Colombo Medical College)

Wickremasinghe, S., "Emergency Regulations" in *Sri Lanka: State of Human Rights 1993* (Law & Society Trust, Colombo, 1994)

World Bank, *A New Agenda for Women's Health and Nutrition* (1994)

World Bank, *1994 Education Sector Strategy Review*

World Bank, *Sri Lanka Poverty Assessment* (Washington D.C., 1994)

World Development Report 1992 (World Bank, Washington D.C.)

The Island, 5.12.1993

The Island, 3.02.1994

Lankadeepa, 1.03.1994

Daily News, 7.06.1994

The Island, 11.06.1994

The Sunday Times, 19.06.1994

The Sunday Times, 10.07.1994

The Sunday Times, 24.07.1994

The Sunday Times, 31.07.1994

Daily News, 1.09.1994

The Island, 2.09.1994

The Island, 4.09.1994

The Sunday Leader, 11.09.1994

The Island, 17.09.1994

The Island, 9.10.1994

The Island, 11.10.1994

Daily News, 15.10.1994

Daily News, 28.11.1994

The Island, 26.01.1995

The Island, 31.01.1995

The Sunday Times, 12.02.1995

The Island, 13.03.1995

Daily News, "Tamil As Official Language," 11.05.1995

International Instruments

Body of Principles for the Protection of all Persons Under any Form of Detention or Imprisonment, UNGA Res 43/173, 9 December 1988

Code of Conduct for Low Enforcement Officials, UNGA Res 34/169, 17 December 1979

Convention against Discrimination in Education, 14 December 1960

Convention against Torture and Other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment, UNGA Res 39/46, 10 December 1984

Convention on the Elimination of All Forms of Discrimination against Women, UNGA Res 34/180, 18 December 1979

Convention on the Nationality of Married Women, UNGA Res 1040 (XI) 29 January 1957

Convention on the Prevention and Punishment of the Crime of Genocide, UNGA Res 260 A (III), 9 December 1948

Convention on the Rights of the Child, 20 November 1989

Convention Relating to the Status of Refugees, 28 July 1951

Declaration on Social Progress and Development, UNGA Res 2542 (XXIV) 11 December 1969

Declaration on the Elimination of Violence Against Women, 1993

Declaration on the Protection of All Persons from Enforced Desappearance, UNGA Res 47/33, 18 December 1992

Declaration on the Rights of Persons Belonging to National or Ethnic, Religious and Linguistic Minorities, UNGA Res 47/135, 18 December 1992

ICRC, The Geneva Conventions of August 12, 1949

ICRC, Protocols additional to the Geneva Conventions of 12 August 1949, Geneva, 1977

ILO Convention (No. 41) concerning Employment of Women during the Night, 19 June 1934

ILO Convention (No. 45) concerning the Employment of Women on Underground Work in Mines of all Kinds, 21 June 1935

ILO Convention (No. 81) concerning Labour Inspection in Industry and Commerce, 11 July 1947

ILO Convention (No. 87) concerning Freedom of Association and Protection of the Right to Organise, 4 July 1950

ILO Convention (No. 98) concerning the Application of the Principles of the Right to Organise and to Bargain Collectively, 18 July 1951

ILO Convention (No. 100) concerning Equal Remuneration for Men and Women Workers for Work of Equal Value, 29 June 1951

ILO Convention (No. 103) concerning Maternity Protection (Revised 1952) 28 June 1952

ILO Convention (No. 144) concerning Tripartite Consultations to Promote the Implimentation of International Labour Standards, 21 June 1976

International Convention on the Elimination of All Forms of Racial Discrimination, UNGA Res 2106A (XX), 21 December 1965

International Covenant on Civil and Political Rights, UNGA Res 2200 A (XXI), 16 December 1966

International Covenant on Economic, Social and Cultural Rights, UNGA Res 2200 A (XXI), 16 December 1966

Principles on the Effective Prevention and Investigation of Extra-legal, Arbitrary and Summary Executions, 24 May 1989

Protocol relating to the Status of Refugees, UNGA Res 2198 (XXI), 16 December 1966

United Nations Standard Minimum Rules for the Administration of Juvenile Justice ("The Beijing Rules"), UNGA Res 40/33, 29 November 1985

Universal Declaration of Human Rights, UNGA Res 217 A (III), 10 December 1948

Vienna Declaration and Programme of Action, 25 June 1993

Schedule I

UN Human Rights Instruments Ratified by Sri Lanka (31 December 1994)

1. International Covenant on Economic, Social and Cultural Rights
2. International Covenant on Civil and Political Rights
3. Declaration regarding Article 41 of the above
4. Convention on the Prevention and Punishment of the Crime of Genocide
5. Slavery Convention as amended
6. Supplementary Convention on the Abolition of Slavery, the Slave Trade, and Institutions and Practices Similar to Slavery
7. Convention for the Suppression of the Traffic in Person and of the Exploitation of the Prostitution of Others
8. ILO Convention (No. 29) concerning Forced Labour
9. ILO Convention (No. 98) concerning the Application of the Principles of the Right to Organise and to Bargain Collectively
10. ILO Convention (No. 135) concerning Protection and Facilities to be Afforded to Worker's Representatives in the Undertaking
11. Convention on the Nationality of Married Women
12. Convention on the Rights of the Child
13. Geneva Convention for the Amelioration of the Condition of the Wounded and Sick in Armed Forces in the Field
14. Geneva Convention for the Amelioration of the Condition of Wounded, Sick and Shipwrecked Members of Armed Forces at Sea

15. Geneva Convention relative to the Treatment of Prisoners of War

16. Geneva Convention relative to the Protection of Civilian Persons in Time of War

17. International Convention on the Eliminiation of All Forms of Racial Discrimination

18. International Convention on the Suppression and Punishment of the Crime of Apartheid

19. Convention on the Elimination of All Forms of Discrimination against Women

20. Convention against Discrimination in Education

21. ILO Convention (No. 100) concerning Equal Remuneration for Men and Women Workers for Work of Equal Value

22. ILO Convention on Maternity Protection (No. 103)

23. ILO Convention on Labour Statistics (No. 160)

24. Convention against Torture and Other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment

25. Hague Convention Relating to the Inter -Country Adoption of Children

Schedule II

UN Human Rights Instruments Not Ratified by Sri Lanka

1. Optional Protocol to the International Covenant on Civil and Political Rights

2. Second Optional Protocol to the above, aiming at the abolition of the death penalty

3. Convention on the Non-Applicability of Statutory Limitations to War Crimes and Crimes against Humanity

4. ILO Convention (No. 105) concerning the Abolition of Forced Labour

5. Declaration regarding Article 21 of the above (relating to the entertainment of complaints by one State Party against another)

6. Declaration regarding Article 22 of the above (relating to the entertainment of complaints by individuals)

7. Convention on the International Right of Correction

8. ILO Convention (No. 102) concerning Minimum Standards of Social Security

9. Convention relating to the Status of Refugees

10. Protocol relating to the Status of Refugees

11. Convention on the Reduction of Statelessness

12. International Convention on the Protection of the Rights of All Migrant Workers and Members of Their Families

13. ILO Convention (No. 97) concerning Migrant Workers

14. ILO Convention (No. 143) concerning Migrations in Abusive Conditions and the Promotion of Equality of Opportunity and Treatment of Migrant Workers

15. ILO Convention (No. 87) concerning Freedom of Association and Protection of the Right to Organise

16. ILO Convention (No. 122) concerning Employment Policy

17. ILO Convention (No. 141) concerning Organisations of Rural Workers and Their Role in Economic and Social Development

18. ILO Convention (No. 151) concerning Protection of the Right to Organize and Procedures for Determining Conditions of Employment in the Public Service

19. Convention on the Political Rights of Women

20. Convention on Consent to Marriage, Minimum Age for Marriage and Registration of Marriages

21. Protocol Additional to the Geneva Conventions of 12 August 1949, and relating to the Protection of Victims of International Armed Conflicts (Protocol I)

22. Protocol Additional to the Geneva Conventions of 12 August 1949, and relating to the Protection of Victims of Non-International Armed Conflicts (Protocol II)

23. Declaration regarding Article 14 of the International Convention on the Elimination of All Forms of Racial Discrimination

24. International Convention against Apartheid in Sports

25. .Protocol Instituting a Conciliation and Good Offices Commission to the UNESCO Convention against Discrimination in Education

26. ILO Convention (No. 111) concerning Discrimination in respect of Employment and Occupation

இலங்கை
மனித உரிமைகள் நிலை 1994

இந்த அறிக்கை 1994 ஆம் ஆண்டினை வரையறையாகக் கொண்டு இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை தொடர்பான நிகழ்வுகளை சுருக்கமாக அடக்கியுள்ளது.

இவ் அறிக்கையில் [illegible] உரிமை தொடர்பான பொருளாதார [illegible] கருத்து வெளிப்பாட்டுக்கான [illegible] மனித உரிமைகளுக்கான நீதிமுறைப் பாதுகாப்பு [illegible] மற்றும் அரசியல் [illegible] மேலும் பெண்களின் நிலைமை [illegible] இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் [illegible] சட்டப் பிரதிபலிப்புகள் [illegible] அதிகாரங்களின் ஆய்வு செய்யப்[illegible] மனித உரிமை இயக்கத்தின் [illegible]

சட்டத்துக்கும் சமூகத்துக்குமான அறநிலையம்
3 கின்ஸி டெறஸ், கொழும்பு – 8
இலங்கை

ISBN 955-9062-24-7